SMITH'S DAILY REMEMBRANCER
Morning Portion

காலைத்
தியானம்

CLS

காலைத் தியானம்

SMITH'S DAILY REMEMBRANCER

MORNING PORTION

'கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும்
பகலும் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்'

TRANSLATED BY

THE REV. J. CORNELIUS

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS 3

COPYRIGHT

Twelth Edition, 1971

PRINTED BY OFFSET AT THE DIOCESAN PRESS, MADRAS—1971. L3537

பாயிரம்

காலைத் தியானமாகிய இந்த நூலில் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு வேதவாக்கியமும், அதன்பேரில் செய்யப்பட்டிருக்கிற சுருக்கமான தியானமும் அடங்கியிருக்கிறது. சரீரத்துக்கு நாடோறும் சாதாரண ஆகாரம் வேண்டியிருக்கிறதுபோலவே, ஆத்துமாவுக்கும் நாடோறும் ஞான ஆகாரம் வேண்டியிருக்கிறது. இதன் பொருட்டே இவ்விதமான பல ஞானநூல்கள் இயற்றப்பட்டு, 'ஞாபரணப் பெட்டி' என்றும், 'பாடுபட்ட சரித்திர தியானம்' என்றும் '**நற்கருணைத் தியான மாலை**' என்றும் பல பெயர்கள் பெற்று வழங்கி வருகின்றன.

'ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்' என்பது யாவரும் கைக்கொள்ளத்தக்க போதனை. வேதமாகிய சத்திய வசனம் விதைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு சிறிய வித்தில் பெரிய விருட்சம் அடங்கியிருப்பதுபோல, வேதத்திலுள்ள ஒவ்வொரு சிறிய வாக்கியத்திலும் அருமையான பெரும் பொருள் அடங்கியிருக்கிறது. அது இருதயத்தில் பதிந்து, அருள் மழையினால் நனைந்து, வேரூன்றி விளைந்து பலன் தரும். வேதவசனத்தை இருதயத்தில் ஜெனிக்கச் செய்கிறது தியானம், தியானத்தைப் பலிக்கச்செய்கிறது ஜெபம். 'கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்' என்று சொல்லியிருக்கிறபடியால், வேதத்தை வாசித்துத் தியானிப்பது உத்தமர்களின் லட்சணம், ஞானவான்களின் கடமை. சிறியோர் பெரியோர் யாவரும் வேதத்தை வாசித்துத் தியானித்து அதன் பொருளை அறிந்துகொள்ள ஏதுவுண்டு. வேதசாகரமானது ஆட்டுக்குட்டிக்கு நிலைக்கத் தக்கதும், யானைக்கு நீந்தத்தக்கதுமான தன்மையுடையதாயிருக்கிறது. உலக ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைந்திருக்கிறவைகள் வேதத்தினால் பாலகருக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடியால், யாவரும் தங்கள் தங்கள் முயற்சிக்குத் தக்கதாய் வேதப்பொருளைத் தியானித்து அறிந்துகொள்ளலாம். வேதப்பொருளை வாசித்துக் கற்றறிந்து தியானித்துச் சிந்தைசெய்வதில் ஒருவன் எவ்வளவு முயற்சிசெய்கிறானோ அவ்வளவு அறிவும் உணர்வும் ஞானமும் தேறுதலும்

அடைவான் என்பதற்குச் சந்தேகமில்லை. வேதவசனம் ஜீவ அப்பம், ஆத்தும உணவு என்னப்படும். சிற்றுணவு தெவிட்டுகிறதுபோல இந்தப் பேருணவு தெவிட்டாது, இது தெவிட்டாத தெள்ளமுது. கரும்பு நுனிமுதல் அடிவரைக்கும் மதுரமாயிருப்பதுபோல வேதத்தை ருசித்துப் பார்த்தவர்களுக்கு அதுவும் நுனிமுதல் அடிவரைக்கும் மதுரமாயிருக்கும். வேதவசனம் 'பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமாயிருக்கிறது.' அதன் மதுரத்தை அறிந்துணர்ந்தவர்கள் அதை விடாமல் தினந்தினம் உட்கொண்டு திருப்தியடைவார்கள்.

வேதத்திலுள்ள இரண்டொரு வார்த்தையால் அமைந்த ஒவ்வொரு சிறிய வசனமும் அன்றன்றும் செய்யவேண்டிய ஆத்தும தியானத்துக்கும் ஆத்தும பக்குவத்துக்கும் போதுமானதாயிருக்கிறது. புல் நுனியிலே இருக்கும் பனித்துளியில் அடுத்த கொத்தளமும் கோபுரமும் பூரணமாய்த் தோன்றுவதுபோல், ஒவ்வொரு சிறிய வேதவாக்கியத்திலும் பூரண பொருள் அடங்கியிருக்கிறது. 'முடிந்தது' என்று கர்த்தர் திருவுளம்பற்றின வாக்கியத்தில் நான்கு சுவிசேஷர்களும் சொல்லியிருக்கிற அவருடைய சரித்திரமெல்லாம் ஆதியோடந்தமாய் அடங்கியிருக்கக் காணலாம். ஒரு சிறிய நெருப்புப்பொறி பெரிய காட்டைக் கொளுத்திவிடுவதுபோல, வேதத்திலுள்ள ஒரு சிறிய வசனத்தைத் தியானிப்பதினுல் இருதயத்தில் பக்தியாகிய அனல் மூண்டு அஞ்ஞானமாகிய காட்டைக் கொளுத்திவிடும். 'என் இருதயம் எனக்குள் அனல்கொண்டது, நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது, அப்பொழுது என் நாவினுல் விண்ணப்பஞ்செய்தேன்'. 'கர்த்தாவே, என் வார்த்தைக்ளுக்குச் செவி கொடும், என் தியானத்தைக் கவனியும்.' 'தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது.' 'மானுனது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.' 'என் படுக்கையின் மேல் உம்மை நினைக்கும்போது இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்.' 'என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக' என்று தாவீது சொல்லியிருக்கிருர்.

இந்தத் தியானத்திஞல் அப்போஸ்தலஞகிய பவுல் பரகதியாகிய பரதீசுக்குள் பிரவேசித்துக் காணுத காட்சி கண்டு,

ஆனந்தக்களிப்படைந்தார். அநுதின தியானத்துக்குத் துற வறம் அவசியமில்லை; இல்லறத்திலிருந்தே தியானம் பண்ண லாம். தனிமையாகிய ஏகாந்தமும், அடக்கமும் ஒடுக்கமும் சிறந்த பரம தியானத்துக்கு அநுகூலமாயிருக்கும். கர்த்தர் எங்கும் இருந்து அவருடைய கிரியைகள் யாவற்றிலும் விளங் குகிறபடியால், எங்கும் எவ்வேளையிலும் அவரையும் அவர் செயலையும் அவர் திருவாய்மலர்ந்தருளிய மொழிகளையும் தியானிக்கலாம்.

காலையிலும் மாலையிலும் மத்தியான வேளையிலும், இரட்ச கரைப்போல் மலைமேலும், ஈசாக்கைப்போல் வயல்வெளியி லும், யோவான் ஸ்நானனைப்போல் வனாந்தரத்திலும், நாத் தான்வேலைப்போல் மரத்தடியிலும், தாவீதைப்போல் படுக் கையிலும், நின்றும், நடந்தும், உட்கார்ந்தும், படுத்தும், முழங்கால்படியிட்டும், சாஷ்டாங்கமாய்ப் பணிந்தும், கர்த்த ருடைய கிரியைகளையெல்லாம் தியானித்து, அவருடைய செயல்களையெல்லாம் சிந்தைசெய்து, 'பார்க்குமிடமெங்கு மொரு நீக்கமற நிறைகின்ற' சச்சிதானந்த திரியேகரைப் போற்றி:

தேறுந்தயையின் முனிவோய் நீ, சினத்திற்கருள் செய் கனி வோய் நீ;
கூறுங்களையற் றுணர்வோய் நீ, கூறுந்தொனியற் றுரைப் போய் நீ,
மாறும்பொருள் யாவிலுநின்றே, மாறுநிலைகொள் மரபோய் நீ,
யீறுந்தவிர்ந் துன்புகழ்க்கடலாழ்ந் தெனக்கே கரைகாட் டருளாயோ?
ஒளிநாக்கொடு வான்சுடர்புகழ, வெளிநாக்கொடு பன்மணி புகழக்
களிநாக்கொடு பற்புள்புகழக், கமழநாக்கொடு காமலர் புகழத்
தெளிநாக்கொடு நீர்புனல்புகழத் தினமேபுகழப் படுவோய் நீ
அளிநாக்கொடு நானுனைப்புகழ, வறியாமூகை யுணர்த் தாயோ?'

என்று பாடி மகிழ்வார்க்கே பரம ரகசியம் விளங்கும்.

ஜீவாத்மாவாகிய நாயகியானவள், ஜெபத்தியானத்தில் மெய்மறந்து பரவசமாகி, பரமாத்மாவாகிய நாயகரை ஞானக் கண்ணினால் காணும்போது, அங்கமெல்லாம் பொங்க, உள்ள மெல்லாமுருக, ஆனந்தக்கண்ணீர் சொரிய, 'அன்பருக்கன்

பான மெய்யனை' நோக்கி, 'உன்பற்றொழிய ஒரு பற்றுமில்லை, உடையவனே' என்று, அவருடைய திருவடிகளைத் தழுவிப் பேரின்பத்தை அனுபவிப்பாள். அப்படியே, 'பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை.' 'என் சித்தத்தின் படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது' என்று உணர்ந்து சொல்லத்தக்கவர்களுக்கே பரமானந்தக் களிப்பு உண்டாகும்.

சென்னை,
1877-ஆம் ஜூலைமீ 27உ } பவர் ஐயர்.

ஜனுவரி-மீ 1-உ

என்னை நோக்கிப் பாருங்கள்

ஏசாயா 45:22

புது வருஷத்தின் காலே தொடங்குகிறது. நாமோ இன்னும் துக்கத்திற்கும், துன்பத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்திற்கும் உள்ளானவர்களாகவே யிருக்கிறோம். பாவம் நமக்குள்ளே வாசம்பண்ணுகிறது. எண்ணிறந்த காரியங்கள் நமக்கு மனவருத்தத்தைக் கொடுக்கிறது. ஆகிலும் தேவன் நமக்குச் சொல்லுகிறதென்ன? 'என்னை நோக்கிப் பாருங்கள். பக்கியத்தின் ஊற்றாக, கிருபையைக் கொடுக்கிறவராக, உங்கள் சிநேகிதனாக என்னை நோக்கிப்பாருங்கள். எந்தத் துன்பத்திலும், எந்த இடத்திலும், உங்களுக்கு வேண்டிய சகலத்திற்கும், என்னை நோக்கிப்பாருங்கள். இன்றைக்கு என்னை நோக்கிப்பாருங்கள். உங்களுக்குத் தருகிறதற்கான ஆசீர்வாதங்கள் என்னிடமுண்டு. நான் தயவு காண்பிக்கக் காத்திருக்கிறேன். இயேசுவில் நான் உங்கள் பிதா—உங்கள் இகபர நன்மைகளைக் குறித்து எனக்கு அதிகக் கவலையுண்டு. நான் வாக்களித்ததெல்லாவற்றையும் நிறைவேற்றுவேன். உங்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்றே உங்களோடிருக்கிறேன். உங்கள் காரியங்களில் நான் கவலையற்றவனல்ல. சகலத்தையும் உங்கள் நன்மைக்கென்று முடிப்பதற்கு நான் பொறுப்பாளி. முற்காலங்களில் உங்கள் பேரிலும், மற்றவர்கள் பேரிலும் நம்பிக்கை வைத்தீர்கள். அதனால் உங்கள் நம்பிக்கை அவமாகித் துக்கப்பட்டீர்கள்; இப்பொழுது என்னைமாத்திரம் நோக்கிப் பாருங்கள், சகலத்திற்கும் என்னைப் பாருங்கள். இந்த நாளிலும், இந்த வருஷத்தின் ஒவ்வொரு நாளிலும், உங்கள் கண்ணையும் மனதையும் என்னிடம் ஏறெடுங்கள். எனக்கு முன்பாக சமாதானமாயும் பரிசுத்தமாயும் நடவுங்கள். அப்படி நடக்கும்போது, நான் உங்களைப் பரிசுத்தரும் பாக்கியருமாக்குகிறேனே இல்லையோவென்று பாருங்கள். என்னைச் சோதித்து, என் வாக்கின் ஒவ்வொரு அட்சரமும் உண்மையோ அல்லவோவென்று அறிந்துகொள்ளுங்கள்' என்கிறார்.

உனதாவி தேகமும்
உன் சிந்தை முழுவதும்
அவருட நேசமே
நடத்தி ஆளட்டுமே;
உன் கண் எந்தநேரமும்
அவரையே நோக்கட்டும்.

நன்றியறிதலுள்ளவர்களாய் இருங்கள்

கொலோசெயர் 3:15

நாம் நன்றியறிதலுள்ளவர்களாய் இருக்கிறதற்கு எத்தனையோ காரணங்களுண்டு, எவ்வளவோ நியாயமுண்டு! நம்மைச் சூழ சரீர ஆத்தும நன்மைகளைப் பார்க்கிறோம். கடந்துபோன காலங்களைப் பார்த்தால், உலகத் தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்தேசுவில் தேவன் நம்மைத் தெரிந்துகொண்டதற்காகவும், அவர் தமது ஒரே பேறான குமாரனை நம்முடைய பாவ பரிகாரமாய் இந்த உலகத்தில் அனுப்பினதற்காகவும், பாவத்தைக் குறித்து நமக்கு மெய்யுணர்வைத் தந்து, இயேசுவினிடம் நம்மை நடத்தி, நம்மை மோட்சத்துக்குத் தகுந்தவர்களாக்கும்படித் தம்முடைய பரிசுத்த ஆவியை நம்முடைய இருதயங்களில் ஊற்றினதற்காகவும் நாம் சந்தோஷப்படவேண்டுமே. நம்முடைய கையில் அவருடைய வசனமிருக்கிறது. நம்முடைய இருதயத்தில் அவருடைய கிருபை இருக்கிறது. நம்முடைய வீட்டில் அவருடைய இரக்கங்களையும், நம்முடைய கண்களுக்கு முன்னே பரகதியையும் பார்க்கிறோம். நமக்கு நன்றியறிதல் வேண்டாமா? கடினப்பட்ட நம்முடைய நன்றிகெட்ட இருதயங்களை இயேசுவினிடத்தில் கொண்டுபோகவேண்டும். அவர் அவைகளை மெதுவாக்கி நன்றியறிதலால் நிரப்புவார். நம்முடைய நன்றிகேட்டை அவரிடத்தில் அறிக்கையிட்டு அவருடைய பாதத்தில் விழுந்து, நம்முடைய கெட்ட குணத்தைக் குறித்துப் புலம்பவேண்டும். மன்னிக்கிறதற்கு அவர் ஆயத்தமாயிருக்கிறார். அவர் நம்மை முற்றிலும் சுத்திகரிப்பார். நம்முடைய கெஞ்சுதலுக்குச் செவிகொடுத்து நம்முடைய முறைப்பாட்டுக்கு இரங்குவார். 'இயேசுவே! எங்களுடைய அபாத்திரத் தன்மையையும், உம்முடைய பெரிதான தயவையும் நாங்கள் நன்றாய் அறிந்துணரும்படி செய்யும்; அப்போது எங்கள் ஆத்துமாக்கள் சந்தோஷ உதடுகளால் உம்மை நித்தம் போற்றும். உமதுபேரில் சார்ந்திருக்கிறோமென்பதை மறவாமல், நன்றியுள்ள அன்பு நிறைந்த பிள்ளைகள்போல் எங்கள் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக ஜீவனம்பண்ணி, நித்தம் நன்றியறிதலுள்ளவர்களாய் இருப்போமாக.

அனந்தானந்தகாலம்
என் மனமும்மைப் போற்றும்
உம்மைப் புகழ்ந்து பாட
காணுததுவுங் கூட

மத்தியஸ்தர் ஒருவரே
1 தீமோ. 2:5

தேவன் பாவத்தை என்றும் பகைக்கவேண்டியவர். அவர் அதோடு ஒப்புரவாகவேமாட்டார். அவர் பகைக்கிற அருவருப்பான காரியம் அதுவே. வெறுப்பின்றி அவர் அதைப் பார்க்கிறதேயில்லை. அப்படியானால் தேவன் நம்மை ஏற்றுக் கொண்டு ஆசீர்வதித்து நம்மோடு ஐக்கியமாவதெப்படி? ஒரு மத்தியஸ்தன் மூலமாய்த்தான். இயேசுதான் மத்தியஸ்தன். அவர் தேவனுக்கும் மனிதனுக்கும் நடுவே நிற்கிறார். பிதாவின் இலக்ஷணங்களையெல்லாம் மகிமைப்படுத்துகிறார். தம்முடைய நீதியினாலும், விலையேறப்பெற்ற இரத்தத்தினாலும் நம்முடைய ஊழியத்தையெல்லாம் அவருக்குப் பிரியமானதாக்குகிறார். இயேசுவிலே மாத்திரம்தான் தேவன் நம்மை நேசிக்கலாம், ஏற்றுக்கொள்ளலாம், நம்மோடு ஐக்கியப்பட்டு நம்மை ஆசீர்வதிக்கலாம். நமக்குப் பதிலாக அவர் தேவனுக்கு முன் னிற்கிறபடியால், அன்பு நிறைந்த அவர் மூலமாய் நாம் அங்கீகரிக்கப்படுகிறோம். தேவனுக்குப் பதிலாக அவர் நமக்கிருக்கிறபடியால், அவரைத் தயவுள்ளவரென்று காண்கிறோம். கிருபாசனத்தண்டை சேரும்போது, இயேசுதான் மத்தியஸ்தன், நடுமனுஷன் என்பதை மறவாமல், உங்களையும், உங்கள் விண்ணப்பங்களையும், உங்கள் துதிகளையும் அவர் மூலமாய்த் தேவனுக்குச் செலுத்துங்கள். அப்படிச் செய்தால் நீங்கள் பயப்படவேண்டியதொன்றுமில்லை. அவர் உங்கள் சுபாவத்தைத் தரித்துக்கொண்டார். அவர் மனம் உங்கள் மனதுக்கொத்தது. உங்களைச் சகோதரரென்று அழைக்கிறார். தேவனிடத்தில் தமக்கிருக்கும் செல்வாக்கையெல்லாம் உங்களுக்காகவே பிரயோகிக்கிறார். அவர் செய்தது சகித்ததெல்லாம் உங்களுக்காகவே. இந்த நிமிஷத்திலும் உங்களுக்காகப் பரிந்துபேசுகிறார்.

குற்றத்தால் மனம் நொந்தால்
ஏசு ரத்தம் நோக்கிப்பார்,
உன்னைச் சுத்தமாக்கி அதால்
சமாதானம் தருவார்
ஏசு ரத்தம்
மன்னித்தாற்றுவதினால்.

தரித்திராகிய நீங்கள் பாக்கியவான்கள்

லூக்கா 6:20

கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் ஏழைகள்தான். பாவம் எந்த நன்மையும் தங்களிடத்திலிருந்து உரிந்து போட்டுத் தங்களை நிர்ப்பாக்கியரும், பரிதபிக்கப்படத்தக்கவர்களும ஏழைகளும், குருடரும், நிருவாணிகளுமாக்கினதென்று அவர்கள் காண்கிறார்கள். தங்களால் ஒன்றும் செய்ய ஏலாது ஒன்றைச் சம்பாதிக்கவுங் கூடாது. இலவசமான தேவகிருபை தங்களுக்கு வேண்டியதெல்லாம் சம்பாதித்ததென்றும், தங்களுக்கு வேண்டியதெல்லாம் இயேசுவினிடமிருக்கிறதென்றும், அவரிடமிருக்கிறதெல்லாம், தங்களுக்காகத்தானென்றும், சுவிசேஷம் அவர்களுக்குத் தெரிவிக்கிறது. தங்களைத் தாங்களே பார்க்கும்போது அதைரியமடைகிறார்கள். இயேசுவை நோக்கிப் பார்க்கும்போதோ சந்தோஷமடைகிறார்கள். அவரிடத்தில் கிருபையின் ஐசுவரியமுமுண்டு, மகிமையின் ஐசுவரியமுமுண்டு. கேட்கிற எவனும் வாங்குகிறானென்றும் சொல்லுகிறார். அவர் சம்பூரணமாய்க் கொடுக்கிறார்; கடிந்துகொள்ளுகிறதே இல்லை. கர்த்தருடைய ஏழை ஜனங்களுக்குத் தற்காலத்தில் கிடைக்கும் பாக்கியம் இதுவே. அவர்களுக்குத் தேவையானதெல்லாம் இயேசுவினிடத்திலுண்டு. அவர்களுக்கு அவர் சிநேகிதன். அவரைத் தேடுகிறவர்களுக்கு எந்த நன்மையும் குறைவுபடாது.

நான் தரித்திரனா? அப்படியானால் இயேசு தன்னிடம் வந்து பொன்னையும், வஸ்திரத்தையும், திராட்சைரசத்தையும், பாலையும் வாங்கிக்கொள்ளச் சொல்லுகிறார். இம்மையில் என்னை ஆறுதல்படுத்த, என்னை ஆதரிக்கவேண்டியதெல்லாவற்றையும், மறுமையில் என்னைப் பாக்கியசாலியாக்கக்கூடிய சகலத்தையும் வாங்கிக்கொள்ளச் சொல்லுகிறார். என்னில் நான் தரித்திரன், இயேசுவில் நான் திரவிய சம்பன்னன். இப்போது ஏழை, கொஞ்சம் பொறுத்தால் ஐசுவரியவான். பரலோகராஜ்யம் அவர்களுடையது. 'சகலமும் உங்களுடையது. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள், கிறிஸ்து தேவனுடையவர். சகலமும் உங்களுக்காகவே இருக்கிறது.'

நமக்குத் தேவை யாவும்
அவர் பொக்கிஷம் தாரும்,
சர்வவல்லவர் கரம்
வற்றா ஊற்றைப் பாய்ச்சிடும்.

மரண பயம்

எல்லாரும் மரிக்கவேண்டும். ஆகிலும் எல்லாரும் ஒன்றுபோல் மரிக்கிறதில்லை. சிலர் திடீரென்று மரிக்கிறார்கள், சிலர் வெகுநாள் நோயிற் கிடந்து மரிக்கிறார்கள்; சிலர் வருத்தமின்றி மரிக்கிறார்கள், சிலர் சந்தோஷமாய் மரிக்கிறார்கள்; சிலர் தங்கள் ஜீவகாலமெல்லாம் மரிக்கப் பயப்படுகிறார்கள், சிலர் அப்படிப் பயப்படுகிறதேயில்லை. இயேசுவின் மூலமாய் மரணத்தைப் பார்த்தாலொழிய அதைப்பற்றிய நினைவும் பயத்தையுண்டாக்கும். சரீரத்தை விட்டு ஆத்துமா பிரிகிறதுதான் மரணம். தேவனை விட்டுப் பிரிகிறது இரண்டாவது மரணம். முதல் மரணத்திற்குட்படுவது அவசியம்; பிந்தினது அப்படி அவசியமுள்ளதல்ல. தேவ அன்பை விட்டு நம்மைப் பிரிப்பதெது? மரணமா? இல்லை. நம்மைச் சிநேகித்தவர் மூலமாய் நாம் ஜெயவீரர். மரணம் சிறைச்சாலையின் கதவைத் திறந்து, அடைக்கப்பட்டவனைச் சுயாதீனனாக்குகிறது. விடுவிக்கப்பட வேண்டுமென்றும், பாவத்தினின்று சுயாதீனர் ஆகவேண்டுமென்றும், பூரண பாக்கியராக வேண்டுமென்றும் நாம் பண்ணுகிற விண்ணப்பங்களுக்கு மரணத்தினால் உத்திரவு கிடைக்கிறது. உயிருள்ள விசுவாசத்தால் இயேசுவோடு நாம் இணைக்கப்பட்டிருப்போமானால், மரணம் நம்மைப் பிரிக்கமாட்டாது. நாம் என்றும் அவருடைய அன்பை அனுபவிக்கத்தக்கதாக அது நம்மை அவருடைய சமுகத்தில் கொண்டுபோய் நிறுத்தும். நாம் தேவனோடு சாவகாசஞ் செய்தால், இரட்சகருடைய வார்த்தையை நம்பினால், பள்ளத்தாக்குக்கு அப்பாலுள்ளதைப் பார்த்தால், மரணத்திற்கு நாம் பயப்படோம். அப்போது இயேசு நம்மை விட்டுப் பிரியமாட்டார். தம்முடைய வாக்கின்படி அவர் நம்மோடிருப்பார். அவர் உண்மையுள்ளவரென்றும், உத்தமரென்றும், அன்புள்ளவரென்றும் நாம் பரீட்சித்தறிவோம். 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.'

நோய் துன்பம் சாவு பார்த்து
நான் திகிலடைவானேன்?
அதோ கானான் களித்து
நித்திய வீடு சேருவேன்.

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதேயுங்கள்
பிலிப்பியர் 4:6.

கர்த்தர் நமக்காகக் கவலைப்படுகிறார். அவர் நம்முடைய குறைவுகளை அறிவார். அவைகளை நீக்குவோமென்று வாக்களித்திருக்கிறார். நம்முடைய சத்துருக்கள் இன்னாரென்று அவருக்குத் தெரியும்; அவர்களிடத்திலிருந்து நம்மை விடுவிப்பார். நம்முடைய பயங்களையும் அறிவார்; அவைகளைக் குறித்து நாம் வெட்கமடையவும் செய்வார். சகல சிருஷ்டிகளும் அவர் கரத்திலிருக்கிறது, அவர் இஷ்டத்திலிருக்கிறது. சகலத்தையும் அவரே நடத்துகிறார். தேவ தூதனுக்கு உத்தரவு கொடுக்கிறார், அடைக்கலான் குருவிகளைப் போஷிக்கிறார், பசாசை மட்டப்படுத்துகிறார், புசலை நடத்துகிறார். அவர் உன் பிதா; அவர் உன்னை நேசிக்கிற நேசம் மட்டற்றது. நீ அவருக்குச் செல்லப்பிள்ளை, அருமையான குமாரன், அன்பான மகன்; உன்னை அவர் அசட்டைசெய்வாரா? செய்யவே மாட்டார். உன் கவலைகளை அவர்மேலே வை; உன் விருப்பங்களையும், பயங்களையும், வருத்தங்களையும் அவரிடஞ்சொல்லு. உன்னைப்பற்றியதெல்லாவற்றையும் அவர் அறியட்டும். ஒன்றையும் மறைக்காதே. அவர் தம்முடைய வார்த்தையின்படி செய்து, தகப்பனைப்போல் உன்னை நடத்துவாரென்று விசுவாசித்து எதிர்பார்த்திரு. அவர் உனக்குக் கொடுத்த எல்லாவற்றிற்காகவும், கொடுப்போமென்று சொன்ன எல்லாவற்றிற்காகவும் அவரை ஸ்தோத்திரி. உனக்குத் தேவையான எல்லாவற்றிற்காகவும் அவரிடத்தில் கெஞ்சு. ஓர் நிமிஷமாவது எந்த வகையிலும் அவநம்பிக்கைக்கு இடங்கொடாதே. அவர் உன்னை நேசிக்கிறதைவிட அதிகமாய் நேசிக்கமுடியாது. அவர் சமயத்துக்கேற்ற உதவி? தம்முடைய தயவெல்லாம் உன் முன் நடந்துபோகச் செய்வார். முழு மனதோடும் முழு ஆத்துமாவோடும் உனக்கு நன்மை செய்யவேண்டுமென்பதே அவரது முழு விருப்பம்.

பிதாவின் அன்பில் சார்ந்து
கவலையகற்றுவேன்;
ஜெபத்தில் வாய் திறந்து
என் வருத்தம் சொல்லுவேன்;
அவர் சித்தம் தெரிந்து
அவர் சொல்லுக்கமைவேன்.

அவன் தன்னைத்தான் வெறுக்கக்கடவன்

மத்தேயு 16:24

தமது சீஷன் எவனும் தன்னைத்தான் வெறுக்கவேண்டு மென்று ரக்ஷகர் சொல்லுகிறார். சுயநீதிக்கானவைகளை வெறுத் துச் சிலுவையில் அறைந்து, ரட்சிப்புக்கு அவர் செய்ததை யும் அவர் சம்பாதித்ததையும்மாத்திரம் நம்பவேண்டும். புத்தி அறிவு என்பவைகளாலுண்டாகும் பெருமையைக் கொன்று. அவர் வார்த்தை சொல்லுகிறதை நம்பி, அவர் கட்டளைப் பிரகாரம் நடக்கவேண்டும். கிட்டின இனத்தாரும், அருமை யான சிநேகிதரும், நமக்குப் பிரியமான இன்பங்களும், அவ ருடைய மகிமைக்கும் அவருடைய காரியவிர்த்திக்கும் விரோ தப்படுமானால், அவைகளையும் தள்ளவேண்டும். ஒரு கிறிஸ்த வன் எதையும் ரட்சகருடைய பாதத்தில் வைத்து 'என் ஆண் டவரே! உமது இஷ்டப்படி செய்யும்' என்று சொல்லவேண் டும், நாமும் நம்முடையவர்களல்ல, நமக்குள்ளதெதுவும் நம் முடையதல்ல; அது கர்த்தருடையது. நம்முடைய விருப்பங் கள், இன்பங்கள், நோக்கங்கள் சகலமும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படும்படி செய்யவேண்டும். எல்லாக் காலங்களிலும் எல் லாக் காரியங்களிலும், எப்படிப்பட்ட சமயத்திலும், அவ ருடைய மகிமையையே தேடவேண்டும். இப்படிச் செய்வோ மானால் யாதொரு குறைவுமின்றிப் பாக்கியசாலிகளாயிருப் போம். வேலையாள் தன் எஜமானுக்குக் கீழ்ப்படியவேண்டும். பிள்ளை தனது அன்புள்ள தகப்பன் ஞானமாய், யோசனை யாய்ச் செய்வாரென்று சகலத்திலும் அவருக்குக் கீழடங்க வேண்டும். நான் யாருக்காக என்னை வெறுக்கவேண்டும்? இயேசுவுக்காகத்தான். அவர் என்னை இரட்சிக்கப் பிழைத் தார், மரித்தார்; இப்போதும் பரலோகத்தில் எனக்காகப் பரிந்துபேசுகிறார். மரணபரியந்தம் தம்மைத்தாமே தாழ்த் தித் தன்னை வெறுப்பதற்கு நல்லமாதிரி வைத்தார்.

என் நேசா உன்னை வெறுத்து
உன் சித்தம் முறியாயோ?
ஆசைவிட்டு உத்தரித்து
லோக இச்சை தள்ளாயோ?
பொறுமையே
உனக்கவுஷதமல்லோ?

நான் உனக்குத் துணை நிற்கிறேன்

ஏசாயா 41:13

தேவன் நம்மை எங்கே நடத்துகிறாரோ அங்கே நம்மை ஆதரிப்பார். நமக்கு மிஞ்சின வருத்தங்கள் வழியிலிரா. அதிக பெலவீனமும் நேரிடாது. அவருடைய கரம் நமக்கு நீட்டப் பட்டிருக்கிறது. விசுவாசத்தைப் பிடித்து, ஒத்தாசை கிடைக் குமென்று நம்பி நடந்துபோகவேண்டும். மோசத்தில் அவரு டைய ஜனங்களுக்கு அவருடைய வல்லமையுள்ள புயமே ஆத ரவு. அவர்களுடைய பெலவீனத்தில் அதுவே அவர்கள் பெலன். துன்பகாலத்தில் ஏற்ற உதவி அவரே. அவர் சமீபத்தி லுள்ள தேவன். பெலவீனத்தில் அகப்பட்டுத் துன்பப்படுகி றாயா? அவருடைய வார்த்தையைச் சொல்லிக் கெஞ்சு. அது மகா தெளிவு, உண்மையுள்ளது, நிச்சயமானது, அவர் பொய் சொல்லார், மோசஞ்செய்யார். உன்னுடைய பெலவீனத்திலே அவருடைய பெலன் பூரணமாய் விளங்கும். பயப்படாதே, தாழ நித்திய கரங்களிருக்கிறது. உன் ஆத்துமாவில் பெலன் தந்து, உன்னைப் பெலப்படுத்துவார்; அவர் சர்வவல்லவரான தால், உனக்கு உதவிசெய்யக்கூடியவர், அவர் வாக்குக்கொடுத் திருப்பதால், உதவிசெய்வார். எக்காலத்திலும் கர்த்தரை நம்பு, என்றும் அவர்பேரில் சார்ந்திரு. கர்த்தராகிய யேகோ வாவில் நித்திய பெலனுண்டு. அந்தப் பெலனை உனக்குத் தரு வேனென்று வாக்குக்கொடுத்திருக்கிறார். நீ ஜெபத்தில் அதைக் கேட்டால், உனக்காக அதைப் பிரயோகிப்பார். பின்னை ஏன் அதிகமாய்க் கலங்குகிறாய்? ஏன் மனஞ்சோர்ந்து போகிறாய்? உனக்குத் துணைநிற்பேனென்கிறார். சொன்னவர், செய்யமாட்டாரா? தாம் வாக்களித்ததை நிறைவேற்ற மாட்டாரா?

நீ கலங்கிப்போய் நிற்பானேன்;
நான் உன்னோடிருக்கிறேன்;
விடுவிப்பேன் ஆதரிப்பேன்
என் கரத்தால் தாங்குவேன்;
நான் உன் தேவன்
என் நீதியால் ரட்சிப்பேன்.

‘கெத்செமனே’

மத்தேயு 25:36

இது ஒலிவமலையின் அடிவாரத்திலுள்ள ஒரு தோட்டம். இங்கேதான் ஜனங்களுக்குப் பிணையாளியாக வந்த இயேசு கோபமடைந்த தன் பிதாவின் கரத்திலிருந்து அவருடைய உக்கிரத்தின் பாத்திரத்தைப் பெற்றுக்கொண்டார். அதுதான் தேவகோபம். நமக்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டியது அதுதான். நாம் சகிக்கவேண்டிய தண்டனையும் அதுவே. தேவகுமாரன் நம்முடைய சுபாவத்தைத் தரித்து நம்மை ரட்சிக்கும்பொருட்டு திவ்விய நீதியினால் வருந் தண்டனையை நமக்குப் பதிலாக உத்தரித்தார். மனுஷருடைய கை அவரைத் தொட்டதில்லை, ரத்த வேர்வை அவருடைய தேகத்திலிருந்து கீழே விழுந்தபோது, மனுஷர் அவருக்குத் தேறுதல் சொல்லவுமில்லை. அவர் எதிர்பார்த்திருந்த ஞானஸ்நானம் அதுவே. அவருடைய அன்பு எவ்வளவு பெரிதென்று அது காட்டிற்று. இந்த ஞானஸ்நானத்தைப் பெறத்தான் அவர் வாஞ்சை கொண்டார். எவ்வளவு ஆச்சரியமாய்ச் சகிக்கிறார். பயங்கரமான அவர் முறைப்பாட்டைக் கேள். அவர் இருதயத்திலிருந்து புறப்படும் பெருமூச்சைக் கவனி. பூலோகமும் பாதாளமும் பிரமிப்படைந்திருக்கிறதே. மனுஷன்தான் கவலையற்றிருக்கிறான். பிரியமானவர்களே! அவர் நமக்குப் பிணையாளி. நம்முடைய கடனைக்கொடுத்துத் தீர்க்கிறவர். நம்முடைய ஆத்துமாவை ரட்சிக்கிறவர். நமக்கு வேண்டிய பாக்கியத்தைச் சம்பாதித்து, நமக்கு வேண்டிய சமாதானத்தைக் கொடுக்கிறவர். நாம் நரகத்திற்குப் போகாதபடிக்குக் கெத்செமனேக்குப் போனார். நாம் மகிமை அடையும்படிக்குத் தண்டிக்கப்பட்டார். அடிக்கடி இந்தப் பரிசுத்த ஸ்தலத்தண்டைக்குப் போ. விசுவாசத்தால் கிறிஸ்துவின் பாடுகளில் ஐக்கியப்படு. இயேசுவோடு நீ ஐக்கியமாவதற்கு அடிக்கடி கெத்செமனேக்குப் போகவேண்டும் என்று ஆத்துமாவே உனக்கு உறுதியாகக் கட்டளையிடுகிறேன்.

ரட்சகரிடமிருந்து
பாயும் ரத்த வெள்ளத்தை
பூங்காவிடம்மட்டும் சென்று
பாவி, போய் பார் நீ அதை;
உன் சுமைதான்
அவரைக் கீழ்த்தாழ்த்திற்று.

ஜனுவரி-மீ 10-உ

'நானோ ஒரு புழு'

சங்கீதம் 22:6

மனுஷன் இயல்பாய் ஏழையாயிருந்தாலும், பெருமையுள்ளவன். கிருபை இந்தப் பெருமையை நீக்கிப் புழுதியில் வைத்து, அவனுக்குத் தாழ்மையைப் படித்துக்கொடுக்கிறது. தேவனுக்கு அதிகப் பிரியான தாவீது அவருடைய மனதிற்கு ஒத்தவனாக இருந்தும், நானோ ஒரு புழுவென்கிறான். தான் பார்வையில் அற்பனும் புறக்கணிக்கப்படத்தக்கவனும் என்று அறிந்தான். தன்னைத் தாழ்த்துகிற எவனும் உயர்த்தப்படுவான். வேதாகமத்தில் சொல்லியிருக்கும் தேவ பக்தரைப் பார்த்து அவர்கள் என்னைப்போலில்லையென்று நீ பெருமூச்சு விட்டதில்லையா? சகோதரனே! நீ ஒன்றுக்கும் உதவாத பெலவீனமான புழுவல்லவா? இதை நீ உணருகிறதில்லையா? தாவீது தன்னைப்பற்றி அப்படி உணர்ந்தான். உன்னுடைய பார்வையில் நீ எவ்வளவு அற்பனாயிருக்கிறாயோ, அவ்வளவுக்கு இயேசு உன்னைப் பாத்திரவான் என்று பார்க்கிறார். அவ்வளவுக்கு நீ கிருபாசனத்தண்டையில் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளப்படுவாய். தாவீது மாத்திரமல்ல, கர்த்தரும் தம்மைக் குறித்தும் இப்படியே சொல்லியிருக்கிறார். யூதரும் அவரைக் குறித்து இப்படியே எண்ணி இப்படியே அவரை நடத்தினார்கள். தேவ மகிமையின் பிரகாசமாயிருந்த அவர் அருவருப்பான ஒரு புழுவுக்கு ஒப்பிடப்பட்டார். பிதாவின் சொரூபமாயிருந்தவர் மிகவும் அசட்டைபண்ணப்பட்டார். மனிதராகிய நமக்காகவும் நம்முடைய ரட்சிப்புக்காகவுந் தான் அப்படியானார். இந்த இரக்கத்தின் ரகசியம் எவ்வளவோ பெரியது. நாம் தேவதூதரிலும் மேன்மையுள்ளவர்களாகும் பொருட்டு அவர் ஒரு புழுவுக்குச் சமானமானார்.

பெத்லேம் நீங்கிக் கல்வாரி
வந்து சேருமட்டுக்கும்
துன்புற்றார் குருசேறி
உன்னை மோட்ச வீட்டிற்கும்
கொண்டுவரலாமென்று
கஸ்தி நிறைந்த யாவையும்
சகித்துப் பேயை வென்று
ஈகிறார் கிருபையும்.

'என்னிடத்தில் வாருங்கள்'

மத்தேயு 11:28

இயேசு உன்னைத் தமது ஆசனத்தண்டை அழைக்கிறார். உன் விண்ணப்பத்தைக் கேட்க, உனக்கு உதவிசெய்ய, உன்னை ஆசீர்வதிக்க அவர் அங்கே காத்திருக்கிறார். நீ இருக்கிற படியே அவரிடம் போய், உனக்கு வேண்டியதை எல்லாம் அவரிடத்தில் பெற்றுக்கொள். உன்னடிகளை நடத்த ஞானந் தருவார்; உன் இருதயத்தைப் பாதுகாக்கச் சமாதானந் தருவார்; அவர் சித்தத்தின்படிச் செய்யப் பெலன் தருவார்; உங்கள் ஆத்துமங்களைக் குற்றமற்றதாக்க நீதி தருவார்; சொல்லி முடியாத இன்பமுள்ள இளைப்பாறுதலையும் தருவார். இந்த நன்மைகளை அவர் உனக்குக் கொடுப்பதினால் அவர் மகிமைப் படுகிறார். பணமில்லாமல், விலையில்லாமல் இவைகளைப் பெற்றுக்கொள்ள இன்று காலமே, இந்த நிமிஷமே உன்னைக் கூப்பிடுகிறார். இயேசு எவ்வளவு அருமையான ரட்சகர், எவ்வளவு பக்ஷமுள்ள உத்தம சிநேகிதர். ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் வாருங்கள். என்னிடத்திற்கு வாருங்கள் என்கிறார். உன்னண்டை செல்லாதே, உலகத்தண்டை போகாதே, வெறுமையான பாத்திரங்களைப்போன்ற சிருஷ்டிகளண்டை ஓடாதே. என்னண்டையில் வா. நீ கேட்பதிலும் நினைப்பதிலும் எவ்வளவோ அதிகமாக நான் உனக்குச் செய்வேன். உன் பாவங்களை மன்னிப்பேன், உனக்குக் கிடைத்த வரப்பிரசாதங்களை விர்த்தியாக்குவேன். உன் பரிசுத்தத்தை அதிகப்படுத்துவேன். என்னை மகிமைப்படுத்த நீ செய்யும் பிரயத்தனங்களை விருத்தியடையச் செய்வேன் என்கிறார். ஆ, கர்த்தரே! உம்மைத் தேடுகிறவர்களுக்கும், மனுப்புத்திரர்களுக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவோ பெரிது!

உம்முடைய வார்த்தை நம்பி
பற்றிக்கொள்வோம் ஏசுவே!
உம்முடைய உண்மைபற்றி
காத்திருப்போம் கர்த்தரே!
எங்களாவி உம்மைத்தேடி
என்றும் உம்மைச் சாருமே.

ஜனுவரி-மீ 12-உ

'துக்கப்பட்டுத் திரிகிறேன்'

சங்கீதம் 38:6

நீ துக்கப்படுவதற்குக் காரணமென்ன? இயேசு ஒருவர் இருந்தால் நீ துக்கப்படவேண்டியதில்லை. பாவம் தவிர உனக்குத் துக்கத்தைத் தருவது ஒன்றுமில்லை. தேவனுக்கு முன்பாக உன் நடத்தை நன்றாகயிருக்கவில்லை என்று துக்கப்படுகிறாயா? உன் இருதயம் இவ்வளவு கெட்டதாயிருக்கிறதென்று துக்கப்படுகிறாய்? அல்லது துஷ்ட மனிதர் தேவனுடைய கற்பனைகளை மீறி இருக்கிறார்களே என்று துக்கப்படுகிறாயோ? ஒருவேளை இயேசு தமது முகத்தை உனக்கு மறைத்ததினால், நீ அவருடையவனென்கிற குறிப்புகள் மங்கி மறைந்து போயிற்றென்று துக்கப்படுகிறாயோ? இயேசுவைக் காணாமல் நீ துக்கப்பட்டாலும், நீ மலைக்கலாகாது. அவர் மறுபடியும் வருவார். மறுபடியும் உனக்கு இரங்குவார். இருதயத்தின் கேட்டைப் பார்த்துத் தேவதூதனும் அழுவான். ஆகிலும் அதைச் சுத்திகரிக்கும் விலையேறப்பெற்ற அருமையான இரத்தத்தை மறவாதே. பரிசுத்தமாக்கும் கிருபை வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறதை விட்டுவிடாதே. உன் நடத்தையிலும், உன் இருதயத்திலும் காணப்படும் அசுத்தங்களையும் குறைவுகளையும் பார்த்துக்கொண்டு நில்லாதே. உன்னைக் குணமாக்கும் எத்தனங்களாகிய இயேசுவின் ரத்தத்தையும் கிருபையையும் அதிகமாய்ப் பார். அவர் வாக்குத்தத்தம் பண்ணியதை வாசித்து நம்பு. அவருடைய கிருபாசனத் தண்டையில் உன் பாவங்களை அறிக்கையிட்டுக் கெஞ்சு. அவர் காட்டும் வழியில் பொறுமையோடு காத்திரு, விழித்திரு. மட்டுமிஞ்சி துக்கப்பட்டு அவருடைய ஆவிக்கு வருத்தமுண்டாக்காதே. அவர் பக்ஷமற்றவரல்ல, அவர் ஒருபோதும் உன்னைக் கைவிடார். துக்கப்படுகிற யாவருக்கும் ஆறுதலளிக்க அவர் அபிஷேகம் பண்ணப்பட்டார்.

பக்தனே கலங்காதே,
மகிழ்ந்திரு அழாதே,
வேதனை பெருகியும்
தேவனே விடுவியும்
என்று கெஞ்சு, போர் நீங்கும்.
தேவ கை யாவும் தாங்கும்.

ஜனுவரி-மீ 13-உ

'அவன் விசுவாசத்தோடே கேட்கவேண்டும்'

யாக்கோபு 1:6

விசுவாசி தன் ஜெபங்களைத் தேவனுடைய வாக்குத்தத்தங்களைக்கொண்டு ஒழுங்குபடுத்தவேண்டும். மனுஷர் அடிக்கடி தங்களுக்குத் தீமையான காரியங்கள் வேண்டியதென்று நினைக்கிறார்கள். சில சமயங்களில் அவர்கள் கேட்கிறதைக் கர்த்தர் கொடாமலிருக்கிறது கோபத்தினால் அல்ல, அன்பினாலேயே. தேவன் தமது அருமையான ஜனங்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணினதெல்லாம் நன்மையே. தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதையே கேள். அவர் தமது வாக்கைக் கனப்படுத்துவார். நிறைவேற்றுவாரென்று நம்பிக் கேள். அவர் தம்மைத் தாமே மறுதலிக்கமாட்டார்; சொன்ன வாக்குச் சகலத்தையும் நிறைவேற்றுவார் உனக்குத் தேவையாயிருக்குமானால், அவர் கொடுப்பேனென்று சொல்லியிருப்பாரானால், அவர் கொடுப்பார் என்பதைப்பற்றி நீ சந்தேகிக்க வேண்டியதில்லை. ஆதலால் ஆசையோடு எதிர்பார்த்துக் கேள். கேட்டபிறகு கிடைக்குமாறு உரைத்துக்கொண்டு நில். இந்தக் காலையில் உனக்குத் தேவையென்ன? அவைகளைத் தேவன் தமது பரிசுத்த வசனத்தில் எங்கே வாக்குக்கொடுத்திருக்கிறார்? அந்த வாக்கைத் தேடியெடு. அதை அவருடைய ஆசனத்தண்டைக்குக் கொண்டுபோ. அதை நிறைவேற்ற வேண்டுமென்று இயேசுவின் நாமத்தைச் சொல்லிக் கெஞ்சு. அவர் அதை நிறைவேற்றுவாரோவென்று ஒரு நிமிஷமாவது சந்தேகியாதே. கர்த்தருடைய வசனத்தின்பேரில் சார்ந்திரு. நீ விசுவாசியாவிட்டால் ஸ்திரமடையமாட்டாய்: தேவனை நம்புகிறதினால் விசுவாசம் அவரைக் கனப்படுத்துகிறது. விசுவாசம் கேட்கிறதைக் கொடுப்பதினால் தேவன் அதைக் கனப்படுத்துகிறார். நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யவும், கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டை சேரக்கடவோம்.

எக்குறைதானிருந்தும்
நீக்கும் அவர் வல்லமை;
ஜெபத்தில் நீ வருந்தும்
போது வரும் மகிமை;
கேட்பதிலும் அதிகம்
உனக்களிப்பார் சுகம்.

கவனமாய் நடந்துகொள்ளப் பாருங்கள்'
எபேசியர் 5:15

சத்துருவின் தேசத்தில் குடியிருக்கிறீர்கள். எப்பக்கத்தி லும் சோதனைகளுண்டு. எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயம் திருக்குள்ளது, மகா கேடுள்ளது. குணத்திலும் செய்கையிலும் சகலத்திலும் இயேசுவைக் கனப்படுத்த வேண்டுமென்பதே உங்கள் நோக்கமாயிருக்கவேண்டும். உங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்த கர்த்தருக்கென்றே நீங்கள் உங்கள் ஜீவகாலத்தைப் பின்னிடவேண்டும். இதற்காகவே நித்திய உடன்படிக்கை செய்யப்பட்டது. இதற்காகவே விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் அளிக்கப்பட்டன. இதற்கென்றே பரிசுத்த ஆவியும் கொடுக்கப்பட்டிருக்கிறார். நீங்கள் உங்கள் ஜீவகாலம் எல்லாம் நீதியாயும் பரிசுத்தமாயும் அவருக்கு ஊழியஞ் செய்யும்பொருட்டே இதெல்லாம் உங்களுக்கு அளித்திருக்கிறது; இந்த உலகம் உங்களுக்குச் சதமல்ல; சாத்தானுடைய குடிகள் உங்களுக்குத் தோழரல்ல; ஐசுவரியம், மேன்மை, இன்பம் இவைகளைச் சம்பாதிப்பது உங்கள் நோக்கமல்ல். கண்ணிகள் நடுவே நீங்கள் நடக்கவேண்டியிருக்கிறது. விழித்திருந்து ஜெபம்பண்ண இயேசுவின்பேரில் சார்ந்திருங்கள். அவரோடு ஐக்கியப்படுதலையே நாடுங்கள். இயேசுவை உங்கள் மாதிரியாகக் கண்ணுக்குமுன் வைத்துக்கொள்ளுங்கள். அவருடைய வசனமாகிய சட்டத்தின்படி நடவுங்கள். துணிகரமும் படபடப்பும் வேண்டாம். பொல்லாங்கென்று தோன்றுவதையும் தள்ளிவிடுங்கள். உலகத்தாருக்குப் பிரியமாய் நடக்க, உங்கள் இஷ்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கர்த்தருடைய வழிகளையும் நியமங்களையும் விட்டுவிடாதேயுங்கள். இயேசுவோடு ஒட்டிக்கொண்டிருங்கள். இன்னும் அவரை அதிகமாய் அறிந்துகொள்ளப் பாருங்கள். தன் பிதாவின் வீட்டுக்குப் பிரயாணம் பண்ணும் பிள்ளையைப் போலச் சகலத்தையும் செய்யுங்கள்.

நமது நடக்கை நாவும்
வசனத்துக்கொத்து யாவும்
குணமும் செய்கையுமெல்லாம்
வேத உண்மை விளக்குமாம்.

ஜனுவரி-மீ 15-உ

'நீரோ மாருதவராக இருக்கிறீர்'
சங்கீதம் 102:27

பூமியிலுள்ளதெல்லாம் மாறுந் தன்மையுள்ளது. சுகம் வியாதியாய் மாறும். இன்பம் துன்பமாய்விடும்; நிறைவுபோய் குறைவு வரும்; அன்பு பகையாகவும், கனம் கனவீனமாகவும், பெலன் பெலவீனமாகவும், ஜீவன் மரணமாகவும் மாறிப் போகும். அந்தகாரத்தின் நாட்களே நீணே, அவைகள் அநேகம். நம்முடைய நிலைமையும் நமது சிநேகிதரும் சகலமும் மாறினாலும், ஒருபோதும் மாருத ஒருவருண்டு. அவர் ஒரே மனமுள்ளவர்; அவரை ஒருவரும் மாற்றக்கூடாது; அவரிடத்தில் வேற்றுமை இல்லை. அவர் நேற்றும் இன்றும் அப்படியே இருக்கிறவர். அவர்தான் மிகவும் உத்தம சிநேகிதன், மிகவும் கிட்டின இனத்தான், கிருபை நிறைந்த ரட்சகன். அவருடைய பேர் இயேசு: அவரது சுபாவம் அன்பு. நமக்கு நன்மை செய்வதே அவருடைய முழு இருதயத்தின் வாஞ்சையும் நோக்கமுமாய் நேற்றும் இருந்தது; இன்றைக்கும் அப்படியே இருக்கிறது. அவருக்கு முன்பாக மாத்திரம் நாம் தாழ்மையாக நடப்போமானல், ஒன்றிலும் நமக்குக் குறைவு வைக்கமாட்டாரென்று நாம் முழு நிச்சயமாயிருக்கலாம். அவர் நமக்குத் தேவனுகை இருப்பார்; நாம் அவருக்கு ஜனங்களாக இருப்போம். அவரோடு நெருங்கி அதிகமாய்ச் சாவகாசஞ் செய்து அவர் பேரில் சார்ந்திருக்கவேண்டும். அவரைப் பிரியப்படுத்துவது நமது கவலையும், அவரை விசனப்படுத்துவது நமக்குப் பயமும், அவரை மகிமைப்படுத்துவது நமது வைராக்கியமுமா யிருக்கவேண்டும். அப்படியிருக்குமானல் சுகமாயிருந்தாலும் வியாதியாயிருந்தாலும், நிறைவாயிருந்தாலும் குறைவாயிருந்தாலும், உயிரோடிருந்தாலும் செத்துப்போனலும் நாம் நன்ருயிருப்போம். அவர் மாருதவர், நமக்கு நன்மை செய்வதைவிட்டு மாறமாட்டார். அன்புக்கும் பரிசுத்தத்துக்கும் ஊற்ருக இருப்பார். கர்த்தரைத் துதியுங்கள்.

நாம் வணங்கும் தேவனிவர்,
உத்தம சிநேகிதர்,
இவரன்பு மாபெரிது,
பெலன் குறையாதது.

'நீ சுகமாயிருக்கிறுயா?'

2 ராஜாக்கள் 4:26

இயேசு உன் ஆத்துமாவுக்கு அருமையாயிருக்கிறுரா? பாவத்தைக் குறித் தாவது, அன்புள்ள ரட்சகருடைய சமுகங் கிடைக்கவில்லேயே என்றுவது நீ துக்கப்படுகிறுயா? விசுவா சத்தில் பலசாலியாயிருந்து தேவனே மகிமைப்படுத்துகிறுயா? உன் பரம பிதாவோடு ஏக ஐக்கியமாயிருக்கவேண்டுமென்று வாஞ்சிக்கிறுயா? உலகம் உன் பாதத்துக்குக் கீழாக இருக் கிறதா? எல்லாப் பரிசுத்தவான்கள் மேலும் அன்பென்னும் அனல் மூளுகிறதா? எல்லாவற்றிற்கு மேலாக தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிறுயா? துன்ப காலத்தில் அவருடைய பாதத்தில் வீழ்ந்து: 'கர்த்தாவே, எனக்கு உதவிசெய்யும்' என்று கூப்பிடுகிறுயா? அப்படியா ஞல் நீ சுகமாயிருக்கிறுய். உன் ஆத்துமாவில் உயிரிருக்கி றது. அந்த நல்லாவி உன்னேப் போதித்துவருகிறுர். இயே சுவைவிட உலகத்தையும் தேவனேடு ஐக்கியப்படுவதைவிட உலக இன்பங்களேயும் அதிகமாய் மதிக்கிறுயா? தற்சோத னேயை அசட்டை செய்து, வேதவசனம் உனக்கு ருசியற்ற போசனம்போல் உனக்கு வெறுப்பாயிருக்குமானுல் உனக்குச் சுகமில்லே. ஒழுங்கான ஜெபத்தினுலும், கர்த்தருடைய விஷ யங்களில் காணப்படும் வைராக்யத்தினுலும் ஜீவ அப்பத்தின் மேலுள்ள ஆசையாலும், கர்த்தருடைய வழிகளிலோடும் ஜாக்கிரதையினுலும் ஆத்துமத்தின் சுகம் வெளிப்படவேண் டும். உன் ஆத்துமா வியாதியாயிருக்கிறதா? நல்ல வைத்திய ஞகிய' இயேசுவண்டைக்கு உடனே ஓடு. அவர் உனக்குத் தமது ரட்சிப்பின் சந்தோஷத்தைத் திரும்பக் கொடுக்கவும், அவருடைய ஆவியால் உன்னேத் தாங்கவும் அவரைப் பார்த் துக் கெஞ்சு. உன் அக்கிரமங்களேக் குணபடுத்துவார். உன்னே இலவசமாய் நேசிப்பார்.

நான் ஏழைப் புழுவாகிலும்
என் ஆவி சந்தோஷிக்கும்;
என் ஏசு எப்புசலிலும்
தோன்றி அவர் கைகாக்கும்;
கொடுத்த வாக்கை மறவார்,
எத்தீங்கிலும் தற்காப்பார்.

‘நன்மைசெய்ய விரும்புகிறேன்’

ரோமர் 7:21

ஒவ்வொரு விசுவாசியும் பரிசுதத ஆவியினுல் புதிதாகுதல் இன்னதென்று தன் சொந்த அனுபவத்தால் காண்கிறுன். பாவம் அவன்மேல் ஆளுகைசெய்கிறதில்லை. பரிசுத்தத்தின் அழகைப் பார்த்துப் பாவத்தினிமித்தம் தன்னை அருவருக்கிறுன். உள்ளாகப் பரிசுத்தமாயிருக்கவும், வெளியரங்கமாக வேதவசனத்தோடு ஒத்து நடக்கவும் ஆசைப்படுகிறுன். கருத்தாய் ஜெபம் பண்ணவும், நன்றியறிதலோடு துதிசெலுத்தவும், உறுதியாய் விசுவாசிக்கவும், பாவத்தோடும், சாத்தாைேடும், மாம்சத்தோடும் தைரியமாய்ப் போர்செய்யவும், ஒவ்வொரு நினைவிலுைம், வார்த்தையிலுைம், செய்கையிலுைம், எண்ணத்திலுைம் தேவனை மகிமைப்படுத்தவும் வேண்டும் என்பதே அவனுடைய விருப்பம். இதுதான் அவன் இஷ்டம். இதற்கென்றே அவனுக்குப் பிரியமான சமயங்களில் எல்லாம் ஜெபம் பண்ணுகிறுன். ஆகிலும் தான் பரிசுத்த ஆவியினுல் அடிக்கடி புதிதாக்கப்பட வேண்டுமென்று பார்க்கிறுன். இல்லாவிட்டால் பக்தி குளிர்ந்து அணைந்துபோம். இருண்டு மந்தமாய்ப்போகுமென்று பயந்து: ‘என் ஆத்துமா தூளில் ஒட்டிக்கொண்டிருக்கிறது; உம்முடைய வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்’ என்று அழுகிறுன். கர்த்தர் விருப்பத்தை மாத்திரமல்ல, செய்கையையும் நமக்குள் நிறைவேற்றவேண்டியவர். இயல்பாய் நமக்கு நல்ல மனமில்லை. பரிசுத்தத்தின்பேரிலுள்ள வாஞ்சை தேவனிடம் இருந்துதான் வரவேண்டும். இல்லாவிட்டால் சுத்தமாய்க் கிடையாது. நேசனே! நீ நித்தம் இயேசுவண்டைக்குப் போய் உனக்குத் தேவையான ஆவியின் வரப்பிரசாதத்தைப் பெற்றுக்கொள். இல்லாவிட்டால் நீ பலவீனப்பட்டுப்போகிறது மாத்திரமல்ல, கவலையற்றவனுகவும் போவாய். பக்தியின் வல்லமை தணிந்துபோகிறது மாத்திரமல்ல, நீ ஏனைோனேவென்று நடப்பாய். சோதனைக்கு விரோதமாய் விழித்திரு. ஜெபத்தோடு விழித்திரு. உன் சொந்த இருதயத்தைக் குறித்து விழிப்பாயிரு.

போரிலே ஒத்தாசை தாரும்
என் ஆவியை நிமிர்த்தும்;
பெலத்தாலே என்னைக் காரும்
என் ஆவி உம்மைப் போற்றும்.

'என்னிடத்தில் தீமையுண்டென்று காண்கிறேன்'

ரோமர் 7:2

ஆனாலும் அந்தத் தீமை உன்னிலும் உன்மேலும் அதிகாரம் செலுத்தாமலிருப்பது எவ்வளவு பெரிய இரக்கம். முன்னே அதிகாரம் செலுத்திவந்தது; தேவகிருபை அதை ஜெயிக்காவிட்டால் இப்பொழுது அதிகாரம் செலுத்தும். பாவம் உன்னைப் பெருமூச்சுவிடப்பண்ணி, தேவனிடத்தில் போராட அவருடைய சிம்மாசனத்தண்டைக்கு உன்னை நடத்தி, அதினின்று கழுவப்பட ரட்சகருடைய இரத்தமென்னும் ஊற்றண்டைக்கு உன்னைக் கொண்டுபோகுமானால், அது உன்னிடத்தில் ஆளுகைசெய்கிறதுமில்லை, ஆளுகை செய்யவுங்கூடாது. உன்னிலுள்ள சமாதானத்தை அது அசைக்கலாம்; உன் மனதை வருத்தப்படுத்தலாம்; உன் கடமையை நிறைவேற்றாதபடி தடுக்கலாம்; நன்மை செய்ய நீ பண்ணும் பிரயத்தனங்களோடு கலந்திருக்கலாம்; நான் நிர்ப்பாக்கியனான மனிதன், என்னை யார் விடுதலையாக்கக்கூடும் என்று கதறி அழும்படி செய்யலாம். அப்படியிருந்தாலும், இயேசு உன்னை இன்னும் நேசிக்கிறார். கிருபை உன்னில் ஆளுகை செய்கிறது. நீ ஜெயவீரனைவிட அதிகமாய் ஜெயங்கொள்வாய் என்பதைப்பற்றிச் சந்தேகப்படமாட்டாய். பவுல் கர்த்தரை அநேக வருஷங்களாய் அறிந்திருந்தான். மூன்றாம் வானமட்டும் போய்க் கிறிஸ்துவில் நித்தம் ஜெயமடைந்தான். அவனும் உன்னைப்போலவே முறையிட்டான். அவன் நன்மை செய்ய விரும்பினபோது தீமை அவனிடம் காணப்பட்டது. விரும்பின காரியத்தைச் செய்யக்கூடாமற்போனான். பாவம் உன்னைத் தொந்தரவுபண்ணி உனக்குப் பாரமாக துக்கத்தை வருவிக்குமானால், பரிசுத்தம் உன்னில் பிழைத்து, தற்காலத்தில் உன்னிடத்தில் நடக்கும் போராட்டம் நித்திய சமாதானமாய் முடியும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எங்களுக்கு ஜெயமளிக்கிற தேவனுக்குத் தோத்திரமென்று நீ இப்போதும் பாடலாம்; கிறிஸ்துவின்மேல் நீ சார்ந்து இப்போது ஜீவனம்பண்ணு; எல்லாத் தீமையையும் ஜெயித்துப் போடுவாய்.

லோகத்தில் சஞ்சரிக்கையில்
துன்பம் துயர் நமக்குண்டு;
ரட்சகர் நமக்கிருக்கில்
பயம் திகில் ஒன்றும் அன்று.

'அவனே எனக்குச் சகோதரன்'

மத்தேயு 12:50

இயேசுவுக்குச் சகோதரன் யார்? பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன், தன் நற்கிரியைகளினால் தன் விசுவாசத்தைக் காண்பிக்கிறவன், தன் நல் நடக்கையினால், தன் பக்தியினால், சற்குணத்தினால், தன் சுபாவம் நற்சுபாவம் என்று காட்டுகிறவன். விசுவாசியே! இயேசு உன்னைச் சகோதரனென்று அழைக்கிறார். உன்னைச் சகோதரனாக எண்ணி நேசிக்கிறார். இது எவ்வளவு அன்பான நேசம், பரீட்சிக்கப்பட்ட நேசம், மரணத்திலும் பலனுள்ளது, அறிவுக்கு மிஞ்சினது. உன்னுடைய பலவீனங்களைத் தாங்குகிறார்; உன் புத்தியீனத்தைக் கடிந்துகொள்ளுகிறார். உன் விசுவாசத்தைப் பிரியப்படுத்துகிறார்; பயப்படவேண்டாமென்று சொல்லி, உனக்குத் தேவையானதெல்லாம் நிச்சயமாகவே தருவார். பஞ்சகாலத்தில் யோசேப்பு எகிப்தில் தன் சகோதரருக்கு வேண்டியதெல்லாம் கொடுத்திருக்க, இயேசு தன் சகோதரருக்கு வேண்டியதைக் கொடுக்கமாட்டாரா? அவர் கடினமாய் பேசுகிறவர் போல் காணப்பட்டாலும், பட்சமாய் சகோதரனைப்போல் நடத்துவார். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குண்டு. அவர் சகலத்தையும் தமது இஷ்டபடி செய்கிறவர். நம்மைச் சகோதரரென்றழைக்க அவர் வெட்கப்படுகிறதில்லை. அவர் நம்மோடு பேசுகிறார். தினந்தோறும், நிமிஷந்தோறும் அவரோடு நாமும் பேசவேண்டுமென்கிறார். நீ கிருபாசனத்தண்டை சேரும்போது, உன் சகோதரன் அதில் வீற்றிருக்கிறார் என்று நினை. உன்னை அங்கே வரவழைத்து எந்த நற்காரியத்தையும் உனக்குக் கொடாமல் மறைக்கமாட்டார். 'அருமையான இயேசுரட்சகரே! சகோதர நேசத்தை எனக்குக் காட்டி உமது சகோதர பக்ஷத்தின்மேல் நான் சார்ந்திருக்கச் செய்யும்.'

தூதர்மேல் பணிந்து போற்றும்
நேசர் நம் சகோதரன்;
நம்மோடவர் துதிசாற்றும்
ஓசை எட்டும் உம்பரன்.

'நீதிமான்களுடைய ஞானம்'

லூக்கா 1:17

கர்த்தருடைய ஜனங்கள் இலவசமாய்க் கிருபையினாலே, கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாகிறார்கள். தேவனுக்கு முன்பாக அவர்கள் நீதிமான்களாக்கப்படுகிறதுதான் இயேசுவின் கிரியை. இதையே நம்புகிறார்கள், இதையே சொல்லிக் கெஞ்சுகிறார்கள், இதிலேதான் மகிழுகிறார்கள். பரிசுத்த ஆவியினால் போதிக்கப்பட்டு, தேவனுடைய உண்மையுள்ள வாக்கை விசுவாசித்து, அதை நிறைவேற்றுவாரென்று நம்புகிறதினால் தங்கள் ஞானத்தைக் காண்பிக்கிறார்கள். தங்களையும் தங்களுக்கு அருமையான சகலத்தையும் அவர் காத்து தமதிஷ்டப்படி செய்ய அவருக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். அவருக்கு ஞானமும் அன்பும் தாங்கள் செய்யக்கூடியதைவிட அதிகமாகத் தங்களுக்கு நலமானதைச் செய்யுமென்று உறுதியாய் நம்புகிறார்கள். தேவனுடைய தீர்மானத்துக்கு சகலத்தையும் ஒப்புவித்து, அவர் வாக்குக்குச் சந்தோஷமாய் அமைகிறார்கள். அவருடைய திவ்விய செயலினாலும், கிருபையாலும் சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் வேண்டிய சகலமும் கிடைக்குமென்று பிள்ளைப் பத்தியாய் நம்பியிருக்கிறார்கள். அவருடைய சித்தமே தங்கள் அடைவான சித்தமாகவேண்டுமென்று விரும்புகிறார்கள். சில விஷயங்களில் தங்களுக்கு வித்தியாசப்படுகிற கிறிஸ்தவர்களோடும் அன்பாய் நடந்து, யாவருக்கும், முக்கியமாய் விசுவாசிகளின் கூட்டத்தாருக்கு நன்மைசெய்யப் பார்க்கிறார்கள். சிநேகிதரே! நீங்கள் இந்த ஞானத்தைக் காண்பிக்கிறீர்களா? இந்த விதமாய் நடக்கிறீர்களா? இவைகளைக் கவனிக்கிறீர்களா? பரத்திலிருந்து வருகிற ஞானம் உங்களுக்குண்டா? அது சுத்தமுள்ளதாயும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும் இருக்கிறது.

கனம், பெலன், அன்பு யாவும்
கர்த்தர் வுமக்குரித்தே,
ஞானந் தந்து என்னைக் காரும்
சுத்த ஞானம் உமதே.

'தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது'

மத்தேயு 6:24

நம்முடைய தேவன் வைராக்கியமுள்ளவர். இருதயம் அவருக்குக் கொடுக்கப்படவேண்டும்; நமக்குள்ள சகலமும் அவருக்கு ஆதீனமாகவேண்டும்; அவர் கேட்கிறது இதுதான். இது இல்லாவிட்டால் கிறிஸ்துமார்க்கம் திருப்தி கொடாது. தேவனை உலகத்தோடு சேர்த்து, தேவனுக்கு ஊழியஞ்செய்தலையும் பாவத்துக்கு ஊழியஞ்செய்தலையும் ஏகமாக்கப் பார்க்கிறவர்கள் பாக்கியராயிருக்கமாட்டார்கள். நாம் தீர்மானமாய் நடக்கவேண்டும். இன்றைக்கு யார் எனக்குத் தேவன்? இன்றைக்கு நான் யாருக்கு என் மனதையும் என் திறமையையும் என் ஆசையையும் கொடுக்கவேண்டும்? இன்றைக்கு நான் லோக ஆதாயத்தை, மாம்ச இன்பத்தை, உலகத் தோழமையை எனக்கு விக்கிரகமாக வைத்துக்கொள்வேனு? அல்லது இயேசுவுக்கு என் ஆசைகள் விருப்பங்கள் சகலத்தையும் கொடுப்பேனு? அவருடைய மகிமையையும் கனத்தையும் தேடுவேனு? அல்லது ஏதுமற்ற ஒரு முட்செடியைப் பார்த்து: நீ எனக்கு ராஜனுயிரு என்று சொல்லுவேனு? யாரைச் சேவிக்கிறதென்று தெரிந்துகொள்ளுங்கள். ஒன்றுக்கொன்று விகற்பமானதை ஒன்றுபடுத்தப் பார்க்கவேண்டாம். உன்னை முழுவதும் தேவனுக்குக் கொடு, அல்லது மம்மோனுக்குக் கொடு, இயேசுவே! நான் உம்முடையவன், உம்மையே சேவிப்பேனென்று நிச்சயமாய்ச் சொல்லுவாய். அவர் கொடுக்கிற கிருபையைக்கொண்டு அவரைச் சேவித்தால் அவருக்குப் பிரியமான ஊழியஞ்செய்வீர்கள். இந்தக் கிருபையை அவர் வைத்திருக்கிருர், கொடுப்போமென்கிருர், பெற்றுக்கொள்ள அழைக்கிருர். ஆதலால் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனைசெய்யக் கிருபையைப் பெற்றுக் கொள்ளக்கடவோம். புத்திர சுவிகார ஆவியோடு அவருக்கு ஊழியஞ்செய்வதே மெய்ப் பாக்கியம்.

உமதன்பு அனல் தந்து
உமதூழியம் செய்ய,
எனதுள்ளம் எங்கும் பாய்ந்து
என்னிலுள்ள எத்தீய
குணங்களை நீக்கட்டுமேன்?
உம்முடையவனுவேன்.

'நான் உனக்குக் கேடகம்'

ஆதியாகமம் 15:1

விசுவாசிக்கிறவர்கள் விசுவாசமுள்ள ஆபிரகாமோடு பாக்கியவான்களாயிருக்கிறார்கள். தேவன் ஆபிரகாமுக்குச் செய்த வாக்குத்தத்தங்களை நமக்கு நிறைவேற்றுவார். நம்மைச் சூழ சத்துருக்கள் இருக்கிறார்கள். எப்பக்கத்திலும் அக்கினி அம்புகளைப் பார்க்கிறோம். இயேசுவில் ஏகோவா நம்முடைய கேடகமாக நடுவே வருகிறார். அவரோடு நமக்கிருக்கும் சம்பந்தத்தால்தான் நாம் பத்திரமாய்ப் பாதுகாக்கப்படவேண்டும். அவர் நம்மைக் காப்பாற்றி ஆதரிக்காவிட்டால் நாம் சீக்கிரம் ஜெயிக்கப்பட்டுப்போவோம். நம்முடைய தேவன் நம்மைக் காக்கிறவர், உன்னத கர்த்தர் நம்மை ஆதரிக்கிறவர் என்று நாம் நினைக்கும்போது எவ்வளவு சுகபத்திரமாயிருக்கிறோம், எவ்வளவு பாக்கியராயிருக்கிறோம். சத்துருக்கள் நம்மை பயப்படுத்தி, மோசங்கள் நம்மைத் திடுக்கிடப்பண்ணினாலும், கர்த்தருடைய நாமம் பலத்த அரணென்று நினைத்துக்கொள். அதற்குள் ஓடி சுகமாயிருப்பாய். விசுவாசந்தான் கை. ஏகோவா உன் கேடகம். சாத்தானோடும், பாவத்தோடும், உலகத்தோடும் போர் செய்கிறோம். இரட்சிப்புக்கென்று நாம் விசுவாசிக்கும்போது தேவவல்லமையால் கோட்டைக்குள் இருப்பவர்கள்போலக் காப்பாற்றப்படுகிறோம். என் சகோதரனே! இந்த நாளெல்லாம் இயேசுவை உன் கேடகமாகப் பிடித்துக்கொள். அவரிடத்திலிருந்துதான் உனக்கு வேண்டிய க்ஷேமமும் ஆறுதலுங் கிடைக்குமென்று அவரை நோக்கு. உன்னைக் காப்பாற்ற உன்னோடிருக்கிறார். உன் கெஞ்சுதலுக்குச் செவிகொடுப்பார்; உன் வெளிப்புறப்படுதலையும், உன் உட்பிரவேசிக்குதலையும் இதுமுதற்கொண்டு என்றைக்கும் காப்பார். இரட்சணியமென்னும் கேடகத்தை அவர் உனக்குத் தருவார். அவருடைய சாந்தம் உன்னைப் பெரியவனாக்கும்.

குற்றம் செய்த பாவிகட்கு
நீதிவர லாச்சுது,
சத்துரு மோசம் சோதனைக்கு
கேடகமுமாச்சுது.

'ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்'

மாற்கு 4:40

சீஷர்கள் மோசத்தில் அகப்பட்டிருந்தார்கள். அவர்கள் இருதயம் பயத்தால் நிறைந்திருந்தது. அவர்களைப்பற்றிய கவலை இயேசுவுக்கில்லையென்று எண்ணினார்கள். அப்படி எண்ணுவிட்டால் இப்படிப்பட்ட பயம் அவர்களுக்குள் இராது. அன்பர்களே! அருமையான ரட்சகர் கையில் நீங்கள் இருக்கிறீர்கள். அவர் உங்களையும் உங்கள் காரியங்களையும் நடத்தி வருகிறார். உங்கள் தலையின் மயிரெல்லாவற்றையும் எண்ணியிருக்கிறார். ஒவ்வொரு நிமிஷமும் உங்களைப்பற்றி விழிப்பாயிருக்கிறார், உங்களோடிருக்கிறார். அவருடைய கண் உங்களைவிட்டு எடுபடுகிறதில்லை. அவருடைய சர்வ வல்லமை உங்களைக் காக்கிறது. அவருடைய சம்பூரணம் உங்களுக்குத் தேவையானதைத் தருகிறது. அவருடைய ஞானம் உங்களை நடத்துகிறது. நீங்கள் என்றும் பரிசுத்தராய், பாக்கியராயிருந்தால்தான் அவருடைய லக்ஷணங்களெல்லாம் மகிமைப்படும். அவர்களால் நான் மகிமைப்படுகிறேன் என்றார். நீங்கள் ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்? இயேசு உங்களுக்குச் சமயத்துக்கேற்ற சகாயர். அவர் எக்காலத்திலும் நேசிக்கும் அன்பன், அவர் உங்கள் கேடகம்; உங்கள் பெரிய பலன். ஒருவேளை நீங்கள் அவரைவிட்டு அலைந்தீர்களாக்கும். சாத்தான் அவநம்பிக்கைகொள்ளச்செய்கிறான். உங்கள் மனச்சாட்சியும் குற்றஞ்சாட்டுகிறது. போங்கள், உடனே திரும்புங்கள், ஒரு நிமிஷமாவது தாமதம் பண்ணவேண்டாம். உங்கள் குற்றத்தோடு அவர் பாதத்தில் விழுந்து, சகலத்தையும் அவருக்கு அறிக்கையிட்டு, அவருக்கு உங்களை மறுபடியும் முற்றிலும் ஒப்புக்கொடுங்கள். அவர் உங்களைக் கிருபையாய் ஏற்றுக்கொள்ளுவார்; தாராளமாய் நேசிப்பர்; தமது ரட்சிப்பின் சந்தோஷத்தைத் திரும்பத்தருவார்.

பக்தர் பயப்படலாமோ?
அவர் மலைக்கலாமோ?
எதிர் பாராதிருக்கையில்
தோன்றுவாரே ஜெபிக்கில்.

'நீங்கள் உங்களுடையவர்களல்ல'

1 கொரிந்தியர் 6:19

இயேசு உங்களைத் தமது சொந்த ரத்தத்தால் கொண்டார்; தமது ஆவியில் புதுப்பித்தார்; தமக்கென்று உங்களை நியமித்துக்கொண்டார்; தம்மோடு உங்களை எப்போதும் மகிமையாய் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார், உன் பேரைச் சொல்லி உன்னை அழைத்தேன், நீ என்னுடையவன் என்று சொந்தம் பாராட்டிப் பேசுகிறார். நீங்கள் அவருக்குச் சொந்தமானபடியால் உங்களுக்கு வேண்டியதை அவர் சவதரித்துத் தருவார், ஒரு தகப்பன் தனக்கு ஊழியஞ் செய்கிற தன் சொந்த மகனைப் பாதுகாப்பது போலஉங்களைப் பாதுகாக்கிறார், நீங்கள் அவருக்குப் பிரியமான மணவாட்டி, அவருடைய பங்கு, அவருடைய சரீரத்திலும் மாம்சத்திலும் எலும்பிலும் சேர்ந்த ஒரு அவயவம், உங்களை நேசிக்கும்போது தம்மையே நேசிக்கிறார். நீங்கள் அவருடையவர்கள், உங்களுடையதெல்லாம் அவருடையது என்று தினந்தோறும் எண்ணி நீங்கள் ஜீவனம் செய்யவேண்டுமென்பதே அவருடைய விருப்பம். உங்களுக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை, உங்களுக்குள்ளதெல்லாம் அவர் இலவசமாகத் தந்தது. உங்களுக்குள்ளதெல்லாவற்றையும் அவருக்கு ஒப்புவித்துப் போட்டோமென்று சொல்லுகிறீர்கள். இயேசு தந்தையல்ல, அவரையே அதிகமாய்ச் சிந்தியுங்கள்; அவரோடு ஒட்டியிருங்கள்; நீங்கள் அவருக்கு ஒப்புவிக்கிறதைப் பற்றி அதிகமாய் நினையாதேயுங்கள். உங்களிடத்திலிருந்து அவர் எதையாவது எடுத்தாரானால் அதைவிட நல்லதைத் தருவார். உங்களிடத்திலிருந்து சகலத்தையும் உரிந்துகொள்ளும்போது, உங்களுக்குப் போதிக்க, அவரைப்பற்றி நீங்கள் ஜீவனம் பண்ணவேண்டுமென்று காட்ட, அவரிடத்தில் அவருடைய கிருபையில், அவர் உங்களுக்குச் செய்த நன்மையில், நீங்கள் மோட்சத்தைக் கண்டுபிடிக்கத்தான் அப்படிச் செய்கிறார். உங்களைக் கவனிக்கிறவர்களெல்லாரும் நீங்கள் கர்த்தருடையவர்களென்று எண்ணத்தக்கதாக ஜீவனம்பண்ணுகிறீர்களா, நடக்கிறீர்களா, செய்கிறீர்களா? அவர் உங்களைக் காப்பாற்றி நடத்தி உங்களை ஆதரிப்பாரென்று எதிர்பார்க்கிறீர்களா? உங்கள் மனச்சாட்சி சொல்லட்டும்.

நான் உம்முடையோன் கர்த்தாவே,
உமது தாசனுகவே
ரத்தத்தால் மீட்கப்பட்டேன்,
லோகம் பாவத்தை விட்டேன்.

'நீங்கள் என் சிநேகிதராயிருப்பீர்கள்'

யோவான் 15:14

அற்பப் புழுக்களாகிய நம்மை இயேசுநாதர் தமது சிநேகிதர்களென்று அழைப்பது எவ்வளவு பெரிய தாழ்மை. அப்படி நம்மை அழைக்கிறதுமாத்திரமல்ல, தம்முடைய சிநேகிதராகவும் நம்மை நடத்துகிறார். நாம் அவருடைய சிநேகிதராக அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவோமென்று எதிர்பார்க்கிறார். இயேசு உன் சிநேகிதரா? அவரிடத்தில் அடிக்கடி போ. உன் ஜெபத்தின் சத்தமும், துதியின் சத்தமும் அவர் காதில் விழட்டும். அவர் உன் சிநேகிதரானால் அவரை உண்மையாய் நம்பு. நீ அவரைச் சார்ந்திருப்பதினால் உன் விசுவாசம் உண்மையுள்ளதென்று அவர் பார்க்கட்டும். அவர் உன் சிநேகிதரானால் அவரிடம் அன்புவைத்து நட. உன்னோடிருக்கிறது அவருக்குப் பிரியமாயிருக்கட்டும். சுகத்திலும் துக்கத்திலும், வாழ்விலும் வறுமையிலும், ஜீவனிலும் மரணத்திலும் அவரை உன் சிநேகிதராக நோக்கிக்கொண்டிரு. இயேசு நமது சிநேகிதரானால் நாம் திக்கற்றவர்களாய் விடப்படோம்; தாயும் தகப்பனும் நம்மைக் கைவிட்டாலும் அவர் நம்மைத் தாங்குவார். நம்மை ஏற்றுக்கொள்ளுவார். நாம் ஒருபோதும் நிர்ப்பந்தராகமாட்டோம். நம்மை ஏற்றுக்கொண்டு நமக்குத் தகப்பனுவார். நாம்புறம்பே தள்ளப்படமாட்டோம். நம்மை அவர் மறப்பது மில்லை, தள்ளுவதுமில்லை, தம்முடைய வாக்குத்தத்தத்தில் நமக்குச் சொன்னதெல்லாவற்றையும் செய்வார். சத்துருக்கள் கையிலிருந்து நம்மை விடுவிப்பார், வியாதியில் நம்மை வந்து பார்ப்பார். மரணத்தில் நம்மைக் களிகூரப்பண்ணி நம்மை ஆதரிப்பார். அருமையான இயேசு நாயகனே! என் சிநேகிதனுயிரும்; சிநேகிதனென்று என்னை அழையும்; ஜீவனிலும், மரணத்திலும் நியாயத்தீர்ப்பிலும், உமது பிதாவின் சமுகத்திலும் எப்போதும் என்னைச் சிநேகிதனுக ஏற்றுக்கொண்டு நடத்தும்.

ஏக எனதடைக்கலம்,
அவர் ஞானம் என் பெலன்;
அவர் கரத்தில் சாகுவேன்,
அவர் நல்நேசனென்பேன்;
அவர் அன்பின் மகத்துவம்.
பக்தர் யார்க்கும் சத்துவம்.

'நான் உனக்குப் போதிப்பேன்'

சங்கீதம் 32:8

கர்த்தரே நமக்குக் கற்றுக்கொடுப்பேனென்று வாக்கருளியிருக்கிறபடியால், நாம் ரக்ஷிப்புக்கேற்ற ஞானிகளாகலாம். கர்த்தர் நமக்குக் கற்றுக்கொடுத்தால் தாழ்மையுண்டாகும்; சுயவெறுப்பு உண்டாகும்; தேவனில் நம்பிக்கையும் அவருடைய மகிமைக்காக வைராக்கியமுமுண்டாகும்; நம்முடைய இருதயத்தை அவருடைய புகழ்ச்சிக்கென்று ஒப்புக்கொடுக்கிற வாஞ்சையுண்டாகும். அது இயேசுவண்டைக்கு நம்மைக் கொண்டுவந்து இந்தப் பொல்லாத உலகத்தினின்று நம்மைத் தப்புவிக்கும், தேவனுல் நாம் போதிக்கப்பட்டால், பாவத்தின் சரியான தன்மையும், உலகத்தின் மாயமும், கிறிஸ்துவின் பரிபூரணமும், அவருடைய அருமையும் நமக்கு நன்ருய்த் தெரியவரும். நம்மைப் படிப்பிக்கத் தேவனுக்கு மனமிருக்குமானுல், காலையில் எழுந்து, கிருபாசனத்தண்டையில் போய், சங்கீதக்காரனைப்போல் ஜெபிப்போமாக. 'உம்முடைய சத்தியத்தண்டைக்கு என்னை நடத்தி என்னைப் போதியும்; நீர் என் ரட்சிப்பின் தேவன்; நாள்முழுவதும் உம்மண்டை காத்திருக்கிறேன்.' அப்போது நாம் யோபு சொன்னதுபோல் சொல்வோம். "இதோ, தேவன் தமது வல்லமையைக்கொண்டு நடத்துகிருர்; அவரைப்போல் கற்பிக்கிறவன் யார்?' பிரயோஜனமுண்டாகத்தக்கதாகப் போதிப்பார்; அவர் போதிக்கும் சத்தியத்தால் நம்மைச் சுத்திகரிப்பார்; நாம் கற்கவேண்டிய பாடம் கிறிஸ்துதான். அவரைச் சரியானபடி அறிந்துகொள்ளுகிறது நமக்கு ஜீவன் சமாதானம், சந்தோஷம். இயேசு உன் உபாத்தியாயரா? அப்படியானுல் அவர் பாதத்தண்டை உட்காரு; அவர் சொல்வதை உன் மனதில் பத்திரப்படுத்து; அவர் துதியைப் பிரஸ்தாபம் பண்ணு. என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்கிருர். அவரை அறிந்துகொள்ள அவரை நேசிக்க, அவருக்குக் கீழ்ப்படிய, அவர் போதித்த ஜீவ வழியில் நடக்கப் படித்துக்கொள்.

நித்திய ஜீவவார்த்தையே,
என் ஆவி தங்கும் இடமே.
எனக்கின்ப பாதையே!
கடைசியில் என் கிரீடமே.

ஏதாவது உங்களுக்குக் குறைவாயிருந்ததா?'
லூக்கா 22:35

தேவனைத் தேடி, அவருடைய சித்தத்தின்படி செய்து, அவரது மகிமையை நாடுகிற அவரது சொந்த ஜனங்களுக்குத் தேவையானதெல்லாம் தேவன் எப்போதும் சவதரித்துக் கொடுப்பார். அவர் நம்மை அனுப்பும்போது, பை சுமக்கிற வேலையை நமக்குக் கொடுத்தாலும், நமக்கு வேண்டிய ஆகாரம் நமக்குக் கிடைக்கும். தண்ணீர் நமக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். சீஷர்கள் ஒன்றுமில்லாமற் போனார்கள். அவர்களை அனுப்பினவர் இயேசு. அவர்கள் திரும்பி வந்து தங்களுக்கு ஒரு குறைவுமில்லையென்று அறிக்கையிட்டார்கள். தேவன் தமது திவ்விய செயலால் அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து வந்தார். நாம் கர்த்தர் காட்டும் வழியில் நடப்போமானால், கர்த்தருடைய தூதர் நமக்கு வேண்டிய பதார்த்தங்களை நம்மிடம் கொண்டுவருவார்கள். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. நமது குறைவுகளைக் கவனிக்கிறார். தமது வாக்குத்தத்தங்களை நினைக்கிறார், சரியான வேளையில் நமக்கு இரங்குகிறார், நாம் உண்மையுள்ள தேவனென்று நமக்குத் திருஷ்டாந்தப்படுத்துகிறார். சரீரத்துக்காவது, ஆத்துமத்துக்காவது உங்களுக்கு ஏதாவது குறைவு நேரிட்டதுண்டா? இதுவரையில் கொடுத்து வந்தவர் இனிமேலும் கொடுத்துவருவார். இயேசு கிருபை நிறைந்தவர். உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் பொருட்டு, போய்ப் பெற்றுக்கொள்ளுங்கள். திவ்விய செயலால் நம்மை நடத்துகிறவர் இயேசுதாம். அவரை நோக்குங்கள், அவரை நம்புங்கள், அவரைப் பார்த்துக் கெஞ்சுங்கள், நீங்கள் ஆதரவற்றவர்களாகமாட்டீர்கள். அவர் வார்த்தையை நம்புங்கள், அவர் தமது வாக்கை மறுதலிக்கமாட்டார். அவர் அவர் உண்மையை நம்புங்கள், உங்கள் விசுவாசத்தைக் கனப்படுத்தி தமது வாக்கை நிறைவேற்றுவார். உன் அப்பம் உனக்குக் கொடுக்கப்படும், உன் தண்ணீர் உனக்கு நிச்சயமாயிருக்கும்.

இம்மட்டும் அவரன்பு;
அது நீங்காது நம்பு;
எம் நேசர் ஒவ்வொன்றும்
அவரைப் பற்றும் என்றும்.

ஜனுவரி-மீ 28-உ

'நமக்காகப் பரிந்துபேசுகிறவர்'

1 யோவான் 2:1

இயேசு நமக்காக மோட்சத்தில் பரிந்து பேசிக்கொண் டிருக்கிறார். அவர் தமது சொந்த ரத்தத்தின் மூலமாய் மிகவும் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தார். அங்கே அவர் நமக்காகத் தேவனுடைய சந்நிதியில் பிரசன்னமாயிருக்கிறார். சாத்தான் நமக்கு விரோதமாகச் சாற்றுங் குற்றங்களுக்குப் பதில் சொல்லி, நமக்காகப் பரிந்துபேசி, நம்மைக் காக்கவும், நமக்கு வேண்டியதைத் தந்து, நம்மை மகிமைப்படுத்தவும் விரும்புகிறார். ஜெபம்பண்ணக்கூடாத சமயங்களில், குற்றத்தால் நம்முடைய வாய் அடைபட்டு சோதனையால் நமது ஆவி வருத்தப்பட்டு இருக்குஞ் சமயத்தில், இயேசு உன்னதத்தில் நமக்காகப் பரிந்துபேசும்படி இருக்கிறார் என்று அறிந்திருப்பது எவ்வளவு பெரிய ஆறுதல். நேசரே! இந்தக் காலையில் இயேசு உங்களுக்காகத் தேவனுக்கு முன்பாக நிற்கிறார். ஒவ்வொரு காலையிலும் நிற்கிறார். அவர் பரிந்து பேசுகிறதினாலும் உண்டாகும் பலனை நீ தினந்தோறும் அனுபவிக்கிறாய். சந்தேகப்பட்டுப் பயப்படும் சமயத்தில் உன் காரியத்தை இயேசுவுக்குச் சொல்லி, அவர் அதை நடத்தும்படி கேட்டுக்கொள். அவருடைய செயல், அவருடைய நாமம், இவைகளில் மகிழ்ந்து, அவர் சொன்னதை ஞாபகத்தில் வைத்துக்கொள். அவர் பரிந்து பேசுவார். அவர் சொல்லும் நியாயங்கள் பலத்தது. அவர் திவ்விய தன்மையுடையவர். இன்றைக்கு இயேசுவை உனக்கு முன்பாக உன் வக்கீலாக வைத்துக்கொள். 'பிதாவே! நீர் எனக்குக் கொடுத்தவர்கள் என்னுடைய மகிமையைக் காணும்படியாக நான் எங்கே இருக்கிறேனோ, அவர்களும் அங்கே என்னோடு கூட இருக்க விரும்புகிறேன்.' அவர் யாருக்காகப் பரிந்து பேசுகிறாரோ அவர்களுக்கு ஒரு குறைவுமில்லை: அவர்கள் பாக்கியராயிருப்பார்கள்.

ஆத்துமாவே, மேலே நோக்கி
நிற்கும் ரட்சகரைப் பார்,
வக்கீலாகக் கண் உயர்த்தி
தூபங் கையில் தாங்குகிறார்;
அதுவே உனக்காறுதல்
ரட்சிக்கும் அவர் செயல்.

'வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்'

யோவான் 5:39

வேத வசனம் தேவன் கொடுத்த புஸ்தகம். அது மனிதருக்குக் கொடுக்கப்பட்ட தயவு தேவனுடைய தன்மை, லக்ஷணம், நோக்கம், சித்தம். செயல், ரட்சிப்பு ஆகிய இவைகளை அறிந்துகொள்ளும்படி அது ஒரு எத்தனமாகக் கொடுக்கப்பட்டது. நாம் அறிந்துகொள்ளவேண்டியதெல்லாம் அதிலுண்டு. அதை அடிக்கடி ஜெபத்தோடு கவனமாயும், ஒழுங்காயும் வாசிக்கவேண்டும். வேத வசனத்திலுள்ள ஒவ்வொரு பாகத்தையும் வாசித்துத் தியானித்துப் பிரார்த்திக்கவேண்டும். கிறிஸ்து இயேசுவிலுள்ள விசுவாசத்தினாலே அது நம்மை ரட்சிப்புக்கு ஞானிகளாக்குகிறது. பரிசுத்த ஆவியின் உதவியில்லாமல், நம்முடைய ஆத்துமாவுக்குப் பிரயோஜனமுண்டாகத் தக்கதாக நாம் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கமாட்டோம். வேத எழுத்துக்கள் மூலமாய்த்தான் நாம் தேவ சித்தத்தை அறிந்துகொள்ளவேண்டும். வாசிப்பும், ஜெபமும், தியானமும் ஒன்றாய்ச் சேரவேண்டும். இப்படி வேதவாக்கியத்தைப் பரீட்சித்தவன்தான் அதினாலுண்டான பிரயோஜனத்தைச் சொல்லக்கூடியவன். வேத புஸ்தகம் நீ நித்தம் வாசிக்கிற புஸ்தகமாயிருக்கட்டும். அது உன் குணத்தைச் சுத்தமாக்கும். உன் வழியில் உன்னை நடத்தும், உமக்கு மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் தரும். வேத வசனத்திற்குப் பதிலாக மனிதருடைய கிரியையை நாடாதே. வேத வசனத்தை ஆராய்ந்து பாருங்கள்; அதில் விசுவாசம் வையுங்கள். உம்முடைய நியாயப்பிரமாணங்களிலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் புத்தியின் கண்களைத் திறந்தருளும், உமது கிருபையின் ஐசுவரியத்தை எனக்குக் காண்பியும்.

உமது யோசனைப்படி
நடத்துமேன், என் அடி
உமது வலது கரம்
நடத்துவதென் வரம்

'நீ தப்புவாயோ?'

ஏசாயா 37:11

கோபங்கொண்ட சத்துரு இப்படித்தான் பேசுவான். அவன் ஜெயங்கொண்டான், ஆதலால் பெருமையாய்ப் பேசுகிறான். அவன் வல்லமை மட்டுப்படுத்தப்பட்டது. அவன் பெருமையால் விழுந்தான். கஸ்திப்பட்டு துன்பத்தில் அகப்பட்டிருக்குஞ் சமயத்தில், பாவஞ்செய்தேனென்றும், அபாத்திரனேன் என்றும், மனதில் துயரப்படும் சமயத்தில், அவிசுவாசமும் சாத்தானும் ஒன்றாய்ச் சேர்ந்து விழுந்து கெட்ட மற்றவர்களைச் சுட்டிக்காட்டி, நம்முடைய அபாத்திரத் தன்மையையும் நமக்குமுன் வைத்து, பரியாசமாய் நீ தப்புவாயோவென்று கேட்கிறதுண்டு. ஆம், சாத்தானே! நாங்கள் தப்புவோம், எசேக்கியாவின் தேவன் எங்கள் தேவன். ஆறு துன்பங்களில் உன்னை விடுவிப்பேன், ஏழாவதிலும் உன்னைக் கைவிடமாட்டேனே என்று அவர் எங்களுக்குச் சொல்லியிருக்கிறார். அவர் வார்த்தையை நம்புகிறோம்; அவர் உண்மையின்பேரில் சார்ந்திருக்கிறோம்; அவருடைய கிருபாசனத் தண்டையில் வந்து கெஞ்சுகிறோம்; விடுவிக்க எவ்வளவு சமர்த்தரோ அவ்வளவாய் மனமுள்ளவரென்றும் நிச்சயமாய் நம்புகிறோம். கடந்த காலங்களில் அடிக்கடி விடுவித்தார்; ஜெபிக்கிற தமது ஜனங்களை இப்போதும் விடுவிக்கிறார்; இன்னும் விடுவிப்பாரென்று நம்பிக்கையாயிருக்கிறோம். எங்களிடமிருக்கின்ற ஏதோ ஒரு காரியத்தினிமித்தமல்ல, அல்லது நாங்கள் செய்த ஒரு நன்மையினிமித்தமுமல்ல, அவர் சொல்லினிமித்தமே நம்புகிறோம். 'துன்பத்தில் நான் அவனோடிருந்து அவனை விடுவித்துக் கனப்படுத்துவேன். அவனை உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பேன். ஏனென்றால் அவன் என் நாமத்தை அறிந்திருக்கிறான்' என்பது அவருடைய வாக்கு. அவர் உண்மையுள்ளவர், அவர் வார்த்தை தவறாது, நம்முடைய விசுவாசமும் குறையக்கூடாது, விடுதலை வருமென்பது நிச்சயம். வாக்குக்கொடுத்தவர் தேவன், அவர் உண்மையுள்ளவர்.

அவரின் அன்பு வல்லமை
ப்ரகாசிக்குதவர் வாக்கடல
அவர் நாமத்தின் மகிமை
அதை மூடும் சத்தியத்தால்.

‘நாம் தேவனைப்பற்றி மேன்மை பாராட்டுகிறோம்’
ரோமர் 5:11

இது ஒவ்வொரு விசுவாசியினுடைய சிலாக்கியம். இயேசு செய்த கிரியையின் மூலமாய்த் தேவன் அவனோடு ஒப்புரவா யிருக்கிறார். அவனுக்கு விரோதமாகச் சாட்டப்பட்ட குற்றங் கள் நீங்கிப்போயிற்று. அவன் பாவங்களெல்லாம் இலவசமாய் முற்றிலும் மன்னிக்கப்பட்டுப்போயிற்று. அவன் கிறிஸ்துவில் அங்கீகரிக்கப்பட்டு, நேசிக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டவ னாய், தேவனுக்குமுன் நிற்கிறான். அவனுக்கு தேவன் அன்பு மயம், அவனோடு தேவன் சமாதானமானார். இப்போது அவன் தேவனுடைய பிள்ளை. தேவன் இப்படிச் சொல்லுவதை நாம் நம்பி, விசுவாசத்தினால் அதை உண்மையென்று பிடித்தோ மானால். தேவனில் நாம் மகிழ்ச்சியை அடைவோம். சொல்ல முடியாத மகிமை நிறைந்த சந்தோஷத்தால் ஆனந்தங்கொள் ளுவோம். நம்முடைய நிலையைக்குறித்துச் சந்தோஷப்படு வோமானால், அது மாறிப்போம். சிநேகிதரைக்குறித்துச் சந் தோஷப்படுவோமானால், அவர்கள் மரித்துப்போவார்கள். ஆஸ்தியைக் குறித்துச் சந்தோஷப்படுவோமானால், அது பறந்துபோம். தேவனில் சந்தோஷப்படுவோமானால் நம் முடைய சந்தோஷத்துக்குச் சில வேளைகளில் தடைவந்தா லும், நமது சந்தோஷத்துக்குக் காரணமாகிய பொருள் என் றும் மாறாமல் அப்படியே நிற்கும். நாமும் நித்திய நித்திய காலமாய் மகிழுவோம். அன்பர்களே, இயேசுவில் யெகோவா வைப்பாருங்கள். அப்பொழுது அவரை இரக்கங்களின் தகப் பனும், சகல ஆறுதலுக்கும் தேவனுமாகக் காண்பீர்கள். உங் கள் தேவனை, உங்கள் பங்காக, என்றுமுள்ள உங்கள் சகலமு மாக அவரில் சந்தோஷியுங்கள். இந்த நாளில் தேவனை உங் கள் பிதாவாக, உங்கள் சிநேகிதராக, உங்கள் ரட்சகராக எண் ணிச் சந்தோஷப்படுங்கள். இப்படிச் சந்தோஷப்பட்டு மிக வும் களிகூருங்கள்.

பரமனைச் சேர்ந்து
அவர் முன்னே பணிந்து,
நானும் போற்றிப் பாடுவேன்
அவரைப்போல் துதிப்பேன்;
தூதர்களே எந்த வேளை
வந்து சேர்வேனுங்களை.

'இம்மானுவேல்'

மத்தேயு 1:23

இந்த நாள் முழுவதும் இயேசுவை உன்னோடிருக்கிற தேவனாக, உன் தன்மையைத் தரித்துக்கொண்ட தேவனாக, உனக்கு ரட்சிப்பையும் ஆறுதலையும் கொடுக்கும்படி மனிதனாய் வந்த தேவனாக கவனித்துப்பார். தேவனைத்தவிர உன்னை ரட்சிப்பார் ஒருவரும் இல்லை. இயேசு உனக்குத் தேவன்தான். ரட்சகர் மனிதனாவது அவசியம். இயேசு மனிதன். அவர் தன் பிதாவின் தன்மையை உடையவர்; ஆதலால் திறமையுள்ளவர். உன் தன்மையையும் உடையவர்; ஆனபடியால் உனக்கு மிகவும் ஏற்றவர். இயேசு தேவனே உன்னோடிருக்கிறார். உன் ஜெபத்தைக் கேட்க, உன் பயத்தை நீக்க, உன் குறைவைப் போக்க, உன் துன்பத்தில் உன்னோடிருந்து உன்னைத் தேற்ற நாள்தோறும் உன் சிநேகிதனாக உன்னோடிருக்கிறார். தேவன் நம்மோடிருந்து நம்முடைய நடக்கையைப் பார்த்து, நமக்கு வழியைக் காட்டி, நம்முடைய பக்தியீனத்தைக் கண்டித்து, நமக்கு வேண்டியதைத் தந்து, சகலமும் நமக்கு நன்மையாய் முடியும்படி செய்கிறார். இயேசு என்னோடு எப்போதும் இருக்கிறார். ஒவ்வொரு பாவத்தையும் அவர் கண் பார்க்கிறது. அது அவருடைய அன்புக்கு விரோதமானபடியால், அவருடைய மனதுக்கு நோவு உண்டாகிறது என்று நினை. சோதனை உண்டாகும்போது உனக்காகப் பாடுபட்டு இரத்தஞ்சிந்தி மரித்து, இப்பொழுது சகலத்தையும் ஆண்டுவருகிற இம்மானுவேல் என்னும் ரட்சகர் உன்னைப் பார்த்து, நான் பகைக்கிற அந்த அருவருப்பான காரியத்தைச் செய்யாதே என்று அவர் சொல்லுகிறதைக் கேள். அவருக்கு முன்பாக அன்பாயும், சமாதானமாயும், பரிசுத்தமாயும் நட. அவருடைய மகிமைப் பிரஸ்தாபத்திற்காக வைராக்கியமாயிரு. அவர் உனக்குத் தேவன்; உன்னோடிருக்கிற தேவன். அவருடைய ஞானத்தையும், வல்லமையையும், அன்பையும் நோக்கிப்பார். உனக்குச் சுகம் உண்டாகும். உனக்கு வேண்டியதும் கிடைக்கும். பிள்ளை அடைவான பக்தியாய் அவருடைய வார்த்தையை நம்பு.

மனுவேல் நாமம் மதுரம்
காதுக்கின்ப கீதமே;
அவர் சிலுவையின் வெட்கம்
என் ஆவிக்காதாரமே.

'விண்ணப்பங்களின் ஆவி'

சகரியா 12:10

ஆவிக்குரிய ஜெபங்கள் எல்லாம் ஆவியினால் உண்டாகின்றன. நம்முடைய குறைவைக் காண்பிக்கிறவர் அவர். இயேசுவின் நிறைவை நமக்குத் தெரியப்படுத்துகிறவர் அவர். பலவீனத்தில் உதவிசெய்கிறவரும் அவர்தாம். ஜெபம்பண்ணுகிறதற்கான ஆசையை அவர்தாம் தருகிறார். தாராளமாய் விண்ணப்பம் செய்கிறதும் அவருடைய ஈவுதான். பாவம் எவ்வளவு பயங்கரமானது! பரிசுத்த ஆவி எவ்வளவாகத் தம்மைத் தாழ்த்துகிறார்! அவர் நமக்காகப் பரிந்துபேசுகிறார். பெருமூச்சுகளால் விண்ணப்பம்பண்ணுகிறார். பாவம் நம்மைக் கெடுத்திருக்கிறது. தேவகுமாரனுடைய பலி ஒன்றுதான் நம்முடைய பிராயச்சித்தத்துக்கு உதவும். நாம் பலவீனரான படியால், ஆவியானவர் மாத்திரம் நாம் பெற்றுக்கொள்ளத் தக்கவிதமாய்க் கருத்தாயும் விசுவாசத்தோடும் ஜெபிக்க நமக்குத் திறமை கொடுப்பார். சிநேகிதரே, நம்முடைய கடமை எவ்வளவு பெரியது. அசட்டையினாலும், உலக சிந்தனையினாலும் , வெறுப்பான குணத்தினாலும் அவருக்குத் துக்கமுண்டாக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஆவிக்கென்று விதைப்பீர்களானால், நித்திய ஜீவனை அறுப்பீர்கள். அவர் இயேசுவைக்குறித்து உங்களுக்குச் சாட்சி கொடுத்து, சமாதானத்தாலும் சுயாதீனத்தாலும் உங்களை ஆசீர்வதிப்பார்.

ஜெபம் செய்ய மனம் தாரும்
ஓயாமல் நான் மன்றாட;
தாமதித்தும் நீரே வாரும்
பிசாசோடு போராட.
எனக்குக் கிருபை அளியும்;
தெய்வ பயம் தாருமே,
பாவத்தைப் பார்க்க விழியும்
தந்து என்னைக் காருமே.

'கர்த்தரிடத்தில் மனரம்மியமாய் நிலைத்திருங்கள்'
அப்போஸ்தலர் 11:23

ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறான். இயேசுவானவர் திராட்சச்செடி; விசுவாசி ஒரு கொடி. அவர் மணவாளன்; அவன் மனையாட்டி. சாத்தான் கிறிஸ்துவினிடத்திலிருந்து அவனைப் பிரிக்கப் பார்க்கிறான். கிறிஸ்துவோடுகூட அவன் ஒட்டிக்கொண்டிருக்கும் வரையில் தன்னால் ஒன்றும் ஆகாதென்று அவன் அறிவான். அப்படியானால் விசுவாசத்தினாலும், அன்பினாலும் விடாமுயற்சியினாலும் அவரோடு ஒட்டிக்கொள். அவருடைய சத்தியத்தோடு ஒட்டிக்கொள், அவருடைய ஜனங்களோடு ஒட்டிக்கொள், கிருபையின் எத்தனங்களோடு ஒட்டிக்கொள், அவருடைய சிம்மாசனத்தண்டை காத்திரு. அன்புள்ள பிள்ளை அருமையான தன் தகப்பனைக் குறித்து நினைக்கிற வண்ணமாக, அன்புள்ள மனையாட்டி தன் மணவாளனைக்குறித்து நினைக்கிறவண்ணமாக நீ அவரை நினை. அவரைக்குறித்து சிந்தனை எப்போதும் உன் முன்பாக இருக்கட்டும், அவருடைய அன்பு உன் இருதயத்தை ஆளட்டும். அவரை விட்டு உன் பாசம் நீங்காமல் நிலைத்திருக்கட்டும். அவருடைய பரிபூரணத்தைப்பற்றி ஜீவனம் செய்; அவருடைய வசனத்தின்படி ஜீவனம் செய். அவருடைய அன்பே உன் உயிராயிருக்கட்டும். கர்த்தரோடு ஒட்டிக்கொள்ளாவிட்டால் நீ சுகித்து வழ்வதுமில்லை, பாக்கியவானயிருப்பதுமில்லை. இயேசுவை விட்டு நீ தூரமாயிருக்கிறதைச் சாத்தான் கண்டால், நீ அவனை லேசாய் வெல்லமாட்டாய். நீ எப்பொழுதும் உன்னைப் பிடித்துத் தொந்தரவு செய்து மோசத்தில் அகப்படுத்தி வருத்தப்படுத்தலாமென்று அவன் காத்திருக்கிறான். ஆதலால் முழு இருதயத்தோடு அவரோடு ஒட்டிக்கொள். கொடியானது மரத்தின்மேல் படருகிறதுபோல, நீ அவர்மேல் சார்ந்திரு.

கர்த்தாவே, நான் உம்மோடொட்டி
அன்பினாலே உம்மைக் கிட்டி,
எப்போதும் உம்மை நான் விடேன்
வேறென்றும் என்றும் நான் தொடேன்.

பிப்ரவரி-மீ 4-உ

'அருமையான விசுவாசம் தேவனுடைய ஈவு'
2 பேதுரு 1:1

அது நித்திய அன்பினுல் உண்டான கனி; அது கிருபையின் பலன். கிருபையின் மூலமாய் நாம் விசுவாசிக்கிறோம். இரட்சிப்புக்கு அத்தாட்சி விசுவாசம்; அது அபாத்திரமான பாவிகளுக்குக் கொடுக்கப்படும். அது இலவசமான, சம்பூரணமான ரட்சிப்பை சுவிசேஷத்தில் கண்டிருக்கிறபடியே ஏற்றுக்கொள்ளும். சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறதைக் கொண்டு கிருபாசனத்தின்மேல் வீற்றிருக்கும் இயேசுவினிடத்திற்குப் போய், அவருடைய வார்த்தையையும், கிரியையும், மரணத்தையும் தன் ஜீவனுக்கும் ரட்சிப்புக்கும் ஆதாரமாகப் பற்றிக்கொண்டு, இயேசுவின்மேல் அன்புவையும். நன்றியறிதலால் அவருக்குக் கீழ்ப்படிய உன ஆத்துமாவை நடத்தும். இது அருமையானது, வெகு அரிது. விசுவாசிக்கிறவர்கள் வெகு சிலர். விசுவாசமில்லாமல் நாம் தேவனைப் பிரியப்படுத்தக்கூடாது. குற்றமற்றவர்களாகவும் கூடாது. சுவிசேஷ நன்மையை அனுபவிக்கவும் கூடாது. விசுவாசிக்கிறவனுக்கோ அருமையான எந்த வாக்குத்தத்தமும் சொந்தம், அவன் கிறிஸ்துவண்டையில் போய் எவ்வகைச் சம்பந்தத்தாலும் தேவனில் மகிழ்ச்சியாயிருப்பான். மரணம் அடையவேமாட்டான். அவன் மரணத்தில் நின்று ஜீவனுக்குள் சென்றவனுனபடியால் அவன் ஆக்கினைக்குள்ளாகமாட்டான். கிருபையுள்ள தேவனே, உம்முடைய ஜனங்களுக்கும் முக்கியமாக எனக்கும் இந்த அருமையான விசவாசத்தைத் தாரும். அப்போது நான் இயேசுவை விசுவாசித்துச் சொல்லிமுடியாத சந்தோஷத்தினுலும் மகிமையினுலும் உம்மில் மகிழுவேன். சந்தேகமின்றி இன்றைக்காவது உம்மை விசுவாசித்தால் எவ்வளவு நல்லது. விசுவாசத்தில் பெலன்கொண்டு தேவனை மகிமைப்படுத்துவது எவ்வளவு முக்கியம்.

சர்வவல்லவர் சொல்வதை
நம்பத்தக்க விசுவாசம்,
அவர் சுதன் அருள்வதை
ஏற்றுக்கொள்ளும் நல்ல நேசம்;
இதை எனக்குத் தாருமேன்;
அப்போ நான் மோட்சம் சேருவேன்.

'விலையேறப்பெற்ற ரத்தம்'

1 பேதுரு 1:19

இயேசுவின் ரத்தம் நம்முடைய மீட்பின் கிரயம், நம்முடைய விசுவாசத்தின் பொருள், நம்முடைய சமாதானத்துக்கு ஆதாரம். நாம் தியானிக்கவேண்டிய சங்கதி, கிருபாசனத்தண்டையில் நாம் எப்பொழுதும் சொல்லிக் கெஞ்சவேண்டிய காரியம். அது திவ்விய நீதிக்குத் திருப்தியுண்டாக்குகிறது, தாழ்மையுள்ள பாவியின் இருதயத்துக்குச் சமாதானம் கூறுகிறது. அது சாத்தானை ஜெயித்து, சகல பாவங்களினின்றும் நம்மைச் சுத்திகரிக்கும். அது மனச்சாட்சியைச் சுத்தம்பண்ணி, தேவனிடத்தில் மகிழச்செய்கிறது. அது நாம் கட்டுகிற அஸ்திபாரம், நாம் ஓடி ஒளிகிற அடைக்கலம், பாவத்தை நீக்குகிற மருந்து, இருதயத்திலிருந்து புறப்படுகிற சந்தோஷப் பாடல். அது பூரணமான, திருப்திகரமான அளவற்ற பிராயச்சித்தத்தை உண்டாக்கி இருக்கிறது. அதன் பேரில் சார்ந்து, தேவனுக்கு முன்பாக அதன் மூலமாய்க் கெஞ்சுகிற எந்தப் பாவியும் கெட்டுப்போகவேமாட்டான். அது உள்ளபடியே அருமையான ரத்தம், அது விலையேறப்பெற்றது. நீ உன் மனச்சாட்சியில் குற்றமுண்டென்று காணும் போது, யேசுவின் விலையேறப்பெற்ற ரத்தத்தைப் பார். அதைத் தியானித்து அதைப் பிரயோகி. அது சமாதானத்தை உண்டுபண்ணுகிறது. சமாதானத்தைக் கொடுக்கிறது, சமாதானத்தைக் காக்கிறது. அது நம்மைக் குணமாக்கி, பரிசுத்தமாய் இருக்கக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது. நம்முடைய நம்பிக்கைக்கு அஸ்திபாரமாக இதையே நாம் பார்க்கவேண்டும். நம்முடைய சமாதானத்துக்கு ஆதாரம் இதுவே.

மரித்த ஆட்டுக்குட்டியே!
நின் ரத்தபலன் நிற்குமே,
தெய்வசபை முழுதிற்கும்
மீட்கப்படும் நாள் மட்டுக்கும்.

'அது விலையேறப்பெற்றது'

1.பேதுரு 2:7

ஒவ்வொரு விசுவாசிக்கும் இயேசு விளையேறப்பெற்றவர் தான். மற்ற விஷயங்களில் கிறிஸ்தவர்கள் வித்தியாசப்பட்டாலும், இயேசுவானவர் விலையேறப்பெற்றவர் என்று எல்லாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். தாங்கள் விரும்புகிறபடியே எப்பொழுதும் அவரைப் பாராவிட்டாலும், எப்பொழுதும் அவரைப்பற்றி ஒரே எண்ணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவரைப் பார்த்தாலும், அவருடைய வார்த்தையைப் பார்த்தாலும், அவருடைய நீதியைப் பார்த்தாலும், அவருடைய கிரியையைப் பார்த்தாலும், அவருடைய இரத்தத்தைப் பார்த்தாலும், அவர் நமக்காகப் பரிந்துபேசுதலைப் பார்த்தாலும், அவர் விலையேறப்பெற்றவர்தான். தீர்க்கதரிசியாகப் பார்த்தாலும், ஆசாரியனாகப் பார்த்தாலும், ராஜாவாகப் பார்த்தாலும் அவர் விலையேறப்பெற்றவர்தான். அவருக்கு இருக்கிற ஒவ்வொரு நாமத்திலும், அவருடைய ஒவ்வொரு குணத்திலும், எந்தச் சம்பந்தத்திலும், அவர் செய்யும் எந்த அலுவலிலும், அவர் விலையேறப்பெற்றவர்தான். அவரோடு ஒப்பிடத்தக்க விலையேறப்பெற்ற வஸ்து ஒன்றுமில்லை. அவருடைய ஜனங்கள் அவரை நேசிக்கிறார்கள். ஆனாலும் போதுமானபடி நேசிக்கிறோமென்று ஒருவரும் எண்ணுகிறதில்லை. அவரை வணங்கினாலும், கருத்தோடு அவரைப் பார்த்து ஜெபம்பண்ணுகிறதில்லையென்று துக்கப்படுகிறார்கள். அவரை எல்லாவற்றிலும் மேலாக எண்ணி, நேசம் நிறைந்தவராகப் பாவிக்கிறார்கள். இந்தக் காலையில் கிறிஸ்து உனக்கு அருமையானவரா? அவரை விலைகூறுகிறதானால் நீ என்ன கொடுப்பாய்? அவரைக்குறித்து எப்படி எண்ணுகிறது உனக்குத் திருப்திகரமாயிருக்கும்? ஏழைப் பாவிகளுக்கு அவர் மிகவும் அருமையானவர். பலத்த விசுவாசிகளுக்கும், பரிசுத்த தூதர்களுக்கும் அவர், மிகவும் அருமையானவர், உனக்கு அவர் அருமையானவரா? அவரிடத்தில் நெருங்கியிரு, அவரோடு ஐக்கியமாயிரு; அப்போது அவர் உனக்கு அருமையாயிருப்பார். அவரை எவ்வளவுக்கு அருமையாக அறிந்துகொள்வாயோ அவ்வளவுக்கு அதிகமாய் அவரை மதிப்பாய்.

நமதேசுவின் பெருமை
ஜீவனிலும் மா அருமை;
போஜனத்திலும் பெரிது
நம் ரத்தத்திலும் அரிது.

'என் காலங்கள் உமது காத்தில் இருக்கின்றது'

சங்கீதம் 31:15

சகலமும் தேவ ஆளுகைப்படி நடக்கின்றது. ஒன்றும் தற்செயலாய் நடக்கிறதில்லே. தேவ காம் சகலத்தையும் நடத்தி ஆண்டு, நம்முடைய நன்மைக்கென்று அவற்றைப் பரிசுத்தமாக்குகின்றது. நம்மை அடுத்த சகலத்தையும் ஞானமாகவும், தயவாகவும், நமக்கென்று ஏற்பாடு செய்திருக்கிறது. ஆதலால் நாம் ஒன்றையும் படபடப்பாய் நிதானிக்கவும் கூடாது, பதஷ்டமாய் தீர்க்கவுங்கூடாது. இன்றைக்கு என்ன நடக்குமென்று நமக்குத் தெரியாது. தேவனுடைய நோக்கம் அவமாகவுமாட்டாது. அவருடைய வாக்கு தவறவுமாட்டாது. இதை நாம் அறிவோம். அவர் சகலத்தையும் தம்முடைய சொந்தச் சித்தத்தின் யோசனைப்படியே நடத்துகிறுர். 'என் தீர்மானம் நிற்கும், என் இஷ்டப்படி நடக்கும்' என்று அவர் சொல்லுகிறுர். நமக்கு ஆறுதல் ஏதுவென்றுல், தம்முடைய ஜனங்களில் அவர் பிரியம்வைத்து, தம்முடைய ஊழியக்காரரின் வாழ்வை விரும்புகிறுர். நாம் கவனிக்கவேண்டியது எதுவென்றுல், சகலமும் நம்முடைய பிதாவின் கண் பார்க்க நடக்கிறது. நம்முடைய ரட்சகருடைய வல்லமையினுல் நடத்தப்படுகிறது. பரிசுத்த ஆவியினுல் நம்முடைய நன்மைக்கென்று ஒழுங்குபடுத்தப்படுகின்றது. நம்முடைய சத்துருக்களுடைய இஷ்டப்படியல்ல, நம்முடைய பிதாவும் தேவனுமானவர் பிரியப்பட்டு ஏற்படுத்துகிறதின்படியே எல்லாம் நடக்கும். ஆதலால் கவலேப்படாதே, கலங்காதே, சோர்வடையாதே. சர்வவல்லமையுள்ள தேவனுகிய கர்த்தர் ஆளுகை செய்கிறுர். அவரே தேவன். அவர் பொல்லாங்கினின்று உன்னைக் காப்பாற்றுவார், அவர் உன் ஆத்துமாவைக் காப்பாற்றுவார்.

பின்னுல் வருவதறியேன்,
ஏசு அறிவார் தருவார்,
எல்லாம் அவருக்களிப்பேன்.
அவர் என்னை நடத்துவார்;
நான் பயப்படேன், நம்புவேன்,
அவரென் கவலேத் தீர்ப்பார்.

'நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளுவேன்'

பிலிப்பியர் 3:9

ஆஸ்தி சம்பாதித்து, உலகத்தை அனுபவித்து, மரியாதையாய் ஜீவனம்பண்ணுவதே மனிதருடைய சாதாரண நோக்கம். கிறிஸ்துவை ஆதாயப்படுத்துவதே விசுவாசியின் நோக்கம். அவரையே விரும்புகிறான். அவர் கிடைத்தால் போதுமென்கிறான். இப்போது அவர்மேல் நமக்கு ஒரு பாத்தியமுண்டு. அவரிடத்திலிருந்து எவ்வளவோ பெற்றுக்கொள்ளுகிறோம். அவருடைய அன்பையும் ருசித்துவருகிறோம். ஆகிலும் அவரோடிருந்து, அவரை நமக்கு என்றுமுள்ள பொக்கிஷமாகச் செய்துக்கொள்ளப் பார்க்கவேண்டும். அவர் நாம் கவனிக்கவேண்டிய குறிப்பாக நமக்குமுன் வைக்கப்பட்டிருக்கிறார். ஜெயமடைகிற ஒவ்வொருவனுக்கும் எப்பொழுதும் கிடைக்கிற பங்காக வாக்குத்தத்தம் பண்ணப்படுகிறார். இன்று காலமே உன் மனம் எதன்மேல் வைக்கப்பட்டிருக்கிறது? உன் ஆசைகள் எதை நோக்கிச் செல்லுகிறது? இன்றைக்கு நீ தொடர்ந்துபோகிற பொருள் எது? இயேசு நாம் தேடும் விசேஷித்த பொருளானால், நமக்கு மற்றவை ஒன்றும் கிடையாவிட்டாலும், என்ன கஷ்டங்கள் உபத்திரவங்கள் நேரிட்டாலும் நாம் கலங்கமாட்டோம். 'கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்வதே என் நோக்கம்; அவர் எனக்குச் சொந்தமானால் எல்லாம் நலந்தான். அவரோடு ஒத்துப்பார்க்கும்போது எதுவும் அற்பம்' என்று நம்முடைய நடக்கையினால் சொல்லுகிறவர்களாய் இருப்போம். இயேசுவை இப்படி நோக்குவோமானால், முறுமுறுப்பு நீங்கிப்போகும். பொறுமையின்மை ஒழியும். நம்முடைய மனம் சமாதானமாய் இருக்கும். நாம் செய்கிற ஒவ்வொரு காரியமும் நம்மைக் கவனிக்கிறவனுடைய காதில், நாம் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறதாயிருக்குமானால் எவ்வளவு நலம். கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக் கொண்டவன் மட்டற்ற நீதியும், அளவற்ற ஐசுவரியமும், எண்ணிறந்த ஆஸ்தியுமுடையவன்.

என் ஏசுவின் நாமமே
எனக்கு நல் கீதமே
இங்கதற்கு வேறொன்றும்
நிகரில்லையே என்றும்.

'நீ விழித்திரு'

வெளிப்படுத்தின விசேஷம் 3:2

நம்மைக் கண்ணியில் அகப்படுத்த சாத்தான் விழித்திருக்கிறான். நம்மை மேற்கொள்ள உலகம் விழித்திருக்கிறது. நம்மைப் பாதுகாக்கத் தேவன் விழித்திருக்கிறார். நம்முடைய உத்தம சிநேகிதனாகிய இயேசு நம்மைப் பாதுகாத்து விழித்திரு என்கிறார். உலக சிந்தைக்கு விரோதமாக விழித்திரு. உன்னைச் சூழ்ந்து நிற்கிற பாவத்துக்கு விரோதமாக விழித்திரு. சோதனைகாலங்களில் உன்னுடைய பெரிய சத்துருவாகிய சாத்தானுக்கு விரோதமாக விழித்திரு. நன்மை செய்யத் தக்க சமயங்களுக்காக விழித்திரு. ஜெபத்துக்கு உத்தரவு கிடைக்க; திவ்விய செயலால் தேவன் உன்னை நடத்த விழித்திரு. தேவனை நோக்கி ஜெபம்பண்ணி அவருடைய வார்த்தையின்மேல் சார்ந்து விழித்திருந்துகொள். சோதனையில் பாவத்தினால் கறைப்படாதபடிக்குக் காக்க ஜெபம்பண்ணு. உத்தரவு வருமட்டும் தேவனை நம்பு. அவருடைய கிருபாசனத்தை விட்டுப்போகாதே. உன் சுறுசுறுப்பினாலும், பிரயத்தனத்தாலும், சகலமும் முடியுமென்று எண்ணினவனைப்போல விழித்திரு. விழித்திருந்து தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான். விழித்திருந்து எப்பொழுதும் ஜெபம்பண்ணு. உன் விழிப்பின்மேல் நம்பிக்கை வையாதே. விழித்திருக்கும் போதும் தேவனை நம்பு. உன்னைக் காக்கிறவர் உறங்கமாட்டார். அவருடைய வார்த்தையை நீ உட்கொண்டு அவருடைய பந்தியில் நீ மகிழும்போது, அவர் உன்னோடிருக்கிறதுபோல நீ விழித்திருக்கும்போதும் உன்னோடிருக்கிறார். சன்மார்க்கர் மேல் கர்த்தருடைய கண் இருக்கிறது. அவர்களுடைய கெஞ்சுதலுக்கு அவருடைய செவி திறந்திருக்கிறது. ஆதலால் எப்பொழுதும் விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்.

தேவனே! நான் உம்மாலேதான்
பிழைக்கிறேன் ஆதரியும்;
பயந்தவனானாலும் நான்
விழித்து மன்றாடச்செய்யும்

'தேவனே என் பட்சத்தில் இருக்கிறார்'

சங்கீதம் 56:9

சிநேகிதரே! தேவன் தன் படசத்திலிருந்து, தனக்காகப் போர்செய்து, தன்னுடைய காயங்களைப்பார்த்து வருகிறது பாவிக்குக் கிடைக்கக்கூடிய பெரிய இரக்கம். இந்த இரக்கம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. தேவன் உங்கள் பட்சத்திலிருக்கிறார். உலகத் தோற்றத்துக்குமுன் உங்களைத் தெரிந்துகொண்டார். தம்முடைய ஸ்துதியைப் பிரஸ்தாபப்படுத்த உங்களை உருவாக்கினார். கிருபையினால் உங்களை அழைக்கும்பரியந்தம் கிறிஸ்துவில் எங்களைப் பாதுகாத்தார். தம்முடைய ஆவியினால் உங்களை உயிர்ப்பித்து, இயேசுவண்டையில் உங்களை நடத்தினார். தம்முடைய குமாரனை உங்களுக்குத் தந்து, அவரோடு மற்ற எந்த நன்மையையுங் கூட்டித் தருவோமென்கிறார். அவர் என்னைப் பார்த்து நீ என்னுடையவன் என்கிறார். நீ அவரைப் பார்த்து நான் உம்முடையவன் என்று சொன்னாய். இப்போது அவர் உன் அடைக்கலம், உன் பலன். அவர் உன்மேல் கவலைப்படுகிறார். உன் காரியத்தின்மேல் கண்ணையிருக்கிறார். நீ வைக்கிற ஒவ்வொரு அடியையும் அவர் கவனிக்கிறார் . உன்னுடைய விசுவாசத்தை அவர் சோதித்தாலும், உன் குறைவை எல்லாம் நிச்சயமாகவே நீக்குவார். உன் பொறுமையை அவர் பரீட்சித்தாலும், அக்கிரமத்திற்கு உன் இருதயத்தில் நீ இடங்கொடுத்தாலொழிய, அவர் உன் கெஞ்சுதலுக்குச் செவியை அடைத்துக்கொள்ளமாட்டார். தேவன் உன்னைக் காக்கும்படி கவலைப்படுகிறதுபோல, எந்தத் தாய் தந்தையும் தங்கள் அன்பான பிள்ளைமேல் அவ்வளவு கவலை கொள்ளமாட்டார்கள். அவர் உன்னைப் பார்த்து என்ன சொல்லுகிறார்? 'நீ பயப்படாதே, நான் உன்னோடிருக்கிறேன். திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்துவேன். நான் உனக்குத் துணைநிற்பேன். என் நீதியின் கரத்தால் உன்னைத் தாங்குவேன்' என்கிறார்' இப்படிப்பட்ட வாக்குத்தத்தமிருக்க ஏன் அதைரியப்படவேண்டும்.

தேவனென் பட்சமானால்
நான் ஏன் பயப்படுவேன்?
அவரென் காவலானால்
உலகம் பேய் செய்வதென்?
அவரால் நான் வெல்லுவேன்
சத்துருவை ஜெயிப்பேன்.

'நான் அவர்களைக் கடாட்சிப்பேன்'

மல்கியா 3:17

அருமையான வாக்கு! கர்த்தர் யாரைக் கடாட்சிப்பார்? தம்முடைய பிள்ளைகள் எல்லாரையும், முக்கியமாய் அவருடைய தயவைப்பற்றிப் பேசி, அவருடைய உண்மையைக் குறித்துச் சாட்சிசொல்லி, அவருடைய நாமத்தை நினைத்து பொல்லாத சந்ததியின் நடுவில் தம்மை மகிமைப்படுத்துகிறவர்களையே. அவர் என்ன சொல்லுகிறார்? 'என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளில் அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள். ஒரு மனிதன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல, நான் அவர்களைக் கடாட்சிப்பேன்.' நாம் கர்த்தருடைய மகிமையை நாடி, அவருடைய வசனத்தின்படி நடந்தால், அவருடைய செயலைப் பார்த்துப் பயப்படோம். எந்த மோசத்திலும் கேடயம்போல நம்மை மறைப்பார். நம்முடைய துன்பங்களைப் பிரயோஜனமாக்குவார். நம்முடைய நன்மைகளைக் கைசோரவிடார். அவருடைய துதிக்கென்று நாம் ஜீவியம்பண்ணுவோமானால், நம்முடைய குறைவுகளை அவருடைய காதில் ஒப்புவிக்கலாம். குறைவுகளை நீக்குவார், சௌக்கியத்தைத் தருவார். 'பயப்படாதே, நான் உண்டோடிருக்கிறேன்' என்கிறார். எந்தத் துன்பத்தையும் என்னிடத்தில் கொண்டுவா, நான் உனக்குப் போதுமான தேவன், என் பேர் எல்ஷாடாய்; எது குறைந்தாலும் என்னிடத்தில் அதைக் கண்டுபிடிப்பாய். நான் உன் தேவன் ஜாதிகளைத் தண்டிப்பேன்; உன்னைக் கடாட்சிப்பேன். இதை நம்பிச் சுகமாயிரு; இதில் சந்தோஷப்பட்டு என்னை மகிமைப்படுத்து. இனி நீ அடிமையல்ல, குமாரன்; குமாரனானால் கிறிஸ்துவின் மூலமாய்த் தேவனுக்குச் சுதந்தரவாளி. உலகத்தைத் தண்டித்தாலும் உன்னைக் கடாட்சிப்பேன்' என்கிறார்,

ஏசுதான் என் ரட்சகர்
அவர் நாமம் நம்புவேன்;
அன்பாய் பெலனளிப்பார்
எப்போ அங்கே செல்லுவேன்?

'தேவனை நோக்கிக் காத்திரு'

சங்கீதம் 42:11

பகல் எவ்வளவு மந்தாரமாயிருந்தாலும், துன்பங்கள் எவ்வளவு அதிகப்பட்டாலும், தேவதண்டனை எவ்வளவு வருத்தமாயிருந்தாலும், தேவனை நோக்கிக் காத்திரு. அவர் உன்னோடிருக்கிறார். அவர் உன் தேவன், உன்னைச் சிநேகிப்பேன் என்று வாக்குக் கொடுத்தார். அவர் உண்மையுள்ள பராபரன். இருட்டை வெளிச்சமாக்குவார், கோணலானதை நேர்ப்படுத்துவார். கிருபை உனக்குச் சம்பூரணமாய்க் கிடைக்கப்பண்ணுவார். உனக்குத் தேவையானதெல்லாம் கிடைக்கவும், எந்த நற்கிரியைகளிலேயும் நீ பெருகவும், அவர் இப்படிச் செய்வார். உனக்கு நேரிடும் மாறுதல்கள் அவருக்கில்லை, நீ முற்றிலும் அவரையே சார்ந்திருக்கலாம். சகலமும் அவரிடத்திலிருந்து வருமென்று எதிர்பார்க்கலாம். உள்ளும் புறமும் யாவும் உனக்குத் துன்பத்தை உண்டாக்க ஒன்று சேர்ந்தாலும், இன்னும் தேவனை நம்புவேன் என்று சொல், அவரை கிருபையும், வல்லமையும் நிறைந்த தேவனாக நோக்கு. அன்புள்ள தகப்பனும் அளவற்ற தேவனும் செய்யக்கூடியதெல்லாம் செய்வார் என்று எதிர்பார்த்திரு. இருட்டில் வெளிச்சமும், துன்பத்தில் சகாயமும், பெலவீனத்தில் பெலனும், துக்கத்தில் சந்தோஷமும், வெள்ளத்தில் முழுகும்போது ஒத்தாசையும், மரணத்தில் ஜீவனும் வருமென்று எதிர்பார்த்திரு. உனக்குத் தேவையானதெல்லாம், தேவன் வாக்களித்ததெல்லாம் கிடைக்குமென்று நம்பு. தேவனிடத்தில் நம்பிக்கையாயிரு; அவர் வாக்கு அளித்தபடியால் நம்பிக்கையாயிரு, அவர் உண்மையும் உத்தமமுமானவரானபடியால், உன் நம்பிக்கை விருதாவாய்ப் போகாது. உன் நம்பிக்கையின் அஸ்திபாரம் இயேசு சிந்தின ரத்தத்திலும், தேவன் கொடுத்த ஆணையிலும் வைக்கப்பட்டிருக்கிறது.

தேவகரம் ஒன்றுதான்
உன் துன்பம் யாவும் நீக்கும்
நீ அவர் முன்னின்று வான்
உன் பாடும் சத்தம் கேட்கும்

பிப்ரவரி-மீ 13-உ

'தேவனே! என்னை ஆராய்ந்துபாரும்'
சங்கீதம் 139:23

தேவனுடைய இருதயத்தை ஒருவரும் ஆராயக் கூடாது. மெய்க்கிறிஸ்தவர்கள் தவிர ஒருவரும் தேவன் தங்கள் இருதயங்களை ஆராயவேண்டுமென்று விரும்பமாட்டார்கள். தன் உள்ளத்திலுள்ள பொல்லாங்கு யாவற்றையும் விசுவாசி அறியவிரும்புகிறான். மோசம்போகிறது அவனுக்குப் பயத்தைக் கொடுக்கும். கிருபையினால் அவன் உண்மையுள்ளவனானபடியால், 'தேவனே! என்னை ஆராய்ந்து பாரும்' என்கிறான். மனிதன் நம்மை ஆராய்கிறதானால் நம்மை வெட்கப் படுத்துவான்; வருத்தப்படுத்துவான், சேதப்படுத்துவான். தேவன் நம்மை ஆராயும்போதோ நம்மைத் தாழ்த்தி, பெலப் படுத்தி, நம்மைச் சுகப்படுத்துவார். சத்தியத்தின் வெளிச்சத்தில் தன்னைப் பார்த்து, தேவன் ஆராய்ந்தவண்ணமாக தன்னை அறிந்துகொள்ளுகிற மனுஷன், ஒரு நிமிஷமாகிலும் தன்னை நம்பான். தன்னைவிட்டு இயேசுவண்டைக்கும், நியாயப்பிரமாணத்தை விட்டுக் கிருபையண்டைக்கும் ஓடுவான். தன்னை அருவருப்பான். இயேசுவை முற்றிலும் நம்பி, அந்த நம்பிக்கையால் மகிழ்ந்து, தேவனிடத்தில் தாழ்மையாய் நடப்பான். அவன் பெருமைகொள்ளான், துணிவுகொள்ளான். பரிசுத்தமாய் நடந்து சகலமும் இலவசமான கிருபையால் கிடைத்தது என்பான். சிநேகிதரே! இயேசுவண்டையில் உங்கள் இருதயத்தைக் கொண்டுபோய் அதை ஆராய்ந்து பார்க்கச் சொல்லுங்கள்.' இருதயங்களையும், உள்ளிந்திரியங்களையும் ஆராய்கிறவர் நானே' என்கிறார். அவர் உங்களை ஆராய்ந்தால் நீங்கள் மோசம்போகமாட்டீர்கள். சுயநீதியினின்றும், தப்பான எந்த வழியினின்றும், அவர் உங்களை ரட்சிப்பார். இது உங்கள் தினசரி ஜெபமாய் இருக்கட்டும். 'தேவனே! என்னை ஆராய்ந்து நித்திய வழியிலே என்னை நடத்தும். என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.' ஒவ்வொரு மனிதனும் தன்னைச் சோதிக்கக்கடவன். நீ உன்னை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

கர்த்தாவே! என் வழிகளை
ஆராய்ந்து என் ஆத்துமத்தை
உண்மையுள்ள தாக்குமப்போ
உமக்குமுன் நிற்பேனல்லோ
நீர் அங்கிகரிக்கும்போது
திடனடைவேனப்போது

'கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்'

ஏசாயா 62:4

என்ன இவ்வளவு அற்பரும் கேவலஸ்தரும் அபாத்திரரு மான சிருஷ்டிகளின்மேல் தேவன் பிரியமா யிருக்கிறாரா? ஆம், தேவனுடைய மட்டற்ற அன்பு நித்யகாலமாய் நமது மேல் வைக்கப்பட்டிருக்கிறது. அவர் நம்மை நேசித்தபடியால் தம்முடைய ஒரேபேறான குமாரனை நமக்காக மரிக்கும்படி அனுப்பினார். தம்முடைய பரிசுத்த ஆவியை நம்முடைய இருதயங்களில் ஊற்றினார். கிருபையின் மூலமாய் நல்ல நம் பிக்கையையும் தந்தார். அப்போஸ்தலன் சொல்வதைக் கேள்: 'தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களா யிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப் பித்தார். கிருபையினாலே ரட்சிக்கப்பட்டீர்கள்.' ஏகோவா நம்மை இயேசுவில் பார்த்து அளவற்ற அன்பினால் நேசிக்கி றார். அவரை நேசித்தவண்ணமாக நம்மையும் நேசிக்கிறார். ஒவ்வொரு விசுவாசியின் விசுவாசம் பெலவீனமாயிருந்தா லும், அவன் பயம் அதிகமாயிருந்தாலும், இவன் இருதயத் தின் கேடு எவ்வளவு பலத்திருந்தாலும், அவன் துன்பங்கள் எவ்வளவு கொடியதாயிருந்தாலும், அவனுடைய சோதனை கள் எவ்வளவோ அகோரமாயிருந்தாலும், இன்னும் ஏகோவா அவனில் பிரியமாயிருக்கிறார். 'ஏகோவா என்னில் பிரியப்படு கிறார். அவர் என்னில் நேசம் வைத்திருக்கிறார். என்னைப் பற் றின அவருடைய நினைவுகள் இனிமையானவைகள். என்னைத் தம்முடைய நித்ய பங்காக வைத்திருக்கிறார். இது எவ்வளவு பெரிய சிலாக்கியம். என்னுடைய ஆறுதலுக்கும், பரிசுத்தத் திற்கும், அன்புக்கும் ஊற்று இதுவே.' கிறிஸ்தவனே! தேவ தூதனைப் பார்க்கிலும் நீ அதிக நன்றியறிந்தவனாயிருக்கப் போதிய முகாந்தரமுண்டு.

நித்திய நேசத்தினளவு
எந்த தூதன் சொல்பவன்
சொற்கடங்காத வனுவு
ருசித்தவனே பாக்கியன்.

'பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்'
எபேசியர் 4:30

ஜீவன், வெளிச்சம், போதனை, பரிசுத்தம் இவை யாவும் பரிசுத்த ஆவியினிடத்திலிருந்தே வரவேண்டும். அவருடைய சமுகமும் வல்லமையும் கிரியையும் இல்லாவிட்டால், நாம் அறிவீனராயும் மாம்ச சிந்தையுடையவர்களாயும் இருப்போம். ஆதலால். அவரைத் துக்கப்படுத்தாதபடிக்கும், கனக்குறைச்சல் செய்யாதபடிக்கும், நாம் மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். தேவனுடைய பரிசுத்த வசனத்தை அசட்டைசெய்து, அற்பமாக எண்ணி, அதைத் தகாதவிதமாய்ப் பிரயோகிக்கும்போது அவரைத் துக்கப்படுத்துகிறோம். தேவனைப்பற்றின தகாத எண்ணங்களாலும், கர்த்தராகிய இயேசுவைப்பற்றின குறைவான எண்ணங்களாலும் அவரைத் துக்கப்படுத்தலாம். ஆவிக்குரிய சிந்தையில்லாமல் மாம்ச சிந்தையைப் பேணும்போது அவரைத் துக்கப்படுத்துகிறோம். செய்யவேண்டியதைச் செய்யாமலும், செய்யத்தகாததைச் செய்தும் அவரைத் துக்கப்படுத்துகிறோம். அவர் கற்பிப்பதை அசட்டைசெய்து, அவருடைய ஈவுகளைப் பிரயோஜனமற்றதாக்கி, சாத்தானுக்கும்; உலகத்துக்கும் மாம்சத்துக்கும் செவிகொடுப்போமேயானால் அவரைத் துக்கப்படுத்துவோம். அவர் துக்கப்படுவாரானால், தம்முடைய வல்லமையை எடுத்துப்போடுவார். அப்போது நமது கடமையை நிறைவேற்ற நமக்குப் பெலனிராது. நாம் கவலையற்றவர்களாய், மாம்ச சிந்தைக்கு இடங்கொடுப்போம். வேத வசனப் பிரசங்கம் உயிரற்றதாய்த் தோன்றும். வேத புஸ்தகம் முத்தரிக்கப்பட்டதாக இருக்கும். ஜெபத்தில் ஆசையிராது, பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக நன்றியிராது. கிறிஸ்து மார்க்கத்தின் செய்கைகள் பாரமான கடமையாகும். 'நீங்கள் மீட்பின் நாளுக்கென்று முத்திரிக்கப்பட்டிருக்கிற பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.' 'ஆவிக்கென்று விதையுங்கள், நித்திய ஜீவனை அறுப்பீர்கள்.'

புறாவே சுத்தப் புறாவே
ஆறுதலளிப்பீரே;
என் பாவங்கள் யாவும் தானே
கசப்புமக்கீந்ததே;
அதற்காய், நான் துக்கித்தேனே;
சேர்ந்து புலம்பினேனே.

'நான் அவர்கள் தேவனாயிருப்பேன்'

எபிரேயர் 8:10

அதாவது தம்முடைய ஜனங்கள் எல்லாருக்கும் அவர் தேவன். அவரைத்தான் அவர்கள் ஆராதித்து நம்பவேண்டும். சகல பாக்கியத்துக்கும் அவரே ஊற்றென்று எண்ணி, அவரைத் தியானிக்கவேண்டும். அவர் சிநேகிதனாய், உற்ற துணையாய், பரோபகாரியாய் இருப்பதைவிட, நமக்குத் தேவனாயிருக்கிறது எவ்வளவோ உயர்ந்தது. சிருட்டிகள் நமக்குத் துணையாயிருக்கலாம். அவர் மாத்திரந்தான் தம்முடைய பரிபூரணத்தின்படி நமக்கு நன்மைசெய்து, வேறொருவரும் கொடுக்கக்கூடாத நன்மைகளைக் கொடுக்கிறவர். அவர் மன்னிப்பார், சுத்திகரிப்பார், ஆற்றித்தேற்றுவார், நம்மை மகிமைப்படுத்துவார். அவர் நமக்குத் தேவனானால் நமக்குச் சகலமுமாகயிருப்பார். அவருக்குள்ளதெல்லாம் நம்முடையது; அவர் நம்முடைய சுதந்தரம். எவ்வளவு மகிமையான சுதந்தரம். மோசத்தில், இருட்டில், துன்பத்தில், வருத்தத்தில் அகப்பட்டிருக்கும்போது, இதைக் கவனி. தேவன் உன் தேவனாயிருந்து, உன்னை விடுவித்து, உனக்கு வெளிச்சந்தந்து, உன்னை ஆறுதல்படுத்தி, பெலப்படுத்தி, பரிசுத்தமாக்குவார். அவரை உன் தேவனாக்கிக்கொள். உனக்கு வேண்டியதெல்லாம் அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அதற்காக அவரையே நோக்கு. அவருடைய திவ்ய லட்சணங்களுக்காக அவரை வணங்கி, அவரை எல்லாம் உன்னைப் பாக்கியவானாக்கப்பார்க்கிறதென்று சந்தோஷப்படு. அவருடைய மகிமைக்கென்று ஜீவியம்பண்ணு. அவருடைய வார்த்தையின்படி நட. அவர் உனக்கு இகத்திலும், பரத்திலும், நித்திய சுகமளித்து தம்மைத் தாமே மகிமைப்படுத்துவார். தம்முடைய ஜனங்களுக்கு நன்மை செய்கிறதில் அவர் பிரியப்படுகிறார். அவர்களை ஆசீர்வதிக்கிறது அவருக்கு ஆனந்தம்.

இங்கே இருப்பேன் நீங்கேன்
பயமெல்லாம் ஜெயிப்பேன்;
நித்ய அன்பென்னை ஆற்றும்
நித்ய கை காக்கும் முற்றும்.

'இப்பொழுதே ரட்சணிய நாள்'

2 கொரி. 6:2

இப்படிப்பட்ட காலத்தில் நாம் இருக்கிறது எவ்வளவு பெரிய இரக்கம். நாம் கெட்டு நொந்துபோன ஏழைப்பாவி கள். இப்பொழுது நமக்கு ரட்சிப்பு விலையுமின்றிக் காசுமின்றி இலவசமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் பாவச் சிந்தை, அதன் வல்லமை, அதனால் வரும் தண்டனை இதுகளி னின்று ரட்சிக்கிறார். தம்முடைய ஆவியானவரைத் தந்து, தம்முடைய பிரமாணத்தை நம்முடைய இருதயத்தில் எழுதி, நம்முடைய பாதங்களைச் சமாதான வழியில் நடத்து கிறார். ரட்சிக்கிற இயேசுவை நமக்குக் கொடுக்கிறார். பாவத்தை ஜெயிக்கிற கிருபையை நமக்கு அளிக்கிறார். நம் முடைய ஜீவபயணம் முடிந்தபிறகு நாம் அனுபவிக்க மோட் சந் தருகிறார், தம்முடைய ஜனங்களுக்கு விடுதலையுண்டாக்கு கிற நாள் இதுவே. தம்முடைய வல்லமையையும், தம்முடைய ஞானத்தையும், தம்முடைய வார்த்தையையும் நம்முடைய செயலையும், தம்முடைய தூதரையும் நம்முடைய விடுதலைக் காகப் பிரயோகிக்கிறார். பின்னை ஏன் நாம் பயப்படவேண்டும்? இது ரட்சிப்பின் நாளென்று நினைத்து, அவருடைய சிம்மாச னத்தண்டை போவோமாக. நம்முடைய சமாதானத்தைக் கெடுத்து, நம்முடைய சுகானுபோகத்தைத் தடுத்து, கிறிஸ்த வர்களாக நாம் ஓடும் ஓட்டத்தில் நம்மை மறிக்கிற சகலத்தி னின்றும் விடுதலையாக்க, அவரை நோக்கிக் கெஞ்சுவோமாக. நாம் அதைரியப்படவேண்டியதில்லை. இது நற்செய்தியின் நாள். நமக்குச் சொல்லப்படுகிறதென்ன? 'விசுவாசி, ரட்சிக் கப்படுவாய்.' 'ஜெபம்பண்ணு, விடுவிக்கப்படுவாய்,' 'கர்த்த ருக்குக் காத்திரு, அவர் உன் இருதயத்தைத் திடப்படுத்து வார்.' 'கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு ரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவ னுடைய ஈவு.

இரட்சகர் நாமகீதம்
காதுக்கினிய நல்லநாதம்;
நமக்கேற்ற ஔஷதம்
பயனளிக்கும் பிரசாதம்.

'நீங்கள் பொறுமையோடிருங்கள்'

யாக்கோபு 5:8

நம்முடைய தேவன் பொறுமையின் தேவன்; கர்த்தராகிய இயேசு பொறுமைக்கு நல்மாதிரி காட்டியிருக்கிறார். பொறுமையை உண்டுபண்ணுகிறவர் பரிசுத்த ஆவி. சோதனைகளும், துன்பங்களும், நஷ்டங்களும் அதைப் பலப்படுத்துகிற கருவிகள். தேவன் நமக்கு நியமித்திருக்கிற சகலத்தையும் முறுமுறுப்பில்லாமல் சகிக்கிற பொறுமை நமக்கு வேண்டியது. அது தேவனுக்கு சகலத்தையும் ஒப்புக்கொடுத்து, நம்பிக்கையோடு சகிக்கும். அது நமக்கு வேண்டிய நன்மைகளுக்காக, நாம், விண்ணப்பத்தில் கேட்டவைகளுக்காக, தேவன் குறித்த நேரம் வருமட்டும் காத்திருக்கும். பொறுமை விசுவாசத்தின் குமாரத்தி. தேவன் சகலத்தையும் நடத்துகிறார். நம்முடைய நன்மைக்கென்றும், தம்முடைய மகிமைக்கென்றும் சகலத்தையும் நியமித்திருக்கிறார் என்று நாம் விசுவாசித்தால்தான் பொறுமையாயிருப்போம். பொறுமை திடநம்பிக்கையை உண்டாக்கும்; முறுமுறுக்கிற வாயை அடைக்கும்; பழிவாங்குகிற சிந்தையை நீக்கிப்போடும்; தன்னைத்தானே ஆளுகிற ஞானத்தைத் தரும். நீ பொறுதியற்றவனா? தேவனுக்கு முன்பாக உன் பொறுதியின்மையை அறிக்கையிட்டுத் துக்கப்படு; இல்லாவிட்டால் அது உன்னை நிர்ப்பந்தனுக்கி, நீ தேவனை கனவீனப்படுத்தச் செய்யும். அதற்கு எச்சரிக்கையாக விழித்திரு. கர்த்தருடைய வருகை சமீபிக்கிறது. தீர்க்கதரிசிகள்; அப்போஸ்தலர்மார், இரத்தச்சாட்சிகளாகிய இவர்களைப் பார். முக்கியமாய் இயேசுவைப் பார்; நீங்களும் பொறுமையாயிருங்கள்; பொறுமையில் உங்கள் ஆத்துமாக்களைப் பத்திரப்படுத்துங்கள்.

நின் கிருபை எனக்குத் தாரும்
தைரியமெனக்களியும்;
ஜீவ பயணத்தில் காரும்
வானம் சேர வரம் ஈயும்;
சீயோன் வாசல் சேருமட்டும்
பொறுமையால் இடைக்கட்டும்.

'அவர் உங்களை விசாரிக்கிறவர்'

1 பேதுரு 5:7

கர்த்தர் தம்முடைய ஜனங்கள் யாவரையும் அறிவார். அவர்களையும், அவர்கள் குறைகளையும், அவர்கள் துன்பங்களையும் அறிவார். அவர்களுக்கு நன்மைசெய்ய, அவர்களை விடுவிக்க, அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து ஆதரிக்க அவர் அவர்களை நினைக்கிறார். எல்லா இடங்களிலும், எல்லாச் சமயங்களிலும், எந்த நிலைமையிலும் அவர்களைத் தம்முடைய கையில் காக்கிறார். எப்பொழுதும் அவர்களைத் தம்முடைய சொந்தமாகப் பாராட்டுகிறார், அவரால் நேசிக்கப்பட்டவர்கள்; அவர் குமாரனுடைய இரத்தத்தால் கொள்ளப்பட்டவர்கள், பரிசுத்த ஆவியின் ஆலயங்களானபடியால், அவர்கள் அவர் பார்வையில் மிகவும் அருமையானவர்கள். அவர்கள் பெலவீனர் என்று அவருக்குத் தெரியும். அவர்களுக்குச் சத்துருக்கள் அநேகர் என்றும் அறிவார். தங்களையும், தங்கள் கவலைகளையும் தம்முடைய கையில் ஒப்புவிக்க அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார். அவர்களை விசாரித்துக்கொள்ளுவேன் என்றும் வாக்குக் கொடுத்திருக்கிறார். அவர்கள் பட்சத்தில் அவர் காட்டும் கவலை பிதாவுக்கொப்பானது; அது பரிசுத்தமும் ஞானமுமுள்ளது; அது சாந்தமும் நிலையுமுள்ளது; ஆதலால் எல்லாம் நன்மையாயிருக்கும் என்று நீ நம்பவேண்டும். உனக்காக அவர் இன்றைக்குக் கவலைப்படுகிறார் என்று நம்பு. இந்த விசுவாசத்தோடு உன் கவலைகளை அவரிடத்தில் கொண்டுபோ. தம்முடைய அளவற்ற ஞானத்தால் நடத்துவார், சர்வவல்லபத்தால் நன்மையாய் முடிப்பார் என்று நம்பி, சகலத்தையும் அவரிடத்தில் விட்டுவிடு; உங்கள் கவலைகளை எல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். அவைகளை ஒவ்வொன்றாக அவர் மேலே போட்டுவிடுங்கள். கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒருபோதும் தள்ளமாட்டார்.

நான் அருகிலிருப்பேன்
கவலைகள் நீக்குவேன்;
உன் பாரத்தைச் சுமப்பேன்
குறைவை அகற்றுவேன்.

'கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ?'

எண்ணாகமம் 11:23

இல்லே, அவர் செய்ததைப் பின்னும் செய்யக்கூடியவர். அவர் தமது வாக்கின்படி, தம்முடைய ஜனங்களுக்குத் தேவையானதைச் செய்வார், அவருக்குச் சகல அதிகாரமும் உண்டு. வருத்தமென்பது அவருக்கில்லே. பின்னே ஏன் நாம் சோர்ந்துபோகவேண்டும்? அவருடைய வசனத்தை நம்பி, அவருடைய உண்மையின்மேல் சார்ந்து, நமக்கு வேண்டியது எல்லாம் அவருடைய கையினின்று வருமென்று எதிர்பாராததினுல்தான், மோசே அவருடைய வல்லமையைக் குறித்துச் சந்தேகித்தபோது, அவன்மேல் விசனப்பட்டார். நாம் அவருடைய அன்பைக் குறைவாயெண்ணி, அவருடைய செயலில் அவநம்பிக்கை கொண்டு, இதெப்படி நடக்குமென்று கேட்கும்போது, நமதுபேரிலும் விசனப்படுவார். உன் வருத்தம், உன் துன்பம், குறைவு எப்படிப்பட்டதாயிருந்தாலும், கர்த்தரிடத்தில் அவைகளேச் சொல்லி, அவர் விடுவிப்பார் என்று நம்பியிரு. உன் விசுவாசத்தைப் பலவீனப்படுத்த உன் அமைதலைக் கெடுக்க, ஏதாவது சோதனே நேரிடும்போது கர்த்தருடைய கை குறுகிப்போனதோ என்று கேட்டுக்கொள். சிநேகிதனே! மனிதனுடைய கையையல்ல, தேவகரத்தையே நோக்கிப்பார். மனிதன் உன்னே மோசம் போக்குவான். தேவன் அப்படிச் செய்யார். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர். அவர் சமீபத்திலிருக்கும் தேவன், அவர் இந்த நாளெல்லாம் உன் சமீபத்திலிருப்பார். உனக்கு உதவி செய்ய அவரால் ஆகும். அவர் ஆயத்தமாயுமிருக்கிருர். ஆகையால் பயப்படாமல் திடன்கொள்.

வான் கடல் ஆகாயத்தில்
தேவவிதி செல்லுமே;
தேவ பக்தரின் பாட்டில்
அவர் செயல் நலமே,
அவர் பலத்தின்மேல் நில்;
ரட்சிக்குமே அவர் சொல்.

'கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார்'

சங்கீதம் 11:5

கர்த்தர் எங்கே கிருபையைக் காட்டுகிறாரோ, அங்கே எப்போதும் சோதிக்கிறார். அவருடைய ஜனங்கள் அக்கினியைக் கடந்துபோக ஆயத்தமாயிருக்கவேண்டும். நம்முடைய விசுவாசம் எப்படிப்பட்டது, நம்முடைய அன்பு எவ்வளவு பலமுள்ளது என்று அவர் சோதிப்பார். நம்முடைய பொறுமையையும் உறுதியையும் அவர் சோதிப்பார். நமக்கு உண்டாகும் சோதனைகளில் நாம் கலங்கவுங்கூடாது. சோர்படையவுங்கூடாது. அவர் சுத்த அன்பினாலே நல்ல நோக்கத்தோடு, நிதானமான சட்டப்பிரகாரம் தகுந்த காலத்தில் நம்மைச் சோதிக்கிறார். நாம் என்ன உருவென்றும், நம்முடைய நிலைமை எப்படிப்பட்டதென்றும், நம்முடைய சத்துருக்கள் யார் என்றும் அவர் கவனிக்கிறார். பட்சமில்லாத வகையாய் அவர் ஒன்றும் செய்கிறதில்லை; அவசியமில்லாவிட்டால் நமக்குத் துன்பத்தை வரவிடார். தீமை வராதபடிக்குத் தடுக்கவும், நாம் விழுந்த தீமையினின்று நம்மை எடுக்கவும், அவர் நமக்குத் துன்பங்களை அனுப்புகிறார். ஒன்றில் அது நம்மைத் தீமையில் விழாதபடிக்குக் காக்கும்; அல்லது நாம் விழுந்த தீமையினின்று நம்மைத் தப்புவிக்கும். உன் துன்பங்கள் கர்த்தரிடத்திலிருந்து வருகிறது. அவைகளைத் தெரிந்தெடுத்தது அவருடைய ஞானம். அவைகளை ஏற்படுத்தினது அவருடைய அன்பு. அவைகளைக் கொண்டுவருகிறது அவருடைய செயல். 'கர்த்தாவே! ஏன் என்னை இப்படிச் சோதிக்கிறீர்?' என்று கேட்கிறாயோ? உனக்கு நன்மை செய்யத்தான் என்று உத்தரவு சொல்லுகிறார். எந்தச் சோதனையும் தேவனிடத்திலிருந்து வருகிறதென்று எண்ணி, அதைச் சகிக்கத்தக்கப் பெலத்துக்காகவும், அதைப் பிரயோஜனப்படுத்தத்தக்க கிருபைக்காகவும்; அதினின்று விடுதலை அடைவதற்காகவும் அவரிடத்தில் போ. அப்போது எல்லாம் நன்றாயிருக்கும். நீ சோதிக்கப்படுகிறது அவருக்குப் பிரியமல்ல, உனக்குப் பிரயோஜனம்.

துன்பமென்னும் நேரத்தில்
சந்தோஷ செய்தி காணும்,
மா காடாந்தகாரத்தில்
தெய்வீக நேசம் தோணும்.

'அவர் கிருபை செய்ய விரும்புகிறவர்'

மீகா. 7:18

இரக்கம் நிர்ப்பாக்கியனிடத்தில் தங்கும்; பாவம் நம்மை நிர்ப்பந்தமாக்கிப்போட்டது. தேவன் தம்மை இரக்கமுள்ளவராக வெளிப்படுத்தியிருக்கிறார். இரங்குவதே அவருக்குப் பிரியம்; நமதுமேல் இரங்குவது அவருக்கு ஆனந்தம். நமக்குப் பாவங்களை மன்னித்து, நமது குறைவுகளை நீக்கி, நம்மை இரட்சிக்கிறதுதான் அவருக்குப் பிரியமான காரியம். அவருடைய மகிமைக்கு அது அநுகூலமானபடியால், தம்முடைய ஜனங்களை ஆசீர்வதிக்கிறதே அவருடைய மகிழ்ச்சியாயிருக்கிறது. இரக்கங்களின் பிதாவென்று அழைக்கப்படுகிறார். ஒரு தகப்பன் தன் பிள்ளைகளில் எப்படிச் சந்தோஷப்படுகிறானோ, அப்படியே நம்முடைய தேவன் இரக்கங் காட்டுவதில் ஆனந்தம்கொள்ளுகிறார். இரங்குகிறது அவருக்கு எப்பொழுதும் பிரியமாதலால், இன்று காலையிலும் இரங்குகிறார். ஆதலால் அவருக்குத் துக்கத்தை உண்டாக்கின உன் பாவங்களைக் குறித்துக் கண்ணீர்விட்டு, அவைகள், உன்னை நிர்ப்பாக்கியனாக்கிப்போட்டதென்று முறையிடு. அவருடைய சிம்மாசனத்தண்டையில் சேர்ந்து இரக்கத்துக்காகக் கெஞ்சு. அவர் உருக்கத்தைப்பற்றி ஒரு நிமிஷமாகிலும் சந்தேகியாதே, அவருடைய பட்சம், கிருபை ஆகிய இவைகளைப்பற்றியும் ஐயம் கொள்ளாதே. இரக்கம் பெற்றுக்கொண்டாயா? சந்திப்பின் நாளில் தேவனை மகிமைப்படுத்த வைராக்கியனாயிரு. உண்மையுள்ளவனாய் சகல நன்மைக்கும் இரக்கமே காரணமென்று சொல்லு; நிர்ப்பாக்கியரான பாவிகளுக்கு இரக்கங்காட்டுவதே தேவனுக்குப் பிரியம் என்று சொல்லி, அந்த நல்ல செய்தியைப் பிரஸ்தாபம் பண்ணு. இதைக்கொண்டு உன் பயங்களை நீக்கி. உன் சோதனைகளைத் துரத்தி, உன் இருதயத்தைத் தேற்றிக்கொள். இது உறுதியான சத்தியமென்று நம்பு; இதைப் பலத்த நியாயமாகப் பிடித்து, தேவனிடத்தில் போராடு; தினந்தோறும் அதில் சந்தோஷப்படு. இரக்கத்துக்குக் கடனாளியாயிருக்கிறது எவ்வளவோ இன்பம்.

ஏசுவின் இரக்கம் என்னை
நரகத்தினின்று காக்கும்;
ஆதலால் அதுவே என்னை
புகழ்ந்து பாடச் செய்விக்கும்,
மரத்தில் தொங்கினார் ஏசு
அவரால் நீங்கும் என் மாசு.

பிப்ரவரி-மீ 23-உ

'என்னில் அன்புகூர்ந்தார்'

கலாத்தியர் 2:20

பவுல் எப்படிப்பட்டவன்? தூஷணித்தவன், தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினவன், அதற்குச் சேதமுண்டாக்கினவன். இந்தப் பவுலை இயேசுவானவர் நேசித்தாரா? ஆம், 'என்னை நேசித்தார்' என்கிறான். அப்படியானால் இயேசுவின் அன்பு இலவசமானது; மனித சம்பந்தமான எதையும் பற்றினதல்ல. நேசிக்கிறதற்கு காரணம் தேவனில் இருக்கிறதேயொழிய நேசிக்கப்பட்டவனிடத்தில் இல்லை. தேவன் உன்னை நேசிக்கிறதற்கு உன்னில் ஏதோ முகாந்தரம் உண்டாவென்று நீ தேடியிருப்பாய். ஒன்றையும் கண்டுபிடியாமல்போனால், கர்த்தர் சொல்லுகிறதென்ன? 'நான் அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்' என்கிறார். நாம் பாவத்தில் செத்துக்கிடந்தபோது அவர் நம்மை உயிர்ப்பித்தார், ஏனென்றால் அவர் நம்மை நேசித்தார். நம்மை அவர் நேசித்தபடியால், இயேசுவை நமக்கு வெளிப்படுத்தினார். நம்மை அவர் நேசித்தபடியால் தம்முடைய பரிசுத்த ஆவியை நமக்குக் கொடுக்கிறார். அவர் யாரை நேசிக்கிறாரோ, அவர்களை ஒரு போதும் விடமாட்டார். இந்தக் காலையில் இயேசு நம்மை மனப்பூர்வமாய், பரிபூரணமாய், நித்தியமாய்ச் சிநேகிக்கிறார். நம்மிலுள்ள கிருபைகள், நம்முடைய செய்கைகள் இவைகளைத் தள்ளி நம்மை நேசிக்கிறார். பரிசுத்த ஆவியே! நீர் இன்று காலையில் 'இயேசு உன்னை நேசித்தார்; உன்னையே நேசித்தார்' என்று எங்கள் காதுக்குள் சொல்லும். நாம் அவரை நேசிக்கவேண்டாமா? சுகம், ஐசுவரியம், சௌக்கியம்; ஜீவனாகிய இவைகளைவிட அவரை நேசிக்கவேண்டாமா? தாழ்மை, விசுவாசம், உறுதி; வைராக்கியம் ஆகிய இவைகளைக்கொண்டு அவருடைய அன்பின் துதியை நாம் பிரஸ்தாபப்படுத்தினால் எவ்வளவு நல்லது.

தேவனே நின் நேசத்தை
எந்தவிதம் போற்றுவேன்;
எத்தனை தோத்திரத்தை
உமக்குச் செலுத்துவேன்;
அவ்வன்பெனக் கெட்டாது
என் நா அளவிடாது.

'எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்'

கலாத்தியர் 2:20

இயேசு நம்முடைய பிணியாளி. அவர் நமக்காக இந்த உலகத்திற்கு வந்தார். நமக்குப் பதிலாகப் பாடுபட்டு, மரித்தார். நம்முடைய பாவங்கள் அவர்மேல் சாட்டப்பட்டது; அவைகளுக்காக அவர் தண்டனையடைந்து அவைகளை நீக்கிப்போட்டார். தேவநீதி நம்மைச் சபித்தது; இயேசுவோ நமக்குப் பதிலாகச் சாபத்தைச் சகிக்கத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். நியாயப்பிரமாணத்தின் தண்டனை அவர் மேல் சென்றது; நீதிக்குத் திர்ப்தி யுண்டாக்கத்தக்கதை அவர் சரிப்படுத்தினார். இப்போது தேவன் நீதியுள்ளவராய் மாத்திரமல்ல, இயேசுவை விசுவாசிக்கிற ஒவ்வொருவனையும் நீதிமானாக்குகிறவராயும் இருக்கிறார். கடன்சீட்டுக் கிழிக்கப்பட்டும், நமக்கு விரோதமாயிருந்த கையெழுத்துக் கிறுக்கப்பட்டும், எந்தச் சத்துருவும் மேற்கொள்ளப்பட்டுப் போனது, நாம் மீறின நியாயப்பிரமாணத்தைப்பற்றியாவது, நாம் கோபமூட்டின நீதியைப்பற்றியாவது நமக்குக் கிடைக்கவேண்டிய நகரத்தைப்பற்றியாவது நாம் நினைக்கிறோமா? 'இயேசு எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்' என்று நினைக்கக்கடவோம். அவர் நீதிக்குத் திர்ப்திசெய்தார்; நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார்; என் சுபாவத்தைத் தரித்து, என் பேரை வைத்துக்கொண்டு, எனக்குப் பதிலாக தேவனுக்கு மகிமை வரப்பண்ணினார். நான் ஒருபோதும் பாவஞ்செய்யாமல் குறைவின்றி நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதினாலாவது, பாவத்துக்காகத் தண்டிக்கப்படுவதினாலாவது, தேவநாமம் மகிமைப்படுவதைவிட; என் பிணியாளியினுடைய ஜீவனாலும் மரணத்தாலும் அவர் எவ்வளவோ அதிகமாய் மகிமைப்படுகிறார். இயேசுவில் விசுவாசம் வைக்கிற நம்மைத் தேவன் தமது நீதிக்குப் பங்கமில்லாமல் குற்றமற்றவர்களாக்குகிறதே நம்முடைய ஆனந்தம். இந்தச் சொல்லிமுடியாத ஈவுக்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம்.

இயேசு மகா நல்லவர்,
ரத்தத்தால் ரட்சித்தவர்,
அவரன்றி வேறொன்றும்
நாம் அறியோமே என்றும்,
'மனிதன் பாவம் செய்தான்,'
'கெட்டு அழிந்து போனான்'
என்று நீதி சொல்லவே,
'நான் ரட்சிப்பேன்' என்றாரே.

'கிறிஸ்துவே எல்லாமாயிருக்கிறார்'

கொலோசெயர் 3:11

ஆம், இதுதான் தேவ நோக்கம். கிறிஸ்து சகலமுமாயிருப்பார். இந்த நோக்கம் தவறாது. நாம் நீதிமான்களாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுவதில் அவர் சகலமுமாயிருக்கிறார். அவருடைய நாமத்தால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம், பரிசுத்தவான்களாக்கப்படுகிறோம். நாம் பாதுகாக்கப்பட்டு மகிமைப்படுவதில் அவர் சகலமுமாயிருக்கிறார். அவருடைய வல்லமையால் நாம் காக்கப்படுகிறோம். அவருடைய புண்ணியத்தால் 'மோட்சத்தில் பிரவேசிக்கிறோம். நம்முடைய நோக்கம், பிரியம், நம்பிக்கை, எண்ணம், நாம் தேடும் பொருள் ஆகிய சகலமும் அவராகவே யிருக்கவேண்டும். அநேகர் கிறிஸ்துவுக்குப் பதிலாகத் தங்கள் சௌக்கியத்தைப் பார்க்கிறார்கள். அப்பொழுது தேவன் சௌக்கியத்தைப் அப்புறப்படுத்துகிறார். வேறு சிலர் கிறிஸ்துவுக்குப் பதிலாக தங்கள் நற்குணங்களை வைத்துக்கொள்ளுகிறார்கள்; அப்போது விசுவாசம், நம்பிக்கை, அன்பு முதலானவை அவர்களுக்கு மறைக்கப்பட்டுப்போகின்றன. நமக்கும் தேவனுக்கும் நடுவே இயேசு தவிர வேறே ஒருவரும் இருக்கக்கூடாது. பாவத்தையும், நாம் பெற்றுக்கொண்ட தேவ கிருபையையும், நம்முடைய நற்கிரியைகளையும் நாம் தூரவைத்துப்போட்டு, இயேசுவின் நாமத்திலே மாத்திரம் அவருக்குக் கனமுண்டாக நாம் அங்கீகரிக்கப்படவும், ஆசீர்வாதம் பெறவும், கனமடையவும் எதிர்பார்க்கவேண்டும். கிறிஸ்துவே நாம் ஜெயமடையப் பிரயோகிக்கும் ஆயுதம். அவரால் நாம் சத்துருக்களை மேற்கொள்ளுகிறோம். அவர்தான் நமக்கு ஆதாரம்; அவரைக் கொண்டு நாம் தேவனிடத்தில் சித்திபெறலாம். அவர்தான் நம்முடைய நீதி; அவரால் நாம் நீதிமான்களாகிறோம். அவர் நம்முடைய சமாதானம்; அது நம்முடைய ஜீவகாலத்திலும் மரணத்திலும் நம்மை ஆதரித்துத் தேற்றுகிறது. நமக்குத் தேவையானதெல்லாம், தேவன் நமக்குக் கொடுக்கக் கூடியதெல்லாம் கிறிஸ்துதான். அவர் நமக்குச் சூரியன், நமது கேடகம், நமது சந்தோஷம், முடிவில்லாத பங்கு.

உமதன்பை என்னில் ஊற்றும்
என் ஆவி உம்மைப்பற்றும்;
உம்மையே எனக்குத் தாரும்;
எனக்கெல்லாமாயிரும்;
என்றும் நான் உம்முடையவன்,
உமதன்பால் ஊழியன்.

பிப்ரவரி-மீ 26-உ

'நீங்கள் என்னைக் கனவீனம் பண்ணுகிறீர்கள்'
யோவான் 8: 49

இது கிறிஸ்து நம்மைக்குறித்துச் சொல்லுகிற முறைப்பாடு. இதைச் சற்றே விசாரிப்போம். அவர் நம்மை நேசிக்கிறபடியால் நம்முடைய நன்மையைத் தேடி, நமது மேல் கோபமாயிருக்கிறதில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லுகிறார். நாம் பொறுதியில்லாமல், துன்பத்திலும் வருத்தத்திலும் முறையிடும்போதெல்லாம், நமக்குப் பிரியமில்லாதது சம்பவிப்பதினால் மனவருத்தம் அடையும்போதெல்லாம், அவருடைய வாக்குத்தத்தையும் செயலையும் குறித்து, அவிசுவாசங்கொள்ளும்போதெல்லாம் நாம் அவரைக் கனவீனப் படுத்துகிறோம். அவர் கொடுக்கும் நன்மைகளைச் சாத்தானுடைய ஊழியத்தில் பிரயோகிக்கும்போது, அவர் வல்லமையையும் தயவையும் மட்டுப்படுத்தும்போது, அன்பு வைராக்கியம் குறைந்து செய்யவேண்டியதைச் செய்யாமற்போகும் போது, தேவகிருபையின்மேல் சாராமல், நம்முடைய ஊழியத்தின்மேல் சாரும்போது, எப்போதும் சகலத்துக்கும் அவரை நோக்காமல் மற்றவர்களிடத்தில் ஓடும்போது, அவரைக் கனவீனப்படுத்துகிறோம். இயேசுவைக் கனவீனப்படுத்துவது பெரிய பாவம்; அது ஆத்துமாவைச் சாகடித்து, அந்தகாரப்படுத்தி, நிர்ப்பந்தமாக்கிப்போடுகிறது. இந்தக் குற்றத்தை நாம் சரியாய் எண்ணி, தேவனுக்கு முன்பாகக் கண்ணீர் விடவேண்டும். அதற்காக மெய்மனஸ்தாபப்பட்டு அதை மன்னிக்கக் கேட்கவேண்டும். நன்றியறிதலாலும், பொறுமையினாலும், விசுவாசத்தினாலும், அன்பினாலும் சாந்த குணத்தினாலும், உத்தம மனஸ்தாபத்தினாலும், வைராக்கியத்தினாலும் இடைவிடாமல் அவர் மகிமையை நாடி, அவரைக் கனப்படுத்தப் பார்ப்போமாக. அப்போதுதான் ஜீவனோடிருக்கும்போதும், எப்போதும் அவரைக் கனப்படுத்துவது நமக்குச் சந்தோஷமாயிருக்கும்.

லோகத் தொல்லையினின்று
என் ஆத்துமாவை இழும்;
'உன் தேவன் ரட்சிப்பென்று'
சொல்லும் என் ஆவி வாழும்;
நான் உம்மை விடாமலே
என்றும் என்னைக் காருமே.

'எல்லாம் உம்மால் உண்டானது'

1 நாளாகமம் 29:14

எந்த நல்ல ஈவும், நிறைவுள்ள எந்த வரமும் உயரத்திலிருந்து வருகிறது. தேவனை விட்டால் சிருஷ்டிகள் வெறுமையான பாத்திரங்கள்; வற்றிப்போன கிணறுகள்; மோசம் போக்குகிற ஓடைகள். நன்மை எல்லாம் உன் தேவனிடத்திலிருந்து உனக்குப் பாய்கிறது. எந்த ஈவும் கிறிஸ்துவினிடத்திலிருந்து வருகிறது. அவர் இலவசமாய்க் கொடுத்தாலும், அதை உனக்கென்று சம்பாதிக்கப் பெருமூச்சுவிட்டு வேர்த்து இரத்தஞ் சிந்தினர். சகல நன்மைக்கும் அவரையே ஊற்றாகப் பார். அவருடைய பிராயச்சித்தந்தான் சகலமும் உன்னிடம் பாய்கிறதற்கு வாய்க்கால் என்று எண்ணு. சரீர நன்மைகளானாலும், ஆத்தும நன்மைகளானாலும் அவைகளைக் கொடுக்கிறவர் அவரே. அவைகளை அனுபவிக்கவும், அவருடைய மகிமைக்கென்று அவைகளைப் பிரயோகிக்கவும் பெலனளிக்கிறவர் அவரே. எந்தக்காரியமானாலும், அதை அவர்தான் நடத்துகிறார். 'உங்களுக்குள் எரிச்சல் அடையவேண்டாம், நீங்கள் அல்ல தேவன்' என்று யோசேப்பு தன்னுடைய சகோதரருக்குச் சொன்னான். ஆதலால் ஜெபத்திலே அவர்பேரில் உன் பாரத்தைப்போட்டு, அவரைத் துதித்து, உன் மனசை அவரிடமாய்த் திருப்பு. யோபு, ஏலி, தாவீது; பவுல் முதலானவர்களைப்போலச் சிருஷ்டிகளுக்கு மேலாகத் தேவ கரத்தைப் பார். அசையாத நம்பிக்கையின் மூலமாய், பிள்ளையடைவான பக்தியாய், அவருடைய வார்த்தையை, அவருடைய வல்லமையை, அவருடைய செயலை, அவருடைய அன்பைப் பற்றிக்கொள். சகலமும் அவரால் நடக்கிறதென்று நினை. அவரை நோக்கி, அவரோடே நடப்போமேயானால், நன்மையானதை நமக்குத் தருவார். அதோடு ஆசீர்வாதத்தையும் கூட்டுவார். எந்த நல்ல ஈவும், நிறைவுள்ள எந்த வரமும் உயரத்திலிருந்து வருகிறது; இயேசுவினிடத்திலிருந்து வருகிறது.

நம்மைத் தம்மிடம் உயர்த்த
அவர் பட்ட தனந்தம்.
நமக்காகச் சம்பாதித்த
ஈவு மா நல்லானந்தம்.

பிப்ரவரி-மீ 28-உ

'சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்'
வெளிப்படுத்தின விசேஷம் 1:18

இயேசு நமக்குப் பதிலாக ஒருவிசை மரித்தார். இப்பொழுது தேவனுடைய வலதுபாரிசத்தில் ஜீவனோடிருக்கிறார். அவர் ஜீவனுக்கு ஊற்று, அவர் பிழைத்திருக்கிறபடியால், அவருடைய ஜனங்களும் பிழைப்பார்கள். தமக்கு அருமையான குடும்பம் புது இருதயம் அடைந்து, பரிசுத்தமாக்கப்பட்டு, காக்கப்பட்டு மகிமை அடையும்போது, அவர் தம்முடைய ஆத்தும வருத்தத்தின் பலனைக் காண மோட்சத்தில் பிழைத்திருக்கிறார். அவர்களுக்காகப் பரிந்துபேசி, அவர்களுக்காகப் பரிதாபப்பட்டு, அவர்கள்மேல் ஆசீர்வாதங்களைப்பொழிய உயிரோடிருக்கிறார். அவர்களுக்காக விழித்து. அவர்களுக்கு யோசனை சொல்லி நடத்தி, எப்போதும் அவர்களை ரட்சிக்க அவர் உயிரோடிருக்கிறார். தம்முடைய பிதாவின் நோக்கத்தை நிறைவேற்றி, தம்முடைய சபைக்கடுத்த காரியத்தை நடத்தி, அவர்களை என்றும் தம்மோடு மகிமைப்படுத்த உயிரோடிருக்கிறார். 'கிருபையுள்ள இரட்சகரே! பூமிக்குரிய சிநேகிதர்கள் மாண்டுபோவார்கள், நீரோ பிழைத்திருக்கிறீர். இவ்வுலக சுகங்கள் மறைந்துபோம். உம்முடைய இருதயத்தில் எங்களுக்கு இடமுண்டு. உம்முடைய பிதாவின் சமுகத்தில் நீர்தான் எங்கள் சிநேகிதன்.' மரித்துப்போன இயேசு பிழைத்திருக்கிறார். அவர் என்றும் பிழைத்திருப்பார். மரணத்துக்கும், பாதாளத்துக்கும் திறவுகோலுடையவராய் இருக்கிறார் என்று எப்பொழுதும் நினைப்போமாக. அவரைப்போல் தேவனுக்கும், பரிசுத்தத்திற்கும்; நாம் இந்த உலகத்தில் அசட்டை பண்ணப்பட்டவர்களாய் ஜீவனம் பண்ணுவோமேயானால் எவ்வளவு பாக்கியம். விசுவாசத்தினால் அவர்பேரிலும், இனிமையான பரிசுத்த ஐக்கியத்தினால் அவரோடும், நாம் ஜீவிப்போமேயானால் எவ்வளவு பாக்கியம்.

> அவர் பிரதான பாவியையும்
> ஏற்று நேசிக்கிறார்;
> பாவியின் நேசரின்பமும்
> காத்து ரட்சிக்கிறார்.

'உலகத்தில் அன்புகூராதிருங்கள்'
1 யோவான் 2:15

உலகமாவதென்ன? ஒரு நிழல், மாய்கை, தேவனுக்குச் சத்துரு. அது நமக்கு என்ன செய்யும்? நம்மை மயக்கும், மோசம்போக்கும், கொஞ்சக்காலம் நமக்கு இன்பத்தைத் தரும், கடைசியில் தேள்போல் கொட்டும். அது சத்துரு இருக்கும் தேசம். நாம் அதன் வழியாய்க் கடந்துபோகவேண்டும். அதில் வாசம்பண்ணுகிறவர்களோடு நாம் நெருங்கிச் சகவாசஞ்செய்யலாகாது. அது நம்முடைய ரட்சகரைச் சிலுவையில் அறைந்தது. அது நம்முடைய தேவனுக்கு விரோதமாகக் கலகஞ்செய்ய எழும்பி நிற்கிறது. அது இச்சகம் பேசி. நம்முடைய சகோதரரில் அநேகரை மோசம்போக்கிச் சேதப்படுத்திவிட்டது. அது நியாயத்தீர்ப்பு நாளில் அக்கினிக்கென்று வைக்கப்பட்டிருக்கின்றது. நாம் சீக்கிரம் அதைவிட்டுப் போகவேண்டும். இன்றைக்கே அதைவிட்டுப் போகவேண்டி வந்தாலும் வரும். நம்முடைய ஜீவன் எப்படிப்பட்டது? 'கொஞ்சக்காலம் தோன்றிப் பின்பு தோன்றாமல்போகிற புகையைப்போல் இருக்கிறதே.' நம்முடைய அன்பையும் நம்முடைய சிந்தையையும் பரத்தின்மேலும் இயேசுவின் மேலும் வைப்போமாக. ஒவ்வொருநாளும் மன உற்சாகத்துடன் 'பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை' என்று சொல்லத்தக்க கிருபையைத் தேடுவோமாக. 'அருமையான ரட்சகரே! எங்கள் கவனத்தை நீர் இழுத்துக் கொள்ளும், எங்களுடைய பாசத்தை உமது பேரில் வைக்கப் பண்ணும்; எப்பொழுதும் எங்களுக்கு எல்லாவற்றிலும் எல்லாமுமாயிரும்; ஒவ்வொருநாளும் "இயேசுதான் எல்லாம்," "இயேசுதான் எல்லாம்" என்பது எங்களை நடத்துகிற முக்கிய வாசகமாயிருக்கட்டும்.' நம்முடைய அன்புக்கு அவரே பாத்திரர்; அதைச் சம்பாதிக்கவே மரித்தார். அதைச் சம்பாதிக்கவே பிழைத்திருக்கிறார்.

லோக நேசத்தை விட்டு
என் பாசத்தை நீரெடும்;
மனசை வானில் நட்டு
நான் நடக்கச் செய்திடும்.

'உன் சிருஷ்டிகரே உன் நாயகன்'

ஏசாயா 54:5

இன்பமும் உறுதியுமானவர்க்கு ஆச்சரியமான தாழ்மை; சகலத்தையும் சிருஷ்டித்த இயேசு என் நாயகனு? அவர் எனக்கு மிகவும் கிட்டின அருமையான இனத்தானு? ஆம், அவர்தான் உன்னை எல்லாரிலும் அதிகமாய் நேசிக்கிறூர். அவர் உனக்கு மிகவும் கிட்டினவர்; உன் நன்மையை அதிகமாய் விரும்புகிறவர். அவர் மணவாளன், நீ மணவாட்டி அவர் உன்னைத் தமக்கென்று நியமித்துக்கொண்டார்; இப்போது உனக்கு வேண்டியதெல்லாவற்றையும் சம்பாதித்திருக்கிறூர். நித்திய வாசஸ்தலமொன்றை உனக்கு ஆயத்தப்படுத்தப் போயிருக்கிறூர். அங்கே நீ அவரோடு வாசம்பண்ணி, அவருடைய நேசத்தை ருசித்துக்கொண்டிருப்பாய். இந்தச் சம்பந்தம் உள்ளபடியே இருக்கிறது. அவர் உன்னைத் தன் அன்பான மனையாட்டியாகவே எண்ணுகிறூர். அவர் உன் பர்த்தாவென்று நீ நித்தம் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டுமென்பதே அவர் விருப்பம். அவரை எல்லாவற்றுக்கும் மேலாக நேசி; நம்பிக்கையோடு அவரை நோக்கிக் கூப்பிடு; அவர் வருகைக்கு வாஞ்சையோடு எதிர்பார்த்திரு. தம்முடைய பரிசுத்தவான்களால் மகிமைப்படவும், விசுவாசிகளால் அதிசயப்படவும், தக்கதாக வருவார். ரத்தம் சிந்திச் சம்பாதித்த தமது நேச மனையாட்டியை ஒருபோதும் மறக்கமாட்டார். அந்த மனையாட்டியைப்பற்றி கவலையற்றிருக்கமாட்டார். அந்த மனையாட்டி செய்யும் விண்ணப்பங்களைக் கேட்டும் சும்மாயிருக்கமாட்டார். அவர் அன்பு மட்டற்றது. அது முழுவதும் உன் மேலேயே வைக்கப்பட்டிருக்கிறது. என்றும் அது உன் மேலேயே நிலைத்திருக்கும். அவர் ஒரே மனசுடையவர். அதை ஒருவரும் மாற்றக்கூடாது. உன்னை நேசித்தவர் முடிவுமட்டும் உன்னை நேசிப்பார்.

ஏசென் மேய்ப்பர் நேசன் பர்த்தா
என் ஜீவனின் பாதை கர்த்தா,
என் ஆசான் என் தீர்க்கன்பதி,
ஏற்றிடும் என்னுட துதி.

'பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்'

யாக்கோபு 4:7

எந்த விசுவாசியண்டையிலும் பிசாசு வருவான்; அவன் நமக்குச் சத்துரு; நமக்குத் தீமைசெய்ய எப்போது சமயம் வாய்க்குமென்று காத்திருக்கிறான். முதலாவது பாவஞ் செய்யத் தூண்டிவிட்டு, பிறகு பாவஞ்செய்ததாகக் குற்றஞ் சாட்டுவான். எதையும் மாறுட்டமாய்க் காண்பிப்பான். உலகத்தைப் பகட்டாகவும், பாவத்தை அற்பமாகவும், மரணத்தைப் பயங்கரமாகவும் காட்டப்பார்க்கிறான். தேவனைக்குறித்து அவர் அன்பற்றவராகக் காட்டி, அவர் வார்த்தையைப் புரட்டி, விசுவாசிகளை அடிமைகளாக்குகிறான். அவன் அக்கினி அம்புகள் எவ்வளவோ பயங்கரமானவை. மிகவும் தூஷணமான, அருவருப்பான, இயல்புக்கு விரோதமான நினைவுகளை மனசில் நுழைத்து, பிறகு அவைகளைப்பற்றியே நம்மைக் குற்றஞ்சாட்டி, அவைகளைக்கொண்டு நம்முடைய ஆத்துமங்களை நோகப்பண்ணுகிறான். நாம் விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நிற்கவேண்டும். தேவன் நமக்கு எப்படிப்பட்டவர் என்பதையும், கிறிஸ்து நமக்காகச் செய்ததையும், அவர் நமக்குக் கொடுப்போமென்று வாக்குரைத்ததையும், சீக்கிரத்தில் சாத்தானை நம்முடைய காலின்கீழ் நசுக்கிப்போடுவார் என்பதையும் நாம் விசுவாசித்து, அவனை எதிர்க்கவேண்டும். இந்தப் பொல்லாங்கன் நமதுமேல் அடையும் ஜெயம் கொஞ்சக்காலம் இருக்கும். ஏனென்றால் ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினாலும், அவர் சாட்சியாகிய வசனத்தினாலும் நாம் அவனை மேற்கொள்ளுவோம். இயேசுவை நோக்கிப் பார், உன் தேவனை நோக்கிக் கூப்பிடு. அவன் உன்மேல் சுமத்தும் குற்றங்களுக்கு எதிராக இயேசுவின் ரத்தத்தையும் நீதியையும் வை. அவன் வல்லமையுள்ளவன்தான்; இயேசுவோ சர்வவல்லவர். விசுவாசமென்னும் இந்த கேடகத்தைப் பிடித்துக்கொள்வாயானால், பொல்லாங்கன் எய்யும் அம்புகள் அனைத்தையும் அவித்துப்போடுவாய்.

எங்கும் சோதனை வருத்தம்
பாவக் கண்ணிகளிருந்தும்;
நின்சமுகம் என்னை ஆற்றும்
மோசத்திலென்னைக் காப்பாற்றும்.

கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்'

எபிரெயர் 12:28

துன்பங்களில் நம்மை ஆதரிக்க, நமக்கு நித்தம் கிருபை வேண்டும். நம்முடைய கெட்ட சுபாவத்தைக் கீழ்ப்படுத்த, நம்முடைய குணங்களைச் சுத்தமாக்க, சோதனை காலத்தில் நம்மைத் தற்காக்க, நம்முடைய அனுபோகத்தைப் பலப் படுத்த, மற்றவர்களுக்கு நம்மைப் பிரயோஜனமுள்ளவர்க ளாக்க முடிவுபரியந்தம் நம்மை நிலைநிற்கப்பண்ண, நம்பிக்கை யோடும் சந்தோஷத்தோடும் நாம் மரிக்கும்படிசெய்ய, நமக்கு நித்தம் தேவ கிருபைவேண்டும். நம்முடைய தேவன் சகல கிருபையின் தேவன். இயேசு கிருபை நிறைந்தவர்; அவர் அந் தக் கிருபையை கொடுக்கிறவர். கிருபையை கொடுக்கிறதாக வாக்களித்திருக்கிறார். வந்து அதை வாங்கிக்கொள்ளச் சொல் லுகிறார், இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையில் சேருங்கள். அவருடைய கிருபை நமக்குப் போதும். நாம் கிருபை பெறாவிட்டால், மாயமுள்ளவர்களாய், உயிரற்றவர்களாய் விழுந்து கெட்டுப்போவோம். நாம் இயேசு வைப் பார்த்து நம்மைப் பலப்படுத்தவும், பரிசுத்தமாக்கவும், பிரயோஜனமுள்ளவர்களாக்கவும் கிருபை தரவேண்டுமென்று அவரைக் கெஞ்சுவோமாக. நம்முடைய சுய பலத்தைக் கொண்டு நாம் ஒன்றும் செய்யக்கூடாது; கர்த்தருக்கென்று பிழைக்கக் கர்த்தர்தான் கிருபை தரவேண்டும். நாம் செய் கிற நன்மை யாவுக்கும் நம்மோடிருக்கும் தேவ கிருபையே காரணமென்று சொல்லக்கடவோம். அந்தக் கிருபை நமக்கு இலவசமாய்க் கிடைக்கிறது. இந்தக் காலையில் இலவசமாய்க் கிடைக்கிறது. வந்து பெற்றுக்கொள்ளுங்கள் என்று நம் முடைய தேவன் கூப்பிடுகிறார். ஆதலால் கிருபாசனத் தண்டை தைரியமாய்வா, நீ இரக்கம்பெறுவாய். இந்த நாளைக்கு உனக்கு உதவி செய்யவேண்டிய கிருபையும் அடை வாய்.

நின் வறுமை காண்பியும்
பழமையை அகற்றும்;
என்னை உம்மில் ஸ்தாபியும்,
என் ஆவி உம்மைப் போற்றும்.

'விசுவாசமுள்ளவனயிரு'

மாற்கு 5:36

அதாவது; தேவனுடைய வார்த்தையை அவருக்குச் சொல்லு. அவர் யோசித்துச் சொன்னுரென்றும், தம்முடைய வார்த்தையைக் காக்கிறவரென்றும் நம்பு. அப்போ உன் பயமெல்லாம் பறந்துபோம்; உனக்குத் தெரிந்த வார்த்தைகளைக் கொண்டு தேவன் உன்னேடு பேசுகிருர். உனக்குத் தேவையானதெல்லாம் தருவேனென்கிருர். தம்முடைய உண்மைக்குப் பழுதுவராமல், உன் இருதயத்தை ஆறுதல் படுத்துவார். நீ விசுவாசியாவிட்டால் தேவனைப் பொய்யனுக்குகிருய். உன் இருதயத்தின்மேல் அந்தகாரத்தை வருவிக்கிருய். உன்னை ஜெயிக்கச் சாத்தானுக்கு இடம் கொடுப்பாய். அநேக பயங்களும், சந்தேகங்களும், எண்ணங்களும் உன்னை வருத்தப்படுத்தும், இது ஆச்சரியமா? தேவவாக்கை நம்பாமல் போகிறதைவிட, அவருக்கு மரியாதைக்குறைவு செய்யக்கூடுமோ? ஒரு வேளை வாக்குத்தத்தங்கள் உனக்குச் செய்யப்பட்டதாவென்று கேட்பாய். ஆம், விசுவாசிக்கிற எவனுக்கும், நீ விசுவாசித்தால் உனக்கும்கூடத்தான். உன் இருதயத்தில் விசுவாசத்தை உண்டுபண்ண ஆவியானவரைக் கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிருர். விசுவாசிக்கிறது வருத்தமென்ருவது, அவிசுவாசம் பலத்ததென்ருவது முறையிடாதே. உன் தேவனண்டை போய் முறையிடு. கர்த்தாவே! என் விசுவாசத்தை அதிகரிக்கப்பண்ணுமென்று கெஞ்சு. கிருபை நிறைந்த தகப்பன் வார்த்தையாக அவருடைய வார்த்தையை எண்ணி அதை விசுவாசி.

உம்மோடொட்டிக்கொள்வேனுக.
ரத்தம் சிந்தும் உம்முட
பக்கத்திலே சேர்வேனுக.
கடைசியில் என்னுட
விசுவாசம் உம்மில் தேற
செய்வீர் நான் இளைப்பாற.

'நீ பயப்படாதே'

ஏசாயா 41:10

கர்த்தருடைய ஜனங்கள் பயப்படுகிறதுண்டு. தேவனோடு தங்களுக்கிருக்கும் சம்பந்தத்தையும், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் தங்களுக்குரியனவென்பதையும் அவர்கள் உணருகிறதுமில்லை. எப்போதும் தேவனுடைய சன்னிதியில் இருக்கிறோமென்று அவர்கள் ஞாபகத்தில் வைக்கிறதுமில்லை. தேவனோ கிருபை நிறைந்தவரானதால், அடிமைக்குரிய பயத்தை விட்டுவிட அவர்களுக்குச் சொல்லி, தம்மில் நம்பிக்கைகொள்ள அவர்களைத் தைரியப்படுத்துகிறார். அடிமைக்குரிய பயம் அவரைக் கனவீனப்படுத்துகிறது. பிள்ளைக்குரிய விசுவாசம் அவரை மகிமைப்படுத்துகிறது. நாம் அவரை நம்புகிறதுதான் அவருக்குப் பிரியம். பயந்து சந்தேகத்துக்கு இடங்கொடுப்போமானால் அவரைத் துக்கப்படுத்துவோம். பாவம் ஒன்று தவிர வேறொன்றுக்கும் நாம் பயப்படவேண்டியதில்லை. நாம் பாவத்துக்குப் பயந்து, பரிசுத்தத்தைப் பின்தொடர்ந்து, தேவனுக்கும் மனிதனுக்கும் முன்பாகக் குற்றமற்ற மனச்சாட்சியைக் காத்துக்கொண்டு அவருடைய வசனத்தைப் பற்றினவர்களாய் திறந்திருக்கும் அந்த ஊற்றண்டையில் போய், நித்தம் பானம்பண்ணி, தேவனோடு ஐக்கியமாகுதலைக் கவலையோடு தேடுவோமானால், நாம் பயப்படவேண்டியதேயில்லை. தேவனை அறியாத உலகத்தார் கவலைப்பட்டு, அவநம்பிக்கைக்கு இடங்கொடுத்து அடிமைகளைப்போலப் பயப்படட்டும். நீயோ அன்பனே! ஜீவனுள்ள தேவனை எப்போதும் எவ்விடத்திலும் நம்பியிரு. தேவனை நம்பு, அவருக்குக் காத்திரு, அவரிடத்தில் நன்மை வருமென்று எதிர்நோக்கியிரு, அவரை நெருங்கிப் பின்பற்றப் பார்; உனக்குத் தேவையானதெல்லாம் கிடைக்கும்; உனக்குச் சேதமுண்டாக்குவதெல்லாம் கிடைக்கும்; உனக்குச் சேதமுண்டாக்குவதெல்லாம் அவமாய்ப்போம். பயப்படாதே; விசுவாசமாய் மாத்திரம் இரு; இயேசு உன்னோடிருக்கிறார்; உன்னைக் காப்பாற்றுவார்; உன்னைக் காப்பார்; ஆதலால் பயப்படாதே.

கர்த்தரென் சமீபமானால்
நான் பயப்படுவதேன்?
அவர் என் தேவனானால்
நான் வீணில் மலைப்பதேன்?
ஓடு கவலை பயமே
அஞ்சலென்பார் ஜெயமே.

'தேவனுக்குப் பாத்திரராய் நடக்கவேண்டும்'
1 தெசலோனிக்கேயர் 2:11

பரிசுத்த ரட்சகரைச் சொந்தமாக்கிக்கொள்ளவும், பரிசுத்த சுவிசேஷத்தை விசுவாசிக்கவும், பரிசுத்த தன்மையைப் பெற்றுக்கொள்ளவும், பரிசுத்தமான வழியில் நடக்கவும், தேவன் நம்மை அழைத்திருக்கிறார். இலவசமான கிருபையின் எத்தனங்களும், தேவன் அன்பினால் செய்த வாக்குத்தத்தங்களும், பரிசுத்த ராஜ்யத்துக்குரிய கற்பனைகளும், நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு நம்மைப் பரிசுத்த ஜனமாக்க வேண்டுமென்று பார்க்கிறது. நாம் தேவனுடைய நடத்தையைப் பின்பற்றவேண்டியவர்கள். அவர் சத்துருக்களைப் போஷித்து, தமது ஜனங்களை நேசித்து, தமது மகிமையான தன்மைக்கு ஒத்தபடி நடக்கிறவர். உன்னை வழிதப்பப்பண்ணத் தப்புபதேசங்கள் போதிக்கப்படும்; பொல்லாங்கனுடைய தப்பான வழியில் நீ நடந்து உறுதியைவிட்டுப் பிசகாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். உங்கள் பேரை நினையுங்கள், நீங்கள் தேவனுடைய பிள்ளைகள்; உங்களுடைய சிலாக்கியங்களைப் பாருங்கள், நீங்கள் இயேசுவோடு ஐக்கியப்பட்டவர்கள், பரிசுத்த ஆலயங்கள், பரிசுத்த தேவபக்தருக்கும் தேவதூதருக்கும் கூட்டாளிகள், உங்களுக்கு வைக்கப்பட்டிருக்கும் பலனை நோக்குங்கள்; நீங்கள் மகிமையான சிம்மாசனத்தில் உட்காரப்போகிறவர்கள், இரத்தத்தால் கொள்ளப்பட்ட கிரீடத்தை நீங்கள் தரித்துக்கொள்ளப்போகிறவர்கள். நீங்கள் ஏகோவாவின் ஸ்திதிகளை என்றும் பிரஸ்தாபம் பண்ணுகிறவர்கள். தேவனுக்கும் பாத்திரமாய் நடந்துகொள்ளுங்கள். உங்களுடைய தன்மைக்கும், பேருக்கும், நோக்கத்துக்கும்; சரியாய் நடந்துகொள்ளுங்கள். தேவனோடு நடவுங்கள், இயேசுவைப்போல் நடவுங்கள். பயபக்தியாய் நடவுங்கள், அன்புள்ளவர்களாய் நடவுங்கள். பகலில் நடக்கிறவர்கள்போல் யோக்கியமாய் நடவுங்கள். அப்போது உங்கள் மார்க்கத்தை அலங்கரித்து. உங்களுக்குத்தானே சமாதானத்தையும் ஆறுதலையும் சம்பாதித்துக்கொள்வீர்கள்.

தேவன் மனிதர் முன்னுக்கு
என் மனசும் நடக்கையும்
சுத்தமென்று சொல்பவர்க்கு
எந்த நலமும் நிச்சயம்.

‘எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன்’
எரேமியா 32:10

நிலையற்ற ஏழை, எப்பிராயீமைக் கிருபையுள்ள தேவன் இப்படி அழைக்கிறார். நாம் கிருபையால் பரம குடும்பத்தில் சேர்ந்து, ஆவியினால் போதிக்கப்பட்டு, இயேசுவோடு ஐக்கியப் பட்டிருப்போமானால், தேவன் நம்மை அவர் மூலமாய்ப் பார்க்கிறார். அவர் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக நம்மை முன்குறித்தபடியால், எண்ணிய காரியங்களை முடிந்து போனதாகப் பாவிக்கிறார். அவர் நமக்குத் தரிப்பித்த அழகினால் நாம் அழகுள்ளவர்களாகிறோம். அவர் நமதுமேல் வைத்த அன்பு ஆச்சரியமானது. உங்களைத் தொடுகிறவன் தம்முடைய கண்ணின் கறுப்பு விழியைத் தொடுகிறான் என்கிறார். நமக்கு நன்மை செய்கிறது அவருக்குப் பிரியமானபடியால், நம்மைக் காக்கத் தேவதூதர்களுக்குக் கற்பிக்கிறார். ஒருவரும் நம்மைச் சேதப்படுத்தவொட்டார்; ஒருவராலும் நமக்குச் சேதம் நேரிடாதபடி இரவும் பகலும் தாமே நம்மைக் காப்பாற்றுகிறார். நாம் இயேசுவில் நிலைத்திருப்போமாக. இந்தக் கிருபையுள்ள தேவனோடு ஐக்கியமாயிருப்போமாக. கர்த்தரை அறிந்துகொள்ளத் தொடர்ந்து போவோமாக. எக்காலமும் அவரை நம்பி எப்போதும் அவரண்டை காத்திருப்போமாக. நம்மில் ஒவ்வொருவரையும் அருமையான குமாரனென்றும், பிரியமான பிள்ளையென்றும் அழைக்கிறார் என்று நாம் சொல்லி, அதைப்பற்றி விசேஷமாய்ச் சந்தோஷங்கொள்வோமாக. அப்படி அழைக்கிறது மாத்திரமல்ல, நம்மை அப்படி நடத்துகிறார். தமது பரிசுத்த வசனத்தால் கூப்பிடுகிறார். நாமும் அவரைப் பிதாவென்றழைத்து, நமக்கு வேண்டிய சகலத்திற்கும் அவரையே நோக்குவோமாக. அப்போதுதான் அவரைக் கனப்படுத்துவோம், சாத்தானை மேற்கொள்வோம், சமாதானத்தை அனுபவிப்போம். தேவன் நமது பிதா, நமது பிதாதான் தேவன்.

கர்த்தாவே! நான் உம்முடையோன்
என்று சொல்லக்கூடுமானால்,
அப்பா பிதாவென்றழைப்போன்
என்ற வரம் ஈவும் என்பால்.

அவர் போகவேண்டுவதில்லை'

மத்தேயு 14:16

எத்தனையோ காரியங்கள் நம்மை இயேசுவை விட்டுத் துரத்தப் பார்க்கிறது. நாம் அவரை விட்டுப் போகவேண்டியதில்லை. நமக்கு வேண்டியதெல்லாம், சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் வேண்டியதெல்லாம், இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டியதெல்லாம் அவரிடம் உண்டு. அவர் கிருபையையும் மகிமையையும் அளிக்கிறார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு யாதொரு நன்மையுங் குறைவுபட வைக்கமாட்டார். நம்மை அழைத்துத் தம்மண்டைக்கு நம்மை இழுத்துக்கொள்ளுகிறபடியால், நாம் தம்மோடிருக்கவேண்டுமென்று விரும்புகிறார்; அவரைவிட்டுப் பிரியத்தக்க சோதனை நமக்கு நேரிட்டால், நாம் யாரண்டைக்குப் போவோம்? நமக்கு வேண்டியதை அவர் தருவார்; எந்தத் துன்பத்தையும் நமக்கு அனுகூலமாக்குவார்; எந்த வருத்தத்தையும் மேற்கொள்ளச் செய்வார்; தமது அன்பினால் நம்மை பாக்கியசாலிகளாக்குவார். உலக இன்பம் உன்னைக் கெடுக்கப்பார்க்கும்; சாத்தான் உன்னைத் துரத்தப்பார்ப்பான்; உள்ளான கேடு உன்னை அலையும்படி தூண்டிவிடும். நீ இன்றைக்கு இயேசுவுக்குச் சமீபமாயிரு; அவரைப்பற்றி நினை; அவரை நோக்கிப்பார்; அவரைப் பார்த்துக் கெஞ்சு; அவரோடு கலந்து பேசு; அவரை உன் கூட்டாளியும் சிநேகிதனும் தேவனுமாக்கிக்கொள். இயேசு உன்னோடிருந்து உன்னை ஆசீர்வதித்தாலொழிய, உனக்குச் சரியான பாக்கியமும் கிடையாது; நிலையுள்ள சமாதானமும் அகப்படாது. அவர் உனக்கு அமைதலைத் தரும்போது, உன்னை வருத்தப்படுத்துவார் ஒருவருமில்லை. நீ அவரை விட்டு அலைந்து திரிவாயானால், மற்றவர்களிடம் போவாயானால், கீழானவர்களின்பேரில் உன் ஆசைகளை வைப்பாயானால், நீ போக்குச் சொல்ல இடமிராது. நீ அவரைவிட்டுப் போக வேண்டியதே யில்லை. அவர்தான் சகலமும்; அவரிடத்தில் சகலமும் உண்டு; அவர் சகலமும் தருவார். அவருடைய வார்த்தையை மாத்திரம் நம்பு; உன் குறைவெல்லாம் நீங்கிப் போகும்.

நான் அவரிலே நடந்து
மற்ற யாவையும் துறந்து,
இயேசுவின் சிலுவை நீங்க
வேறொன்றையும் தேடேன் வாங்க.

'இவருக்குச் செவிகொடுங்கள்'

மத்தேயு 17:5

இயேசு தம்முடைய வசனத்தில் நம்மோடு பேசுகிறார். அவருடைய மனசிலுள்ளதெல்லாம் நமக்குச் சொல்லுகிறார். பிதாவானவர் சொல்லுகிறதற்குச் செவிகொடுங்களென்று அவர் கட்டளையிடுகிறார். அவர் பல காரியங்களை நமக்குப் போதிக்கிறார். அவர் கற்பிக்கிறார், எச்சரிக்கிறார், நடத்துகிறார், ஆற்றித் தேற்றுகிறார், அவர் அன்பாய் நம்மோடு பேசுகிறார். அவர் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையும் நமது நன்மைக்காகத்தான் அவர் சொல்லும் வார்த்தையைப் பார்த்து கர்த்தராகிய தேவன் பேசுவதை நான் கேட்பேனென்று சொல்வோமாக. சாத்தான், அவிசுவாசம், மாமிசத்துக்குரிய ஞானம் இவைகளுக்கும், மனிதர் முதலானவர்களுக்கும் நாம் செவி கொடுக்கிறதைவிட, இயேசுவுக்குச் செவிகொடுக்கிறது எத்தனை நலம். அவர் சொல்லுகிறதை நம்புவோமாக. அவர் உண்மையைத்தான் சொல்லுவார். அவருடைய வாக்குத்தத்தங்களை உண்மையென்று எதிர்நோக்குவோமாக; அவைகளை நாம் நிறைவேற்றவேண்டுமென்பதே அவருடைய எண்ணம். அவர் கற்பிப்பதைச் செய்வோமாக; அவர் வழிகள் சமாதானம். அவர் விலக்குவதைத் தள்ளுவோமாக; அது நமக்குச் சேதமுண்டாக்குமென்பது நிச்சயம். அவர் சொல்வதைக் கேட்டு, அவருடைய வார்த்தையை ஜெபத்தில் ஞாபகப்படுத்துவோமாக. அவர் சொல்வதைக் கேட்டு நம்முடைய பயத்துக்கும், சாத்தானுக்கும், வீண் தோற்றங்களுக்கும் எதிரிடையாக அதை வைப்போமாக. அவர் சொல்வதைக் கேட்டு எந்த உபதேசத்தையும் அவருடைய வசனத்தோடு ஒத்துப் பார்ப்போமாக. ஒவ்வொரு நாளும் இயேசு சொல்வதைக் கேளுங்கள். கொஞ்ச நேரமாவது அவர் சொல்வதைக் கவனியுங்கள். அவர் சொல்வதைக் கேட்பதுபோல நல்ல காரியம் ஒன்றுமில்லை. மற்ற எவர்கள் சொல்வதையும் நீங்கள் அவ்வளவாய்க் கவனிக்கவேண்டியதில்லை. இயேசு சொல்வதற்குக் கவனத்தோடும், ஜெபத்தோடும், விசுவாசத்தோடும் செவிகொடுப்பீர்களானால், உள்ளபடியே அநேக தீமைகளுக்கு விலகிப் போவீர்கள்.

இயேசு என் தீர்க்கர் வாத்தியார்
நற்போதனைத் தருவார்;
அவர் வாயின் வார்த்தை இன்பம்
இல்லாவிடில் மா துன்பம்;
வானோரைப்போலே நானும்
போற்றுவேன் எக்காலமும்.

'ஆபத்து கிட்டியிருக்கிறது'

சங்கீதம் 22:11

துன்பம் கிறிஸ்தவனுக்குத் தூரமானதல்ல, நெடுங்காலம் தூரமாயுமிராது. இது மனதிற்கு வருத்தத்தைக் கொடுக்கத் தக்கதுதான். ஆனால் கிறிஸ்தவன் இயேசுவைவிட்டுப் பிரிந்து போவதேயில்லை. அவர் நம்மைவிட்டுப் போகிறவரல்ல; துன்பம் நாம் அவரை விட்டுப்போகாமல் தடைசெய்கிறது. அவரை விட்டு அலைந்து திரிவோமானால், நம்மை மறுபடியும் அவரிடத்தில் கொண்டுவருகிறது. அவருடைய அன்பு நிறைந்த இருதயம் அடிக்கிற கையை நடத்தும். நம்முடைய நன்மைக்காகச் சகலத்தையும் நடத்தும்பொருட்டே அல்லாமல், அவர் ஒன்றும் செய்யவும் மாட்டார், ஒன்றுக்கும் இடங்கொடுக்கவும் மாட்டார். துன்பம் சமீபமாயிருக்கிறது; கிருபாசனமும் சமீபமாயிருக்கிறது; வாக்குத்தத்தம் சமீபமாயிருக்கிறது; நம்மைக் குற்றமற்றவர்களாக்குகிறவரும் சமீபமாயிருக்கிறார். துன்பத்தில் தேவன் தம்முடைய கிருபையை மகிமைப் படுத்தி, நம்முடைய இருதயத்தில் தம்முடைய கிரியையைப் பலப்படுத்தி, அதற்குரிய அத்தாக்ஷிகளைத் தெளிவாக்கி, நம்மைச் சந்தோஷத்தாலும், விசுவாசத்தாலும், சமாதானத்தாலும் நிரப்பக்கூடியவர். அப்படி அவரை நோக்கிக் கெஞ்சு; எந்தத் துன்பமும் உன்னைக் கலங்கடிக்கவும், விசுவாசத்தைப் பெலவீனப்படுத்தவும், அவரை விட்டு உன்னைத் தூரத்தவும் செய்யாதபடிக்குப் பார். அவர் சொல்வதைக் கேட்டு அவர் வார்த்தையின்படி நட; 'வருத்தப்படுகிற காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன்; நீ என்னை மகிமைப்படுத்தக்கடவாய்' என்கிறார். 'நான் துன்பத்தில் அவனோடிருந்து அவனை விடுவித்து அவனைக் கனப்படுத்துவேன்' என்றும் சொல்லுகிறார். அவர் சொன்னபடி செய்யாமற் போவாரா? அவர் சொன்னதை நிறைவேற்றமாட்டாரா? இயேசுவை நமக்கு அருமையாக்கும்படிக்கே எந்தத் துன்பமும் அனுப்பப்படுகிறது.

நாம் வசிக்கும் இவ்வுலோகம்
பாழான வனாந்தரம்;
நம்முட ஆத்மாவின் தாகம்
கிருபையால் அவாந்தரம்;
பக்தர்க்கு வேண்டியதெல்லாம்
அவரிலேதான் உண்டாம்.

'பிரியமானவர்களே! இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம்'

1 யோவான் 3:2

எவ்வளவு பெரிய தயவு! நாம் எப்படிப்பட்டவர்கள், ஏழைகள், தீட்டானவர்கள், கெட்டுப்போனவர்கள்; அபாத்திரப் பாவிகள். சுபாவத்தால் மிகவும் கெட்டுப்போனவர்களானபடியால், நம்மிடத்தில் ஒரு நற்குணமாவதில்லை. இப்பொழுதும் ஆவியானவருடைய கிரியையை நீக்கிப்பார்த்தால் நம்மிடத்தில் ஒரு நன்மையும் கிடையாது. நாம் தத்புத்திரராக முன்னே தீர்மானிக்கப்பட்டோம். ஆவியால் மறுபடியும் பிறந்தோம். கிருபை மகிமைப்படும்படிக்குத் தேவபுத்திரரின் கணக்கில் சேர்க்கமாட்டோம். அப்படியிருந்தும், சிநேகிதரே! நமக்குள்ளே எவ்வளவு கேடிருந்தாலும், உலகம் நம்மை அசட்டைசெய்து, சாத்தான் நம்மை அலைக்கழித்து, நாம் பயத்தால் வாதிக்கப்பட்டவர்களாயிருந்தாலும், இப்போது நாம் தேவனுடைய பிள்ளைகள்தான். தேவன் தமது பிள்ளைகளை அசட்டை செய்வாரா? அற்பரென்று தள்ளுவாரா? இல்லையே.. அப்படியானால் நாம் அவருடைய பிள்ளைகளென்கிற எண்ணத்தை உள்ளத்திற்பேணி, அதை நம்பி இந்தச் சம்பந்தத்தில் மகிழுவோமாக. தேவனுடைய புத்திரரைப்போல் நாம் நமது நடக்கையிலும் செய்கையிலும் காட்டி வேஷதாரிகள், சுயநீதிக்காரர், அக்கிரமக்காரராகிய இவர்களை விட்டு முற்றிலும் பிரிந்து கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய, அவரை மகிமைப்படுத்த, நம்மை ஒப்புக்கொடுப்போமாக. துன்பத்திலும்; வியாதியிலும், மரணத்திலுங்கூட தேவன் நம்முடைய பிதா, இயேசு நமது சகோதரன், மோக்ஷம் நம்முடைய வீடு என்பதை மனதில் வைத்துக்கொள்வோமாக. பிள்ளைகளைப் போல் அவரிடஞ் சேர்ந்து, குமாரரைப்போல் அவரிடங் கெஞ்சுவோமாக. 'மகனே! நான் உன்னை ஆசிர்வதிக்கும்படி நீ என் கிட்டவா' என்று அவர் கூப்பிடுகிறார். அவருடைய ஆசிர்வாதம் நம்மை ஐசுவரியவான்களாக்கும்.

வானமாளுமாண்டவன்
நம் பிதா சிநேகிதன்;
அவர் பிள்ளைகள் யாரும்
அவரைச் சேர்வார் பாரும்.

'நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம்'

1 யோவான் 3:2

ஆருக்கொப்பாயிருப்போம்? மகிமை அடைந்த, மனுஷீகத்தைத் தரித்துக்கொண்ட இயேசுவுக்கு ஒப்பாயிருப்போம். அவரைப்போல் பாவத்துக்கு நீங்கலாகி, பரிசுத்தத்தில் பூரணராகி, பாக்கியத்தில் நிறைவுள்ளவர்களாயிருப்போம். எந்த விசுவாசியிடத்திலும் அவருடைய சாயலைப் பார்க்கலாம். தற்காலத்திலிருக்கிறதற்கு அது எவ்வளவாய் வித்தியாசப்படும். இம்மையில் சில வேளைகளில் சாத்தானைப்போலிருக்கிறோம். எவ்வளவு பயங்கரமான கேட்டை நமக்குள்ளே பார்க்கிறோம், பாவத்தின் வல்லமையை எவ்வளவாய் உணருகிறோம், எவ்வளவாய்த் தேவனை விரோதிக்கிறோமென்று நமது சொந்த அனுபவமே நமக்குக் காட்டுகிறது. ஆகிலும் நாம் அவரைப் போலிருப்போம். தேவன் அப்படி நோக்கங்கொண்டிருக்கிறார். சுவிசேஷம் அப்படித் தெளிவாய்ச் சொல்லுகிறது. அதை முடிக்கிறதுதான் பரிசுத்த ஆவியின் வேலை. எந்தத் தீங்கும் சுத்திகரிக்கப்பட்டுப்போகும்; எந்த சற்குணமும் பூரணப்படும். அவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல நாமும் பரிசுத்தராயிருப்போம். அந்த நல்ல காலம் எப்போது வருமென்று எதிர்பார்த்திருப்போமாக. நாம் தெரிந்துகொள்ளப்பட்டதும், மீட்கப்பட்டதும், அழைக்கப்பட்டதும் ஏதுக்கென்று கவனித்து, ஜெபத்தோடும் வாஞ்சையோடும் பரிசுத்தராகப் பிரயாசப்படுவோமாக. பரிசுத்தம் நமக்கு இயல்பானால் மோக்ஷம் நமக்கு வீடாகும். சொல்லிமுடியாத பாக்கியம் நமது நித்திய பங்காகும். எப்படிப்பட்டவர்களாயிருப்போமென்று அறியோம்; அவரைப்போல் இருப்போமென்று மாத்திரம் தெரியும். அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசிப்போம்; அவரோடு நாம் பாடுபட்டால், அவரோடு ஆளுவோம்.

ஆத்ம தேக சுத்தியில்
இயேசுவைப்போலிருப்பேன்;
என்றுமுள்ள ஓய்வினில்
சேர்ந்து பாவம் ஒழிப்பேன்;
மா ரட்சிப்பை நான் காண்பேன்
பந்தங்களற்றிருப்பேன்.

'மேலானவைகளைத் தேடுங்கள்'

கொலோசெயர் 3:1

மேலானவைகளெவை? பரிசுத்தம்—இயேசுவுக்கொப்பா குதல்—அவருடைய ஊழியத்திற்குத் தன்னை முற்றிலும் ஒப்பு வித்தல், ஏகோவாவின் மகிமைப் பிரசன்னத்தில் நின்றும், இயேசுவின் சமுகத்தில் நின்றும், அவருடைய சித்தத்தில் நம் முடைய ஆத்துமா பிரியப்படுகிறதில் நின்றும் உண்டாகும் பாக்கியம்—ஒற்றுமை—மேலே இருக்கும் பரிசுத்தர், பிதா குமாரன், பரிசுத்த ஆவியோடு நெருங்கினவும், என்றும் நீங் காததுமான ஐக்கியம். ஒருவர் ஒருவரோடும், பரிசுத்த தூத ரோடும், இன்பமான என்றுமுள்ள ஐக்கியத்தை 'அனுபவிக் கிறார்கள் . நோக்கத்திலும், கிரியையிலும், அனுபவத்திலும் அவர்கள் ஐக்கியப்படுகிறார்கள். மேலே இருந்து இறங்குகிற வைகளைத் தேடுங்கள். எவையென்றால், தேவனுடைய வச னத்தை நம்பி, அதை மேன்மையாக எண்ணுகிற விசுவாசம், தேவனிடத்திலிருந்து புறப்பட்டு, கிறிஸ்துவின்மேல் வைக்கப் பட்டு, ஆவிக்குரியவைகளை நாடுகிற அன்பு, பிதா குமாரன் ஆவியோடும், ஆவிக்குரிய தன்மை உள்ளவர்களோடும், உள்ள வைகளோடும், சேர்ந்து ஐக்கியப்படுதல், ஒரு வார்த்தையில் சொல்லவேண்டுமானால்; ஆவியின் எல்லா வரங்களும் கிருபை களும் கிரியைகளுந்தான். இவைகளைக் கருத்தாய் விசேஷித்து எப்போதும் தேடுங்கள். அடிக்கடி அதிகமாய் இவைகளைக் குறித்துச் சிந்தியுங்கள். இவைகளை மேன்மையாக எண்ணி மதியுங்கள். பூமிக்குரியவைகளைவிட இகைவளை மேன்மை யாக எண்ணுங்கள். இவைகளைப் பெற்று அனுபவிக்கப் பிர யாசப்படுங்கள். தேவன் கோபியாமல் தாராளமாய்க் கொடுக் கிறவர். நீங்கள் கேளாததினால் பெற்றுக்கொள்ளுகிறதில்லை. கேளுங்கள், பெற்றுக்கொள்வீர்கள். பெற்றுக்கொள்ளுங்கள், பாக்கியரா யிருப்பீர்கள். சந்தோஷப்படுங்களென்று உங்கள் தேவன் கற்பிக்கிறார்.

ஆத்துமாவே, எழும்பு,
மேலான பங்கைத் தேடு;
லோகம் விட்டுத் திரும்பு,
பரம ஸ்தலம் நாடு.

'கர்த்தாவே! மனுஷன் எம்மாத்திரம்?'

சங்கீதம் 144:3

இயல்பாய் அவன் தேவனுக்குச் சத்துரு. வெளியரங்கமாய்க் கலகஞ்செய்து அவரால் ஆக்கினைத்தீர்ப்படைந்தவன். பாவத்திற்குத் தோழன், இச்சைக்கு அடிமை, சாத்தானுக்கு ஊழியன்; தன் நன்மைக்குக் குருடன், தேவ அழைப்புக்குச் செவிடன், அக்கிரமங்களிலும் பாவங்களிலும் செத்தவன். அவன் திறக்கப்பட்ட பிரேதக்குழி—நோயும் நிர்ப்பந்தமும் நிறைந்த குழி—சொல்லக்கூடாத அருவருப்பும் அசுத்தமுமுள்ளவன். இப்படிப்பட்ட சிருஷ்டியை ஏகோவா நேசிப்பாரா? ரட்சகர் ரத்தம் சிந்திச் சம்பாதிப்பாரா? பரிசுத்தாவி அதில் வாசம் பண்ணுவாரா? ஆம், அப்படிப்பட்டவர்கள்தான் ரட்சிப்புக்கென்று தெரிந்துகொள்ளப்பட்டார்கள். அப்படிப்பட்டவர்களை மீட்கும்படிக்குத்தான் இயேசுவானவர் அனுப்பப்பட்டார். அப்படிப்பட்டவர்களைத்தான் பரிசுத்த ஆவி உயிர்ப்பிக்கவும், சுத்திகரிக்கவும், குற்றமற்றவர்களாக்கவும்; ரட்சிக்கவும் வந்தார். ஆச்சரியமான கிருபை; அதிசயமான இரக்கம், இப்படிப்பட்ட சிருஷ்டிகளோடு உள்ளபடியே தேவன் பூமியிலே வாசம்பண்ணுவாரா? ஆம், 'நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும், என் வசனத்தைக் கேட்டு நடுங்குகிறவன் இடத்திலும், நான் வாசம்பண்ணுவேன், அவனை நோக்கிப்பார்ப்பேன்' என்றார். மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரமென்று சங்கீதக்காரன் நன்றாய்ச் சொல்லுகிறான்.

மனிதன் எம்மாத்திரம்
தேவன் அவனை எண்ண,
நல்ல கிருபாபாத்திரம்
ஆக அவனைப் பண்ண
வானின்று மின்னல் காட்டி
லோகத்தை அசைக்கிறார்,
நம்மேல் அன்பு பாராட்டி
தயவைப் பொழிகிறார்.

'கிறிஸ்தவன்'

1 பேதுரு 4:16

கிறிஸ்தவன் இயேசுவின் நாமத்தைத் தரித்துக்கொண்டு அவருடைய தன்மையைச் சொந்தமாக்கிக்கொண்டு, அவருடைய ஆவியைச் சுவாசித்து, அவருடைய ஜீவனில் பிழைத்து. தன்னை முற்றிலும் அவருடைய மகிமைக்கு ஒப்புக்கொடுக்கிறான். கிறிஸ்துவினுடையதெல்லாம் அவனுடையது, அவர் செய்ததெல்லாம் அவனுக்காகத்தான். அவர் வாக்களித்ததெல்லாவற்றையும் அவன் எதிர்பார்க்கலாம். நீ கிறிஸ்தவனா? அது சந்தேகத்துக்குள்ளிருக்கிறதா? கிறிஸ்து உன்னில் பிழைத்திருக்கிறாரா? நீ விசுவாசத்தினாலே அவரைப்பற்றி ஜீவனம் பண்ணுகிறாயா? அவர் நித்தம் உன் அப்பமா? அப்பமில்லாவிட்டால் பிழைக்கமாட்டாயே, அப்படிப்போல, இயேசுவின்றிப் பிழைக்கக்கூடாதென்கிறாயா? இது நல்ல அத்தாட்சி. இது ஆவியின் கிரியையினாலுண்டான பலன். நீ கிறிஸ்தவனானால் கிறிஸ்துவைப்போலிருக்க ஆசைப்படுவாய், ஜெபம்பண்ணுவாய், போராடுவாய், கிறிஸ்து இயேசுவின் மரணக் குறிப்புகளை உன் சரீரத்தில் சுமந்துகொண்டு திரிவாய், இயேசுவின் ஜீவனும் மரணத்துக்குரிய உன் சரீரத்தில் வெளியரங்கமாகும். கெட்டுப்போன பழைய மனுஷனைத் தள்ளிவிட்டு, நீதியிலும் மெய்ப் பரிசுத்தத்திலும் சிருஷ்டிக்கப்பட்ட புது மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். மரித்தோரினின்று எழுப்பப்பட்டவனைப்போல, புது ஜீவனுள்ளவனாய் நடந்து, அவருடைய மரணத்தினாலுண்டான பலனைக் காட்டி அழியாத ஆத்துமாக்களை நேசித்து, உண்மைக்குச் சாட்சி சொல்லி, தேவனுடைய நாள் வருகிறதற்குக் காத்திருந்து துரிதப்படுவீர்கள். உள்ளபடியாய்க் கிறிஸ்தவனாயிருக்கிறது எவ்வளவு பாக்கியம்!

பிதாவே! என்னில் யேசுவை
வெளிப்படுத்துவீரே!
அப்போது உமது தயவை
எனக்குத் தருவீரே;
உமதாவி என்னில் வையும்
சுத்தமெனக்களியும்.

'உன் தேவன் ராஜரிகம்பண்ணுகிறார்'

ஏசாயா 52:7

சகல மாமிசத்தின்மேலும் இயேசுவுக்கு அதிகாரமுண்டு. அவர் பூலோக சிம்மாசனாதிபதி, அவர் சகலத்தையும் மேல்நடத்துகிறார், அவர் சித்தம் வியர்த்தமாகாது, அவர் நோக்கம் நிறைவேறவேண்டும். தற்செயலாய் நடப்பது ஒன்றுமில்லை. எந்தச் சம்பவத்திலும் அவருடைய கரத்தைக் காணலாம். அவர் உலகத்தைத் தம்முடைய வல்லமையால் நடத்துகிறார். சபையைத் தம்முடைய வல்லமையால் ஆளுகிறார். இருதயத்தில் தம்முடைய ஆவியானவரைக்கொண்டு தம்முடைய அதிகாரத்தை நடப்பிக்கிறார். அவருடைய ஆளுகையினால் உன் சத்துருக்கள் மனந்திரும்பவேண்டும், அல்லது மிதிக்கப்பட்டு அழியவேண்டும். அப்பொழுதுதான் நீயும் நன்றாயிருப்பாய், அவரும் மகிமைப்படுவார் இந்தச் சத்தியம் உன் மனதை எக்காலத்திலும் அமர்ந்திருக்கப்பண்ணட்டும். என் தேவன் ஆளுகிறார், அவர் தண்ணீர் வெள்ளங்கள் மேலுட்கார்ந்து என்றைக்கும் ராஜாவாகயிருக்கிறார். அவருக்குச் சகல கனமும் உரியது, அவருக்கு நீ பயந்து அவரை நேசித்து விசுவாசிக்கவேண்டியது. அவர் சிம்மாசனத்தில் அவரைக் கண்டு சந்தோஷப்படு. அப்போது நீ சுகபத்திரமாயும் பாக்கியசாலியுமாயிருந்து மேன்மையடைவாய். மனிதர் உன்னை ஒடுக்குகிறார்களா? சாத்தான் உன்னை அலக்கழிக்கிறானா? சகலமும் உனக்கு விரோதமாய் நடக்கிறதா? இதுதான் உன் ஆறுதல். தேவன் ஆளுகிறார். ஒவ்வொரு சிருஷ்டியையும் ஒவ்வொரு காரியத்தையும் நடத்தி ஒழுங்குபடுத்துகிறவர் அவர்தான். கிருபையுள்ள தேவனே! ஆளுகைக்குரிய கருவிகள் உம்முடைய கையிலிருக்கிறதென்று விசுவாசித்திருப்பேனாக. உம்முடைய ஆலோசனை நிற்கும். உம்முடைய பிரியத்தின்படி நீர் சகலத்தையும் செய்வீரென்று நம்பிப் பிழைப்பேனாக. என் தேவனே! என்னில் ஆளுகை செய்யும்.

வானம் பூமி ஆள்பவர்
மகிமை நிறைந்தவர்,
திறவுகோல் பிடித்து
சாநரக மிடித்து
ஜெயித்தார் மகிழ்ந்திரு.
வாழ்ந்தென்றும் சுகித்திரு.

'தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்'
1 தீமோத்தேயு 3:16

கிறிஸ்துவிலும் அவருடைய கிரியையிலுந்தான் தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார். இதனால்தான் தேவன் எப்படிப் பட்டவரென்றும், அவர் நமக்கு என்னத்தைச் செய்யக்கூடிய வரென்றும் நாம் எதிர்பார்க்கலாம். இயேசுவானவர் தம்மோ டிருந்தவர்களுக்கு எப்படிப்பட்டவராயிருந்தாரோ யேகோவா வும் அப்படிப்பட்டவராய்த்தானிருக்கிறார். அவர் எதைச் செய்யச் சித்தமாயிருந்தாரோ, அதையே நம்முடைய தேவ னும் நமக்குச் செய்யச் சித்தமாயிருக்கிறார். இயேசுவில் மிருதுவான அன்பையும், உருக்கமான இரக்கத்தையும், கிருபை பொறுமையையும் நாம் பார்க்கிறோம். அவரிடத்தில் இரக்கமும், வல்லமையும், உத்தமமும், உருக்கமும்; பரிசுத்த மும் நீடிய சாந்தமும், நீதியும், குற்றமில்லாமையும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிறது. நம்முடைய தேவன் இப்படிப்பட்டவர். எரிச்சல் அவரிடத்தில் இல்லை. அவருடைய பெயரும் அவரு டைய தன்மையும் அன்புதான். இப்படிப்பட்ட தேவனுக்கு நீ அடிமையைப்போல் பயப்படலாமா? இப்படிப்பட்ட பரப் பொருளுக்கு விரோதமாய் நீ மனசாரப் பாவஞ்செய்து அவ ரைத் துக்கப்படுத்தலாமா? அவருடைய வசனத்தை விசுவா சித்து, அவருடைய உண்மையின்பேரில் சார்ந்து, அவருடைய நாமத்தில் மகிழ்ந்து, அவர் வாக்குத்தத்தம்பண்ணின ஒவ் வொரு நன்மையும் கிடைக்குமென்று நீ எதிர்பார்க்கலா காதா? இதற்காகத்தான் அவருடைய வசனம் எழுதப்பட் டது. அவருடைய நாமம் பிரசுரஞ்செய்யப்பட்டது. இதற்கா கத்தான் இயேசுவும் மரித்தார். எப்பொழுதும் கிறிஸ்து இயேசுவின் தேவனை நோக்கிப் பார். சிருஷ்டிப்பினின் றும் தேவனை முற்றிலும் அறிந்துகொள்ளலாமென்று எண் ணாதே. ஒருவனும் தேவனை ஒருக்காலும் காணவில்லை. பிதா வின் மடியிலுள்ள அவருடைய ஒரேபேறான குமாரனே அவரை நமக்கு வெளிப்படுத்தினார். நான் உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்.

தேவனை நான் சந்தித்தால்தான்
மூவொன்னும் தீ யென்னைத்தான்
மனுவேல் முகம் கண்டாலோ
எனக்காற்றல் கிடைக்கும்,
இல்லாவிடில் பட்சிக்கும்,
பயம் ஓடிப்போமல்லோ!

'அவளுக்குப் பிரதியுத்தரமாக
இயேசு ஒரு வார்த்தையும் சொல்லவில்லை'
மத்தேயு 15:23

தாமதித்தல் மறுத்தலல்ல. உத்தரவுகொடுக்க இயேசு தாமதித்தபோதிலும், அவள் கேட்டதை இல்லை என்கவில்லை. கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். நீங்கள் பிதாவை நோக்கி என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும், அதை உங்களுக்குத் தருவார் என்று அவர் சொல்லியிருக்கிறார். வானமும் பூமியும் ஒழிந்துபோம்; அவர் வார்த்தையோ என்றும் நிலைநிற்கும். நம்முடைய விசுவாசத்தைச் சோதிக்க, நம்முடைய பொறுமையையும் விடாமுயற்சியையும் பரீட்சித்துப் பார்க்க, அவர் தாமதிக்கிறார். ஆசீர்வாதத்தை அனுப்பும்போதோ தமது உண்மையையும், உருக்கத்தையும், அன்பையும் திருஷ்டாந்தப்படுத்துகிறார். உங்கள் ஜெபங்களுக்குக் கொஞ்சக்காலம் உத்தரவு வராவிட்டாலும், அதைரியப்படவேண்டாம்; எப்போதும் அப்படி இராது. இந்த ஏழை ஸ்திரீ அதிக அவசரமுள்ளவளாயிருந்தபோதிலும், அதிக சங்கடமுள்ளவளாயிருந்தபோதிலும் இன்னும் காத்திருந்தாள். கடைசியில் இயேசுவானவர் அவள் விசுவாசத்தை வெளியரங்கமாய்ப் புகழ்ந்து, நீ விரும்பினபடியே உனக்கு ஆகக்கடவதென்று சொல்லி அவளை அனுப்பிவிட்டார். விசுவாசத்தோடு கூடிய ஜெபம் மேற்கொள்ளும். ஆதலால் இளக்கரித்துப்போகாமல் ஜெபம் பண்ணுங்கள். யாக்கோபு பேனியேலில் சொன்னதுபோல, 'நீர் என்னை ஆசீர்வதித்தாலே ஒழிய நான் உம்மைப் போகவிடேன்' என்று சொல்லுங்கள். அவரை நோக்கிக் கெஞ்சுங்கள். அவரை அலட்டுங்கள். அவர் நேரத்துக்குக் காத்திருங்கள். அவர் எந்த வகையாய்க் கொடுக்கிறாரோ, அந்த வகையாய்ப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்குக் கொடுக்கிறதினாலும், உங்களுக்குச் செய்கிறதினாலும் அவர் மகிமைப்படவேண்டுமென்று கவலைப்படுங்கள். அப்பொழுது நீங்கள் குறைவடையமாட்டீர்கள். தமக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபை என்றைக்குமுள்ளது.

தேவனுக்குக் காத்திரு
தாமதித் தமர்ந்திரு,
சகாயம் வாராவிடில்
வருமென்று காத்து நில்.

'அவருடைய தயவோ நீடிய வாழ்வு'

சங்கீதம் 36:5

அது தாவது கிறிஸ்து இயேசுவில் விளங்கிய தேவனுடைய தயவு. அவர் நம்முடையபேரில் தயவுவைத்தாரானால் எல்லாம் நன்றாயிருக்கும். அவர் தயவு வைத்திருக்கிறார், அந்த தயவுக்குத் திருஷ்டாந்தமாகத் தம்முடைய குமாரனாகிய இயேசுவை நமக்காகத் தந்தார். நமக்கே தந்தார். நம்மை உயிர்ப்பித்துப் போதித்துப் பரிசுத்தமாக்கப் பரிசுத்த ஆவியையும் அனுப்பினார். விசுவாசத்தினால் அவருடைய தயவை அனுபவிக்கிறோம். அவருடைய தயவை அனுபவிக்கும்போது, அதற்கு எதிரிடையான யாவையும் அற்பமென்று தள்ளுவோம். நம்முடைய ஆத்தும உயிர் அவருடைய தயவிலிருந்துண்டாகிறது. அவருடைய தயவை அனுபவிக்கிறதில் தான் நமக்குப் பாக்கியமுண்டு. மோட்சத்தில் அவருடைய தயவை நிறைவாய்க் கண்டு, நம்முடையதாக எண்ணுவோம். அவருடைய தயவினால்தான் நமக்குத் தற்கால நன்மைகளும், இனியுண்டாகும் நம்பிக்கையும் கிடைக்கிறது. அவருடைய தயவினால்தான் நாமிருக்கிறவிதமாக இருக்கிறோம். அவருடைய தயவினால் நாம் ரட்சிக்கப்படுகிறோம். எந்த நன்மைக்கும் ஊற்று இதுவே. எந்த விசுவாசியின் இருதயத்திலும் உண்டாகும் சந்தோஷத்திற்குக் காரணம் இதுவே. நாம் தேவதயவைப் பெற்றவர்களென்று சந்தேகமின்றி நிச்சயமடைந்திருக்கவேண்டும். எத்தனையோ ஆயிரம் தங்கம் வெள்ளியைவிட அவருடைய தயவை அதிகமாய் மதிக்கவேண்டும். கர்த்தாவே! நீர் தெரிந்துகொண்டவர்களின் நன்மையை நான் கண்டு, உம்முடைய ஜாதியின் மகிழ்ச்சியால் மகிழ்ந்து, உம்முடைய சுதந்தரத்தோடே மேன்மைபாராட்டும்படிக்கு உம்முடைய ஜனங்களுக்கு நீர் பாராட்டும் கிருபையின்படி என்னை நினைத்து, உம்முடைய ரட்சிப்பினால் என்னைச் சந்தித்தருளும். ஆம், என் கர்த்தராகிய இயேசுவே! அப்படியே செய்யும்.

கர்த்தாவை நோக்கிக் கெஞ்சுவேன்,
அவர் சொற்படி நடப்பேன்
அவர் போதித்தபடியே
பிடிப்பேன் அவர் அடியே.

'கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்'

லூக்கா 24:34

இயேசு ஒரு விசை நம்முடைய பாவங்களுகாக மரித்தார். நம்மை நீதிமான்களாக்க உயிர்த்தெழுந்தார். நம்முடைய பிணையாளியாகக் கல்லறையில் படுத்தார். நாம் பிழைக்க அவர் மரித்தார். அவர் பிழைத்திருக்கிருர். நாம் அவர் மூலமாய் அவரோடு என்றைக்கும் பிழைத்திருப்போம். அவர் எழுந்து மரணத்தை ஜெயித்தார். நம்மைத் தேவனோடு ஒப்புரவாக்கினுர். கல்லறையைச் சுகந்த வாசனையுள்ளதாக்கினுர். பிதா கொடுத்த வேலையை முடித்தார். அவர் எழுந்தது போல நாமும் எழுந்திருப்போம். அவர் பரலோகத்துக்குப் போயிருக்கிறபடியால், நம்முடைய நினைப்பும், நம்பிக்கையும்; நம்முடைய ஆசைகளும் அவ்விடம் செல்லவேண்டும். நமக்காகப் பரிந்துபேச, நம்முடைய காரியங்களை நடத்த, தம்முடைய அருமையான வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற, தம்முடைய பிதாவின் வீட்டில் நமக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ண ரட்சகர் எழுந்தார். அவருடைய மரணத்தால் பாவம் பரிகரிக்கப்பட்டுப்போனது. அவருடைய ஜீவனுல் மோட்சம் நமக்காகச் சம்பாதிக்கப்பட்டது. அவர் நமக்காக எழுந்து ஏறி இப்பொழுது ஆளுகைசெய்கிற சகோதரன் ஜெயமடைந்து மகுடம் தரித்த சேனுபதி. இயேசுவைப்பற்றிப் பேசி, அவருக்காகப் பேசி; நம்மை முற்றிலும் அவருக்கு ஒப்புக்கொடுப்போமாக. அவர் உலகத்திற்கு மேலானவர். நாம் உலகத்தின் மாயைகளையும், அதின் சங்கடங்களையும்; அதின் இன்பங்களையும் வெறுக்கவேண்டும். மரணத்திற்குப் பிறகு உண்டாகும் உயிர்த்தெழுதலை நோக்குவோமாக. அப்பொழுது மரித்தோரிலிருந்து எழுந்து அழியாததும், மகிமையுள்ளதும்; வல்லமையுள்ளதும்; ஆவிக்குரியதுமான சரீரங்களைப் பெற்றுக்கொள்ளுவோம்.

இயேசுவைப் போற்றிப்பாடு
மரித்து ஜெயங்கொண்டார்;
அவர் பேரைக் கொண்டாடு
சத்துருக்களை வென்றுர்;
ஜெயித்தவர் நாமத்தை
போற்றிப்பிடி அவர் பாதத்தை.

'நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'
மத்தேயு 11:28

கிறிஸ்தவனுக்கு உலகத்தில் இளைப்பாறுதல் இல்லை. ஏதாவதொன்று அவனைக் கலங்கடிக்கும், வருத்தப்படுத்தும், வேதனை கொடுக்கும். இது சத்துரு இருக்கிற தேசம். உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று இயேசு சொல்லுகிறார். அவருடைய வார்த்தையின்பேரில் சார்ந்து, அவருடைய காத்தை உணர்ந்து, அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய கிரியையை நம்பச்செய்து நமக்கு இளைப்பாறுதல் தருகிறார். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன. அவருடைய பாதுகாப்பில் நாம் சுகமேயிருக்கிறோம். அவருடைய சமுகம் எப்போதும் நம்மோடிருக்கும். சகலமும் நமக்கு நன்மையாக முடியும் என்று நமக்கு நிச்சயப்படுத்துகிறார். அவருடைய உத்தமத்தை நாம் நம்பியிருக்கலாம். அவரைச் சோதித்துப்பார்த்து உண்மையுள்ளவரென்று கண்டிருக்கிறோம். அவருடைய அன்பில் நாம் சார்ந்திருக்கலாம், அது நமக்காகக் கிரியைசெய்கிறது. அவருடைய உடன்படிக்கையில் சார்ந்திருக்கலாம், அது சகலத்திலும் ஒழுங்குபடுத்தப்பட்டு நிச்சயமானது. அவருடைய இரக்கத்தின்பேரில் சார்ந்திருக்கலாம். அது சமாதானத்தையும், மன்னிப்பையும், தேவனால் அங்கீகரிக்கப்படுவதையும் நமக்குக் கூறுகிறது. அவருடைய பாதத்தண்டையில் இளைப்பாறலாம், அங்கே சுகமாய்ச் சேதமற்றிருப்போம். நம்முடைய புண்ணியங்கள், நம்முடைய ஆறுதல்கள், நம்முடைய சிநேகிதர்கள், நமது ஆஸ்திகள் இவைகளின்பேரில் சார்ந்திருக்கக்கூடாது. இயேசுவின்பேரில் சார்ந்திருக்கலாம். அசையாத நம்பிக்கையாலும் அனலான அன்பினாலும் அவர்பேரில் இளைப்பாறலாம். அவருடைய வாக்குத்தத்தங்கள் தெளிவு. அவர் வல்லமை மட்டற்றது. அவருடைய அன்பு அறிவுக்கு மேலானது.

இளைத்த புறு பேழையில்
இளைப்பாறுதல் கண்டது,
கிறிஸ்துவாம் நல்லொதுக்கில்
என் ஆவி வந்து தங்குது.

'அருமையான வாக்குத்தத்தங்கள்'

2 பேதுரு 1:4

வேதவசனத்திலுள்ள வாக்குத்தத்தங்கள் மகத்துவமுள்ள தேவனருளியவைகள். இலவசமான கிருபையாலுண்டானது. இயேசுவின் ரத்தத்தால் உறுதிப்பட்டது. மகா பெரியவைகள். அருமையானவைகள், பிள்ளைகளும் அறிந்துகொள்ளத்தக்கதாக அவ்வளவு தெளிவானவைகள். தேவதூதரும் நிறைவேற்றக்கூடாத அவ்வளவு மேன்மையானவைகள் எந்தக் காரியத்திற்கும் உதவத்தக்கதாகப் பலவிதமாயிருக்கிறது. எந்தக் குறைவையும் நீக்கத்தக்க சம்பூரணமுள்ளது. ஏழைகளுக்கு வருத்தப்பட்டுத் துன்பப்படுகிற விசுவாசிக்கு அவை ஆறுதல் கொடுக்கும். கடவுளுடைய பிள்ளை எவனுக்கு அவை பெலனும் ஆதரவுமாயிருக்கும். கிருபாசனத்தண்டையில் அவைதான் நமக்கு ஆதாரம். சோதனைக்காலத்தில் அவைதான் நமது நம்பிக்கை. மரணபடுக்கையில் அவை நமக்கானந்தம். சிநேகிதரே! தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் உங்களுக்கு நித்தம் ஆறுதல். நீங்கள் அவைகளை ஆராய்ந்து, அவைகளைச் சேர்த்துவைத்து, அவைகளை விசுவாசித்து, நம்பி, அவைகளைச் சொல்லிக் கெஞ்சி, அவைகள் நிறைவேறுமென்று நிச்சயித்திருக்கவேண்டும். வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவர். அவருடைய வாக்குத்தத்தங்கள் வெள்ளி பொன்னைப்பார்க்கிலும் அருமையானது. தேனிலும் தேன் கூண்டொழுகலிலும் மதுரமானது. பூமியைப்பார்க்கிலும் நிலையுள்ளது. வானஸ்தம்பங்களைப்பார்க்கிலும் உறுதியுள்ளது. அவைகளை நினைத்து, அவைகளைச் சொல்லிக் கெஞ்சி, அவைகள் நிறைவேறுமென்று நம்பி, இன்றைக்கு எதிர்பார்ப்போமாக. நமது தேவன் உண்மையுள்ளவர். ஆயிரந் தலைமுறைகளுக்கு உடன்படிக்கையையும் இரக்கத்தையும் காக்கிறவர்.

தேவதயைக்குத் தோத்திரம்
அவர் வாக்கு நம்மை ஆளும்,
அவர் தீர்மானம் மா காத்திரம்
அவர் வாக்குபோல் எந்நாளும்.

'உங்கள் விசுவாசம் எங்கே?'

லூக்கா 8:25

சீஷர்கள் புசலிலகப்பட்டு, மோசத்தால் சூழ்ந்து, பயத்தால் நிறைந்திருந்தார்கள். அவர்கள் இயேசுவண்டைக்குப் போனார்கள். இதுதான் சரி. ஆனாலும் அவருடைய கவலையையும் அன்பையும்பற்றிச் சந்தேகித்துக் கெட்டுப்போகிறோமென்று சத்தமிட்டார்கள். இது சரியல்ல. ஆதலால் இயேசுவானவர் உங்கள் விசுவாசம் எங்கே என்று கேட்கிறார். நம்மையும் பார்த்து இப்படிக் கேட்கக்கூடாதா? அவருடைய வசனம் நம்மிடத்தில் உண்டே, அதை ஆசையோடு விசுவாசிக்கிறோமா? அவருடைய அன்பைக்குறித்துப் பேசுகிறோமே, அதை உறுதியாய் நம்புகிறோமா? அவர் கவலை உள்ளவரென்று வாசிக்கிறோமே, ஆதலால் நமக்குக் குறைவில்லையென்று எண்ணுகிறோமா? இயேசுவைவிட வேறெந்தப் பாவியையும் லேசாய் நம்புகிறோமே, அவருடைய வார்த்தையைவிட வேறெந்த வார்த்தையையும் பிடித்துக்கொள்ளுகிறோமே, இதனால்தான் நாம் மனமடிவாகிப் பயப்பட்டு வாதிக்கப்படுகிறோம். இன்றைக்கு அவருடைய அருமையான வார்த்தையை உறுதியாய்ப் பிடிப்போமாக. அவருடைய திவ்யசெயலை நம்புவோமாக. உறுதியும் உண்மையுமுள்ள சிநேகிதனைப்போல அவரோடு ஐக்கியமாவோமாக. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனில் விசுவாசமாயிருங்கள். என்னிலும் விசுவாசமாயிருங்களென்கிறார். நம்முடைய நம்பிக்கைக்கு அவர் பாத்திரர். அவர் மோசம்பண்ணமாட்டார். நாம் அவரை நம்பலாம். நம்மை அசட்டைசெய்யமாட்டார். நம்முடைய நம்பிக்கையைத் தைரியப்படுத்தி என் நாமத்தினாலே நீங்கள் பிதாவை எதைக் கேட்டாலும் உங்களுக்குச் செய்வேனென்று வாக்களிக்கிறார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஜெபம் பண்ணும்போது இதை நம்புகிறீர்களா?

என் மனம் அசைந்தலைந்து
வீணாகக் குழம்புதே,
என் இதயமும் மறந்து
அவரை விட்டோடுதே,
தேவா! நின் கிருபை தாருமேன்
என் இருதயம் கட்டுமேன்.

'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது'

லூக்கா 7:48

யாருடைய பாவங்கள்? உன்னுடையது. நீ ரட்சகரை விசுவாசித்தால், அவருடைய நாமத்தில் விசுவாசமாயிருக்கிற வன் எவனே, அவனுக்குப் பாவமன்னிப்புக் கிடைக்குமென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் சாக்ஷிகொடுக்கிறார்கள். 'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், நம்முடைய பாவங்களை மன்னித்து எல்லா அக்கிரமத்தினின்று நம்மைச் சுத்திகரிக்கத் தேவன் உண்மையும் நீதியுமுள்ளவர்.' விசுவாசித்து அறிக்கையிட்டுப் பாவத்தைத் தள்ளுகிறவனுக்குக் கிறிஸ்துவின் மூலமாகத் தேவன் மன்னிப்பருளுகிறார். இவ்விதமாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் மன்னிக்க ஆயத்தமுள்ளவரென்றும், இரக்கத்தில் மிகுந்தவரென்றும், உருக்கம் நிறைந்தவரென்றும் ரூபிக்கிறார். மன்னிக்கமாட்டேனென்று அவர் சொல்லுகிறதே இல்லை. அப்படிச் செய்ய மனமில்லையென்று காட்டுகிறதே இல்லை. அவர் வார்த்தை அவ்வளவு தெளிவும், அவருடைய கிருபை அவ்வளவு பெரிதும், அவருடைய இரக்கம் அவ்வளவு தாராளமும், அவருடைய உண்மை அவ்வளவு உறுதியுமானதால், இந்தக் காரியத்தில் நாம் கொஞ்சமென்கிலும் சந்தேகங்கொள்ளக்கூடாது. ஆதலால் நமக்குத் தேவையானதென்ன? நம்முடைய பாவங்களை அவருடைய சிம்மாசனத்தண்டையில் அறிக்கையிட்டு, கிறிஸ்துவின் நாமத்தினால் மன்னிப்புக்காகக் கெஞ்சி, இயேசுவில் விசுவாசிகளான நாம் பாவமன்னிப்பைப் பெற்றிருக்கிறோம் என்று சொல்லுகிற தேவ வசனத்தை விசுவாசிக்கிற விசுவாசந்தான் நமக்கு வேண்டும். இது மிகவும் அவசியம். உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று இயேசு சொல்லிய இனிமையான வார்த்தைகளை விசுவாசித்தால்தான் பாவத்தைக் கொல்லுவோம், உலகத்தை வெறுப்போம், தேவனில் சந்தோஷிப்போம், சுவிசேஷத்தைக் கனப்படுத்துவோம்.

பாவம் மன்னித்தாச்சுதென்று
அறிவதே சலாக்கியம்,
இவ்வுலகில் அது நன்று
பரனளிக்கும் பாக்கியம்
இங்கே நான் வசிக்கும்போது
அதைத் தாருமிப்போது.

'அவைகளை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்'

மத்தேயு 14:18

பட்டினியினாலும், பசியினாலும் சோர்ந்துபோன ஜனக் கூட்டம் இரக்கமுள்ள நமது ரட்சகரைச் சூழ்ந்திருந்தது. அவருடைய சீஷரிடத்தில் ஐந்து சிறு அப்பங்களும் இரண்டு சிறு மீன்களுமாத்திரமிருந்தது. ஆகிலும் ஜனங்களுக்குப் போஜனங் கொடுங்களென்று கட்டளையிட்டார். இயேசு கொடுக்கிற கற்பனைகள் அடிக்கடி நம்முடைய விசுவாசத்தைச் சோதிக்கிறது. பிள்ளைகளைப்போல நம்மை அவருடைய பாதத் தண்டைக்குக் கொண்டுவரத்தக்கது. அவைகளை என்னிடத் திற்குக் கொண்டுவாருங்களென்கிறார். தோற்றத்தின்படி அல்ல, இயேசு செய்கிறபடி சகலமும் நடக்கும். அவருடைய ஆசீர்வாதம் சகலத்தையும் அற்புதமாய் மாற்றிவிடும். சகலத் தையும் தன்னிடத்திற்குக் கொண்டுவரச் சொல்லுகிறார். நீ பிள்ளைக்குட்டிக்காரனா? சிறு பிள்ளைகள் என்னிடம் வருகிற தற்கு இடங்கொடுங்கள்; அவைகளைத் தடைபண்ணாதேயுங் கள் என்கிறார். உனக்குச் சோதனைகளுண்டா? அவருடைய ஆசீர்வாதம் துன்பத்தைக் குறைக்கும், அவைகளை இன்ப மாக்கும். நீ தரித்திரப்பட்டவனா? உன் தரித்திரத்தை அவரி டம் கொண்டுபோ. உனக்கிருக்கிற கொஞ்சத்தை அவர் ஆசீர் வதித்து, அதற்கு நல்ல மணங்கொடுப்பார். இந்த நாளிலா வது, வேறெந்த நாளிலாவது உனக்கு வருத்தத்தைக் கொடுக் கிற ஏதாவதுண்டா? அதை என்னிடங் கொண்டுவா என்று ரட்சகர் சொல்லுகிறதாக நினை. சகலத்தையும் அவரிடத்தில் கொண்டுபோ. பெரியதையும், சிறியதையும் அவரிடத்திற்குக் கொண்டுபோ. அப்படிச் செய்தால்தான் சத்துருக்களை வெல் லுவாய். சோதனைகளை ஜெயிப்பாய், துன்பங்களில் பெருமை பாராட்டுவாய், தேவனில் மகிழுவாய்.

கவலை அவர்மேல் வைக்கும்
சிலாக்கியம் மா பெரிது,
வானம் பூமி யாவும் காக்கும்
தேவகரம் வலிது,
பார் துதிக்கும் கர்த்தனை
நேசனென் றழைப்பது,
அவரிடம் என் சிந்தனை
சொல்வது மா இனிது.

'சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுக்கிறார்'

ஏசாயா 40:29

கர்த்தருடைய ஜனங்கள் அடிக்கடி சோர்ந்துபோகிறா
கள். பாவம் மரணமென்னும் சரீரபாரம் அவர்கள்மேல் இறுத்
துகிறது. சாத்தானால் துன்பப்பட்டு வருந்துகிறார்கள். உலகத்
தால் சோதிக்கப்பட்டுச் சங்கடப்படுகிறார்கள். அவர்கள் ஆயா
சப்பட்டாலும் இன்னும் பின்தொடருகிறார்கள். கர்த்தருக்குக்
காத்திருந்து புதுப்பெலனடைகிறார்கள். நான் உன்னைப்
பெலப்படுத்துவேனென்று கர்த்தர் சொன்னார். சகோதரனே
தேவன் கொடுத்த வாக்கையும் அவர் உண்மையையும் நினை
பயத்துக்கு இடங்கொடாதே. இடங்கொடுத்தால் சோர்ந்து
போவாய். தேவன் உண்மையுள்ளவரானதால் விசுவாசி. 'ஜீவ
னுள்ளோருடைய தேசத்தில் நான் கர்த்தருடைய தயவைக்
காண்பேனென்று நம்பாவிட்டால், நான் சோர்ந்துபோயிருப்
பேன்' என்று தாவீது சொன்னான். நாம் ஜெபம்பண்ணினால்
தேவன் பெலன் கொடுப்பார். நம்முடைய நாளுக்குத்தக்க
பெலன் வைக்கப்பட்டிருக்கிறது. சுமைக்குத்தக்கதாக முது
கைப் பெலப்படுத்துகிறார். நாம் தாங்கும்படி அவர் நம்மைப்
பெலப்படுத்துகிறதற்கு மிஞ்சி நமதுமேல் சுமை வைக்கமாட்
டார். தம்முடைய வசனத்தினாலும் ஆவியினாலும் சமூகத்தி
னாலும் நம்மைத் திடப்படுத்துவார். அவருடைய வசனத்தின்
படி நமக்குச் செய்வார். இது அவருக்குக் கனமாக இருக்கும்.
அவர் தம்முடைய ஆவியினாலே உள்ளான மனுஷனைப் பலப்
படுத்துவார். நீ எவ்வளவு பெலவீனனானாலும் தேவன் உனக்
குப் பெலனையும், தைரியத்தையும் கொடுப்பாரென்று நம்பிப்
போ. அவர் சித்தத்தின்படி செய்ய, சகிக்க, பெலன் தருவார்.
சத்துருவுக்கு எதிராய்ப் போராடி மேற்கொள்ளத் தைரிய
மும் தருவார்.

நாம் துயரப்படுவானேன்
திடனோடிப் போயிற்றோ;
பாவத்தால் கலங்குவானேன்
ஆறுதல்கள் மாறிற்றோ;
பயங்களைத் தவிர்த்திடு
திகில் யாவையும் விடு.

'கேளுங்கள் அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள்'

யோவான் 16:24

இவை இயேசு சொன்ன வாத்தைகள். இன்று காலையில் இதை நமக்குச் சொல்லுகிறார். நமக்குக் குறை உண்டென்றும், அந்தக் குறையை நீக்க நம்மால் ஆகாதென்றும் இது காட்டுகிறது. குறைவை நீக்க வகை உண்டென்றும், அந்த வகை நமக்குக் கிடைக்குமென்றும் இது தெரிவிக்கிறது. நம்பிக்கையோடு கேட்கவும், கேட்டுப் பெற்றுக்கொள்ளவும் நம்மை அழைக்கிறது. இயேசுவினிடத்தில் நிறைவான ஆசீர்வாதங்களும், அவைகளைக் கொடுக்க அன்பு நிறைந்த உருக்கமான மனமுமுண்டு. நமக்குத் தேவையானதை அவர் தருவார். குறைவிருக்கிறதென்று சொல்லி அவநம்பிக்கைக்கிடங்கொடாமல், இயேசுவை நோக்கிப்பார்; அவரிடத்தில் உண்டு; அவர் கொடுப்பார்; கேட்டுப் பெற்றுக்கொள்ளென்கிறார். இதைவிட லேசானதெது? தகுதியானதெது? நமக்கு அதிக தைரியத்தைக் கொடுக்கத்தக்கதெது? இயேசு வாக்குத்தத்தம்பண்ணினாரென்று விசுவாசத்தோடு கேள். அந்த ஆசீர்வாதங்களை நீ மதிக்கிறாயென்று காட்டக் கருத்தாய்க் கேள். விடாமல் கேள். கிடைக்கும் பரியந்தம் பின்னும் பின்னும் போ. தேவையானதற்கெல்லாம் இயேசுவினிடம் போ. சகலத்தையும் ஜெபத்தில் சொல்லு. 'எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடுகூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.' சந்தேகிக்கவேண்டாம். அவருடைய வசனம் தெளிவுள்ளது. உருக்கம் நிறைந்தது. கிருபைகாட்டப்பொறுத்திருக்கிறார். அவர் உண்மையுள்ளவரென்றும், அன்புள்ளவரென்றும் உத்தமரென்றும் ரூபிக்க அநேகம் சாட்சிகளுண்டு. கடந்துபோன தலைமுறைகளைப் பார். கர்த்தரை வீணாய்த் தேடினவர்களுண்டா? இல்லை கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்.

ஆத்மாவே! என்ன தேவை
தாராளமாய் நீ கேளேன்,
ரத்தம் சிந்தினாரெவை
கொடாரென்றுதான் பாரேன்.

'நான் கர்த்தருடையவன்'

ஏசாயா 44:5

அவர் என்னைத் தம்முடைய பிரிய குமாரனாகிய இயேசுவில் மற்றவர்களை விட்டுப் பிரித்துத் தெரிந்துகொண்டதினாலேமாத்திரமல்ல; இம்மானுவேலுடைய அருமையான ரத்தத்தினால் மனிதர் நடுவிலிருந்து நான் மீட்டுக்கொள்ளப்பட்டதினாலேமாத்திரமல்ல, அவருடைய ஆவி என்னைப் போதித்து, அவருடைய வார்த்தை என்னை ஆண்டு நடத்த; அவருடைய செயல் எனக்கு வேண்டியதை சவதரித்து நான் அவரைத் துதித்துப் போற்ற, எனக்குள்ளதும் உரியதுமான யாவற்றோடும் நான் என்னை முற்றிலும் அவருக்கு ஒப்புக்கொடுத்ததினாலேதான் நான் கர்த்தருடையவன். கர்த்தர் நான் அவருடையவனென்று சொல்லுகிறார். நான் அவருடையவன்தான், என்மேல் அவருக்குப் பாத்தியமுண்டு. இதை நான் மறக்கக்கூடாது. நான் பாவஞ்செய்ய, முறுமுறுக்க, அவநம்பிக்கைக்கு இடங்கொடுக்க, பிசாசு என்னைச் சோதிக்கிறதா? நான் கர்த்தருடையவனென்கிறது என்னைத் தற்காக்க வேண்டும். பாவத்துக்கு இடங்கொடுக்கிறது எவ்வளவு மூடத்தனம். எவ்வளவு நன்றிகேடு, எவ்வளவு துன்மார்க்கம். அவர் செய்கிறதைக் குறித்து முறையிடுகிறது; அவருடைய தயவைக் குறித்துச் சந்தேகிக்கிறது, எவ்வளவு பெரிய பாவம். என் ஜீவகாலமெல்லாம் நான் கர்த்தருடையவன். மரித்தாலும் நான் கர்த்தருடையவன். பிறகு நான் எப்போதும் கர்த்தருடையவனாயிருப்பேன். இது எவ்வளவு பாக்கியம். அவர் தம்முடைய ஆலோசனையின்படி என்னை நடத்திப் பிறகு என்னை மகிமையில் ஏற்றுக்கொள்ளுவார். அவருடைய மகிமையை நான் தேடவேண்டும். அவருடைய வார்த்தையின்படி நடக்க வேண்டும். அவர் என்னைத் தம்மிடம் சேர்த்துக்கொள்ளும் வரையில் அவருடைய பாதத்தண்டையில் கிடக்கவேண்டும். தேவனைப் பிரியப்படுத்துகிறதுதான் பூமியில் நான் செய்ய வேண்டிய வேலை. மோட்சத்தில் அவரை என்றும் அனுபவிப்போம்.

இயேசுவே! உமதன்பு
என் நாவுக்கடங்காது,
கிருபைதந் துமதன்பு
பாய்ந்தால் தீது வாராது.

'மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்'

ஏசாயா 2:22

மனுஷனை ஒருக்காலும் நம்பாதே. அவன் இருதயம் மோசமுள்ளது, அவனிடத்திலிருந்து ஏதாவது கிடைக்குமென்று எதிர்பாராதே. அவன் வெறுமையான பாத்திரம். அவனை ஒருபோதும் பின்செல்லாதே. அவன் தப்புவழிகாட்டி, மனுஷனை நம்பி மாமிசத்தைத் தன் நயமாக்கிக்கொள்ளுகிற மனுஷன் சபிக்கப்பட்டவன். அவன் இருதயம் கர்த்தரைவிட்டு மருளவிழும். சிநேகிதனையும் நம்பாதே. நீ நம்பத்தக்க ஒருவரிருக்கிறார். அவர் போதும், உனக்குத் தேவையெல்லாம் அவரிடத்தில் உண்டு. உனக்குத் தேவையானபோது கொடுப்பேனென்கிறார். அவர் ஒருபோதும் மோசம்பண்ணினவருமல்ல, மோசம் பண்ணக்கூடியவருமல்ல. தேவன் பொய் சொல்லக்கூடாதவர். நாம் மனுஷரைப் பார்ப்போமானால் தேவனுடைய பரிபூரணத்திற்குக் குறைவுண்டாக்குகிறோம், மனுஷனை நம்புவோமானால், அவருடைய வார்த்தையை அற்பமாய் எண்ணுகிறோம். மனுஷனிடத்திலிருந்து எதையாவது பெற்றுக்கொள்ளப்பார்ப்போமானால், தேவன் சகலத்தையும் நடத்துகிறவனென்பதை மறந்துவிடுகிறோம். நான் சொல்லுகிற இந்த அன்பான புத்தியை அசட்டைசெய்வாயானால், உனக்குத் துன்பம் நேரிடும். அதின்படி நடப்பாயானால், உன் சமாதானம் நதியைப்போலிருக்கும். உன் ஆத்துமா நீர்ப்பாய்ச்சப்பட்ட நல்ல தோட்டம்போலிருக்கும். மனுஷனுக்குள்ருக்கிறதை அவர் அறிவார்; நீ அறிவாய். அவர் உன்னை நேசித்தபடியால் உன்னை எச்சரிக்கிறார். துக்கம் துயரம் உனக்கு நேரிடுகிறது அவருக்குப் பிரியமில்லை, உன் எண்ணம் விருதாவாய்ப் போகிறது அவருக்கு மனசில்லை. தீர்க்கதரிசியைப்போல் தீர்மானம் பண்ணு; 'நான் கர்த்தரை நோக்குவேன்; என் ரட்சிப்பின் தேவனுக்குக் காத்திருப்பேன்; என் தேவன் எனக்குச் செவிகொடுப்பார்.' மனுஷனிடத்திலிருந்து ஏதாவது வருமென்று எதிர்பாராதே; தேவனிடத்திலிருந்து உனக்குச் சகலமும் வரும்.

இயேசுவை நம்புவோர் பாக்யர்,
நிச்சயமான சலாக்யர்,
மற்றவர்கள் கெட்டழிவர்,
சுகித்திருப்பார் பக்தர்,
தேவ ஜனம்
ஏழையாயினும் பாக்யர்.

'அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார்'

உபாகமம் 33:3

அவர் சிநேகித்த ஜனங்கள், எப்படிப்பட்டவர்கள்? ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், கலகக்காரர்; கடினக் கழுத்துடையவர்கள், கடின இருதயமுடையவர்கள், அபாத்திரரான சிருஷ்டிகள். இப்பொழுதும் சுபாவப்படி அவருடைய ஜனங்கள் அப்படிப் பட்டவர்கள்தான். நாமும் அப்படிக்கொத்தவர்கள்தான். ஆகிலும் அவர் நம்மை நேசிக்கிறார். நமக்கு இரங்குகிறார். சூழ இருக்கும் மற்றவர்களினின்று நம்மை வித்தியாசப்படுத்துகிறார். தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல், நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தாரே, அவரோடு நமக்குச் சகலத்தையும் இலவசமாய்த் தருவார். அவருடைய ஜனங்களெல்லாரும் இன்னும் அவரிடத்தில் சேரவில்லை. அவர்களுடைய காரியஸ்தனாகிய இயேசு அவருடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். அவர் தாம் தெரிந்துகொண்டவர்களின் தற்சொரூபமும் சரியான சாயலு அவர்தான் சிரசு. இன்பத்தின் ஊற்றுகளெல்லாம் அவரில் ஒன்றாய்ச் சேருகிறது. சபையாகிய தம்முடைய சரீரத்துக்கு அவர்தான் சிரசு. இன்பத்தின் ஊற்றுகளெல்லாம் அவரில் பயந்து அவர் மூலமாய்ப் பூமியிலுள்ள ஒவ்வொரு விசுவாசி அண்டைக்கும் செல்லுகிறது. அவர் கிறிஸ்துவைச் சிநேகிக்கிறதுபோல நம்மையும் சிநேகிக்கிறார். இயேசுவைச் சிநேகிக்கையில் நம்மையும் நேசிக்கிறார். கிறிஸ்துவும் நாமும் ஒன்று. நமக்குச் செய்கிறது அவருக்கும் செய்யப்படுகிறது. மனுஷனாகவும் மத்தியஸ்தனாகவும் அவருக்கு என்ன செய்யப்படுகிறதோ, என்ன கொடுக்கப்படுகிறதோ, அது நமக்கும் செய்யப்படுகிறது, நமக்கும் கொடுக்கப்படுகிறது. நித்திய அளவிறந்த அன்பின் மகிமையான ரகசியத்தை என்ன சொல்ல! என் இருதயத்தை இந்த தேவ அன்பின் அண்டைக்கு நடத்துமேன், கர்த்தாவே!

மட்டில்லாத அன்பைச் சொல்ல
யாராலாகும் அதை வெல்ல,
நீளம் உயரம் ஆழமும்,
எட்டாதுதான் பாதாளமும்,
அகலத்தை என்னில் ஊற்றும்,
என் மனசு உம்மைப் போற்றும்.

'ஆபத்திலே நான் அவனோடிருப்பேன்'

சங்கீதம் 91:15

துன்பத்துக்குத் தாய் பாவம். தேவனைவிட்டுப் போகிறது தான் எல்லாத் துக்கத்துக்கும் மூலம். மீறுதல்தான் அதற்குக் காரணம். அல்லது வேறு ஒரு பெரிய துன்பத்தைத் தடுக்கும் படிக்கு இது வந்திருக்கலாம். நன்மையும் இதற்குக் காரணமாயிருக்கலாம். நீதியினிமித்தம் பரிசுத்தவான்கள் துன்பப்படுகிறதுண்டே. நம்மைத் திருத்திச் சீர்ப்படுத்தித் தேவனண்டைக்குக் கொண்டுபோகிறதுதான் இதன் நோக்கம். நம்முடைய துன்பம் எப்படிப்பட்டதாயிருந்தாலும், நாம் கர்த்தருடையவர்களானால் அவர் நம்மோடிருக்கிறார், நமக்குக் கிருபை அளிக்க நம்மோடிருக்கிறார். இவ்வளவுகாலம் நமக்குத் துன்பமிருக்கவேண்டுமென்று அவர் தீர்மானிக்கிறார். அவருக்கு அவசியமாய்த் தோன்றுகிற காலத்துக்கு மிஞ்சி அது இராது. குகையிலுள்ள காங்கையை அவர் அளவுபடுத்துகிறதுமல்லாமல் நாம் தாங்கத்தக்கதற்கு மேலான சோதனையை நமக்கு வரவிடார். துன்பங்களை நமக்குப் பிரயோஜனமுள்ளதாக்கி அதனால் நமக்கு நன்மையுண்டாகும்படி செய்கிறார். அவர் அன்பாய்க்கொண்ட நோக்கம் முடிந்தபிறகு நம்மைத் துன்பத்தினின்று விடுவிக்கிறார். துன்பமுண்டாகும்போதெல்லாம் தேவன் முக்கியமாய் உன்னோடிருக்கிறாரென்று நினைத்துக்கொள். உன் ஜெபத்தைக் கேட்க, உன் பெலனை அதிகப்படுத்த, உன் வழியில் உன்னை நடத்த, உன்னை ஜெயவீரனாக்க அவர் உன்னோடிருக்கிறார். அவர் கிருபை உனக்குப் போதும். அவர் சமுகம் நிச்சயம். அவர் குறித்தகாலத்தில் அவர் குறித்த வகையாய் உனக்கு விடுதலை கிடைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால் கர்த்தருக்குக் காத்திரு. அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். திடமனதாய் இருந்து கர்த்தருக்கே காத்திரு.

தேவனும் அடைக்கலம்
கண்டவர்க்கு மா பெலம்,
நிழலிலே நடப்பார்
இரவிலே தங்குவார்.

ஏப்ரில்-மீ 1-உ

'கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்'

சங்கீதம் 23:1

அப்படியானால் தாவீது கர்த்தருடைய ஆடுகளில் ஒருவன். அவருடைய ஆடுகள் அவரை அறிந்து, அவரை நேசித்து, அவரைப் பின் செல்லும். அவைகளுக்கு அவருடைய குணமிருக்கும். அவர் சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவராயிருந்தார். நீ கிறிஸ்துவின் ஆடா? நீ உன் மேய்ப்பனைப் பார்த்து அவரைப் பின்சென்று, அவருக்குள் மகிழுகிறாயா? அப்படியானால் அவர் உன்னை நடத்துவார். உன்னைப் போஷிப்பார், உன்னை ஆதரிப்பார், உன்னைச் சுகப்படுத்துவார். நீயும், உன் ஜீவனும், உன் சுகமும், உன் ஆறுதலும், உன் க்ஷேமமும் அவரிடத்திலுண்டு. அவர் நல்ல மேய்ப்பன். தன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுத்தார். அவைகள் எங்கே சிதறுண்டிருந்தாலும் அவைகளைத் தேடிப்பிடிப்பார். தன் மந்தையைப் போஷிப்பார். ஆட்டுக் குட்டிகளைத் தன் கையில் சேர்த்துத் தன் மடியில் சுமந்துபோவார். தன் ஜீவனைப் பார்க்கிலும் தன் ஆடுகளை அதிகமாய் நேசித்தார். உலகமெல்லாவற்றையும்விட தன் ஆடுகளுக்காக அதிகக் கவலைப்படுகிறார். நல்ல மேய்ச்சலில் அவைகளை மேய்த்து, தம்முடைய நாமத்தினிமித்தம் அவைகளை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். இயேசுவை உன் மேய்ப்பராகப் பாரேன். அவர் உன்னை நடத்தி, உன்னைப் போஷித்து, உன்னைச் சேர்த்துச் சொல்லி முடியாத சந்தோஷத்தோடு தன் பிதாவுக்குமுன் நிறுத்தும்படி அவரை நோக்கிக்கொண்டிரு. அவரோடு ஒட்டிக்கொள். அவருடைய பாதத்தையும், அவருடைய மந்தையையும், அவருடைய தொழுவத்தையும், எந்த வகையிலும் விட்டுப் பிரியாதே. அவரும் உன்னை விட்டு விலகமாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார்.

என் மேய்ப்பர் கர்த்தரானவர்
நன்றாகக் காத்துவாரார்;
அனைத்தையும் என் ரட்சகர்
குறைவில்லாமல் தாரார்,
எல்லாத்திலும் ருசிகர
தெய்வீக வார்த்தையினுட
நல் மேய்ச்சலெனக்குண்டு.

'நான் தாழ்ச்சியடையேன்'

சங்கீதம் 23:1

கர்த்தர் தன் மேய்ப்பரென்று நம்பின தாவீது தனக்குத் தாழ்ச்சி இராதென்கிறான். நாம் கிறிஸ்துவின் ஆடுகளானால் அவர் நம்மை ஆதரிப்பார். சகலமும் அவருடையது. வெள்ளியும் பொன்னும் அவருடையது. மலைகளின்மேலுள்ள ஆயிரத்தாயிரம் ஆடுமாடுகளுங்கூட அவருடையது. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களெல்லாம் அவரிடத்தில்தான் இருக்கிறது. அவருடைய மனசு பட்சமுள்ளது, மிருதுவானது, வெகு தாராளம். அவர் கொடுப்பார். தம்முடைய மந்தையைப் போஷித்து, நடத்திக் காத்து, சீயோன் மலையில் கொண்டு போய்ச் சேர்க்க உடன்பட்டிருக்கிறார். நமக்கு வேண்டியதெல்லாவற்றையும் கொடுக்கச்செய்ய வாக்களித்திருக்கிறார். முற்காலங்களில் அவர் தம்முடைய மந்தையை நடத்தினது நமக்குப் போதிய ஆதாரம். நீதிமான்கள் எப்போதாவது கைவிடப்பட்டதுண்டா? அவருடைய ஆடுகள் ஏனோதானோவென்று கவலையின்றி விடப்பட்டதுண்டா? தாவீது எப்போதாவது குறைவுபட்டதுண்டா? அவனைப்போல மாறுதலுக்குட்பட்டுத் துன்பம் சகித்தவர்கள் வெகு சிலர். அப்படிப்பட்டவனும் தன் மரணப்படுக்கையில் தனக்கு விரும்பினதெல்லாம் கிடைத்ததென்கிறான். நீ கிறிஸ்துவுக்குச் சொந்தமானால் தாழ்ச்சியடையேன் என்று நன்றாய்ச் சொல்லலாம். நீ பயப்படுகிறது வீண். நீ கவலைப்படுகிறது விருதா. உன் கலக்கங்கள் பாவமாகும். உன்னை ஆதரிக்க ஒரு தேவனிருக்கையில் நீ சந்தோஷப்படவேண்டும். அப்போஸ்தலன் சொல்லுகிறதுபோல், 'என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.'

எக்குறை தேவன் தீரார்,
அவர் களஞ்சியத்தால்?
எத்தயை அவர் காட்டார்,
தம் வல்லப கரத்தால்?

ஏப்ரில்-மீ 3-உ

'உம்மைப் புகலிடமாகக் கொள்ளுகிறேன்'
சங்கீதம் 143:9

இது மோசத்தைக் காட்டுகிறது. கிறிஸ்தவனுக்குத் தன்ஞலும், பாவத்தாலும், சத்துருக்களாலும் மோசம் வருகிறதுண்டு. அவன் பயப்படுகிறதற்குக் காரணம் இராவிட்டாலும், அந்தப் பயம் வருத்தத்தைக் கொடுக்கும். தன்னைக் காத்துக்கொள்ளவாவது, தன் சத்துருக்களை மேற்கொள்ளவாவது அவனுக்குப் பெலனில்லை. தூரத்தில் புசல் வருகிறதைக் கண்டு மறைவிடந்தேட முன்யோசனை வேண்டும். புசல் வருமுன்னே, சத்துரு கிட்டுமுன் ஒளிந்துகொள்ள விவேகம்வேண்டும். நன்ருய்ச் சுகித்திருக்க இப்படிக் கவலைகொள்வது மிகவும் உத்தமம். விசுவாசி புத்தியுள்ளவனுனல் எப்பொழுதும் ஏகோவாவண்டைக்கு ஓடுவான். யாக்கோபு லாபானண்டைக்கு ஓடினுன். கைபிசகாய்க் கொள்றவன் அடைக்கலப் பட்டணத்திற்கு ஓடினுன்; பட்சி மலைக்கோடும்; கிறிஸ்தவனே தன் தேவனண்டைக்கு ஓடுகிருன். ஆசா வைத்தியரண்டைக்குப் போனுன்; எப்பிராயீம் யாரேப் ராஜாவண்டைக்குப் போனுன்; விசுவாசியோ தன் தேவனண்டைக்கே ஓகிருன். கர்த்தரும் அவனை ஏற்றுக்கொண்டு, அவனை நேசித்து, அவனைப் பாதுகாக்கிருர். ஜெபம்பண்ணி விசுவாசித்து நம்பிக்கையோடு ரட்சிப்புக்காக அவரிடத்தில் ஓடக்கடவோம். அவர் நம்மை அங்கீகரித்து, நம்மை அரவணைத்து, நமக்கு அடைக்கலமும் பெலனுமாவார். பாவத்தைவிட்டுத் தன்னை வெறுத்து உலகத்தைவிட்டோடு. இயேசுவண்டைக்கு ஓடு. அவர் மனம் எப்பொழுதும் நம்மை நோக்குகிறது. அவர் செவி நமக்குத் திறந்திருக்கிறது. அவர் கரம் நமக்கு உதவிசெய்ய, நம்மை ஆதரிக்க, விடுவிக்க ஆயத்தமாயிருக்கிறது. அவர் சிம்மாசனம் நமக்கு அடைக்கலஸ்தானம். அவர் வாக்கு நமக்கு ஆறுதல். அவர் சர்வவல்லமை நம்முடைய காப்பு.

மேய்ப்பன் கரத்தில் தங்கும்
ஆடுகள் ஏன் கலங்கும்?
பயப்படுத்துவோன் யார்?
தொந்தரிக்கவே விடார்?
அலையும் ஆட்டையவர்
நேசித்தின்னும் காப்பவர்.

'நான்தான் பயப்படாமலிருங்கள்'

யோவான் 6:20

கிறிஸ்தவன் பயப்படும்போது தன் கர்த்தரைக் கனவீனப்படுத்துகிறான்; தன் விசுவாசத்தை மறுதலிக்கிறான்; தன் சொந்த ஆத்துமாவுக்குச் சொல்லிமுடியாத வருத்தத்தை உண்டுபண்ணுகிறான். எல்லாம் கர்த்தரால் நடக்கிறது. அவர் தம்முடைய சித்தத்தின் யோசனையின்படியே சகலத்தையும் நடப்பித்து, ஒவ்வொரு காரியத்திலும் நான்தான் பயப்படாதிருங்களென்கிறார். சிநேகிதர் சத்துருக்களாய் மாறி நம்மை வருத்தப்படுத்துகிறார்களா? மரணம் நம்முடைய வீட்டிற்குள் பிரவேசித்து, நமக்குப் பிரியமானவர்களைப் பறித்துக் கொண்டு போகிறதா? வியாதி நம்மைப் படுக்கையில் போட்டு நமக்கு நோவுண்டாக்குகிறதா? நான்தான், பயப்படாதிருங்களென்கிறார். நமக்கு நஷ்டங்களும், வருத்தங்களும், துயரங்களும் நேரிட்டு மனநோவையுங் கலக்கத்தையும் கொடுக்கிறதா? நான்தான் பயப்படாதிருங்களென்கிறார். மரணம் சமீபித்து வந்து நம்முடைய அருமையான பந்து ஜனங்கள், சிநேகிதர், இனத்தார் இவர்களைப் பாராதபடிக்கு நம்முடைய கண்களை மூடுகிறதா? நான்தான் பயப்படாதிருங்களென்கிறார். வான லோகத்தின் ஸ்தம்பங்கள் பிளந்து, பூமியின் அஸ்திபாரங்கள் கரைந்துபோனாலும், ஆகாயம் காகிதம்போல், சுருண்டு போக, அந்தப் பெரிய வெள்ளையாசனம் காணப்பட்டாலும், உலகங்கள் மடமடவென்று விழுந்தழிகிற சத்தங்கேட்கும் போதும், இன்னும் அவர் நான்தான் பயப்படாதிருங்களென்கிறார். பாக்கியமுள்ள கிறிஸ்தவனே! நீ பயப்படுகிறதற்குக் காரணமே இல்லை. உன் நம்பிக்கைக்குப் பலத்த ஆதாரமுண்டு. இயேசுவில் சந்தோஷப்படு.

இயேசுவையே நான் நம்பி
அவரோ டொட்டிக்கொள்வேன்;
அவரிடம் திரும்பி
அவரன்பில் சாருவேன்,
கவலை பயம் நீங்கி
அவரே என்னைத் தாங்கி
வருவதால் மகிழ்வேன்.

'என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது'

யோவான் 15:5

கர்த்தரில் நம்முடைய நீதியும் பெலனுமிருக்கிறதென் பதை ஒருபோதும் மறவாதே. நம்மாலே சரியானபடி யோசிக்க முதலாய்ப் பெலனில்லை. அவராலே நாம் சகலத்தை யும் செய்யக்கூடும். இயேசுவினிடத்திலிருந்து வல்லமை பெறு முன்னே ஒன்றையும் செய்ய எத்தனியாதே. உன்னுடைய பெலவீனத்தை உணர்ந்து அறிந்தவன்போல, அவரிடத்தில் காத்திரு. அவர்பேரிலே சார்ந்திரு. சகல நன்மைக்கும் அவரே காரணரென்றிரு. உன்னாலே முடியாதது அவராலே முடியும். உன்னை நீயே கெடுத்துக்கொண்டாய். அவரிடத்தில் உனக்கு ஒத்தாசை யிருக்கிறது. அவரோடு ஐக்கியப்பட்டு அவரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டால்தான் நீ தேவனை மகிமைப்படுத்துவாய், உன் மார்க்கத்தை அலங்கரிப்பாய், உன் சிலாக்கியங்களை அனுபவிப்பாய், சுவிசேஷத்தின் பரி சுத்த சட்டங்களுக்குக் கீழ்ப்படிவாய். உன் சொந்த வல்லமை யின்மேல் துணிவுகொள்ளாதே. வனாந்தரத்திலிருந்து உன் நேசர்மேல் சார்ந்துவா. கர்த்தராகிய இயேசுவினிடத்தில் உனக்கு வேண்டிய சகலமும் இருக்கிறதென்று எண்ணி நட. நீ சகலத்திற்கும் அவரிடத்தில் போகவேண்டியவன். ஏழைக ளுக்கு அவரே தஞ்சம். அவதிப்படுகிற எளியவர்களுக்கு அவரே பெலன். உனக்கும் அவர்தான் பெலன். நேசனே,அவ உனக்கு உயிர்கொடுக்கும் சிரசு இயேசுதான். உனக்கு வேண் டியதெல்லாவற்றையும் உனக்குக் கொடுக்கிற ஊற்று அவர் தான். உன் கவலைகளெல்லாவற்றையும் நீ சொல்லவேண்டிய சிநேகிதன் அவர்தான். அவர் தம்முடைய நல்ல சித்தத்தின் படியே விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக் குகிறவராயிருக்கிறார்.

இயேசுவே! நீர் மாறாதவர்
நீரே சீவவிருட்சம்,
நீரென்னை ஆதரிப்பவர்
எனக்கு நீர் கடாட்சம்;
நம்பிக்கை பெலனும் சீவன்
உம்மாலே நான் வாழ்பவன்.

'அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்' பாத்திரராயிருக்கிறார்'

வெளிப்படுத்தின விசேஷம் 5:12

இது இயேசுவுக்குத் துதி. உன் இயேசுவுக்கே. அவர் பாவத்துக்குப் பலியானவர்; சபைக்கு அவரே பிராயச்சித்தம். தமது சரீரத்துக்கு அவரே ரட்சகர். உன் பாவத்துக்காக மரித்த இயேசு வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும் பெலனையும், தனத்தையும், ஆசீர்வாதத்தையும், மகிமையையும், பெறப் பாத்திரர். இயேசுவுக்கு நாம் மிஞ்சின துதியைக் கொடுக்கமாட்டோம்; அவர் நாம் விசுவாசிக்கப் பாத்திரர். சாத்தான், அவிசுவாசம், உலகம், மற்ற எதையும் விட அவர் பாத்திரர். எல்லாவற்றையும் பார்க்க, எல்லாரையும் பார்க்க, அவரை நம்பலாம். நாம் அவரைச் சிநேகிக்கப் பாத்திரர். மற்றவர்களைவிட, மற்ற யாவரையும் தள்ளி, அவரை நேசிக்கவேண்டும். நாம் கீழ்ப்படிய அவர் பாத்திரர்; வலதுகையைத் தறிக்கவும், வலது கண்ணைப் பிடுங்கவும் அவர் கட்டளையிட்டாலும், அவரை நாம் நேசிக்கத்தான் வேண்டும். நாம் பின்செல்ல அவர் பாத்திரர்; எங்கே நம்மை நடத்தினாலும், நாம் அவரைப் பின்செல்லவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் அவரை மதிக்கவேண்டும், சுகத்தைப்பார்க்கிலும், இன்பத்தைப்பார்க்கிலும், சவுக்கியத்தைப்பார்க்கிலும், ஆஸ்தியைப்பார்க்கிலும், மற்றெதையும் பார்க்கிலும், எல்லாவற்றையும் பார்க்கிலும் நாம் அவரை அதிகமாய் மதிக்கவேண்டும். அவர் நமக்கு மாதிரியாயிருக்கப் பாத்திரர்; நாம் நம்பத்தக்க ராஜன், நீமக்குச் சகலமுமாயிருக்கிறார். அவர் கேட்கிற சகலத்திற்கும் நாம் கொடுக்கக் கூடிய சகலத்திற்கும் அவர் பாத்திரர்தான். அவருடைய ஜனங்கள் அவருக்காகச் செய்த யாவற்றிற்கும், அவருக்காகச் சகித்த யாவற்றிற்கும் அவர் பாத்திரர்தான். அவர் வார்த்தையை விசுவாசி, அவர் கிருபையை நம்பு, அவர் கற்பனைக்குக் கீழ்ப்படி. எல்லாவற்றிற்கும் மேலாக அவரை மதி. பாவிகளை அவருடைய பாதத்தண்டைக்குக் கொண்டு வருகிறதே உன் அனுதின வேலையாயிருக்கட்டும். உன் பிரயத்தினம் யாவற்றிற்கும் அவர் பாத்திரர்.

இயேசுவுக்குப் பெலன் தனம்
யாவும் உரித்தல்லோ
அவருக்கு ஆசீர்வாதம்
என்றும் அடுக்காதோ!

'தேவையானது ஒன்றே'

லூக்கா 10:42

இவ்வுலக காரியங்கள் சீக்கிரம் ஒழிந்துபோம்; நித்தியத்துக்குரியவைகளோ என்றும் நிலைநிற்கும். இவ்வுலகம் ஒழிந்துபோம். சரீரம் சாகவேண்டும், பூமிக்குரிய சம்பந்தங்கள் அற்றுப்போகவேண்டும், ஆத்துமாவோ என்றைக்கும் உயிரோடிருக்கும். ஆத்தும சுகந்தான் தேவையான ஒரு காரியம். ஆத்துமா சுத்திகரிக்கப்பட்டு சுகமாயிருக்குமானால், அது இயேசுவின் பாதத்தண்டையில் கிடக்கும். அவருடைய வார்த்தைகள் அதற்கு ருசிக்கும். அவரோடு சம்பாஷிக்கிறது நல்ல விருந்தைப்பார்க்கிலும் அதற்கு இன்பமாயிருக்கும். அவரை அறிந்து நேசித்து, அவரை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரை அநுபவிக்க நாம் தேடுவோம். அவர் நமக்குச் சொந்தமானவரென்று காட்டுகிற அத்தாட்சி அவரோடு ஐக்கியப்படுதல்தான். இயேசுவின் பாதத்தண்டையில் வாசம் பண்ணுகிறவனுக்கு இயேசுவின் சமுகம் நித்திய மோட்சம். தற்காலத்துக்குரிய அற்ப விஷயங்கள் உன்னைக் கலக்கிப் பயப்படுத்தாதபடிக்குப் பார். தேவையான ஒரு காரியத்தை எப்போதும் விரும்பித் தேடு. இயேசுவின் பாதத்தண்டையில் நிலைத்திரு, உனக்குப் பயமில்லை. எல்லாவற்றைப்பார்க்கிலும் இயேசுவை உனக்குச் சொந்தமாக்கிக்கொள், நீ பாக்கியவானாய் இருப்பாய். சகலத்திலும் இயேசுவை மகிமைப்படுத்தப் பார், நீ பரிசுத்தனாய் இருப்பாய். தினந்தோறும் இயேசுவானவருடைய வருகைக்குக் காத்திரு, உன் நடக்கை உத்தமமாய் இருக்கும். ஆ, இயேசுவே! உம்மை எனக்குக் காண்பியும், என்னை உம்முடைய பாதத்தண்டைக்கு இழுத்து அங்கே என்னை வைத்திரும்.

மரியாளுடைய நற்பங்கு
எனக்குக் கிடையாதோ?
லோக நன்மை யாவும் தீங்கு
பேரின்பம் நீங்கிப் போமோ?

அவர் ரட்சிப்பார்

செப்பனியா 3:17

யாரை? கெட்டுப்போன, நிர்ப்பந்தமான, அபாத்திரமான, தம்மிடத்தில் வருகிற எவனையும் ரட்சிப்பார். 'கர்த்தருடைய நாமத்தைப்பற்றிக் கூப்பிடுகிற எவனும் ரட்சிக்கப்படுவான். 'என்னிடத்தில் வருகிறவனை நான் ஒருபோதும் தள்ளமாட்டேன்.' எப்படி ரட்சிப்பார்? இலவசமாய், பணமுமின்றி, காசுமின்றி, நிறைவாய்த் தம்முடைய ரத்தத்தினால், வல்லமையினாலும், திவ்விய செயலினாலும், நித்தம் அடைக்கலத்துக்காக அவரிடம் ஓடி மன்னிப்பு, சமாதானம், ஜீவன் இவைகளுக்காக அவரை அஸ்திபாரமாய்ப் பிடித்திருக்கிற யாவரும் நித்தியமாய் ரட்சிக்கப்படுவார்கள். அவர்கள் உலக முடிவுபரியந்தம் வெட்கமடையார்கள். கலக்கமடையார்கள். ஏன் ரட்சிப்பார்? அது பிதாவின் சித்தம். இரக்கங் காட்டுவதே அவருக்கு ஆனந்தம். அதினால் அவருடைய பெயர் என்றும் மகிமைப்படும். எதினின்று ரட்சிப்பார்? பாவத்தினின்றும் அதின் குற்றம், தீட்டு, வலிமையினின்றும் ரட்சிப்பார். இந்தப் பொல்லாத உலகத்தினின்று ரட்சிப்பார். சாத்தானிடத்திலிருந்து ரட்சிப்பார். மனிதருடைய பொல்லாத யோசனைகளினின்று ரட்சிப்பார். நமக்காகக் கிருபை பெற்று, நமக்குப் பதிலாக மரித்ததினால் நம்மை ரட்சித்தார். தம்முடைய சமுகத்தினாலும், வசனத்தினாலும், திவ்விய செயலினாலும், பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும் நம்மை ரட்சிக்கிறார். எந்தத் துன்பத்தில் இருந்தும், எந்தச் சத்துருவினின்றும் நம்மை முடிவுபரியந்தம் ரட்சிப்பார். உன்னை விடுவிக்க, உன்னை நடத்த, உன்னை ஆற்றித் தேற்ற, உன்னைக் காப்பாற்ற அவரையே நோக்கிப் பார். 'பூமியின் கடையாந்தரங்களே, என்னைப்பார்த்து ரட்சிக்கப்படுங்கள்; நானே தேவன், வேறொருத்தரும் இல்லை.'

கவலை நெருங்கும்போது
சந்தேகம் கொள்வேனோ?
முன்னே துன்பப்பட்டபோது
அவர் காக்கிலேயோ?

‘கர்த்தாவே, எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்’

லூக்கா 17:8

விசுவாசம் எப்படியோ விசுவாசியும் அப்படியே. விசுவாசம் பெலவீனமாயிருந்தால் அவன் பயங்காளியும், படப்படப்புள்ளவனும், கலக்கமுள்ளவனுமாயிருப்பான். விசுவாசம் பலமுள்ளதாய் சரியான இடத்தில் வைக்கப்பட்டிருக்குமானல், அவன் தைரியமுள்ளவனும், சுறுசுறுப்புள்ளவனும், பாக்கியசாலியுமாயிருப்பான். விசுவாசம் இயேசுவினிடத்திலிருந்து வருகிறது; அவரே அதைப் பிறப்பிக்கிறவர். அது இயேசுவண்டைக்கு நடத்துகிறது; அவரே அதின் முடிவு. விசுவாசம் கடுகு விதையைப்போலிருக்கிறது; அது வளரும், அதிகரிக்கும். நம்முடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுகிறவர் இயேசுதான். இன்று காலே அவரிடம் போய், கர்த்தாவே, என் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும் என்று ஜெபிப்போமாக. பலத்த விசுவாசம் நம்முடைய எண்ணத்திற்கும், தோற்றத்திற்கும் மேலாக விசுவாசிக்கும். தேவனேத் தேடிக் கண்டுபிடியாத இடத்திலும் அவரை நம்பும். அவர் வாக்குச்சொன்னதை நிறைவேற்றக்கூடியவர், நிச்சயமாகவே நிறைவேற்றுவார் என்று ஆத்துமாவுக்குத் திடன் சொல்லும். பெரிய விசுவாசத்திற்குப் பெரிய சோதனைகள் நேரிடும். சோதியாமல் விசுவாசத்தைத் தேவன் கொடுக்கிறதில்லே. விசுவாசத்தின் பலத்துக்குத் தக்கதாகச் சூளையைக் காங்கையாக்குவார். கொஞ்ச விசுவாசம் ரட்சகரைப் பிடித்து ரட்சிப்பைக் கொண்டுவரும். பலத்த விசுவாசம் ரட்சகரிடத்திலிருந்து அதிகத்தை அடிக்கடி பெற்றுப் பெரிய ஆறுதலைக் கொண்டுவரும். உனக்கிருக்கிற விசுவாசத்தோடு ரட்சகரண்டைக்குப் போ. அவர் கேட்கிற விசுவாசத்திற்காக அவரிடம் கெஞ்சு. விடாமல் கெஞ்சுகிறவனுக்குத் தாராளமாய்க் கொடுக்கிருர். உனக்கும் நிச்சயமாகவே கொடுப்பார்.

இயேசுவே! உம்மைத்தான் தாரும்
நின் சமுகந்தான் வேணும்,
விசுவாசம் கொண்டுவாரும்
அதை நீர் நன்றாய்ப் பேணும்,
அப்போ பாவச்சுமை நீங்கும்
என்னில் சந்தோஷம் தங்கும்.

'அவர் என்னை மகிமைப்படுத்துவார்'

யோவான் 14:16

இயேசுவை நாம் மகிமைப்படுத்தவேண்டுமானால், நம்முடைய பெருமையைக் குலைத்து, நம்முடைய ஆத்துமாவைத் தாழ்த்தவேண்டும். இயேசுவை மகிமைப்படுத்துகிறது ஆவியின் அலுவல். நம்முடைய நிர்ப்பந்தமான கெட்டுப்போன நிலைமையை நமக்குக் காண்பித்து, அவரிடம் நம்மை நடத்தி, அவரிடத்தில் இருந்து ரட்சிப்பைக் கெஞ்சிக் கேட்கும்படி செய்யும்போது, அவர் அவரை மகிமைப்படுத்துகிறார். தினந்தோறும் நம்மை வெறுமையாக்கி, நமக்கு வேண்டியதெல்லாவற்றிற்காகவும் அவரிடம் நம்மை நடத்தும்போது அவரை மகிமைப்படுத்துகிறார். தேவன் சிருஷ்டித்ததெல்லாம் அழியாத ஆத்துமாவை ஒரு நிமிஷமாவது திருப்தியாக்கமாட்டாதென்றும், நித்தியமாக அதைத் திருப்தியாக்கத்தக்கது போதுமானமட்டும் இயேசுவுக்குள் இருக்கிறதென்றும், நாம் பார்க்கும்படி செய்யும்போது அவரை மகிமைப்படுத்துகிறார். நாம் பாவத்துக்காகப் புலம்பி, அவருடைய ரத்தமாகிய ஊற்றில் நம்மைக் கழுவும்போது இயேசு மகிமைப்படுகிறார். நம்முடைய செய்கைகளையும் உணர்ச்சிகளையும் நாம் தள்ளி, அவருடைய நீதியிலேமாத்திரம் காணப்பட விரும்பும்போது அவர் மகிமைப்படுகிறார். நமக்கு வேண்டிய ஒத்தாசை, சுகம், ஆறுதலுக்காக அவரையே நோக்கும்போது இயேசு மகிமைப்படுகிறார். அவர் என்னையும் மகிமைப்படுத்துவார். இது பெருமையையும், நான் என்கிற ஆணுவத்தையும், சிருஷ்டிகளிலுள்ள சகல மேன்மையையும் அழித்துப் போடுகிறது. நேசனே! நீ வார்த்தையிலாவது செய்கையிலாவது எதைச் செய்தாலும் சகலத்தையும் இயேசுவின் மகிமைக்கென்றே செய்; அவர் சகலத்திற்கும் ஆண்டவர்.

கீழே இருந்தென்னை இழும்
உம்மை நான் பார்க்கட்டுமே!
நான் உன் தேவனென்று சொல்லும்
என்னில் வாசம் பண்ணுமே!
என் ஆவி தேகம் யாவுமே
உம்மில் அடங்கட்டுமே.

'அவள் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி போனாள்'
ஆதியாகமம் 25:22

நேர்த்தியான மாதிரி. நாம் ரெபேக்காள் செய்ததுபோலச் செய்யவேண்டும்; அப்படிச் செய்யென்று கர்த்தர் நமக்குக் கற்பிக்கிறார். 'உன் வழிகளில் எல்லாம் அவரை அறிந்து கொள், அவர் உன் பாதையை நடத்துவார்; உன் வழியைக் கர்த்தருக்குச் சாட்டிவிட்டு அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவர் அதை நிறைவேற்றுவார்.' நீ துன்பப்படுகிறாயா? கர்த்தரிடத்தில் போய் அதற்குக் காரணமென்னவென்று கேள். யோபைப்போல் ஜெபம்பண்ணி, 'என்னத்திற்காக என்னோடு போராடுகிறீர்? அதைக் காட்டும்' என்று விசாரி. கலங்கி நிற்கிறாயா? அவருடைய நோக்கமென்னவென்று ஆராய்ந்து பார். நீ போகவேண்டிய வழியை உனக்குப் போதித்துக் கற்பித்துத் தம்முடைய கண்ணைக்கொண்டு உன்னை நடத்துவார். விசாரிக்கிற மனசோடு போ. உன் நிலைமையையும், உன் வருத்தமும் எப்படிப்பட்டதாயிருந்தாலும், நீ இயேசுவை விசுவாசிக்கிறவனானபடியால், கோபமும் சாபமும் உன்னை அணுகாது. இயேசு உனக்காக மரித்தபோது, அதெல்லம் அற்றுப் போனது என்று நம்பிப் போ. தேவனிடத்திலிருந்து வருகிற எதுவும், ஆசீர்வாதம், நன்மை, தயவு, அவர் சிநேகத்துக்கு அத்தாட்சி என்று நிச்சயமாயிரு. அது எவ்வளவு வருத்தமும், கவலையும் துன்பமுமாயிருந்தாலும் நீ பயப்படவேண்டியதில்லை. நியாயம் பேசாமல் உன் தேவனுடைய வாக்கைப் பிடி, அவநம்பிக்கைக்கு இடங்கொடாதே, வீணாய் விசனப்படாதே, முறையிடாதே, கர்த்தரிடத்தில் போய் விசாரி. அவருடைய சிம்மாசனத்தண்டைக்குப் போய் அவருடைய வார்த்தையை ஆராய்ந்து பார். அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டுமென்கிறார்.

ஜெபம் நமக்காசீர்வாதம்
கொண்டுவரும் நல் வாக்கால்.
கிறிஸ்தவர்கள் ஏகபாதம்
என்றும் தேடி சேருங்கால்.

'அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார்'
2 தீமோத்தேயு 2:13

தேவன் தம்முடைய மனதைத் தம்முடைய வசனத்தில் தெரியப்படுத்தியிருக்கிறுர். தம்முடைய சித்தம் இன்னதென்று நம்மெல்லாருக்கும் வெளிப்படுத்தியிருக்கிறுர். ஒவ்வொரு வார்த்தையிலும் அவருடைய நோக்கம் காணப்படுகிறது அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் நிறைவேற்றுவார்: அவர் தம்மைத்தாமே மறுதலிக்கமாட்டார். தம்முடைய வார்த்தையைப் பொய்யாக்கமாட்டார். அப்படிச் செய்யும்படிக்கான சோதனை அவருக்கில்லை. மனிதன் நிலையற்றவன், அவன் முறிந்த நாணல்; ஏகோவாவோ என்றும் ஒரே சீராயிருக்கிறவர், அவர் என்றுமுள்ள கன்மலை. தம்மைத் தேடுகிற நிர்ப்பந்தர்மேல் மனதுருகுவார். இயேசுவின் நாமத்தைச் சொல்லித் தம்மை நோக்கிக் கெஞ்சுகிறவர்களுக்கு இரங்குவார். தம்மிடத்தில் வருகிற பாவியைத் தள்ளார். சீர்கெட்டவனுடைய அறிக்கையைப் புறக்கணிக்கமாட்டார். நம்முடைய கூப்பிடுதலுக்குச் செவியை அடைத்துக்கொள்ளமாட்டார். அவருடைய நாமத்தைப்பற்றிக் கெஞ்சும்போது விடுவிக்காமற் போகவுமாட்டார். தம்முடைய சாவகாசம் பார்த்துச் செய்வார். தம்முடைய வார்த்தையைக் கனக்குறைச்சல் செய்யமாட்டார். தண்டனைகளையும், வாக்குத்தத்தங்களையும் ஒன்றும் விடாமல் நிறைவேற்றுவார். நாம் தைரியமாய் அவரை நம்பக்கடவோம். அவருடைய வாக்கு நம்மிடத்திலுண்டு. அது துவக்கமுதல் உண்மையுள்ளது. அவர் தம்மைத்தாமே மறுதலிக்கமாட்டார் என்கிற நிச்சயம் நமக்குண்டு. நமது தேவனுடைய வார்த்தையின்மேல் நிற்போமாக. இரா இருட்டானுலும், சுமை பாரமானுலும் நாம் அவரை நம்பவேண்டும். அவர் சொல்லுகிறதைக் கேள். என்றைக்கும் ஏகோவாவை நம்புங்கள், ஏகோவாவாகிய கர்த்தரிடத்தில் நித்திய பெலனுண்டு.

கல்மேல் வரைந்த வாக்கு
பிரகாசிக்கு தெனக்கு
பேய்களெல்லாம் கூடியும்
குலைக்கத்தான் தேடியும்.

'நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்?'

லூக்கா 24:38

இயேசுவானவர் உங்களுக்காக என்ன செய்தார்? என்ன வாக்குத்தத்தம் பண்ணினார்? என்னத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போயிருக்கிறார் என்கிறதைக் கவனியுங்கள். உங்களுக்கு அவர் எப்படிப்பட்டவர் என்று பாருங்கள். உங்கள் அன்பான பக்தர், உங்கள் உத்தம சிநேகிதன், கிருபை நிறைந்த ரட்சகர். உங்களை வருத்தப்படுத்துகிறதென்ன? பாவமா? அதை அவர் மன்னிப்பார், கீழ்ப்படுத்துவார், அழிப்பார். உலகமா? அதை அவர் ஜெயித்தார், அதினின்று உங்களை மீட்டார். அதின்மூலமாய் உங்களை நடத்துகிறார். சாத்தானா? அவனை ஜெயித்து ஆக்கினைக்குள்ளாக்கினார். சீக்கிரம் சிறையாக அடைக்கப்படுவான். இவ்வுலகக் கவலைகளும் துன்பங்களும் உங்களை மலைக்கச்செய்கிறதா? இயேசுவானவர் சொல்லுகிறதென்ன? 'ஜெபத்திலே அவைகளை என்னிடம் கொண்டுவா, விசுவாசத்தோடு அவைகளை என்மேலே வை; என்னிடத்தில் விட்டுவிடு, உனக்குத் தேவையானதை உனக்குத் தருவேன் உனக்கு வேண்டியதெல்லாவற்றையும் கொடுப்பேன். உன் அப்பம் உனக்குக் கிடைக்கும், உன் தண்ணீர் நிச்சயமாயிருக்கும்; துன்பமென்னும் வனாந்தரத்தில் உனக்குப் பாதை உண்டுபண்ணுவேன்; கலக்கமென்னும் காட்டில் உனக்கு வழி திறப்பேன். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனை விசுவாசியுங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என்னைச் சோதித்துப்பார்த்து என்னை நம்புங்கள், உங்கள் வழிகளிலெல்லாம் என்னை அறிக்கையிடுங்கள்; நான் உங்களை நடத்துவேன், என்னிடத்தில் ஞானமும், வல்லமையும், அன்புமுண்டு. என்னுடையதெல்லாம் உங்களுடையது, உங்கள் நன்மைக்காகத்தான் இருக்கிறது. உன் வழியைக் கர்த்தருக்குச் சாட்டிவிடு, அவரை நம்பு, அவர் உன் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.'

உன் முழுமனதோடு
உனக்குள்ள யாவையும்
உன் கர்த்தாவுக்கே கொடு
சகல பொல்லாப்பையும்,
நீக்குவார் சமாதானம்
பக்தர் அடைந்த கனம்
உனக்கும் அதே தனம்.

‘அவருக்குள் நீங்கள் சம்பூரணமுள்ளவர்களா யிருக்கிறீர்கள்’
கொலோசெயர் 2:10

உன்னைத்தானே அதிகமாய் நோக்காதே. அங்கே வெறுமையும், பெலவீனமும், பாவமும், நிர்ப்பாக்கியமுந்தான் இருக்கும். உன் தேவன் உன்னைத் தம்முடைய அன்பான குமாரனோடு சேர்த்திருக்கிறார்; இயேசு உன்னோடு ஒன்றாயிருக்கிறார். அவரிடத்தில் இருக்கிறதெல்லாம் உன்னுடையது; நீ அசுத்தமுள்ளவன், உனக்காக அவர் பரிசுத்தமானார். உன்னை ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் பரிசுத்தமாக்குவார். நீ புத்தியீனன். அவர் உனக்காக ஞானமாக்கப்பட்டார். அவர் உன்னை ரட்சிப்புக்கேற்ற ஞானவானாக்குவார். நீ பெலவீனன், அவர் உனக்குப் பெலன். அவர் உன்னைப் பெலப்படுத்தும் போது நீ சகலத்தையும் செய்வாய். நீ நீதியற்றவன், அவர் உனக்காக நீதியானார். நீ நீதிமானாகமாத்திரமல்ல, அவருக்குள் தேவ நீதியாவுமிருக்கிறாய். நீ கெட்டுப்போனவன், அவர் உனக்கு மீட்பானார். தேவனுடைய சாபத்தினின்றும், இந்தப் பொல்லாத உலகத்தினின்றும் உன்னை மீட்டார், மரணத்தினின்று உன்னை மீட்பார். உன்னில் நீ குறையுள்ளவன்மாத்திரமல்ல, நிர்ப்பந்தன், நிர்ப்பாக்கியன், தரித்திரன், குருடன், நிருவாணி; இயேசுவிலோ நீ பரிசுத்தன், ஞானமுள்ளவன், பெலவான், நீதியுள்ளவன், ஐசுவரியமுள்ளவன், பாக்கியசாலி; ஒரு வார்த்தையில் நீ சம்பூரணமுள்ளவன், கிறிஸ்துவிலே நீ நிறையுள்ளவன் என்பதைச் சில வேளைகளிலாவது கவனித்துப்பார். அவர் எல்லா வல்லமைக்கும், துரைத்தனத்திற்கும் அதிகாரி.

மோட்ச மார்க்கத்தில் களித்து
அவர்மேல் சார்ந்து ஓடு,
அவர் சமுகத்தைப் பார்த்து
அவர் நாமத்தைத் தேடு,
அவரிலே நீ பூரணன்
அவர் நீதி உன் பெலன்.

‘மேலானவைகளையே நாடுங்கள்’

கொலோசெயர் 3:2

உலக காரியங்களில் நாம் அதிகமாய் நாட்டம் வைக்கிறோம்; நம்முடைய மனம் மேலானவைகளைப பற்றியிருக்க வேண்டும். இந்தக் காலையில் நம்முடைய கண்ணையும் மனதையும் பரத்துக்கு ஏறெடுப்போமாக. நாம் சிநேகித்து விரும்பி மதிக்கத்தகுந்தவைகள் அங்கேதான் இருக்கிறது. நம்முடைய பரம தகப்பனாகிய ஏகோவா அங்கே இருக்கிறார். ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறார். அங்கே இயேசுவும் இருக்கிறார்; வணங்கப்படத்தக்க அருமையான ரட்சகர் பிதாவின் வலது பாரிசத்தில் உயர்த்தப்பட்டு மகிமை அடைந்தார்; அங்கே பரிசுத்த ஆவியும் இருக்கிறார். நமக்கு இரங்குகிற தேற்றரவாளன், கிருபை நிறைந்த திவ்விய ஆவி. அங்கே தேவனுடைய அன்பையும், தயவையும், சமுகத்தையும் நிறைவாய் அனுபவிக்கலாம். அங்கே வெளிப்படையாய்ச் சமாதானத்தையும், இளைப்பாறுதலையும், பாக்கியத்தையும் காணலாம். அங்கே நீதியின் கிரீடமுண்டு; மகிமையின் சிம்மாசனம், இன்ப நதிகள், தேவன் நமக்கு வாக்குக்கொடுத்து நமக்கு முன் வைத்திருக்கிறவைகள், நமக்கு முன்போன சகோதரரும் அங்கே உண்டு. நம்முடைய ஆசைகளும் அங்கே இருக்க வேண்டும். இந்தப் பூமி என்னத்திற்கு? அது எப்படிப்பட்டதானாலும், நாம் அதை விட்டுப் போகவேண்டும். நம்முடைய காலம் எவ்வளவானாலும் அது சீக்கிரம் முடியும். ஆதலால் கீழானவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுவோமாக.

மோட்சத்தில் நித்திய ஆனந்தம்
என் ஆத்துமாவுக்கிருக்கச்சே,
இப்பொல்லாத லோகபந்தம்
எனக்கு தகாதாகச்சே
இயேசு சுவாமி என்னை இழும்;
அன்பின் றக்கையால் நீர் வாரும்
மோட்ச லோகம் சென்று வாழும்
பக்தர் கூட்டம் என்னைச் சேரும்.

'அவர் நம்முடைய அக்கிரமங்களை அடக்குவார்'

மீகா 7:19

பாவத்தை மன்னிக்கிறது போதாது; நம்முடைய கெட்ட சுபாவம் கீழாக்கப்படவேண்டும். இரண்டையும் செய்வோம் என்று ஆண்டவர் சொல்லுகிறார். தேவகிருபை மன்னிக்கிறது. தேவவல்லமை கீழ்ப்படுத்துகிறது. கிருபையும் வல்லமையும் பாவியை ரட்சிக்கிறதில் எப்போதும் ஒன்றாய்ச் சேருகிறது. மன்னிப்பு முதலாவது வருகிறது; அதற்குப் பிறகு பரிசுத்தம். நம்முடைய அறிவின்மேல் வெளிச்சம் பிரகாசிக்கும்போது, நம்முடைய இருதயத்தில் அக்கிரமம் கிரியைசெய்கிறதைப் பார்க்கிறோம். இருதயத்தில் பரிசுத்தம் நிலையாயிருக்கும்போது பாவத்தைப் பகைத்து அதை வெறுக்கும். அதினின்று விடுதலையாக ஜெபம் தேவனிடத்திற் சேரும்போது, அவருடைய வல்லமை இறங்கி அதைக் கீழ்ப்படுத்தும். நன்றாய் அணையாத தீ மறுபடியும் மறுபடியும் எரிகிறதுபோல, ஒரு ராஜ்யத்திலுள்ள கலகக்காரரைப்போல, ஆத்துமத்திலுள்ள சமாதானத்தையும் பாக்கியத்தையும் சமயம் கிடைக்கும்போதெல்லாம் கெடுக்கும். இந்தக் காலையில் கர்த்தர் உனக்குச் சொல்லுகிறதைக் கேள். உன் அக்கிரமத்தை அடக்குவேன் என்கிறார். உன் முறைப்பாட்டை அவருடைய ஆசனத் தண்டையில் கொண்டுபோ. அவருடைய உண்மையுள்ள வாக்கைச் சொல்லிக் கெஞ்சு. உன் அக்கிரமங்களை அடக்க வல்லமை தருவேனென்று அவர் சொன்ன வாக்குக்கு எதிர்பார்த்திரு. பாவம் உன்மேல் ஜெயங்கொள்வதில்லை. நீ நியாயப்பிரமாணத்தின் கீழல்ல, கிருபையின் கீழிருக்கிறாய். கிருபை ஆளும்போது எந்த இச்சையும் ஜெயிக்கப்பட்டுப்போம்.

இயேசு உமது மட்டற்ற
அன்பு யார் சொல்லக்கூடும்?
என் மனசு உம்மோடொட்ட
உம்மில் தரிக்க நாடும்;
உமதன்பு என்னில் தங்கி
வாசம்பண்ணச் செய்திடும்,
நானும் உம்மிடம் நெருங்கி
வாழ்த்திப் போற்றப் பண்ணிடும்.

ஏப்ரில்-மீ 17-உ

'நமக்கு முன்னோடினவராகிய இயேசு நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்'

எபிரெயர் 6:20

இயேசு செய்ததெல்லாம் தம்முடைய ஜனங்களுக்காகத் தான். நம்முடைய முன்னோடியாகப் பரலோகத்திற்குப் போயிருக்கிறார். ஒரு சேனைக்குமுன்னே தடைகளை நீக்க, வழியைச் செம்மைப்படுத்த பிரயாணத்திற்கு வேண்டியதை ஆயத்தம்பண்ண வேலைக்காரர் போகிறதுபோல, இயேசு நமக்கு முன்னே போயிருக்கிறார். பட்சமுள்ள நம்முடைய நல்ல சிநேகிதனைப்போல வழியை நமக்கு ஆயத்தம்பண்ணு கிறார். புத்தியுள்ள வழிகாட்டியாக நடக்கும் பாதையைக் காட்டுகிறார். நம்முடைய மாதிரியாக நமக்கு முன்னேபோய் 'என்னைப் பின்செல்லுங்கள்' என்கிறார். நமக்குப் பிதாவிடத் தில் இப்போது ஒரு காரியக் கர்த்தருண்டு; வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுகிற ஒரு பத்தா உண்டு: நம்மை ஏற்றுக் கொள்ளக் காத்திருக்கிற ஒரு ரட்சகருண்டு. நாம் அவருடைய சிம்மாசனத்தண்டை சேர்ந்து: 'கர்த்தாவே, இப்போது என் மனதின் கவலையை உம்முடைய அனுபவத்தால் அறிந்திருக்கி றீர்; நீர் முன்னே எல்லாவற்றிலும் என்னைப்போல் சோதிக் கப்பட்டீர்' என்று நன்றாய்ச் சொல்லலாம். ஆசையோடே நமக்கு எதிர்கொண்டு, சந்தோஷத்தோடே நம்மை ஏற்றுக் கொள்ளுகிற ஒருவர் பரலோகத்தில் இருக்கிறார். அவரை இங்கே அறிந்திருக்கிறோம். அங்கே போய்ச் சேரும்போது அவரை அறிவோம். அனுபவிப்போம். இன்னும் அதிகமாய் நேசிப்போம்: நமக்காக அவர் பரத்தில் சென்றிருக்கிறார். அங்கே நாம் போய்ச் சேர்ந்தால்தான் அவர் நமக்காகப் பரிந்துபேசினதினால் உண்டான நன்மைகளைச் சரியானபடி அறிந்துகொள்வோம். என் ஆத்துமாவே, இயேசுவை உன் முன்னோடியாகப் பார்த்து அவருடைய அடிகளைப் பின் தொடர்ந்துபோ.

இயேசு பிதாவின் முன்னின்று
பக்தர்க்காய் ஜெபிக்கிறார்;
மா கடாட்சம் வேண்டுமென்று
கெஞ்சிக்கொண்டு நிற்கிறார்.

ஏப்ரில்-மீ 18-உ

'எங்களுடைய தகுதி தேவனாலுண்டாயிருக்கிறது'

2 கொரிந்தியர் 3:5

நாம் இதைக் கவனிக்கவேண்டும்; நம்முடைய பெலவீனத்தினிமித்தம், வழியில் நமக்கு நேரிடும் வருத்தங்களினிமித்தம், நாம் சோர்ந்துபோகும்போதெல்லாம் இதை நினைக்கவேண்டும். நாம் பெலவீனர், அவர் பெலத்தவர். நம்முடைய பெலவீனத்தில் அவருடைய பெலன் பூரணப்பட்டிருக்கிறது. அவர் தம்முடைய நல்ல சித்தத்தின்படியே விருப்பத்தையும், செய்கையையும் நமக்குள்ளே நிறைவேற்றுவோமென்று வாக்கருளியிருக்கிறார். அவர் சொன்னால் அப்படியே நடக்கும். அவருடைய வார்த்தைக்குத் தடையுமில்லை, தடங்கலுமில்லை. சகலமும் அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். அவர் மோசேயைப் பார்வோனிடத்திற்கு அனுப்பினபோது, நிச்சயமாகவே நான் உன்னோடிருப்பேன் என்று சொன்னாரே, கர்த்தருடைய சமுகம் அவனுக்குப் பெலனாயிருந்ததே; நம்மையும் இப்படியே நடத்துகிறார். அவருடைய நிறைவு நமக்குப் போதுமானது; அது இயேசுவில் நமக்குத் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. நமக்கு வேண்டியதற்குத்தக்கதாக, நம்முடைய பெலவீனத்திற்கும் விசுவாசத்திற்கும் தக்கதாக அதினின்று பெற்றுக்கொள்ளுகிறோம். கர்த்தரால் நாம் பராக்கிரமம் செய்வோமென்று தாவீது சொன்னான். என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினால் நான் சகலத்தையும் செய்யக்கூடுமென்று பவுல் சொன்னான். உன்னுடைய வெறுமையையும் பெலவீனத்தையும் பாராதே; தேவன் தம்முடைய ஜனங்களுக்கு எப்படியிருக்கிறாரென்றும், அவர்களுக்கு என்னத்தை வாக்கு அருளிச்செய்திருக்கிறாரென்றும் பார். எங்களுடைய தகுதி தேவனாலுண்டாயிருக்கிறதென்று பாடு; தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனுமானவர். எங்கள் நாட்களுக்குத்தக்கதாக எங்கள் பெலனும் இருக்கும், அவருடைய கிருபை எங்களுக்குப் போதும், அவருடைய பெலன் எங்களுடைய பெலவீனத்தில் நிறைவாயிருக்கிறதென்று பாடு.

வழி தெரியாதிருக்கில்
நம்பிக் கீழ்ப்படிவோமாக;
நட; போ என்றவர் சொல்லில்
அவர் சொற்கமைவோமாக.

‘மாயை வழிகளில் என்னை உயிர்ப்பியும்’

சங்கீதம் 119:37

நாம் எவ்வளவாய் உயிரற்ற சிருஷ்டிகளென்று அடிக்கடி காண்கிறோம்; ஏழை மந்தமுள்ள சிருஷ்டிகள். இந்த ஜெபம் நமக்கு எவ்வளவு அவசியம். தேவ கற்பனைகள் வழியாய் ஓடுவது நம்முடைய கடமை. பாவத்தினாலும், பெலவீனத்தினாலும், சோதனையினாலும், நகருகிறதற்கு முதலாய்ப் பெலனற்று நிர்ப்பந்தரானோம். உயிர்ப்பிக்கிற ஆவியினால்தான் நாம் எதையும் செய்யலாம்; பலப்படுத்தி, உற்சாகப்படுத்தி, உயிர்ப்பிக்கிறவர் அவர்தான். இந்தக் காலையில் ஆவிக்கென்று பிழைப்போமாக. அவர் கிருபை நிறைந்தவர், கிருபையைத் தருகிறவர்; இயேசுவை மகிமைப்படுத்தி அவரைக் கனப்படுத்துகிறது தான் அவருக்குப் பிரியம். அவருடைய காரியத்தில் நாம் மகிமை வரப்பண்ணத்தக்கதாக நம்முடைய ஆத்துமங்களை உயிர்ப்பிக்கும்படி இயேசுவின் நாமத்தை முன்னிட்டு அவர் நிமித்தம் கெஞ்சுவோமாக. தேவனுக்குச் சமீபமாய் நம்மைக் கொண்டுவர நாம் அவரை வேண்டிக்கொள்ளுவோமாக. அவருக்கு எவ்வளவு சமீபமாயிருக்கிறோமோ அவ்வளவுக்குப் பாக்கியவான்களாய், பரிசுத்தவான்களாய், சுறுசுறுப்புள்ளவர்களாயிருப்போம். இயேசுவின் அன்பை நம்முடைய இருதயங்களில் ஊற்றும்படி அவரைக் கேட்போமாக. இயேசுவின் அன்புதான் நன்றாய் ஜீவியம்பண்ண, சிலுவையை நன்றாய்ச் சுமக்க, கடமைகளை நன்றாய் நிறைவேற்ற, நன்றாய் மரிக்க நமக்குப் பெலன் தரும். கற்பனை நமக்குச் சட்டமாகிறது. வாக்குத்தத்தம் நமக்குப் பெலன் தருகிறது. ஆவியானவர்தான் வாக்குத்தத்தம் நமக்குச் சொந்தமாக்குகிறவர். அப்படிச் செய்யாவிட்டால், சுவிசேஷ சிந்தையோடு நாம் கற்பனையைக் கைக்கொள்ளமாட்டோம். நாம் சுறுசுறுப்புள்ளவர்களாய் நம்மைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவரைச் சேவிக்கவேண்டுமானால், இயேசுவின் சமுகம் நம்மோடிருக்க வேண்டும்; அவருடைய கிருபை நமக்குக் கிடைக்கவேண்டும்.

நின் கிருபை எனக்குத் தா
உன் வழியில் ஓடுவேன்;
உமதடியேன் என்னைக் கா
இல்லாவிடில் கெடுவேன்.

ஏப்ரில்-மீ 20-உ

‘கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமை

கலாத்தியர் 5:1

நாம் முன்னே பாவத்துக்கும், சாத்தானுக்கும், உலகத்திற்கும் அடிமைகளாயிருந்தோம். நியாயப்பிரமாணத்திற்கு ஜீவ உடன்படிக்கையாகக் கீழ்ப்பட்டிருந்தோம், கிறிஸ்து தான் நம்மை விடுதலையாக்கினர். நியாயப்பிரமாணத்தினின்று விடுதலையாக்கப்பட்டுக் கிருபைக்குக் கீழானேம்; பாவத்துக்கு மரித்து அதினின்று தப்புவிக்கப்பட்டோம்; சாத்தானிடத்திலிருந்து விடுதலையாகி அவனேடு போர் செய்கிறவர்களாயிருக்கிறேம்; உலகத்தை ஜெயித்து அதை விட்டுப் போகத் துரிதப்படுகிறேம்; தேவனுக்கு ஊழியஞ்செய்ய, சிநேகத்தோடும், பரிசுத்த அன்போடும் அவரோடு நடக்கச் சுயாதீனரானேம். நமக்குச் சுயாதீனத்தைச் சம்பாதிக்க இயேசுவின் ஜீவனும், மரணமும் கிரயமாய்க் கொடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியின் வல்லமையும் கிரியையுந்தான் அந்தச் சுயாதீனத்தை நமக்குள் நடப்பிக்கிறது. இதற்குக் காரணம் நமது பிதாவாகிய தேவனுடைய நித்திய அளவற்ற அன்பு; காரணம் சுத்த சுவிசேஷம். இதினல் நம்முடைய சுயாதீனத்தை அறிந்துகொள்ளுகிறேம். சுயாதீனத்தை நமக்குச் சொந்தமாக்குகிறது விசுவாசம். சுயாதீனம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நோக்கம், நம்முடைய ஜீவகாலமெல்லாம் நீதியோடும் பரிசுத்தத்தோடும் தேவனுக்கு ஊழியம்செய்து அவரோடு என்றும் மகிமைப்படுவதுதான். நாம் பரிசுத்தராயிருக்கும்படி தேவனிடத்தில் சேர்ந்து அவரால் அங்கீகரிக்கப்பட்டோம். கிறிஸ்து நமக்குண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைத்திருப்போமாக.

கிறிஸ்தீயும் சுயாதீனம்
எவ்வளவோ அருமை,
மாந்தர்க்கறிவீனம்
பக்தர் யார்க்கும் பெருமை;
அச்சம் கவலை நீங்கி,
லோக சிந்தை சுருக்கி
மோட்சமவர்க்காதீனம்.

'உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நட'
மீகா 6:8

பெருமை ஒரு பெரிய தீமை; அதற்கு இடங்கொடுக்கிறது பாம்பை மடியில் வைத்து ஆதரிப்பதுபோல இருக்கிறது. தேவ கிருபை நமக்கு எப்போதும் தாழ்மையைக் கொடுக்கிறது. நாம் தாழ்மையாயிருந்தால்தான் பாக்கியரா யிருப்போம். தாழ்மையுள்ள மனுஷனோடு தேவன் நடக்கச் சம்மதிக்கிறார்; பெருமையுள்ளவனையோ தூரத்தில் வைக்கிறார். சுபாவத்தின்படி நீ எப்படிப்பட்டவனாயிருந்தாய்? இப்போது உன் இருதயத்தில் மறைந்துகிடக்கிற கேடெவ்வளவு? தேவ கிருபை இல்லாவிட்டால் நீ எப்படிப்பட்டவனாயிருப்பாய் என்பதை நினைத்துத் தாழ்மையாயிரு. உனக்குள்ளதெல்லாம் கிருபையினால், இலவசமாய்க் கிடைத்த ஈவு; நீ நன்மைசெய்கிறதுண்டானால், அது தேவன் உன்னில் கிரியைசெய்கிறதினால் வருகிறது. நீ எதைப்பற்றிப் பெருமைகொள்ளலாம்? பெருமை கொள்ள உனக்கென்ன நியாயமிருக்கிறது? உனனைத் தாழ்த்திப் புழுதியில் கிட. உன்னைப்பற்றின தாழ்ந்த எண்ணங்களை மனதில் பேணு. இவ்வளவு அற்பனும் அபாத்திரனுமான புழுவைக் கவனித்த தேவ இரக்கம், உருக்கம், தாழ்மை இவைகளைப் பார்த்து ஆச்சரியப்படு. தாழ்மையுள்ள இயேசுவின் தன்மையையும் நடத்தையையும் பார்த்து படி; அவரிடத்தில் கற்றுக்கொள்; அவர் நடந்தபடி நடக்கப்பார். தாழ்ந்த மனசோடு கர்த்தருக்கு ஊழியஞ்செய்; வெளிவேஷமான தாழ்மையைக் குறித்து எச்சரிக்கையாயிரு. தேவன் வாக்குத்தத்தம் பண்ணின அதிக மேலான காரியத்தைத் தேடாமல், தேவன் கற்பித்த உயர்ந்த கடமைகளை நிறைவேற்றாமல், இருந்தமட்டிலிருக்கிறது தாழ்மையல்ல.

கிறிஸ்துவில் விசுவாசித்து
தேவனோடு நடப்பேன்;
மோட்சத்தை நான் என்முன் வைத்து
தேவவாக்கைப் பிடிப்பேன்;
லோகம், பேய் என்னை எதிர்த்தும்
உன் பயணமின்பமாம்;
என் மனம் என்னை வஞ்சித்தும்
கர்த்தரில் நான் சுகமாம்.

ஏப்ரில்-மீ 22-உ

'நான் உனக்கு மெய்யாகவே நன்மைசெய்வேன்'
ஆதியாகமம் 32:12

இந்த வாக்குத்தத்தம் யாக்கோபுக்குக் கொடுக்கப்பட்ட போதிலும் அவனுக்கு மாத்திரமல்ல, ஆவியின்படி அவன் வித்தான யாவருக்கும் உரியது. நம்மை இப்படிப்பட்டவர்களாகப் பாவித்து, தேவன் இந்தக் காலையில் நம்மோடு பேசுகிறார். எவ்வளவு பெரிய கிருபை! ஒரு நாளிலே என்ன நடக்குமென்று நமக்குத் தெரியாது. எந்தக் காரியத்தையும் ஆண்டு நடத்துகிற தேவன் நமக்கு நன்மை செய்வாரென்றறிவோம; நமக்கு நன்மையானது நமக்கே தெரியமாட்டாது. அளவற்ற ஞானமும் தயவுமுள்ள அவருக்குத் தெரியும். துன்பங்களையும், நஷ்டங்களையும், சிலுவைகளையும் பார்த்து இவைகளெல்லாம் எனக்கு விரோதமாயிருக்கிறதென்று சத்தமிடுவோம். தாவீதின் சரித்திரத்தை வாசித்துப்பார்; அவனுக்கு எத்தனை துன்பங்கள் வந்தன; அவன் சொன்னதென்ன? 'நான உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது.' உன் தேவன் உனக்கு நன்மை செய்யப்போகிறபடியால் உன்னைச் சோதிப்பார்; உன்னை ஆராய்ந்து பார்த்து, உன்னைத் தாழ்மைப்படுத்தி, உன்னைப் பரீட்சிப்பார்; போசனத்தை மாத்திரமல்ல, ஔஷதத்தையும் தருவார், உன் ஆத்தும க்ஷேமத்துக்காகச் செலவையும் பாரார், வருத்தத்தையும் கவனியார். உன் துன்பங்களைப் பார்த்து இதுவும் என் ரட்சிப்புக்காக இருக்குமென்று சொல். கடந்துபோன காலத்தைப் பார்த்து நன்மையும் இரக்கமும் என் ஜீவநாளெல்லாம் என்னைத் தொடர்ந்து வந்ததென்று சொல்; இனிவரும் காலத்தைப் பார்த்துச் சந்தோஷப்படு. கர்த்தர் உனக்கு நன்மையானதைத் தருவாராக, எப்பக்கத்திலும் பார்த்து நான் நம்பிப் பயப்படாதிருப்பேனென்று சொல்.

தேவன்பு நிச்சயம்
அதெனக்குச் சொந்தம்,
என்னுட எல்லா இச்சையும்
அவரில்தான் அந்தம்.

'தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களா யிருங்கள்'

மாற்கு 11:22

அவருடைய வார்த்தை உனக்கிருக்கிறது. அதை விசுவாசி, அதைப் பிடித்துக் கெஞ்சு, அது நிறைவேறுமென்று எதிர்பார்த்திரு. அவர் உன்னை மோசம்போக்கார்; அவருடைய செவி உனக்குத் திறந்திருக்கிறது. அவரைச் சோதித்துப் பார். உனக்கு என்னவேண்டும்? அது ஏன் உனக்கு வேண்டும்? உண்மையாகவே அது உனக்கு வேண்டுமானால், நல்ல நோக்கத்தோடு அதற்காகத் தேவனிடத்தில் கேள். அவர் கொடுப்பாரென்று எதிர்பார்த்திரு; அவர் கொடுத்ததாகப் பெற்றுக் கொள், எந்தச் சோதனையிலேயும் உனக்குத் தேவையான சகலத்திற்காகவும் தேவனிடத்தில் விசுவாசம் வை; அவர் உனக்குக் கிருபை தருவார். அவர் எப்போதும் உன்னோடிருக்கிறார்; உனக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருக்கிறார்; உனக்கு நன்மை செய்ய உன்மேல் சந்தோஷப்படுகிறார். அவருடைய வார்த்தை ஆதிமுதல் உண்மை; அவர் உண்மையுள்ள தேவன் உடன்படிக்கையையும் இரக்கத்தையும் காக்கிறவர். உனக்குத் தேவையான சகலத்திற்கும் அவரை நம்பு; ஏற்ற சமயத்தில் வேண்டியது வருமென்று பொறுமையாய்க் காத்திரு; அவர் தாமதிக்கிறாரென்று ஜெபம்பண்ணுகிறதை விடாதே; எதிர்பார்த்திருக்கிறதை நிறுத்தாதே. சந்தேகியாமல் முழு இருதயத்தாலும் அவரை நம்பு; அவர் தேவன், உன் தேவன், நாம் கேட்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாகச் செய்யக்கூடியவர். இது தான் உனக்குச் சட்டம், உன் கடமை, உன் சிலாக்கியம். தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாயிரு, அவரோடு நட, அவரோடு பேசு, அவரிடத்திலிருந்து வருமென்று காத்திரு,, சகலத்தையும் அவருக்கென்று செலவழி; அவருக்கே முற்றிலும் உன்னை ஒப்புக்கொடு; அவரே உங்களை விசாரித்துக் கொள்ளுகிறபடியால், உங்கள் கவலையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள். ஆதலால் நான் தேவனை நோக்கிக் காத்திருப்பேன்.

கர்த்தாருகிலிருக்க
ஐயம் யாவும் ஓடாதோ?
ஓயாமலே நான் ஜெபிக்க
அவர் கை ரட்சியாதோ?
படகில் இயேசிருக்கிறார்
புசலை அமர்த்துவார்.

'ஜீவ அப்பம் நானே'

யோவான் 6:35

இயேசு தினந்தோறும் நம்முடைய ஆகாரமாக இருக்கிறார். சரீரத்துக்குமாத்திரம் அல்ல, ஆத்துமாவுக்கும் ஆகாரம் வேண்டும். நம்மை ஆற்றிப் பலப்படுத்தி நம்மைத் திருப்தியாக்குகிற சகலமும் அவரிடத்திலுண்டு. அவரைத் தினந்தோறும் நாம் உட்கொள்ளவேண்டும். நேற்று அவரை உட்கொண்டதினாலே இன்றைக்கு அவர் தேவையில்லையென்று சொல்லக்கூடாது. இன்று காலையில் நாம் அவரிடத்தில் போக வேண்டும். அவர் சொல்லுகிறதென்ன? சிநேகிதரே, சாப்பிடுங்கள்; என் அன்பர்களே, உங்களைத் திருப்திசெய்துகொள்ளுங்கள்' என்கிறார். பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய பசியைக் கொடுப்பாரானால், நாம் நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களானால், இயேசுதான் நம்மைத் திருப்தியாக்கக்கூடும். அவரை நாம் உட்கொண்டு சந்தோஷமாயிருக்கலாம். ஒரு நாளில் அநேகம் முறை அவரை நமக்குமுன் வைத்து அவரைப் போசனமாக உட்கொள்ளுவோமாக. பெலவீனப்பட்டுச் சோர்வடைந்து ஆயாசப்பட்டாலும், ஜீவன் கொடுக்கும் இந்த அப்பத்தை நாம் புசிப்போமாக. இயேசுவை நாம் உட்கொண்டோமானால், அவரால் பிழைத்து நித்திய ஜீவனை அடைவோம். சிநேகிதரே, இயேசுவைத்தவிர வேறெதைக் கொண்டாவது நீங்கள் பிழைக்கிறதுண்டானால், உங்களுக்கு இயேசு போதாதவரானால், நீங்கள் மாமிச சிந்தை உள்ளவர்கள். உங்கள் ஆத்துமா சுகமற்றிருக்கிறது. இயேசுதான் ஜீவ அப்பம், பரத்திலிருந்து வந்த அப்பம்.

இயேசு ஜீவ அப்பம்தானே
என் ஆத்மா பசியாறும்,
கர்த்தாவே உம்மில்தானே
அன்பரின் ஆசைதீரும்,
இந்த அப்பம் எனக்கியும்
பரமானந்தம் பாயும்.

'உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்?'
1 கொரிந்தியர் 4:7

உலகத்தானுக்கும் கிறிஸ்தவனுக்கும் பெரிய வித்தியாசமுண்டு. உலகத்தான் அக்கிரமங்களிலும் பாவங்களிலும் செத்தவன். கிறிஸ்தவன் இயேசுகிறிஸ்துவினால் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறான். தேவகுமாரனால் உயிர்ப்பிக்கப்பட்டு, ஆவியினால் பிறந்து நித்திய பிதாவினால் போதிக்கப்பட்டிருக்கிறான். அவன் புது சிருஷ்டி; கிறிஸ்து இயேசுவில் நற்கிரியைகளுக்கென்று புதிதாய் சிருஷ்டிக்கப்பட்டவன். நாம் அதில் நடக்கவேண்டுமென்று தேவன் ஏற்படுத்தி யிருக்கிறார். இப்படி வித்தியாசப்படுத்துகிறவர் யார்? தேவனால் போதிக்கப்பட்டீர்களானால், 'தேவனுடைய கிருபையால் நான் இருக்கிறவிதமாயிருக்கிறேன்; அவர் தம்முடைய சுயசித்தப்படியே சத்திய வசனத்தினால் எங்களைப் பிறப்பித்தார்' என்று உடனே சொல்லுவீர்கள். ஆம், தேவனுடைய ஐசுவரியமுள்ள, இலவசமான கிருபைதான் இந்த வித்தியாசத்தை உண்டாக்கிற்று. உலகத் தோற்றத்துக்கு முன்னே கிருபை உங்களுக்குக் கொடுக்கப்பட்டது. தேவனால் உங்களுக்கு இலவசமாய்க் கொடுக்கப்பட்டதை நீங்கள் அறிந்து அனுபவிக்கும்படி ஆவியும் உங்களுக்கு அளிக்கப்பட்டது. சிநேகிதரே, கிருபைக்கு நீங்கள் எவ்வளவோ கடன்பட்டவர்கள். உங்களை இப்படி வித்தியாசப்படுத்தினவருக்கு முன்பாகத் தாழ்த்துங்கள். இன்னும் புறம்பாயிருக்கிறவர்களுக்காகப் பரிதபித்து ஜெபம் பண்ணி அவர்களுக்கு நன்மைசெய்யப் பாருங்கள். நீங்கள் வெட்டி யெடுக்கப்பட்ட கன்மலையையும், நீங்கள் தோண்டி யெடுக்கப்பட்ட குழியையும் நோக்குங்கள்.

உன்னில் தேவனே எதைக்கண்டு
ஆனந்திக்க ஏதுவுண்டு
நின் சித்தமல்லோ பிதாவே
நின் பார்வைக்கது நலமே.

"இதோ இந்த மனுஷனைப் பாருங்கள்"

யோவான் 19:5

இயேசுவானவர் உனக்கு முன்பாக முள்முடி தரித்தவராய் அடிக்கப்பட்டவராய், எல்லா முகங்களையும்விட அதிகமாய் ரூபமாறினவராய் நிற்கிறார். அவருடைய ரத்தம் ஓடுகிறது. அவருடைய இருதயம் துக்கத்தால் சோர்ந்துபோகிறது. அவர் துயரம் நிறைந்த மனுஷன். அவரைப் பார். அவரிடத்தில் தான் இந்தச் சமயத்தில் தேவத்துவத்தின் நிறைவெல்லாம் தேகவடிவாய் வாசம்பண்ணிற்று. ஞானம் அறிவு என்பவைகளின் பொக்கிஷமெல்லாம் அவரிடத்தில் இருந்தது. தேவ அன்பு அவருக்குள் ஒன்றுசேர்ந்து பிரகாசித்தது. தம்முடைய சபையின் நம்பிக்கைகளுக்கு அவர்தான் அஸ்திவாரம்; நித்திய ரட்சிப்புக்கு அவர்தான் ஊற்று. ஏகோவாவின் சேஷ்ட புத்திரன், அவருடைய ஒரேபேறான குமாரன். அவருடைய தன்மையின் சொரூபம், உனக்குப் பிணையாளி, பொறுப்பாளி, உன் மீட்பர் பரிசுத்தரும், மாசற்றவரும், தீட்டுப்படாதவருமான தேவ ஆட்டுக்குட்டி, உலகத்தின் பாவங்களை நீக்குகிறவர். அவரைப் பார். தமதன்பின் ஆழத்தை இங்கே வெளியாக்குகிறார். நிந்தை துன்பம் அபகீர்த்தி யுண்டாகும்போது, பொறுமையாயிருந்து சாந்தகுணத்தோடு உன்னைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கக் கற்றுக்கொடுக்கிறார். இயேசுவைப் பார். முறுமுறுக்க வெட்கப்படு, துக்கப்படாதே. பழிவாங்குகிற சிந்தைக்கிடங் கொடாதே. இயேசுவைப் பார்த்து அவரை நேசி. இயேசுவைப் பார்த்து அவரை வணங்கு.

ரத்தம் காயம் குத்தும்
நிறைந்த நிந்தைக்கே,
முள் கிரீடத்தாலே சுற்றும்
குத்துண்ட சிரசே!
முன் கனமேன்மைகொண்ட
நீ லச்சை காண்பானேன்?
ஐயோ வதைந்து நொந்த
உன்முன் பணிகிறேன்.

ஏப்ரில்-மீ 27-உ

'நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்'

ஏசாயா 51:12

கர்த்தருடைய ஜனங்கள் அடிக்கடி அதைரியப்பட்டு மனவடிவாகிறார்கள். தங்கள் சிலாக்கியத்திற்குத் தக்கதாக அவர்கள் ஜீவனம்பண்ணுகிறதில்லை. நித்திய காரியங்களை அவர்கள் சரியானபடி எண்ணாததினால், தற்காலக் காரியங்கள் அவர்களை அதிகமாய் வருத்தப்படுத்துகிறது. ஏகோவாதான் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கிறவர். அவ்விதமாக இன்று காலையில் நமக்கு முன்பாக வருகிறார். அவர் எல்லா ஆறுதலுக்கும் தேவன்; சோர்ந்துபோகிறவர்களுக்கு ஆறுதல் அளிக்கிறவர் அவரே; நாமும் ஆறுதலுக்காக அவரிடத்தில் தான் போகவேண்டும். தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை சிருஷ்டிகளிடத்தில் பெற்றுக்கொள்ளப் பார்க்கிறது அவருக்குக் கனவீனம். அப்படிப்பட்ட சமயங்களில் சிருஷ்டி நம்மைப் பார்த்து: 'நான் தேவனுக்குப் பதிலாயிருக்கிறேனா?' என்று தம்முடைய குமாரனால் நம்மை ஆறுதல்படுத்துகிறார், நமது பேரில் அவர் ஊற்றுகிற பரிசுத்த ஆவியினாலும், நம்மிடத்தில் அவர் பேசுகிற தமது வசனத்தினாலும், நம்மை அவர் வந்து சந்திக்கிற கிருபையின் எத்தனங்களாலும், நம்முடைய பட்சத்தில் காணப்படுகிற திவ்ய செயலாலும் நம்மை ஆறுதல் படுத்துகிறார். தேவனை, எல்லா ஆறுதலையும் உண்டுபண்ணுகிறவரும் கொடுக்கிறவருமாகப் பார்ப்போமாக. தம்முடைய வசனத்தின்படி நம்மை ஆறுதல்படுத்தக் கெஞ்சிக் கேட்போமாக. அவரிடத்திலிருந்து வாராததும், அவரிடத்திற்கு நடத்தாததுமான எந்த ஆறுதலையும்பற்றி சந்தேகப்படுவோமாக. நாம் அவரை நோக்கியே செல்லவேண்டும்; அவரைச் சுற்றிக்கொண்டே திரியவேண்டும்.

எனக்குள்ள நன்மையாவும்
உம்மிலுண்டே இயேசுவே!
நம்பிக்கை பொறுமை வாழ்வும்
நீர் கொண்டீரே கர்த்தாவே!
நின் ரத்தம் எனது தஞ்சம்
அது நீக்குமென் பஞ்சம்,
என் கிருபை எனக்களியும்
பேய் ராஜ்யம் அழியும்.

'நான் ஒன்றுமில்லே'

2 கொரிந்தியர் 12:11

பவுல் தன்னை இவ்விதமாய் மதிக்கிறான். எல்லாப் பரிசுத்தவான்களிலும் சிறியவனிலும் சிறியவன்; பாவிகளில் பிரதானமானவன்; நம்மைப்பற்றியும் இயேசுவைப்பற்றியும் நாம் அதிக அறிவு அடைவோமானால், அதிகமாய் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாசியாகத் தாழ்த்துவோம். தேவனுக்கு முன்பாக எவ்வளவாய்த் தாழவிழுந்து கிடக்கிறோமோ, அவ்வளவாய் அதிகப் பாக்கியரும் பரிசுத்தருமாயிருப்போம். மனிதன் பேரெடுப்பாயிருக்கப் பார்க்கிறான், தன்னைப் பெரியவனென்று எண்ணுகிறான்; இது அவன் பெருமை. அவன் நிர்ப்பாக்கியம். கிறிஸ்து சகலத்திலும் சகலமுமாயிருக்கும்படி கிறிஸ்தவன் தன்னை ஏதுமற்றவனாக்கிக்கொள்ள விரும்புகிறான். நாம் ஏதுமற்றவர்களென்று நித்தம் எண்ணுவோமானால், எத்தனை மனவருத்தங்களுக்கு நாம் தப்பிக்கொள்வோம். தேவகிருபையைப்பற்றின ஆச்சரியமான காட்சிகள் நம்முடைய ஆத்துமங்களை நிரப்பிப் பரிசுத்தமாக்கும். கிறிஸ்துவை நாம் விட்டால் நாம் யாவற்றிலும் கடையானவர்கள். நாம் ஏதாவது உள்ளவர்களானால் கிறிஸ்துவில்தான் அப்படி இருக்கிறோம். நாம் வெறுமையானவர்கள், அவர் நம்மை நிரப்புகிறார்; நாம் நிர்வாணிகள், அவர் நம்மை உடுத்துகிறார்; நாம் ஆதரவற்றவர்கள், அவர் நம்மை கண்டுபிடிக்கிறார்; நாம் கெட்டுப்போனவர்கள், அவர் நம்மை ரட்சிக்கிறார்; நாம் ஏழைகள். அவர் சகலத்தையும் சவதரித்துக்கொடுக்கிறார்; நாம் இருக்கிறதெல்லாம் கிறிஸ்துவால்தான்; நமக்கிருக்கிறதெல்லாம் கிறிஸ்துவால்தான்; நாம் இருக்கப்போகிறதும் கிறிஸ்துவின் மூலமாய்த்தான்; விசுவாசியே நீ ஏதுமற்றவன். உன்னைப்பற்றி பெருமையாய் எண்ணாதே. நீ தேவனிடத்திலிருந்தாவது பெற்றுக்கொள்ளுகிறதைவிட, அதிகம் பெற்றுக்கொள்ளப் பாத்திரமென்று யோசியாதே. தாழ்மையான ஆத்துமாக்கள் சீக்கிரத்தில் திருப்தியாகும்.

அநாத க்ருபா நிதியே
வற்றா இரக்கக் கடலே!
என்னை வெறுக்கில் மதியே
உன் துதிதான் என் பாடலே.

ஏப்ரில்-மீ 29-உ

'நீ ஐசுவரியமுள்ளவன்'

வெளிப்படுத்தின விசேஷம் 2:9

உண்மையான பரிசுத்தர் தாங்கள் எப்பொழுதும் ஏழைப் பாவிகள் என்று எண்ணுகிருர்கள். தேவபக்தரில் அநேகர் இவ்வுலக காரியங்களில் உள்ளபடி ஏழைகள்தான். இவ்வுலகத்தில் ஏழையானவர்களே விசுவாசத்தில் ஐசுவரியமுள்ளவர்களாகவும், தம்மை நேசிக்கிறவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தை சுதந்தரிக்கிறவர்களாகவும் தேவன் தெரிந்துகொண்டார். அவர்கள் அடிக்கடி துன்பப்பட்டு, வருத்தப்பட்டு, சோதிக்கப்பட்டு சோர்வடைகிருர். கள். ஸ்மர்ஞ சபை இப்படித்தானிருந்தது. இயேசு அதைப் பார்த்து: நீ ஐசுவரியமுள்ளவனென்கிருர். கர்த்தருடைய ஜனங்களெல்லாம் இப்படித்தானிருக்கிருர்கள். சம்பந்தப்படி ஐசுவரியவான்கள். தேவன் அவர்கள் பிதா, இயேசு அவர்கள் மூத்த சகோதரன். பெற்றுக்கொண்ட வரத்தின்படி அவர்கள் ஐசுவரியவான்கள்; இயேசு அவர்களுக்கு ஆராய்ந்துமுடியாத பொக்கிஷங்களைக் கொடுத்திருக்கிருர். வாக்குத்தத்தப்படி அவர்கள் ஐசுவரியவான்கள். சகல நன்மைகளையும் கர்த்தர் அவர்களுக்கு வாக்களித்திருக்கிருர். விசுவாசத்திஞல் அவர்கள் ஐசுவரியவான்கள்; விசுவாசிக்கிறவன் சகலத்தையும் சுதந்தரித்துக்கொள்ளுவான். எதிர்பார்க்கிறதில் அவர்கள் ஐசுவரியவான்கள்; தேவன் கட்டி உருவாக்கின அஸ்திவாரங்களுள்ள பட்டணத்தையே நோக்கியிருக்கிருர்கள். விசுவாசியே, நீ ஐசுவரியவான். உன்னை நீதிமாஞக்க இயேசு உனக்குத் தம்முடைய நீதியையும், உன்னைச் சுத்தமாக்கத் தம்முடைய ஆவியையும், உனக்கு வேண்டியதைச் சம்பாதிக்கத் தம்முடைய நாமத்தையும், உனக்கு ஊழியஞ்செய்யத் தம்முடைய தூதரையும், உனக்கு நித்திய வாசஸ்தலமாகத் தம்முடைய மோட்சத்தையும் மரணசாசனத்தில் எழுதிவைத்துவிட்டுப்போஞர். 'அருமையான ரட்சகரே, உம்மைப்பார்த்து ஆச்சரியத்தோடு உம்மை ஆராதிப்பேன்; என்னை முற்றிலும் துறந்து உம்முடைய பரிபூரணத்தைக்கொண்டு ஜீவியம் பண்ண எனக்குக் கற்றுக்கொடும்.

பாவத்தால் கெட்ட பாவி
கிருபையால் சம்பன்னன்,
ஆவியால் நித்திய ஜீவி
மோட்சத்துக்குப் பாத்திரன்.

'நான் காணாத காரியத்தை நீர் எனக்குப் போதியும்'
யோபு 34:32

முன்னே நாம் குருடர், இப்போது கண் திறக்கப்பட்டவர்கள். ஆகிலும் தேவன் நமக்குச் சகலத்தையும் போதிக்க வேண்டும்; இல்லாவிட்டால் சரியானபடி நாம் ஞானிகளாக மாட்டோம். தேவன் நமக்குப் போதித்தால், நான் என்கிறது அற்பமாயும், உலகம் மாயையாயும், பாவம் கசப்பாயும், கிறிஸ்துவின் ரத்தம் மிகவும் அருமையாயும், அவருடைய நீதி மிகவும் விலைபெற்றதாயும், அவருடைய நாமம் நம்முடைய ஒரே நம்பிக்கையாயும், அவருடைய அன்பு நம்முடைய சந்தோஷமாயும், அவருடைய ஆவி நம்முடைய பெலனும், அவருடைய மகிமை நம்முடைய நோக்கமாயும், 'நீர் எனக்குக் கற்றுக் கொடும்' என்பது நம்முடைய தினசரி விண்ணப்பமாயும் இருக்கும். கிறிஸ்து தம்மில் எப்படிப்பட்டவரென்றும், தம்முடைய ஜனங்களுக்கு அவர் செய்தது இன்னதென்றும், அவரிடத்தில் உள்ளது எவ்வளவென்றும், அவரை நோக்கி உண்மையாய்க் கூப்பிடுகிறவர்களுக்கு அவர் கொடுப்பதின்னதென்றும், அவர் நம்மில் கிரியைசெய்து நமக்குக் கொடுக்க வாக்களித்திருக்கிறது இன்னதென்றும், நாம் வெகு கொஞ்சமாய் அறிந்திருக்கிறோம். சிநேகிதரே, நாம் அவரையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிந்து, அவருடைய மரணத்துக்கு ஒப்பானவர்களாகும்படி நமக்குப் போதிக்க, தேவனைப்பார்த்து நித்தம் கெஞ்சுவோமாக. நாம் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும், தெளிவையும், அளிக்கிற ஆவியைத் தந்தருளவேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் அறிந்து கொள்ளும்படி அவரிடத்தில் கெஞ்சுவோமாக. ஏகோவா மாத்திரந்தான் பிரயோஜனப்படத்தக்கவிதமாய்ப் போதிக்கக்கூடியவர்.

சுவாமி எனக்கறிவியும்
ஜீவவழி காட்டுமேன்;
க்ருபையில் வளரச்செய்யும்
கடைமட்டும் காருமேன்;
பேய் பாவம் அகற்றுவியும்
அறியாததைப் போதியும்

மே-மீ 1-உ

'நான் உங்களுக்குப் பிதாவாயிருப்பேன்'

2 கொரிந்தியர் 6:18

வேதவசனத்துக்கு ஒத்து நடக்கிறதினுல் ஒருவனும் நஷ்டமடையான். அப்படிப்பட்டவனுக்கு இம்மையில் நூறு மடங்கும், மறுமையில் நித்திய ஜீவனும் கிடைக்கும் என்று தேவன் வாக்குக்கொடுத்திருக்கிறுர். மாம்சத்துக்குரிய சம்பந்தங்களைத் தள்ளிப்போடவேண்டும்; உறுதியான தீர்மானம் பண்ணவேண்டும். உலகத்தைப் புறம்பே தள்ளவேண்டும். கிறிஸ்துவையும் உலகத்தையும் ஒன்றுபடுத்தக்கூடாது. மாம்ச சிந்தையும் ஆத்தும சிந்தையும் ஒன்றுய்ப் பொருந்தா. அவைகளை விட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள். 'நான் உங்களை ஏற்றுக்கொண்டு உங்களுக்குப் பிதாவாயிருப்பேன்' என்று நம்முடைய தேவன் சொல்லுகிறுர். உறுதியான தீர்மானஞ்செய்ய நம்மை உற்சாகப்படுத்தி ஏவிவிட இதைவிட நமக்கு என்னவேண்டும். மனுஷர் என்னைத் தள்ளி அசட்டை செய்து துன்பப்படுத்திஞலும், தேவன் என்னை ஏற்றுக்கொள்வார். அவர்கள் என்னைச் சேதப்படுத்தி பட்டினிபோட்டுக் கொன்றுலும், தேவன் எனக்குத் தகப்பனுயிருக்கிறுர். அவர் எனக்காகக் கவலைப்பட்டு, என்னை ஆதரித்து, என்னேடு வாசஞ்செய்து, என்னை ஆற்றி, எனக்கு வேண்டியதைத் தந்து, எனக்குப் பிதாவாயிருப்பார். நான் சிநேகிதன் இல்லாமல் போகமாட்டேன்; நான் பயப்படமாட்டேன். நேசரே! என்னைப் பரீட்சித்துப் பாருங்கள் என்று தேவன் சொல்லுகிறுரே. சிநேகிதர்களை விட்டுப் பிரியவும், இனத்தாரை விட்டுப்பிரியவும், வேலை இழந்து துன்பத்தைச் சகிக்கவேண்டி வருகிறது. பயப்படாதே, தேவனுக்காக வேலை செய், அவரையே நோக்கிப்பார். அவர் உன்னை ஏற்றுக்கொண்டு பிதாவாயிருப்பார்.

லோகத்தைவிட்டும்மண்டை
வருவோர்க்கு நீர் பிதா;
உம்மையண்டி எந்தண்டை
போகியும் நீரே தாதா;
லோகத்தை சுவாமி விட்டேன்
உமது சொல்லைக் கற்றேன்.

'கிருபையில் வளருங்கள்'

2 பேதுரு 3:18

நற்காலத் தேர்ச்சி போதுமென்றிராதே. தேவன் அதிகம் கொடுப்பார். நாமும் அவர் கொடுக்கிறதை வாங்கி அனுபவிக்கலாம்; அவர் மகிமைக்கென்று செலவிடலாம். நல்ல இடத்திலிருக்கிற மரம் கீழே வேர் பலமடைந்து மேலே கொப்புகள்விட்டு வளர்கிறதுபோல, கிறிஸ்தவனும் வளர வேண்டும். அவன் தேவனுடைய அன்பில் வேர் ஊன்றி, இயேசுவோடு ஒருமைப்பட்டு வளரவேண்டும். நாம் கிருபையில் வளருவோமானால், நம்முடைய நிர்ப்பாக்கியத்தையும் பெலவீனத்தையும் அதிகமாய் அறிந்துகொள்வோம். இயேசுவின் அருமையையும், நிறைவையும்; மகிமையையும் அதிகமாய்ப் பார்ப்போம். நாம் மனிதர்களுக்கு முன்பாக ஜாக்கிரதையாயும், தேவனுக்கு முன்பாகத் தாழ்மையாயும் இருக்க வேண்டும். மாம்சத்தின்மேல் நம்பிக்கை குறைந்துபோனால் ரட்சகரை அதிகமாய் நம்புவோம். கிருபை நம்மை நாமே வெறுக்கச்செய்து நம்மை ரட்சகரண்டையில் சேர்க்கும்; சிரசின்மேல் கிரீடத்தை வைக்கும்: கிருபைதான் ஆத்துமாவுக்கு அழகு; அது தேவனுடைய மகிமை. ஆத்துமா கிருபையில் வளருகிறது, இயேசுவைப்போல சாந்தத்திலும் மனத்தாழ்மையிலும் வளருகிறது. நடத்தையில் ஜாக்கிரதையாயும் உத்தமமாயும் இருக்கிறது. நாம் கிருபை பெற்றுக் கொள்ளக்கடவோம்; அதைக் கொடுக்கிறது தேவனுக்குப் பிரியம். நாம் கிருபையில் வளரக்கடவோம்; அது தேவனுடைய கட்டளை. கிறிஸ்து வரும்போது நமக்குக் கிடைக்கும் கிருபைக்காக எதிர்பார்க்கக்கடவோம். ஏனென்றால் தேவன் அதைக் கொடுத்திருக்கிறார். இயேசுவானவரின் மகிமை வெளிப்படும் நம்பிக்கைக்காக காத்திருப்போமாக.

சுத்த கிருபா கனிகள்
பக்தரில் தோன்றினாலும்,
அவைகள் ஊறும் கேணிகள்
கிறிஸ்துவில்தான் முற்றிலும்
நான் உம்மைக் காணுமட்டுக்கும்
க்ருபை என்னில் வர்த்திக்கும்.

'உன் ஆலோசனைக்காரர் அழிந்துபோனார்களோ?'
மீகா 4:9

கர்த்தருடைய ஜனங்களுக்கு ஆலோசனை வேண்டும். இயேசு அவர்கள் ஆலோசனைக்காரர் அளவற்ற ஞானமும், கபடற்ற தயவும், பெரிய கனமுமுடையவரானபடியால் அவர்களுக்கு மிகவும் ஏற்றவர். இலவசமாய், சந்தோஷமாய்; காரிய சித்தி உண்டாக்கத்தக்கதாய் ஆலோசனை செய்வார். நம்முடைய சத்துருக்களுடைய யோசனையைப் பயித்தியமாக்குவார். இப்படிப்பட்ட ஆச்சரியமுள்ள ஆலோசனைக்காரர் நமக்கிருந்தும், அவரிடத்தில் யோசனை கேட்க; அவரை நம்ப நமக்கு மனமில்லை. உன் ஆலோசனைக்காரன் அழிந்து போனானோ என்று நம்மைப் பார்த்து அடிக்கடி கேட்கிறார்கள். அப்படி இல்லாவிட்டால் ஏன் இந்தக் கலக்கம்? ஏன் இந்தத் தப்பிதங்கள்? பெருமூச்சுகள்? என் ஆலோசனைக்காகவும், உதவிக்காகவும் சிருஷ்டிகளண்டையில் ஓடவேண்டும்? நேசரே நம்மைக் கண்டித்துக்கொள்வது நியாயம், நாம் அவருடைய யோசனைக்குக் காத்திருக்கவில்லை. இயேசுவானவருடைய தொழிலை மறந்து அசட்டைசெய்தோம். இனிமேல் அவருடைய யோசனையின்றி நாம் ஒன்றும் செய்யக்கூடாது. அவருக்குக் கனவீனம் உண்டாக்குகிற மனிதரிடத்தில் போகக்கூடாது. இயேசுவானவரிடத்தில் போகவேண்டாம், அவரை நம்பவேண்டாம், அவரிடத்தில் யோசனை கேட்க வேண்டாம் என்று சொல்லுகிற சாத்தானுக்குச் செவி கொடுக்கவேண்டாம். 'நான் உனக்கு யோசனை கொடுப்பேன், என் கண் உன்மேல் இருக்கும்' என்று சொல்லுகிறார்.

கர்த்தரே, நீர் நல்யோசனை
சொல்லி என்னை நடத்தும்.
உம்முட பக்கத்தில் என்னை
வைத்திருட்டில் காப்பாற்றும்
நான் தள்ளாடவொட்டாதேயும்
அலைய விடாதேயும்.

'உங்கள் சீர்கேடுகளைக் குணமாக்குவேன்'

எரேமியா 3:22

பாவம் வியாதியைக் கொண்டுவருகிறது. விசுவாசி தேவனோடு நடந்து, உலகத்தை வெறுத்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு எதிர்பார்த்திருந்தால்தான் சுகமே இருப்பான். நாம் இயேசுகிறிஸ்துவின் பாதத்தண்டையில் சுகபத்திரமாய் இருப்போம், சவுக்கியமாய் இருப்போம். அவரைவிட்டு அலைவோமானால், ஆத்துமநோய் நம்மை பிடிக்கும். பாவி தேவ கற்பனைகளின் வழியாய் ஓட பலமற்றவனாய்ப் போகிறான். தேவ வாக்குத்தத்தங்களைத் தன்னுடைய தாக்கிக்கொள்ளாமல் கலங்குகிறான். தேவனைப் பிதாவென்று அழைக்கக்கூடாத குற்றவாளியாகிறான். நம்பிக்கையில் களிகூரா நிர்ப்பந்தனாகிறான். அவன் தாழ்மையாய் ஜெபம் பண்ணமாட்டான். வேத புஸ்தகத்தில் அவனுக்கு இனிமையில்லை. மனச்சாட்சியில் அவனுக்குச் சமாதானமும் இல்லை. கர்த்தருடைய வழிகளில் அவனுக்குப் பிரியமில்லை. சீர்கெட்ட பிள்ளைகளே! திரும்புங்கள், உங்கள் சீர்கேடுகளை குணமாக்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இது பெரிய வைத்தியன் அனுப்பும் செய்தி; நம்முடைய பிதாவின் சிம்மாசனத்தில் இருந்து அவர் அழைக்கும் சத்தம்; நம்முடைய ரட்சகரின் அன்பு கொடுக்கும் வாக்கு. நாம் அழுகையோடும் விண்ணப்பத்தோடும் அவரிடம் வந்து, தாவீதைப்போல 'என் ஆத்துமாவைக் குணமாக்கும், நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன்' என்று ஜெபம்பண்ணுவோமாக. சபை தீர்மானஞ் செய்ததுபோல 'இதோ, உம்மண்டையில் வருகிறோம். நீர் எங்கள் தேவனாகிய கர்த்தர்' என்று தீர்மானஞ் செய்ததுபோல 'இதோ, உம்மண்டையில் வருகிறோம். நீர் எங்கள் தேவனாகிய கர்த்தர்' என்று தீர்மானஞ்செய்வோமாக. அவர் நம்மைக் கிருபையாய் ஏற்றுக்கொள்வார், இலவசமாய் உன்னை நேசிப்பார்.

மன்னிப்புணரச்செய்யும்,
நான் கெட்டேன் சீர்ப்படுத்தும்.
க்ருபையாம் மாரி பெய்யும்,
என்னை ஸ்திரப்படுத்தும்,
தேவசமூகம் காட்டும்,
என் பாவம் தொலைத்திடும்.

'அவர் மிகவும் வியாகுலப்பட்டார்'

லூக்கா 22:44

தோழனே! இன்று காலையில் கெத்செமனேக்குப்போய் இந்த அதிசயமான காட்சியைப் பார்க்கக்கடவோம். இதோ நம்முடைய பிணையாளி, தேவனுடைய ஒரேபேறான குமாரன், அவருடைய மகிமையான பிரகாசம், அவருடைய தன்மையின் சுரூபம். அவர் தரையிலே விழுந்து ரத்தத்தில் கிடந்து பெருமூச்சுவிடுகிறார். பிரமிப்படைந்து பயத்தாலும், பயங்கரத்தாலும் நிறைந்திருக்கிறார். அவருடைய ஆத்துமா கலங்கி ஆறுதல் அடையாமலிருக்கிறது. அவர் மரணபரியந்தம் துக்கம் அடைந்திருக்கிறார். மரணத்தின் துயரம் அவரைச் சூழ்ந்திருக்கிறது. நரகத்தின் துயரவேதனை அவரைப் பிடித்திருக்கிறது, அவருடைய குடல்களின் நடுவே அவருடைய இருதயம் மெழுகுபோல உருகுகிறது. அவருடைய தேகமெல்லாம் நடுங்குகிறது. ரத்தவேர்வை வேர்க்கிறது. உரத்த சத்தமாய்க் கூப்பிடுகிறார். அவர் மனம் தள்ளாடுகிறது. அவரைத் தாங்க மனிதர்களுடைய கை காணோம். இது அந்தகாரத்தின் நேரமும் வல்லமையுமாய் இருக்கிறது. நம்முடைய பாவங்கள் அவர்மேல் சுமத்தப்பட்டிருக்கிறது. அவருடைய ஆத்துமா பாவங்களுக்காகப் பலியாக்கப்பட்டிருக்கிறது. ஏகோவா அவரை நொறுக்கச் சித்தமானார். அவருடைய துக்கத்தைப்போல துக்கமுண்டா? அவரிடத்தில் நம்முடைய பாவங்கள் தண்டிக்கப்பட்டு; நம்முடைய அக்கிரமம் பரிகரிக்கப்பட்டிருக்கிறது. நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம்; அவஸ்தைப்பட்ட இயேசுவை நேசிக்கவேண்டும்.

பேய் உன்னைச் சோதிக்கையில்
கெத்செமனே மட்டும்போ,
மீட்பரே போர்செய்கையில்
ஜெபித்து விழித்துக்கொள்.
இயேசு சுவாமி விடாதே
அவர் சொல் மறவாதே.

'இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்'

1 தெசலோனிக்கேயர் 5:17

ஜெபம் பண்ணும்போது நாம் தேவனைத் தகப்பனைப்போல எண்ணவேண்டும்; தேவையானதைக் கேட்கவேண்டும். அவர் தம்முடைய வசனத்தின்படி நியாயமானதைத் தருகிறதை எதிர்பார்க்கவேண்டும். நமக்கு எப்போதும் குறைவு இருக்கிறது; ஆதலால் நாம் எப்போதும் ஜெபம்பண்ணிக்கொண்டே இருக்கவேண்டியது. ஆம். அவர் செவி எப்போதும் திறந்திருக்கிறது. அவர் நமக்கு எப்போதும் செவிகொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். எக்காரியத்துக்கும் எப்போதும் ஜெபம்பண்ணும்படி அழைக்கிறார். எழுப்பிவிடுகிறார். கற்பிக்கிறார்: கண்ணுக்கு முன்வரும் எந்தக் காரியமும் நடக்கும். எந்தச் சம்பவமும், நாம் செய்கிற எந்த வேலையும் சரியானபடி பார்த்தால், நம்மை ஜெபிக்க ஏவுகிறது. விசுவாசிக்கு ஜெபிக்கிற வழக்கம் வேண்டும். தனக்கு வேண்டிய சகலத்துக்கும், ஒழிந்திருக்கிற எந்த நிமிஷத்திலும்; தான் காண்கிற எல்லாவற்றின் மூலமாயும், அவன் தேவனண்டைக்குக் கண்ணை ஏறெடுக்கவேண்டும். கிறிஸ்தவனுடைய ஜெபங்கள் தேவனுக்கு எவ்வளவு பிரீதி. 'நான் உன் சத்தத்தைக் கேட்கவேண்டும், உன் முகத்தைப் பார்க்கட்டும், உன் சத்தம் இனிமையானது; உன் முகம் அழகுள்ளது' என்று சுவாசமிடுகிறதைப்போல் கிறிஸ்தவன் வருத்தமில்லாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும். ஜெபம் ஆத்துமாவின் சுவாசம். நேசனே! ஜெபம் உனக்குக் கடமையாய்த் தோன்றுமானால், பாரமாக எண்ணி சில சமயங்களில் மாத்திரம் ஜெபம் பண்ணுவாயானால், உன் ஆத்துமம் எவ்வளவோ கெட்டுப்போய் இருக்கின்றது என்பது தெளிவாயிருக்கிறது.

மேகம் கெர்ச்சிக்கும்போது
தாயிடம் பிள்ளை ஓடும்.
லோகம் பகைக்கும்போது
என் ஆவியும்மைத் தேடும்,
ஜெபிக்க க்ருபைதாரும்
என்னில் வசிக்க வாரும்.

'இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை'

ஏசாயா 44:21

இது எவ்வளவு உருக்கம் இரக்கம் அன்பு நிறைந்த வாக்கு. சிநேகிதர் நம்மை மறந்துபோகிறார்கள், பந்து ஜனங்கள் நம்மை அசட்டை செய்கிறார்கள், தேவனும் நம்மை மறந்துபோவாரென்று பயப்படுகிறோம். அவர் நம்மை மறப்பதில்லை என்று இங்கே நமக்கு நிச்சயமாகச் சொல்லுகிறார். நம்முடைய பேர் அவருடைய புஸ்தகத்திலே இருக்கிறது. நம்முடைய பிணையாளி அவருடைய சிம்மாசனத்திற்கு முன்னே எப்பொழுதும் நிற்கிறார். அவர் நம்மைக் குறித்து எப்பொழுதும் கவலைகொள்ளுகிறார். இயேசுவானவர் நமக்காகப் பரிந்துபேசும்பொழுது, தேவன் நம்மை மறக்கமாட்டார், மறவாவிட்டால் அசட்டை செய்யவுமாட்டார். ஒன்றை அவர் எப்பொழுதும் மறக்கிறதாய்ச் சொல்லியிருக்கிறார்; அது நம்முடைய பாவந்தான். அவர் தம்முடைய உடன்படிக்கையை எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கிறார்; நம்முடைய நிலைமையையாவது, நமக்கு வருத்தத்தைக் கொடுக்கிற குறைகளையாவது,, அவருடைய சிம்மாசனத்தண்டையில் நாம் செய்யும் விண்ணப்பங்களையாவது மறக்கமாட்டார். தேவன் நம்மை மறவாமல் இருக்கிறது நிச்சயமாய் இருந்தாலும், பரிசுத்தாவி நம்மைத் தாழ்த்தி வெறுமையாக்கி, கிறிஸ்துவை நமக்கு முன்பாக உயர்த்தி, நம்முடைய மன்னிப்பு, சமாதானம்; ரட்சிப்பு ஆகிய இவைகள் அவருடைய ஜீவனிலும் மரணத்திலும் நமக்காக வேண்டுதல் செய்வதிலும் இருக்கும் என்று காண்பித்தாலொழிய, நமக்குத் திருப்தியுண்டாகமாட்டாது. நேசரே. ஆவிக்குரியவைகளைக் கவனித்து, நம்மைத் தாழ்த்தி, சீர்ப்படுத்திக் காக்கிற கிருபையை நித்தம் தேடுவோமாக.

என் தேவா உமதன்பு,
மாறாததெக்காலமும்,
'உடன்படிக்கை நம்பு,
நானே உன் தேவன், என்றும்
என்னை நினை' என்றீரே,
முற்றும் நீர் நேசிப்பீரே.

மே-மீ 8-உ

'கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன்னை ரட்சிப்பார்'

நீதிமொழிகள் 20:22

எந்தக் காலத்திலும் துன்பத்திலும் கர்த்தாண்டையில் போய், உன் காரியங்களை அவருக்குச் சொல்லி, அவருடைய அருமையான வாக்குத்தத்தங்களை எடுத்துக் காட்டி, உனக்காக அவர் வெளிப்படுவார் என்று காத்திருப்பது உன்னுடைய சிலாக்கியம். உன்னுடைய துன்பத்தின் தன்மை, அது அனுப்பப்பட்ட நோக்கம், இதை உனக்குக் காண்பிக்க அவரிடத்தில் காத்திரு. நீ கண்ணியமாய் நடந்துகொள்ள, வேத வாக்கியத்துக்கு ஒத்தபடி சகிக்க, துன்பத்தில் உன்னை ஆதரித்து அதினின்று உன்னை மீட்க, துன்பகாலத்தில் நீ சந்தோஷமாய் உன்னை அவருக்கு ஒப்புக்கொடுக்க, உனக்கு வேண்டிய ஆறுதலுக்காக அவரிடத்தில் காத்திரு. உன் நோக்கங்கள், எண்ணங்கள், விருப்பங்கள் முதலியவைகளைத் தற்சோதனை செய்து அவரிடத்தில் காத்திரு. அவர் தன் வார்த்தையை நிறைவேற்றுவார், உன் ஜெபங்களுக்கு உத்தரவு கொடுப்பார், உன்னை விடுவிப்பார் என்று நம்பி அவரிடத்தில் காத்திரு. நீ அவருக்காக காத்திருப்பாயானால், அவர் உன் பட்சமாவார். அவருடைய இரக்கத்தையும் உண்மையையும் பரிசோதிப்பாய். உன் பலம் புதிதாகும் என்ற நிச்சயம் உனக்குக் கிடைக்கும். நீ ஒருபோதும் வெட்கமடையமாட்டாய் என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். சிநேகிதனே, தேவனை நோக்கி அவரை நம்பி எப்பொழுதும் அவரிடத்தில் காத்திருப்போமாக.

தேவ சித்தத்திற்கமைந்து,
போதுமென்னும் மனதோடு
உமக்கே நான் காத்திருந்து,
உம்மிலே நிலைப்பதோடு
உமக்கே அடங்கச்செய்யும்,
கிருபை என்னில் பொழியும்.

'அவருடைய கிருபையின் மகிமை'

எபேசியர் 1:6

ஆ கிருபையின் மகிமை! அது இலவசமாயும் அபாத்திரருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய ஆசீர்வாதத்தின் ஐசுவரியங்களை அவர்களுக்குக் கொடுக்கிறது. அவர்களை மேன்மையான கனத்துக்கு உயர்த்துகிறது. பெரிய பாக்கியத்தை அவர்களுக்கு வாக்களிக்கிறது. எல்லாம் அதன் மயந்தான். கிருபையைவிட இலவசமானது ஒன்றுமில்லை. கிருபையின் மகிமை அதன் வல்லமையில் இருக்கிறது. முரட்டாட்டமுள்ள பாவியையும் அது ஜெயித்துவிடும்; கடினமான இருதயத்தையும் கீழ்ப்படுத்தும்; அடங்காத சித்தத்தையும் அடக்கிப்போடும்; இருண்ட புத்தியையும் பிரகாசமாக்கும்; எப்படிப்பட்ட பயத்தையும் தொலைத்துவிடும்; தன்னை எதிர்க்கும் எல்லாவற்றையும் மேற்கொள்ளும்; கிருபை சர்வவல்லமையுள்ளது. கிருபையின் மகிமை அதன் சற்குணத்திலிருக்கிறது. அது ஒருவரையும் சேதப்படுத்தமாட்டாது. அது எத்தனை பேரையோ விடுவித்து, ஆதரித்து, நடத்தி; மகிமைப்படுத்தியுமிருக்கிறது. சிருஷ்டியின் குறைவை நீக்கி தேவனுடைய நிறைவைக் கொண்டுவருகிறது. நிர்ப்பாக்கியமான ஏழைச் சிருஷ்டிகளைச் சீமான்களாக்க மோட்சத்தின் பொக்கிஷங்களைத் திறக்கிறது. தனக்குள்ளதையெல்லாம் கொடுத்துவிடும். தனக்குரிய துதியையும் மகிமையையுமாத்திரம் அது வைத்துக்கொள்ளும். இயேசுவே கிருபாமூர்த்தி, அவரிடத்தில் கிருபையின் அழகெல்லாம், மேன்மை எல்லாம், அருமை எல்லாம் காணப்படும். அது தன் சரியான மகத்துவத்தில் அவரிடத்தில் விளங்கும். இயேசுவே! உம்முடைய இலவசமான வல்லமையுள்ள தயவு நிறைந்த கிருபையை என்னிடத்தில் மகிமைப்படுத்தும்.

அநாத க்ருபா நிதியே!
என் பாவமலை மூடேன்;
என் மகிமையாம் கதியே!
ஆக்கினை நீக்கிப்போடேன்:
இயேசுரத்தம் பூமியெங்கும்
இரக்கம் கூவிக் கெஞ்சும்.

'அவர் மனப்பூர்வமாய்ச் சஞ்சலப்படுத்துகிறதில்லை'
புலம்பல் 3:3

தேவன் தமக்குத் தோன்றுகிறபடி நம்மைத் தண்டியாமல் தகப்பனைப்போல ஞானமாயும் அன்பாயும் நம்மைத் தண்டிக்கிறார். நம்முடைய நோயிலும், பெருமூச்சிலும், சிறுமையிலும் அவர் பிரியப்படுவதில்லை. பதஷ்டமாய்ப் பிரம்பைக் கையாடுவதில்லை. நமக்கு உதவிசெய்ய இரக்கம் பறந்துவருகிறது. அவர் கோபிக்கத் தாமதிக்கும் தருணத்தில் உருக்கம் நிறைந்தவர். தகுந்த காரணமில்லாமல் நம்மைத் தண்டிக்கவேமாட்டார். இன்று நாம் பாவஞ்செய்தோம், செய்யவேண்டிய கடமைகளை அசட்டை செய்தோம், இரக்கத்தைத் தள்ளினோம், ஆசையில்லாமையைக் காட்டினோம், உலக சிந்தையுள்ளவர்களாயிருந்தோம், சிலாக்கியங்களையும் அவமதித்தோம், எச்சரிப்பை நெகிழவிட்டோம், சோதனைகளை அற்பமாய் எண்ணினோம், அல்லது மோசத்துக்குள் ஆனோம். முகாந்தரமில்லாமல் அவர் நம்மைத் தண்டிக்கமாட்டார். பாவத்துக்குப் பயந்து, அதை அருவருத்து, அதினின்று ஓடும்படி தண்டிப்பார். நம்முடைய அசுத்தமான நடக்கை அவருக்குப் பிரியமில்லை என்று காட்டத் தண்டிப்பார். தம்முடைய வழிகளில் நம்மை நடக்கும்படி, அவருடைய பரிசுத்தத்தின்மேல் வாஞ்சைகொண்டு தேடி அதில் பங்குபெற நம்மைத் தண்டிப்பார். தாழ்மையையும் பக்திக்குரிய துக்கத்தையும் நமக்குள் எழுப்பிவிட, அல்லது அதிகமாய் நேசிப்பதினால் தமது அதிகாரத்துக்குக் குறைவு வரும் என்று காட்ட, நம்மைத் தண்டிப்பார். சில வேளைகளில் கொஞ்சமாய்த் தண்டிப்பார். அவர் அன்பினாலே நம்மைத் தண்டித்து, நம்முடைய ஆத்தும சேமத்தை நாடுகிறார். ஆறுதலினாலும் சந்தோஷத்தினாலுமல்ல, துன்பங்களால்தான் நமக்கு நன்மை வரும். ரட்சகரே! ஒவ்வொரு துன்பத்தையும் எனக்கு நன்மையாகப் பலிக்கச் செய்யும்.

துன்பமென்னும் அலைகள்
என்மேலே மோதினாலும்
இயேசுவின் ஆறுதல்கள்
என் இதயத்தில் ஆளும்,
துன்பம் இன்பம் கிறிஸ்தென்னும்
பொக்கிஷம் கிடைக்கப்பண்ணும்.

'கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமா யிருங்கள்'

பிலிப்பியர் 4:4

இது வருத்தமான கட்டளை. சிலவேளைகளில் கர்த்தர் தம்முடைய முகத்தை மறைத்துக்கொள்ளுகிருர். அப்போது அவருடைய அன்பு நமதுபேரில் இருக்கிறதோ என்று பயந்து சந்தேகிக்கிறோம், நமக்குள் பாவம் பெலன் அடைந்து சந்தேகிக்கிறதினுல் கலங்கித் திகைக்கிறோம்; சாத்தானுடைய சோதனைகளால் மடங்கடிக்கப்படுகிறோம்; தெய்வச் செயலின்படி வரும் தண்டனைகளால் கலங்கி, எல்லாம் எங்களுக்கு விரோதமாயிருக்கிறதே என்று சத்தமிடத்தக்கவர்களாய் இருக்கிறோம். நம்முடைய நிலைமையைப்பற்றியும், உணர்ச்சிகளைப் பற்றியும், தெய்வச்செயல்களைப்பற்றியும் , நாம் மேன்மை பாராட்டாமல் கர்த்தருக்குள் சந்தோஷப்படவேண்டும். அவர் நித்திய நேசத்தால் நம்மை நேசித்தார். அவர் அன்பு மாருதது. அவர் இயேசுவில் நம்முடைய தேவன். நமக்கு வேண்டியது எதுவோ, நம்முடைய நன்மைக்கு ஏற்றது எதுவோ, அதைத் தாராளமாகச் செய்வேன், தருவேன் என்று வாக்குக்கொடுத்திருக்கிருர். நாம் பெலவீனமாயிருக்கும்போது அவர் பெலத்தில் சந்தோஷப்படலாம். அந்தகாரத்தில் நம்முடைய பாதையை அவர் அறிந்திருக்கிருர் என்று சந்தோஷப்படலாம். எந்த நிலைமையிலும் அவர் நம்மோடு சம்பந்தப்பட்டிருக்கிருர் என்று சந்தோஷப்படலாம். அவர் எப்பொழுதும் நமக்குத் தகப்பன், நமக்குச் சிநேகிதன், நம்முடைய தேவன். அவருடைய இலவசமான கிருபையிலும், ஐசுவரியமுள்ள இரக்கத்திலும், சர்வவல்லமையிலும், உண்மை நிறைந்த வாக்குத்தத்தத்திலும், விசேஷித்த திவ்விய செயலிலும், மாருத அன்பிலும் சந்தோஷப்படுவோமாக.

நம்பிக்கையால் மகிழ்ந்திரு,
இயேசு சுவாமி வருவார்;
தமது பக்தரை இரு
கையால் அணைத்துச் சேர்ப்பார்;
தூதரிடம் சத்தம் கேட்கும்,
மகிழ் என்ருர்ப்பரிக்கும்.

'அவர்களுக்கு நீதி என்னுல் உண்டாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறுர்'

ஏசாயா 54:17

கிறிஸ்தவன் அதிக காலம் பிழைத்திருந்தால் அதிக மாய்க் கற்றுக்கொள்ளவேண்டும். ஆவியானவர் எத்தனைக்கு அதிகமாய்க் கற்றுக்கொடுக்கிறுரோ, அத்தனைக்கு அதிகமாய் அவன் தன்னை வெறுத்து, தன் சொந்த நீதியை அழுக்கான கந்தையென்று தள்ளுகிறுன். அத்தனைக்கு அதிகமாய்ப் பரிசுத்தத்தில் தேறி, தன் கெட்ட சுபாவம் கீழ்ப்படுத்தப்பட்டு விட்டது என்று கண்டு, தடையின்றி தேவசமுகத்தைப் பெற்று அனுபவிக்கத்தக்க நம்பிக்கையைப் பற்றிக்கொள்ள வேண்டும். இதற்குப் பதிலாக அவன் சாத்தானைப்போல் வளருகிறுன். உள்ளக் கேடு அதிகம் அதிகமாய்ப் பெலன் கொள்ளுகிறது; அவனுடைய கெட்ட குணம் எவ்வளவோ பயங்கரமாய்க் காணப்படுகிறது; அதினுல் அவன் ஒன்றுகிலும் அனுபவிக்கிறதில்லை; தன்னை அக்கிரம பூதம் என்று நினைத்து, தேவன் தன்னை நேசித்து தனக்குத் தயவு காட்டுகிறதைக் குறித்து ஆச்சரியப்படுகிறுன். அப்போது கிருபையை அதிக மாய் மதித்து, கிறிஸ்துவைப் பெரிய பொக்கிஷம்போல் எண்ணி, நீதியின் ஈவை எத்தனையோ பெருமையாக்கிக் கொள்ளுகிறுன். இப்படிப்பட்ட மனிதன் தேவனுக்கு முன் பாக நீதிமானுவதெப்படி? அவனுக்கு நீதி எங்கிருந்து வரும்? ஏகோவா 'நான் அவனுடைய நீதி' என்கிறுர்; அதை முடித்தவர் இயேசு; அதை நமக்குச் சம்பந்தமாக்குகிறவர் பிதா. அதை வெளிப்படுத்துகிறது சுவிசேஷம். விசுவாசம் அதை ஏற்றுக்கொண்டு, அதைத் தரித்துக்கொண்டு, தேவனுக்கு முன்பாக அதை வைத்துக் கெஞ்சுகிறது. இயேசுவே! உம்மில் தான் எனக்கு நீதியும் பலமுமுண்டு.

இயேசு ரத்தம் என் மகிமை,
அவர் நாமம் என் பெருமை;
இயேசென்னும் மலைமேல் நிற்பேன்,
மற்றதெல்லாம் மணலென்பேன்.

'கர்த்தர் என்னை இதுவரைக்கும் ஆசீர்வதித்து வந்தார்'

யோசுவா 17:14

விசுவாசியே! இன்று காலமே நீயும் யோசேப்பின் மக்களோடு சேர்ந்துகொண்டு இப்படிச் சொல்லக்கூடுமா? உன் தேவன் உன்னை இயேசுவிலே , இயேசுவின் மூலமாய் ஆசீர்வதித்தார். நீ வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், நீ தோண்டி எடுக்கப்பட்ட குழியையும் பார். எந்த இடத்திலே, எந்தச் சமயத்திலே தேவன் உன்னை முதலாவது இரக்கத்திற்காகக் கெஞ்சவும், ரட்சிப்பைத் தேடவும் பண்ணினார் என்று ஞாபகம் பண்ணிக்கொள். உனக்கு இரக்கங்காட்ட வருமுன் நீ பட்ட வருத்தத்தையும், நீ சகித்த அடிமைத்தனத்தையும், தேவ ஆவியால் நீ ஆறுதல் அடைந்ததையும் நினை; பிறகு உன் ஆத்துமா விடுவிக்கப்பட்டதையும் நினை; உன் மோசங்களையும், வருத்தங்களையும், கர்த்தர் உனக்காகச் செய்யும் விடுதலையையும், அவர் உனக்குக் காட்டிய யவையும், உனக்குக் கொடுத்த ஆறுதலையும் நினை; அப்பொழுது அவர் இந்தமட்டும் ஆசீர்வதித்து வந்தார் என்று அறிக்கையிடுவாய். அவர் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். அவர் உண்மையுள்ளவர் என்று நீ கண்டிருக்கிறாய். தகப்பனைப்போல நேசித்து, தாயைப்போல உன்னை ஆதரித்தார். நீ அவருக்குச் செய்த பதில் என்ன? நீ நன்றிகேடாய் நடந்தால் அவர்முன் உன்னைத் தாழ்த்தி, ரட்சகரோடு ஒட்டிக்கொள். அவராலே அவர் மூலமாய்த்தான் தேவன் உன்னை ஆசீர்வதிப்பார்.

தேவகற்பனை மீறி
மகா அசுத்தனானேன்,
பேய் என்னில் ஆண்டு சீறி
ஜெயம்கொண்டதால் கெட்டேன்:
க்ருபையால் மனம் மாறி
ரட்சிப்புக்கு உட்பட்டேன்.

மே-மீ 14-உ

'அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்'
மல்கியா 3:17

யார்? கர்த்தருக்குப் பயந்து அவருடைய நாமத்தை நினைக்கிறவர்கள்; அவரை நேசிக்கிறபடியால் அவரைத் துக்கப்படுத்தப் பயப்படுகிறவர்கள்; எல்லாவற்றிற்கும் மேலாக அவருக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு ஒப்பானவர்களாய் அவரை மகிமைப்படுத்துகிறவர்கள்; எங்கள் பிதா என்கிற அவருடைய நாமத்தை நினைத்து, அவர் கிருபையும், இரக்கமும், நீடிய சாந்தமும், மகத்துவமும், உண்மையுமுள்ளவரென்று அவரை விசுவாசிக்கிறவர்கள்; பிள்ளைகள்போல் அவரிடம் சேர்ந்து சகலத்தையும் அவர்முன் நடப்பிக்க விரும்பி அவர் சமுகத்தில் நடக்கிறவர்கள்; அவருடைய கனத்தைக் குறித்து வைராக்கியமுள்ளவர்களாய் அவருடைய மகிமைக்காகக் கவலைப்படுகிறவர்கள்; அவருடைய தயவைப்பற்றிப் பேசி. அவருடைய வல்லமையைச் சொல்லி, அவருடைய கிருபையின் ஐசுவரியத்தைப் போற்றுகிறவர்கள்; இவர்கள் என்னுடையவர்களாய் இருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். தன் பிள்ளைகளைப்போல அவர்களை நடத்துவார்; ஆபரணங்களைப்போல அவர்களை மதிப்பார்; தேவதூதர்களின் கூட்டத்தில் தம்முடையவர்களென்று அறிக்கையிடுவார். அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசமுண்டாக்கி, உலகத்தாருக்கும் விளங்காதபடியாய்த் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்துவார். அன்பர்களே, இந்த அருமையான வாக்குத்தத்தங்கள் நமக்குண்டா? நாம் தேவனுக்குப் பயப்படுகிறவர்களா? பாவம் அவருக்குக் கனவீனத்தை உண்டுபண்ணுகிறதென்று அதற்காகத் துக்கப்படுகிறோமா? அவருடைய நாமத்தை அன்போடும் பயபக்தியோடும் நினைக்கிறோமா? அப்படியானால் அவர் நம்மைக் கடாட்சிப்பார். காப்பாற்றுவார், நம்மைத் தம்முடைய ஆபரணங்கள் நடுவில் வைப்பார்.

இயேசு ராஜாவின் மகுடம்
வெளிப்படும் நாள் புகழ்ச்சி.
அவர் நரக கபாடம்
அடைத்ததே என் மகிழ்ச்சி.

'நாம் விசுவாசித்து நடக்கிறோம்'

2 கொரிந்தியர் 5:6

கிறிஸ்தவனுடைய பாதை அடிக்கடி வெகு கரடுமுரடானது. எப்பக்கத்திலும் முள்கள் வளர்ந்திருக்கும்; இருண்ட மேகங்கள் மேலே காணும்; மனதைச் சந்தோஷிக்கத்தக்க காட்சிகள் ஒன்றும் இராது. அவன் உத்தமனாய் நடக்கிறவனானால் அதுதான் சரியான பாதையென்றும், துன்பங்கள் உள்ளபடியே இரக்கங்கள்தானென்றும், கடைசியில் அது தேவனுடைய ராஜ்யத்துக்குக் கொண்டுபோகுமென்றும் உறுதியாக விசுவாசிப்பான். துன்பம் தனக்குத் தேவைதான் என்றும், அது தனக்கு நன்மையாகத் தேவன் தெரிந்துகொண்ட வழியென்றும், தேவன் தயவான நோக்கத்தோடு அதை அனுப்பினார் என்றும், தற்கால துன்பங்கள் தனக்கு நித்திய ஜெயமாய் முடியுமென்றும் அவன் நம்புகிறான். உண்மையுள்ள வாக்கின்மேல் சார்ந்து, மாறாத தேவனை நம்பி, துன்பங்கள் தன்னைச் சூழும்போது; இவைகளில் ஒன்றும் என்னை அசைக்கமாட்டா. துன்பங்கள் வழியாய் நான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும் என்று அறிவேன்; என் தேவன் என்னை ஆதரிப்பார்; அவருடைய கை என்னை காக்கும். இப்பொழுதும் இனிமேலும் என்னுடைய நித்திய ரட்சிப்பினால் அவருடைய கிருபை மகிமைப்படும், எனக்கு வழிதெரியாவிட்டாலும் என் தேவனுக்குத் தெரியும், அவர் என்னை நடத்துவார். அவர் என்னை விடமாட்டார், மரணபரியந்தம் எனக்கு வழிகாட்டுவார் என்று சொல்லுவான்.

தேவன் சொன்னதை நம்பி
பற்றிக்கொண்டு நடப்பேன்,
லோகம் விட்டுத் திரும்பி
அவரன்பைப் பிடிப்பேன்;
அவர் சொல்வது நிசம்
என் தேவன் மா பொக்கிஷம்.

'இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள்'

லூக்கா 6:21

பசி சுகத்துக்கு அடையாளம்; தேகபலத்துக்குத் தக்க தாய் அதை நீக்கவேண்டும். மாம்சத்துக்குரிய ருசி மாம்சத் துக்குரியவைகளுக்குத் திருப்தியுண்டாக்கும். கிறிஸ்தவ னுக்கு உள்ள வாஞ்சை அவனுக்கிருக்கும் பசி, தன்னில் பரி சுத்த ஆவியால் உண்டுபண்ணப்பட்டு இயேசுவால் தனக்குக் கொடுக்கப்பட்ட நீதியின்மேல் அவனுக்குப் பசியுண்டாகி றது. கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாகவும், அவரை அதிக மாய்ப் புசித்து சுய அனுபவத்தால் கண்டறியவும், தேவ னைத் தன் பங்காக அனுபவிக்கவும், ஜீவனுலாவது மரணத்தினு லாவது கிறிஸ்து தனக்குள்ளே மகிமைப்படவும் வேண்டும் என்றும் அவன் ஆசைகொள்ளுகிறான். எதன்மேல் ஆசை கொள்ளுகிறானோ அதன்மேல்தான் அவனுக்குப் பசியிருக் கிறது; அதற்குப் பதிலாக வேறொன்றும் உதவாது. கிறிஸ் துவை உட்கொள்ளும்போதுதான் அவன் நன்றாய்த் திருப்தி யடைகிறான். சிநேகிதரே! இன்று காலையிலே உங்கள் நிலைமை என்ன? உங்களுக்கு இயேசுவின்மேல் பசியுண்டா? அவர் பசிக் கிறவர்களை நன்மைகளால் நிரப்புகிறார். அவர்கள்தான் பாக் கியவான்கள் என்கிறார். அவர்கள் ஆவிக்குரிய ஜீவன் எதன் மேல் ஆசைப்படுகிறதோ அதன்மேல் வாஞ்சையுண்டு. பரி சுத்த ஆவியின் கிரியையின்மேலும் அவர்களுக்கு ஆசை யுண்டு. தேவனால்தான் இந்தப் பசியுண்டாகும்; அதைத் திருப்தியாக்கக்கூடியவர்கள் பரிபூரணமடைவார்கள் என்று சொல்லியிருக்கிறார். இது தெளிவாயிருக்கிறது, உறுதியுள் ளது, மாறாதது, இது நிச்சயம், இதை நம்பு; பாக்கியவானாய் இருப்பாய்.

நீதியின்மேல் ஆசைகொள்வோர்
க்ருபைக்காகத் தவிப்போர்,
ஜீவ அப்பம் ஜீவ தண்ணீர்
பெற்று த்ருப்தியடைவோர்;
பசிக்கும் என் ஆத்துமாவுக்கு
வானோர் அப்பம் கிடைக்கும்.

'அவர் தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்'
செப்பனியா 3:17

மனிதருடைய அன்பு மாறத்தக்கது; தேவ அன்பு மாறாதது; அது பூரண குணம். அவர் சிநேகித்தால் எப்போதும் சிநேகிப்பார்; அவர் நித்தியகாலமாய் அறிந்திருக்கிறதுதான் உலகத்தில் நடக்கும். ஆதலால் தேவன் என்னை நேசியாததற்கு, என்மேல் மனம் வைக்குமுன்னமேதானே அவர் அறிந்திருந்த காரணத்தைவிட நூதன காரணம் இப்போதிராது. நாம் எப்படி நடப்போம்? நமக்குள்ளே எப்படிப்பட்ட குணங்களிருக்கும்? இதை யெல்லாம் முன்னே அறிந்து தமது அன்பை நமதுமேல் வைத்தார். அந்த அன்பைவிட்டு எடுத்துப் போடாதபடிக்கு நம்மை இயேசுவோடு இணைத்தார். தேவன் நமதுமேல் வைத்த அன்பை நாம் அறிந்து விசுவாசிக்கிறோம். தேவன் அன்புதான் என்று யோவானைப்போல நாம் சொல்லக்கூடியவர்களானால் எவ்வளவு நலம்? தேவ அன்பு நித்திய காலமாயுள்ளது , அதற்கு மாறுதலில்லை. தேவன் இதில் அமர்ந்திருக்கிறார், நாமும் அதில் அமர்ந்திருக்கவேண்டும். ஏழையான அசுத்தமான, நன்றிகெட்ட, நிர்ப்பந்த சிருஷ்டிகளை யெடுத்து அவர் தமது குமாரனுக்கு மனையாட்டியும், தமது ஆத்துமாவின் மகிழ்ச்சியும், தமக்கு என்றுமுள்ள பங்குமாகச் செய்கிறதுதான் அன்பு. திவ்விய அன்பின் ஐசுவரியத்தைச் சொல்லி முடியுமா! அதைப் பார்த்து, ஆச்சரியப்பட்டு, அதை நம்பி, அதில் மகிழ்ந்திரு; அது உன் நித்திய தியானமாயிருக்கட்டும்; இந்தக் கல்மலையின்மேல் நம்பிக்கையோடு அமர்ந்திருக்கலாம். இந்தத் தலையணைமேல் சமாதானமாய்த் தலைசாய்க்கலாம்.

க்ருபை நன்மைகள் பொழியும்
பக்தருக்கு யாவும் சொந்தம்;
தேவசித்தம் யாவும் செய்யும்
தரும் ஆசிகள் அநந்தம்.

மே-மீ 18-உ

'பின்புபோய் அந்தச் சங்கதியை அறிவித்தார்கள்'
மத்தேயு 14:12

ஏரோது யோவானைச் சிரச்சேதம் செய்தபோது அவனுடைய சீஷர்கள் அவனுடைய உடலையெடுத்து அதைப் புதைத்து, இயேசுவினிடத்தில் போய்ச் சொன்னார்கள். நாம் இவர்களைப்போலச் சகலத்தையும் இயேசுவினிடத்தில் கொண்டுபோகவேண்டும். நம்முடைய துன்பங்களைச் சொல்லும்போது அவர் நன்றாய்க் கேட்கிறார்; நம்முடைய வருத்தங்களிலும் சோதனைகளிலும் அவர் பரிதாபமடையக்கூடியவர். அவர் நம்முடைய பிதா; பிள்ளை தன்னுடைய வருத்தங்களைப் பட்சமுள்ள தன் பிதாவினிடத்தில் சொல்லாமல் யாரிடத்தில் சொல்லும்? அவர் நம்முடைய அடிகளை நடத்தி, நமக்கு நேரிட்ட தீமைகளுக்குப் பழிவாங்கி, சகலத்தையும் நமக்கு அநுகூலமாக்குவார். நம்முடைய காரியம் செம்மையாய் நடக்கவில்லையா? சத்துருக்கள் ஜாக்கிரதையாயிருக்கிறார்களா? உள்ளான பாவக்கேடுகள் பலத்திருக்கிறதா? விசுவாசம் தடுமாடுகிறதா? உன் குடும்பத்தில் சோதனையுண்டா? அதை இயேசுவினிடத்தில் போய் சொல்லு, உன் மனதில் சமாதானமிருக்கும், பாவத்தைத் தடுக்கும், குறைவுகள் நீங்கும்; சாத்தானுடைய நோக்கங்கள் அவமாகும். உன் நிர்ப்பந்தங்களைக்குறித்து எண்ணமிட்டுக்கொண்டிராதே; சிருஷ்டிகளண்டையில் போகாதே; முறுமுறுக்காதே; முறையிடாதே; ஏங்கிச் சலிப்படையாதே; இயேசுவினிடம் போ; தீவிரமாய்ப் போ; நம்பிப் போ; போய் அவரிடத்தில் மறைக்காமல் சகலத்தையும் சொல். இன்று காலமே போ; உன் முறைப்பாடுகள், ஆசைகள், பயங்கரங்கள சகலத்தையும் அவருக்கு முன் வைத்து, உன் காரியத்தைத் தம்மேல் போட்டுக்கொள்ளும்படி கெஞ்சு. நீ சொல்லுகிறதைக் கேட்கிறது அவருக்குப் பிரியம். உதவி செய்வேன் என்று வாக்களித்திருக்கிறார்; நிச்சயமாகவே உன்னை ஆசீர்வதிப்பார்; உன் இருதயத்தை அவருக்கு முன்பாக ஊற்றி, அவரிடத்தில் அடைக்கலம் பெறுவது உன் கடமை, உன் சிலாக்கியம்.

தேவா, உமது மடியில்
துக்கம் யாவும் ஊற்றுவோம்,
நாங்கள் விண்ணப்பம் செய்கையில்
நீர் கேட்டால் மகிழுவோம்.

'எல்லாம் சரிதான்'

2 இராஜாக்கள் 4:23

இது துன்பப்பட்ட விசுவாசி சொல்லுகிறது. நாமும் துன்பப்படும்போது இப்படித்தான் சொல்லவேண்டும். நமமுடைய துன்பமும், வருத்தமும், சோதனையும் பெரிதாயிருக்கலாம். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு எல்லாம் நன்றாயிருக்கும். பாவம் உங்கள்பேரில் ஆளுகை செய்யமாட்டாது. நீங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழல்ல, கிருபையின் கீழ் இருக்கிறவர்கள். நீங்கள் சாத்தானுடைய பொல்லாத சிந்தனைகளாலும், பலத்த சோதனைகளாலும் வருத்தப்படுகிறவர்களா? அது நன்றாயிருக்கும். ஏனென்றால் சமாதானத்தின் தேவன் சாத்தானைச் சீக்கிரம் உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார். வழியில் காணும் துக்கங்களாலும், வருத்தங்களாலும், சோதனைகளாலும், உங்கள் ஆத்துமா சோர்ந்து போனது. அதுவும் நலம்தான். தேவனை நேசிக்கிறவர்களுக்கு, தீர்மானப்படி அழைக்கப்பட்டவர்களுக்குச் சகலமும் நன்மையாகவே முடியும். உன் காரியம் விசேஷித்தது என்று சொல்லிப் பயப்படுகிறாயோ? அதுவும் நன்மைதான். மனிதருக்குச் சாதாரணமாய் நேரிடும் சோதனையின்றி வேறொரு சோதனையும் உங்களைப் பிடிக்கிறதில்லை. தேவன் உண்மையுள்ளவர்; தாங்குகிறதற்கு மேலான சோதனையை அனுப்பவுமாட்டார். நீங்கள் தாங்கத்தக்க சோதனைகளோடுகூட தப்புவதற்கு வழியையும் உண்டுபண்ணுவார். கிருபை நிறைந்த தேவனுடைய வாக்கு எவ்வளவு அருமையானது. கர்த்தாவே, இதை நம்பிச் சந்தோஷப்படச் செய்யும். அப்போது உயிரோடிருந்தாலும் மரித்தாலும் சரிதான்.

இவ்வாக்கின் மதுரம்
யாரால் சொல்லக்கூடும்?
விசுவாசிக்கென்னேரமும்
சேமம் வந்துகூடும்.

‘அவர் அதிகமான கிருபையை அளிக்கிறார்’
யாக்கோபு 4:6

கிருபாசனத்தண்டை இப்போது நமக்குக் கிடைத்திருக்கிற சந்தோஷத்தைவிட அதிக சந்தோஷம் கிடைக்கிறதும், தேவனும் அதிக உற்சாகத்தோடு கொடுக்கிறதும் கூடாத காரியம். தேவதூதர்கள் மகிமையாசனத்தண்டை எவ்வளவு சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளப்படுகிறார்களோ, நாம் கிருபாசனத்தண்டை அவ்வளவாய் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம், கொடுக்கவேண்டுமென்றுதான் தேவன் சேகரித்து வைத்திருக்கிறார்; அவர் கிருபையின்மேல் கிருபையைத் தருகிறார்; அவர் கொடுக்கிறதில் ஓய்கிறதில்லை; நாம் கேட்கிறதில் ஓய்ந்துபோகிறோம். நாம் சந்தேகமாய்க் கொஞ்சத்திற்காகக் கேட்கும்போது அவரைக் குறைவுபடுத்துகிறோம். விசுவாசத்தோடு சந்தேகியாமல் கேட்கவும், அவர் நிரப்பும்படிக்கு நம்முடைய வாய்களை விரிவாய்த் திறக்கவும் கற்பிக்கிறார். நம்முடைய பாவங்களை மன்னிக்க, நம்முடைய சுபாவங்களைப் பரிசுத்தமாக்க, நம்முடைய சத்துருக்களை ஜெயிக்க, துன்பங்களைச் சகிக்க; நம்முடைய கடமைகளை நிறைவேற்ற, தேவையானதெல்லாம் கிருபை என்கிற வார்த்தையில் அடங்கியிருக்கிறது, நமக்கில்லாவிட்டால் அதற்குக் காரணம் என்ன? நாம் கேட்கிறதில்லை, அல்லது தப்பாய்க் கேட்கிறோம்; அல்லது நம்முடைய இச்சைகளில் செலவழிக்கக் கேட்கிறோம், இன்று காலைக்குத் தேவையான கிருபையிருக்கிறது; அதற்காகக் கேட்போமாக. ஆத்துமாக்களின் நன்மைக்கும் ஏதுவாகப் பிரயோகிக்க அதைக் கேட்போமாக. அவர் கிருபையும் மகிமையும் தருவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு எந்த நன்மையும் வழங்குவார்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது கேளுங்கள், பெற்றுக்கொள்வீர்கள்; தேடுங்கள், கண்டடைவீர்கள். அவர் கடிந்துகொள்ளாமல் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்க மறவார்.

இவ்வாக்கு மா அதிசயம்
தேவ க்ருபையே ஜெயம்,
அளித்தவ்வாக்கின் உண்மையே
நிறைவேற்றும் மா நயம்.

'உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையா யிருங்கள்'

மல்கியா 2:15

விசுவாசியின் ஆவி பொறுமையும் அன்பும் தாழ்மையுமாய் இருக்கவேண்டும். அவன் சகலவிதமான கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும்; மற்றெந்த துர்க்குணமும் நீங்க, உருக்கமான இரக்கத்தையும், தயவையும், தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, மன்னிக்கிறதற்கு மனதுள்ளவனுயிருக்கக் கற்பிக்கப்படுகிறுன். கசப்பும் சண்டையும் குற்றம்பிடிக்கிறதுமான ஆவி கிறிஸ்துவின் ஆவிக்கு விரோதமானது; மன்னிக்க மனதில்லாதவன் கிறிஸ்தவனுயிருக்கமாட்டான். நீங்கள் மனிதருக்கு அவர்களுடைய தப்பிதங்களை மன்னியாமற்போனுல், என் பரமபிதா உங்களுக்கு மன்னிக்கமாட்டார் என்று இயேசு ரட்சகர் சொன்னுர். நீங்கள் இன்ன ஆவியை யுடையவர்கள் என்று அறியீர்களென்பதாய் உங்களைப்பற்றி சொல்லாதபடிக்கு உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இயேசுவினிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அவர் மனத்தாழ்மையும் சாந்தமுமாயிருந்தார்; பொறுமையுள்ளவரும் மன்னிக்கிறவருமாயிருந்தார், சத்துருக்களுக்குத் தயவு காட்டி பட்சமாயிருந்தார்; பெருமையும், விரோதமும் மனமேட்டிமையுமான இருதயமுள்ளவன் நொறுங்குண்ட எஜமானேடு ஐக்கியமாவதெப்படி? சிநேகிதரே, நம்முடைய ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருப்போமாக. தன் ஆவியை ஆளுகிறவன் ஒரு பட்டணத்தை ஜெயிக்கிறவனைவிடப் பெரியவன்; அடக்கி ஆளாத ஆவி மதில்களும் வாசல்களும் விழுந்துபோன பட்டணத்தைப்போலிருக்கிறது. அது எப்பக்கத்திலும் சத்துரு வருவதற்குத் திறந்துகிடக்கிறது. கர்த்தாவே, என் ஆவியைப் பரிசுத்தமாக்கும்.

ஆவி பரம புருவே!
என்மேலே இறங்குமேன்,
சமாதானம் அன்புதரவே
நான் மேல் நோக்கச் செய்யுமேன்,
என் மனேவாக்குக் காயமும்
மகிமை வரப்பண்ணும்.

'என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்'

யோவான் 14:14

இன்று காலையில் இயேசு நமக்கு இந்த வார்த்தையைச் சொல்லுகிறார். இது நம்மை கிருபாசனத்தண்டையில் உற்சாகப்படுத்தி, பலப்படுத்த, நம்முடைய துன்பங்களிலும் பலவீனங்களிலும் நம்மை ஆற்றித்தேற்ற சொல்லியிருக்கிறது. இயேசுவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுமுண்டு. பிதா அவருக்குச் சகலத்தையும் ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவரிடத்தில் பெரிய பொக்கிஷம் உண்டு; அவருடைய இருதயம் பட்சமுள்ளது, மிருதுவானது; நம்முடைய குறைவுகளை அவரிடத்தில் கொண்டுபோனால் அவர் அவைகளை நிறைவாக்குவார். நம்முடைய பாவங்களை அவரிடத்தில் கொண்டு போனால், அவைகளை மன்னித்து ஜெயிப்பார். நமக்கு வருத்தத்தைக் கொடுக்கிற எதையும், நம்மைச் சேதப்படுத்துகிற எதையும், அவரிடத்தில் கொண்டுபோகலாம்; நம்பி அவரிடத்தில் கொண்டுபோகலாம்; அவர் சொல்லுகிறதென்ன? 'நான் என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறாய், என்னை மகிமைப்படுத்துகிற எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன், கேட்கப் பயப்படாதே; நான் சர்வவல்லவர், சந்தேகியாதே; நான் அதைச் செய்வேன் என்று வாக்குக் கொடுக்கிறேன்.' விசுவாசியே, இயேசு எப்படிப்பட்டவர் என்று பார்; எவ்வளவு பட்சமுள்ளவர்; எவ்வளவு கிருபை நிறைந்தவர் இன்னும் முறையிடாதே; சோர்ந்துபோகாதே; தியங்காதே; இயேசு உன் சிநேகிதர். அவர் உன் சிநேகிதராயிருக்கிறார்; அவர் உன் சிநேகிதர். ஆகவே நித்தம் அவரிடத்தில் கேள். அவரை முற்றிலும் நம்பு; மனப்பூர்வமாய் நம்பு; அவரைப் பின்பற்று; அவரை உனக்குச் சகலமும் ஆக்கிக்கொள்ளப் பார். அவர் அபாத்திரரா? அவர் உன்னை மோசம்போக்கார்; அவர் பொய் சொல்லுகிறது அசாத்தியம்.

இயேசு உம்மை நோக்குவேன்
வேறெவ்விடம்தான் போவேன்?
உமதன்பென்னைச் சேர்க்கும்
துன்பம் யாவையும் நீக்கும்.

'இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்'

பிலிப்பியர் 3:20

நம்முடைய அருமையான ரட்சகர் இப்பொழுது தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார். தமது சத்துருக்கள் தமக்குப் பாதபடியாக்கப்படுவார்கள் என்று காத்திருக்கிறார். அவர் சீக்கிரம் வருவார்; அந்தக் காலம் தீவிரிக்கிறது; அவர் வெளிப்படுங்காலத்தை நாம் எதிர்பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும். கிறிஸ்தவன் தேவனுடைய நாள் வரும் என்று காத்திருந்து எதிர்நோக்கித் துரிதப்படவேண்டும். முதலாம் தரம் வந்ததுபோல, இரண்டாந்தரமும் நிச்சயமாகவே வருவார். இரவில் திருடனைப்போல வருவார். தமது மகிமையிலே எல்லாப் பரிசுத்த தூதரும் அவரைப் புடைசூழ்ந்து வருவார்கள். அவர் ஆள வருவார். தமது ஜனங்களுக்குப் பெலனளிக்க, தமது சத்துருக்களைத் தண்டிக்க வருவார். கர்த்தருடைய வருகையைக்குறித்து நாம் சோம்பல்காரராய் கவலையற்றவர்களாய் ஏனோதானோ என்று இருக்கக்கூடாது. அவர் நம்மை ரட்சிக்க வருகிறார். நாம் கருத்தான ஜெபத்தோடும், ஆசையோடு கூடிய நம்பிக்கையோடும், உருக்கமான அன்போடும், உண்மையான ஆவலோடும், ஜாக்கிரதையுள்ள ஆயத்தத்தோடும், அவர் வருகையை எதிர்பார்த்திருப்போமாக. அவர் வரும்போது அடிமைத்தனத்திலிருந்து பூமி விடுதலையாக்கப்பட்டு, தேவபுத்திரரின் மகிமையால் சுயாதீனத்துக்குள்ளாகும்? சிருஷ்டிகளின் பெருமூச்சுகள் தணிந்துபோம். கர்த்தருடைய ஜனங்கள் செய்யும் வேலைகளுக்கும் ஜெபங்களுக்கும் உத்தரவு உண்டாகும்; நீதியின் கிரீடங்கள் கொடுக்கப்படும். நாம் அவரில் நிலைத்திருப்போமாக. அப்போதுதான் நமக்கு நம்பிக்கையுண்டாகும்; அவர் வருகையில் அவருக்கு முன்பாக நாம் வெட்கமடையோம்.

பாவிக்காய் மரித்த இயேசு
வானத்திலிறங்குவார்,
கோடி தூதரோடு
வந்து ஆரவாரிப்பார்,
அல்லேலூயா
கர்த்தர் பூமியாளுவார்.

மே-மீ 24-உ

'சத்துரு'

லூக்கா 10:19

கிறிஸ்தவனுக்குச் சத்துருக்கள் அநேகர் உண்டு. அவர்களில் விசேஷித்தவன் ஒருவன்; அவன் இந்த உலகத்தின் தம்பிரான்; கர்த்தரால் அழைக்கப்பட்டவர்கள் தவிர மற்றெல்லாரும் அவனை வணங்குகிறார்கள். ஆகாயத்தில் வல்லமையின் பிரபுவாய் அவன் எல்லா அவிசுவாசிகளையும் நடத்தி, அவர்களில் கிரியைசெய்து வருகிறான். அவன் தந்திரமான சர்ப்பம், மோசம் போக்குகிறவன், விழுங்கப்பார்க்கிற கர்ச்சிக்கிற சிங்கம், மரணத்திற்குரிய வல்லமையுடையவன். அவன் நம்முடைய இருதயத்தில் வந்து, நம்மைத் தப்பான வழியில் நடத்தப்பார்க்கிறான். அவனுக்கு வேதவசனம் நன்றாய்த் தெரியும், அதினின்று எடுத்துச்சொல்லி அதைத் தப்பாய் அர்த்தப்படுத்துவான். ஒரு வசனத்தைக்கொண்டு பயப்படுத்துவான். வேறொரு வசனத்தைக்கொண்டு பாவத்தை அற்பமாகக் காட்டுவான். நமக்கு எப்படிச் சேதமுண்டாக்கலாம் என்று பிரயாசப்பட்டுக்கொண்டே இருக்கிறான். சிநேகிதரே, இயேசுவின் பாதத்தண்டையில் சுகமாயிருக்கிறோம், நாம் அவரிடத்தில் நிலைத்திருந்து, அவரோடு நடந்தால்தான் சாத்தானை மேற்கொள்ளலாம். ஆட்டுக்குட்டியின் ரத்தமும், தேவனுடைய சாட்சியாகிய வசனமும்தான் நம்முடைய ஆயுதங்கள், விசுவாசம் கிறிஸ்து நிறைவேற்றின கிரியைக் கேடயமாகப் பிடித்துக்கொள்ளுகிறது. தேவனுடைய வசனம் அதின் பட்டயம். இவ்விதமாய் அந்தக் கொடிய சத்துருவை மேற்கொள்ளலாம்; தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்வோமாக.

இயேசு உனக்காய் மரித்தார்
அவர் அன்பெதிர்ப்போர் யார்?
விசுவாசத்தையே பிடி
நீ கெடுவதெப்படி?
இயேசு இரக்கத்தால் ஜெயிப்பாய்
திடனோடங்கே நிற்பாய்.

மே-மீ 25-உ

'நான் உன்னோடு இருப்பேன்'

யாத்திராகமம் 3:12

ஏகோவாவின் சமுகம் கிடைக்கிறது பெரிய கனம். அவருடைய மகிமைக்காக நாம் செய்யும் எந்தப் பிரயத்தினங்களிலும், அவருடைய வசனத்தில் கண்டிருக்கும் எந்தக் கடமையை நிறைவேற்றுதலிலும், பரதேசியாய் நாம் கடக்கும் பாதையில் நேரிடும் எந்த மோசத்திலும், அன்னிய நாடாகிய இந்த உலகத்தில் உண்டாகும் எந்தத் துன்பத்திலும் நம்மோடிருப்பேன் என்று வாக்குக்கொடுத்திருக்கிறார். அவருடைய சமுகம் நம்மை தைரியப்படுத்தும், பெலப்படுத்தும், ஆதரிக்கும், நமக்கு வாழ்வுண்டாக்கும். இந்த வாக்கு எந்த பயத்துக்கும் நாம் நீங்கியிருக்க நம்மை ஆயத்தப்படுத்தும்; விரோதமுண்டாகும்போது மனதை உற்சாகப்படுத்தும்; நல்ல காரியத்துக்கு நம்மை எழுப்பிவிடும். சிநேகிதரே, தேவன் நம்மோடிருப்பதாக வாக்குக்கொடுத்திருக்கிறார். அப்படியானால் அவருடைய சமுகம் நம்மோடிருக்கிறதாக எண்ணவேண்டும். கர்த்தருடைய சமுகம் இல்லாவிட்டால், எதுவும் நம்மைத் திருப்தியாக்கக்கூடாது. தேவன் நம்மோடிருந்தால் நமக்கு காரியம் வாய்க்கும். நம்மிடத்தில் என்ன கேட்கிறாரோ அதை அவர் தருவார். அவருடைய கிருபையின் மிகுந்த ஐசுவரியத்தில் நமக்கிருக்கும் அனுபவத்தை வெளிப்படுத்துவோம். அவருடைய சமுகம் அவருடைய ஜனங்களுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். புலன்களால் அவரை அறியாவிட்டாலும் அவர் இருப்பது நிச்சயம். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், அவருடைய வார்த்தையின் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாமல் சகலமும் நிறைவேறும். இன்றைக்கு இயேசுவின் சமுகத்தைத் தேடி அதை எதிர்பார்ப்போமாக. நான் உன்னைவிட்டு விலகுவதில்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று அவர் சொன்னதைக்குறித்துச் சந்தோஷப்படுவோமாக. நாம் அவரைவிட்டு ஒருபோதும் விலகாதிருப்போமாக.

நம்பி நீ இளைப்பாறு
அவர் வழி காட்டுவார்;
அவர் உண்மையில் தேறு
உன் குறைவை நீக்குவார்;
அவர் உண்மையைப் பிடி
பின்செல் அவர் காலடி.

மே-மீ 26-உ

'எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்து அறியக்கடவன்'

1 கொரிந்தியர் 11:2-8

இது அவசியம்; இப்படிச் சோதித்துப் பார்த்தால்தான் நம்முடைய ஆதாரம் இன்னதென்று அறிந்துகொள்வோம். நாம் வளருகிறோமோ குறைகிறோமோ என்று நமக்குத் தெரியும். நித்திய ஜீவனை எந்த அஸ்திவாரத்தின்மேல் கட்டுகிறோம்? நம்முடைய நம்பிக்கை எதின்மேல் இருக்கிறதென்று காலையில் சோதிப்போமாக. நமக்கிருக்கும் இன்பம் சமாதானம் இவைகளுக்கு ஊற்றெங்கே? நாம் உண்மையாகவே கிறிஸ்தவர்கள் என்று ரூபிக்க நம்மிடத்தில் என்ன இருக்கிறது? அவருடைய பரிசுத்த ஆவியினால் நாம் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறோமா? கிறிஸ்து நமக்கு ஜீவனாக நமக்குள்ளே வாசம்பண்ணுகிறாரா? பாவத்தின் தன்மை, லட்சணம் செய்கை இவைகளைப்பார்க்க நாம் வெளிச்சம் அடைந்திருக்கிறோமா? கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவருடைய வசனத்தை, விசுவாசத்தை, அவருக்கென்று ஜீவனம்பண்ணுகிற உயிருள்ள விசுவாசம் நம்மிடத்தில் உண்டா? கிருபையிலே நாம் நல்நம்பிக்கை உடையவர்களாய் பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயத்தில் ஊற்றப்பட்டிருக்கிறதா? தேவன் நம்மைச் சிநேகித்தார் என்று சொல்லி, நாம் அவரை நேசித்துச் சமாதானத்திலும் பரிசுத்தத்திலும் நடத்தப்படுகிறோமா? ஆவியின் அச்சாரமும் சாட்சியும் நம்முடைய இருதயத்தில் உண்டா? நாம் பாவத்தோடு போராடி ஒரு கொடூர மன்னனிடத்திலிருந்து, ஒரு கொடிய வியாதியிலிருந்து, ஒரு கொடிய தீமையிலிருந்து விடுதலையாக விரும்புகிறதுபோலப் பாவத்தினின்று விடுதலையாக ஜெபம்பண்ணி வருகிறோமா? தேவவசனத்தை நமக்குச் சட்டமாகவும் வழிகாட்டியாகவும் வைத்துக்கொண்டு, பயபக்தியோடும், நல்யோசனையோடும், ஜெபத்தோடும் நம்மைச் சோதித்து வருகிறோமா? நம்முடைய செய்கையை நாமே பரீட்சித்துக்கொள்வோமாக. அப்போது மற்றவர்களைப் பார்த்தல்ல, நமக்குள் நாமே சந்தோஷப்படுவோம்.

என்னை ஆராய்ந்து பாருமே
என் பயத்தை நீக்குமே,
உண்மையை வெளிப்படுத்தி
மனச்சாட்சி அமர்த்தி,
தேவகிருபை என்னிலூற்றும்
என் இதயத்தை ஆற்றும்.

‘அங்கே அவனை ஆசீர்வதித்தார்’

ஆதியாகமம் 32:29

ஏழை யாக்கோபு பயமும் திகிலுமடைந்து, தேவனிடத்தில் கெஞ்சிப் போராடப்போனான். அழுது விண்ணப்பஞ் செய்து தேவனோடு போராடி மேற்கொண்டான். அங்கே அவனை தேவன் ஆசீர்வதித்தார்; நம்மை ஆசீர்வதிக்கிறது தேவனுக்குப் பிரியம். ஆதலால் உலகத்தோற்றத்திற்கு முன்னே ஆதியிலே இயேசுவின் சகல பரம ஆசீர்வாதங்களோடு நம்மை ஆசீர்வதித்தார். நம்மை உண்டாக்குமுன்னே தமது குமாரனில் நமக்குக் கிருபையை அளித்தார். ஆகிலும் அவரிடத்தில் நாம் கெஞ்சி அழவேண்டும் என்பது அவர் மனம். அவர் ஆசீர்வதிக்கிற தேவன், மனுஷருடைய இருதயத்தில் வருத்தமுண்டாக்குகிற எந்தக் குறையும் கிறிஸ்துவின் பரிபூரணத்தால் முன்னமே நீக்கப்பட்டுப்போனது. நம்முடைய போராட்டமும் சோதனைகளும் எவ்வளவு பெரியதாயிருந்தாலும் நாம் மலைக்கவேண்டுவதில்லை. கிருபை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; சர்வ வல்லபத்தோடு கிருபையும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிறது; நம்முடைய பரம பிதாவின் அன்பு தவறாது; நம்முடைய தெய்வீக ரட்சகரின் பரிபூரணம் குறையாது; உண்மையுள்ள வாக்கு கெடாது. ஆதலால் ஆகோரின் பள்ளத்தாக்கில் கெஞ்சி யுத்த வெளியில் போராடுவோமாக. அங்கே அவனை ஆசீர்வதித்தார் என்று இன்னும் சொல்லப்படும். ஜெபத்தின் ஆவி எவ்வளவு அவசியம்; உயிருள்ள விசுவாசம் எவ்வளவு தேவை.

தேவா உமது பக்தர்க்கு
நீர் அளித்த நன்மை.
நான் அறியச் செய்தெனக்குத்
தாரும் மோட்ச பலனை.

மே-மீ 28-உ

'உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்'

நீதிமொழிகள் 3:6

சிநேகிதரே, நாம் கர்த்தருடையவர்கள்; அவருடைய வல்லமையால் உண்டான சிருஷ்டிகள்; அவருடைய ரத்தத்தால் கொள்ளப்பட்டவர்கள்; அவருடைய கிருபையைப் பெற்றவர்கள். அவர் நமதுமேல் தமது அன்பை வைத்தார்; நமக்காகத் தமது ஞானத்தை உபயோகித்தார்; நம்முடைய காரியங்களில் மனம் வைத்திருக்கிறார். நாம் செய்கிறதெல்லாம் அவர் மகிமைக்கென்று இருக்கவேண்டும். எல்லாவற்றையும் ஜெபத்தோடும், நன்றியறிதலோடுகூடிய விண்ணப்பத்தோடும், நமக்கு வேண்டிய சகலத்தையும் அவருக்குத் தெரியப்படுத்தவேண்டும். ஒவ்வொரு காரியத்தையும் அவருடைய கிருபாசனத்தண்டைக்குக் கொண்டுபோய், நம்மைச் சேர்ந்த ஒவ்வொரு சங்கதியையும் அவருக்கு முன் வைத்து, நம்மை நடத்தி ஆசீர்வதிக்கக் கேட்கவேண்டும். நம்முடைய நிர்ப்பாக்கியம் அவருடைய கிருபாசனத்தண்டையில் போகும்போது அவருடைய செவி நமக்குத் திறந்திருக்கும். அவர் தகப்பனுனபடியால் நாம் அவரைக் கனப்படுத்தவேண்டும். முழு இருதயத்தோடு அவரை நோக்கிக் கெஞ்சவேண்டும். கேட்கிறதில் நம்முடைய இருதயம் பின்வாங்குமானுல், கொடுக்கிறதில் அவருடைய கை பின்வாங்கும். சகலத்திலும் அவரை அறிக்கையிடுவோமானுல், மனதில் சமாதானம் தங்கும். அநேக சோதனைகளுக்குக் காக்கப்படுவோம். நம்முடைய விசுவாசம் அவரால் பலப்படும். தேவனை எப்பொழுதும் அறிக்கையிடுகிறவன், தன்னைத் தேவன் அறிக்கையிடுகிறதைக் காண்பான்.

ராஜாதி ராஜா கர்த்தாவே!
நின் செட்டைகளால் மூடுமே;
நீர்தான் என் பெலன் கேடகம்
என் ஆத்துமாவுக்குச் சுகம்;
என் ஜீவன் பாதை சத்தியம்
என் அடைக்கலம் நித்தியம்.

'கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணும்படிக்கு'

பிலிப்பியர் 3:9

கிறிஸ்துவுக்குள் இருக்கிறது விசுவாசத்தினுலும் அன்பினுலும் அவரோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இது எவ்வளவோ விசேஷித்த காரியம். கிறிஸ்துவைவிட்டால் நாம் நிர்ப்பாக்கியர், நிர்ப்பந்தர், ஏழைகள்; குருடர்; நிருவாணிகள். கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டால்; நாம் எவ்வளவோ ஐசுவரியவான்கள், எப்போதும் சேமமாயிருப்போம். எவ்வளவோ உயர்ந்திருப்போம். தேவனுடைய சிம்மாசனத்துக்கு முன்பாகக் குற்றமற்றவர்களாயிருப்போம். நாம் கிறிஸ்துவோடு ஒன்ருயிருந்தால், கடன்காரன் ஜாமீன் கொடுத்த பிறகு குற்றமற்றவனு யிருக்கிறதுபோல், கீழ்ப்படிதலினுல் நீதிமான்களாக்கப்படுவோம். நோவா பேழையில் ஆதரிக்கப்பட்டதுபோல, அவரால் ஆதரிக்கப்படுவோம். அடைக்கலப்பட்டணத்தில் இருக்கும் கைப்பிசகாய்க் கொலைசெய்தவனைப் போல, நியாயத்தீர்ப்புக்கு விடுதலையாவோம். நித்தியரும் சாவாமையுள்ளவரும் ஞானமுள்ளவருமான ராஜாவின் மனையாட்டியாகக் கனமடைகிருேம். அவரில் கண்டுபிடிக்கப்படுகிறது நலம் என்பதை அப்போஸ்தலன் நன்ருய் விரும்புகிருன். கிறிஸ்துவில் ஒன்ருயிருக்கிறதினுல் வரும் பாக்கியத்தை மனதினுல் எண்ணவுங்கூடாது, நாவினுல் சொல்லவும் கூடாது. ஆகையால் சிநேகிதரே, நான் இப்போது கிறிஸ்துவிலிருக்கிறேனு? அவருடைய உண்மையுள்ள மனையாட்டியாக அவரோடு வாசம்பண்ணுகிறேனு? உண்மையுள்ள ஊழியக்காரனுக அவருக்காகப் பிழைத்துவருகிறேனு? அவரைச்சார்ந்த பிள்ளையைப்போல அவரைப்பற்றி ஜீவனம் பண்ணுகிறேனு? நான் கிறிஸ்துவுக்காகச் சகலத்தையும் விட்டேனு? நான் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டேனு? உலகம் எனக்குச் சிலுவையில் அறையப்பட்டது, நானும் உலகத்துக்குச் சிலுவையில் அறையப்பட்டேன் என்று சொல்லக்கூடியவனு என்று இன்று காலமே நாம் ஒவ்வொருவரும் ஆராய்ந்து அறியவேண்டும்.

இயேசு தவிர மற்றெல்லாம்
எனக்கு நஷ்டமாம்;
அவர் நீதி எனக்கெல்லாம்
செய்து முடிக்குமாம்.

மே-மீ 30-உ

'என் ஊற்றுகள் எல்லாம் உன்னிலிருக்கிறது'

சங்கீதம் 81:7

இயேசுவே ஜீவ ஊற்று, இரட்சிப்பின் கிணறுகள் அவரிலும் அவருடைய கிரியையிலும் வார்த்தையிலும் உண்டு. ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து குடிக்கக்கடவன் என்கிறார். ஆறுதல், சமாதானம், ரட்சிப்பு இவைகளின் ஊற்றெல்லாம் அவரிடத்தில் உண்டு; அவரில் நமக்காக இருக்கிறது; அதினால் நம்முடைய ஊற்று என்று சொல்லப்படுகிறது. இந்தத் தண்ணீர் எந்தத் தீட்டினின்றும் நம்மைச் சுத்தம் பண்ணும், ஆயாசத்தால் சோர்ந்திருக்கிறவர்களைத் தேற்றும், ஆசையுள்ள ஆத்துமாக்களைத் திருப்தியாக்கும். ஊற்று நிறைவுக்கு அடையாளம், மனசுள்ளவன் வந்து மொண்டுகொள்ளலாம், ஆறுகள் வற்றுகிறதே இல்லை. நாம் எக்காலத்திலும் இயேசுவில் சார்ந்திருக்கிறோம், இது நமக்குக் கிடைத்த இரக்கம். மற்றவர்களிடத்தில் நாம் போகவேண்டியதில்லை, இது நம்முடைய பாக்கியம். நம்முடைய ஆசைகளை அவரிடத்தில் சொல்லவேண்டும்; நம்முடைய பாசங்கள் அவரைப் பற்றினதாக இருக்கவேண்டும். இயேசுவில் பல வகைகள் உண்டு. நமக்குத் தேவையானதெல்லாம் செய்வார், கொடுப்பார். அவரிடத்தில் பரிபூரணம் வாசமாயிருக்கவேண்டுமென்று பிதா சுத்தமாயிருக்கிறார். நம்முடைய ஊற்றுகள் எல்லாம் இயேசுவில் இருந்தால் வேறு ஒருவரிடத்திலும் போகாமல், சந்தோஷத்தோடு ரட்சிப்பின் ஊற்றுகளில் இருந்து தண்ணீர் மொண்டுகொள்வோமாக. அவரைக் கேட்டால் ஜீவதண்ணீரைக் கொடுப்பார்; நாம் ஒருபோதும் தாகமடையோம். இயேசுவினிடத்தில் வருகிறதுதான் ஆத்துமாவுக்குத் திர்ப்தியுண்டாக்கும்.

இயேசுவே உமதண்டைதான்
பாவி ஓடி வரலாம்;
வா என்று சொன்னீர் நீர்தான்
என்றும் பாயும் நீரூற்றும்;
அன்பால் என்னை நிரப்பும்
என் சிந்தைமேலெழும்பும்.

மே-மீ 31-உ

'நீதிமான் நெருக்கத்தினின்று நீங்குவான்'
நீதிமொழிகள் 12:13

கர்த்தருடைய ஜனங்கள் இயேசுவின் நீதியினாலே கிருபையைக்கொண்டு விசுவாசத்தின் மூலமாய் நீதிமான்களாக்கப்படுகிறார்கள். அவ்விதமாய் நீதிமான்களாக்கப்பட்டு புதுசாய் சிருஷ்டிக்கப்பட்ட யாவரும் தங்கள் இருதயங்களில் பரிசுத்தமும், நீதிக்குரிய அழியாத பிரமாணங்களும், நாட்டப் பெற்றிருக்கிறபடியால் பாவத்தைப் பகைத்து வருகிறார்கள். பாவம் அவர்களை ஆளுகைசெய்கிறதே இல்லை. அவர்கள் தங்கள் இச்சைகளுக்கு அடிமைகளுமல்ல. அநேக துன்பங்கள் அவர்களுக்கு நேரிட்டாலும், தீய்க்கும் தண்ணீருக்கும் உள்ளாலும், அவர்கள் நல்ல இடத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள். துன்பத்தினால் அழிந்துபோகமாட்டார்கள். ஏனென்றால் கர்த்தர் அவர்களைத் தம்முடைய கரத்தால் தாங்குவார். சிநேகிதரே, உங்கள் தற்காலத் துன்பங்களுக்கு அப்பால் பாருங்கள். கிறிஸ்தவனாகப் பாடுபட்டால் கிறிஸ்துவோடு பாடுபடுகிறீர்கள் என்று அறிந்துகொள்ளுங்கள். அவரோடு பாடுபட்டால் அவரோடு ஆளுகை செய்வீர்கள். உங்கள் தேவன் உங்களை விடுவிக்க வல்லவர்; விடுவிப்பேன் என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். அவரை உறுதியாய்ப் பிடியுங்கள்; சோதனைக்கு இடம்கொடாதிருங்கள்; பொல்லாங்கின் தோற்றத்தையும் தள்ளுங்கள். உங்கள் தேவன் பொல்லாங்கினின்று உங்களைக் கொண்டுவருவார். உங்கள் நீதியை வெளிச்சத்தைப் போலவும், உங்கள் நியாயத்தைப் பட்டப் பகலைப்போலவும் கொண்டுவருவார். நீங்கள் நிர்ப்பாக்கியத்தை மறந்துபோவீர்கள். அதை நினைத்தாலும் கடந்துபோகிற தண்ணீரைப்போல அதை நினைப்பீர்கள். தற்காலத் துன்பம் நித்திய சமாதானமாய் முடியும்.

அங்கே சேர்ந்த கூட்டத்தார்
இங்கவரைப் பிடித்தார்;
பயங்கள் அதட்டினார்
காயமெல்லாம் கட்டினார்;
தேவன் பட்சமுள்ளவர்
உனக்கும் இரங்குவார்.

'நம்முடைய நீதியாயிருக்கிற கர்த்தர்'

எரேமியா 23:6

இயேசு ஏகோவா, தாமாயிருக்கிறவர், நித்தியர், மாருத தேவன். அவர் நம்முடைய நீதி; இதற்கென்று அவர் நம்முடைய தன்மையைத் தரித்துக்கொண்டார். நமக்குப் பதிலாக வந்து, பிரயாசப்பட்டு, துன்பமடைந்து; ரத்தஞ்சிந்தி மரித்தார். இயல்பாய் நமக்கு நீதியில்லை; கிருபையினால் தேவ நீதி கிடைத்திருக்கிறது. அவர்களுடைய நீதி என்னிலிருந்து உண்டானது என்று கர்த்தர் சொல்லுகிறார். நம்மை நீதிமான்களாக்கத் தேவையானதெல்லாம் கிறிஸ்து நமக்காக முடித்தார். அவர் பாவத்தைத் தொலைத்தார்; நியாயப்பிரமாணத்தை மேன்மையாக்கி அதைத் கனப்படுத்தினார்; நித்திய நீதியைக் கொண்டுவந்தார். ரட்சிப்பின் வஸ்திரத்தால் நம்மை இப்போது உடுத்தி, நீதியின் வஸ்திரத்தால் நம்மை மூடுகிறார். நீதிக்குத் தேவையானதெல்லாம், நம்முடைய நிறைவான நித்திய ரட்சிப்புக்கு தேவன் கேட்பதெல்லாம் அவரிடத்தில் நமக்கு உண்டு. இது ஒரு நாளைக்கு மாத்திரமல்ல, தினந்தோறும் நமக்கு வேண்டியது. இது குற்றஞ்சாட்டுகிற மனச்சாட்சியை வாயடைத்து, சாத்தானைக் கலங்கப்பண்ணி, ஆத்துமாவைப் பலப்படுத்தி, தேவனை மகிமைப்படுத்துகிறது. இன்றைக்கு, நாள் முழுவதும், ஒவ்வொரு நாளும் இயேசுவை நம்முடைய நீதியாயிருக்கிற கர்த்தராகப் பார்ப்போமாக. கர்த்தருடைய வல்லமையைக்கொண்டு நம்முடைய கடமையை நிறைவேற்றி, போராட்டத்திற்கும் துன்பத்திற்கும் அவருடைய நீதியை மாத்திரம் சொல்லிக்கொண்டு போவோமாக. கிருபாசனத்தண்டையில் இதுவே நமக்கு ஆதரவு. பரதேசியாய்த் தங்கும் இந்த வீட்டில் இதுவே நம்முடைய பாட்டு. மரண பயங்கரத்தில் இதுவே நம்முடைய நம்பிக்கை.

இரட்சகா நினது நாமம்
அறிந்ததை நம்புவோம்,
நீர் என் நீதியின் கர்த்தர் தாம்
சந்தோஷித்து மகிழ்வோம்.

'உனக்கு நன்மை செய்வேன்'

ஆதியாகமம் 32:9

இது கர்த்தர் யாக்கோபுக்குச் சொன்ன வாக்கு நம்முடைய பிதாக்களுக்குச் சொன்ன வாக்கை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றுவார். இப்படி நமக்கு வாக்குக்கொடுத்திருப்பதினால் பெருந்துன்பங்கள், கடுஞ் சோதனைகள், வியாகுலங்கள். உபாதிகள், தரித்திரம் மன வேதனை, கலக்கம் முதலியவைகளுக்கு நாம் நீங்கலாயிருப் போமென்பது அவர் கருத்தல்ல. இவைகளெல்லாம் நமக்கு வந்தாலும், கர்த்தர் நமக்கு நன்மைதான் செய்கிறார். நம்முடைய துன்பங்கள் நமக்கு நன்மையாய் முடியுமென்றும், அவருடைய கிருபை நமக்குக் கிடைக்குமென்றும், பொல்லாங்கினின்று விடுதலையாக்கப்பட்டு நமக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்ளுவோமென்றும், நம்முடைய விருப்பங்கள் திருப்தியாகுமென்றும், நமக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார். வியதியிலும், சுகத்திலும், ஜீவனோடிருக்கும்போதும்; மரிக்கும்போதும்; இம்மையிலும், மறுமையிலும், ஏகோவா நமக்கு நன்மைசெய்வாரென்று அறிந்திருப்பது நமக்குப் போதாதா? இது ஏகோவா நமக்குக் கொடுத்த பத்திரம்; விசுவாசிக்கு ஆதரவு; கிறிஸ்தவனுடைய நம்பிக்கைக்கு ஆதாரம்; மனத் திருப்திக்கும் நன்றியறிதலுக்கும் போந்த முகாந்தரம்; நம்முடைய சத்துருக்களைக் கலங்கடிக்கிற ஆயுதம்; யாக்கோபு சோதித்து, கர்த்தர் உண்மையுள்ளவரென்று கண்டான். நாமும் அப்படியே காண்போம். 'நான் உனக்கு நன்மை செய்வேன். என் தயவெல்லாம் உனக்கு முன்பாகப் போகச் செய்து, நித்திய ரட்சிப்பால் உன்னை ரட்சிப்பேன். நான் உன் தேவனும் மகிமையுமாயிருப்பேன்' என்று நம்முடைய தேவன் சொன்னதைக்குறித்து நாம் மகிழ்வோமாக. நீர் சொன்ன படியே செய்யும், தயவுள்ள கர்த்தாவே.

இயேசுவே உம்மிலன்றி
யாரில் நம்பிக்கை வைப்பேன்
நீர் ஆறுதலாய்த் தோன்றி
தாங்கிலல்லோ செழிப்பேன்.
எந்நாளும் நீர் நடத்தும்
என் நா நின் துதி சாற்றும்.

‘தம்முடைய கிருபையின் மிகவும் அதிகமான ஐசுவரியம்’
எபேசியர் 2:6

யேகோவா தம்முடைய கிருபையில் மகிமை அடைகிறார். அது அவருடைய ஐசுவரியம், அவருடைய ஆஸ்தி. அதின் ஐசுவரியமெல்லாம் நமக்காகத்தான், நம்முடைய விஷயத்தில செலவழிக்கத்தான், நாம் பெற்றுக்கொள்ளும்படிதான் இயேசுவில் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது. நமக்கு வாக்களித்து இலவசமாய்த் தருகிறார். நம்முடைய நினைப்பிற்கும், விருப்பத்திற்கும், விசுவாசத்திற்கும் அது அதிகம். தேவன் அவ்வளவாய் நம்முடைய நன்மைக்கென்று வாக்களித்து சேர்த்து வைத்திருக்கிறாரென்று நாம் விசுவாசிக்கிறதில்லை. ஆதலால் அவ்வளவாய் நாம் கேட்கிறதுமில்லை, எதிர்பார்க்கிறதுமில்லை. கிருபையின் மிகவும் அதிகமான ஐசுவரியத்தைக்குறித்து இன்றைக்குச் சிந்திப்போமாக. இயேசு நமக்குக் கிருபையாயக கிடைத்த ஈவு, பரிசுத்த ஆவியும் அப்படியே, ஆவிக்குரிய நன்மைகளெல்லாம் அப்படியே சபைக்குக் கிடைத்தால், இப்பொழுது கிடைக்கிறதும், நித்தியமாய்க் கிடைக்கக்கூடியதுமான சகலத்திற்கும் ஊற்று கிருபையில் அடக்கம். கிருபை இலவசமாய்க் கொடுக்கிறது; விற்கிறதில்லை. அதினுடைய பார்வை தயாளமுள்ளது, மனது இளகினது, கை உதாரமுள்ளது. நாம் நம்மில் நெருக்கமுள்ளவர்களே ஒழிய, தேவனில் நெருக்கமுடையவர்களல்ல. கிருபையின் ஐசுவரியத்தைப் பற்றி தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறதை விசுவாசித்து, அவர் தாராளமாய் வாக்கருளியபடி பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்போமானால் எத்தனை நல்லது. அளவற்ற கிருபை இருக்கிறது; அது நமக்குத்தான்; இந்தக் காலையில் நமக்குக் கிடைக்கும்; கேட்கும்போதெல்லாம் பெற்றுக்கொள்ளலாம். நாம் பயத்தோடும், பக்தியோடும், தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பெற்றுக்கொள்ளக் கடவோம்.

க்ருபை என்னும் சத்தம்
எவ்வளவோ இன்பம்,
கெட்டும் என்னை மீட்ட ரத்தம்
நீக்கும் எந்த துன்பம்.

'அவர் நம்மிடத்தில் வைத்த தயவு'

எபேசியர் 2:6

தேவன் நமக்குக் காண்பிக்கிற பட்சம் எப்படிப்பட்டது? கிறிஸ்தவர்கள் நடுவில் சுவிசேஷ ஒளி பிரகாசிக்குமிடத்தில் நாம் வாசம்பண்ணும்படி செய்கிறதிலும், நம்மைப் பயிற்றுவித்துவருகிற வகையிலும், நம்மைப் பாதுகாத்து வருவதிலும் இது விளங்குகிறது. முக்கியமாய் மாம்சத்தின்படியல்ல, ரத்தத்தினாலுமல்ல; தேவனால் நாம் மறுபடியும் பிறந்து மறுஜென்மமடையச் செய்ததில் இது காணப்படுகிறது. நாம் பிறந்த இடத்தில், பிறந்த காலத்தில் பிறந்து, நாம் படித்த பள்ளிக்கூடத்தில் படித்த எத்தனையோ பேர், மாம்சத்துக்குரியவர்களாய் நடந்து, தேவ சாபத்தைப்பெற்று மறுமையில் பிரவேசித்தார்கள். அல்லது அப்படிப்பட்ட நிலைமையில் இன்னுமிருக்கிறார்கள். நம்மை வித்தியாசப்படுத்தினது எது? கிருபையால் அழைக்கப்பட்டோம், இயேசுவின் நீதியால் குற்றமற்றவர்களாக்கப்பட்டோம், தேவவல்லமையால் பாதுகாக்கப்படுகிறோம், தேவவாக்கின்படி சகலத்தையும் பெற்றனுபவிக்கிறோம். தேவனோடு சகவாசஞ்செய்து இயேசுவின் வருகைக்கு நம்பிக்கையோடும், பரிசுத்த வாஞ்சையோடும், உறுதியான விசுவாசத்தோடும் எதிர்பார்த்திருக்கிறோம். இச்சீவனுக்கும் மறுமைக்குமுரிய வாக்குத்தத்தத்தையும் பெற்றிருக்கிறோம். நான் கிறிஸ்துவுடையவன், கிறிஸ்து தேவனுடையவர்; ஆதலால் சகலமும் என்னுடையதென்று சொல்லத் தைரியம் பெற்றிருக்கிறோம். நம்முடைய தேவன் நமக்குப் பாராட்டுந் தயவு எவ்வளவு பெரியது; அவருடைய கிருபை ஆராய்ந்து முடியாது; அவர் நமக்குக் காட்டும் பட்சம் ஆச்சரியமானது,

என்னைப்போலே உம்மைப் பாடிப்,
போற்ற வேண்டுபவனார்?
பிதாவாம் உம்மைக் கொண்டாடி
கிறிஸ்து சொந்தமாக்கினார்;
நமக்குள்ள யாவும் தந்தார்
பாடக் கீதமும் தந்தார்;

'ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமா யிருக்கிறீர்?'

அப்போஸ்தலர் 9:6

கர்த்தருடைய கிருபாசனத்தண்டையில் இந்தக் கேள்வியை நன்றாய்க் கொண்டுவரலாம். ஏனென்றால், கர்த்தருடைய ஜனங்கள் அவருடைய திராட்சத்தோட்டத்தில் அவருடைய மகிமைக்காக வேலைசெய்யவேண்டியவர்கள். நம்மில் ஒவ்வொருவருக்கும் ஒரு வேலையுண்டு. இன்றைக்கு நாம் செய்யவேண்டியது ஒன்றுண்டு. இயேசு நம்முடைய எஜமான், அவர் நம்மை ஆளும் பாத்தியமுடையவர். தமது இஷ்டப்படி அவர் நம்மிடத்தில் வேலைகொள்ளலாம், நாம் அவருக்குக் கீழ்ப்படியவேண்டியவர்கள். அவர் நமக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிறபடியால், நாம் மனதாரச் சந்தோஷமாய் அவருக்கு எப்பொழுதும் கீழ்ப்படியவேண்டும். நம்முடைய பகை அகன்று போனதா? அவருக்கு ஊழியஞ்செய்து, நாம் அதைக் காண்பிக்கவேண்டும். நமக்கு விசுவாசம், நம்பிக்கை, அன்பு, தாழ்மை, சமாதானம், நன்றியறிதல் இவைகளுண்டா? இந்த நன்மைகளைத் தந்தவருக்குக் கீழ்ப்படிகிறது நமக்குப் பிரியமாயிருக்கவேண்டாமா? நாம் ஊழியஞ்செய்யவேண்டியவர்கள். எப்பொழுதும் ஊழியஞ்செய்யவேண்டியவர்கள், ஒவ்வொரு நாளும் கடைசி நாளாக எண்ணி ஊழியஞ்செய்ய வேண்டியவர்கள். இது மேன்மையான ஊழியம்; மரணப்படுக்கையில் நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கத்தக்கது; நியாயத்தீர்ப்பு நாளில் இதைப் பற்றி வெட்கமடையோம். நீ கிறிஸ்துவுக்காக ஏதாவது செய்துவருகிறாயா? இயேசுவின் சிந்தையோடு செய்துவருகிறாயா? நீ செய்கிறது இயேசுவுக்குப் பதிலாக உதவுமென்று எண்ணாதே, உன்னால் கூடியதெல்லாம் செய்; நீ செய்ததெல்லாம் இயேசுவின் பாதத்தண்டையில் வை.

விசுவாசமெங்கேயுண்டோ
சோம்பலுக்கதிடமோ?
எவ்வளவு பலனுண்டோ
கிறிஸ்துவுக்குப் போதுமோ?
தேவனுக்கதைக் கொடுப்பான்
அவர் சித்தத்தைக் காப்பான்.

'எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்'

மாற்கு 7:37

இது ஜனக்கூட்டம் ரட்சகரைப்பற்றிச் சொன்ன சாட்சி. அவர் அநேக காரியங்களைச் செய்தார்; ஒவ்வொன்றையும் நன்றாய்ச் செய்தார். இன்று காலையில் நாமும் இப்படிச் சாட்சி சொல்லக்கூடாதா? தமது கிருபையால் நம்மை அழைத்தாரே; எந்த எத்தனங்களைக்கொண்டு, எந்த விதமாய், எந்தக் காலத்தில் நம்மை அழைத்தாரென்று யோசிக்கும்போது, அவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தாரென்று நாம் சொல்லவேண்டாமா? அவர் பலவகையாய் நம்மைச் சோதித்தாரே. அவர் சோதித்த நோக்கத்தையும், நம்முடைய துன்பங்களோடு கலந்து அவர் அனுப்பின இன்பங்களையும், அதினின்று அவர் நமக்குக் கட்டளையிட்ட விடுதலையையும் நாம் நினைக்கும்போது, எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தாரென்று சொல்லவேண்டாமா? பின்னுகைப் பார்த்து மறுமையில் பிதாவண்டையில் நமக்குப் பிணையாக நிற்பதையும், நம்முடைய தன்மையை எடுத்துக்கொண்டு, நம்முடைய பாவங்களைச் சுமந்து, நமக்கு நீதியை சம்பாதித்து, நம்மைச் சுத்திகரித்து ரட்சிக்க தம்முடைய ஆவியை அனுப்பினதையும் நாம் பார்க்கும்போது, அவர் சகலத்தையும் நன்றாய்ச் செய்தார் என்று சொல்லவேண்டாமா? நமக்கு வாசஸ்தலங்களை ஆயத்தப்படுத்தி, கல்லறைகளிலிருந்து நம்முடைய சரீரங்களை எழுப்பி, நம்மை அவருடைய சாயலுக்கு ஒப்பானவர்களாக்கி, பிறகு நம்மைப்பார்த்து: ராஜ்யத்தைச் சுதந்தரிக்க வாருங்கள் என்று அழைக்கும்போது, எவ்வளவு சந்தோஷத்தோடும் நன்றியறிதலோடும் அவர் சகலத்தையும் நன்றாய்ச் செய்தாரென்று சத்தமிட்டு முழங்குவோம்.

பாவிகட்கு தேவநேசம்
எவ்வளவு உதாரம்?
அவர் செய்வதெல்லாம் நலம்
கொடுப்பார் மோட்ச ஸ்தலம்;
நான் அவரிடம் போனதால்
இரக்கமடைந்தால்,
இயேசு நன்றாய்ச் செய்தாரென்று
நான் போற்றுவது நன்று.

'நீங்கள் எனக்குச் சாட்சிகளென்று கர்த்தர் சொல்லுகிறார்'

ஏசாயா 43:12

கிறிஸ்துமார்க்கத்தின் சத்தியத்திற்கும், வல்லபத்திற்கும், பாக்கியத்திற்கும் நாம் சாட்சிகள். தேவனுடைய தயவுக்கும், பரிசுத்தத்திற்கும், உண்மைக்கும் நாம் சாட்சிகள். நம்முடைய குணத்தினாலும். நடக்கையினாலும், வார்த்தையினாலும், நாம் உலகத்திற்குச் சாட்சி பகரவேண்டும். பயப்பட்டு சந்தேகங் கொண்ட ஏழை ஆத்துமாக்களுக்குச் சாட்சி பகரவேண்டும். நம்முடைய சாட்சி தெளிவாயும், தைரியமுள்ளதாயும், உறுதியும் அன்புமுள்ளதாயும் இருக்கவேண்டும். நாம் சொல்லும் சாட்சி அனுபவத்திலிருந்து பிறக்கவேண்டும். நாம் கர்த்தரை அறிந்தவர்களா? சத்தியம் நம்முடைய இருதயத்தில் பலன் செய்து வருகிறதென்று தினந்தோறும் அனுபவத்தால் கண்டறிகிறோமா? அது நம்மை அடிமைக்குரிய பயத்தினின்றும், உலக நேசத்தினின்றும், பாவத்தின் வல்லமையினின்றும் விடுவித்துவருகிறதா? 'தேவன் எங்கள்மேல் வைத்த அன்பை நாங்கள் அறிந்து விசுவாசிக்கிறோம். தேவன் அன்புமயந்தான்' என்று நாம் சொல்லக்கூடியவர்களா? நம்மைச் சூழ்ந்திருக்கிறவர்களைப் பார்த்து: கர்த்தர் நல்லவர் என்கிறதை ருசித்துப் பாருங்கள்; அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு ஒரு குறைவுமில்லை என்று சொல்லுகிறோமா? நியாயாதிபதிகள் ராஜாக்களுக்கு முன்பாக, சிறைச்சாலையிலேயும் மரணப்படுக்கையிலும் நாம் சாட்சி சொல்லவேண்டியவர்களாய் இருப்போமானால், நாம் எப்படிச் சாட்சியிடுவோம். தேவன் நல்லவர், தயவுள்ளவர், அவர் நம்மைப் போதுமானபடி பாக்கியராக்கத் தக்கவர். உள்ளது உரியதையெல்லாம் யோபை விட்டெடுத்ததுபோல நம்மை விட்டு எடுத்தாலும், பவுலைச் சோதித்ததைப்போல் நம்மைச் சோதித்தாலும், நாம் அவருக்குச் சாட்சி சொல்ல ஆயத்தப்பட்டிருக்கிறோமா? நீங்கள் எனக்குச் சாட்சிகளென்று அவர் சொல்லுகிறாரே.

உமது நுகம் தாங்கவும்
விழித்து ஜெபிக்கவும்;
நித்தியத்தை முன்னே வைத்து
அதற்குத் தீவிரித்து,
நான் உமது சாட்சியாக
காத்தேயிருப்பேனாக.

'தேவன் தம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?'

ரோமர் 8:31

நேசரே! நாம் இயேசுவை விசுவாசிக்கிறவர்களானால் ஏகோவாவின் லட்சணங்களெல்லாம் நம்மைக் காக்க ஆயத்தப்பட்டிருக்கிறது. நம்மை ஆதரித்து, சவரட்சணை செய்து; நம்மைச் சிநேகிக்க அவர் உடன்படிக்கை செய்திருக்கிறார், வாக்களித்திருக்கிறார், ஆணையிட்டுமிருக்கிறார். அவர் நமக்கானவர், நம்முடைய காரியத்தில் இருக்கிறவர், நம்முடைய சத்துருக்களுக்கு விரோதி; ஆறு துன்பங்களினின்று நம்மை விடுவிக்கப் பிணைபட்டிருக்கிறார்; ஏழாவதிலும் நம்மைக் கைவிடார். நம்முடைய சத்துருக்களை நாம் தைரியமாய்ப் போருக்கழைக்கலாம். தேவன் நம்மோடிருக்கிறார். மனிதன் நமக்கு எவ்வளவு? பிசாசுகள்தான் என்ன செய்யும்? நமக்குக் கிடைத்திருக்கப்பட்ட கனத்தையும், சுகபத்திரத்தையும், சவுக்கியத்தையும் பார்த்து நாமே ஆச்சரியப்படலாம். சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் நமக்குத் துணை. நாம் நன்றியறிந்தவர்களாயிருக்கவேண்டுமே; நியாயமாய் நமக்குக் கிடைக்கவேண்டியதென்ன? நமக்கு இருக்கிறதென்ன? நாம் எதிர்பார்த்ததென்ன? தேவன் நமக்கு வாக்குக்கொடுத்ததென்ன? கிறிஸ்துவில்தான் நாம் வெற்றி சிறந்திருக்கலாம். தேவன் நம்முடைய பட்சமானால்; வேண்டியதெல்லாம் நமக்கு நிச்சயமாய் வரும். தேவன் நம்முடைய 'பட்சமானால், மனிதரும் பிசாசும் நம்மை ஒருபோதும் மேற்கொள்ளமாட்டார்கள். தேவன் நம்முடைய பட்சமானால் நாம் உலகத்தை மேற்கொண்டு, மரணத்தை ஜெயித்து, என்றுமுள்ள மகிமையைச் சுதந்தரித்துக்கொள்ளுவோம். தேவன் நமது பட்சமானால் நமக்குச் சேதம் வருவிப்பவன் எவன்? நம்மைப் பயப்படுத்துவது எது? தேவன் நம்முடையவர். நாம் தேவனுடையவர்கள். இதுதான் நமது மேன்மை, நமது பெருமை, நமது பாக்கியம், நமது மகிமை.

மனுஷர் பேய்களைவிட
இயேசு மா பெலத்தவர்,
அவர் போரில் மறைவிட
மாகவே யாதரிப்பார்;
அவன் முன் தீங்கெல்லாம் ஓடும்
என் நாவு அவரைப் பாடும்.

'இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக'

சங்கீதம் 130:7

இந்தப் பெயர் கர்த்தருடைய ஜனங்கள் யாவருக்கும் உரியது. இது அவர்களுடைய மேன்மையை காட்டுகிறது, அவர்கள் பிரபுக்கள்; அவர்களுடைய அனுபவத்தை இது தெரியப்படுத்துகிறது. ஜெபத்தில் தேவனோடு போராடி மேற்கொள்ளுகிறார்கள்; அவநம்பிக்கைக்கு இடங்கொடுக்கிறது. பிரபுவுக்கு அடுத்ததல்ல, கிறிஸ்தவனுக்கு அடுக்குமா? நம்முடைய தேவன் நம்பிக்கையின் தேவன்; நாம் அவரில் நம்பிக்கை வைக்கவேண்டும். இஸ்ரவேல் அவருடைய இரக்கத்தில், அவருடைய பொறுமையில்; அவர் தயாளகுணத்தில், அவருடைய சம்பூரண ரட்சிப்பில் நம்பிக்கை வைக்கவேண்டும். இருட்டில் வெளிச்சமுண்டாகுமென்றும், பெலவீனத்தில் பெலன் உண்டாகுமென்றும், கலக்கத்தில் தெளிவுண்டாகுமென்றும்; மோசத்தில் விடுதலை கிடைக்குமென்றும், போராட்டத்தில் ஜெயம் உண்டாகுமென்றும், மரணத்தில் கெம்பீரம் கிடைக்குமென்றும் அவர்கள் நம்பவேண்டும். அவர்கள் தேவனை உறுதியாய் நம்பலாம், அவர் வாக்குக் கொடுத்திருக்கிறார். ஜெபத்தோடு நம்பலாம், நாம் சொல்லுகிறதைக் கேட்பதே அவருக்குப் பிரியம். கீழ்ப்படிதலோடு நம்பலாம், நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டியவர்கள். எப்பொழுதும் நம்பலாம், அவர் எப்பொழுதும் ஒரே சீராயிருக்கிறவர். உங்கள் நிலைமையிலேயாவது, செய்கைகளிலாவது, மற்றெந்தக் காரியத்திலாவது நம்பிக்கை வையாதேயுங்கள். கர்த்தரைமாத்திரம் நம்பியிருங்கள். இஸ்ரவேலின் தேவன் தான் எக்காலத்திலும் இஸ்ரவேலின் நம்பிக்கை; இஸ்ரவேலின் நம்பிக்கை ஒருக்காலும் விருதாவாய்ப் போகாது; தேவனை நம்பு, மனிதன் கர்த்தருடைய ரட்சிப்புக்காக நம்பி அமைதலாய்க் காத்திருப்பது நல்லது; இது நம்பிக்கை புசலிலும் பெருங்காற்றிலும் உன்னைத் தற்காக்கும்.

சுவிசேஷம் என் மகிழ்ச்சி
அவருண்மை புகழ்ச்சி,
என். ஆதாரம் அவர் வாக்கும்
ஆணையோடு ரத்தமும்,
ஆத்மாவே அவரை நம்பு
அவர் உன் பிடி கொம்பு.

'நான் அல்பாவும் ஓமேகாவுமாயிருக்கிறேன்'
வெளிப்படுத்தின விசேஷம் 22:13

இயேசு துவக்கமும், முடிவுமாயிருக்கிறார். அவர் நம்முடைய ரட்சிப்பின் பெரிய வேலையைத் தொடங்கினார், நடப்பிக்கிறார், முடிப்பார். நாம் பார்க்கவேண்டிய முதற்பொருள் அவரே. நாம் கடைசியாகக் காண்கிறதும் அவர்தான். நாம் அவரைப்பற்றி தான் முதலாவது கற்றுக்கொள்ளவேண்டும். நித்தியகாலமெல்லாம் அவரைப்பற்றிக் கற்றுக்கொண்டேயிருக்கலாம்; எந்தத் துன்பத்திலும் வருத்தத்திலும் அவர் தான் நம்மண்டையில் முதல் வருகிறார். நம்மை விடவுமாட்டார், தள்ளவுமாட்டார். நம்முடைய கட்டடத்திற்கு அஸ்திவாரம் அவரே, நம்மைக் காக்கிறவரும் அவர்தான். எந்தத் துன்பத்திலும் நாம் முதலாவது அவரையே நோக்கவேண்டும். எந்தக் குறைவையும் அவரிடத்தில் கொண்டுபோகவேண்டும். நல்லது, பெரியது, மகிமையானது, சகலமும் அவரிடத்தில் உண்டு. இயேசுவைச் சம்பாதித்தவனுக்கு எல்லாம் சொந்தம் தான். இயேசுவோடு தொடங்கி, இயேசுவோடு சகலத்தையும் நடத்துவோமாக; அப்போது இயேசுவைக்கொண்டே முடிப்போம்; அது பாக்கியமான முடிவு. அவர்தான் நாம் கற்கவேண்டிய பாடம்; அவரை அறியும் பரியந்தம் நாம் ஏதும் அறிந்தவர்களல்ல. அவரையும், அவர் உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவர் பாடுகளோடு ஐக்கியப்படுதலையும் நாம் அறிந்து, அவருடைய மரணத்திற்கு ஒப்பானவர்களானால் எத்தனை நல்லது. இயேசுவை நம்முடைய அல்பாவும், ஓமேகாவுமாக நாளுக்கு நாள் பார்த்து, அவரிடத்திலிருந்து நன்மை கிடைக்குமென்று எதிர்நோக்கி, அவரை மகிமைப்படுத்துகிற அந்த நல்ல வித்தையை நாம் கற்றுக்கொள்ளக் கடவோம்.

இயேசென் நம்பிக்கை திடன்
எனக்காக மரித்தார்,
அவர் தீர்த்தாரென் கடன்
நீதியும் சம்பாதித்தார்;
என் நேச சகோதரன்
நாம் நம்பும் தேவபரன்.

'கர்த்தர் என் பங்கு'

புலம்பல் 3:24

கிறிஸ்தவனுடைய பங்கோடு உலகத்தானுடைய ஆஸ்தியை ஒத்துப்பார்த்தால் அது எவ்வளவு அற்பமாய்த் தோன்றும். அது கொஞ்சநாள்தான் இருக்கும், திருப்தியாக்கவுமாட்டாது; ஆசீர்வதிக்கவுமாட்டாது. சிநேகிதரே, ஏகோவா தம்மைத் தாமே நமக்குக் கொடுத்திருக்கிறார்; நான் உங்கள் சுதந்தரம் என்கிறார்; நாம் எப்பொழுதும் அவரோடிருக்கிறோம்; அவருடையதெல்லாம் நம்முடையது. அவருடைய வல்லமை நம்முடையது; அது நம்மை ஆதரிக்கும். அவருடைய ஞானம் நம்முடையது; அது நம்மை நடத்தும். அவருடைய அன்பு நம்மை ஆற்றித்தேற்றும். அவருடைய இரக்கம் நம்மை விடுவிக்கும். அவருடைய தயவு நமக்கு வேண்டியதைத் தரும். அவருடைய நீதி நம்மைப் பாதுகாக்கும்; அவருடைய உடன்படிக்கை நம்மைப் பத்திரப்படுத்தும்; அவருடைய மோட்சம் நம்மை ஏற்றுக்கொள்ளும். அவர் தகுதியான, போதுமான, மாறாத பங்கு; அவரைப்பற்றி நாம் ஜீவனம் பண்ணவேண்டும். அவர் கொடுக்க வாங்கி, அவரில் சந்தோஷப்பட்டு; நமக்குத் தேவையான யாவற்றிற்கும் அவரையே நோக்கிப் பார்க்கவேண்டும்; அவருக்காக, மற்ற யாவற்றையும் தள்ளவேண்டும்; அவருடைய மகிமைக்கென்று நாம் சகலத்தையும் செய்யவேண்டும்; அவரோடு நாம் எப்போதும் நடக்கவேண்டும். மனிதர் நம்முடைய பங்கைப் பறித்துக்கொள்ளமாட்டார்கள். அக்கினி அதைப் பட்சிக்கமாட்டாது; துரு அதைக் கெடுக்கமாட்டாது. இங்கே நடக்கிற எந்தக் காரியத்தினாலும் நாம் வருத்தமடையக்கூடாது. வாய்க்கால்கள் வற்றிப் போனாலும், ஊற்று இன்னும் இருக்கிறது; சிருஷ்டிகள் நம்மை மோசம்போக்கினாலும், நமக்கு உதவாமல் போனாலும், நம்முடைய தேவன் நம்முடைய சுதந்தரத்தின் பங்கும், நம்முடைய பத்திரமுமானவர். நம்முடைய சுதந்தரத்தை இவர் காப்பாற்றுகிறார்; அவர் நம்முடைய பெலன், என்றுமுள்ள பங்கு.

லோக கேளிக்கையும் பொன்னும்
மினுக்கும் எனக்குவேண்டாம்
தேவ நன்மை தயவென்னும்
நல்லாஸ்தியே எனக்குண்டாம்
தேவா, உமது அன்பு என் பங்கு
ஆவியே என்னிலே தங்கு.

'தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்'
சங்கீதம் 84:11

வெளிச்சம், ஆறுதல், செழிப்பு இவைகளெல்லாம் அவரிடத்திலிருந்து வரவேண்டும். அவர் நமக்கு வெளிச்சமும் ரட்சிப்புமானவர்; அவர் நம்மைத் திக்கற்றவர்களாக விடார். அவரால்தான் நாம் கனிகொடுக்கலாம். அவரை அறிந்து விசுவாசித்து அவரோடு நடக்கிற ஜனங்கள் பாக்கியவான்கள். அவர் இருட்டில் வெளிச்சந்தருவார்; துக்கத்தில் சந்தோஷமும், மரணத்தில் ஜீவனுங் கொடுப்பார். அவர் நம்முடைய காப்பு, அவரால் நாம் காக்கப்படுவோம்; அவருடைய ரட்சிப்புதான் நமக்குக் கேடகம்; விசுவாசம் அதைப் பிடித்துச் சத்துருக்களுக்கு விரோதமாய் அதைப் பிரயோகிக்கிறது. அவர் நமக்கு வெளிச்சந் தந்து நம்மைக் காப்பாற்றுவார்; அவர் நம்மைக் கைவிடவுமாட்டார்; குறைவடைந்து கெட்டுப்போக விடவுமாட்டார். சூரியன் பிரகாசிக்கிற விதமாக, தம்முடைய தயவுகளைத் தாராளமாக, உதாரமாக, பரிபூரணமாகக் கொடுக்கிறார்; அவரிடத்தில் பரிபூரணமுண்டு. அதைச் சந்தோஷமாய்க் கொடுப்பார்; இன்று நாம் அவரிடத்தில் காத்திருந்து, அவருடைய சமுகப் பிரகாசத்தில் நடப்போமாக. 'கர்த்தருக்குப் பயந்து, அவருடைய ஊழியக்காரருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிற உங்களில் எவன் அந்தகாரத்தில் நடந்து வெளிச்சமற்றிருக்கிறான். அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவன்மேல் சார்ந்திருக்கக்கடவன்'. அவருடைய இருதயம் நம்முடைய பேரில் சார்ந்திருக்கிறது; தம்முடைய வாக்குத்தத்தங்களை நமக்கு நிறைவேற்றுவார்; அவருடைய தன்மையின் ஒவ்வொரு லட்சணத்தையும் நம்மில் மகிமைப்படுத்துவார். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தை என்ன சொல்ல!

கர்த்தரே நீர் என் ஆதாரம்
சுகம் வெளிச்சம் ஆநந்தம்;
இம்மையில் என் நல் நம்பிக்கை
மறுமையில் பேரின்பம்;
நீர் என் சூரியன் கேடயம்
நான் கெலிக்கும் என் பந்தயம்;

ஜூன்-மீ 13-உ

'கர்த்தருடைய தூதன் அங்கே நின்றார்'

சகரியா 3:5

சாத்தான் யோசுவாவின்மேல் குற்றஞ்சாட்டி, அவனை எதிர்த்தபோது, அவன் அருகில் நின்றதார்? அவனுடைய அழுக்கான வஸ்திரங்கள் அவனுக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லி, அவன் தேவனுக்கு முன்பாக வரவழைக்கப்பட்ட போது, அவன் அருகில் நின்றதார்? இயேசுதான் நின்றார். அவர் உடன்படிக்கையின் தூதன், மனிதனல்ல. தேவன் ஏற்படுத்தின சரியான ஆசரிப்புகூடாரத்தில் பணிவிடை செய்கிறவர். ஏகோவாவின் சமுகத்தில் நிற்கும் தூதன். அவர்தான் தம்முடைய ஜனங்கள் சமீபத்திலிருக்கிறவர். நம்முடைய சமீபத்தில் நிற்கிறவர். ஜெபம் பண்ணும்போது, துன்பம் வரும்போது, சோதிக்கப்படும்போது, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தப் பிரயாசப்படும்போது நம்முடைய சமீபத்தில் நிற்கிறார். தேவனுடைய சித்தத்தை நமக்குப் போதிக்க, தேவ காரியங்களில் நமக்கு உதவிசெய்ய, தேவ சம்பத்தால் நம்மை ஐசுவரியவான்களாக்க, நமக்கு நன்மை உண்டாகும்படி பாதுகாக்க நம்முடைய சமீபத்தில் நிற்கிறார். சிநேகிதரே, யார் நம்மைவிட்டுப் போனாலும், இயேசு நமக்குச் சமீபமாயிருக்கிறார். நாம் எப்பொழுதும் நம்முடைய கண்ணை அவர்பேரில் வைக்கவேண்டும். நாம் செய்வது ஒவ்வொன்றையும் ஒருவர் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை நாம் மறக்கக்கூடாது. இயேசு கவனித்துக்கொண்டேயிருக்கிறார். ஆதலால் நாம் பயபக்தியாயிருக்கவேண்டும், நன்றியறிந்தவர்களாயிருக்கவேண்டும், தைரியஸ்தரா யிருக்கவேண்டும், ஏழையின் ஆத்துமாவை ஆக்கினைக்குள்படுத்தப் பார்க்கிறவர்களினின்று விடுவிக்க அவர் சமீபத்தில் இருக்கிறார். உதவிசெய்ய ஆயத்தமாய், கொடுக்க மன உற்சாகமாய் ஆசீர்வதிக்கத் தீர்மானித்தவராய் நிற்கிறார். இயேசு எப்பொழுதும் சமீபத்தில் இருக்கிறாரென்று எண்ணி, நமக்கு வேண்டிய உதவியையும் ஆலோசனையையும் தருவார் என்று எப்பொழுதும் அவரை நோக்குவோமாக.

ஆவியே கண்ணுயர்த்திப்பார்
உன் மீட்பரங்கே நிற்கிறார்,
மகத்துவத்தின் உன் வக்கீல்
நற்றூபமேந்தி நிற்கையில்,
அவர்மேல் உன் பாரம் வைத்து
தேடு அவரை சந்தோஷித்து.

'உன் நாட்களுக்குத்தக்கதாக உன் பெலனும் இருக்கும்'

உபாகமம் 33:25

தனக்கு நேரிடப்போகிற தின்னதென்று ஒருவனும் அறியான், தேவன் அறிவார். அவனவனுடைய சோதனைக்குத் தக்கதாக பெலன் அளிப்போமென்கிறார். நாம் வீணாய்க் கலங்க வேண்டியதில்லை; சோதனையோடு அதைச் சகிக்கத்தக்க பெலனும் வரும். துன்பங்களும் தேவன் அனுப்புகிற இரக்கந்தான். தேவ ஆசீர்வாதம் இல்லாவிட்டால் உலக வாழ்வும் சாபமாய் முடியும். அதோடு பலத்த பொறுப்பும் சேர்ந்திருக்கிறது. தேவன் நமக்கு எப்பொழுதும் உண்மையுள்ளவராய்த்தானிருக்கிறார். நம்முடைய நாளுக்குத்தக்கதாய் பெலனைத் தந்துவந்தார். நாம் இப்போது ஏன் சந்தேகிக்கவேண்டும்? மிகவும் கொடிதான வருத்தங்கள் நேரிடுகிறதாயிருந்தாலும் நான் நம்புவேன், பயப்படமாட்டேன். ஏகோவாவாகிய கர்த்தர் என் பெலனும் என் பாட்டுமாயிருக்கிறார். அவர் என் ரட்சிப்புமானார் என்றும் நன்றாய்ச் சொல்லலாம். நாம் வரவரப் பெலத்துப்போகிறோம். எந்த விசுவாசியும் சீயோனில் தேவனுக்கு முன்பாகக் காணப்படுவான்; நமக்கானவைகளை அவர் பூரணப்படுத்துவார். தம்முடைய கரத்தின் கிரியையைக் கைவிடமாட்டார். நமக்கு வேண்டியபோது வேண்டியமட்டாக வேண்டியதெல்லாம் அவர் கொடுப்பாரென்று இருப்போமாக. நம்முடைய சுமைக்குத்தக்கதாக, நம்முடைய நாளுக்குத் தக்கதாக நம்முடைய பெலனுமிருக்குமென்று நம்புவோமாக. அவருடைய வாக்குத்தத்தம் தெளிவாயிருக்கிறது. அதில் சந்தேகமில்லை. அது நிச்சயம். நம்முடைய தேவனும் உண்மையுள்ளவர்.

அவசியமானபோது
அவர் கை உன்னை விடாது,
நீ பெலவீனனானாலும்
ரட்சிப்பார் எவ்விதத்திலும்.

'உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக'
யோவான் 14:1

நாம் கலங்கி வருத்தப்பட்டு, ஆறுதலற்றிருக்கிறது இயேசுவுக்குப் பிரியமல்ல. நீ உறுதியும், பரிசுத்தமும், பாக்ய சாலியுமாயிருக்க விரும்புகிறார். நீ பயப்படவேண்டாமென்கிறார். விசுவாசமாயிருவென்று கற்பிக்கிறார். அவர் உனக்காக ஏற்பட்டு, உன் காரியங்களில் முயற்சியாயிருக்கிறபடியால், உன்னை அடுத்ததையெல்லாம் நீ அவருக்கு ஒப்புக்கொடுத்துப் போடுவது நியாயம். இப்படி நாம் செய்வதற்கு வகையென்ன? உடன்படிக்கையில் உன் தேவனானவர் உன் காரியங்களில் கவலைகொள்ளுகிறவரென்று உன் மனதில் நிச்சயமாய் எண்ணிக்கொள். தேவன் என்னோடு இருக்கிறார் என்கிற எண்ணத்தோடு ஜீவனம்பண்ணு. எனக்குள்ளும், என்னைச் சூழவும், நடக்கிற சகலத்தையும், அவர் நன்றாய்க் கவனிக்கிறார். எனக்கு நன்மைசெய்யச் சமயம் எப்போது வாய்க்குமென்று காத்திருக்கிறார். எதுவும் என்னைச் சேதப்படுத்த ஒட்டார், என்னில் தம்மை மகிமைப்படுத்துவார், தம்மில் என்னை மகிமைப்படுத்துவார். தம்மை நம்பச் சொல்லுகிறார். நான் நம்பி பயமற்றிருப்பேன், அப்போது நடக்கிறதென்ன? அவர்பேரில் சார்ந்திருக்கிறவர்களைப் பரிபூரண சமாதானத்தில் தற்காப்பார். ஏனெனில் அவரில் நம்பியிருக்கிறார்கள். என்றைக்கும் கர்த்தரை நம்பு, கர்த்தராகிய ஏகோவாவில் நித்திய பெலனுண்டு. ஒன்றினாலும் வருத்தப்படாதே, உன் ஆத்துமா இயேசுவின் கையிலிருக்கிறது. உன் ஜீவன் தேவனில் கிறிஸ்துவோடு மறைந்திருக்கிறது. உன் காலங்கள் அவர் கையிலிருக்கிறது. சகலமும் உன் நன்மைக்கென்றே கிரியை செய்கிறது.

என் ஆவி தியங்கும்போது
அவிசுவாசம் அகற்றும்.
என்னில் துக்கம் உண்டாகும்போது
நற்சமாதானத்தை ஊற்றும்;
உம்மை நான் காணுமட்டுக்கும்
என் ஆவியும்மில் தரிக்கும்.

'ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்'

யோவான் 14:2

சிநேகிதனே! இயேசு உனக்காக என்ன செய்கிறார் பார். அவர் உன் காரியமாய்த்தான் போயிருக்கிறார். பூமியில் அவர் நமக்குச் செய்யவேண்டியதெல்லாம் செய்தார். பின்னும் தம்முடைய் கிரியையை நடத்தப் பரமேறிப்போனார். அவர் ஆயத்தம்பண்ணுமிடம் அவருக்கு ஏற்றதாயிருக்கும். அவர் இளைப்பாறுதல் மகிமையாயிருக்கும். அது நமக்கும் ஏற்றதாயிருக்கும். அங்கே துன்மார்க்கர் நமக்குத் தொந்தரவு செய்வதில்லை, பாவம் நம்மை அலக்கழிக்கமாட்டாது, துன்பங்கள் நம்மை அங்கே சூழ்ந்துகொள்ளாது. ஆயாசம் அடைந்தவர்கள் அங்கேதான் இளைப்பாறுவார்கள். ஸ்தலத்தை நமக்கு ஆயத்தம்பண்ணுகிறாரா? நம்மையும் அதற்கு ஆயத்தம்பண்ணுகிறார். அதற்காகத் தான் துன்பங்களை அனுப்பி நம்மைச் சோதிக்கிறார். அதிசீக்கிரத்தில் நீங்கும் லேசான நம்முடைய உபத்திரவம், மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. இயேசு நம்முடைய விஷயமாகவே கிரியை செய்கிறார் என்று நித்தம் நினைப்போமாக. அவர் நமக்கு ஆயத்தம்பண்ணுகிற இடத்தை மரணம் நமக்கு சொந்தமாக்குகிறதாகப் பாவிப்போமாக. எந்தச் சோதனையால் நாம் சோர்வடைந்து மயங்கினாலும், அவர் எங்கே இருக்கிறாரோ அங்கே நாமும் இருக்கும்படிக்கு அவர் மறுபடியும் வந்து நம்மைத் தம்மண்டை சேர்த்துக்கொள்ளுவாரென்று ஞாபகத்தில் வைத்துக்கொள்வோமாக. இப்போது நாம் வாசம்பண்ணுகிற குடிசை அசவுக்கியமாயிருக்கலாம், வசதியற்றதாயிருக்கலாம். நமக்குக் கிடைக்கப்போகிற மாளிகையோ விஸ்தாரமானது, அலங்காரமானது, தேவனுக்குப் பாத்திரமானது. ஜெயங்கொள்ளுகிறவன் சகலத்தையும் சுதந்தரித்துக்கொள்ளுவான். ஏகோவா அவனுக்குத் தேவன். எவ்வளவு பெரிய சிலாக்கியம்! சொல்லமுடியாத மகிமை! இனிமையான காட்சி!

ஓர் ஸ்தலமெனக்காயத்தம்
பண்ண நீர் வானில் சென்றீரோ?
நான் உம்மோடு சேர்ந்து நித்தம்
உட்காரென்றுதான் சொல்வீரோ?
லோகம் வாழ்த்தியும் தாழ்த்தியும்
உம்மைப் பார்க்க வரம் ஈயும்.

'இரட்சிப்பு கர்த்தருடையது'

யோனா 2:9

பிதாவின் அன்பு, குமாரனுடைய செய்கை, பரிசுத்த ஆவியின் தொழில், இவ்வளவும் ஒன்றாய்க்கூடி ஆத்துமாவை ரட்சிக்கிறது. இந்த ஏற்பாட்டை ஒழுங்குபடுத்தினவர் பிதா, மீட்கும் பொருளைத் தந்தவர் குமாரன், தேவ ஆசீர்வாதத்தைச் சொந்தமாக்குகிறவர் பரிசுத்த ஆவி. தேவன்தான் இதற்குக் காரணர். கிருபையினால், விசுவாசத்தின் மூலமாய் இது முடிகிறது. மோசங்கள் துன்பங்கள், குறைவுகள், இவைகளில் நின்று நம்மை விடுவிக்கிறவர் தேவன்தான். யோனா கெஞ்சின போது அவனை விடுவித்தார்; அவன் ஏழை. பெருமை கொண்ட, மூர்க்கனான, எரிச்சலடைந்த, முறுமுறுத்த கெட்ட பாவியாயிருந்தும், அவனை விடுவித்தார்; நம்மையும் விடுவிப்பார். என்னை நோக்கி ரட்சிக்கப்படுங்கள், நான் தேவன்; என்னைப் பாருங்கள் என்று உங்களுக்குக் கட்டளையிடுகிறார். என்னைப் பாருங்கள், நீங்கள் சொல்லுகிறதை நான் கேட்பேன். என்னைப் பாருங்கள். உங்களை விடுவிப்பார் என்கிறார். ஆறு துன்பங்களில் உங்களை விடுவிப்பார்; ஏழிலும் உங்களைக் கைவிடார். நம்முடைய ஆத்துமாவை மரணத்திற்கும், நம்முடைய கண்ணைக் கண்ணீருக்கும் நம்முடைய கால்களை விழுதலுக்கும் விளக்கிக் காப்பார். வறுமையுள்ளவன் கெஞ்சும்போது அவனை விடுவிப்பார். ஏழைக்கும், உதவியற்றவனுக்கும் அவர்தான் ஒத்தாசை. மற்றவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறாயோ? மனந்தளர்ந்து பயந்து அவநம்பிக்கைக்கு இடங்கொடுக்கிறாயோ? இப்படி செய்வது உன் தேவனுக்கு ஆயாசமாகும். அவர் சொல்லுகிறதைக் கேள். ரட்சிக்கக்கூடாதபடிக்கு என் கை குறுகிப்போயிற்றோ? விடுவிக்க என்னால் ஆகாதோ? கர்த்தரால் கூடாதது ஒன்றுண்டோ? நான் செய்கிறதைத் தடுப்பவன் எவன் என்று கேட்கிறார். நான் உன்மேல் கோபமாயிரேனென்று ஆணையிடுகிறார்.

> ஏகோவாவின் கிரீடம்
> ரட்சிப்பென்பதருமை,
> அவர்க்கிருக்கும் பேர்களில்
> இம்மானுவேல் மகிமை,
> ரத்தத்தால் ரட்சிக்கிறார்,
> வல்ல தேவனென்கிறார்.

ஜூன்-மீ 18-உ

'நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன்'

யோவான் 14:18

விசுவாசிகள் துன்பமாகிய இருட்டில் நடக்கும்போது இயேசு தங்களைக் கைவிட்டாரென்று கலங்குகிறார்கள்; இது இயல்புதான். ஆகிலும் தேவவசனத்திற்கு விரோதம். நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அவர் நம்மோடு இராவிட்டால், நமக்கு வேண்டியதைச் செய்யமாட்டார்; அவர் அன்புள்ளவரானதால் நம்மைவிட்டுப் பிரியவுமாட்டார்; நம்மை அநாதைப்பிள்ளைகளாக விடார்; நாம் அவரையே சார்ந்திருக்க வேண்டும். நமக்கு வேண்டிய ஆறுதலை அவர்தான் தருவார். அவர் தயவுகாட்டி நம்மோடிருந்தால்தான் அந்த ஆறுதல் நமக்குக் கிடைத்துக்கொண்டிருக்கும். தம்முடைய ஜனங்களுக்கு ஆறுதலின் ஊற்று அவரே. அவருடைய சமுகத்தோடு அவருடைய ஆறுதல்களும் சேர்ந்திருக்கிறது. கொஞ்சகாலம் நம்மைக் கண்டிக்க, நம்மைப் போதிக்க, நம்மைத் திருத்த அவர் நம்மைவிட்டு அந்த ஆறுதல்களை எடுத்துப்போடுகிறதுண்டு. ஆகிலும் அவைகள் திரும்பிவரும்; அவர் அப்படித் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார். அது மாறாமல் அப்படியே இருக்கிறது; அவருடைய தன்மையும் அன்பும் ஒன்றுதான். அவர் தந்த அருமையான வாக்கை நாம் பிடித்துக்கொள்ள வேண்டும்; அதை அவர்முன் வைத்துக் கெஞ்சவேண்டும்; உறுதியாய் நம்பவேண்டும்; நாம் திக்கற்ற பிள்ளைகளாகவே மாட்டோம். நம்முடைய பிதா என்றும் உயிரோடிருக்கிறார். நம்மை ஏற்றுக்கொள்ளும் வீடு எப்போதும் ஆயத்தமாயிருக்கிறது. நம்முடைய நம்பிக்கை அழியாது. சிநேகிதரே! இயேசு சொன்ன இந்த அருமையான வார்த்தையைச் சொல்லிக் கெஞ்சுங்கள்; இவர் சொன்னபடி செய்யச்சொல்லிக் கேளுங்கள்; அவர் மகிமையை நாடுங்கள்; உங்களுக்குரிய ஆறுதல் நிச்சயமாய்க் கிடைக்கும்; அவர் நம்மைத் திக்கற்றவர்களாக விடார்.

தேவாவியே தாருமே
விசுவாசம் நம்பிக்கை
ஆறுதலை ஊற்றுமே.
நடத்தும் உமது கை.
உண்மையால் ஆதரிப்பார்
திக்கற்றவனைய் விடார்.

ஜுன்-மீ 19-உ

'அவருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும் உம்முடைய கையில் இருக்கிறார்கள்'

உபாகமம் 33:3

ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்தவான்தான். தேவ நோக்கத்தால் பிரித்துவைக்கப்பட்டவன், பரிசுத்த ஆவியால் சுத்திகரிக்கப்பட்டவன். தேவனுக்கென்றும் அவர் ஊழியத் திற்கென்றும் பிரித்தெடுக்கப்பட்டவன். ஒவ்வொரு பரிசுத்த வானும் இயேசுவின் கரத்திலிருக்கிறான்; அவர் இரக்கமென் னுங் கரத்தில், அவர் வல்லமை என்னுங் கரத்தில் திவ்விய செயலென்னுங் கரத்திலிருக்கிறான். சகலரையும் தாங்க இயே சுவின் கரம் போதுமானது; சகலரையும் காக்க அது பெல னுள்ளது; அவருடைய ஆஸ்தியாக, அவருடைய ரத்தத்தால் கொள்ளப்பட்ட பொருளாக அவருடைய கரத்திலிருக்கிறார் கள். அவருடைய பிதாவால் அவருக்கு ஒப்புவிக்கப்பட்ட பொக்கிஷமாக அவருடைய கரத்திலிருக்கிறார்கள். தம்மு டைய பார்வைக்குப் பிரியமானபடி அவர்களை அவர் நடத்த லாம். சாத்தான், மரணம், நரகம் இவைகளினின்று தற்காக் கப்பட, உலகமாகிய இந்த வனாந்தரத்தின் வழியாய் நம்மு டைய பிதாவின் வீட்டுக்கு நடத்தப்பட அவருடைய கரத்தி லிருக்கிறார்கள். அவருடைய திறமையின்படி உருவாக்கப் பட்டு, அவருடைய அன்பான சாயலுக்கு ஒப்பாக்கப்பட்டு, புசலுக்குத் தப்பி பெருங்காற்றினின்று விடுவிக்கப்படும்படி அவர் கரத்திலிருக்கிறார்கள். அவருடைய துதியின் பிரஸ்தா பத்திற்கென்று பிரயோகிக்கப்பட்டு அவருடைய நித்திய சிம் மாசனத்தண்டைக்கு உயர்த்தப்பட அவருடைய கரத்தி லிருக்கிறார்கள். அவர்கள் அவருடைய பரிசுத்தவான்கள் அவர்களைத் தம்முடைய மனையாட்டியாகத் தெரிந்துகொண் டார். சத்துருவின் கையினின்று மீட்டார். தம்முடைய சொந் தப் பொருளாகப் பாவிக்கிறார். அவர்களை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்தார். அவர்களை என்றும் மகிமைப்படுத்துவார்.

தேவபக்தர் பாக்கியர்
இயேசுவால் கொள்ளப்பட்டோர்,
தேவன் அவர் சகாயர்
சா வென்று மீட்கப்பட்டோர்,
அவரோடு நமக்கும்
நித்திய பாக்யம் கிடைக்கும்.

'தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்'
ரோமர் 8:33

நீதிமான்களாகிறது, குற்றமற்றவனென்று விடுதலையாகிறது, நீதிமான் என்று தீர்ப்புப்பெறுகிறது. இயேசுவிலுள்ள ஒவ்வொரு விசுவாசியும், முன்னே அவன் எவ்வளவு கெட்டவனாய் இருந்தபோதிலும், தான் எவ்வளவு அசுத்தன், அபாத்திரன் என்று தனக்குள் உணர்ந்தபோதிலும், ஏகோவாவால் அவன் குற்றமற்றவனாக்கப்படுகிறான். கிறிஸ்துவின் பரிபூரண கிரியை அவனுக்குச் சாட்டப்படுகிறது; இலவசமான கிருபை அவனில் மகிமைப்படுகிறது; அவன் மரணத்தினின்று ஜீவனுக்குள் படுகிறான்; அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்பதில்லை. அவன்பேரில் குற்றஞ்சுமத்துவாரில்லை; தேவனுக்குப் பிரியமானவருக்குள் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறான். கிறிஸ்து அவனுக்காக பிழைத்தார், அவனுக்காக மரித்தார்; இப்போது அவன் பிழைத்திருக்கிறான். அவர் மூலமாய் அவரோடு மகிமையடைவான். குற்றங்களெல்லாம் இலவசமாய் மன்னிக்கப்பட்டு நித்தியமாய் மறக்கப்பட்டுப்போம்; நம்முடைய பாவங்களையெல்லாம் தேவன் தமது முதுகின் பிறகாலே எறிந்து நம்மை நீதிமான்களென்று சொல்லுகிறார். தேவன் நம்மை நீதிமான்களாக்கினாரென்று நம்பி அவரிடத்தில் சேருவோமாக; பூமிக்கெல்லாம் நியாயாதிபதியானவர் நம்மை நீதிமான்களென்று பகிரங்கமாய்த் தெரிவிப்பாரென்பதை எதிர்பார்த்து சந்தோஷப்படுவோமாக; நமதுமேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே நம்மை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாக்குகிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறவர், அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே. என் ஆத்துமாவே, இயேசுவைப் பார், அவர் பூரண கிரியையையும், பலனுள்ள அவர் வேண்டுதல்களையும் பார், அங்கே உன் ரட்சிப்பைக் காண்பாய் உன் சமாதானத்தைக் கண்டுபிடிப்பாய்.

ஆசாரியருட புண்ணியம்
கிடைத்தால் இளைப்பாறு;
தேவனுடைய காருண்யம்
நம்பி பயமற்றிரு;
இயேசு உனக்காய் மரித்தார்;
உனக்காகப் பேசுகிறார்.

'ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று?'
மாற்கு 4:40

எங்கே விசுவாசம் கொஞ்சமோ, அங்கே பயங்கள் அதிகம் சீஷர்கள் கலக்கத்தால் நிறைந்திருந்தார்கள். இயேசு அவர்களைப் பார்த்து: உங்களுக்கு ஏன் விசுவாசமில்லை என்று கேட்கிறார். நம்முடைய பரமபிதா நம்மையும் பார்த்து, அடிக்கடி இப்படிக் கேட்க நியாயமில்லையா? நீங்கள் ஏன் என்னுடைய வார்த்தையை நம்புகிறதில்லை? என்னோடு உங்களுக்கு இருக்கும் சம்பந்தத்தையும், என் நடக்கையையும், என் உண்மையையும், நீங்கள் அவைகளின்மேல் நம்பி ஏன் சார்ந்திருக்கிறதில்லை? என்னுடைய சமுகம், வல்லமை, அன்பு இவைகளை ஏன் நீங்கள் நம்புகிறதில்லை? நான் உதவிசெய்வேன் என்று நீங்கள் எதிர்பார்த்து, நான் தருவேனென்று நீங்கள் ஏன் எதிர்நோக்குகிறதில்லை? தெளிவும் உண்மையும் நிச்சயமுமான வாக்குத்தத்தங்களை நான் உங்களுக்குச் செய்யவில்லையா? பின்னும் பின்னும் அந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றவில்லையா என் வார்த்தை உண்மையுள்ளதென்று காட்ட, நான் சாட்சிகளைக் கொடுக்கவில்லையா? என் பரிசுத்த ஆவியை நான் கொடுப்பேனென்று சொல்லவில்லையா? என் பரிசுத்தத்தை உங்களுக்காக ஈடுவைக்கவில்லையா? உங்களுக்கென்றும், உங்களுக்காகவும் என் குமாரனைக் கொடுக்கவில்லையா? உங்களுக்குத் துன்பம் வந்தபோதெல்லாம் நான் உங்களுக்காக வெளிப்படவில்லையா? பின்னை ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்று அவர் கேட்கிறார். சிநேகிதரே! தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவோமாக. அவிசுவாசத்திற்கு இடங்கொடுத்த குற்றத்தை அறிக்கையிட்டு, விசுவாசத்திற்காக கெஞ்சுவோமாக. எந்த இடத்திலும், எந்தக் காரியத்திலும், தேவனையே நோக்கிக்கொண்டிருப்போமாக. அவர் தடம் தெரியாவிட்டாலும், அவரையே நம்புவோமாக.

என் ஆத்மா முறையிட்டு
மனம் கலங்குவானேன்?
பிதாவின் கைக்கீழ்ப்பட்டு
நம்பினால் மலைவானேன்?
ரட்சிப்பைக் காணச்செய்யும்
க்ருபை என்னில் பொழியும்.

தேவன் உண்மையுள்ளவர்'
1 கொரிந்தியர் 10:13

இதுதான் விசுவாசியின் நங்கூரம்; இதில்லாவிட்டால் அவன் சந்தோஷம் வாடும்; அவன் நம்பிக்கை அற்றுப்போம். சிலசமயங்களில் நாம் அவிசுவாசத்தால் சின்னாபின்னப் பட்டு, வேதனை கொடுக்கும் சந்தேகங்களால் நிரப்பப்படுகிறோம். பரிசுத்த ஆவியின் பிரசன்னம், வல்லமை, ஆறுதல்கள் ஒன்றும் நமக்குக் கிடைக்கிறதில்லை. விசுவாசம், நம்பிக்கை அன்பு, இவை முற்றிலும் ஒழிந்துபோனதுபோல இருக்கிறது. ஜெபம் பண்ண பெலனுமில்லை, மனமுமில்லை. இருதயங் கடினப்பட்டு வீணாய்த் துக்கப்பட்டு நிர்ப்பந்தமாகிறது. சாத்தான் சோதிக்கிறான், வேதனை உண்டாக்கும் நினைவுகள் நம்மை வருத்தப்படுத்துகிறது. உயிர்தானும் நமக்குப் பாரமாகிறது; ஆகிலும் தேவன் உண்மையுள்ளவர். அவர் ஒருபோதும் பிசகுகிறதில்லை, திரும்பத் திரும்ப நம்மண்டை வருகிறார். சமாதானத்தையும் சந்தோஷத்தையும் மனத்திருப்தியையுங் கொடுக்கிறார். வருத்தமான சமயங்கள் போனபிறகு விசேஷித்த சந்தோஷங்கள் நமக்கு உண்டாகும், வேதவசனம் நமது புத்திக்குத் தெளிவாக்கப்படுகிறது; வாக்குத்தத்தங்கள் நம்முடைய ஆத்துமாவுக்குச் சொந்தமாகிறது; பரிசுத்த ஆவியின் ஆறுதலால் நிரப்பப்படுகிறோம். அப்போது நம்முடைய ஆத்துமாக்கள் துக்கத்தாலும் உத்தம மனஸ்தாபத்தாலும் தேவனுக்கு முன்பாக உருகும். அவருக்கு முன்பாக நாம் தூசியாக நொறுக்கப்படுகிறோம். அவருடைய இலவசமான, உதாரமான கிருபையின் ஐசுவரியங்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டுத் துதித்துக்கொண்டிருப்போம். சிநேகிதரே! அதிக இருட்டான இரவிலுங்கூட தேவன் உண்மையுள்ளவரென்று நினைத்துக்கொள்ளுங்கள்.

கர்த்தர் உத்தமரல்லோ
அவர் வாக்கு சத்தியம்,
மகவைத் தந்தாரல்லோ
அவர் இரக்கம் நித்யம்,
அவர் சொற்களிலொன்றும்
தவறிப்போ காதென்றும்

'இந்த எபிரேயர் என்னத்திற்கு'

1 சாமுவேல் 29:3

தாவீதினுடைய சேனை பெலிஸ்தியருடைய சேனையோடு சேரவேண்டி வந்தது, இது பெரிய தப்பிதம். தேவனுடைய பரிசுத்த வசனத்திற்கு விரோதமாக, கர்த்தருடைய ஜனங்கள் உலகத்தோடு சேருகிறதும் குற்றந்தான். இந்தக் கிறிஸ்தவர்களுக்கு இங்கே வேலை என்ன? என்று நாமும் கேட்கலாம், அவர்கள் உலகத்தோடு ஏன் சேருகிறார்கள்? அவர்களை விட்டுப் புறப்பட்டுப் பிரிந்துபோங்கள் என்று அவர்கள் எஜமான் சொல்லியிருக்கிறார். இங்கே அவர்கள் ஒரு இருப்பிடத்தைத் தேடுவானேன்? எழுந்திருந்து புறப்படுங்கள். இது நீங்கள் தங்குமிடம் அல்லவென்று சொல்லியிருக்கிறார். தாங்கள் செய்யவேண்டிய கடமை என்னும் பாதையைவிட்டு ஏன் போகிறார்கள்? தாங்களே வந்திருந்து பாவ காரியங்களை ஏன் உற்சாகப்படுத்துகிறார்கள்? நான் பரிசுத்தவானாய் இருக்கிறது போல், நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று அவர் சொன்னாரே. சாத்தான் இருக்கும் ஸ்தலத்தில், சத்துருக்கள் கூட்டங்களில் இவாகளுக்கு வேலை என்ன? இயேசுவைவிட்டு உலகத்தோடு சேர்ந்துகொள்ள எத்தனிக்கிறார்களோ? அவருடைய சங்காத்தம் போதுமென்று சொல்லி, அவர் வார்த்தையை எதிர்த்து, அவர் நுகத்தடியைத் தள்ளிவிடத் தீர்மானித்தார்களோ? தாங்கள் வெளியரங்கமாய்ச் சொன்ன பாவிக்கு வரும் ஆக்கினையில் பங்குபெற வேண்டுமென்றிருக்கிறார்களோ? இயேசுவின் கோபம், தேவனுடைய ஆக்கினை சாத்தானுடைய அடிமைத்தனம், இவைகள் தங்களுக்கு வேண்டுமென்று விரும்புகிறார்களோ? இங்கே இவர்களுக்கு வேலை என்ன? இவர்களுடைய நடத்தை சுபாவத்திற்கு விரோதம், மிகவும் கேவலம்; மகா மோசம். சிநேகிதரே! இயேசுவோடிருக்கப் பாருங்கள். ஆத்தும சிந்தையுள்ளவர்களோடு நேசம்பண்ணுங்கள். உலகத்தால் கறைபடாதபடிக்கு உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

லோக இன்பமே ஒழி
பாவத்தை நீக்க விழி;
எனது நேச முற்றும்
இயேசு மீட்பரைப் பற்றும்,
சுவாமி என்னைத் தற்காரும்
நான் உம்முடையோன் பாரும்.

'நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி'

1 பேதுரு 2:9

கிறிஸ்துமார்க்கம் தற்செயலாய் உண்டானதல்ல, தேவ தீர்மானத்தால் உண்டானது. மனிதர் சுபாவத்தினின்றல்ல, உன்னதமானவரின் மாறாத தீர்மானத்தினின்று உண்டானது. ஒவ்வொரு விசுவாசியும் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம் ஏகோவா நித்தியமாய் தெரிந்துகொண்டதினின்று சபை உற்பத்தியாயிற்று. தெரிந்துகொண்டதற்குக் காரணம் அன்பு. தேவன் தம்முடைய சுயசித்தப்படியே தெரிந்துகொண்டார். மனிதனுடைய ரட்சிப்பையும் தேவ மகிமையையும் அது காக்கிறது. ஒருவரையும் அது சேதப்படுத்துகிறதில்லை. லட்சாதி லட்சம்பேர்கள்மேல் ஆசீர்வாதத்தைப் பொழிகிறது; அது காலந்தோன்றுமுன் தேவன் செய்த கிரியை. நம்முடைய சிரசாகிய கிறிஸ்துவில் நம்மைத் தெரிந்துகொண்டார்; சுத்த கிருபையால் நம்மைத் தெரிந்துகொண்டார்; பரிசுத்தத்திற்கென்று தெரிந்துகொண்டார். மரணத்தினின்று மீட்கப்பட்டு, பாவத்தினின்று சுத்திகரிக்கப்பட்டு, உலகத்தினின்று பிரிக்கப்பட்டு, தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு; ஏகோவாவோடு ஒன்றாகும்படி உயர்த்தப்படுவதற்காக நம்மைத் தெரிந்துகொள்ளப்படுகிறதுபோல, நாமும் தேவனைத் தெரிந்துகொள்ளுகிறோம். தம்முடைய ஜனமாக நம்மைத் தெரிந்துகொண்டார், நம்முடைய தேவனாக அவரைத் தெரிந்துகொள்ளுகிறோம். இயேசுவின் மனையாட்டியாக நம்மைத் தெரிந்துகொள்ளுகிறார். இயேசுவை நம்முடைய மணவாளனாக நாம் தெரிந்துகொள்ளுகிறோம். அவர் தெரிந்துகொண்டதுதான் காரணம், நாம் தெரிந்துகொள்ளுகிறது அதினின்று உண்டாகும் பலன். அவர்தான் முந்தி தெரிந்துகொண்டது. அவர் முந்தி நம்மைத் தெரிந்துகொள்ளாவிட்டால், நம்முடைய தப்பான வழியில் நாம் மரணத்தைத் தெரிந்துகொள்ளுவோம். அன்பர்களே! தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களானால் நாம் பரிசுத்தர். இயேசுவோடு ஐக்கியப்பட்டவர்கள். இதைத் திருஷ்டாந்தப்படுத்தி, நம்முடைய அனுபவத்தால் காட்டுவோமாக.

லோகம் தோன்றுமுன்னே
பக்தரைத் தெரிந்தாரே,
அவர்க்காகப் பின்னுமே
நலம் செய்து வந்தாரே,
சமாதானத்தைத் தாரும்
க்ருபையால் என்னைக் காரும்.

‘நீங்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கவேண்டும்?’
2 பேதுரு 3:11

கர்த்தருடைய ஜனங்கள் உலகத்தாருக்கு வித்தியாசப் படுகிறார்கள். தங்களுடைய ஆவி வேறு ஆவி என்றும், தாங்கள் தேவனுடைய புத்திரரென்றும் சொல்லுகிறார்கள். தற்காலத்திலுள்ளவர்கள் அழிந்துபோகுமென்று நம்புகிறார்கள். நீதி வாசம்பண்ணும் புதிய வானமும், புதிய பூமியும் உண்டாகுமென்று எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் இங்கே அந்நியர், பரதேசிகள், அப்படியானால் எப்படிப்பட்டவர்களாயிருக்கவேண்டும்? காலத்துக்குரியவைகளை அற்பமாக எண்ணி நித்தியத்துக்குரியவைகளையே தேடவேண்டும். விழித்திருந்து ஜெபம்பண்ணி, சுறுசுறுப்பும், பரிசுத்தமும், பொறுமையும், நன்றியறிதலும் உள்ளவர்களாய் எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். உள்ளது போதுமென்று மனத்திருப்தியுள்ளவர்களாய், நம்முடைய மேன்மையை ரூபிக்க ஜாக்கிரதையுள்ளவர்களாய், நாம் தெரிந்துகொள்ளப்பட்டதை நிச்சயப்படுத்தி நமக்குக் குறிக்கப்பட்டிருக்கிறதைப்பற்றிச் சந்தோஷிக்கிறவர்களா யிருக்கவேண்டும். இயேசு நடந்தது போல் நாம் நடந்து, பவுலைப்போல நித்தம் சாகிறவர்களாய்ப் பிழைக்கவேண்டும். தற்காலத்திலுள்ளவைகள் சீக்கிரம் ஒழிந்துபோகும் என்கிற எண்ணமுடையவர்களாய் பிழைத்து வருகிறோமா? என்று இன்று காலமே நம்மைக் கேட்டுக் கொள்ளுவோமாக. அப்படிப்பட்ட எண்ணமுள்ளவர்களானால் நம்முடைய செய்கை அதற்கு ஒத்திருக்கிறதா? பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறோமா? நற்கிரியைகளில் ஐசுவரியமுள்ளவர்களாய், மார்க்கத்தை அலங்கரிக்கும் பொருட்டு நன்மை செய்துவருகிறோமா? இயேசுவின் வருகை நமக்குள் விருப்பத்தையும் நம்பிக்கையையும் எழுப்பி விடுகிறதா?

தூதனிடும் சத்தம் கேட்டு
என் ஆவி உயிர்த்தெழும்பும்;
நீதியாலே மூடப்பட்டு
சமாதானமாய்க் கிளம்பும்;
இயேசென்னுட அலங்காரம்
மறுமையில் என் சிங்காரம்.

'என் கிருபை உனக்குப் போதும்'

2 கொரிந்தியர் 12:9

ஒத்தாசை, சுகம், ஆறுதல் இவைகளுக்காக வேறு இடத்தை நோக்காதே; தமது கிருபை போதுமென்று இயேசு சொல்லுகிறார். அதை நீ சந்தோஷமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்; அதை வந்து பெற்றுக்கொள்ளென்று உன்னை எழுப்பிவிடுகிறார். கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் நீ பெலனுள்ளவனாகவேண்டும். எந்த நஷ்டத்திலும் உன்னை ஆதரிக்க, எந்த வருத்தத்திலும் உனக்கு உதவிசெய்ய, எந்தக் கடமைக்கும் உன்னைப் பலப்படுத்த, எந்த இச்சையையுங் கொன்று விசுவாசத்தினால் உண்டாகும் சந்தோஷத்தாலும், சமாதானத்தாலும் உன்னை நிரப்ப அது போதுமானது. அவருடைய கிருபை சர்வவல்லமையுள்ளது, இலவசமானது, நிலையுள்ளது, ரட்சிப்பைக் கொண்டுவருகிறது. வருத்தங்களையும், மோசங்களையும், உன் சொந்த பெலவீனத்தையும் நோக்காதே. உனக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இயேசுவின் கிருபை எவ்வளவு தாராளமானது, வல்லமையுள்ளதென்று பார். இன்று காலையில் இன்றைக்கு வேண்டிய கிருபைக்காக அவருடைய கிருபாசனத்தண்டைக்குப் போ; ஒவ்வொரு நாளும் போ, பலவீனப்பட்டு, பயப்பட்டு, சோர்ந்துபோகும் போதெல்லாம் போ; பவுலுக்கு அவருடைய கிருபை போதுமானதாயிருந்தது; ரத்த சாட்சிகளுக்கும், பரிசுத்தவான்களுக்கும், எப்படிப்பட்ட துன்பத்திலும் போதுமானதாயிருந்தது, உனக்கும் போதுமானதாயிருக்கும். நான் உன் தேவனாகிய கர்த்தர், உன் வாயை விரிவாய்த் திற, நாம் அதை நிரப்புவோம். நீங்கள் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேருங்கள். கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான் என்கிறார். இயேசுவே! உம்முடைய வார்த்தையை என்னில் நிறைவேற்றும்.

பெலவீனத்தில் பெலன்
தந்து பெலப்படுத்தும்,
நான் புழு நீர் சமர்த்தன்
புதல்வனாக வாழ்த்தும்,
என் சந்தோஷமிதுவே
கிறிஸ்துதான் என் பெலனே.

'லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்'

லூக்கா 17:32

அவள் தேவதூதரை ஏற்றுக்கொண்டாள்; அன்பாய் உபசரித்தாள், அவர்கள் சொன்ன செய்தியை நம்பினாள், அதின் படி செய்யப் பிரயத்தனப்பட்டாள், அவர்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தாள், சோதோமையும் தன் பிள்ளைகளையும் விட்டுப் போனாள்; அவபக்திக்காரரைப் புறம்பே தள்ளினாள், பரிசுத்த வான்களோடு கூடிச்சென்றாள். ஆகிலும், அவள் இருதயம் பட்டணத்தில்தானிருந்தது; அவள் திரும்பிப்பார்த்தாள்; இந்த ஜீவனுக்குரியவைகளை மட்டுக்குமிஞ்சி நேசித்து ஜீவனை இழந்தாள். தேவநீதி பகிரங்கமாய் வெளிப்பட்டு மாண்டு போனாள். அவள் மரித்த வகை நல்ல போதனை அடங்கியது. சோதோமில் அல்ல, சமனான வெளியில் மரித்தாள். ஒரு தண்டனைக்குத் தப்பி, வேறொரு தண்டனையில் அகப்பட்டாள். தேவன் பாவத்தை வெறுக்கிற வைராக்கியரென்று காட்ட நல்ல திருஷ்டாந்தமானாள். கீழானவைகளை நாடுகிற பொருளாசைக்காரருக்கும், தேவகற்பனைகளை அசட்டைபண்ணுகிற தன்னிஷ்டக்காரருக்கும், சோதோமுக்கும், சோவாருக்கும் நடுவே இருநினைவுள்ளவர்களாய்த் திரிகிறவர்களுக்கும் பலத்த எச்சரிப்பானாள். தேவன் தம்முடைய கீழ்ப்படிதலால் கனமடைவார், அல்லது நம்முடைய துன்பங்களால் கனமடைவார். தேவகற்பனைகளில் மிகவும் சிறியதையும் அற்பமாய் எண்ணுகிறது மோசம்; ஒரு சோதனையை வென்று, வேறொரு சோதனையில் விழலாம்; நம்முடைய இருதயம் உலகத்தை வெறுத்திருக்கிறதாவென்று சோதிப்போமாக. பெருமை கொள்ளாமல் பயப்படுங்கள்; லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்.

கர்த்தர் வரக்காத்திருந்து
அவர் சொல் கேட்போமாக;
நமது தீபமெரிந்து
விழித்திருப்போமாக;
நாம் ராவுக்குரியோரென்று
வாழ்வோம் பிசாசை வென்று.

ஜூன்-மீ 28-உ

'கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமா யிருப்பார்'

யோவேல் 3:16

ஒருநாள் பிறப்பிப்பதை நாம். அறியோம். நாம் துன்பத் திற்கென்று பிறந்திருக்கிறோம். எதிர்பாராத சோதனைகள் அநேகம் நமக்கு நேரிடலாம். நம்முடைய தேவன்தான் நமது நம்பிக்கை, நாம் எப்பொழுதும் ஓடிச் சுகபத்திரமா யிருக்கத் தக்க அடைக்கலம் அவர்தான், நமக்கு வேண்டியதை நிறை வாய்ப் பெற்றுக்கொள்ளத்தக்க பரிபூரணம் அவர்தான். அவர் செய்யும் ஆணை, அவருடைய வாக்குத்தத்தங்கள், உடன் படிக்கை, இவைகளில் விளங்கும் அவர் தன்மை, இயேசுவின் ரத்தம், இவைகள்தான் நம்முடைய நம்பிக்கைக்கு உறுதி யான அஸ்திவாரம். எக்காலமும் எக்காரியத்திற்கும் அவரை நம்பும்படி சுவிசேஷம் சொல்லுகிறது. ஆதலால், எதுவந்தா லும் நாம் ஆறுதலற்றிருக்கவேண்டியதில்லை, பயப்படவேண்டி யதுமில்லை. நம்முடைய தேவன் நம்முடைய நம்பிக்கை. பரி சுத்த ஆவியின் வல்லமையால் நாம் நம்பிக்கையில் பெருகும் படி நம்பிக்கையின் தேவன் நம்மை விசுவாசத்தால் வரும் எல்லாச் சந்தோஷத்தாலும், சமாதானத்தாலும் நிரப்புவா ராக. நாம் நமது மனதின் கச்சைகளைக் கட்டி நிதானமுள்ள வர்களாய் கர்த்தராகிய இயேசு வெளிப்படும்பொழுது நமக் குக் கொண்டுவரும் கிருபைக்காக முடிவுவரையில் நம்பியிருப் போமாக. நம்முடைய ரட்சகராகிய இயேசுகிறிஸ்து மகிமை யாய் வெளிப்படும் பாக்கியமான நம்பிக்கைக்காக எதிர்பார்த் திருப்போமாக. எல்லா அக்கிரமத்தினின்றும் நம்மை மீட்டு, நற்கிரியைகளைக் குறித்து வைராக்கியமுள்ள விசேஷித்த ஜன மாக, தமக்காக நம்மை பரிசுத்தமாக்கும்படி அவர் தம்மைத் தாமே நமக்காக ஒப்புக்கொடுத்தார். இயேசு நம்முடைய நம் பிக்கையானால் அவருடைய மகிமையே நம்முடைய நாட்ட மாகவும், அவருடைய ஊழியமே நம்முடைய ஆனந்தமாக வும் இருக்கட்டும்.

அவரை நம்பிப் பற்றுவேன்
சிலுவையில் மகிழுவேன்;
சத்துருக்கள் பெருகினும்
ஜெயமெனக்குண்டு பின்னும்.

'என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா'
நீதிமொழிகள் 23:26

சிநேகிதரே! உன்னதமானவர் இன்று காலையில் ஏதோ ஒன்றைக் கேட்கிறவராக எதிரே வந்து நிற்கிறார். உன் இருதயத்தை கேட்கிறார். அது அவர் கை வேலை; தாம் அதில் வாசம்பண்ணவேண்டும் என்கிறார். தமது வல்லமையால் அதை உண்டுபண்ணினார், தமது கிருபையால் அதை ஆளவேண்டும் என்கிறார். வேறு எதைக்கொடுத்தாலும் வேண்டாமென்கிறார்; இருதயத்தைக் கொடுத்தால் போதுமென்கிறார். அதில்லாவிட்டால் ஒன்றுமில்லையாம்; இன்று காலையிலும், ஒவ்வொரு காலையிலும், நம்முடைய இருதயத்தை அவருக்கு ஒப்புக்கொடுப்போமாக. தமது கிருபையால் அதைப் பரிசுத்தமாக்கி, தமது ஆவியால் அதை நிரப்பி, தமது சாயலை அதில் பதியப்பண்ணி, தமது வல்லமையால் அதைக் காப்பாற்றி, பரிசுத்தத்தின் கனிகளால் அதை நிரப்பும்படி கேட்போமாக. இருதயத்தைத் தேவனுக்குக் கொடுப்போமானால் நம்முடைய நடக்கை அவருடைய வசனத்திற்கு ஒத்திருக்கும். அவர் நம்மில் ஆளுவாரானால் நாம் இயேசுவைப்போல் நடப்போம். நம்முடைய நடக்கை பரிசுத்தமாயிராவிட்டால், நம்முடைய பக்தி வேஷந்தான். அவரை அறிவேனென்று சொல்லி, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யன். அவனில் சத்தியமிராது. நாம் கர்த்தருடையவர்களென்று சொல்லி, நினைத்து, இருதயத்தைப் பாவத்திற்கும், சாத்தானுக்கும், உலகத்திற்கும் ஒப்புக்கொடுப்பது எவ்வளவு பயங்கரமான காரியம். என் மகனே! உன் இருதயத்தை எனக்குத் தாவென்று இயேசு சொல்லுகிறார். நாம்: கர்த்தாவே, நமது இருதயத்தை ஏற்றுக்கொள்ளும், அதை எப்பொழுதும் ஆண்டு நடத்தும் என்று மாறுத்தரவு சொல்லுவோமாக.

தேவ ஆட்டுக்குட்டியே!
நின் ரத்தத்தால் கழுவும்;
என் இருதயத்தையே,
உம்மையே போற்றச்செய்யும்;
உமதன்பின் விஸ்தாரம்
என் துதிக்கு ஆதாரம்.

ஜூன்-மீ 30-உ

'நான் உம்முடையவன்; என்னை ரட்சியும்

சங்கீதம் 119:94

நாம் கர்த்தருடையவர்களென்று சொல்லுகிறோம். நாம் நமக்குச் சொந்தமானவர்கள் அல்ல, உலகத்துக்குரியவர்களும் அல்ல, இனி பாவத்தின் அடிமைகளுமல்ல, கர்த்தருக்கே முற்றிலும் சொந்தமானவர்கள். அவருடைய கிருபையால் ரட்சிக்கப்படவும், அவருடைய ஊழியத்திற்கென்று ஒப்புக் கொடுக்கப்படவும், அவருடைய மகிமைக்கென்று பிரயோகிக்கப்படவும், மனோற்சாகமாக அவருடைய கைகளில் நம்மை ஒப்புக்கொடுத்துவிட்டோம். கிருபையினாலும், புத்திரசுவிகாரத்தினாலும் நாம் அவருடைய பிள்ளைகள், மனசார சம்மதித்து அவருக்கு ஊழியக்காரரானோம்; வெளியரங்கமாய் அறிக்கையிட்டு அவருடைய சேவகரானோம். நாம் கர்த்தருடையவர்களானபடியால், நமக்காக அவர் நம்முடைய காரியங்களில் தலையிடுவார் என்பது நிச்சயம். நமக்கு நேரிடும் எல்லா வருத்தங்களிலும், இடுக்கண்களிலும், அவரை நோக்கிக் கூப்பிட்டுக் கெஞ்சவேண்டும். அவர் நம்மை விடுவிப்பார்; நமது காரியத்தை அவருக்கு முன்பாக வைத்து, தமது கிருபையை நம்மில் மகிமைப்படுத்தும்படி ஆசையோடு எதிர்பார்த்திருப்போமாக. அன்பான பிள்ளைகளைப்போல தேவனுக்குப் பாத்திரராய் நடப்போமாக. நமக்கு அவர் பரிபூரணமாய்க் கிருபை அளிப்பார் என்கிற எண்ணத்தை வைத்துக்கொண்டு ஜீவியம் பண்ணி வருவோமாக. அப்போது சகலத்திலும் நாம் பரிபூரணராகி எந்த நற்கிரியையிலும் வளருவோம். அவருடைய இரக்கம் வானங்கள் அவ்வளவு பெரியது; அவருடைய உண்மை மேகமண்டலத்தை எட்டுகிறது; அவர் யாக்கோபின் புத்திரரைப் பார்த்து விருதாவாய் என்னைத் தேடுங்கள் என்று சொல்லாமல், என்னைத் தேடுங்கள் அப்போது பிழைப்பீர்களென்கிறார்.

இயேசு என் தேவன் இரட்சகர்
தன் ரத்தத்தாலே மீட்டனர்;
இகபரக் கட்டினாலே
என் சொந்தமானதினாலே,
பாவம் நீக்கி ரட்சியுமேன்
என்றும் என்னைக் காப்பாற்றுமேன்.

‘உன் தேவனாகிய கர்த்தர் இரக்கமுள்ள தேவன்’

உபாகமம் 4:31

தேவனைக்குறித்து மனிதர் சாதாரணமாய்த் தப்பான எண்ணங்கொண்டு அவருடைய நாமத்தை கனவீனப்படுத்தி, தங்கள் ஆத்துமாவையும் வேதனைப்படுத்திக் கொள்ளுகிறார்கள். நம்முடைய தேவன் இரக்கமுள்ளவர் என்று வேத வசனத்தில் பலவிடங்களில் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறதுமல்லாமல், அது உண்மைதான் என்று சிருஷ்டிப்பினாலும், திவ்விய செயலினாலும், மீட்பின் கிரியையினாலும் நன்றாய் விளங்குகிறது. இதை நாம் எப்பொழுதும் உறுதியாய் நம்பவேண்டியதானாலும், முக்கியமாய் குற்றமென்னும் பாரத்தைச் சுமந்து, தேவாசனத்தண்டையில் போய் பாவத்தை அறிக்கையிடும் போதும், துன்பங்களைச் சகித்து தேவதயவு வேணுமென்று கெஞ்சும்போதும், கடமைகளை நிறைவேற்றிக் குறைவுகளைச் சகிக்கும்போதும், நிர்ப்பந்தங்களைக் கண்டு துக்கமுள்ளவர்களை ஆற்றும்போதும் இதை நாம் உறுதியாய் விசுவாசிக்க வேண்டும். நம்முடைய தேவன் இரக்கம் நிறைந்தவர். இரக்கமும் பரிசுத்தமும் அவருடைய சுபாவத்திலும் வார்த்தையிலும் வழிகளிலும் சேர்ந்திருக்கிறது. பிரியப்படுத்தக்கூடாதபடிக்கு அவர் அவ்வளவு கடினமுள்ளவர் அல்லர்; ஆகிலும் நித்தம் அவரை நேசித்து எப்போதும் அவரை நம்பவேண்டும். அவருடைய இரக்கம் நமக்கு வெளிச்சங்கொடுக்கிற சூரியன், குறைவுகளை நீக்குகிற கிருபாநிதி, நம்மைத் தற்காக்கிற சேனை. அவருடைய கிருபை ஒன்றிராவிட்டால், நாம் அவநம்பிக்கைகொண்டு முற்றிலும் கெட்டுப்போவோம். இப்போதே நாம் நம்பிப் பயமற்றிருக்கலாம். அவரோடு சமாதானமாய் நடந்து நாள்தோறும் அவருக்குள் சந்தோஷப்படலாம்.

இரக்கமுள்ள தேவனே!
உன் இரக்கப் பெருக்கையே,
பாவிகள் காணச் செய்கையே
என் நாவும் உம்மைப் போற்றுமே.

'உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண் மணியைத் தொடுகிறான்'

சகரியா 2:8

ஏகோவா தம்முடைய ஜனங்கள்மேல் எவ்வளவு உருக்கமுள்ளவர்! கொஞ்சகாலத்துக்குமுன்னே அவர்களை அதிகமாய் தண்டித்து பல இடுக்கண்களுக்குட்படுத்தினார். அவர்கள் தேவனால் புறக்கணிக்கப்பட்டு யாவராலும் அசட்டையாய் எண்ணப்பட்டார்கள். இப்போதுதான் சத்துருவின் தேசத்தில் இருந்து தப்பி, அழுகையோடும், விண்ணப்பங்களோடும் அக்கினிக்குத் தப்புவிக்கப்பட்ட கொள்ளிகள்போல், தங்கள் தேசத்திற்குத் திரும்பிவந்தார்கள். இந்தச் சமயத்தில்தான் கர்த்தர் அவர்களைப் பார்த்து, உங்களைத் தொடுகிறவன் என் கண்மணியைத் தொடுகிறான் என்கிறார். தேவனுடைய வழிகள் எவ்வளவு ஆச்சரியமானது! புத்தியுள்ள வைத்தியனைப்போலத் தொட்டுச் சொஸ்தப்படுத்துகிறார். மற்றவர்கள் தொட்டுக் கெடுக்கிறதற்கு இடங்கொடார். உருக்கமுள்ள தாயைப்போலத் தம்முடைய பிள்ளைகளைத் தாமே திருத்துவார். மற்றவர்களைக்கொண்டு திருத்தமாட்டார். தேவனுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் இருக்கிற ஐக்கியம் எவ்வளவு நெருங்கியது; பாசம் எவ்வளவு பலத்தது; அனுதாபம் எவ்வளவு பெரியது. கவலை எவ்வளவு பட்சம் நிறைந்தது. கருத்து எவ்வளவு நீங்காதது; அவர்களை ஆதரிக்கிறது எவ்வளவு இரக்கம் நிறைந்தது. அவர்கள் எவ்வளவு சுகபத்திரமாய் வாழ்கிறார்கள். அன்பர்களே, உங்கள் எல்லாத் துன்பங்களிலும் சோதனைகளிலும் தைரியங்கொள்ளுங்கள். உங்கள் எல்லா வருத்தங்களிலும் ஆறுதல் அடையுங்கள். நீங்கள் கண்ணின் கருப்பு விழியைப்போல் ஏகோவாவுக்கு நெருங்கினவர்கள், அருமையானவர்கள்; அவருடைய செட்டைகளின் நிழலில் மறைக்கப்பட்டிருக்கிறீர்கள். பரிசுத்த ஆவியானவரே, இந்தச் சத்தியத்தை நான் தினந்தோறும் உண்மையென்று கண்டறிய எனக்கு உதவி செய்யும்.

இயேசு என் சொந்தமானதால்
ஆக்கினைக்குப் பயப்படேன்,
அவர் நீதி கிடைத்ததால்
மகிழ்ந்து என்றும் பூரிப்பேன்;
கிருபாசனம் சேருவேன்
ஜீவ மகுடம் அடைவேன்.

'அவர்கள் இருதயம் பிரிக்கப்பட்டிருக்கிறது'

ஓசியா 10:2

இது பெரிய குற்றம்; தேவன் முழு இருதயத்தையும் கேட்கிறார். அவருடைய ஜனங்கள் அப்படியே தருகிறோமென்கிறார்கள். ஆகிலும் அநேகர் இந்த விஷயத்தில் குற்றவாளிகள் என்று சொல்ல நியாயமுண்டல்லவா? அவர்கள் உறுதியற்றவர்களாயிருக்கிறதைப் பார்க்கும்போது அவர்கள் இருதயம் தேவனுக்கும், உலகத்துக்கும், பாவத்துக்கும், பிசாசுக்கும், உண்மைக்கும், பொய்க்கும், கிறிஸ்துவுக்கும், தனக்கும் பிரிந்திருக்கிறதாக நாம் எண்ணவேண்டும். பிரிந்த இருதயத்தின் லட்சணங்கள் எவையென்றால், உலகத்தையே எப்பொழுதும் நோக்கிக்கொண்டிருப்பது, பக்தியின் வேஷம் போதுமென்றிருப்பது; தற்சோதனைசெய்ய மனமற்றிருப்பது: ஆத்துமாவில் தைக்கிற தெளிவான அனலுள்ள பிரசங்கத்தை வெறுப்பது, நித்தியத்துக்கடுத்த காரியங்களைப் பிறகு பார்த்துக்கொள்ளலாமென்று கவலையற்றிருப்பது இவைகள்தான். சிநேகிதரே, உங்கள் நிலைமை எப்படி? பாதி இருதயத்தைக் கர்த்தர் புறம்பே தள்ளுவார். கொடுத்தால் முழுதுங்கொடு, இல்லாவிட்டால் சுத்தமாய் வேண்டாமென்கிறார். இதனால் நீங்கள் பயப்படுகிறீர்களோ? இதற்கோர் ஔஷதமுண்டு. உங்கள் இருதயத்தைச் சோதித்துப் பாருங்கள். அதில் உங்களுக்குத் தட்டுப்படுகிற எந்தக் குற்றத்தையும் குற்றமென்று தீர்த்துப் போடுங்கள். அதை இயேசுவண்டையில் கொண்டுபோய் அதைச் சுகமாக்கும்படி கெஞ்சுங்கள். தேவவசனத்தின் சுருக்கமான முனை அதன்மேல் படட்டும்; தேவன் உங்களைப் பார்க்கிறார் என்று எப்பொழுதும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். மறுமையைப்பற்றிய சத்தியங்களைக் குறித்து அடிக்கடி சம்பாஷியுங்கள். இருதயம் எப்படியோ அப்படியே உங்கள் நடக்கையுமிருக்கும்; அதற்குத் தக்கதாகத்தான் உங்கள் ஆறுதல்களும் சமாதானமுமிருக்கும். கர்த்தாவே, உம்முடைய நாமத்துக்குப் பயப்படத்தக்கதாக என் இருதயத்தை ஒருமுகமாக்கும்.

சாந்தமுள்ள தாழ்ந்த மனம்
பாவம் கண்டு துக்கமுற்று;
கிறிஸ்து வாசம்பண்ணும் கனம்
வேண்டுமென்று வாஞ்சையுற்று,
லோக சிந்தை முற்றும் நீக்கும்
பரம் காட்டுமென்று கேட்கும்.

'அவர் என்னைக் குறித்துச் சாட்சிக் கொடுப்பார்'
யோவான் 15:26

இயேசுவைக்குறித்துச் சாட்சிகொடுப்பது பரிசுத்த ஆவியின் வேலை; வேதவசனத்தில் அவர் அப்படிச் சாட்சி கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவை மகிமையுங் கிருபையும் நிறைந்தவராய்க் காட்டியிருக்கிறார். சுவிசேஷம் பிரசங்கிக் கப்படும்போது இயேசுவைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறார். ஏனென்றால் நாம் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே பிரசங்கிக்கிறோம்; தேவ போதிப்பினால் மனிதருக்குள் வேறொன்றையும் பிரசங்கியாதபடி தீர்மானம்பண்ணியிருக்கி றோம். அவர் இயேசுவைக் குறித்து இருதயத்திற்குள் சாட்சி சொல்லும்போது அவருடைய அன்பைப் பார்க்கிறோம்; அவருடைய மகிமையைக் காண்கிறோம்; அவருடைய ரட்சிப்பில் பங்கு வேண்டுமென்று ஆசிக்கிறோம்; அவரோடு ஐக்கியமாகவேணுமென்று தவிக்கிறோம், அல்லது அவ ருடைய வாக்குத்தத்தங்களை நம்பி அவர் அழைப்பை அங்கீ கரித்து, அவர் நாமத்தில் சந்தோஷித்து; அவருக்குமுன் நன்றியறிதலாலும் அன்பினாலும் உருகுகிறோம். அப்பொழுது அவர் தேவதன்மையைப்பற்றியும், நமக்குத் தகுந்தவர் என் பதைப்பற்றியும், நம்மை நேசிக்கிறார் என்பதைப்பற்றியும் கொஞ்சமாகிலும் சந்தேகமிராது. அவரைப்பெற்று அவரைச் சொந்தமாக்கிக்கொண்டு அவரை மகிமைப்படுத்துவதே நம் முடைய முழு விருப்பமாயிருக்கும். அவருக்குமுன் எந்த விக்கிரகமும் விழுந்துபோம்; எந்தக் கிருபையும் முளைத்து அவர்மேல் படரும். அவரை நேசிப்போம், விசுவாசிப்போம், அவரில் நம்பிக்கை வைப்போம், அவருக்காக அழுது புலம்பு வோம். அவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி அவருக்காக வைராக்கியங்கொள்வோம். 'இயேசுவைத் தவிர யாருமில்லை, கிறிஸ்துவைத் தவிர எனக்கு யாருமில்லை' என்று அப்போது சொல்வோம். இந்த நாளிலும், எந்த நாளிலும் முக்கியமாய் நம்முடைய கடைசிநாளில் ஆவியானவர் இயேசுவைப்பற்றி நம்முடைய இருதயங்களிலும் மனச்சாட்சிகளிலும் சாட்சி யிட்டு, நம்முடைய இருதயங்களோடு நாம் தேவனுடைய புத் திரரென்று சொல்லுவாரானால் எவ்வளவு பாக்கியமா யிருக்கும்.

இயேசு! என் அவிசுவாசம்
என்னை விட்டகற்றும்;
ஆவியே! நீர் என்னில் வாசம்
செய்தென்னைக் காப்பாற்றும்.

'அவர்கள் படுகிற வேதனைகளை அறிந்திருக்கிறேன்'

யாத்திராகமம் 3:7

தம்முடைய ஜனங்களுடைய துக்கங்கள் யாவையும் கர்த்தர் அறிந்திருக்கிறார்; அவர் கவனியாமல் அவர்கள் வருத்தப்படுகிறதில்லை. அவர்கள் துக்கங்களில் தாமும் துக்கப்பட்டு, அவர்களுடைய துக்கங்களை அவர்களுக்கு நன்மையாக்குகிறார். இஸ்ரவேல் துன்பப்பட்டபோது இயேசுவானவருங்கூட துக்கப்பட்டார். அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார். அவருடைய சமுகத்தின் தூதனைவர் அவர்களை ரட்சித்தார். அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும், அவர்களை மீட்டுப் பூர்வநாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்துவந்தார். சிநேகிதர்களே, அவர் நம்முடைய துக்கத்தை அறிவார்; நம்முடைய தேற்றரவாளன் அவரே; அதை அவர் முன்வைத்து அவரைப் பார்த்துக் கெஞ்சுவோமாக. நாம் கெஞ்சுகிற சத்தம் கேட்டு நமக்குக் கிருபைசெய்வார்; கேட்டு உத்தரவுகொடுப்பார்; நம்முடைய பெலவீனங்களை அவரும் சகித்திருக்கிறார். முன்னே அவர் பாடுபட்டவர்; துக்கங்களைச் சகித்த புருஷன்; இப்பொழுது துக்கப்படுகிற நம்மை ஆற்றக்கூடியவர்; அவருடைய துக்கங்கள் முடிந்துபோயின, நம்முடைய துக்கமும் சீக்கிரம் முடியும். இரவிலே அழுகை தங்கும், காலமே கெம்பீரம் உண்டு. நீதிமானுக்கு வெளிச்சமும் உத்தம இருதயத்தாருக்குச் சந்தோஷமும் விதைக்கப்பட்டிருக்கிறது. சந்தோஷமும் மகிழ்ச்சியும் நமக்கு உண்டாகும், சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். நாம் அவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசித்து, அவருடைய அன்பால் நிறைந்து எப்போதும் அவரோடிருப்போம். இயேசுவே என் துக்கங்களைப்பற்றியே நான் எப்போதும் நினைக்காதபடி செய்து உம்முடைய ஆவியானவரைக் கொண்டு என் இருதயத்தை உம்முடைய அன்பண்டைக்கு நடத்தும்.

துக்கம் பயம் ஓடிப்போ
நான் வீடு சேருவேனல்லோ?
சுத்தர் சேர் நகரத்தில்
வாழ்ந்திருப்பேன் நித்தியத்தில்.

'தேவன் நம்மோடிருக்கிறார்'

ஏசாயா 8:10

கர்த்தருடைய ஜனங்கள் தனிமையாயிருக்கிறதேயில்லை. தனிமையாய் விடப்பட்டவர்கள் என்று அவர்கள் எண்ணக்கூடாது; அவர்களைக் கவனிக்கிறவராக தேவன் அவர்களோடிருக்கிறார். ஒவ்வொரு நினைப்பு, வார்த்தை, செய்கையையும் கவனிக்கிறார். ஒவ்வொரு சோதனை, மோசம், சத்துருவையும் பார்க்கிறார். தகப்பனைப்போல அவர்களோடிருந்து அவர்களை நேசித்து அவர்களோடு ஐக்கியமாகிறார். சேனைகளின் கர்த்தாவாக அவர்களோடிருந்து, அவர்களைப் பாதுகாக்க வானத்திலும் பூமியிலுமுள்ள சேனைகளனைத்தையும் நடத்துகிறார். வழிகாட்டியாயிருந்து அவர்களை நடத்துகிறார். ஆலோசனைக்காரனாக அவர்களுக்காகப் பரிந்துபேசுகிறார். சிநேகிதனாக அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து அவர்களை ஆற்றித் தேற்றுகிறார். ரட்சகராக அவர்களை விடுவித்து உயர்த்துகிறார். பாவத்தைப் பகைக்கிற பரிசுத்த தேவனாக அவர்களைச் சோதிக்கவும், கண்டிக்கவும், தாழ்த்தவும், காக்கவும், ஆற்றவும், நித்திய ரட்சிப்பால் அவர்களை ரட்சிக்கவும் அவர்களோடிருக்கிறார். நேசரே, தேவன் எந்த இடத்திலும் எப்பொழுதும் நம்மோடிருக்கிறார் என்று நினைத்துக்கொள்வோமானால், அசட்டை நீங்கும், ஆத்திரமிராது; யோக்கியராயிருப்போம், ஜெபகுணம் உண்டாகும், தைரியம் பிறக்கும், சுறுசுறுப்பும் அதிகரிக்கும். தேவன் இவ்விதமாய் நம்மோடிருந்தால், அவர் நமக்காக இருக்கிறார். அவர் நமக்காக இருந்தால், நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தேவன் நம்மோடிருக்கிறார் என்று சொல்லத்தக்கதாக நம்முடைய நடத்தையிருக்கிறதா? எப்பொழுதும் விழிப்பாயிருக்கிறது எவ்வளவு நலம்!

தெய்வ பயத்தோடு நான்
இங்கவரைச் சேவித்தால்,
எத்தீமையும் விலகும்
ஆசீர்வாதமும் உண்டாம்.

'உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்'

ஏசாயா 43:25

பாவம் ஒன்றுக்குத்தான் நாம் பயப்படவேண்டும். நாம் இயேசுவை விசுவாசித்து, பாவத்தை அறிக்கையிட்டு அதைத் தள்ளுவோமானால், அதை மன்னித்து அதினின்று நம்மை ரட்சிப்பாரோவென்று நாம் பயப்படவேணடியதில்லை. அவர் சொன்ன வாக்கு என்ன? அவர்களுடைய அக்கிரமங்களுக்கு நான் இரங்கி, அவர்களுடைய பாவங்களையும் அநியாயங்களை யும் இனி நினைக்கவேமாட்டேன் என்கிறார். அவர் நமக்குப் பாவத்தைச் சாட்டாமல் நீதியை, கிரியைகளில்லாமல் இயேசு வால் வரும் நீதியை நமக்குச் சாட்டுவார். தம்முடைய கிருபை யின் ஐசுவரியத்தை இவ்விதமாய் மகிமைப்படுத்தவும், தமது அன்பின் அதிசயத்தை இவ்விதமாய் வெளிப்படுத்தவும் அவர் தீர்மானம்பண்ணினார். ஒரு குற்றத்தையும் நமதுபேரில் சாட் டமாட்டார். சகலத்தையும் தமது கணக்கினின்று கிறுக்கிப் போடுவார். தமது மனதினின்று என்றைக்கும் நீக்கிப்போடு வார். ஒருக்காலும் பாவம் செய்யாதவர்களாக, அல்லது நாம் செய்த குற்றங்களுக்காக பூர்த்தியான பிராயச்சித்தம் அடைந் தவராக, நமதுபேரில் குறைவற்ற சந்தோஷமுள்ளவராக நம்மை நடத்துவார், ஒரு பாவத்தையாவது நினைத்து அதை நமதுபேரில் சாட்டுவாரானால், நாம் கெட்டுப்போவோம். இயேசுவை விசுவாசித்து, சகல பாவத்தினின்றும் நீதிமான்க ளாக்கப்பட்டு கோபத்தினின்றும் ரட்சிக்கப்படுகிறோம். இது தான் தேவனைப்போலிருக்கிறது, மகிமை நிறைந்தது, திவ்ய மானது. தேவன் நமது பாவங்களை மன்னிக்கும்போது அவை களை எப்பொழுதும் மறந்துவிடுகிறார்.

பாவங்களைத் துடைத்து
பாவிகளை மன்னித்து;
ரட்சிக்கும் உம்மைப்போலே
வேறுண்டோ கிருபையாலே?
என்னை ஆற்றித் தேற்றுமேன்
என் பாவம் நீங்கட்டுமேன்.

'அன்பை நாடுங்கள்'

1 கொரிந்தியர் 14:1

அன்பென்பது நேசம்; அன்பைப்போல கிறிஸ்தவன் நினைத்துக் கவலைப்பட்டு ஆசையோடு தேட வேண்டியது வேறொன்றுமில்லை. தேவ அன்பு எல்லா மேன்மைக்கும் ஊற்று; அது புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவை நேசிப்பது. அவர் அன்பின் லட்சணம்பொருந்திய சகலத்தின் அடக்கம். விசுவாசிகள் தேவனுடைய பிள்ளைக ளானதால் அவர் நிமித்தம் அவர்களை நேசிக்கிறோம். தேவன் நமக்குக் கட்டளை கொடுத்திருக்கிறபடியால் பாவிகளை நேசிக் கிறோம். நேசிக்கும்படி கட்டளை கொடுக்கிறது நியாயப்பிரமா ணம்; பரிசுத்த ஆவியின் வல்லமையால் சுவிசேஷம் அதைப் பிறப்பிக்கிறது. இயல்பாய் நம்முடைய இருதயங்களில் அன் பில்லை; நாம் முழுவதும் பகை. அன்பு மனுஷருடைய பிரயத் தனத்தினால் உண்டாகாது; அது கிருபையினின்று பாய்கிறது; பரிசுத்த ஆவியினால் உண்டாகிறது; சுவிசேஷ சத்தியத்தோடு சேர்ந்திருக்கிறது; அன்பை முயற்சிப்பது பாக்யமும் பரிசுத் தமுமாகும். அன்பில்லாவிட்டால் மெய்மார்க்கம் நமக்குள்ளி ராது; அன்பெவ்வளவோ அவ்வளவுதான் மெய்த்தெய்வ பக்தி யிருக்கும்; அன்பை நாடுவோமாக. கர்த்தருடைய ஜனங்க ளுக்கு கர்த்தர் நிமித்தம் அன்பு பாராட்டுவோமாக. நம்மைப் போல் நினைத்து, நாம் போகிற கோவிலுக்குப் போய், நமக் குச் சிநேகிதராய் இருக்கிறவர்களைமாத்திரம் சிநேகிக்கிறது அன்பல்ல, இது கட்சிக்காரருக்குரிய அன்பு. சில காரியங்க ளில் வித்தியாசப்பட்டாலும் இயேசுவை நேசிக்கிற யாவரை யும் நாம் நேசிக்கவேண்டும்.

கீழ்ப்படிதல் அன்பாலாமே
அன்பு பாடச்செய்யுமே,
இந்த அன்பெனக்குத் தாரும்
அதுவே மோட்சம் சேர்க்கும்.

ஜூலை-மீ 9-உ

'எனக்குச் சித்தமானவைகளெல்லாம் செய்வேன்'

ஏசாயா 46:10

கர்த்தருடைய நோக்கம் தவருது; அவருடைய பரிசுத்த எண்ணம் அபத்தமாகாது; அவருடைய சித்தமே பிரமாணம்; அவர் ஆலோசனை நிற்கவேண்டும். அவர் ஒரே நோக்கமுள்ளவர்; ஒருவரும் அவரைத் திருப்பக்கூடாது; தமக்குப் பயந்தவர்களிடத்தில், தம்முடைய இரக்கத்துக்காகக் காத்திருக்கிறவர்களிடத்திலும் அவர் பிரியப்படுகிருர். தம்முடைய சித்தத்தின் நற்பிரியத்தின்படி அவர்களை இயேசுவில் ரட்சிப்புக்கென்று தெரிந்துகொண்டார். அவர் தம்முடைய நல்ல சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நமக்குள் உண்டுபண்ணுகிறவராயிருக்கிருர். அவருடைய தயவின் நற்சித்தத்தை நம்மெல்லாரிலும் நடத்தி, விசுவாசத்தின் கிரியையை வல்லமையோடு நிறைவேற்றுவார். தம்முடைய ஜனங்களை நித்தியமாய் ரட்சிக்க விருப்பங்கொண்டிருக்கிருர். தம்முடைய கற்பனைக்கு நாம் கீழ்ப்படியும்போது அவர் பிரியப்படுகிருர் நமக்கு ராஜ்யத்தைக் கொடுப்பது தம்முடைய பிதாவின் நற்சித்தந்தான். தம்முடைய சித்தத்தின் நோக்கங்களை தேவதூதர்களைக்கொண்டு நிறைவேற்றுகிருர். அவர்கள் அவருக்குப் பிரியமானதைச் செய்கிற பணிவிடையாட்கள். நல்ல மனிதராலும் பொல்லாத மனிதராலும் பிசாசுகளாலுங்கூட தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிருர். கிறிஸ்து இயேசுவைக்கொண்டும் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிருர்; தம்முடைய கரத்தைக்கொண்டும் கர்த்தர் தம்முடைய சித்தத்தை முடிக்கிருர். அவருடைய இஷ்டத்துக்கென்றே சகலமும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அவர் சகலத்தையும் தம்முடைய சொந்த சித்தத்தின் ஆலோசனைப்படியே நடப்பிக்கிருர். தேவனைப்போலிருக்கப் பார்ப்போமாக; அவருக்கு எது பிரியமோ அதற்கு நாம் சம்மதித்து, அவரை மகிமைபபடுத்துவதில் பிரியப்படுவோமாக. தேவன் தமது இஷ்டத்தின்படி செய்வாராளுல் நம்முடைய காரியங்களெல்லாம் சேமந்தான்.

தேவன் செல்லும் பாதையெல்லாம்
மகா ஆழமானது.
கடலிலே நடக்கிருர்
காற்றின்மேலே செல்கிருர்:
அவர் சித்தம் யோசிப்பதை
முடிக்கும் அவர் வல்லமை.

'தன் எஜமானைக் காக்கிறவன் கனமடைவான்'
நீதிமொழிகள் 27:18

இயேசுவைத் தவிர நமக்கு எஜமான் யார்? கிறிஸ்து ஒருவர்தான் உங்களுக்கு எஜமான். அவர் நம்மை ரட்சிக்கத் தெரிந்துகொண்டார்; ஊழியஞ்செய்ய நாம் அவரைத் தெரிந்துகொண்டோம். நாம் நம்முடைய ஜீவநாள் எல்லாம் பயமின்றி நீதியோடும் பரிசுத்தத்தோடும் அவருக்கு ஊழியஞ் செய்யும்படி நம்முடைய பாவங்களை மன்னித்து தம்முடைய ரட்சிப்பை நமக்குத் தெரியப்படுத்தினர். நமது எஜமானுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தை அறிந்துகொள்வதுதான் நமது பாக்கியம்; அவர் கட்டளையிடும் வார்த்தைக்குக் காத்திருந்து அதில்லாமல் ஒன்றுஞ் செய்யாமலிருப்போமாக. அவருடைய பரிசுத்த சித்தத்தை நிறைவேற்றவும் சகிக்கவும் வேண்டிய திறமைக்காக அவரிடத்தில் காத்திருப்போமாக. அவர் வாக்குத்தத்தம் பண்ணின ஒவ்வொரு ஆசீர்வாதத்திற்காகவும் அவர் குறித்த நேரம் வருமட்டும் காத்திருந்து, அதைப் பெற்றுக்கொள்ளும் வரையில் விசுவாசத்தோடு எதிர்பார்த்திருப்போமாக. அவருடைய சவரட்சணையை நம்பி, நமக்கு வேண்டிய ஆத்தும சரீர நன்மைகள் யாவும் அவரிடத்திலிருந்து வருமென்று காத்திருப்போமாக. ரகசியத்தில் அவரிடத்தில் காத்திருந்து பகிரங்கத்தில் அவருடைய பரிவாரத்தோடு சேர்ந்திருப்போமாக. அவர் நம்மைக் கனப்படுத்துவார்; அவர் இப்படிச் சொல்லியிருக்கிறார், 'ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவன் என்னைப் பின்செல்லட்டும்; நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனை என் பிதா கனப்படுத்துவார்.' நாம் சத்தியத்தை அறிந்திருப்போம், சத்தியம் நம்மை விடுதலையாக்கும்; அப்படிப்பட்டவர்கள் தான் உண்மையின்படி சுயாதீனர்.

தீங்குயாவையும் விலக்க
சத்துருவின் வாயை மூட,
ஞானம் எனக்குத் தாருமேன்,
கிறிஸ்தோனாய் நடக்கட்டுமேன்.

'கர்த்தர் தமது ஜனத்திற்கு பெலன்கொடுப்பார்'
சங்கீதம் 29:11

யுத்தம் எவ்வளவு கடுமையானாலும், சோதனை எவ்வளவு பெரிதானாலும், நம்முடைய நாளுக்குத்தக்கதாக நம்முடைய பெலனுமிருக்கும் என்பது நிச்சயம். வாக்குக்கொடுத்தவர் தேவன்; அவா அப்படியே கொடுப்பார். அவர்கள் அவருடைய ஜனங்களாயிருப்பதால் தகப்பன் பிள்ளைகளுக்குக் கொடுக்கிறதுபோலக் கொடுக்கிறார். அவர் உண்மையுள்ளவரானபடியால், அவர் உடன்படிக்கை செய்தபடியே செய்வார். இல்லாவிட்டால் அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை மேற்கொள்ளுவார்களே. அவர்களோ எப்படியும் கடைசியில் மேற்கொள்வார்கள் என்று செல்லியிருக்கிறாரே. அவர்கள் ஆசைகளை எழுப்பிவிட்டவர் அவர்கள் நம்பிக்கையை விருதாவாக்கமாட்டார். ஜெபம்பண்ணுங்கள் என்று கற்பித்தவர் கொடுக்கமாட்டேனென்று சொல்லார். போதுமான பெலனைத் தருவார். போதுமானதற்கு அதிகங்கொடார். அவர்களுடைய நிலைமைக்கும் குறைவுக்கும் வேண்டிய மாத்திரந்தான் கொடுப்பார். கர்த்தர் நம்முடைய ஜனங்களுக்குப் பெலனைத் தருவோம், நாமே அவர்களுக்குப் பெலனாயிருப்போம் என்று வாக்குச்சொல்லியிருக்கிறாரா? அப்படியானால் நாம் தைரியமாய் சண்டைசெய்து, சந்தோஷமாய் முன்னுக்குப்போய், ஒவ்வொரு சிலுவையையும் பொறுமையோடு சகித்து, கருத்தாய் ஜெபம்பண்ணி, தினந்தோறும் துதி செலுத்தி, உறுதியாய் விசுவாசிப்போமாக. வாக்குக்கொடுத்தவர் தேவன்; எக்காலத்திலுமுள்ள பரிசுத்தவான்கள் அவரை உண்மையாய்ப பேசுகிற, வாக்குச் சொன்னதை நிறைவேற்றுகிற தேவன் என்று கண்டிருக்கிறார்கள். சாத்தான் பொய்யன், மோசக்காரன், தேவனுக்கு விரோதமாய்ப் பொய்சாட்சி சொல்லுகிறவன், அவனை நாம் எதிர்த்து நிற்போமாக. அவன் நம்மை விட்டு ஓடிப்போவான்; எந்தச் சோதனையிலும் பலத்த தேவன் நமக்கு ஆதரவு.

வல்ல தேவா பெலன் தாரும்
நின் கரத்தால் என்னைக் காரும்,
காற்றடித்தும் கொந்தளித்தும்
நின் சாட்சியாகவே நிற்பேன்,
உம்மால் நான் யாவையும் செய்வேன்
நின் சித்தம் செய்து போற்றுவேன்.

ஜூலை-மீ 12-உ

'எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்'
நீதிமொழிகள் 28:14

தெய்வ பயம் கிருபையினின்று பாய்கிறது, ஆத்துமா அறிவோடு எப்போதும் சேர்ந்திருக்கிறது. அது அன்பும் பட்சமுமுள்ள தாய்தந்தைகளுக்கு விசனமுண்டாக்கக் கூடாதென்கிற சிறு பிள்ளைக்குரிய பயபக்தி, அது உடன்படிக்கையினால் உண்டாகும் ஆசீர்வாதம்; நம்முடைய தேவன் தாம் சிநேகிக்கிற யாவருக்கும் அதைக் கொடுக்கிறார். அவர்களும் அவரைப் பிதாவாகப் பாவித்து அவருக்கு மனஸ்தாபம் உண்டாக்கப்படுகிறார்கள். கிருபை நிறைந்த ரட்சகரைக் கனவீனப்படுத்த, பரிசுத்த ஆவியானவருக்குத் துக்கமுண்டாக்க அஞ்சுகிறார்கள். தங்கள் சொந்த இருதயத்தினாலும் சாத்தானாலும், பேர்க் கிறிஸ்தவர்களாலும், உலகத்தாலும், உலக சம்பவத்தாலும் எங்கே கர்த்தரைவிட்டு வழுவிப்போகிறோமோவென்று பயப்படுகிறார்கள். தங்கள் சொந்தப்புத்தியின்மேல் சாரப் பயப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மேன்மைப்படுத்தி வெதுவெதுப்பான நிலைமையைக்குறித்து வருத்தமடைகிறார்கள். இப்படி எப்பொழுதும் பயப்படுகிறவன் பாக்கியவான்; மிருதுவான மனசாட்சியை, தாழ்ந்த மனதை, உத்தம நடக்கையை அவன் காத்துக்கொள்ளுகிறான். அப்படிக் கொத்தவன் புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களில் தனக்குப் பங்குண்டென்று காட்டி, ஒப்புரவாக்குதலின் ரத்தத்தில் அதிக கருத்து வைத்து, நிலையுள்ள சமாதானத்தை அனுபவிக்கிறான். அவன் நிலைமை பாக்கியமுள்ளது; தேவ தயவை அதிகமாய்ப் பெற்று, பரிசுத்த ஆவியால் வரும் ஆறுதலில் நடந்து, உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறான். தெய்வ பயம் என் இருதயத்தில் ஆளுகை செய்து என் கடமைகளைத் தற்காத்தால் எவ்வளவோ பாக்கியம்; கர்த்தருக்குப் பயப்படுதலில் பலத்த நம்பிக்கையும் நிலையுள்ள சமாதானமும் உண்டு.

பாவம் யாவையும் வெறுக்கும்
தெய்வ பயம்தாரும்,
நன்மையாவும் விரும்பும்
கிருபை எனக்கியும்.

'இதோ அவரை ஜனங்களுக்குத் தலைவராக ஏற்படுத்தினேன்'

ஏசாயா 55:4

நம்முடைய அறிவீனத்தை எண்ணித் தேவன் இப்படிச் செய்தார். நம்முடைய பரமபிதாவின் வீட்டிற்கு நடத்துகிற வழி நமக்குத் தெரியாது; குருடனை அவனுக்குத் தெரியாத வழியிலே நடத்த இயேசு அனுப்பப்பட்டிருக்கிறார். வழியிலே அநேக வருத்தங்கள் உண்டு; பெரிய பலத்த வருத்தங்கள். இயேசுவோ நம்முடைய தலைவராக வந்து, 'நான் உண்டாக்கினேன்; நான் சுமப்பேன், நானே உங்களைக் கொண்டுபோய் விடுவிப்பேன்' என்கிறார். நம்முடைய க்ஷேமத்திற்காகவும், ஆறுதலுக்காகவும், நம்பிக்கைக்காகவும் பிதா எவ்வளவாய்க் கவலைப்படுகிறார் என்று இது வெளிப்படுத்துகிறது; தம்முடைய ஒரே குமாரனை அனுப்பினார், அவர் மட்டற்ற ஞானமும், கிருபையும், இரக்கமும், வல்லமையையும் உள்ளவரானபடியால், நம்மை அவர் கையில் ஒப்புக்கொடுத்தார். உலகத்தினின்று சபையண்டைக்கும், நியாயப்பிரமாணத்தினின்று சுவிசேஷத்தண்டைக்கும், பாவத்தினின்று பரிசுத்தண்டைக்கும் கோபாக்கினையினின்று அன்பண்டைக்கும் நம்மை நடத்த வந்தார். அவர் தமது ஜனங்கள் எல்லாரையும் கிருபாசனத்தண்டைக்கும், ஜெபத்தின் வீட்டிற்கும், ஏகோவாவின் அன்பாகிய நல்ல மேய்ச்சலண்டைக்கும் வாடாத மகிமையுள்ள பரம வாசஸ்தலத்தைண்டைக்கும் நடத்துகிறார். சாத்தானுக்கு விரோதமாய் நம்மை நடத்தும்போது நாம் ஜெயங்கொள்ளுகிறோம்; பாவ இச்சைக்கு விரோதமாய் நம்மை நடத்தும்போது நாம் அவைகளை மேற்கொள்ளுகிறோம். தாம் நடந்த வழியிலே நம்மை நடத்துகிறார்; தம்முடைய மந்தையின் அடிகளில் நம்மை நடத்துகிறார்; நாம் தாங்கதக்கவிதமாய் நம்மை நடத்துகிறார். அதினால்தான் பழைய மனுஷனை விரோதித்து அவனைச் சிலுவையில் அறைகிறோம்; புதிய மனிதனை உயிர்ப்பித்துப் பலப்படுத்துகிறோம். 'என்னைச் சத்தியத்தில் நடத்தி என்னைப் போதியும். ஏனெனில், நீர் என் தேவன்.'

தேவா, என்னை நடத்துமேன்
சத்துருவைத் துரத்தும்,
எனக்கு வழி காட்டுமேன்
கானான் நான் சேருமட்டும்,
ஆரவாரம்
அப்போ வானம் வந்தெட்டும்.

'என் ஜனம் உணர்வில்லாமல் இருக்கிறது'

ஏசாயா 1:3

மட்டற்றக் கிருபை நிறைந்த நம்முடைய தேவன் நம்மைப்பற்றி இப்படி முறையிடுகிறார்; இன்று காலமே இதைச் சற்றே பார்ப்போமாக. நாம் உணரவேண்டிய காரியங்கள் எவை? நிச்சயமாகவே தேவன் நமக்கு எத்தனையோ பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். நாம் ஜீவனுள்ளோர் தேசத்தில் தேவனுக்கு முன்பாக வாசம்பண்ணும்படிக்கு நம்முடைய ஆத்துமாவை மரணத்துக்கும், நம்முடைய கண்ணைக் கண்ணீருக்கும், நம்முடைய காலை விழுதலுக்கும் தப்புவித்தார். தேவன் எல்லாச் சிருஷ்டிகளுக்கும், மிகவும் அற்ப சிருஷ்டிகளுக்கும்கூட வேண்டியதைக் கொடுத்துச் சவதரித்து வருகிறார். முக்கியமாக நம்மையும் பராமரிப்பார். நமது சிருஷ்டிகர், நம்மைக் காப்போன், நமது உடன்படிக்கையின் தேவன், கிருபை நிறைந்த நம்முடைய தகப்பன், நம்மைப் பராமரிக்கமாட்டாரா? அவர் சகலத்தையும் ஆளுகிறவரானபடியால் எந்தக் காரியத்தையும் ஒழுங்குப்படுத்தி நடத்தி நேர்ப்படுத்துகிறார். தற்செயலாய் ஒன்றும் நடக்கிறதில்லை, தன்னாலே நடக்கிறது ஒன்றுமில்லை; சகலமும் மட்டற்ற ஞானத்தினாலும், சர்வவியாபகமுள்ள அன்பினாலும் நடத்தப்படுகிறது. நாம் ஏன் உணருகிறதில்லை? நம்முடைய இருதயம் நிலையற்றது, மோசமுள்ளது, உலகத்தால் நிறைந்தது; நம்முடைய மனம் தேவவசனத்துக்கு விரோதமான எண்ணங்களால் நடத்தப்படுகிறது; நாம் விசுவாசித்து அல்லது தரிசித்து நடக்கப்பார்க்கிறோம். நாம் உணராமல் போகிறதினால் வருகிற குறைவென்ன? நம்முடைய தேவன் கனவீனப்படுகிறார், விசனம் அடைகிறார். நம்முடைய ஆத்துமங்கள் திகிலடைந்து தப்பான வழியே போகிறது. சாத்தானும் நம்மை இலேசாய் மேற்கொள்ளுகிறான். கர்த்தாவே, எங்களுடைய மனதைப் பயபக்தியான எண்ணங்களால் நிரப்பும்.

புது ஜீவனைத் தாரும்
தகாத வாஞ்சை நீக்கும்;
கல்நெஞ்சை நீக்கிப்போடும்
பெருமை என்னில் தாழ்த்தும்.

'நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்'

சங்கீதம் 56:3

வேதனையுள்ள பயங்களால் தங்களை வாதித்துக்கொள்ளுகிறார்கள். விசுவாசம் துணிகரமென்றும், நம்பிக்கை வீணென்னமென்றும், எப்போதாவது தாங்கள் அழைக்கப்பட்டிருக்கிற பரிசுத்த நாமத்தை அபகீர்த்திசெய்வோமென்றும் பயப்படுகிறார்கள். வெறும் வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொள்ளப் பயந்து, விசுவாசத்தைத் தாங்க மனதுக்குச் சமாதானமான எண்ணங்கள் வேணுமென்கிறார்கள். சங்கீதக்காரனைப்போல் நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன் என்று தீர்மானம் செய்வார்களானால் எவ்வளவு நல்லது. இயேசுவில் விளங்கிய ஏகோவாதான் நாம் நம்பத்தக்க சரியான பரமபொருள். அவரை எக்காலத்திலும் நம்பலாம். சிநேகிதரே, என் கிருபையுள்ள தேவன் கொடுத்த உண்மையுள்ள வாக்கை நம்புவேன், உன் அருமை இரட்சகரின் இலவசமான கிருபையின்மேல் சார்ந்திருப்பேன். இரக்கத்தின் உடன்படிக்கையை என்றும் பிடிப்பேன். என் பிதாவின் படியண்டையோடி, வருகிறது வரட்டுமென்று சகலத்தையும் ரட்சகருடைய காத்தில் ஒப்புக்கொடுப்பேன் என்று சொல்லக்கூடியவர்களா யிருந்தால், எல்லாம் நன்றாய் இருக்கும். என்னுடைய நிலைமை, எண்ணம் இவைகளைத் தள்ளி கர்த்தர்பேரில் நம்பிக்கை வைப்போமாக. தெய்வச்செயல் நமக்குப் பயத்தை உண்டாக்கினபோதிலும், உடன்படிக்கையில் கண்டிருக்கும் அன்பைப் பிடிப்போமாக. என்றைக்கும் கர்த்தரை நம்புங்கள் என்று தேவன் சொல்லியிருக்கிறார். இதுதான் நமக்கு ஆதாரம்; யோபைப்போல் அவர் என்னைக் கொன்றாலும், அவரையே நம்புவேன் என்று சொல்லத்தக்க கிருபையைத் தேடுவோமாக.

தேவ அன்பு மாறாதது
என்றும் அவரை நம்புவேன்,
பயம் திகில் யாவும் வீழ்த்து
கவலை அவர்மேல் வைப்பேன்.

‘மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்’
1 பேதுரு 5:5

நாம் எவ்வளவு அற்பர், எவ்வளவு கேவலஸ்தர் என்பதைச் சரியாய் அறிந்துகொள்வது மிகவும் விசேஷித்த காரியம். நாம் எவ்வளவோ தீழ்ப்பானவர்கள், அபாத்திரர். தேவனுடைய இரக்கம் ஒன்றைத்தான் நாம் நன்றாய் எப்பொழுதும் பிடிக்கவேண்டியிருக்கிறது. தேவனுடைய பார்வையில் மிகவும் விலையேறப்பெற்றதாயிருக்கிற சாந்தமும் அமைதலுமான ஆவி நமக்கு வேண்டும். அப்போதுதான் நம்முடைய பாவங்களையும் நம்முடைய குறைவுகளையும் உணர்ந்து, தெய்வ தண்டனையால் தாழ்மையைப் படித்துக்கொள்வோம். கர்த்தருக்கு நாம் செய்த பதில் என்னவென்று யோசிப்போம். சகலத்தையும் நடத்துகிறது தேவகரம் என்று பார்ப்போம். யாரைக்கொண்டு நடத்தினபோதிலும் திவ்விய செயலே நடத்துகிறதென்று ஒத்துக்கொள்வோம். தெய்வபக்தியோடு மனத்திருப்தியுள்ளவர்களாய் உள்ளது போதுமென்று நம்முடைய நிலைமையைக்குறித்துச் சந்தோஷமாயிருப்போம். இயேசு ரட்சகரை, ஆதியில் எப்படி மகிமையுள்ளவராய் இருந்தார் என்றும், நமக்காக எப்படி ஆனாரென்றும், இப்பொழுது எப்படியிருக்கிறார் என்றும், நாம் சீக்கிரம் அவரோடு எப்படிப்பட்டவர்களாய் இருப்போமென்றும் பார்த்துக் கொண்டிருப்போம். நீதிமானுக்கப்பட்ட பாவிக்கு நல்ல வஸ்திரம் தாழ்மைதான். தேவன் தாழ்மையுள்ளவர்களை நோக்கி அவர்களோடு வாசம்பண்ணுவோம் என்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையளிக்கிறார் தன்னைத்தானே தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்; தாழ்மையுள்ளவர்களுடைய கெஞ்சுதலைக் கேட்டு, அவன் விரும்பினதைத் தந்து அவனை ரட்சிப்பார். தாழ்மையைத் தேவன் கவனித்து அதை ஆசீர்வதியாமல் போகார்.

என் பெருமை அகற்றும்
என்னைப் பார்க்கச் செய்திடும்,
யாரிலும் நான் கடையோன்
பாவிகளில் சிறந்தோன்
என்பதைக் கண்டு நான்
வெட்கப்படச் செய்திடும்.

'உண்மையுள்ள சாட்சி'

வெளிப்படுத்தின விசேஷம் 1:5

இது நம்முடைய ரட்சகருடைய நாமங்களில் ஒன்று. அவருடைய பிதா தம்முடைய அன்பைக்குறித்துச் சாட்சி சொல்லும்படிக்கு அவரை நமக்குத் தந்தார். அவருடைய சாட்சி யென்ன? தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். பாவிகளைப்பற்றி அவருடைய சித்தம் என்னதென்று தெரிவிக்க அவரை அனுப்பினார். அவருடைய சித்தம் என்னவென்றால், குமாரனைக் காண்கிற எவனும், அவருடைய தேவதன்மையை, அவருடைய அதிகாரத்தை, அவருடைய உத்தியோகத்தைப் பார்த்து அவரை விசுவாசித்தால் அவன் நித்திய ஜீவனை அடைவான். அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன் என்பதுதான். தம்முடைய ஜனங்களைப் பாக்கியசாலிகளாக்குகிறதில் அவருக்கிருக்கும் ஆனந்தத்தைப்பற்றி அவர் சாட்சி கொடுக்கிறார். சின்ன ஆட்டுக்கூட்டமே, பயப்படாதே; உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கப் பிதா சித்தமாயிருக்கிறார். நமக்கு வேண்டிய சகலத்தையும் செய்வார், கொடுப்பார் என்று தம்முடைய பிதாவைப்பற்றிச் சாட்சி கொடுக்கிறார், அவர் கொடுக்கும் சாட்சி உண்மையுள்ளது; அவர் சகலத்தையும் அறிந்தவர். உண்மையுள்ளவர்; உத்தமர், நம்முடைய நன்மையையும் பிதாவின் மகிமையையும் தேடுகிறவர் என்று அவரையே விசுவாசிப்போமாக. இயேசு நமக்கு உண்மையுள்ள சாட்சி; உத்தம சிநேகிதன்; தம்முடைய பிதாவுக்காக அவர் சாட்சிகொடுக்கிறதுபோல நாம் அவருக்குச் சாட்சி கொடுப்போமாக.

ரட்சிப்பென்னும் நற்செய்தி
கொண்டுவந்தவரையே
என் உள்ளமே துதி,
என்றும் வாழ்த்திச் சாற்றுவாய்
பாவம் மன்னிப்பானதென்று
தேவ நாமம் போற்றுவாய்.

'இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்'

மத்தேயு 5:8

இருதயத்தைச் சுத்திகரிப்பது விசுவாசம்; அது தேவப் பிராயச்சித்தத்தை நமக்குக் காட்டும்போது நாம் மன்னிப்பையும், சமாதானத்தையும், ஒப்புரவாகுதலையும் அனுபவிக்கிறோம். மனச்சாட்சியைச் செத்த கிரியைகளில் இருந்து சுத்திகரித்து ஆக்கினையினின்று நம்மை விடுவிக்கிறது; தேவனுடைய சத்தியத்தையும், சத்தியத்தின் மூலமாய் இயேசுவையும் அது ஏற்றுக்கொள்ளுகிறது. நாமும் தேவனுடைய புத்திரராகத்தக்க அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம். தேவனுக்கும் நமக்கும் இருக்கிற சம்பந்தத்தை அறிந்து, தேவன் செய்த வாக்குத்தத்தங்களை வாசித்து, அவர் ஆயத்தம்பண்ணின மகிமையான ராஜ்யத்தை முந்திப் பெற்றுக்கொள்ளுகிறோம். நம்பிக்கை இருதயத்தில் ஆளுகை செய்கிறது; இந்த நம்பிக்கையுள்ளவன் எவனும் கிறிஸ்து சுத்தமாயிருக்கிறதுபோலத் தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளுகிறான். அவனுடைய மனச்சாட்சி மிருதுவும், அவன் நோக்கங்கள் யோக்கியமும், அவன் இருதயம் தேவகற்பனைகளில் உத்தமமுமாயிருக்கிறது. பாவம், மரணம் ஆகிய இவைகளை நினைத்துப் பெருமூச்சுவிட்டு, மாம்சத்தோடு ஓயாமல் போராட்டஞ்செய்து, ஆவியிலுள்ள அசுத்தத்தினிமித்தம் தன்னைத்தான் அருவருக்கிறான். பாவத்தை விட்டு விடுதலை மாத்திரம் கிடைத்தால் உலகத்தையாவது கொடுத்துவிடுவான். அவன் ஆத்துமாவுக்கு ஜீவன் பரிசுத்தம்; அவன் ஆசீர்வதிக்கப்பட்டவன். தேவனைப் பார்ப்பான்; அவரைப் பிதாவாக தன் பங்காக, தன் நித்திய ஆஸ்தியாகப் பார்ப்பான்; அவன் தேவனோடு இருப்பான்; பரிசுத்தத்திலும், பாக்கியத்திலும், மகிமையிலும் அவரைப்போல் இருப்பான். **இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தங்கள் அசுத்தத்தைப் பார்த்து வருத்தப்பட்டு நித்தம் தவிக்கிறார்கள்.**

இருதயச் சுத்தாங்கத்தை
எனக்களியும் இயேசுவே!
அப்போ உமது முகத்தை
கண்டு களிப்பேன் சுத்தரே.

'காணுமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்'
1 பேதுரு 1:8

மகிமை அடைந்த இயேசுவின் சரீரத்தை நாம் கண்டதேயில்லை. வேதவசனம் அவரைப்பற்றிச் சொல்லியிருக்கிறதை விசுவாசித்து அந்த விசுவாசத்தினுல் அவரை நேசிக்கிறோம். அவர் தேவனுடைய ஒரேபேறுன குமாரனுகை உயர்த்தப்பட்டு, மேன்மை அடைந்து, நித்தியமாய் மகிமைப்படுகிருர். ஏழைப் பாவிகளுக்கு ரட்சகராக அவர் மனுஷனுகி, அவர்களுக்காகப் பாடுபட்டு ரத்தஞ் சிந்தி மரித்தார். அவரை நாம் நேசிக்கிறோம்; அவருடைய சமுகம் மகத்துவமுள்ளது; அவருடைய இருதயம் அன்பு நிறைந்தது; அவருடைய கை வல்லமையுள்ளது; அவருடைய கண் தயாளமுள்ளது; அவருடைய மனம் இரக்கமுள்ளது; அவருடைய சமுகம் மோட்சந்தான். அவருடைய அருமையான ரட்சிப்பை நாம் நேசிக்கிறோம். அது தாராளமுள்ளது, நிறைவுள்ளது, மகிமையுள்ளது, அவர் அன்பான வாக்கை நேசிக்கிறோம். அது நம்முடைய குறைவுகளை அறிந்து நம்முடைய விருப்பங்களுக்குச் சரியாய் நம்முடைய ஆத்துமங்களைச் சமாதானத்தால் நிரப்புகிறது; அவருடைய சிம்மாசனத்தை நேசிக்கிறோம், அங்கே அவர் நம்மைச் சந்தித்து, நம்முடைய விண்ணப்பங்களுக்குச் செவி கொடுத்து, நம்மை ஆசீர்வதிக்கிருர். அவருடைய பரிசுத்த கற்பனைகளை நேசிக்கிறோம்; அவைகள் அவருடைய அதிகாரத்தை விளக்கி அன்பைக் காண்பித்துப் பரிசுத்தத்திற்கு அழைக்கிறது; அவர்மேல் அன்புள்ளவர்கள் அவருடைய சாயலைத் தரித்து, பூமியில் உன்னதமானவர்களாய் விளங்கி ராஜபுத்திரரைப்போல் இருக்கிருர்கள். அவரை இன்னும் அதிகமாய் நேசித்தால் நல்லது; நம்முடைய முழு இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும், பெலனேடும் அவரை நேசிக்கவேண்டும். பரிசுத்த நடக்கையினுலும் பிரயோஜனமான ஊழியத்தினுலும் நம்முடைய அன்பை அவருக்குக் காட்டவேண்டும்.

இயேசுவைக் காணச் செய்திடும்
அவர் எனக்காய் மரித்தார்,
பாவ வினைகள் நீக்கிஞர்
என்றென்றும நான் மகிழட்டும்.

'நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள்'

லூக்கா 22:40

சோதனை துன்பந்தான்; இது பாவத்துக்கு நம்மை இழுக்கிறது. சோதனைக்காரருக்குத் தலைவன் சாத்தான்; அவன் நம்மைப் பாவத்துக்கும் தோஷத்துக்கும் இழுக்கிறதற்குத் தன்னால் ஆனதெல்லாம் பார்க்கிறான்; ஆதலால் எப்பொழுதும் மோசத்துக்கு ஏதுவாயிருக்கிறோம். அடிக்கடி அந்தச் சோதனைகளால் வழிதப்பிப் போகிறதுமுண்டு. ஏனென்றால் அவை திடீரென்று வல்லமையோடு நம்மை மோசஞ்செய்யப் பார்க்கின்றன. நம்முடைய நிலைமைக்கும் சமயத்துக்கும் ஏற்றதாய் வருகின்றன. நம்முடைய இருதயம் பெலவீனமுள்ளது. மாறிப்போகிறது, தீமைக்குச் சாய்கிறது. மோசத்துக்கேதுவானது. எத்தனையோ பெரிய மகாத்துமாக்கள் சோதனையில் விழுந்தார்கள்; நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். சோதனையில் விழுவோமானால் தேவனை கனவீனப்படுத்துகிறோம், மார்க்கத்துக்கு அபகீர்த்தியுண்டாக்குகிறோம், ஆத்துமாவை வருத்தப்படுத்துகிறோம், நம்மைத் தற்காத்து விடுவிக்கத் தேவன் வல்லவர்; அவர் வாக்குக்கொடுத்திருக்கிறார்; அவர் செய்த வாக்குத்தத்தத்தோடு நம்முடைய ஜெபமுஞ் சேர்ந்திருக்கவேண்டும். சிநேகிதரே, கெடுக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு திரிகிற சத்துரு உங்களுக்கிருக்கிறான் என்றே நித்தம் நினையுங்கள். அவன் உங்களோடிருக்கிறான்; உங்களைக் கெடுக்கப்பார்க்கிறான். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்; பக்தியோடு, உண்மையோடு, விடாமுயற்சியோடு ஜெபம்பண்ணுங்கள். தேவன் உண்மையுள்ளவர்; உங்களைத் தப்புவிக்க வழிகாட்டுவார். சாத்தான் உங்களைச் சோதிக்கும்படி நீங்கள் அவனைத் தூண்டாதபடி பாருங்கள். சிலர் அப்படிச் செய்கிறார்கள்.

> இயேசு நீர் கர்த்தர், ரட்சகர்,
> பாவியின் சிநேகிதர்,
> வார்த்தை சொல்லும், துன்பம் யாவும்
> காணாமல் பறந்துபோம்;
> ஞானம் பெலன் எனக்கீயும்,
> உமதன்பு என்னில் பாயும்.

'என்னில் நிலைத்திருங்கள்'

யோவான் 15:4

சுபாவப்படி நாம் கிறிஸ்துவில் இல்லாமல் அவருக்கு முற்றிலும் தூரமானவர்கள். கிருபையால் அவர் அழைப்பை ஏற்றுக்கொண்டு, அவர் நமக்குத் தேவையென்றுணர்ந்து அவரிடத்தில் வருகிறோம். இயேசுவோடு ஐக்கியப்பட்டால் மாத்திரம் நாம் க்ஷேமமாயும் சௌக்கியமாயும் இருப்போம்; அவரோடு ஒன்றாயிருக்க நம்மை அவருக்கு ஒப்புக்கொடுக்கிறோம்; அவர் நம்மை ஏற்றுக்கொண்டு தம்முடைய அன்பை நம்முடைய இருதயத்தில் ஊற்றுகிறபடியால், அவருடைய சரீரத்தின் அவயவங்களாகி, அவருடைய மாம்சத்தோடும் எலும்போடும் சேர்ந்தவர்களாகிறோம். அப்போதுதான் அவர் நம்மைப்பார்த்து என்னில் நிலைத்திருங்கள் என்கிறார். நாம் அவர் பேரில் சார்ந்து வாசம்பண்ணுவோமானால், நம்முடைய அருமையான ரட்சகரும், தேவனும், சிநேகிதருமாக அவரை நேசித்து அவரோடு ஒட்டிக்கொள்வோமானால், வெளியரங்கமாய் அவரைச் சிநேகித்து அவரிடத்திலிருந்து வேண்டியவைகளைப் பெற்றுக்கொள்ளப் பார்ப்போமேயானால், ஒவ்வொரு நாளும் அவரோடு ஐக்கியப்பட்டு அவருடைய காரியம் நம்முடையதுதான் என்று நம்முடைய நடக்கையால் காண்பிப்போமானால் அவரில் நிலைத்திருக்கிறோம். நம்முடைய பாவத்தைக் கொன்று, நம்முடைய கிருபைகளை விருத்திசெய்து, நம்முடைய ஆசைகளை ஜெயித்து, உலகத்தை மேற்கொண்டு, சாத்தானைப் போரில் வென்று, நமக்கு வேண்டிய நன்மைகளையெல்லாம் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் அவரில் நிலைத்திருக்கவேண்டும். கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் நம்முடைய நோக்கம் ஒருமுகமாகும். தீப்போன்ற வைராக்கியமும், பரிசுத்த விவேகமும் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்த நமக்குப் பெலன்கொடுக்கும்; எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் உன் கண்ணை இயேசுவின்மேல் வை.

இயேசுவே! நீர் திராட்சச்செடி
நான் உம்முடைய கொடி,
உம்மைச் சேர்ந்தால் நான் பிழைப்பேன்,
பகை பாவம் அற்றிருப்பேன்;
என் ஆவி உம்மில் தங்கட்டும்,
அப்போ கனிகொடுப்பேன்.

'நீதிபரரும் ரட்சகருமானவர்'

ஏசாயா 45:21

தம்முடைய அன்புக்கு திருப்தியுண்டாக்கத் தேவன் தம்முடைய நீதியை விடார். தற்கால ரட்சிப்பிலும், நம்முடைய ஆத்துமங்கள் அடையும் நித்திய ரட்சிப்பிலும், அவருடைய கிருபையைப்போல அவருடைய நீதியும் பிரகாசிக்கிறது. அவர் தம்முடைய குமாரனை நமக்குத் துணையாகத் தந்தார்; அவரை நமக்குத் துணையாக ஏற்படுத்தி நமக்குப் பதிலாக அவரைத் தண்டித்தார். அவர் குற்றமற்றவராயிருந்தாலும் நம்முடைய பாவங்கள் அவருக்குச் சாட்டப்பட்டபடியால், அவரை நியாயப்படி மரண ஆக்கினைக்குள்ளாக்கினர். நம்முடைய பாவங்கள் அவரால் நிவிர்த்தியாக்கப்பட்டபடியால் அவரை நியாயப்படி மரித்தோரிலிருந்து எழுப்பினர். அவருடைய கிரியை பூரணமாயிருந்தபடியால், அவரை விடுவித்தது நியாயந்தான்; அவர் நீதியுள்ள தேவன்; ஆதலால் பிணையாளி கடன் செலுத்தின பிறகு பாவியினிடத்தில் அந்தக் கடனைக் கேட்கமாட்டார். பிணையாளி செய்த பிராயச்சித்தத்தை ஏற்றுக்கொண்டபிறகு பாவியைத் தண்டிக்கமாட்டார். நம்மைக் குற்றமற்றவர்களாக்குகிறதினாலேதான் அவருடைய நீதி பிரகாசிக்கும்; நம்முடைய நித்திய ரட்சிப்பில் தான் அவர் கனமடைவார், அவரே ரட்சிப்பின் ஒழுங்கை ஏற்படுத்தினர்; அதை நிறைவேற்றத் தம்முடைய குமாரனை அனுப்பினர்; அதை நமக்குச் சொந்தமாக்கப் பரிசுத்த ஆவியைக் கொடுக்கிறார்; கடைசியாகத் தம்முடைய கிருபையால் நம்மை ஏற்றுக்கொள்ளுகிறார். அவர் நம்முடைய கிரியைகளின்படி ரட்சிக்காமல் தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் நம்மை ரட்சித்துப் பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.
கிருபையின்படியும் நம்மை ரட்சித்துப் பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.

என் பாவம் ஏசு சுமந்தார்,
எனக்காய் குற்றமானார்;
பாவபரிகாரம் செய்து,
கிருபையாகவே ரட்சித்தார்.

ஜூலை-மீ 23-உ

'நீர் என்னைத் தூக்கியெடும், நான் சுகமாயிருப்பேன்'
சங்கீதம் 119:117

இது கிறிஸ்தவனுடைய தினசரி ஜெபம். அவனுடைய வழி காடுமுரடானது, அவனுக்கு மோசங்கள் அநேகம், அவன் சத்துருக்கள் பலத்தவர்கள், அவன் விழ ஏதுவானவன். முழு மனதோடு நாம் இப்படி ஜெபம் பண்ணுவோமானால், நம்முடைய பெலவீனத்தை அறிந்தவர்கள் என்றும், கர்த்தர் நம்முடைய பெலன் என்று அறிந்திருக்கிறோம் என்றும், உண்மையான தாழ்மை நமக்குள் கிரியை செய்கிறதென்றும், தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென்கிற ஆசை நம்முடைய மனச்சாட்சியை ஆண்டுவருகிறதென்றும் அது ரூபிக்கும். நாம் உலகத்தில் இருக்கிறோம்; கர்த்தர் நம்மைத் தாங்காவிட்டால் மனச்சாட்சியைக் குற்றப்படுத்துவோம். சுவிசேஷத்திற்கு அபகீர்த்தியையும், தேவனுக்குக் கனவீனத்தையும் கொண்டுவருவோம். நாம் சபையிலிருக்கிறோம்; கர்த்தர் நம்மைத் தாங்காவிட்டால் நாம் கசப்பான வேர்களாகி, இடறலின கற்களாகத் தேவபக்தரைத் துக்கப்படுத்துவோம். இப்பொழுது நமக்குத் துன்பம் இராவிட்டாலும் இனிமேல் துன்பங்கள் வரும். கர்த்தர் நம்மை அந்தச் சமயத்தில் தாங்காவிட்டால், நாம் சோர்ந்துபோய் யோனாவைப்போல தேவனைப் பற்றி முறுமுறுப்போம். பாவத்தின் தந்திரத்தினால் கடினப்பட்டுப்போவோம். விசுவாசியே பூமியின்மேல் சாராதே, சிநேகிதனை நம்பாதே, உன் திறமைகளின்பேரில் ஊன்றி நில்லாதே. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும் இப்படி ஜெபம்பண்ணு. 'என்னைத் தூக்கியெடும், அப்போது நான் சுகமாயிருப்பேன்'. உன் தேவனுடைய செவிகள் திறந்திருக்கின்றன, அவருடைய இருதயம் இளகினது, அவருடைய கரம் பலத்தது; நீ க்ஷேமமாயிருக்கவேண்டுமானால்: உன்னைத் தள்ளி உன் தேவனைப் பிடி.

தேவா, என்னைத் தூக்கி எடும்
என் குறைவை நீக்கிவிடும்
பெலவீனன் என்னைத்தாங்கும்
என்றும் பெலனாயிரும்.

'சமாதானத்தின் வழி'

ரோமர் 3:17

சமாதானம் பெரிய ஆசீர்வாதம். தேவனோடு ஒப்புரவா கிற சமாதானமானாலும் சரி, மனதிற்கு அமைதலைத்தரும் சமாதானமானாலும் சரி, நியாயப்பிரமாணத்தின்படி கிரியைகளினால் அது கிடையாது. நமக்குச் சமாதானம் வேண்டுமானால், ரட்சகருடைய வார்த்தையை நம்முடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர் ரட்சிக்க வல்லமையுள்ளவர், மனதுள்ளவர் என்று விசுவாசிக்கவேண்டும். தம்முடைய குமாரனைக்குறித்து தேவன் கொடுத்த சாட்சியை நம்பவேண்டும். தேவனுடைய பார்வையில் நம்மை அருவருப்பானவர்கள் என்று தள்ளவேண்டும். நமக்குத் தேவையான சகலத்துக்கும் எப்பொழுதும் இயேசுவையே பார்க்கவேண்டும். சகலத்தையும் அளவற்ற தேவ அன்புக்கு நித்தம் கையளிக்கவேண்டும். நாம் சமாதானத்தைக் காத்துக்கொள்ளவேண்டுமானால் வாக்குத்தத்தத்தை நம்பி, கட்டளைகளைக் கைக்கொள்ளவேண்டும். சீயோன் அரசனுக்கு உண்மையுள்ளவர்களாய்ப் பரமபிதாவோடு நித்தம் சம்பாஷிக்கவேண்டும். அவர் ஏற்பாடுகளின் வழியாய் அவரிடத்தில் போய், அவருடைய திவ்ய செயலை நம்பி, சுத்திகரிப்பின் ஊற்றண்டையில் சென்று, பரிசுத்தவான்களைக் கிறிஸ்துவின் சரீரமாகப் பாவித்து, அவர்களோடு ஒட்டிக்கொண்டு, கீழானவைகளின் மேல் ஆசை வையாமல், மேலானவைகளையே நாடவேண்டும். இதுதான் வழி, இதிலே நடவுங்கள்; இதை விட்டுவிட எந்தக் காரியத்தினாலும் ஏவப்படாதிருங்கள்; எந்த விதத்திலும் மற்றவர்களை இதினிடம் வந்து சேரும்படி இழுங்கள். கிறிஸ்துவாலே அல்லாமல் சமாதானமில்லை; ஆதலால் கிறிஸ்துவோடு ஒட்டியிருங்கள்.

கிறிஸ்துவாலே சமாதானம்,
சந்தோஷம் பாக்கியம்,
இதைப் பெற்றுத் தோத்தரித்து
மகிழ்வேன் ஜெபித்து.

'நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்'

சங்கீதம் 46:10

தேவ நடத்துதல் அடிக்கடி நம்மைக் கலங்கப்பண்ணுகிறது. அவருடைய வழி சமுத்திரத்திலும், அவருடைய பாதை ஆழ்ந்த தண்ணீர்களிலும் இருக்கிறது. அவருடைய காலடிகள் தெரியமாட்டாது, புத்தி கலங்கிப்போகிறது, விசுவாசம் தடுமாடுகிறது, அவரோ நம்முடைய பாவங்களை நீக்கி, நம்முடைய கூக்குரலை அமர்த்திப் பொறுத்திருங்கள் என்கிறார். ஆட்டுக்குட்டி கோனுன் பாதத்தில் கிடக்கிறதுபோல, நாம் அவருடைய பாதத்தண்டையில் இருக்கவேண்டும். தாயின் கரத்திலுள்ள பிள்ளைபோல நாம் அமர்ந்திருக்க வேண்டும். நம்மை அவர் சேதப்படுத்தமாட்டார், மற்றவர்கள் நம்மைச் சேதப்படுத்தவும் விடார்; அவர் மட்டற்ற ஞானமும், மாருத தயவும், என்றுமுள்ள ராஜரீகமும் உடையவர் என்று நாம் அறியவேண்டும். அவர் வானத்திலும் பூமியிலும் சமுத்திரத்திலும் தாழ்வான சகல இடங்களிலும் தமது சித்தப்படியே செய்கிறார். அவருடைய கையை அமர்த்தி அவருடைய சித்தத்தின்படி செய்யக்கூடாதென்று தடுப்பவன் யார்? அவருக்கு முன்பாக மவுனமாயிருப்பதே நமது கடமை. அவர் நம்முடைய தேவன், நாம் அவருடைய ஜனம்; அவருடைய இரக்கம் என்றுமுள்ளது, அவருடைய உண்மை தலைமுறை தலைமுறையாக நிற்கும். அவர் கிருபையுள்ளவரானபடியால் நாம் முறுமுறுக்கக் கூடாது. அவர் நமக்குப் பிதாவானபடியால் நாம் முறையிடலாகாது. அவர் உண்மையுள்ளவரானபடியால் நாம் பயப்படவேண்டியதில்லை. சகலத்தையும் அவருடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து, நம்மையும் அவ்ருக்குக் கையளித்து, இதோ இருக்கிறேன், உமக்குப் பிரியமானபடி எனக்குச் செய்யும் என்று சொல்லி, அவரிடத்தில் காத்திருப்போமாக.

பயமுண்டாகும் வேளையில்,
சோதனை சமீபத்தில்,
அவர் கோலின் கீழமைந்து,
யாவும் அவர்க்கொப்பித்து,
துன்பத்திலே மகிழ்வேன்;
இருட்டில் களிகூர்வேன்.

'தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதிருங்கள்'

2 கொரிந்தியர் 6:1

இந்த வாக்கியத்தில் தேவ கிருபை என்பது சுவிசேஷந் தான். அது அசுத்தருக்கும் அபாத்திரருக்கும் வெளிப்படுத் தப்பட்ட கிருபையைப் பிரஸ்தாபப்படுத்துதல்; அது தேவன் கிறிஸ்துவென்னும் புருஷரூபம் எடுத்துவந்தார் என்றும், அவர் பாடுகளையும், மரணத்தையும், நம்மை மரணத்தினின்று மீட்கும் ஆதாரமாகவும், நமக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கும் காரணமாகவும் ஏற்றுக்கொண்டார் என்றும், அவர் நம் முடைய சிநேகிதர் என்றும், நம்முடைய பாவங்களை நமக்குச் சாட்டமாட்டார் என்றும், பழையவைகள் எல்லாம் ஒழிந்து மறந்துபோனபடியால், நம்மைப் புதுச் சிருஷ்டியாகப் பாவிக்கிறார் என்றும், அவருடைய வசனத்தை ஏற்று கொண்டு, அவருடைய குமாரனை விசுவாசிக்கிறவர்களைத் தமக்குள் தேவநீதியாக்குவார் என்றும், இதை நமக்கு நிச்சயிக்கும்படி தம்முடைய ஸ்தானாதிபதிகளை அனுப்பி யிருக்கிறார் என்றும் நமக்குத் தெரிவிக்கிறது. இந்த நல்ல செய்தியை நாம் விருதாவாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. தேவன் நம்மோடு கோபமாயிருக்கிறார் என்று எண்ணுவோ மானால், அவர் நம்மைக் கிறிஸ்துவில் ஏற்றுக்கொள்வார் என் பதைப்பற்றி சந்தேகங்கொள்ளுவோமானால்; நம்மோடு கோப மாயிருப்பார் என்று பயப்படுவோமானால்; நாம் தேவ கிரு பையை விருதாவாய் ஏற்றுக்கொள்ளுகிறவர்களாவோம். விசு வாசிக்க நம்மைத் தைரியப்படுத்தவும், தம்முடைய வழிகளில் நம்மை ஜாக்கிரதையுள்ளவர்களாக்கவும் அவருடைய கிருபா சனத்தண்டையில் நம்மை இழுத்துக்கொள்ளவும், அவ ருடைய நாமத்தை நாம் நேசித்து சகல ஆட்சேபனைகளுக் கும் சமாதானஞ் சொல்லத்தக்கவர்களாகவும், தம்முடைய கிருபையை நமக்குத் தெரிவித்திருக்கிறார்.

சுவிசேஷத்தின் நற்செய்தி
எவ்வளவோ மதுரம்!
எந்த பாவிக்கும் திருப்தி
அதினால்தான் உண்டாகும்;
அக்கிருபையை நான் பெற்று;
கொடுப்பேன் என்னை முற்றும்.

'நான் கர்த்தருக்காகக் காத்திருப்பேன்'

ஏசாயா 8:17

கர்த்தர் தம்முடைய முகத்தை மறைத்தார்; அவருடைய தயவைக் கண்டுபிடிக்கக்கூடவில்லை; அவருடைய கோபத்தின் குறிகள் காணப்படுகின்றன. ஆனாலும் சபை அதை ரியப்பட்டுப்போகாமல், பயத்துக்கிடங்கொடாமல், இஸ்ரவேல் விட்டு விலகவுங்கூடாது. ஜெபத்தை அடக்கவும் கூடாது. அவருக்கு எதிர்பார்க்கவும் தீர்மானம்பண்ணுகிறது. மெய்யான விசுவாசிக்குத் தேவன் தம்முடைய முகத்தை மறைத்துக்கொள்ளுகிறது. பெரிய சோதனைதான். ஆகிலும் அவருடைய வாசலண்டை காத்திருந்து, அவர் திரும்பிவந்து மன்னிக்கிற அன்பைக் காண்பிப்பார் என்று அவருடைய கதவின் நிலையண்டையில் விழித்திருப்பது பெரிய சிலாக்கியம். நாம் நம்பிக்கையை விடவுங்கூடாது. கர்த்தருடைய வழிகளை விட்டு விலகவும்கூடாது, ஜெபத்தை அடக்கவும் கூடாது. அவருடைய உண்மையை நம்பி, உதவி செய்வார் என்று எதிர்பார்த்து விசுவாசத்தோடு காத்திருப்பது நம்முடைய கடமை. கர்த்தருடைய வசனத்தில் நாம் வைக்கும் விசுவாசம் எதினாலும் பெலவீனப்படாமலும், அவருடைய ஆசனத்தினின்று எந்தக் காரியமும் நம்முடைய ஆத்துமாவை விலகச் செய்யாமலும் இருக்கவேண்டும். கிருபையைக் காட்ட அவர் ஏற்ற சமயத்துக்குக் காத்திருக்கிறார், நாம் ஆறுதலடைந்து விடுவிக்கப்படவேண்டுமானால், அவருடைய நேரத்துக்கு நாம் காத்திருக்கவேண்டும். கர்த்தருக்குக் காத்திருந்து அவருடைய வழியைக் கைக்கொள். எஜமான் வரக் காத்திருக்கும் வேலைக்காரனைப்போல, மணவாளனுடைய அன்பின் குறிகளுக்காகக் காத்திருக்கும் மணவாளனுடைய அன்பின் குறிகளுக்காகக் காத்திருக்கும் மனையாட்டியைப்போலக் காத்திரு, அவர் சொல்லுகிறது என்ன? இதோ நான் சீக்கிரம் வருகிறேன்; விழித்திருக்கிறவன் பாக்கியவான். காத்திருக்கும் தன்மை எவ்வளவோ பாக்கியமுள்ளது.

இயேசுவே என் சமீபத்தில்
நின்றெனக்கு திடன் சொல்லும்,
சோதனை உண்டாகும் வேளையில்
நின் காத்தால் என்னை மூடும்;
அப்போது நான் பயப்படேன்
பாவம் பேயையும் ஜெயிப்பேன்.

'இன்னும் தப்புவிப்பார்'

2 கொரிந்தியர் 1:10

எத்தனை விசை தேவன் நம்மைத் தப்புவித்தார்? எத்தனை மோசங்களினின்று எத்தனை வகையாய்த் தப்புவித்தார்? அப்படித் தப்புவித்தவர் இப்போதும் தப்புவிக்கிறார்; இனிமேலும் தப்புவிப்பார் என்று அவருக்குள் நம்பியிருக்கிறோம். பரிசுத்த ஆவியின் கிரியையினால் ஆத்தும மரணத்தினின்று நம்மைத் தப்புவித்தார். தமது குமாரனுடைய பலியால் நித்திய மரணத்தினின்றும் தப்புவித்தார். நாம் மரித்தோம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனுக்குப் பிழைத்திருக்கிறோம். ஆத்தும மரணமாகிய பெரிய தீங்கினின்று நம்மை விடுவித்தவர். ஒரு சிறிய மோசத்தினின்றும் விடுவிக்கமாட்டேன் என்று சொல்லார். நாம் அவரை நம்பி, அவர்பேரில் சார்ந்து, அவர் விடுவிப்பார் என்று எதிர்பார்த்திருப்போமாக. நீதிமான்களுக்கு அநேக துன்பங்கள் உண்டு; அவைகள் எல்லாவற்றிலுமிருந்து கர்த்தர் அவர்களை விடுவிப்பார். நீதிமானைச் சோதனையினின்று விடுவிக்கும் வகையை அறிந்திருக்கிறார். கர்த்தரே எனக்குத் துணையாய் நின்று என்னைப் பலப்படுத்தினார். சிங்கத்தின் வாயிலிருந்து ரட்சிக்கப்பட்டேன்; கர்த்தர் எல்லாத் தீமைகளிலுமிருந்து என்னை ரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும் படி காப்பாற்றுவார். அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக, ஆமென். முடிவு மட்டாகத் தம்முடைய கிரியையை நடத்த அவருக்கு மனமிராவிட்டால் அவர் அதைத் தொடங்கமாட்டார். அதற்கு என்ன இடையூறுகள் நேரிடுமென்று அவர் நன்றாய் அறிந்திருந்தார். அதைத் தொடங்கினவர் கிறிஸ்து இயேசுவின் நாளில் அதை முடிப்பார். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர்.

நான் ஆளவேண்டுமானால்,
திடன் எனக்குத் தாரும்
உமது வாக்குண்டானால்
என்றும் நிலைப்பேன் பாரும்.

‘பூமியிலே நான் பரதேசி’
சங்கீதம் 119:19

சிநேகிதரே, நாம் இந்தப் பூமியில் நம்முடைய பிதாக்களைப்போல அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம். நம்முடைய நாள் நிழலைப்போலிருக்கிறது; நாம் இங்கே தங்கித் தரிப்பதில்லை. நாம் உயரத்திலிருந்து பிறந்தவர்கள்; மகிமைக்கென்று தீர்மானிக்கப்பட்டவர்கள். நம்முடைய வீட்டிற்குத் தூரமாயிருக்கிறோம்; நம்முடைய இனத்தார் அங்கேதான் இருக்கிறார்கள். நம்முடைய பொக்கிஷமும் நம்முடைய இருதயமும் அங்கேதானிருக்கிறது; இங்கே நமக்கு நிலையுள்ள இடமில்லை. கனியற்ற அந்தகாரக் கிரியைகளோடு ஐக்கியப்படாமல் அவைகளைக் கண்டிக்கவேண்டும். நமக்கு அநேக வருத்தங்கள் உண்டு; வேதவசனந்தான் நமக்கு வெளிச்சம், நமக்குப் போஜனம், நமக்குச் சந்தோஷம், நமக்குச் சட்டம். நம்மை நடத்துகிற ஒருவர் வேண்டும், நம்மைக் காப்பாற்றுகிறவரும் வேண்டும், நமக்குத் துணையாய் வந்து நமக்கு ஆறுதல் படுத்துகிறவரும்வேண்டும். இயேசு இப்படியெல்லாம் இருப்பேன் என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். நாம் வாசம் பண்ணுகிற தேசத்தின் சமாதானத்திற்காக ஜெபம் பண்ணவேண்டும். அதினுடைய காரியங்களில் தலையிட்டுக்கொள்ளாமல் நாம் துண்டாயிருக்கவேண்டும். எந்த நன்மைக்கும் நன்றியறிதல் உள்ளவர்களாய் நம்முடைய ஆசைகளை மேலே வைக்கவேண்டும். நாம் பொறுமையற்றவர்களாய் இருக்கவுங் கூடாது; பரத்துக்குப் போகிறதைப்பற்றி மனமற்றவர்களாய் இருக்கவுங் கூடாது, பிதாவின் சித்தத்துக்கு மற்றவர்களாய் இருக்கவுங் கூடாது, பிதாவின் சித்தத்துக்கு அமைந்து, வருகிற தீமையை நம்முடைய பரம தேசத்தோடும் பரதேசிகளுமாய் மாம்சத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியிருக்கவேண்டும்.

இங்கே நான் பரதேசி,
என் பொக்கிஷம் அங்கேதான்.
நான் என்றும் மோட்சவாசி,
அங்கேபோய் நான் சேர்வேன்தான்.
வானதூதர் அழைக்கிறார்,
இயேசுவும் வா என்றார்.

மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்'

1 கொரிந்தியர் 1:30

நம்மைக்குறித்து, நம்முடைய பிறப்பைக்குறித்து, நம்முடைய ஆஸ்தியைக்குறித்து, நம்முடைய இன்பங்களைக் குறித்து, நம்முடைய செய்கைகளைக்குறித்து நாம் மேன்மை பாராட்டுவது சரியல்ல. கர்த்தரில்மாத்திரம் நாம் மேன்மை பாராட்டலாம். அவர் கிருபையுள்ளவர், இரக்கம் நிறைந்தவர், தம்முடைய அன்பையும் உருக்க இரக்கத்தையும் பூமியில் பாராட்டுகிறவர் என்று நாம் மேன்மை பாராட்டலாம். தம்முடைய ஜனங்களுக்குத் தேவனும், அவர்கள் பங்கும், அவர்கள் சிநேகிதருமாயிருக்கிறார் என்று மேன்மை பாராட்டலாம். நமக்காக எவ்வளவோ வைத்திருக்கிறார், எவ்வளவோ நமக்குக் கொடுத்திருக்கிறார், இன்னமும் சந்தேகமின்றி நமக்குத் தேவையானதைத் தருவார் என்று அவரைக்குறித்து மேன்மை பாராட்டலாம். நம்முடைய பாவங்களுக்காக மரித்து, நம்முடைய நீதிக்காக உயிர்த்து, நமக்காகப் பரிந்துபேசப் பரத்துக்கேறி, நம்முடைய பேரால் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுகிற இயேசுவில் நாம் மேன்மை பாராட்டலாம். அவரோடு நமக்கிருக்கும் சம்பந்தத்தைக்குறித்து, அவரால் நமக்குக் கிடைக்கிற நன்மையைக்குறித்து, அவரோடு நாம் ஒன்றாயிருக்கிறதைக்குறித்து நாம் மேன்மை பாராட்டலாம். கிறிஸ்துவோடு ஒன்றாயிருக்கிறது, அவர் மூலமாய்ப் பிதாவோடு ஒன்றாயிருக்கிறது; இதுதான் நமக்கு மகிமை. நாம் பிதாவுக்குச் சுதந்தரவாளிகள்; கிறிஸ்துவோடு உடன் சுதந்தரவாளிகள். அநேகருடைய துதி தோத்திரத்தால், பூரண கிருபை தேவமகிமைக்கேற்றதாகும்பொருட்டு, சகலமும் நமக்காக இருக்கிறதென்று நாம் மேன்மைபாராட்டலாம். சிநேகிதரே, நாம் கர்த்தரில், அவருடைய இலவசமான கிருபையில், நித்திய அன்பில், நன்றாய் ஒழுங்குபடுத்தப்பட்ட உடன்படிக்கையில், விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களில், பிரகாசமுள்ள மாளிகைகளில், மகிமை பொருந்திய நாமத்தில் மேன்மை பாராட்டுவோமாக. கர்த்தரில் நாம் இப்போது மேன்மை பாராட்டுவோமானால் அதைப்பற்றி ஒருபோதும் துக்கப்படோம்.

இயேசுவில் என் ரட்சிப்புண்டு
அவரில் நான் மகிழ்வேன்,
அவர் கரங்களில் நகைப்பேன்
பறிப்பவரற்றிருப்பேன்
ஆக்கினைக்கு நீங்கலானேன்,
நீதியாலே மூடப்பட்டேன்.

'இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள்'

எபிரெயர் 6:9

இவைகள் என்னவென்று விசாரிப்போம்; இவைகள் நமக்கு உண்டா? ஆவிக்குரிய ஜீவன். இது உண்டென்பதற்கு திருஷ்டாந்தம், பாவத்தைப்பற்றின உணர்வு, பாவவெறுப்பு, பாவத்தினின்று விடுதலையாகத் தேவனைப் பார்த்துக் கெஞ்சுதல், பாவத்தைப்பார்த்து நடுங்கி தேவமகிமைக்காகச் சிந்தைகொண்டிருக்கிற மிருதுவான மனச்சாட்சி. எங்கே தேவநாமத்தைக் கனவீனப்படுத்துகிறோமோ, அவருக்கு அபகீர்த்தியுண்டாக்கி அவருக்கு விசனத்தை மூட்டுகிறோமோ என்று பயப்படுகிற பிள்ளைக்குரிய பயம், பரிசுத்தம் நம்முடைய இருதயத்திலும் நடக்கையிலும் விளங்கவேண்டுமென்கிற விசேஷித்த கவலை, பாவத்தினால் நொறுங்கின இருதயம், அதோடு தேவனுக்கு முன்பாக விடுகிற கண்ணீர், ஜெபத்தில் ஆசை, இருதயத்திலிருந்து ஏக்கத்தோடு பிறக்கும் தேவனைப்பற்றும் வாஞ்சை, அதில்லாவிட்டால் தோன்றும் மனக்கஸ்தி—நம்முடைய நோக்கங்கள் உண்மையாய், யோக்கியமாய் இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் உள்ளான கேட்டினால் வழி தப்பிப்போவோமே என்கிற கவலை, பரிசுத்த நடத்தையோடு சேர்ந்த பயம், கிருபையின் எத்தனங்களில் சுறுசுறுப்பு, வேத வசனங்களை ஆராய்ந்து நம்முடைய சரியான நிலைமை இன்னது, கர்த்தருடைய சித்தமின்னது, நம்முடைய கடமை இன்னது என்று அதினால் அறிந்துகொள்ளுதல், நம்முடைய பெலவீனம், குறைவு, நிர்ப்பந்தம் இவைகளைப்பற்றி மென்மேலும் அதிகரிக்கிற அறிவு. இவைகளை உடையவன் முற்றிலும் விழுந்து கெட்டுப்போகான்.

என் எளிமையைக் காட்டும்,
விசுவாசத்தைக் கூட்டும்,
அறிவில் நான் வளர்ந்து
கிருபையிலே தேர்ந்து,
சிலுவையில் மகிழ்வேன்,
மற்ற யாவும் தள்ளுவேன்.

‘ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்’

தீமோத்தேயு 4:10

ஜீவனுள்ள தேவன் என்கிற மொழி சாகிற உலகத்திற்கும், நம்முடைய செத்த நிலைமைக்கும், செத்துப்போகிற நம்முடைய சிநேகிதர்களுக்கும் எதிரிடையானது. இவைகளை நம்பவேகூடாது, நம்பினால் கெட்டுப்போவோம். நம்முடைய தேவனையோ நம்பலாம், நம்பவேண்டும். கிறிஸ்தவன் நம்பத்தக்க சரியான பொருள் அவரே. நாம் கேட்கிறதற்கும், நினைக்கிறதற்கும் மேலாக, அதிக சம்பூரணமாய்க் கொடுக்கக்கூடியவர். அவர் மாறாதவர். பாவியின் நம்பிக்கை அவர் வசனத்தின்மேல் வைக்கப்பட்டிருக்குமேயானால் அதை ஒருபோதும் அபத்தமாக்கமாட்டார். விடுதலைக்காவது ஒத்தாசைக்காவது கெஞ்சுகிற விசுவாசியின் விண்ணப்பத்தை அசட்டைபண்ணார். ஜீவனுள்ள தேவனை நம்பியிருப்போமானால் , நாம் வெட்கமடையவேமாட்டோம். நம்மையாவது, மற்றவர்களையாவது நொந்துகொள்ளவேமாட்டோம். அநேக மோசங்களுக்குத் தப்புவோம். தேவன் கூறியிருக்கும் சாபத்திற்கு விலகுவோம். ஜீவனுள்ள தேவனை நம்புவோமானால் நாம் பாக்கியர்; கனி கொடுப்போம், அடிமைக்குரிய பயங்களுக்கு நீங்கலாவோம்; பூரண சமாதானத்தை அனுபவிப்போம். நமக்குக் குறைவிருக்கமாட்டாது, எந்தப் புசலிலும் ஒதுக்கிடங் கிடைக்கும். நம்மை நிந்திக்கிறவர்களுக்கு உத்தரவு சொல்லத் தகுந்தவர்களாயிருப்போம். உறுதியும், ஸ்திரமும், நமக்கு அனுபவமாயிருக்கும். நிலையுள்ள பாக்கியத்தை அனுபவிப்போம். ஜீவனுள்ள தேவனை நம்பி யிருக்கிறோமா என்பதை நிச்சயித்துக்கொள்ளுவோமாக. தினந்தோறும் பிழைக்கக் கிருபை தேடுவோமாக. கர்த்தரை நம்புகிற மனுஷன் பாக்கியவான், அவன் சுகமாயிருப்பான், செழிப்பாயிருப்பான். பாக்கியசாலியாயிருப்பான்.

வலிமை இரக்கமும்
உம்மிடத்திலுள்ளதால்,
என் ஆவி உன்னை நம்பும்
உமது நாமம் போற்றும்.
நீர் என் சகாயராவீர்,
என்னை முற்றும் தற்காப்பீர்.

'என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணுதே'

எபிரெயர் 12:5

கர்த்தர் நம்மைப் பிள்ளைகளாகப் பாவித்துப் பேசுகிறார். நம்முடைய துன்பங்களைக்குறித்துப் பேசுகிறார். அவைகள் தண்டனைகள். அன்பினால் அனுப்பப்பட்டவைகள். நாம் தண்டிக்கப்படும்பொழுது கர்த்தரால் நியாயந்தீர்க்கப்படுகிறோம். உலகத்தோடு ஆக்கினைக்குள்ளாகாதபடிக்குத்தான். அவைகளை அசட்டை செய்யவுங்கூடாது, அவைகளால் சோர்ந்துபோகவுங்கூடாது. அவைகள் அவசியமில்லையென்றாவது, அவைகள் வராவிட்டால் நல்லது என்றாவது நினைக்கும்போது, அவைகளை அசட்டைசெய்கிறோம். அவைகள் அனுப்பப்பட்ட காரணத்தை விசாரியாமல் போகும்போதாவது, அவகைளால் கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்களைக் கற்றுக் கொள்ளாமல் போகும்போதாவது அவைகளை அற்பமாய் எண்ணுகிறோம். நம்மைத் தண்டிக்கிறதற்கு கர்த்தருக்கு நியாயமுண்டு, அவர் அன்பினால் அப்படிச் செய்கிறார். ஞானமாய், தகுந்த வேளையில் தகுந்த வகையாய், அவசியமான காலமட்டும் நம்மைத் தண்டிக்கிறாரென்று அறிக்கையிடாமல் போனோமானால் அவைகளை அசட்டை செய்கிறவர்களாயிருப்போம். மனச் சந்தோஷமாய், அல்லது அமரிக்கையாய் அதற்குக் கீழ் அடங்காமல், துன்பக்காலத்திலும், துன்பத்திற்குப் பிறகும் தேவனை மகிமைப்படுத்தாமல் இருப்போமானால், அவைகளை அசட்டை செய்கிறவர்களாயிருப்போம். துன்பத்தினாலே, அறிவிலும், பரிசுத்தத்திலும், ஆவிக்குரிய ஜாக்கிரதையிலும் தேர்ச்சியடையாமல் இருப்போமானால், அவைகளை அசட்டை செய்கிறவர்களாயிருப்போம். மாம்ச சிந்தையுள்ளவர்களாய், நமக்குப் பிரியமானதைத் தேடித் துன்பத்தினின்று விடுதலையாகப் பார்ப்போமானால், அவைகளை அசட்டை செய்கிறவர்களாயிருப்போம். இப்படிப்பட்ட எந்த வகையிலும் தேவதண்டனையை அசட்டை செய்யாதபடி பார்ப்போமாக. துன்பகாலத்தில் தேவனை மகிமைப்படுத்துவது நமது கடமை; தேவன் நம்மைப் பிள்ளைகளைப்போல் நடத்துகிறாரே.

என் பாவங்களுக்கு நீர்
என்னைத் தண்டிப்பதுண்டானால்,
என்னை அன்பாய்த் திருத்துவீர்
உம்மிடத்தில் என்னைச் சேர்ப்பீர்.

'கர்த்தர் என்மேல் நினைவாயிருக்கிறார்'

சங்கீதம் 40:17

கர்த்தர் எவ்வளவு பெரியவரென்றும், மகிமைபொருந்தியவரென்றும், மனிதன் எவ்வளவு அற்பன், சிறியவன் என்றும் கவனிக்கும்போது கர்த்தர் நம்மை நினைத்து நம்மை ஆசீர்வதித்து, நம்மோடு வாசம்பண்ணுவாரா என்று ஆச்சரியத்தோடு கேட்க ஏவப்படுகிறோம். ஆம் அப்படியே செய்வார்; அப்படிச் செய்வேன் என்று தம்முடைய வசனத்தில் வாக்குக் கொடுத்திருக்கிறார்; அவர் நம்மைப்பற்றியே நினைவுகொண்டிருக்கிறார் என்று சொல்லியுமிருக்கிறார்; நம்மைப்பற்றி நினைக்கிறபடியால் நமக்கு வேண்டியதைத் தருகிறார், சத்துருக்களினின்று உம்மைத் தற்காக்கிறார், தம்முடைய வழிகளில் நம்மை நடத்துகிறார், தம்முடைய ராஜ்யத்திற்கும், மகிமைக்கும் நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகிறார். நாம் எதிர்பார்க்கிறபடியே, அவருடைய நினைவுகள் சமாதானத்துக்குரியவைகளே ஒழிய, தீமைக்கு ஏதுவானவைகள் அல்ல. இரவும் பகலும், இருட்டிலிருந்தாலும் வெளியே இருந்தாலும் நம்மைத் தம்முடைய பிள்ளைகளைப்போல் அன்பாய் நினைக்கிறார். தம்முடைய சிநேகிதரைப்போலப் பிரியத்தோடு நினைக்கிறார், தம்மை அண்டியவர்களானபடியால், நம்மை ஆசீர்வதிக்க வேண்டுமென்று நினைக்கிறார். ஒருவேளை இரக்கங்காட்டுவார், நமக்கு ஏதாவது கொஞ்சம் செய்வார் என்று நாம் நினைக்கிறோம். பூமிக்கு வானம் எவ்வளவு உயர்ந்திருக்கிறதோ, அவ்வளவாய் அவருடைய நினைவுகள் நம்முடைய நினைவுகளுக்கு மேலானவைகள். அவருடைய நினைவுகள் தேவதன்மைக்கேற்றது, அவருடைய வாக்குத்தத்தங்கள் நம்முடைய பாஷையில் வெளிப்படுத்தியிருக்கிற அவர் நினைவுகள்தான். அவைகள் என்னத்தை ரூபிக்கிறது? நம்முடைய சகல குறைவுகளையும், ஆசைகளையும் விருப்பங்களையும், முன்னேதானே யோசித்து, அவைகளை நிறைவேற்றத்தக்க வகைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் என்பதை நிச்சயமாய் ரூபிக்கிறது.

நன்றியுள்ள மனம் தாரும்,
உமது தயவைக் காட்டும்,
உமது நேசத்தின் ஆழம்
உயரம் நீளம் அகலம்,
நான் அறிந்துணரட்டுமேன்
எனதன்பும் பாயட்டுமேன்.

'இனிமேல் அறிவாய்'

யோவான் 13:7

நம்முடைய காரியங்களில் அநேகம் நமக்கும் விளங்காதபடியால், கர்த்தர் ஏன் இப்படிச் செய்கிறார் என்று நாம் திகைத்து நிற்கிறதுண்டு. இப்பொழுது நாம் அறியாததை இனிமேல் அறிந்துகொள்ளுவோம். ரட்சகர் இப்படிச் சொல்லுகிறார். இதினால் ஆறுதல் அடைந்து, சீக்கிரம் அது நமக்குத் திருப்தியாய் நிறைவேறுமென்று எதிர்பார்ப்பது நமது கடமை. ரட்சகர் வருமுன்னே சிலது நமக்கு விளங்கும்; பிறகு எல்லாம் நமக்குத் தெரியவரும். விளங்காதது தெளிவாகும்; தேவ நடத்துதலுக்கெல்லாம் காரணமும் தெரியவரும். பொறுமையோடு கர்த்தருடைய நேரத்திற்குக் காத்திருப்போமாக. அவர் சீக்கிரம் வருவார், பிதாவின் சித்தத்திற்கு அமைதலோடு கீழ் அடங்குவோமாக. அவர் ஞானமாயும் பட்சமாயும் செய்தாரென்று பிறகு காண்போம். தம்முடைய நோக்கங்களைப் பூரணமாய் நிறைவேற்றுமட்டும் தாம் செய்கிறதற்கு முகாந்தரத்தை மறைத்துவைக்க அவருக்கு அதிகாரமுண்டென்று நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். கடந்துபோன யாவற்றிற்கும் அவரைத் துதித்து, வரப்போகிற யாவற்றிற்கும் அவரை நம்புவோமாக. இப்பொழுது கண்ணாடியில் நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்வேன். கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தம்முடைய அன்பிற்கும், கிறிஸ்துவுக்காகப் பொறுமையாய்க் காத்திருக்குதலுக்கும் நடத்துவாராக.

நீர் என்னை நடத்துவீர்
என்மேல் கவலைகொள்வீர்,
எனக்கு நீர் மறைத்தும்
நின்செயல் ஞானம் முற்றும்,
எல்லாம் உமது கரம்
நடத்துவது என் பாரம்.

‘தமது உடன்படிக்கையை என்றைக்கும் நினைப்பார்’

சங்கீதம் 29:11

கர்த்தருடைய ஜனங்கள், தேவன் தங்கள் உடன்படிக்கையின் தேவனென்றும், அவர் கிறிஸ்துவானவர் முடித்த கிரியையின் மூலமாய்த் தங்களோடு ஒப்புரவாகி, சமாதானப்பட்டுத் தங்களோடு வாசம்பண்ணுகிறவராக அறிந்துகொள்ளுகிறார்கள். அவர் அவர்களோடு ஒரு உடன்படிக்கை செய்திருக்கிறார்; அது அவர்களுக்கு அனுகூலமானது. அதினின்றுதான் அவர்களுக்கு வேண்டிய ஆசீர்வாதங்கள் பாய்கிறது; அதின் மேலேதான் அவர்கள் நம்பிக்கை வைக்கப்பட்டிருக்கிறது; இந்த உடன்படிக்கையை தேவன் எப்பொழுதும் நினைக்கிறார். கிறிஸ்து நம்முடைய பிணையாளியாகச் செய்ய ஏற்பட்ட காரியங்கள், தம்மை நமக்குப் பிதாவாக அவர் காட்டப் பிரியப்படுகிற சம்பந்தம், ஏழைப் பாவிகளாக நம்மை அவர் கண்டுபிடித்த நிலைமை, தம்முடைய மகிமைக்கும் நம்முடைய அவசரத்திற்கும் வேண்டியிருந்ததை அவர் சம்பாதித்தது, நமக்கு அவர் செய்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குச் செய்த வாக்குத்தத்தத்தில் அடங்கியிருக்கிறதென்றும், நம்மோடு கோபமாயிரோமென்று நம்மோடு அவர் செய்த ஆணை, அந்த ஆணையை உறுதிப்படுத்த பலியாய்த் தம்மை தந்த அவருடைய குமாரனுடைய ரத்தம், நம்முடைய நித்திய ரட்சிப்பினால் தம்முடைய மகிமை நிறைந்த லட்சணங்களை வெளிப்படுத்தவேண்டுமென்று அவர் கொண்ட நோக்கம். இவைகளை அவர் மறக்கிறவரே அல்ல, நம்முடைய உடன்படிக்கையை அவர் நினைத்துக்கொண்டே இருப்பார். அதை மறக்கவேமாட்டார், அதற்கு விரோதமாய் ஒன்றுஞ்செய்யார். கடைசிபரியந்தம் அதை உறுதிப்படுத்துவார், சிநேகிதரே! நாமும் அவருடைய உடன்படிக்கையை எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கக கடவோம்.

வானம் நீங்கிக் கடல் பொங்கி
மலைகள் பேர்ந்துபோனாலும்,
மீட்பவர் கரம் காப்பாற்றும்
அவர் கை நம்மை யாற்றும்,
நமக்காய் மரித்துயிர்த்தார்
சத்துருக்களெல்லாம் வென்றார்.

'நீங்கள் என் சமீபத்தில் வாருங்கள்'

ஏசாயா 48:16

விசுவாசியின் சுகமும், கர்த்தரின் பிரியமும் இரண்டும் ஒன்ருய்ச் சேர்ந்திருக்கிறது. அவருக்குச் சமீபமாயிருந்தால் தான் க்ஷேமமாயிருப்போம். நாம் அவரோடு ஒட்டியிருந்தால் தான் அவருக்குப் பிரியமிருக்கும். நம்மைத் தம்முடைய பிள்ளைகளாக, ஜனங்களாக, நெருங்கின சம்பந்தத்தில் சேர்த் துக்கொண்டார். அவரோடு நமக்கிருக்கும் ஐக்கியத்தை நேர்த்தியான உபமானங்களால் காட்டியிருக்கிருர். திராட்சை செடியிலுள்ள கொடிகள், சிரசோடு சேர்ந்த அவயவங்கள், அஸ்திவாரத்தின்மேல் நிற்கும் கட்டடம். அவர் நாமம் நமக் குப் பலத்த அரண். அவருடைய குமாரன் நமக்கு வேண்டிய தைக்கொடுக்கும் ஊற்று. அவருடைய மறைவான ஸ்தலம் நம் முடைய வீடு, அவருக்குச் சமீபமாய் வாசம் பண்ணுவோ மாஞல், இனிமையான ஆறுதலை அனுபவித்து, சொல்லி முடியாத சமாதானத்தைப்பெற்று, நிறைவான சுயாதீனத் தைக் கண்டடைந்து, சுகத்தையும், இளைப்பாறுதலையும் உடை யவர்களாவோம். அவருடைய சமுகத்தில் இருந்து நமக்கு வெளிச்சம், பரிசுத்தம், பெலன், உறுதி, எல்லாம் வருகிறது அவருக்குத் தூரமானேமாஞல் நிர்ப்பந்தராய்க் கெட்டழிந்து போவோம். யாக்கோபு தன் அருமையான குமாரனை அழைத் ததுபோல, இன்றைக்கு நம்மை என் சமீபத்தில் வாருங்கள் என்றழைக்கிருர். அந்தக் கோத்திரப்பிதா தன் பிள்ளையை ஆசீர்வதித்ததுபோல, இவர் நம்மை ஆசீர்வதித்து, தம்மை நமக்கு வெளிப்படுத்தி, தம்முடைய உடன்படிக்கையின் ரகசி யத்தை நமக்குக் காட்டி, தம்முடைய வசனத்தையும் சித்தத் தையும் நமக்குத் தெரியப்படுத்தி, எல்லாத் தீங்கினின்று நம் மைக் காப்பாற்றி, கிருபையால் நம்மை நிரப்பி, தம்முடைய சாயலுக்கு நம்மை ஒப்பாக்கவேண்டுமென்று விரும்புகிருர். ரட்சகரே, இந்த நாளில் எனக்குச் சமீபமாயிரும், என்னை உமக்குச் சமீபமாய் வைத்துக்கொள்ளும்.

பயம் என்னை மூடும்போது
உம் காயம் வந்தடைவேன்,
நல் ஒதுக்கு சமாதானம்
அங்கே நான் கண்டடைவேன்;
என்னை உமக்கொப்புவிப்பேன்
நீர் சொல்லும், கேட்பேனென்பேன்.

'மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்'
வெளிப்படுத்தின விசேஷம் 22:20

இப்படிச் சீக்கிரம் வருகிரேனென்று சொல்லுகிறவர் யார்? பயமுறுத்துகிற சத்துருவா? அந்நியனா? இல்லை; நாம் நேசிக்கிற இயேசு. நம்மைச் சந்தோஷப்படுத்த இப்படிச் சொல்லுகிறார். அவர் இம்மானுவேல், நீதியிலும், நியாயத்திலும், அன்பிலும், இரக்கத்திலும், உண்மையிலும் நாம் அவருக்கு மனைவியாக வாக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறோம்; இவர் நம்முடைய ரட்சகர். தம்முடைய மரணத்தால் நம்மை ரட்சித்து, தம்முடைய ஜீவனால் நம்மைக் காக்கிறவர். இவர் சீக்கிரம் வருவார். இவர் வருகிறதற்கு நாள் செல்லாது. நம்மைத் தம்மிடமாய்சேர்த்துக்கொள்ளச் சந்தோஷத்தோடும் மகிழ்ச்சியோடும் வருவார். மெய்யாகவே சீக்கிரம் வருகிறேனென்கிறார், இது தமக்குச் சந்தோஷமல்லவா? பரிசுத்தத்தோடு அவர் வருகையை எதிர்பார்க்க இது நம்மை எழுப்பிவிடவேண்டுமா? நம்முடைய துன்பங்களுக்கு முடிவுசெய்ய, நம்முடைய முறைப்பாடுகளை அமர்த்த, தம்முடைய சாயலுக்கு நம்மை ஒப்பானவர்களாக்க தமது அன்பினால் நம்மை நிரப்ப, தமது மகிமையால் நம்மை அலங்கரிக்க, நமக்கு வேண்டிய கிருபையை அவர் கொண்டுவருகிறார். நாம் சபையோடு சேர்ந்து ஆமென், அப்படியே வாருமென்று சொல்லுகிறோமா? அல்லது அவர் வருகையைப்பற்றி ஏனோ தானோவென்றிருக்கிறோமா? அவர் சொல்லுகிறதென்ன? 'இதோ, சீக்கிரம் வருகிறேன், தன் மானம் காணப்படத்தக்க நிருவாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்.' தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருப்போமாக. அவர் நம்மை மீட்கும்படி வருகிறார். அவர் வரும்போது நம்முடைய இரட்சிப்பு பூரணமாகும்.

காலம் கழியட்டுமேன்
என் ரட்சகர் வரும்நாள்,
கிட்டித்தான் சேரட்டுமேன்
மகிமையாசனத்தில்,
வீற்றிருந்து தம் தாசர்
வரட்டுமென்றழைப்பார்.

ஆகஸ்டு-மீ 8-உ.

'ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்'

ரோமர் 13:8

ஐசுவரியவானாகை விரும்பி, வீண் எண்ணங்கொள்ளுகிறது கிறிஸ்து மார்க்கத்துக்கு விரோதம். கடனுக்குள்ளாகிறது, களவு, கொலை முதலிய பாவங்களைப்போலொத்த பாவம். ஒவ்வொரு விசுவாசியும் தன் வரவுக்குள்ளாக ஜீவனம் பண்ணவேண்டும். செலுத்தத் தன்னாலாகாத கடன்களைப்பட்டு மார்க்கத்துக்கு அபகீர்த்தியுண்டாக்கக்கூடாது. அப்படிச் செய்திருப்பானாகில் தன்னை மிகவும் தாழ்த்துகிறதுமல்லாமல், தேவனுக்கு முன்பாகத் தன் குற்றத்தை அறிக்கையிட்டு, தன் வாக்கை நிறைவேற்றச் சக்திக்காக கெஞ்சவேண்டும். மற்றவர்கள் பார்வைக்கு டம்பமாயிருப்பது அவசியமல்ல, தன் ரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை அலங்கரிப்பது அவசியம். கடன்பட்டு அதினால் துக்கப்படாமல், மனம் நொந்து அதினின்று விடுதலையாகப் பாராமலிருக்கிறவன், என்னதான் சொன்னாலும் சந்தேகத்துக்குரியவன். நம்முடைய தேவன் தம் பேரைத் தரித்திருக்கிற யாவருக்கும் சொல்லுகிறதென்ன? 'அன்புகூருகிற கடனே யல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாமலிருங்கள்.' கடன் செலுத்துவதில் கிறிஸ்தவன் ஜாக்கிரதையுள்ளவனும், குறித்த நேரத்தில் செலுத்துகிறவனுமா யிருக்கவேண்டும். அவன் சொல் தஸ்தவேசுபோல் உறுதியும், அவன் வாக்கு ஆணையைப்போல் நிலையுள்ளதுமாயிருக்கவேண்டும். தம்முடைய ஜனங்களுக்குள் தேவன் முற்காலத்தில் இருந்த உண்மையைத் திரும்பக் கொடுப்பாரானால் எவ்வளவு நலம். அவர்கள் வாக்குக்கொடுக்கத் தாமதித்து, நிறைவேற்றத் துரிதப்பட்டு, கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுவார்களானால் எவ்வளவு பாக்கியம். கடன்படுகிறதை வெறுத்து, அதில் விழாதபடிக்கு அவர்கள் கவலைப்படுவார்களாக.

கிறிஸ்து நாமம் தரித்தோர்
உண்மையாய் நடப்பவர்;
ஆட்டுக்குட்டியைப் பின்செல்வோர்
யாவற்றிலும் யோக்கியர்;
ரட்சகரின் சொல் காப்பவர்,
அநியாயத்திற்கே அஞ்சுவர்.

'அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிப்பார்'

கலாத்தியர் 1:4

உலகமுழுவதும், மோளோகுக்குப் பொருத்தனேப்பண்ணப்பட்ட பிள்ளை அதின் கையில் கிடப்பதுபோல, பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. அல்லது சவம் கல்லறையில் கிடக்கிறதுபோல் கிடக்கிறது. அதின்மேலே, 'இங்கே அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறது' என்று எழுதியிருக்கிறது. நாம் முன்னே பாவத்தில் செத்து கேட்டுக்குள் அடக்கம்பண்ணப்பட்டோம், இயேசு நமக்காக புறப்பட்டு வந்தார்; நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தப்படி நம்மை விடுவிக்கும்படிக்கு நம்முடைய பாவங்களுக்காகத் தம்மை ஒப்புக்கொடுக்கிறார். உலகம் பொல்லாதது, ஆதலால் அதினின்று நாம் விடுவிக்கப்பட வேண்டும். அதின் சிந்தையினின்று நம்மை மீட்டுவிட இயேசு மரித்தார். சுபாவ நிலைமையில் இருக்கும்போது அது நம்மை ஆண்டுவந்தது; லோகநேசத்தைவிட்டு மீட்க மரித்தார்; அது தேவனுக்குப் பகை. உலகத்தில் மனத்திருப்தியைத் தேடாதபடிக்கு மரித்தார்; அது விக்கிரக ஆராதனே. அதின் பயங்கரமான ஆக்கினையினின்று நம்மை மீட்டார்; அது நித்திய அழிவு. நம்முடைய ஆசைகளிலும் நோக்கங்களிலும் நம்மை நடத்தி அதற்கப்பால் நம்மை மகிமைப்படுத்துவதே அவருடைய எண்ணம். நாம் உலகத்தாரா? அல்லது அதினின்று மீட்கப்பட்டவர்களா? நம்மிடத்தில் வேறு ஆவியுண்டா? கிறிஸ்துவின் மரணத்தில் ஐக்கியப்பட்டு உலகத்திற்கு நாம் செத்தவர்களா? அவர் நம்மை மீட்டாரே என்று நன்றியறிந்த மனதோடு இயேசுவை நேசித்து, துதித்து, அவருக்குக் கீழ்ப்படிகிறோமா என்று இப்படி இன்று காலமே நம்மைச் சோதிப்போமாக. உலகம் தேவனுக்குச் சத்துரு, அது உனக்குச் சிலுவையாயிருக்கட்டும்.

இயேசு உமது சிலுவையை
எடுத்து சகலத்தையும்,
விட்டு எளிமையாய்ப் போனேன்
இனி நீர்தான் எனக்கெல்லாம்;
என்னை விடுவிப்பவர் நீர்
மோட்ச ராச்சியம் தருவீர்.

'கர்த்தாவே, என் ஆத்துமத்தை விடுவியுமென்று கெஞ்சினேன்'

சங்கீதம் 116:4

விசுவாசத்தினால் பிறக்கும் ஜெபம் சுருக்கமானது, காரியத்தைப்பற்றினது. அது ஆத்துமாவை உள்ள தன்மையின்படி சரியான நிலைமையிலே தேவன்முன் வைக்கிறது. அவசியம் வேண்டியது எதுவோ அதற்காக அவரிடத்தில் கெஞ்சுகிறது. விசுவாசிக்கு அடிக்கடி விடுதலைவேண்டும்; விசுவாசம் அதற்காகத் தேவனைப்பார்த்துக் கெஞ்சுகிறது. அது என்ன சொல்லுகிறதென்றால், 'கர்த்தாவே, என்னை எப்பொழுதும் சூழ்ந்திருக்கிற பயங்கள் சந்தேகங்களினின்றும், எனக்கு நித்தம் சங்கடமாயிருக்கிற அடிமைத்தன ஆவியினின்றும், என்னைத் தொந்தரவு செய்து, அலக்கழித்துத் தடைசெய்கிற சாத்தானிடத்தினின்றும் என்னைச் சூழ்ந்துநிற்கிற பாவத்தினின்றும், என்னைச் சேதப்படுத்தி வழிதப்பச்செய்கிற மனிதரிடத்தினின்றும், நித்தம் எனக்குப் பாரத்தைக் கொடுக்கிற என் சொந்த எண்ணங்களினின்றும் என் ஆத்துமாவை விடுவியும்; நான் உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்' என்கிறது இவ்விதமாய்க் கர்த்தரைப் பெரிய மீட்பரென்று நாம் அறிக்கையிடுகிறோம். நம்முடைய பலவீனத்தை ஒத்துக்கொள்ளுகிறோம். நமக்கு நேரிடும் துன்பங்களும் சோதனைகளும் ஆசீர்வதிக்கப்படுகிறது. கிருபையின் சரியான தன்மை நம்முடைய ஜெபத்தில் காணப்படும். கருத்திலும், ஆசையிலும், ஓயாத கெஞ்சுதலிலும், கடைசியிலுண்டாகும் காரியசித்தியிலும் வெளியாகிறது. இனி விடுதலை வேண்டியிராதவரையில் இப்படியே தினந்தோறும் கெஞ்சுவாயாக, நெருக்கப்படுகிற நாளிலே என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன் என்று தேவன் சொல்லுகிறார். ஒருமுறை உன்னை விடுவித்தவர் கடைசிமட்டும் விடுவிப்பார்.

நான் உமக்குமுன் குனிந்து
உமது நீதியை உணர்ந்து,
தேவ வாக்கு கேட்டதிர்ந்து,
ஏற்றுக்கொள்ளும் மனம் தந்து.

'ராஜ்யத்தை சுதந்தரிக்கிறவர்கள்'

யாக்கோபு 2:5

அவர் ஏழைகளை மண்ணினின்றும், பிச்சைக்காரரைக் குப்பைமேட்டினின்றும் உயர்த்துகிறார். சுபாவப்படி நாம் அப்படிப்பட்டவர்கள்தான், ஐசுவரியமுள்ள கிருபையினாலோ மகிமையின் சிம்மாசனத்தைச் சுதந்தரித்துக்கொள்வோம். அதை நமக்கவர் ஆயத்தம்பண்ணினார், நமக்கு வாக்குத் தந் தார்; ஒரு ராஜ்யத்தை நமக்குத் தருவார்; அந்த ராஜ்யத்தில் அவர் மகிமையைக் கண்டுணர்ந்து அனுபவிப்போம். அதில் அவருடைய கிருபை, இரக்கம், மகிமையின் ஐசுவரியமெல் லாம் காணப்படும். அதில் சமாதானம், சந்தோஷம் இன்பம் என்றும் ஆளுகைசெய்யும். அது அசையாத ராஜ்யம், மாறாத ராஜ்யம், அதற்குச் சுதந்தரவாளிகளார்? உலகத்தின் ஏழைக ளாகிய ஆவியில் தரித்திரர், விசுவாசத்தில் ஐசுவரியவான்கள், தேவனையும், இயேசுவையும் விசுவாசிக்கிறவர்கள், அருமை யான வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கிறவர்கள், தங்கள் கிரி யைகளால் தங்கள் விசுவாசத்தை ரூபிக்கிறவர்கள், தேவன் தங்களை நேசித்தாரென்றறிந்து அவரை நேசிக்கிறவர்கள், தேவனுடைய அன்பு பரிசுத்த ஆவியினால் தங்களில் ஊற்றப்பட்டதைக் கண்டு அவரை நேசிக்கிறவர்கள். நான் சுதந்தரவாளியா? என் சிநேகிதனே, நீ சுதந்தரவாளியா? அப்படியானால் சந்தோஷப்பட்டு மகிழு. விசுவாசத்தினாலும் பொறுமையினாலும் வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக் கொள்பவர்களைப்போலிரு. முடிவு நன்றாயிருக்கும், ராஜ்யத் தின் சுதந்தரர் ராஜ்யத்துக்குப் போகும் வழியில் நடக் கிறார்கள்.

அங்கே நமது கண்கள்
அந்த மீட்பரைக் காணும்
அங்கே நமது நாக்கள்
துதித்தவரைப் பாடும்.

'இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்'

யோவான் 1:50

நித்திய ஆவியானவர் நம்முடைய புத்தியின் கண்களைத் திறக்கும்போது நாம் அந்தகாரத்தினின்று பார்க்கிறோம். நம்முடைய பார்வை குறைவுள்ளது. நாம் கொஞ்சத்தைப் பார்க்கிறோம்; பின்னுக்கு வெளிப்படவேண்டியது அதிகமுண்டு. நம்முடைய பாவசுபாவத்தின் ஆழங்களை இன்னும் காணுவோம்; கிறிஸ்துவில் கிருபையின் ஆழங்களையும் பார்ப்போம். கிறிஸ்து நமக்குச் சொந்தமென்பதற்குத் தெளிவான அத்தாட்சிகளைக் கண்டு, அவர் நமதுமேல் வைத்த அன்பை இன்னும் பார்ப்போம். அவருடைய ரத்தம் சுத்திகரிக்கத்தக்க வலிமையுள்ளதென்று இன்னும் நன்றாய்ப்பார்த்து நம்மை மீட்டுவிட அவருடைய கை விளங்குகிறதைக் கண்ணால் காணுவோம். உலகத்தின் வெறுமையையும், மாய்கையையும், மோசத்தையும் அதிகமாய்க் கண்டு அதினின்று மீட்கப்பட்டதற்காகச் சந்தோஷப்படுவோம். வேதவசனத்தில் இன்னும் பெரிய காரியங்களைக் கண்டு, பரிசுத்த ஆவி நமக்குப் போதிப்பதினிமித்தம் நன்றியறிதலுள்ளவர்களாயிருப்போம். கிறிஸ்து இறங்குகிறதையும், தற்கால சம்பத்து ஒழிந்துபோகிறதையும், நித்தியத்தின் மகிமை விஸ்தாரமாகிறதையையும் காண்போம்; இயேசு நமக்கு வாக்குக்கொடுத்திருக்கிறபடியால் பெரிய காரியங்களைத் தேடக்கடவோம். நமக்குத் தெரியாததைப் போதியுமென்று நித்தம் ஜெபிப்போமாக. தேவன் உண்மையுள்ளவரானபடியால் இன்னும் பெரிய காரியங்களை எதிர்பார்ப்போமாக.

இங்கே நாமிருக்கையில்
அறிவது மா அற்பம்,
வானம் வந்து சேருகையில்
தேவசமுகம் காண்போம்.

'மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள்'

சங்கீதம் 72:17

கிறிஸ்துவுக்குப் புறம்பேயிருக்கும் எதுவும் சாபத்துக்குள்ளானது. ஆசீர்வாதமெல்லாம் அவரிடத்தில் இருக்கும் பொக்கிஷம். அவரோடு சேர்ந்து ஐக்கியப்பட்டால்தான் அவைகளைப் பெற்று அனுபவிக்கலாம். அவருக்குள்ளிருந்தால் அவர் தேவனால் நமக்கு ஞானம், நீதி, பெலன், பரிசுத்தம், மீட்பு ஆகிறார். அவரை விட்டுப் பிரிந்தாலோ அவர் கிரியை நமக்குச் சுத்தமாய்ப் பயன்படாது. இயேசுவோடு ஐக்கியப்படுதல் எவ்வளவு விசேஷித்தது! அவரிடத்திலுள்ள யாவரும் தேவதயவால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். அது கேடகத்தைப் போல அவர்களைச் சூழ்ந்துகொள்ளுகிறது. ஆவியானவரைக் கொண்டு பட்சமுள்ள தகப்பனைப்போல அவர் அண்டையில் சேருகிறார்கள், தேவனுக்குச் சிநேகிதராகிறார்கள். அவர்களை வேலைக்காரரென்றல்ல, சிநேகிதரென்று அழைக்கிறார். அவருடைய சிநேகம் நல்ல ஆஸ்தி, தேவனுக்கு முன்பாக, சகலருக்கும் நியாயப்பிரமாணிகரும், நியாயாதிபதியுமானவருக்கு முன்பாக நீதிமான்களாகிறார்கள். அவருடைய கிருபைக்குக் கனமும், புகழ்ச்சியும் மகிமையுமுண்டாகத்தக்கதாக தேவனால் பரிசுத்தமாக்கப்படுகிறார்கள். கடைசியாக நித்தியகாலமாய்த் தேவனோடு மகிமை அடைவார்கள். சகலமும் அவர்களுடையது; வாடாத நீதியின் கிரீடம் அவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. கெட்டுப்போகாததும், கள்ளர் திருடக்கூடாததுமான பொக்கிஷம் மோட்சத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு பாக்கியமான நிலைமை! இவர்கள் எவ்வளவு பாக்கியர்! பரிசுத்தவான்கள் யாவருக்கும் இந்தக் கனமுண்டு.

இயேசுவால் ஆசீர்வாதங்கள்
யாவருக்குமுண்டாகும்,
சிறைமீட்டுக் குறை நீங்க
ஆயாசம் பறந்திடும்;
ஆதாமில் இழந்ததிலும்
இவர் கொடையதிகம்

ஆகஸ்டு-மீ 14-உ

'தாழ்வுகாலத்தில் சிந்தனைசெய்'

பிரசங்கி 1: 14

நிலைமைக்குத்தக்க கடமைகளுண்டு; கர்த்தருடைய ஜனங்கள் அநேக மாறுதலுக்குட்படுவார்கள். அவர்கள் இங்கே அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறார்கள். வாழ்வில் நன்றாய்ச் சந்தோஷப்படுவார்கள், தாழ்வு வரும்போது சிந்தனை செய்வார்கள். நம்முடைய ஜெபங்கள் தள்ளப்பட்டு, நம்முடைய விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டு, மார்க்கத்தின் வல்லமையை அதிலுள்ளான ஜீவனை நாம் அனுபவியாவிட்டால் அது நமக்குத் தாழ்வான காலம். திவ்விய சமுகம் மங்கி, இருதயம் கடினப்படுமானால் அது தாழ்வான காலம்; அந்தச் சமயத்தில் நாம் சிந்தனை செய்யவேண்டும். எப்படியென்றால், இதற்கு முகாந்தரமுண்டா? என்ன முகாந்தரம்? பாவத்திற்கு இடங்கொடுத்தேனா? இரக்கத்தை அசட்டை செய்தேனா? கடமையைத்தள்ளினேனோ? என்னைத் தேவனாக்கிக்கொண்டேனா? இந்தத் துன்பம் வந்த நோக்கமென்ன? அது நம்மைத் திருத்திக் கடிந்துகொண்டு மேன்மைப்படுத்தவா? இப்போது நாம் செய்யவேண்டியதென்ன? நம்மைக்குறித்து வெட்கப்பட்டு, தேவன் நீதிமானென்று சொல்லிப் பாவத்தை அறிக்கையிட்டு, நம்முடைய புத்தியீனத்தினிமித்தம் கண்ணீர்விட்டு மன்னிப்புக்காகக் கெஞ்சி, நம்மை மறுபடியும் க்ஷேமப்படுத்த வேண்டிக்கொள்ளவேண்டும். தேவன் நம்மைத் திரும்புங்களென்று அழைக்கிறார், மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறேன் என்கிறார். கிருபையாய் ஏற்றுக்கொள்ளுவேனென்று வாக்குக் கொடுக்கிறார். நமது சீர்க்கேட்டைக் குணமாக்கி நம்மை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பார். நாம் விசுவாசத்தோடு அவருடைய ஆசீர்வாதத்திற்கு எதிர்நோக்கி இருப்போமாக.

எனக்குண்டாம் துன்பம்
கர்த்தராலேதான் வரும்,
அவர் ஞானம்தான் நடத்தும்,
அவர்மேல் பிரகாசிக்கும்;
இன்னும் அவரே சோதித்தும்,
அதுவும் அன்பு முற்றும்.

'சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை
ஒருபோதும் கெட்டுப்போவதில்லை'

சங்கீதம் 9:18

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அவருடைய ஜனங்களுடைய ஆசைகளை எழுப்பிவிடுகிறது. அவருடைய செயலோ அதைச் சோதிக்கிறது. வாக்குத்தத்தம் கொடுப்போமென்றதை திவ்விய செயல் கொடுக்க மனமற்றிருக்கிறதுபோல காட்டுகிறது. தேவன் உண்மையுள்ளவர், நம்முடைய விசுவாசம் அவருடைய வார்த்தையின்மேல் இருக்குமானுல், தினந்தோறும் அவருடைய கிருபாசனத்தண்டையில் நம்முடைய ஜெபம் செல்லுமானுல், தேவன் எந்தத் துன்பத்திலும் வெளிப்படுவார்; எந்தச் சோதனையிலும் அவர் நம்மைத் தாங்குவார். தேவனை நம்முடைய பங்காக்கி அவரை மகிமைப்படுத்தப் பார்ப்போமானுல், நமக்குத் தேவையான எந்த நன்மையும் கிடைக்கும். இருதயத்தினுல் விசுவாசித்து, வாயினுல் அறிக்கையிட்டு, அறிக்கையிட்டபடி நடப்போமானுல் மன்னிப்படைவோம். நீதிமான்களாக்கப்பட்டு ரட்சிக்கப்படுவோம். நம்முடைய விருப்பங்களைத் தேவன் கவனிக்கிறுர். அவைகள் நிறைவேறவேண்டுமென்று இயேசு கெஞ்சுகிறுர். தேவனுடைய தாராளமான கரத்தை ஒன்றும் தட்டிப்போடாது. ஆதரவற்றவனுடைய ஜெபத்தை அவர் கவனித்து, ஏழையினுடைய ஜெபத்தை அவர் அசட்டைசெய்யார். நம்முடைய பயம், நம்முடைய சந்தேகம் அநேகமாயிருக்கலாம். நம்முடைய தேவனும் ரட்சகருமானவருடைய தன்மையிலும் வார்த்தையிலும் அவர் நிறைவேற்றின கிரியையிலுந்தான் க்ஷேமமுண்டு. அவர் நம்மை விடார்; அவர் நம்மைக்குறித்துப் பேசின யாவற்றையும் நிறைவேற்றுமளவும் நம்மை மறக்கமாட்டார்.

நான் வீடுபோய் சேரும் நாள்
சீக்கிரத்தில் தான் வரும்,
அங்கே அவர் முகம் கண்டு,
என் மீட்பரை நேசரென்று
நித்தியமாய் துதிப்பேன்,
அவருக்குள் மகிழ்வேன்.

'ஆண்டவரை நினை'

நெகேமியா 4:14

நீ அவராலே இருக்கிறாய்; அவரை விசுவாசித்துப் பயந்து வணங்கவேண்டும். அவர் அருளின வாக்குத்தத்தங்களையும், அவர் செய்த விடுதலையையும், அவர் கொடுத்த ஆசீர்வாதங்களையும், அவர் அழைக்கிற அழைப்பையும், இப்பொழுது அவர் உனக்குக் காண்பிக்கிற சம்பந்தத்தையும் நினை. தாழ்வில் அவரை நினைத்து நம்பு; வாழ்வில் அவரைத் துதி. மோசத்தில் அவரை நோக்கிக் கெஞ்சு; வருத்தத்தில் சகாயம் செய்ய அவரை அழை. அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படி, அவர் சொல்வதைக் கவனி, அவரோடிரு, அவர் ஆசீர்வாதத்தைத் தேடு. நீ செய்வதெல்லாவற்றிலும் அவர் மகிமையை நாடு. அவரை நினைக்கிறது உன் கடமை. உன் சிலாக்கியம். அவரை நினைத்தால் உன் விசுவாசம் பலப்படும், உன் பயங்கள் நீங்கும், உன் ஆத்துமாவுக்கு ஆறுதல் கிடைக்கும, பாவம் செய்யத் தடையுண்டாகும், அவர் பரிசுத்தம், நீதி, தயையுள்ளவர், தம்மிடத்திற்கு வருகிறவர்கள் எல்லாரிலும் மகிமைப்படுவார்; எதை நீ மறந்தாலும், யாரை மறந்தாலும் கர்த்தரை நினை, அவர் உன் ஜீவன், உன் பெலன், உன் போஜனம், உன் பங்கு, உன் தேவன், உன் எல்லாம்; அவர் உன்னை மறக்கிறதே இல்லை, நீ அவரை நினைத்து அவரோடு ஒட்டிக்கொள் ; அவர் உன்னைக் கைவிடார், அவர் உன்னை நேசிக்கிறபடியால் நீ அவருக்காக ஜீவியம்பண்ணு,

நான் பாவம் விட்டு விலக
ஞானமுள்ள இதயம்,
இயேசெனக்கு நீர் தருக,
உமக்கு நான் பிரியம்
உண்டாகும்படி நடப்பேன்,
மோட்ச பாதையில் செல்லுவேன்.

'அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனுயிருக்கும்'

ஏசாயா 30:15

அமரிக்கை தேவசித்தத்திற்கு அமைதலைக் காட்டும். அவருடைய வார்த்தையில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறபடி அவருக்குக் காத்திருப்பது இதற்கவசியம். தேவன் கிரியை செய்யும்போது விசுவாசி மவுனமாயிருக்கவேண்டும். வாக்குத் தத்தங்களால் தன் காரியம் நன்மையாய் முடியுமென்றும், கொஞ்ச காலத்திற்குப்பிறகு சகலமும் தெளிவாகுமென்றும் அவன் எண்ணவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை நம்பி, அவருடைய ஞானம், அன்பு, வல்லமை இவைகள்மேல் சார்ந்திருக்கவேண்டும். நம்முடைய நம்பிக்கை தேவ வசனத்தின் மேல் நிற்கவேண்டும். அது தம்முடைய ஜனங்களை அவர் நடத்தின விதத்தில் இருந்தும், நமக்கும் அவருக்கும் இருக்கிற சம்பந்தத்தில் இருந்தும் பிறக்கவேண்டும். தேவன் உண்மையுள்ளவர்; ஒவ்வொரு தலைமுறையிலும் அவர் தம்முடைய வாக்கை உறுதிபடுத்தி யிருக்கிறார் என்று அவரை நம்பவேண்டும். தேவனில் அமர்ந்த நம்பிக்கை வைப்பது நமக்கு பெலன் தரும். அப்பொழுதுதான் நாம் நம்முடைய நம்பிக்கையினால் அவரைக் கனப்படுத்துகிறோம் நமக்காக அவர் வெளிப்படும் போது அவர் நம்மைக் கனப்படுத்துவார். அவர் தம்முடைய பரிசுத்த வாசஸ்தத்தில் இருந்து எழுந்தருளும்போது நாம் எழுந்து, அவருக்கு முன்னே மவுனமாயிருக்கக்கடவோமாக; நாம் அவருக்குக் காத்திருப்போமாக; கர்த்தருடைய ரட்சிப்புக்காக நம்பி அமர்ந்து காத்திருப்பது மிகவும் நல்லது. தேவனுக்கு விரோதமாக முறையிடாதபடிக்கு. அவருக்கு மாறுத்தரம் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

எனது பார்வையில் அற்பன்,
உம்மால் நான் ஞானமுள்ளவன்,
உமது பெலத்தால் பெலன்
கொண்டு யாவும் செய்பவன்.
இதற்குக் கிருபை தாருமேன்,
நல்வழியில் சேருமேன்.

'தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும்
கர்த்தர் சமீபமாயிருக்கிறார்'
சங்கீதம் 145:18

கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறதுதான் சரியான ஜெபம். அவர் நம்முடைய பிதா, நாம் அவருடைய பிள்ளைகள். நம்மிடத்தில் ஒன்றுமில்லை; அவரிடத்தில் சகலமுமுண்டு. கொடுக்க மனதுமுண்டு. நம்முடைய குறைவை உணர்ந்து நமக்குத் தேவையானதைக் கொடுக்கக் கர்த்தரை நோக்கிக் கேட்கிறோம். பெலவீனத்தை உணர்ந்து பெலனுக்காகக் கெஞ்சுகிறோம். குற்றத்தை யுணர்ந்து மன்னிப்புக்காகக் கேட்கிறோம். வியாதியாயிருக்கும்பொழுது சுகத்திற்காகவும், வருத்தத்தில் அகப்படும்போது சமாதானம் ஆறுதலுக்காகவும், இடுக்கத்திலிருக்கும்போது விடுதலைக்காகவும் கெஞ்சிக் கேட்கிறோம். நாம் நம்மைவிட்டு இயேசுவண்டையில் போய் அவர் அழைப்பை அங்கீகரித்து, அவர் வாக்கை சொல்லிக் கெஞ்சும்போது அவர் உண்மையுள்ளவரென்று காண்கிறோம். ஜெபம்பண்ணுகிற ஆத்துமாவுக்கு அவர் எப்போதும் சமீபமாயிருக்கிறார். எங்கும் நிறைந்த ஏகோவாவாக மாத்திரமல்ல, நம்முடைய உத்தம சிநேகிதனாகவும் சமீபத்திலிருக்கிறார். அவர் நமக்குச் சமீபத்திலிருக்கிறபடியால், நாம் சொல்லுகிறதை அன்பாய்க் கேட்கிறார். நம்முடைய நிர்ப்பாக்கியம் எப்படிப்பட்டதாயிருந்தாலும் அதை இரக்கமாய் நீக்குகிறார். எந்த மோசத்திலும் வருத்தத்திலும் நமக்குக் கிருபையாய் உதவிசெய்கிறார். சிநேகிதரே, நம்முடைய தேவன் நமக்கு வெகு சமீபத்திலிருக்கிறார். இன்று காலமே நம்மைக் கவனிக்கிறார். ஆவியிலும் உண்மையிலும் அவரை நோக்கிக் கெஞ்சி, நம்முடைய குறைகளை அவருக்கு முன் வைப்போமாக. எத்தனைதரம் சொன்னாலும் அவர் பிரியமாய்க் கேட்பார்; அவர் நமக்குப் பொறுமை காட்டி நம்மை ஆசீர்வதித்து நன்மை செய்வார். கிருபை நிறைந்த என் தேவனோடு இன்றைக்கு நான் நெருங்கி சகவாசம் பண்ணவேண்டும்.

தினம் தினம் என்னைக் காப்பாற்றும்,
தேவதூதரோடு நான்
நின் சமுகம் காணட்டும்,
அங்கே சேரும்போதுதான்
உமதன்பைப் பாடுவேன்,
துதிகளால் போற்றுவேன்.

'என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்'
யாத்திராகமம் 33:14

இது கர்த்தர் மோசேக்குக் கொடுத்த வாக்கு; நமக்கும் இப்படியே வாக்குக்கொடுக்கிறார். கர்த்தருடைய சமுகம் நமக்கு முன்வராது என்று தெரிந்தால் அப்படிப்பட்ட இடத்திற்கு நாம் போகக்கூடாது. கர்த்தருடைய சமுகத்தால் பரிசுத்தம் வரும், வல்லமை வரும், வைராக்கியம் வரும், ஐக்கியம் வரும். அது சந்தோஷத்தாலும், ஆறுதலாலும், சமாதானத்தாலும் நம்மை நிரப்பும். அவருடைய சமுகம் நமக்கு மகிமை. நாம் நஷ்டம் அடைந்து சிலுவை சுமந்து வியாகுலப்படும்போது நமக்கு ஆதரவாயிருக்கும்; கர்த்தருடைய சமுகம் நம்மோடு இருக்கவேண்டுமென்று கெஞ்சுவோமாக. அதை எதிர்பார்த்து வேறெது கிடைத்தாலும் திருப்தியற்றவர்களாயிருப்போமாக. மோசேயோடு அவர் போனார். அவன் கடைசிவரைக்கும் நிலைநின்றான். யோசுவாவோடு போனார். அவன் ஜெயித்தான்; தாவீதோடு போனார், அவன் சிம்மாசனமேறினான்; பவுலோடு அவர் போனார், அவன் ஜெயவீரனைவிடப் பெரியவனானான். கர்த்தருடைய சமுகத்திற்கு பதில் எதையும் வைக்கக்கூடாது. அது நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறபடியால் அதற்குப் பதிலாக வேறொன்றைத் தேடாமல், 'உம்முடைய சமுகம் எங்களோடு போகாவிட்டால் இங்கேயிருந்து எங்களைக் கொண்டுபோகாதேயும்' என்று நித்தம் கெஞ்சுவோமாக. 'ஒருவன் என்னை நேசித்தால் அவன் என் வார்த்தையைக் கைக்கொள்வான்; என் பிதா அவனை நேசிப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடு வாசம்பண்ணுவோம்' என்று இயேசு சொல்லியிருக்கிறார். கர்த்தாவே, என்னில் வாசம்பண்ணும்.

என் சமீபம் வந்திரும்,
என் உள்ளத்திலே தங்கும்,
உமதன்பின் ஆழத்தை
நான் காணும்படி செய்யும்.

ஆகஸ்டு-மீ 20-உ

'கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றுவார்'

சங்கீதம் 145:20

கர்த்தரை அறிந்திருக்கிற யாவரும் அவரை நேசிக்கிறார்கள். அவருடைய ஆவியினால் போதிக்கப்பட்டாலொழிய அவரை நேசிக்கமாட்டார்கள். தேவனை, கிறிஸ்துவில் நம்முடைய உடன்படிக்கையின் தேவனாக அறிந்து, அவரை நம்முடைய சொந்தமான அனுபவத்தால், அவரை எல்லாவற்றிலும் மேலாக நேசிப்போம். நம்முடைய ஆறுதல், பந்து ஜனங்கள், உலக ஆஸ்தி, வரங்கள், கீர்த்தி இவைகளைவிட அதிகமாய் நேசிப்போம். அவரில் அதிக பெரிய மகிமையை, உண்மையான பெருமையை, மகா மேன்மையான அழகை, சொல்லரிய சிறப்பைக் காண்கிறோம். அவரை நேசிக்கிறவர்களை அவர் தற்காக்கிறார். துன்பங்கள் அவர்களைச் சேதப்படுத்தாதபடிக்கு, லோகசிந்தையும் அழிவும் அவர்களைக் கெடுக்காதபடிக்கு, சத்துருக்களினின்றும், பொல்லாங்கினின்றும், கோபாக்கினையினின்றும் அவர்களைத் தற்காக்கிறார். அவருடைய அன்புள்ள பட்சமும் சத்தியமும் அவர்களை எப்பொழுதும் தற்காக்கும்; தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் அவர்களைத் தற்காப்பார். நாம் செய்யவேண்டியதைச் செய்தால்தான் தற்காப்பார். ஆதலால் நாம் அவருக்கு முன் நடந்து, அவரை நம்பி, அவருக்காகக் காத்திருந்து, கர்த்தரைச் சிநேகிக்கிறோமாவென்று நம்முடைய இருதயத்தைப் பார்த்துக் கேட்போமாக. அவரைச் சிநேகிக்கிறது நமக்குப் பிரியமா? பாவத்தினின்றும், உலகத்தினின்றும், எல்லாப் பொல்லாங்கினின்றும் நாம் காக்கப்பட்டு வருகிறோமா? அப்படியானால் நம் இலவசமான திவ்விய கிருபையினால்தான் காக்கப்படுகிறோமென்று சொல்லவேண்டும். இல்லாவிட்டால் நாம் நம்முடைய வழிகளை ஆராய்ந்து, பரிசோதித்து, மறுபடியும் கர்த்தர் அண்டைக்குத் திரும்புவோமாக; வா என்றழைக்கிறார். தூக்கிவிடுகிறார்.

இயேசு கர்த்தர் கைவிரித்து
சிலுவையிலே தொங்குகிறார்;
அதைக் கண்டதிசயித்து
யாவருக்கும் நீ சொல்லப்பார்.
அவரையே நான் நேசிப்பேன்
அவருக்கென்று மரிப்பேன்.

தேவன் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் விஷயத்தில் நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?’

லூக்கா 18:7

கர்த்தருடைய ஜனங்கள் அடிக்கடி ஒடுக்கப்படுகிறபடியால் பழிவாங்குகிற சிந்தைக்கு ஏவப்படுகிறார்கள். நம்முடைய தேவன் சொல்லுகிறதென்ன? பழிவாங்குதல் என்னுடையது, நான் பதில் செய்வேன் என்கிறார். மனிதன் கோபிக்கும்போது; கர்த்தர் உன்னை நேசிக்கிறாரென்று நினை; மனிதர் உன்னை ஒடுக்கும்போது தேவன் உன் சிநேகிதரென்று நிச்சயித்திரு. உன் காரியத்தை அவரிடத்தில் கொண்டுபோய், சகலத்தையும் அவருக்கு முன் விரித்து, அவரை நோக்கிக் கெஞ்சி, அவர் உனக்காக வெளிப்படுவாரென்று நம்பியிரு. எஜமான் தனக்கருமையான வேலைக்காரனுக்காக, தாய் தந்தைகள் தங்கள் அருமையான பிள்ளைக்காக, புருஷன் தான் தெரிந்துகொண்ட மனையாட்டிக்காகப் போராடமாட்டானா? அப்படியிருக்க, தேவன் தாம் தெரிந்துகொண்டவர்களுக்காகப் பழிவாங்காமலிருப்பாரா? சீக்கிரம் அவர்களுக்காகப் பழிவாங்குவாரென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இரவும் பகலும் அவரை நோக்கிக் கூப்பிடு; ஒத்தாசை விடுதலை வேண்டுமென்று வேறு திசையை நோக்காதே, அசுத்தமான எண்ணங்களைப் பேணிவையாதே. நிந்திக்கப்பட்டு, துன்பத்தைச் சகித்து, சிலுவையில் அறையப்பட்ட உன் கர்த்தாவைப்போலிருக்க கிருபைவேண்டுமென்று கேள். நீங்கள் அதைரியப்பட்டு உங்கள் மனதில் சோர்ந்து போகாதபடிக்குப் பாவிகளால் தமக்குண்டான இப்படிக்கொத்த விரோதத்தைச் சகித்தவரை கவனியுங்கள். அவர் தம்முடைய சத்துருக்கள் எல்லாரையும் சீக்கிரம் தமது பாதத்தின்கீழே மிதித்துப் போடுவார். பழிவாங்க அவராலாகும், அவருடைய வார்த்தை நிறைவேறும், அவரில் நம்பிக்கை வைத்திரு; அவருடைய நேரத்திற்குக் காத்திரு; சகலமும் நன்றாயிருக்கும்.

எனதிஷ்டம் முடியாமல்
போனது என்று, நான்
தேவ உண்மை சந்தேகித்து
வலிமை குறைத்து,
பேசுவது நியாயமோ?
அவர் சொல் மாறுமோ?

'கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது'
சங்கீதம் 34:10

ஏழை பலவீனமுள்ள பயங்காளியான கிறிஸ்தவனுக்கு இது எவ்வளவு ஆறுதலான வாக்குத்தத்தம். நிச்சயமென்னும் நிலைமைக்கு அவன் வந்து சேராவிட்டாலும் அவன் கர்த்தரைத் தேடுகிறான். அவனுக்கு ஒரு நன்மையுங் குறைவுபடாதென்று தேவன் இங்கே வாக்களிக்கிறார். தன்னிடத்தில் ஒரு நன்மையுமில்லை, தானாய் ஒரு நன்மையும் செய்யக்கூடாது. தன்னால் எந்த நன்மையும் அனுபவிக்கக் கிடையாது என்று கண்டறியும்போது, அவனுக்கு எந்த நன்மையும் குறையாதென்று தேவன் அவனுக்கு உறுதிகொடுக்கிறார். அவனுடைய தேவன் அவன் பாவத்தை மன்னித்து, அவனை நீதிமானாக்கி, அவன் ஆத்துமாவைப் பலப்படுத்தி, அவனுக்கு வேண்டியதைத் தந்து, அவன் இருதயத்தை ஆறுதல்படுத்தி, அவன் சத்துருக்களை ஜெயித்து, அவன் துன்பங்களை இன்பமாக்கி, மரணத்தின்மேல் அவனுக்கு ஜெயம் தருகிறார். தேவன் அவனுக்கு வேண்டியதைக் கொடுக்கும்போது அவனுக்கு நெடுநாள் குறையிராது; நம்முடைய தேவன் உண்மையுள்ளவரானதால் அவனை அசட்டைபண்ணமாட்டார். அவனுக்கு அதிக நன்மையாக எப்பொழுது வேண்டுமோ, எப்படி வேண்டுமோ, அப்படி நன்மையானதை எல்லாம் தருவார். நாம் கர்த்தரைத் தேடி, அவர் எந்த நன்மையும் நமக்குப் பின் வைக்கமாட்டாரென்று நிச்சயமாயிருபபோமாக. வெள்ளியும் பொன்னும் அவருடையது. பொல்லாதவர்களாகிய நீங்கள், உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்க, உங்கள் பரமபிதா தம்மை நோக்கிக் கேட்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியை மிகவும் அதிகமாய்க் கொடுப்பாரல்லவா?

பிள்ளை அழும் சத்தம் கேட்டு
தாய் மனம் பதறுமே!
தேவ பக்தர் பாடுபட்டு
கெஞ்சும்போது கேட்பாரே;
தாயிலும் அவரே அன்பர்,
கண்ணீர் யாவும் துடைப்பர்.

'தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்'

சங்கீதம் 67:6

தம்முடைய வார்த்தையில் இப்படி வாக்குக்கொடுத் திருக்கிறார். தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்றுகிறது அவருக்குப் பிரியம் அவர் உடன்படிக்கையின்படி, ஆவிக் குறிய பிறப்பினால் கிறிஸ்து இயேசுவின் மூலமாய், நாம் விரும்பி, கேட்டு, சம்மதித்தபடி அவர் நம்முடைய தேவன் அவர் பெரிய தேவனானபடியால், வானத்தையும் பூமியையும் நிரப்புகிறார். அவர் போதுமானவரானபடியால், அவரிடத்தில் சகலமும் உண்டு. அவர் மாறாத தேவனானபடியால், அவர் என் றும் அப்படியே இருக்கிறார். தம்முடைய ஜனங்களுடைய வழக்கத்தைத் தாமே பேசி, அவர்களைக் கனப்படுத்தி, கிரு பையும் இரக்கமுமுள்ள தேவனென்று ரூபிக்கிறார். அவர் நிச்சயமாகவே ஆசீர்வதிக்கிறார், மற்றவர்கள் சபித்தால் அந் தச் சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றுகிறார். நம்முடைய தேவ னாகிய தேவனே நம்மை ஆசீர்வதிப்பார் என்று நாம் நிச்சய மாய் நம்பியிருக்கலாம். கடந்துபோன காலங்களில் கிறிஸ்து வின் மூலமாய் நம்மை ஆசீர்வதித்தார். இக்காலத்திலும், காலம் முடிந்த பிறகும், ஆசீர்வதிப்பேனென்று வாக்குக் கொடுத்திருக்கிறார். சரீர காரியங்களிலும், ஆவிக்குரியவை களிலும் அவர் நம்மை ஆசீர்வதிப்பார். நாம் எங்கே இருந்தா லும் நம்மை ஆசீர்வதிப்பார். இதை நம்பி நம்முடைய அனுப வத்தினால் இதை ருசித்துப்பார்க்க வேண்டுமென்று கெஞ்சு வோமாக. இது மோசத்தில் நம்மைத் தைரியப்படுத்தும். பயத்தில் நம்மை உறுதிப்படுத்தும். பூரண சமாதானத்தில் நம்மைக் காப்பாற்றும். நாம் அவரை நம்பியிருப்போமாக, அவர் நம்மை ஆசீர்வதிப்பார்; அவரில் நாம் சந்தோஷப் படுவோம்.

ஆத்துமாவே எழும்பு,
உன் ஆசைகள் விளம்பு,
தேடப்போ, கண்டடைவாய்;
கேளப்போ பெற்றுக்கொள்வாய்.

'ஜீவபலி'

ரோமர் 12:1

பலிக்கென்று ஒரு மிருகத்தைப் பிரித்துவைத்தபோது அது பரிசுத்தமாக எண்ணப்பட்டதும் அல்லாமல், எந்த விதமும் சேதப்படாதபடி காக்கப்பட்டது. கிறிஸ்தவனும் அப்படியே பிரித்துவைக்கப்பட்டவன்; அவன் பலி செலுத்தப்பட வேண்டியவன். அவனுடைய ஆத்துமா மாத்திரமல்ல, சரீரமும் கூட பரிசுத்தமும் அங்கிகாரமும் புத்தியுமுள்ள பலியாகத் தேவனுக்குச் செலுத்தவேண்டியவன். வேசித்தனம், வெறி, பெருந்தீனி, அசுத்தம், பெருமை இவைகளால் அது தீட்டுப்படக்கூடாது, அதைக் கர்த்தருடையதாகப் பாவித்து, ரத்தத்தால் கொள்ளப்பட்டதாகவும், பரிசுத்த ஆவியின் ஆலயமாகவும், பரிசுத்த தேவன் வாசம்பண்ணும் ஸ்தலமாகப் பிரித்து வைக்கப்பட்டதாகவும் எண்ணவேண்டும். விசுவாசி அவிசுவாசியோடு விவாகத்தில் இணைக்கப்படக்கூடாது; இது தேவனுக்கு விரோதமான கலகம். ஏனென்றால் அப்படிச் செய்யக்கூடாதென்று தேவன் திட்டமாய்ச் சொல்லியிருக்கிறார். இது வேண்டுமென்றே பாவம் செய்து பரிசுத்த தேவனுக்குக் கோபத்தை மூட்டுகிறது. இது அன்புள்ள தேவனுக்கு அவமரியாதை செய்து, பங்கப்பட்ட அவருடைய இரக்கத்தை போருக்கழைக்கிறது. விசுவாசியே, நித்தம் உன் சரீரத்தை சுத்த ஜலத்தால் கழுவி, தேவனுக்கு முன் நிறுத்து. அதாவது அவருடைய வசனத்தின்படி நடந்து அதைத் தீட்டினின்று சுத்தமாக்கு தேவன் பிரதிஷ்டையாக்கினதைச் சாதாரணமாகப் பாவியாதே; தனக்கென்று தேவன் பிரித்து வைத்ததைக் கேவலப்படுத்தாதே. தேவனுக்குச் சொந்தமானதைக் கொடு, சகலமும் அவருடையது. நீயும் அவருடையவன்.

நான் முற்றும் உமக்குச் சொந்தம்
இதுவே எனக்கானந்தம்,
உமது சித்தம் நான் செய்வேன்,
நான் உமதடிமை என்பேன்
என் துதிகள் நீர் பெற்றிடும்,
உம்மில் பிழைக்கச் செய்திடும்,

'ஆவியானவரும் நம்முடைய பெலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார்'

ரோமர் 8:26

பலவீனங்கள் நம்மைச் சூழ்ந்திருக்கிறது; நம்மைப் பற்றி நமக்குக் கொஞ்சந்தான் தெரியும். நமக்கு நன்மையானது இன்னதென்று அறியோம். நமக்கு என்ன நேரிடுமென்று நமக்குத் தெரியாது; சாத்தானுடைய நிலையையும் நோக்கத்தையும் நாம் அறிந்தவர்களல்ல. தேவன் நமக்குக் கொடுப்பதெது, அவருடைய நோக்கம் எது, இவைகளும் நமக்குத் தெரியாது; அறிவீனராயும் பெலவீனராயும் இருக்கிறோம். தீமையை எதிர்க்கப் பலவீனர், நன்மை செய்யப் விலவீனர், நன்மை பெறப் பலவீனர். நம்முடைய பலவீனங்களில் அநேகம் நம்மிடத்திலிருந்தே உண்டாகிறது. நம்முடைய குணங்களிலிருந்து உண்டாகிறது. சரீர வியாதியினின்று உண்டாகிறது. நம்முடைய திறமைக் குறைவினின்று உண்டாகிறது. இப்படிப் பலவீனராயிருந்தாலும் இயேசு நம்மோடு பரிதாபப்படுகிறார். நமக்கு உதவிசெய்ய ஆவியும் கொடுக்கப்படுகிறது, நமக்குத் தேவையானதை அவர் போதிக்கிறார். அருமையான வாக்குத்தத்தங்களண்டைக்கு நம்மை நடத்துகிறார். என்ன சொல்லிக் கெஞ்சவேண்டுமென்று போதிக்கிறார். ஜெபம் செய்ய நம்மை எழுப்பிவிட்டு ஜெபத்தில் நமக்கு உதவிசெய்கிறார். பலத்த வாஞ்சையை உண்டுபண்ணி, போராட பலனைத் தந்து, ஜெபம் செய்யும்போது ஆசைகளில் அனல் மூட்டுகிறார். நமக்கு வேண்டியதின்னதென்று நன்றாய் உணரச்செய்து அதைப் பற்றி வாஞ்சைகொள்ளப்பண்ணுகிறார் அப்போதுதான் சொல்லி முடியாத பெருமூச்சுகளுண்டாகிறது. அவைகளைத் தேவன் கவனிக்கிறார். நமக்கு உதவி செய்ய ஆவியின் பலத்தை நித்தம் தேடுவோமாக.

பரிந்துபேசும் ஆவியே!
ஜெபிக்க நான் அறியேனே;
எனக்குதவி செய்யுமேன்,
உமது பெலன் தாருமேன்;
என் மூச்சின் சத்தத்தைக் கேட்பார்,
எனக்குத்தரவளிப்பார்.

'கிறிஸ்துவின் அளவற்ற ஐசுவரியம்'

எபேசியர் 3:8

இயேசு நம்முடைய சகோதரன்; அவர் தம்முடைய ஐசுவரியத்தையெல்லாம் நமக்குக் கொடுத்திருக்கிறார். இயேசுவின் ஐசுவரியம் நமக்கு ஆஸ்தி, இதை மறவாதே. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே, அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தமாகத் தரித்திரமானாரே. தமக்குள்ளதெல்லாவற்றையும் நம்மை மீட்க, நம்மைச் சுத்திகரிக்க, நம்மை ரட்சிக்கத் தந்து இப்பொழுதும் உன்னத மகத்துவத்தின் வலது பாரிசத்திலிருந்து, கடிந்துகொள்ளாமல் தாராளமாய்க் கொடுக்கிறார். அவரிடத்தில் கிருபையின் ஐசுவரியமுண்டு, இரக்கத்தின் ஐசுவரியமுண்டு, மகிமையின் ஐசுவரியமுண்டு, ஆவியின் மீதியும் அவரிடத்திலுண்டு, அவர் தாராளமாய் வாக்குக்கொடுத்திருக்கிறார். கொடுக்க ஆயத்தமுள்ளவரென்று ஆச்சரிமான வகையாய்க் காட்டியிருக்கிறார். ஆராயக்கூடாத ஐசுவரியங்கள் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்போமாக. விசுவாசியே! உன் தரித்திரத்தை, உன் குறைவை, உன் நிலைமையைப் பாராதே, இயேசுவைப் பார். சகலமும் அவருடைய பாதத்தின் கீழிருக்கிறது. ஆசீர்வாதங்களெல்லாம் அவர் இஷ்டத்திலிருக்கிறது, உனக்கு நன்மை செய்யத் தன் மனதை உன்மேல் வைத்திருக்கிறார். பூமிலிருக்கும்போது உனக்கு வேண்டியதையெல்லாம் தந்து, பிறகு உன்னை மகிமையில் ஏற்றுக்கொள்வார், ஆத்துமாவே, உனக்குத் தேவையயானதெல்லாம் இயேசுவண்டையில் இருக்கிறது, ஆகையால் அவரைப் பார், அவரையே பார்.

இயேசு எனக்குச் சொந்தமானதால்,
ஞான நீதி பெலன் கிருபை
சகலமும் எனக்குண்டே,
லோகம் ஆளும் தேவன்முன்னே,
கூசாமல் நான் வந்து நின்று
என்னை ரட்சியும் என்பேனே.

'தேவனுக்கென்று கனிகொடுங்கள்'

ரோமர் 7:4

கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டாலொழிய நற்கிரியைக ளுண்டாகாது. நியாயப்பிரமாணத்திற்கு மரித்தாலொழிய கிறிஸ்துவோடு நாம் விவாகத்தில் இணைக்கப்படோம். தேவன் கொடுத்த வேறெந்த நியாயப்பிரமாணத்திலும் நமக்கு உதவி யுமில்லை, நம்பிக்கையுமில்லை யென்றும், கிருபைதான் நம்மை ரட்சிக்குமென்றும் நாம் அறிந்தால்தான் தேவன் கிறிஸ் துவை நமக்குச் சுவிசேஷத்தில் வெளிப்படுத்தியிருக்கிறபடி, அவரை மனதார ஏற்றுக்கொள்வோம். நாம் கிறிஸ்துவோடு விவாகத்தில் ஐக்கியப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய பேரைத்தள்ளி, அவருடைய பேரைத் தரித்துக்கொள்ளுகி ரோம். அவருடைய பரிபூரணத்தைப்பற்றி ஜீவனம்பண்ணி, அவருடைய வார்த்தையைப்பற்றி நடந்து, சகலத்திலும் அவ ருக்குப் பிரியமுண்டாக்கப் பார்க்கிறோம். அவருடைய கிரு பையினால் நாம் நற்கிரியைகளைச் செய்கிறோம். அவைகள் நம் முடைய அன்புக்கு அத்தாட்சியாகவும், நம்முடைய பரிசுத் தத்திற்கு ரூபகாரமாகவும், அவரோடு ஐக்கியப்படுவதினு லுண்டாகும் கனிகளாகவும், அவருடைய புண்ணியத்தின் மூலமாய் அவருடைய நாமத்திலே அங்கீகரிக்கப்படுகிறது. கர்த்தரோடு சேர்ந்தவன் அவரோடு ஒரே ஆவியாயிருக்கிறான், தேவசித்தத்தை நிறைவேற்றுகிறதே அவனுக்குப் போஜன மும் பானமுமாயிருக்கிறது. கிறிஸ்துவோடு நாம் ஐக்கியப் படாவிட்டால், தேவனுக்குப் பிரீதியானது ஒன்றும் செய் யோம், கிறிஸ்துவுக்கு விவாகம் பண்ணப்பட்டிருக்கிறபடி யால், நம்முடைய குறைவுள்ள, ஒன்றுக்கும் உதவாத, பிர யோஜனமற்ற கிரியைகளை அவர் அங்கீகரித்துக்கொள்ளுகி றார். அவருக்கு அது மிகவும் பிரியமாயிருக்கிறது. ஐக்கியமில் லாவிட்டால் கனியிராது, கனியிராவிட்டால் ஐக்கியமிராது, சிநேகிதரே! நாம் கர்த்தருக்கென்று கனிகொடுக்கிறோமா? அதிக கனிகொடுக்கிறோமா? நாம் அதிக கனிகொடுக்கிறதினால் நம்முடைய பிதா மகிமைப்படுகிறார். அப்படிக் கனிகொடுக் கிறவர்கள்தான் கிறிஸ்துவின் சீஷர்கள்.

இயேசு, என் இதயத்தை
கிருபையால் நிரப்பும்;
அப்போ நற்கனிகளை,
என் ஆவிதான் தந்திடும்.

ஆகஸ்டு-மீ 28-உ

‘இலவசமாய் அவருடைய கிருபையிலே நீதிமான்களாக்கப்படுகிறார்கள்’

ரோமர் 3:24

முற்காலத்தில் ஒரு விசேஷித்த கேள்வி கேட்டதுண்டு: ‘மனிதன் தேவனுக்கு முன்பாக நீதிமானாவதெப்படி?’ அவனுக்கு நீதியில்லை; அநேக குற்றங்களைச் செய்தவன். குற்றவாளி என்று கண்டு, தேவனுடைய பரிசுத்த நியாயப்பிரமாணத்தினால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டவன். போக்குச் சொல்ல இடமில்லை, அவன் வாய் அடைபட்டுப்போனது, சுபாவப்படி நம்முடைய நிலைமை இதுதான், நம்முடைய நியாயாதிபதியாகிய கர்த்தரோ நம்மை நீதிமான்களாக்கி. தாமும் நீதியுள்ளவராயிருக்கத்தக்க ஒரு வகையைக் கண்டுபிடித்திருக்கிறார். அந்த வழி கிருபைதான்; சகல குற்றத்தையும் நீக்கி, நம்மை நீதிமான்களாக்குகிறார். நம்மை நீதிமான்களென்று தீர்ப்புச்செய்திருக்கிறார், நம்மை அங்கீகரிக்கிறார், இலவசமாய்த் தம்முடைய தயவை நமக்குத் தந்து, சிநேகம் பாராட்டி நம்மோடு ஐக்கியமாகிறார். இதற்கென்று நாம் ஒன்றும் செய்யவுமில்லை, பாடுபடவுமில்லை; இயேசுவின் கிரியையை நமக்குத் தருகிறார். இதினால் நம்முடைய கடன் தீருகிறது. நம்முடைய நீதி முடிகிறது, வேதபிரமாணமும் ஆளுகையும் கனமடைகிறது, நித்திய ஜீவனுக்குப் பாத்தியம் கிடைக்கிறது; விசுவாசத்தினால் நாம் இந்தக் கிரியையை ஏற்றுக்கொள்ளுகிறோம். அதைக் கொடுக்கிறவரும் அவர்தான். சகலத்தினின்றும் நாம் நிரபராதிகளாகிறோம்; நம்மேல் ஒரு குற்றமும் சுமராது, ஆக்கினை வராது, நியாயப்பிரமாணத்தின் கிரியையின்றி கிருபையினால் இலவசமாய் நீதிமான்களாகிறோம். நீதிமான்களாக்கப்பட்டு தேவனோடு சமாதானம் பெறுகிறோம்.

இயேசு உமது ரத்தம்
எனது பிராயச்சித்தம்
நீர் சம்பாதித்த புண்ணியம்
எனக்கு நீதி வஸ்திரம்
உம்மால் பாக்கியமுற்றேன்
தேவ தயவு பெற்றேன்.

ஆகஸ்டு-மீ 29-உ

'அவர்களெல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்'

மத்தேயு 25:5

இயேசு சொன்ன எச்சரிப்புகளையும், அவர் செய்த வாக்குத்தத்தங்களையும், அவர் கொடுத்த சட்டங்களையும் நாம் நினைக்கும்போது, அவருடைய ஜனங்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பாய் வேலைசெய்து பாக்கியராயிருப்பார்களென்று தீர்க்கலாம். நம்மைச் சூழப்பார்த்தாலோ, நம்மைத்தானே பார்த்தாலோ, காரியம் இப்படி இல்லையென்று கண்டு துக்கப்படவேண்டும். ஒரு ராஜ்யத்தைப்பெற்றுத் திரும்பிவர இயேசு போயிருக்கிறார், அவர் தம்முடைய ஊழியக்காரருக்குத் தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். ஒவ்வொருவனுக்கும் அவன் வேலையைத் தந்து, வாசல் காப்போனை விழித்திருக்கக் கட்டளையிட்டார். புத்தியற்ற கன்னிகைகளைப்போல புத்தியுள்ள கன்னிகைகளும் எல்லாரும் ஏகமாய் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள் என்று இங்கே கண்டிருக்கிறது. நம்முடைய கடமைகள், சிலாக்கியங்கள், எதிர்நோக்கங்கள் இவைகளுக்கு விழித்திருக்கிறோமா? இயேசுவின் வருகைக்காகப் பார்த்து வாஞ்சித்து ஆயத்தப்பட்டிருக்கிறோமா? நம்முடைய சத்துருவாகிய பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமென்று வகைதேடித் திரிகிறதை நினைத்து, நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் விழித்திருக்கிறோமா? தேவ காரியங்களில் ஜாக்கிரதையாயிருக்கிறோமா? நம்முடைய வீட்டை நோக்கித் துரிதமாய் நடக்கிறோமா? நாம் இங்கே தங்கும் காலத்தைப் பயத்தோடு பின்னிடுகிறோமா? நம்முடைய தாலந்து பொக்கிஷசாலையில் வைக்கப்பட்டிருக்கிறதா? உறுமாலில் முடிந்து வைக்கப்பட்டிருக்கிறதா? மற்றவர்களைப்போல நாம் தூங்காமல் விழித்துத் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்கக்கடவோம். நியாயாதிபதி கதவண்டை நிற்கிறார்; தூக்கத்தைவிட்டு எழுந்திருக்கிற வேளையாயிற்று, நம்முடைய மீட்பு சமீபமாய் வந்திருக்கிறது.

இதோ அவர் வருகிறார்,
ஜாதிகளை அழைக்கிறார்,
சந்திப்பதற்கு வாருங்கள்,
பலனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஆகஸ்டு-மீ 30-உ

'அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார்'
சங்கீதம் 103:9

நாம் பாவம் செய்தால் நம்மைச் சீர்ப்படுத்தும்படி நம்முடைய பரம தகப்பன் நம்மைத் திருத்துவார். அடிக்கடி பலத்த அடிகள் நமதுமேல் விழும். தழும்பும் வெகுகாலம் நிற்கும்; ஆகிலும் அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார். நாம் மனந்திரும்பி அறிக்கையிட்டால், அவர் பாவத்தை மன்னிப்பார். நம்மைத் திரும்ப ஏற்றுக்கொள்வார்; அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய இரக்கம் நித்தியம். கோபிக்கும்போது அன்புகூருகிறார்; கடிந்துகொள்ளும்போது இரங்குகிறார். கர்த்தர் இரக்கமும், கிருபையும் பூரண இரக்கமும் உள்ளவர். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குப் பதில் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச்சரிக்கட்டாமலும் இருக்கிறார். வானம் பூமிக்கு எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருடைய இரக்கமும் அவருக்குப் பயந்தவர்கள்மேல் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. கர்த்தருடைய தண்டனையை நாம் அசட்டைபண்ணாமல், அவர் தண்டிக்கும்போது சோர்ந்துபோகாமல் இருப்போமாக. தாம் சிநேகிக்கிறவனை அவர் கண்டித்து, நாம் ஏற்றுக்கொள்ளுகிற எந்த மகனையும் அவர் தண்டிக்கிறார். கொஞ்ச கோபத்தில் தம்முடைய முகத்தை ஒரு நிமிஷம் நமக்கு மறைப்பார். நித்திய அன்பினால் நம்மேலிரங்கி, நம்முடைய மீட்பராகத் தம்மைக் காண்பிப்பார். அவருடைய கோபம் மாறிப்போம், அவருடைய அன்பு என்றுமுள்ளது; அவர் அடிக்கும் அடிகள் கொஞ்சம் லேசானது. ஒவ்வொரு நாளும் தம்முடைய தயவுகளை நமதுபேரில் சுமத்தி, வருஷத்தைத் தம்முடைய செல்லத்தால் முடிசூட்டுகிறார். அவர் எப்பொழுதும் நேசிப்பார்; ஆனால் எப்பொழுதும் கடிந்துகொள்ளார்.

என்றும் கடிந்துகொள்ளார்,
குற்றம் பார்த்து தண்டிப்பார்,
பிதாவைப்போல கோபிப்பார்,
தம்மை விடாமல் செய்வார்.

'தமக்குக் காத்திருக்கிறவர்களுக்குக் கர்த்தர் நல்லவர்'

புலம்பல் 3:25

கர்த்தர் யாவருக்கும் நல்லவர். அவருடைய இரக்க உருக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலும் உள்ளது. ஜெபித்துக் காத்திருக்கிற ஆத்துமாக்களின்பேரில் அவர் தயையுள்ளவர், பட்சமுள்ளவர், மிகவும் கவனமுள்ளவர்; அவர் தம்முடைய தயவை ஏழைகளுக்காக ஆயத்தம் பண்ணினார். அவருடைய தயவு நமதுபேரில் என்றுமுள்ளது; கேளுங்கள் என்று கட்டளையிடுகிறார்; கொடுப்போமென்று வாக்களிக்கிறார், காத்திருக்கச்செய்து உள்ளப்படியே நம்மை ஆசீர்வதிக்கிறார். அவரை நல்லவர் என்று பரீட்சித்திருக்கிறோம். நாம் அவரை நோக்கிக் கெஞ்சுவோமானால், அவருடைய தயவை இன்னும் அதிகமாய்ப் பார்ப்போம், இன்னும் அதிகமாய் ருசிப்போம். தாவீதை அருவருப்பான குழியிலிருந்து மீட்டார், எரேமியாவைச் சிறைச்சாலையிலிருந்து எடுத்தார், தானியேலைச் சிங்கங்களினின்று விடுவித்தார். பேதுருவை அலைக்குத் தப்பி ரட்சித்தார், பவுலை நாற்பது யூதர்கள் கொல்லப்பார்த்தபோது காப்பாற்றினார். கர்த்தர் நல்லவர், துன்ப நாளில் நமக்குப் பலத்த அரண். தம்மை நம்புகிறவர்கள் இன்னாரென்று அறிவார். நம்முடைய பெலனைப் புதிப்பித்து, நம்முடைய பாதையை வெளிச்சமாக்கி, நம்முடைய சத்துருக்கள்மேல் பழிவாங்கி, தேவபுத்திரரின் மகிமையான சுயாதீனத்திற்கு நம்மை நடத்துவார். விசுவாசத்தோடு அவருக்காகக் காத்திருப்போமாக; நம்பிக்கையோடு அவரை எதிர்பார்ப்போமாக. தம்முடைய தயவுள்ள சித்தத்தையும், விசுவாசத்தின் கிரியையையும் வல்லமையோடு நிறைவேற்ற அவரை நோக்கிக் கெஞ்சுவோமாக. கர்த்தருக்குக் காத்திரு, அவர் தயவுள்ளவரென்று சோதித்துப்பார். கர்த்தர்பேரில் காத்திருந்து, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்து.

இயேசுவே, என்னைக் காரும்,
உமது நேசம் தாரும்,
உமக்குக் காத்திருப்பேன்;
ரட்சிப்புக்கெதிர்பார்ப்பேன்

செப்டெம்பர்-மீ 1-உ

'மீட்கிறவர்'

ரோமர் 11:26

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய ஜனங்களுக்கு வேண்டிய ஒத்தாசைசெய்து, அவர்களை மீட்க அபிஷேகம் பெற்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். இதற்காக ஞானம் அறிவென்னும் பொக்கிஷங்கள் அவரிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. சகல மாம்சத்தின்மேலும் அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தேவலட்சணமும் அவருக்கு ஆதினம். மனிதர் கையில் தேவன் நம்மை ஒப்புவிக்கவில்லை; நம்மைத்தானே நாம் விடுவித்துக்கொள்ள நம்மை விட்டுவிடவில்லை. இயேசுவை நோக்கிப் பார்க்கவேண்டும். அவர் நம்மை எல்லாத் தீங்கிலும் நின்று விடுவித்து, நம்மைத் தம்முடைய மகிமையின் ராஜ்யத்துக்கென்று பாதுகாப்பதினால் மகிமைப்படுகிறார். எந்தச் சோதனையிலும் நாம் அவரிடத்தில் ஓடவேண்டும்; எந்த மோசத்திலிருந்தும் அவரே விடுவிப்பாரென்று எதிர்பார்க்கவேண்டும். நம்முடைய கெஞ்சுதலைக் கேட்டு, நமக்காக வெளிப்பட்டு, நம்மை ஆசீர்வதிப்பது தான் அவருடைய விசேஷித்த வேலை. சரீர சத்துருக்களினின்று மாத்திரமல்ல, ஆத்தும சத்துருக்களினின்றும் நம்மை விடுவிக்கிறார். வெளியரங்கமான சத்துருக்களினின்று மாத்திரமல்ல உள்ளான சத்துருவின் கைக்கும் நம்மைத் தப்புவிக்கிறார். நம்முடைய அருமையான கர்த்தருக்கு இருக்கும் இந்தப் பேரை நாம் மறவாமல், மற்றெல்லாரையும் நீக்கி, அவரையே நம்முடைய மீட்பராகப் பிடித்துக்கொள்வோமாக. எந்த வருத்தத்திலும் முதலாவது அவரிடத்தில் போய், எந்தச் சோதனையிலும் அவர்பேரில் சார்ந்து இருப்போமானால், ஒத்தாசை தேவையாயிராமல் போகுமட்டும் அவர் நம்மை விடுவிப்பார்; அவர் உன்னை ஆறு துன்பங்களிலிருந்து விடுவிப்பார்; ஏழு துன்பங்களில் உன்னைத் தீமையணுகாது. இயேசுவை விருதாவாய் நோக்கிப் பார்த்தவனுமில்லை. தேவனை விருதாவாய் நம்பினவனுமில்லை.

நம்பிக்கெட்டவனில்லையே
நம்பாதவனுக்குத் தொல்லையே.
கிறிஸ்தோர் துக்கிப்பதேன்?
சந்தோஷிக்கவேண்டுமே;
குறைகள் உண்டாவதேன்?
சொந்த ரட்சகர் உண்டே;
ரட்தம் சிந்தி மீட்பார்;
அவர் விண்ணப்பம் கேட்டார்.

'மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு'

ரோமர் 11:20

விசுவாசிகள் தங்களைக்குறித்து சிலவேளைகளில் எண்ண வேண்டியதற்கு மேலாக எண்ணிச் சோதனையில் விழுகிறார்கள். தங்களுக்கும், மிகவும் நிர்ப்பந்தரான பாவிகட்குமிருக்கிற வித்தியாசம் தேவனுடைய சுத்த இலவசமான கிருபையினால் உண்டாயிருக்கிறதை மறந்துவிடுகிறார்கள். தாங்கள் பலவீனரானதால், மேற்கொள்ளப்படத்தக்கவர்கள். புத்தியீனரானதால், திரிந்து அலையத்தக்கவர்கள். பாவிகளானதால், லேசாய் மோசம் போகத்தக்கவர்கள் சாத்தான் பெலசாலி, விடாகண்டன், மோசமுள்ளவன், தந்திரக்காரன், குரோத நினைவுள்ளவன், கெடுக்கப்பார்க்கிறவன், சுறுசுறுப்பாய், விடாமுயற்சியாய், கெடுதல் செய்யத் திரிகிறவன். உலகம் ஏய்க்கத்தக்கது. கண்ணி வைக்கிறது, சூதுள்ளது, நயஞ்சொல்லிக் கெடுக்கிறது என்பதை அவர்கள் மனதில் வைக்க வேண்டும். இதை நன்றாய் யோசிப்பார்களானால், விழிப்பற்றிருக்கமாட்டார்கள். பெருமையுள்ள கிறிஸ்தவன் கனியற்றவனென்பது நிச்சயம்; தேவன் அவனை விழும்படி விட்டுவிடுவார். ஆதலால் தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடி பார்க்கக்கடவன், தாவீது விழுந்தான், பேதுரு விழுந்தான், இன்னும் அநேகர் விழுந்தார்கள். மேட்டிமைச் சிந்தையயாயிராமல் , பயந்திரு; உன் ரட்சிப்பை பயத்தோடும், நடுக்கத்தோடும் தேடு என்று இவர்கள் பெருமூச்சோடும், கண்ணீரோடும் நம்மை எச்சரிக்கிறார்கள். தாழ்ந்த சிந்தையுள்ளவர்களாய்த் தேவன்பேரில் சார்ந்துகொண்டிருக்கிற குணத்தைப் பேணக்கடவோம். அப்போது சுகபத்திரமாயிருப்போம். பரிசுத்தரும் பாக்கியருமாயிருப்போம். தெய்வ பயந்தான் நம்முடைய காப்பு.

இயேசுவே! என்னைத் தாங்கும்
இல்லாவிட்டால் கால் வாங்கும்,
நான் ஏதுமற்ற பாவி,
உமக்கு முழு துரோகி,
எனக்கு வழி காட்டும்
நல் உபதேசம் ஊட்டும்.

'என் தேவன் உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்'

பிலிப்பியர் 4:19

இப்படிப் பவுல் அப்போஸ்தலன் பிலிப்பியருக்கு நிச்சயம் சொல்லுகிறூர்; நமக்கும் இப்படியே நிச்சயம் சொல்லுகிறூர். அவர்களுக்கு அநேகம் குறைவுகளிருந்தன; நமக்கும் அப்படித்தான். அவர்கள் தேவனைச் சார்ந்திருந்தார்கள்; நாமும் அப்படித்தான் சார்ந்திருக்கவேண்டும். அவர் குறைவை நிறைவாக்குவேனென்று கர்த்தர் சொன்னூர்; நமக்கும் அப்படித்தான் சொல்லுகிறூர். அவர்களுக்குக் கர்த்தர் உண்மையுள்ளவராயிருந்தார். நமக்கும் உண்மையுள்ளவராயிருப்பார். அவருடைய வாக்குத்தத்தங்கள் நமக்குப் பெரிய பொக்கிஷம். அவர் மாறூத தன்மை நமக்கென்றுமுள்ள ஆதரவு. யெகோவா இருக்கும்வரையில் நாம் சிநேகிதர்களற்றவர்களாகமாட்டோம்; நம்முடைய குறைவுகள் நீங்காமல்போகாது. கர்த்தர் நமக்கு வாக்குத்தத்தம்பண்ணின எல்லாவற்றிலும் ஒன்றும் தவறவில்லையென்று நாம் கடைசியில் சாட்சியிடுவோம். இன்று காலையில், 'கர்த்தர் இதுவரையில் என்னை ஆசீர்வதித்தார். கர்த்தாவே, உம்முடைய வார்த்தையின்படியே உம்முடைய அடியானை நன்றூய் நடத்தினீரே' என்று சந்தோஷமாய் நாம் சொல்லலாம். நமக்குக் குறைவு நேரிடும்போது, நாம் தேவவாக்கை நினைக்கவேண்டும். அந்த வாக்குத்தத்தங்கள் தம்முடைய பயத்தைத் தணிக்கும், மனசுக்கு ஆறுதலைத் தரும். ஒரு நாளுக்குள்ளாக என்ன நடக்குமென்று ஆறுதலைத் தரும். ஒரு நாளுக்குள்ளாக என்ன நடக்குமென்று அறிவோம். நம்முடைய தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி நம்முடைய குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவாரென்று அறிவோம். இதைக்கொண்டு வீண் கவலைகளைத் துரத்தி, தேவன் நம்முடைய சவரட்சணைகளைக் கர்த்தாவென்று மகிழ்வோமாக. நமக்கு வேண்டியதைத் தருகிறவர் ஒருபோதும் நம்மைக் கைவிடார்.

இயேசு பெரும் களஞ்சியம்
வற்றூத சமுத்திரம்,
அவரிடம் வருபவர்,
யாவையும் அடைபவன்;
போதும் என்று சொல்லுகிறவன்,
ஒன்றும் அடையாதவன்

செப்டெம்பர்-மீ 4-உ

‘உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷம்’
எபேசியர் 1:13

நம்முடைய ரட்சிப்பு பாவத்தினின்றும், சாபத்தினின்றும்,, தேவகோபத்தினின்றும் உண்டாகும் விடுதலைதான். இது நம்மாலே முடியாது. தேவன் நம்மை இலவசமாய்ப் பரிபூரணமாய், நித்தியமாய் மீட்கும்பொருட்டுத் தம்முடைய சொந்தக் குமாரனை நம்முடைய தன்மையைத் தரித்தவராய் அனுப்பினார். சுவிசேஷம் நம்முடைய ரட்சிப்பைப்பற்றிய நல்ல செய்தி, தேவன் அன்புமயம், கிருபை ஆளுகை செய்கிறது. மோட்சம் திறந்திருக்கிறது. நம்முடைய குற்றம், பெலவீனம், பயம் நீங்குகிறதற்கு வழியுண்டு. நம்மை ஏற்றுக்கொண்டு நம்மை ஆசீர்வதித்து, தம்மோடு என்றும் நம்மை மகிமைப்படுத்த, தேவன் காத்திருக்கிறாரென்று நமக்குத் தெரியப்படுத்த அது அனுப்பப்பட்டிருக்கிறது. கிறிஸ்து செய்த எல்லாவற்றையும், அவரிடத்திலிருக்கிற எல்லாவற்றையும் நமக்கு முன்வைத்து, வந்து அதை ஏற்றுக்கொண்டு, உபயோகித்து, பாக்கியராயிருங்களென்று அது நம்மைக் கூப்பிடுகிறது. அது நாமாய் சொந்தமாக ஏதாவது செய்யவேண்டுமென்று கேட்கிறதில்லை. தன்னிடத்திலுள்ளதெல்லாவற்றையும் ஏழைகளும், மூடவரும், குருடருமான பாவிகளுக்கு இலவசமாய்க் கொடுக்கிறது. நம்முடைய நிர்ப்பந்தத்தைப் போக்க நம்முடைய குறைவுகளை நீக்கவேண்டியதெல்லாம் அதினிடத்திலுண்டு. அது கொண்டுவருகிறதற்கு மிஞ்சி நாம் ஆசிக்கமுடியாது. அது கிருபை நிறைந்தது, மகிமை நிறைந்தது, அருமையான சுவிசேஷம், மகிமை நிறைந்த செய்தி. அதை நாம் அங்கீகரித்து, விசுவாசித்து, தினசரி அதின்படி நடந்து பாக்கியசாலிகளானால் நல்லது. விசுவாசத்தாலுண்டாகும் சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் நம்மை நிரப்பவும், நம்பிக்கையில் நாம் விருத்தியடையச் செய்யவும், அவநம்பிக்கை, சந்தேகம், பயம் இவைகளை நாம் மேற்கொள்ளவும் வேண்டுமென்பதுதான் அதன் நோக்கம். தேவன் கொடுத்த சுவிசேஷத்தில் பலத்து விசுவாசம் வைத்திருப்போமானால், நம்முடைய ஆத்துமங்களுக்குப் பலத்த ஆறுதல் கிடைக்கும்.

இயேசு உனக்காக மரித்தார்,
மன்னிப்பும் சம்பாதித்தார்;
நம்பிப்போ மன்னிப்படைவாய்,
நம்பு மோட்சம் பெறுவாய்.

'நான் புறம்பே தள்ளுவதில்லை'

யோவான் 6:37

எவ்வளவு பலத்த விசுவாசியும் சிலவேளை பயத்துக்கு இடங்கொடுக்கிறதுண்டு. தேவன் தனக்காகச் செய்த யாவற்றையும் சந்தேகிக்கிறதுமன்றி, தேவ வசனத்திலுள்ள எந்த வாக்குத்தத்தமும் தனக்குரியதோ என்று கலங்குகிறதுமுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் முன்னே நாம் நல்ல ஆறுதலை மொண்டுகொண்ட கிணற்றண்டைக்குப்போய் ஆறுதலைத் தேடுகிறது நல்லது. அப்படிப்பட்ட கிணறுகளில், இன்றைக்கு நாம் தெரிந்துகொண்ட இயேசு சொன்ன வார்த்தைகள் மிகவும் விசேஷித்தது. இந்த வார்த்தைகளில் தம்மிடத்தில் வருகிற எந்தப் பாவியையும் தாம் தள்ளப்போகிறதுமில்லை, தம்முடைய சிம்மாசனத்தைவிட்டு தள்ளப்போகிறதேயில்லை என்று தீர்மானம் பண்ணிப்போட்டதாகச் சொல்லுகிறார். அவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும், எத்தனை பாவங்களைச் செய்தவனாயிருந்தாலும், அவன் வயசு நிலைமை எப்படிப்பட்டதாயிருந்தாலும், அவனைத் தள்ளவேமாட்டேன் என்கிறார். அவருடைய கரமும் மனமும் எப்பொழுதும் திறந்திருக்கிறது; அவர் நின்று நம்மைத் தம்மண்டைக்கு அழைக்கிறார். நான் புறம்பே தள்ளுவதில்லை என்கிறார்; அவர் இப்படிச் சொல்லி இரண்டாயிரம் வருஷமானது. கோடாகோடி பாவிகள், பலவிடங்களிலுமுள்ளவர்கள், பல தன்மையுள்ளவர்கள், அவரிடத்தில் வந்து, அவரை உண்மையுள்ளவரென்று கண்டிருக்கிறார்கள். நாம் சந்தேகத்தினாலும் பயத்தினாலும் அவரை விசனப்படுத்தி, நம்மை வாதித்துக்கொள்ளாமல், அவர் வார்த்தையை நம்புவோமாக. அவர் நம்மை ஏற்றுக்கொள்வார், நம்முடைய பாவங்களை மன்னிப்பார், நம்மை ஆசீர்வதிப்பார்.

இயேசு நீர் சகலமும்
என்றெப்போ நான் ருசிப்பேன்
முத்திரை எனக்கீயும்
சந்தேகியாமல் செய்யும்.

'அவர்களை மனப்பூர்வமாய் நேசிப்பேன்'

ஓசியா 14:4

கர்த்தர் தம்முடைய ஜனங்களை, பெற்றோர் தங்கள் பிள்ளைகளை நேசிக்கிறதுபோல இயல்பாய் நேசிக்கிறார். நம்மிடத்தில் நேசிக்கதக்கதொன்றும் இராவிட்டாலும் இலவசமாய் நேசிக்கிறார். அவர்களை நேசிக்கத்தக்கதேதாவது ஒன்றைக் காணவேண்டுமென்று அவர் தேடுகிறதுமில்லை; அவர்களிடத்தில் உள்ளது ஏதாவது அவர்களை நேசியாதபடிக்குத் தடைசெய்ய விடுகிறதுமில்லை. இரக்கத்தின் பாத்திரங்களாக, இயேசுவின் சீஷர்களாக, தம்முடைய சாயலையும், நாமத்தையும், தன்மையையும்தரித்துக்கொண்டவர்களாக அவர்களை நேசிக்கிறார். அவர்கள்பேரில் அவர் வைக்கும் நேசம் மட்டற்றது, விருத்தியடையத்தக்கது, மாறாதது. அவர்களைப் பகைத்து, கோபித்து, அழிவுக்கு அவர்களை நேமிக்கவேண்டியிருந்தாலும் இன்னும் அவர்களை நேசிப்பார். சிநேகிதரே, தேவன் நம்மை நேசிக்கிறதற்குக் காரணம் நம்மிடத்தில் இருக்கிறதென்று நாம் பார்க்கக்கூடாது. நம்மிடத்தில் அல்ல, அவரிடத்திலிருக்கிறது; நான் உன்னை நித்திய சிநேகத்தால் நேசித்தேன் என்று அவர் சொல்வதை விசுவாசிப்போமாக. பிதா தாமே உங்களை நேசிக்கிறார் என்று அவர் சொன்னதைக்கொண்டு தைரியமடைந்து, அவரைப்பார்த்துக் கெஞ்சுவோமாக. மற்றவர்களிடத்திலிருந்து நம்மைப் பிரித்த கிருபைக்காக அவர் முன்னே சந்தோஷித்து அவரைத் துதிப்போமாக. அவர் நம்மைச் சிநேகிக்கும்போது தடுப்பவன் யார்? அவர் நம்மைச் சிநேகித்தால், அவரோடு தர்க்கிக்கிறவன் யார்? அவர் வார்த்தையில் கண்டிருக்கிறபடி அவர் நம்மைச் சிநேகிக்கும்போது, அவர் அன்பினின்று நித்தியமாய்ப் பாயும் கனத்தையும், சிலாக்கியத்தையும், பாக்கியத்தையும் மதிப்பவன் யார்? இலவசமான கிருபைக்கும், சுத்த தயவால் கிடைக்கும் அன்புக்கும் சகல மகிமையும் உண்டாவதாக.

கிருபை நிறைந்த யேசுவே!
உமது தயை கடலே
உமது சமூகம் காட்டும்,
நான் பேழைக்குள்ளே வரட்டும்;
உமது இரக்கம் பெரிது;
என்னைவிட்டது போகாது.

செப்டெம்பர்-மீ 7-உ

'நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்'
ரோமர் 12:12

தனக்குள்ளதில் விசுவாசி எப்பொழுதும் சந்தோஷப் பட ஏதுவில்லை; அவன் சகலத்தையும் இழந்தவனைப்போலிருக் கிறான். ஆகிலும் அப்பொழுதும் நம்பிக்கையிலே சந்தோஷப் படலாம்; நித்திய ஜீவனையும் விசுவாசத்தால் வரும் நீதியையும் அவன் எதிர்பார்க்க நியாயமுண்டு. தன்னுடைய சரீரத்தில் ஜீவனாலும் மரணத்தினாலும் தேவன் மகிமைப்படுவாரென்று அவன் விரும்பலாம். சரீர உயிர்த்தெழுதலுக்கும், ஆத்துமா வோடு இணைக்கப்படுவதற்கும் அவன் நம்பிக்கையோடு காத் திருக்கலாம். தன் ரட்சகர் வெளிப்படுவார்; அவரால் குறை வின்றி ரட்சிக்கப்படுவோம் என்று அவன் நம்ப ஆதார முண்டு. சுவிசேஷம் அவனுக்கு அறிவிக்கிற நம்பிக்கை பர லோகத்தில் அவனுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அது நித்திய கனமகிமை, நீதியின் கிரீடம், என்றுமுள்ள சுதந்தரம், இவை கள் அவனுக்கு வைக்கப்பட்டிருக்கிறது; இவைகள் கிடைக்கு மென்கிற நம்பிக்கையினால் அவன் சந்தோஷப்படலாம். அவன் ஆசையை எழுப்பிவிட, அவனுக்குள் தைரியத்தைப் பிறப் பிக்க, அவன் அவநம்பிக்கையை நீக்க, அவனைச் சந்தோஷத் தால் நிரப்ப,இவைகள் அவனுக்குமுன் வைக்கப்பட்டிருக்கி றது; இலவசமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது; தெளிவாய் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது; பத்திரமாய் பாது காக்கப்பட்டிருக்கிறது; ஆதலால் நம்முடைய நம்பிக்கையைப் பற்றி நாம் ஒருபோதும் வெட்கமடையோம். இருண்ட பயங் களுக்கும், வருத்தமான சந்தேகங்களுக்கும் நாம் இடங்கொ டாமல், நம்முடைய தலைகளை உயர்த்தி, நம்முடைய நம்பிக் கைக்குச் சீக்கிரம் பங்காளிகளாவோமென்று சந்தோஷப்படு வோமாக. நாம் தேவனில் நம்பிக்கைவைத்து, மென்மேலும் தினந்தோறும் அவரைத் துதித்து, நம்பிக்கையை ஆத்துமா வுக்கேற்ற உறுதியும் நிச்சயமுமான நங்கூரமாகக் கையாடு வோமாக. தேவனை நம்புகிறவனுடைய நம்பிக்கை அவமாயப் போகாது.

நீர் எனக்குச் சொந்தமென்றும்
நான் உம்மையே காண்பேனென்றும்,
நம்பி மகிழச் செய்திடும்,
மகிழ்ந்து போற்றப்பண்ணிடும்.

'நமது தேவனுடைய வசனமோ என்றைக்கும் நிற்கும்'

ஏசாயா 40:8

தேவனுடைய வசனம் அவருடைய தன்மையைப்போல மாறாதது. என்னுடைய உடன்படிக்கையை மீறமாட்டேன்; என் வாயில் நின்று புறப்பட்டதை மாற்றமாட்டேன் என்கிறார். விசுவாசியே, இது உனக்கு ஆறுதல்; ஒவ்வொரு வாக்குத் தத்தமும் உறுதிப்பட்டிருக்கிறபடியால் நிறைவேறும். அவர் சொன்ன வாக்கு என்ன? 'உன் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும், உறைந்த மழையைப்போல வெண்மையாகும்.' 'நீதிமானுக்கு அநேக உபத்திரவமுண்டு. கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்றும் அவனை மீட்பார்.' 'உனக்கு விரோதமாகச் செய்யப்பட்ட எந்த ஆயுதமும் வாய்க்காது.' 'நான் உன்னைப் பலப்படுத்துவேன், உனக்குத் துணை நிற்பேன்.' 'நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.' 'உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு எந்த நன்மையும் வழங்காதிரார்.' இவைகள் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள்; அவர் சொன்னதெல்லாம் நிச்சயமாய் நிறைவேறும். ஓர் சிறு எழுத்தாவது, ஒரு எழுத்தினுறுப்பாவது தவறாது. தம்முடைய நோக்கத்தை ஒழுங்குபடுத்தினார், வாக்கும் அருளினார். எந்தக் காரியமும், அவர் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றும்; மனுஷன் கொண்ட நோக்கம் வியர்த்தமாய்ப்போவதுண்டு. தேவனுடையது ஒருபோதும் வியர்த்தமாகமாட்டாது. மனுஷனுடைய மனம் மாறும், அவன் வாக்குத் தவறும், தேவன் மாறமாட்டார், அவர் வாக்கு தவறவுமாட்டாது. அவர் உண்மையுள்ளவர், அவர் தம்மை மறுதலிக்கமாட்டார். அவரை நம்பி பயமற்றிரு. தேவவாக்கு கன்மலையிலும் உறுதியானது, அது அவருடைய தன்மையைப்போல மாறாதது.

பூமி நிலை மாறினாலும்,
வானம் ஒழிந்திடினும்,
தேவ வாக்கு மலைபோல்
அசையாமல் நிற்கும் அச்சொல்.

செப்டெம்பர்-மீ 9-உ

'கர்த்தருடைய பரிசுத்தவான்களே, நீங்கள் எல்லாரும் அவரில் அன்புகூருங்கள்'

சங்கீதம் 31:23

ஆசிக்கத்தக்க எந்த நன்மைக்கும் தேவன் தம்மை ஊற்ருகவும், உயிராகவும், முடிவாகவும் வெளிப்படுத்தியிருக்கிருர். இயேசுவில் அவரைப் பார்த்தால் பதிஞயிரம்பேரிலும் அதிக அழகானவர், முற்றிலும் விரும்பப்படத்தக்கவர்; லோகத்தின் ஐசுவரியமெல்லாம் அவருடையது; நம்முடைய அன்புக்கெல்லாம் அவர் பாத்திரர்; நம்முடைய ஆசையெல்லாம் அவரிடத்தில் நிறைவேறும், அவர் நமக்குச் சொந்தமாஞல், நாம் நித்தியத்துக்கு ஆயத்தப்பட்டிருப்போம். அவர் நமது பட்சமாஞல், நாம் நித்தியமாய்ச் சுகித்திருப்போம். நமதுபேரில் அவர் கொண்டிருக்கிற எண்ணமென்ன என்று ஒருவேளை நீ கேட்பாய். திட்டமாய்ச் சொல்லவேண்டுமாஞல், தயவுதான்; அவருடைய கண்களில் நமக்குத் தயவு கிடைத்தது; துக்கப்படுகிற பாவிகளுக்கு அவர் சிநேகிதன்; நித்திய அன்பிஞல் நம்மை நேசிக்கிருர். இதைப்பற்றிச் சந்தேகிக்கிருயா? அவருடைய வசனத்தை வாசி, கல்வாரியை நோக்கிப்பார், அவருடைய ஜனங்களைக் கேள், நீயே சோதித்துப்பார். இம்மட்டும் நமக்கு அவர் செய்ததைப் பார். நாம் இருக்கிறது அவராலேதான், நமக்கிருக்கிற நம்பிக்கை அவர் கொடுத்ததுதான், நமக்கிருக்கும் சுயாதீனம் அவர் சம்பாதித்ததுதான், நமக்கிருக்கிற பரிசுத்தம் அவர் முடித்ததுதான். அவருடைய கிருபை ஒன்றிராவிட்டால், நாம் எப்படிப்பட்டவர்வளாயிருப்போம் என்று கவனி. அவருடைய இரட்சிப்பு இராவிட்டால், நம்முடைய நிலைமை எப்படியிருக்குமென்று பார். நாம் இப்பொழுது இருக்கிறதும், இனிமேல் இருப்பதும் அவருடைய அன்பின் பயன். பரிசுத்தவான்களே, நீங்கள் எல்லாரும் கர்த்தரை நேசியுங்கள்; அதுதான் பாக்கியம், அதுதான் பரிசுத்தம், அதுதான் மோட்சம், அதுதான் பிரதானமான கடமை, இனிமையான சிலாக்கியம்.

அன்பு யாவும் தந்திடும்,
வருத்தங்களை நீக்கிடும்,
ஜெபம், பலி, துதியே,
பரிசுத்தமும் அதே.

செப்டெம்பர்-மீ 10-உ

'துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல்செய்யவும்'
ஏசாயா 62:2

கர்த்தருடைய ஜனங்களெல்லாரும் துயரப்படுகிறவர்கள்தான். செய்த பாவத்தை நினைத்துத் துயரப்படுகிறார்கள், உள்ளே இருக்கும் கேட்டைப்பார்த்துத் துயரப்படுகிறார்கள், தேடுகிற அத்தாட்சிகள் இல்லையென்று துயரப்படுகிறார்கள், ஆறுதலை இழந்துவிட்டோமென்று துயரப்படுகிறார்கள், பிரயோஜனமற்றவர்களாய் இருக்கிறோமென்று தங்களை உணர்ந்து, மற்றவர்களுடைய பாவங்களைக் கண்டு, சபையின் நிலைமையைக் கவனித்து, இனத்தார் சிநேகிதருடைய ரட்சிப்பை விரும்பித் துயரப்படுகிறார்கள். இயேசுவின் அன்பை நாம் ருசியாமல் இருக்கும்போது, அவரை விரும்பித் துயரப்படுகிறோம்; அவருடைய அன்பை ருசிக்கும்போது, அவருடைய பாடுகளை நினைத்துத் துயரப்படுகிறோம். துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதல் அடைவார்கள் என்று ரட்சகர் சொன்னார். இயேசு தாமே நமக்கு ஆறுதல் அளிக்கும்படி ஏற்படுத்தப்பட்டு அபிஷேகம் பெற்றார். சோர்பு அடைந்தவனுக்குத் தகுந்த சமயத்தில் ஒரு வார்த்தை சொல்ல, கல்விமானுடைய நாவு அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய பாவங்களை மன்னித்து, நம்முடைய அக்கிரமங்களைக் கீழ்ப்படுத்தி, ரட்சிப்பின் சந்தோஷத்தை நமக்குத் திரும்பக்கொடுத்து, தம்முடைய ஊழியத்தை நமக்குத் தந்து, அதைச் சித்தியடையச் செய்யும்போது அவர் நம்மை ஆறுதல்படுத்துகிறார். தம்முடைய வசனத்தைக் கொண்டும், 'ஊழியக்காரரைக்கொண்டும், தம்முடைய ஆவியைக்கொண்டும் நமக்கு ஆறுதல் அளிக்கிறார். ஆறுதலுக்காக ஏற்படுத்தப்பட்டவரைப் பார்த்தால், தேவஞானத்தின் அதிசயம் விளங்கும். அந்த வேலை என்றும் நடந்தேறுவதைப் பார்த்தால், அவருடைய உண்மையின் அதிசயம் விளங்கும். அந்த வேலை என்றும் நடந்தேறுவதைப் பார்த்தால், அவருடைய உண்மையின் அதிசயம் விளங்கும். அவர் என்றும் ஜீவித்திருக்கிறார், நம்மை ஆறுதல்படுத்த ஜீவித்திருக்கிறார், இப்படி ரட்சகரைப் பார்ப்பது எவ்வளவு இனிமையான காட்சி. இதை நன்றாய்ப் பார்ப்போமாக. முக்கியமாய்ச் சோதனையிலும், துன்பத்திலும் பார்த்துக்கொண்டே இருப்போமாக.

நான் கர்த்தருக்குள் மகிழ்வேன்
அவர் அன்பில் களிகூர்வேன்;
ஆறுதலெனக்களிப்பார்
துன்பத்திலே விடுவிப்பார்.

'சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிருயா?'

யோவான் 5:6

இன்று காலமே பெரிய வைத்தியர் நம்மண்டையில் வந்து சொஸ்தமடைய விரும்புகிருயா என்று கேட்கிருர். இது நம்மை ஆராய்கிற கேள்வி. நீ முற்றிலும் பரிசுத்தமாக விரும்புகிருயா? நீ அவருக்கு ஒப்பாகும்படி அவர் என்ன செய்தாலும் உனக்கு மனமா? இயேசு உன்னை முற்றிலும் பரிசுத்தமாக்கக்கூடியவர். இரக்கத்தின் காலம் இதுதான். சொஸ்தமடைய விருப்பமுண்டா? அப்படியாளுல் நம்மை அதற்கென்று அவர் கரத்தில் ஒப்புக்கொடுத்து, அவர் எதைச் செய்தாலும் அதற்குக் கீழடங்குவோமாக. இயேசுவை நோக்கிப் பார்த்தால் அவர் நம்மைச் சுகப்படுத்துவார். இலவசமாய் சுகப்படுத்துவார். உன்னைப்பற்றி அவருக்குச் சகலமும் சொல்லு. நித்தம் அவரிடத்தில் யோசனை கேள்; முற்றிலும் அவரை நம்பு; அவருடைய திறமைக்கும் பட்சத்துக்கும் ரூபகாரமாக அவருடைய பிதாவின் சிம்மாசனத்துக்கு முன்னே பிரகாசிப்பாரென்று எதிர்பார்த்திரு. இயேசுவினுல் தீராத வியாதியிராது. அவர் பணமுமின்றி, கிரயமுமின்றி சொஸ்தமாக்குகிறதினுல் மிகவும் ஏழையான பாவி அவரண்டை போகாமல் இருக்கமாட்டான். இயேசுவே, இன்று காலமே எங்களைச் சுகப்படுத்தும்; எங்கள் இருதயங்களை மிருதுவாக்கும். அடங்காத எங்கள் சித்தத்தை ஒழுங்குபடுத்தும்; எங்களைப் பரிசுத்தத்தால் நிரப்பும்; அன்பினுல் நிரப்பும்; உம்முடைய பாதத்தில் விழுந்துகிடக்கிருேம், உம்முடைய வாக்கை நம்பியிருக்கிருேம்; சொஸ்தமாக வேண்டுமென்பதே எங்கள் முழு விருப்பம்.

இரங்கும் இயேசு ரட்சகா,
நின் பாதத்தில் கிடக்கிறேன்;
பாரம் நீக்கிக் கஷ்டம்போக்கி
கல் இருதயத்தை மாற்றி,
சுகம் தந்து கிருபை ஈந்து,
என்னை சொந்தமாக்கிக்கொள்வீர்.

‘ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்’
யோவான் 10:15

இயேசுவுக்குச் சொந்த மந்தை ஒன்று உண்டு. அவர் பிதா தெரிந்து எடுத்து அதை அவருக்குக் கொடுத்தார்; அதை ஏற்றுக்கொண்டு மேய்ப்பரானர்; ஆடுகள் அலைந்து அழிந்துபோக ஏதுவாயிருந்தபோது, அவைகளுக்கு அவர் ஏற்பட்டுத் தன் ஜீவனைக் கொடுத்தார். இயேசுவின் அன்பு எவ்வளவு மட்டற்றது. அவர் தம் பிதாவின் மடியை விட்டார், தேவதூதனின் கீதத்தை விட்டார்; மகிமையின் சிம்மாசனத்தைவிட்டார்; பிணையாளி ஆகும்படி மனுஷனுனர்; தம்மைத் தாமே மனுஷர்களுக்காக ஒப்புக்கொடுத்தார். அவர்களுடைய ரத்தத்துக்காகத் தம்முடைய ஜீவனைக் கொடுத்தார். அவர் கொடுத்ததை தேவன் அங்கீகரித்துக்கொண்டபடியால், அவர் அவர்களைத் தேவனுக்கென்று தம்முடைய ரத்தத்தினலே சகல ஜாதியிலிருந்தும், தேசத்திலிருந்தும், ஜனத்திலிருந்தும், பாஷையிலிருந்தும், தெரிந்துகொண்டார். அவர்கள் இரண்டு வகையாய் அவருடையவர்கள். தங்களை விற்றுப்போட்ட போது அவர்களைக் கொண்டார். தம்முடைய பிதா, முன்னே தானே அன்பினலே அவருக்கு அவர்களைக் கொடுத்தார். இதிலேதான் அன்பு உண்டு; நாம் இயேசுவை நேசிக்கவில்லை, அவரே நம்மை நேசித்து, நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைப் பிராயச்சித்தமாகத் தந்தார். நாம் அவருடைய ஆடுகளா? ஆடுகளைப்போலிருக்கிறேமா? அவைகளை நேசித்து அவைகளோடு ஒட்டிக்கொண்டு, அவைகளோடு நடக்கிறேமா? அவருடைய ஆடுகள் சாந்தமுள்ளது, சேதப்படுத்தாது, சமாதானமுள்ளது, தாழ்மையுள்ளது, அவரைச் சார்ந்து அவருக்கே தங்களை முற்றிலும் ஒப்புக்கொடுக்கிறது; அவைகள் அவருடைய சத்தத்தைக் கேட்டு, அவருடைய வழிகளை நோக்கி, அவர் எங்கேபோனுலும் கூடப்போம்.

ஆட்டை மீட்கவேண்டுமென்று
ரட்சகர் கிருபைக்கொண்டு,
தம்மைத்தாமே தருகிறூர்,
ரத்தமும் சிந்துகிறூர்,
நல்ல மேய்ப்பன்,
இவ்வன்புபோல் வேறுண்டோ?

செப்டெம்பர்-மீ 13-உ

பொறுமையானது பூரணகிரியை செய்யக்கடவது'

யாகோபு 1:4

பொறுமையென்று சொல்லும்போது, சோதனை துன்பம் இருக்கவேண்டும்; சுமக்கிற சுமை இருக்கவேண்டும். படபடப்பு, ஆத்திரம், முறுமுறுப்பு, அவநம்பிக்கை இவைகளுக்கு இது எதிரிடை. இது கீழ்ப்படிதலையும், தேவனுக்கு முன்பாக மவுனத்தையும், அவர் செய்கிறது சரியென்கிற மனத்திருப்தியையும் உண்டாக்கும். துன்பங்கள் மூலமாய்ப் பரிசுத்த ஆவியானவர் இந்த நற்குணத்தை உண்டுபண்ணுகிறார்; துன்பம் பொறுமையைப் பிறப்பிக்கும். எந்தக் கிறிஸ்தவனுக்கும் இது உண்டு. இதை அவன் முயற்சி படுத்துவான்; அது பூரணகிரியை செய்யும்படி விடுவான். வேதவசனத்தில் பொறுமையைப்பற்றி நமக்கு முன் வைத்திருக்கும் திருஷ்டாந்தங்களை இதற்கென்று கவனிப்போமாக. தேவனுடைய வாக்கை எடுத்துச்சொல்லிக் கெஞ்சுவோமாக. எந்தத் துன்பத்தையும் சோதனையையும் ஏற்படுத்தினது நித்திய அன்பென்றும், துன்பங்கள் வருமென்று இயேசு முன்னேதானே நம்மை எச்சரித்தாரென்றும், நாம் பார்த்து நடக்கத்தக்க மாதிரியை நமக்கு முன்வைத்தாரென்றும் நினைப்போமாக. பொறுமையின்மை நம்முடைய மார்க்கத்துக்குக் குறைவுண்டாக்கி ஆவியைத் துக்கப்படுத்துகிறது. பொறுமையோ மற்றவர்களுக்குப் பிரயோஜனத்தையுண்டாக்கி, நமக்கும் அனுகூலத்தைக் கொடுக்கும். பொறுமையில்லாமையாகிய சோதனைக்கு விழித்திருந்து, பொறுமையிலே நம்முடைய ஆத்துமாவைப் பத்திரப்படுத்துவோமாக. அப்போது கிறிஸ்தவர்களுக்குரிய லட்சணம் நிறைவாகும். நம்முடைய உத்தமத்துக்கு நல்ல திருஷ்டாந்தமாகும்; நம்முடைய நடத்தை திவ்வியமானதென்றும் ரூபிக்கும்.

நீர் கொடுக்கும் பாத்திரம்
கசப்பாயிருந்தாலும்,
நின் கரத்தின் சூத்திரம்
எக்கசப்பையும் மாற்றும்;
சுவாமி பொறுமை தாரும்,
என் இருதயத்தைக் காரும்.

செப்டெம்பர்-மீ 14-உ

'வேண்டியதெல்லாம் எனக்குண்டு'

ஆதியாகமம் 33:11

ஏழை யாக்கோபு ஒரு சிறு கம்போடு தன் பிதாவின் வீட்டை விட்டான். திரும்பும்போதோ இரண்டு பட்டாளமானான்; தேவன் அவனை அவ்வளவாய் ஆசீர்வதித்தார். பூமியில் அவனுக்கு இருந்த பொக்கிஷமல்ல, தகப்பன் காட்டின பட்சமும் தேவகிருபையும் எனக்கு எல்லாம் உண்டு என்று சொல்லப்பண்ணிற்று. சிநேகிதரே, நாமும் இப்படிச் சொல்லலாம். தேவன் நம்மை நித்திய அன்போடு நேசிக்கிறார். ஒழுங்குபடுத்தப்பட்ட உடன்படிக்கையில் நமக்குப் பங்குண்டு. வாக்குத்தத்தங்கள் நமக்குச் சொந்தம்; தேவையானதைப் பெற்றுக்கொள்ளக் கிருபாசனத்தண்டையில் வர அழைக்கப்படுகிறோம். நம்முடைய கவலைகளையெல்லாம் தேவன்மேலே போடலாம். பூமியிலுள்ள எந்த நற்காரியத்தையும் எதிர்பார்க்க நியாயமுண்டு; நம்முடைய பிரயாண முடிவில் நமக்கு மகிமை கிடைக்கும். எனக்கு வேண்டியதெல்லாம் இருக்கிறது என்று நாம் ஆர்ப்பரித்துச் சந்தோஷப்படவேண்டாமா? என்னைப் பரிசுத்தமாக்கத் தேவையானது, என்னைப் பாக்கியசாலியாக்கத் தேவையானது, என்னை நன்றியுள்ளவனாக்கத் தேவையானது, தேவதூதரை ஆச்சரியத்தால் நிரப்பப் போதுமானது, பிசாசுகளைப் பொறாமையினாலும் மனவருத்தத்தாலும் நிரப்பப் போதுமானது எனக்கிருக்கிறது. இயே பெரிய, நிலையுள்ள மகிமையான, ஆசீர்வாதங்களால் எங்களை நிரப்பினீர்? உமது நாமத்துக்கு நித்திய தோத்திரம், உமது கிருபைக்கு நித்திய மகிமையுண்டாவதாக; உமது கிருபைக்கு நித்திய மகிமையுண்டாவதாக; போதுமானதைப் பெற்றவனைப்போல் உலகத்தில் ஜீவனம் பண்ணுகிறது எவ்வளவு நல்லது.

இயேசுதான் என் பொக்கிஷம்,
என் செல்வம் அவரே;
மற்றோர் லோகம் நாட்டும்
அவரே பேரின்பமே;
இயேசு தான் களஞ்சியம்,
அவரால் வரும் ஜெயம்.

'எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று'
1 பேதுரு 4:7

மலைகள் ஒழிந்துபோகும், குன்றுகள் பெயர்ந்து போகும்; ஏகோவாவின் வார்த்தை, அன்பு, நோக்கம், லட்சணம் அந்தப்படியே இருக்கின்றன. உலகத்து வேஷம் கடந்து போகிறது; கர்த்தருடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றும் நிலைத்திருக்கிறான். சகலத்துக்கும் முடிவு சமீபமாயிற்று. நம்முடைய பிரயாசங்கள் சீக்கிரம் முடியும், நம்முடைய வர்த்தகம் நின்றுபோகும், பூமிக்குரிய சம்பந்தங்கள் விட்டுப்போகும். இவ்வுலகத்துக்குரிய இன்ப துன்பங்கள் முடிவு அடையும், கடைசிப் பிரசங்கம் முடியும், நன்மை செய்வதற்கான கடைசிச் சமயம் வந்துபோகும், தேவகுமாரனுடைய வருகை சமீபிக்கிறது. அவ்வளவு பெரிய விசேஷித்த காரியத்துக்கு நாம் ஆயத்தப்பட்டிருப்போமாக. வீணாய் நேரத்தைக் கழிக்கவும், சோம்பலாயிருக்கவும், பாவஞ்செய்யவும், சோதிக்கப்படும்போது கர்த்தர் சமீபமாயிருக்கிறார் என்பதை நினைத்துக்கொள்வோமாக. சரீர காரியங்களில் தெளிந்த புத்தியுள்ளவர்களாய், அடக்கமுள்ளவராய் நடப்போமாக. நம்மைப்பற்றியும், மற்றவர்களைப்பற்றியும், நம்மைச் சூழ இருக்கும் சகலத்தைப்பற்றியும் சரியானபடி நிதானிப்போமாக. படபடப்பாய், கவலையீனமாய், ஏனோதானோவென்றிராமல், கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர்கள்போல் நிதானமாய்ப் பேசி நடப்போமாக. வருகிறவர் வருவார், தாமதியார். அவர் வரும்போது சந்தோஷத்தோடும், மகிழ்ச்சியோடும், ஆனந்தத்தோடும் அவரை ஏற்றுக்கொள்ள, நாம் ஆயத்தமாயிருக்கவேண்டுமென்று கற்பிக்கிறார்.

நியாயந்தீர்க்க வருகையில்
மரணத்திற்கு அஞ்சும் நான்,
அபாத்திரன் நின் பார்வையில்
வலதுபக்கம் நிற்பேனோ?

'நரை வயதுமட்டும் உங்களைத் தாங்குவேன்'
ஏசாயா 46:4

இயேசுகிறிஸ்துவின் விருத்தாப்பிய சீஷனுக்கு இது எவ்வளவு இனிமையான வாக்கு. தேவன் அவனை கைவிடார்; அவனில் நற்கிரியையைத் தொடங்கினபடியால் அதை நடத்திக்கொண்டு போவார். அவர் கொடுக்கும் வரங்களும், அழைப்பும் மாருத தன்மையுள்ளது. துவக்கத்திலிருந்தபடியே கடைசியிலும், பட்சமும் இரக்கமும் கிருபையும் உள்ளவராகவே யிருப்பார். அவர் நம்மைச் சுமப்பார்; நித்திய தேவன் நம்முடைய அடைக்கலம். அனுதிகரங்கள் நம்மைத் தாங்குகின்றன. அவர் நம்மை எந்த மோசத்திலும், எந்த வருத்தத்திலும் பாதுகாத்து, தம்முடைய மகிமை நிறைந்த சமுகத்துக்குக் கொண்டுபோவார். வயதுசென்ற பரதேசியே, உன் தேவன்மேல் சார்ந்திரு; அவரை நோக்கிப்பார். தாயானவள் பால் குடிக்கிற பிள்ளையைக் கொண்டுபோகிறவண்ணமாக உன்னைக் கொண்டுபோவார். அவர் தம்முடைய வார்த்தையில் சொல்லியபடி உன்னை நடத்தி, அப்படி நடத்தினதற்கு உன்னைச் சாட்சியாக அழைப்பார். விருத்தாப்பிய காலமாயிற்றே என்று பயப்படாதே; உன் தேவன் வேண்டியதைத் தந்து, உன்னை ஆதரித்து, துன்பமென்னும் புசல் அடியாத இடத்தில் உன்னைக் கொண்டுபோய்ச் சேர்ப்பார். அங்கே பலவீனமிராது, பயமுமிராது, நாளைக்காகக் கலங்கி எண்ணங் கொள்ளாதே; நாளைக்காக நாளைக்குக் கவலையுண்டாகும். அந்தந்த நாளுக்குரிய கவலை அந்தந்த நாளுக்கும் போதுமே, தேவவாக்குத் தவருது, அவர் உன்னை நடத்தி, தம்முடைய மகிமையுள்ள ராஜ்யத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பார். அவர் சொல்லுகிறதென்ன?

நரைவயதுமட்டுக்கும்
மாருத அன்புன்னைத் தாங்கும்;
மரிக்கும் வேளைவரினும்
என் கரங்கள் உன்னைச் சேர்க்கும்.

'விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு'
1 தீமோத்தேயு 6:12

விசுவாசம் இருதயத்தில் ஆழமாய்க் கிடக்கும் மகா பெரிய கேட்டோடு போராடவேண்டியிருக்கிறது. தப்பிதத் தோடும், அவபக்தியோடும், அவநம்பிக்கையோடும், சிறுமை யில் கற்ற தப்பான எண்ணங்களோடும், அவிசுவாசத்தோ டும் போராடவேண்டியிருக்கிறது. அது ஜெயத்துக்காக, கிரீ டத்துக்காக, தேவ மகிமைக்காகப் போராடவேண்டியிருக்கி றது. மெய்யான விசுவாசம் தேவவல்லமையோடு, உண்மை யான வாக்குத்தத்தத்தால் உண்டாகும் நிச்சயத்தோடு போராடும். நம்முடைய பலவீனத்தை மேற்கொண்ட கிருபை யிலிருந்து பிறக்கும் பரிசுத்த பயத்தைக்கொண்டு போராடும்; தைரியத்தோடும் போராடும்; முக்கியமாய் முழங்காலூன்றிப் போராடும்; நம்முடைய ரட்சிப்பின் அதிபதியையும், போராட் டத்தின் முடிவையும், அதன் நோக்கத்தையும் முன் வைத்துக் கொண்டே போராடும்; விசுவாசியே, விசுவாசத்தின் நற் போராட்டம் பண்ணு. உன் தேவன் உனக்கு உத்தரவு கொடுக் கிறார்; அவருடைய வாக்குத்தத்தங்கள் உன்னை தைரியப்படுத் தத்தக்கது; இயேசு வைத்த மாதிரி உன்னை உற்சாகப்படுத்த வேண்டும். பயங்காளிகளுக்கு வரும் தண்டனை உன்னைப் பயப் படுத்தி உனக்குப் போதனையா யிருக்கவேண்டும். போராட்டத் துக்கும் ஜெபத்துக்கும் இருக்கும் ஐக்கியம் உன்னை முன்னுக் குத் தள்ளவேண்டும். இயேசு சொல்லுகிறதென்ன? நான் மேற் கொண்டு, பிதாவின் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறது போல, மேற்கொள்ளுகிறவனுக்கு என்னோடு என் சிம்மாசனத் தில் உட்கார வரம் அளிப்பேன் என்கிறார். தம்முடைய குமார னும், நம்முடைய கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் ஐக்கி யத்துக்கு நம்மை அழைத்த தேவன் உண்மையானவர்.

சர்வ வல்ல தேவா!
எனக்குள் கிருபை தா,
என்னை இரட்சிக்க நீ வா
நம்பினேன் என்னைக் கா.

'சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார்'
சங்கீதம் 9:12

ஆழ்ந்த சிந்தையுள்ள, நன்றியறிந்த ஆத்துமா கர்த்தரிடத்திலிருந்து எதையும் பெற்றுக்கொள்ளலாம். அவ்வளவாய் அவர்களை நேசிக்கிறார்; அவ்வளவாய் அவர்களில் பிரியப்படுகிறார். அப்படிப்பட்ட ஆத்துமா கர்த்தரை நோக்கி, எந்தப் பொல்லாத வழியில் நின்றும், பாவத்தில் விழுகிறதினின்றும் காக்கப்பட்டு, கர்த்தருடைய மகிமைக்கென்று தன்னை முற்றிலும் ஒப்புவிக்க வாஞ்சையாய் கர்த்தரை நோக்கிக் கெஞ்சுகிறது. தன் சத்துருக்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்று, தன் சிநேகிதருக்குப் பதில் அளிக்கவேண்டுமென்று கெஞ்சுகிறது, அடிக்கடி கெஞ்சுகிறது; மனசார உண்மையாய்க் கெஞ்சுகிறது. தான் அபாத்திரனையும், அற்பனையும், தீட்டுள்ளவனையும் இருப்பதால், தேவ உத்தரவு வரத் தாமதிக்கிறதைக் கண்டு, கர்த்தர் தனக்குச் செவிகொடுக்கமாட்டாரென்று நினைக்க ஏவப்படுகிறது. அப்படிக்கொத்தவனுடைய ஜெபத்தை தேவன் கவனியாதபடி தள்ளவுமாட்டார், புறக்கணிக்கவுமாட்டார்; அவர்களுடைய விண்ணப்பங்களை அசட்டை செய்யவுமாட்டார், அற்பமாய் எண்ணவுமாட்டார். அவைகளைக் கேட்டுக் கவனித்து உத்தரவு அருளிச்செய்வார். அவருடைய ஞானம் ஜெபங்களுக்கு உத்தரவு கொடுக்கிற சமயத்திலும் ஏதுக்களினாலும் பிரகாசிக்கும். அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டு ரட்சிப்படைந்து மகிமை பெறுகிறதினால், தமக்கு மகிமையான பேரைச் சம்பாதித்துக்கொள்வார். விசுவாசியே, தேவன் உன் விண்ணப்பங்களை மறப்பாரென்று ஒருபோதும் எண்ணாதே; அவர் உன் பாவங்களைத்தான் மறப்பார்.

பாவியாம் நேசராஜனே!
என் கெஞ்சுதலைக் கேளேன்,
இயேசு நாமம் என்றிடனே,
அபயமென்று சொல்வேன்.

‘பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது’

ரோமர் 6:14

எவ்வளவு அருமையான வாக்குத்தத்தம். கர்த்தருடைய ஜனங்களில் எத்தனையோ பேர் அதினால் ஆறுதலையும் தைரியத்தையும் அடைந்திருக்கிறார்கள். பாவம் நமக்குள் வாசம் பண்ணுகிறது, நமக்குள் கிரியைசெய்கிறது. நமக்குள்ளே போராடுகிறது, ஆனாலும் நம்மேல் ஆளுகைசெய்யமாட்டாது. நம்மை வருத்தப்படுத்தும், அழிக்கமாட்டாது. கர்த்தர் அதன் அதிகாரத்தை மடங்கடித்துப்போட்டார். கிருபையால் அதின் வல்லமை பெலவீனப்பட்டுப்போனது; அதின் பழைய ஸ்தானத்தைவிட்டுப் போகவேண்டுமென்று அதை எச்சரித்திருக்கிறது; சீக்கிரம் அது வெளியே துரத்தப்படும். நாம் நியாயப்பிரமாணத்தினுடைய ஆக்கினைக்குள்ளாக்கும் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல; அது நம்மை நீதிமானாக்குகிற சட்டமல்ல. நாம் தயவு பெற்றவர்கள், தேவன் நம்மைப் பிள்ளைகளைப்போல நடத்துகிறார். அவர் மன்னிக்கிறார். உருகுகிறார், நம்மை விடுவிக்கிறார். பாவம் நம்மை எப்பொழுதும் அடிமைகளாக்கவும், கடைசி நாளில் நம்மைக் குற்றவாளிகளாய்த் தீர்க்கவும் அவர் இடங்கொடுக்கமாட்டார். நம்மைச் சுயாதீனராக்கி, நிறைவாய் நம்மை நீதிமான்களாக்குவார். மாம்சம் ஆவிக்கு விரோதமாக இச்சிக்கும்; உள்ளான கேடு எழும்பிப் போர்செய்யும்; ஆகிலும் கடைசியில் நாம் மேற்கொள்ளும்வரையில் நாம் பெலப்படுத்தப்பட்டு, உதவிபெற்று ஆலோசனை அடைவோம். கிருபை நீதியின் மூலமாய் நித்திய ஜீவனுக்கு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே ஆளுகை செய்யும். நமக்கு முடிவில்லாப் பாக்கியம் கிடைக்கும்போது, நியாயப்பிரமாணம் கனமடையும். நம்மால் நித்தியா நித்தியமாய் இயேசுவும் மகிமைப்படுவார். கிருபையினாலே இப்போது பாவத்தினின்றும் என்றைக்கும் கோபாக்கினையினின்றும் நாம் ரட்சிக்கப்படுகிறோம்.

இயேசு உமதன்பை நான்
எவ்வளவென்று சொல்வேன்?
அற்ப பாவி! என்னைத்தான்
இப்படி நேசிப்பதேன்?
அல்லேலூயா தோத்திரம்;
புகழ் உமக்கென்றுமே.

'காணாமற்போன ஆட்டைப்போல வழிதப்பிப் போனேன்'

சங்கீதம் 119:176

இது தேவபக்தன் ஒருவன் பண்ணும் தாழ்ந்த அறிக்கை. இன்று காலமே நாமும் இவ்விதமாய் அறிக்கையிடவேண்டாமா? நாமும் வழிதப்பிப்போனோமல்லவா? இது நம்முடைய பலவீனத்தை வெளிப்படுத்துகிறதில்லையா? இவ்வளவு பட்சமுள்ள மேய்ப்பனைவிட்டு, இவ்வளவு நல்ல மேய்ச்சலைவிட்டு, இவ்வளவு நேர்த்தியான தொழுவத்தைவிட்டுத் திரிந்தலைகிறது பெலவீனமல்லவா? இது கவனத்தாட்சிக்குக் குறிப்பல்லவா? இதைப்பற்றி இயேசு தம்முடைய வசனத்தில் எச்சரித்திருக்கிறாரே. நாம் நன்றிகெட்டவர்கள் என்பதை இது காட்டுகிறதில்லையா? நாம் எத்தனையோ தயவுகளைப்பெற்று, எத்தனையோ ஆசீர்வாதங்களை அனுபவித்து, எவ்வளவோ பட்சத்திற்குரிய செய்கைகளை ருசித்தபிறகு அவரை விட்டுப்போகிறது நன்றி கேடல்லவோ? இது நம்முடைய புத்தியீனத்தைக் காட்டுகிறதில்லையா? நன்மையைவிட்டுத் தீமைக்கும், சுகத்தை விட்டு மோசத்திற்கும், பரிபூரணத்தை விட்டு வறுமைக்கும், நிர்ப்பந்தத்திற்கும் திரும்புகிறது மதியீனமல்லவா? உள்ளான கேடு எவ்வளவு பலத்தது, மனிதனுடைய இருதயம் எவ்வளவு திருக்குள்ளது. கர்த்தாவே உம்முடைய ஊழியக்காரரைத் தேடும்; நாங்கள் உம்முடைய கற்பனைகளை மறக்கிறதில்லை. எங்கள் புத்தியீனத்தினிமித்தம் துன்பப்படுகிறோம், எங்கள் பாவத்தை நினைத்துத் துக்கப்படுகிறோம். திரும்பவேண்டுமென்று விரும்புகிறோம், உம்முடைய தொழுவத்தில் எங்களைச் சேர்த்துக்கொள்ளும்; உம்முடைய தயவை அனுபவிக்கச் செய்யும்; உம்முடைய வழிகளில் பிரியப்படப்பண்ணும். இயேசுவே, ஆடுகளின் மேய்ப்பனே, அலைந்து திரிகிற எங்களைத் திரும்பக் கொண்டுவந்து உமக்குச் சமீபமாய் வைத்துக்கொள்ளும். உம்முடைய மந்தையைவிட்டும் தொழுவத்தைவிட்டும் நாங்கள் ஏன் திரியவேண்டும்?

தப்பிப்போன ஆடுபோல
வழிதப்பிப்போனேன் நான்,
தேடி மன்னித்துச் சேரும்,
பாவம் செய்யாமல் காரும்.

'கர்த்தர் என்னை ரட்சிக்கவந்தார்'

ஏசாயா 38:20

பெரிய மோசத்திலிருந்த ஒரு நல்ல மனிதன் கொடுக்கிற சாட்சி இது; அவன் இருதயம் பயத்தால் நிறைந்திருந்தது எல்லாம் கெட்டுப்போனதென்றிருந்தான். இப்பொழுது சுகமடைந்த பிறகு தன் தப்பிதத்தை அறிக்கையிட எழுந்து நிற்கிறான். கர்த்தர் தம்முடைய ஜனங்களை எந்த மோசத்தினின்றும் தப்புவிக்க எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறார் என்கிற அருமையான சத்தியத்திற்குச் சாட்சி கொடுக்கிறான். கர்த்தர் நம்மை ரட்சித்தார், அவர் கடைசிமட்டும் நம்மை ரட்சிப்பார்; அவருக்கு வல்லமையுண்டு, அதை அவர் செலுத்துவார்; அவருக்கு அதிகாரமுண்டு, அவர் அதைப் பிரயோகிப்பார்; அவரிடத்தில் உருக்கமுண்டு, அவர் அதைக் காண்பிப்பார்; அவர் தூரத்திலல்ல சமீபத்திலிருக்கிற ரட்சகர். அவர் விடுவிக்க ஆயத்தமுள்ளவர், மனமுள்ளவர்; முற்காலங்களில் அவர் நம்மை விடுவிக்கவில்லையா? இனிவரும் காலத்திற்கு நாம் அவரை நம்பவேண்டாமா? எந்த மோசத்திலும் நம்மை ரட்சிக்க தேவனை நோக்கிக் கெஞ்சுவோமாக. அவருடைய ஆசீர்வாதத்திற்காகத் தாழ்மையுள்ள நம்பிக்கையோடு அவரிடத்தில் காத்திருப்போமாக. மாமிச சிந்தைக்குரிய வேதவசனத்திற்கு விரோதமான பயங்களை அகற்றுவோமாக. சாத்தானும், நமது சுயபக்தியும், அவிசுவாசமும் சொல்லுகிறதைக் கேளாமல், ஆசீர்வாதத்தைப் பெற்றனுபவிக்கும் பரியந்தம், அதை விடாமுயற்சியோடு தேடுவோமாக. கர்த்தர் நம்மை ரட்சிக்கச் சித்தமாயிருக்கிறார். இதை நாம் விசுவாசித்து, நம்பி, பரீட்சையால் கண்டு பாக்கியசாலிகளாயிருப்போமாக அவர் ரட்சிப்பார், தம்முடைய அன்பில் நம்மைப்பற்றி மகிழ்ந்து பாடுவார்.

இயேசுவின் கரத்தாலே
நான் ரட்சிக்கப்பட்டவன்;
அவரின் அன்பினாலே
மோட்சலோகம் சேர்பவன்

'நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்'

எபேசியர் 5:1

தேவன் தம்மை நமக்கு மாதிரியாக வைக்கிறார். அவரைப் போலிருக்க விரும்புகிறவர்களுக்குக் கிருபை அளிக்கிறார். நம்மைப் பிரியமான பிள்ளைகளாகப் பாவித்து, தம்மைப்போலிருக்கும்படிக்கு வெகு இணக்கமான வகையாய்ப் புத்தி சொல்லுகிறார். நாம் இந்த உலகத்தில் அவரைப்போலிருந்து நீதியாய் நடந்து, பரிசுத்த சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து, சத்தியத்துக்கு இசைந்து நடப்போமாக. அவர் சத்திய தேவன். தேவனோடு நேசமாயிருக்கிறவர்களோடு மாத்திரம் நாம் நேசமாயிருக்கவேண்டும். யாவருக்கும் நன்மை செய்தாலும், விசுவாசத்தின் குடும்பத்தாருக்கு முக்கியமாய் நன்மை செய்யவேண்டும். அவர் பொல்லார்மேலும் நல்லார்மேலும் தம்முடைய சூரியனை அனுப்பி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் தமது மழையைப் பெய்யப்பண்ணுகிறார். இந்த உலகத்தில் பொதுவாய் நாம் தேவனைப்போலிருக்கிறது போதாது. சபையிலும் அவரைப்போலிருக்கவேண்டும். பரிசுத்தவான்கள் குறைவுள்ளவர்களாயிருந்தாலும் அவர்களை நேசித்து, பொறுமையையும் உருக்கத்தையும் காட்டவேண்டும். கோபிக்கத் தாமதித்து, மன்னிக்கத் தீவிரித்து, நல்மனமே செய்கை என்றெண்ணி, துன்பத்திலும் வருத்தத்திலும் எப்போதும் உதவிசெய்யப் பார்க்கவேண்டும். நாம் தேவனைப்போலிருப்பது அவசியம்; இப்படி இருப்பது அவர் கட்டளை; அவரோடு நமக்கிருக்கும் சம்பந்தமும் அப்படியிருக்க ஏவிவிடுகிறது. அவரைப்போல் இருந்தால்தான் நமக்குச் சமாதானமுண்டு; தேவனைப்போல் இருப்போமானால், நாம் உள்ளபடி பரிசுத்தர் என்பதற்கு அது போதிய அத்தாட்சி.

கிறிஸ்தவனே அல்லவோ?
உன் வார்த்தைதான் காட்டாதோ?
இயேசுவைப்போலிருந்தல்லோ?
ரூபிப்பது மாறாதே.

செப்டெம்பர்-மீ 23-உ

'கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்'

சங்கீதம் 55:23

கர்த்தருடைய ஜனங்கள் அடிக்கடி கனத்த பாரம் சுமக்கிறவர்கள்போலத் தவிக்கிறார்கள். அவர்களுடைய சுமைகள் மிகவும் கனத்தது; அவர்கள் துக்கம் மாபெரியது; கர்த்தரோ அந்தச் சுமையைத் தம்மேல் போடச்சொல்லி, அவர்களை ஆதரிப்பேன் என்று வாக்குக்கொடுக்கிறார். மனச்சாட்சியைப் பற்றின குற்றம், பாவத்தைப்பற்றின அறிவு, ஆத்துமாவுக்கு இது தாங்கக்கூடாத பாரம். தேவன் தம்முடைய குமாரனுடைய ரத்தத்தினாலும், பரிசுத்த ஆவி சொல்லும் மெதுவான சாட்சியினாலும் அதை நீக்கிப்போடுகிறார். சமுசாரத்தைப்பற்றின கவலைகள் ஆவியை அரித்துத் துன்பத்தால் நிரப்புகிறது; இயேசுவோ அந்தக் கவலைகளை என்மேல் வைத்துவிடுங்கள் என்கிறார். நஷ்டங்கள் சிலுவைகள், சத்துருக்கள் சோதனைகள் உள்ளான போராட்டம் இவைகள் ஆத்துமாவுக்குப் பெரிய பாரம். நம்முடைய தேவனே, அவைகளை நமக்கு நன்மையாக மாற்றி, நம்மை ஆதரித்து, அவைகளெல்லாவற்றிலும் நின்று நம்மை விடுவிக்கிறார். நாம் தேவனை நமக்குச் சொந்தமாக்கிக்கொண்டு, அவர்மேல் சார்ந்து, அவரிலே மாத்திரம் மேன்மைபாராட்டவேண்டுமென்று அவர் தீர்மானம் பண்ணியிருக்கிறார். விசுவாசியே, கலங்குகிற உன் மனதுக்கு அவர் சமாதானம் சொல்லி, உன் வருத்தங்களைத் தமக்கு ஒப்புக்கொடுக்கச் செய்து, உன் ஆத்துமாவில் உள்ளாக உன்னைப் பலப்படுத்தி, தற்கால நிலைமையை இனிவரும் மகிமையோடு ஒத்துப்பார்க்கச் செய்வதினால் உன்னை ஆதரிப்பார். நமக்கு ஜெயம் அளிக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். எந்தச் சுமையும் நம்மைத் தேவன் அண்டைக்கு நடத்தட்டும்; அதை அவர்மேல் வைத்துவிடுவோமாக. இயேசுவே, எந்தப் பாரத்தையும் உம்முடைய பாதத்தண்டையில் கொண்டுவரவும், எந்தக் கவலையையும் உமதுமேல் வைத்துவிடவும் எனக்குக் கற்றுக்கொடும்.

> கர்த்தாவே, உமதுமேல்
> என் சுமை எல்லாம் வைப்பேன்;
> என் இருதயத்தை உம்மேல்
> வைக்கும்போது களிப்பேன்.

'கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப்படும்'

ஆதியாகமம் 22:14

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு வேண்டியதை சவதரித்து வைத்திருக்கிறார். அதைக் கொடுக்கிற ஒழுங்கும் அவருக்குத் தெரியும்; அதற்காகப் பண்ணும் ஜெபங்களைக் கேட்டு உத்தரவு அருளுகிறார். தம்முடைய ஜனங்களுக்குச் சோதனைகளையும், மோசங்களையும், துன்பங்களையும் அவர் வரவிடுகிறதுண்டு; ஆகிலும் கர்த்தருடைய பர்வதத்திலே அது காணப்படும். தம்முடைய வசனத்தில் கண்டிருக்கிறபடி வெகு உண்மையுள்ளவராகவும், தம்முடைய செய்கைகளிலெல்லாம் பட்சமும் இரக்கமும் உள்ளவராகவும், தம்முடைய ஜனங்களுடைய விண்ணப்பங்களையும், விருப்பங்களையும் உற்றுக் கவனிக்கிறவராகவும், அவைகளைத் தர ஆயத்தமுள்ளவராகவும் தம்மைக் காண்பிக்கிறதுமல்லாமல், அவர்களை விடுவிக்கிறதினால் தம்முடைய அன்பையும் வல்லமையையும் விளங்கப்பண்ணுகிறார். கர்த்தருடைய பர்வதத்திலே சாத்தான் பொய்யன் என்றும், நம்முடைய பயம் வீணானதென்றும், அவிசுவாசம் பெரிய பாவமென்றும், ஜெபத்துக்கு நிச்சயமாக உத்தரவு வருமென்றும், விசுவாசமும் நம்பிக்கையும் அவமாய்ப்போகாதென்றும், நம்முடைய பெலவீனங்களை இயேசு அறிந்து உணருகிறாரென்றும், அவரை நம்பி, அவருக்காகக் காத்திருந்து, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களில் ஒருவனும் வெட்கமடைகிறதில்லையென்றும் அங்கே காணப்படும். சிநேகிதரே, துன்பமென்னும் பர்வதத்திலே கர்த்தரைக் கண்டிருக்கிறோம். அந்தத் துன்பப் பர்வதத்திலே கர்த்தரைக் கண்டிருக்கிறோம். அந்தத் துன்பப் பர்வதம் இரக்கப் பர்வதமாக மாறினதையும் பார்த்திருக்கிறோம். அவரை மகிமையின் பர்வதத்தின்மேல் காண்போம்.

தேவ பர்வதத்திலே
தேவ மகிமை காணும்;
மேக மந்தாரத்திலே
இருண்ட நேரத்திலும்
பிதாவின் கரம் காக்கும்.

செப்டெம்பர்-மீ 25-உ

'கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

மத்தேயு 22:42

சிநேகிதரே, இன்று காலமே இயேசுவைக்குறித்து நாம் எப்படி நினைக்கிறோம் என்று விசாரிக்கக்கடவோம். அவர் தேவனோடு ஒன்றாயிருக்கிற தெய்வீகத்தைக் குறித்து, நம் மோடு ஒன்றாயிருக்கிற மனுஷீகத்தைக்குறித்து, கிறிஸ்துவில் தேவனும் மனிதனுமாயிருக்கிற இருதன்மை பொருந்தின ஆளாயிருக்கிறதைக்குறித்து நாம் என்ன நினைக்கிறோம்? பாவத்துக்காக அவர் செலுத்தின ஒரே பலியைக்குறித்து, ரட்சிப்பின் கிரியை முழுவதிலும் விளங்கின அவர் கிருபையைக் குறித்து நாம் என்ன நினைக்கிறோம்? நம்முடைய நம்பிக்கைக்கு ஆதாரமும், நம்முடைய ஆறுதலுக்கு ஊற்றும், நம்முடைய நடக்கைக்குச் சட்டமுமாயிருக்கிற அவர் வசனத்தைக்குறித்து நாம் என்ன நினைக்கிறோம்? அவருடைய ராஜ்யத்தைக்குறித்து, அவருடைய வல்லமையைக்குறித்து நாம் என்ன நினைக்கிறோம்? இயேசுவைக்குறித்து நாம் எப்படி நினைக்கிறோம்? அவருடைய நினைப்பு நமக்கு இன்பமாயிருப்பதால் அடிக்கடி நினைக்கிறோமா? சாப்பாட்டைப்போல நமக்குத் திருப்தியைத் தருகிறபடியால் மனசார அவரை நினைக்கிறோமா? இனிமையான கீதம்போல அவரை நினைக்கிறது இன்பமாயிருக்கிறதா? அல்லது சில சமயங்களில் மாத்திரம் நினைக்கிறோமா? அப்போதும் பயத்தோடும், அன்பில்லாமல், வாஞ்சையில்லாமல், ஏனோதானோவென்று நினைக்கிறோமா? கிறிஸ்துவைப்பற்றி நினைக்கிறது நமக்குள்ளே என்னத்தைப் பிறப்பிக்கிறது— ஆசையை, துக்கத்தை, அன்பை, நம்பிக்கையை, தீர்மானத்தை, ஜெபத்தை செய்கையை நமக்குள்ளே பிறப்பிக்கிறதா? கிறிஸ்துவுக்காக நாம் என்னத்தைச் சகிக்க மனதாயிருக்கிறோம்? கிறிஸ்துவுக்காக நாம் என்னத்தைச் சகிக்க மனதாயிருக்கிறோம்? அவருடைய ஏழைகளை போஷிக்க அவருடைய காரியத்தை விருத்தியாக்க அவருக்கு நாம் என்னத்தைச் சந்தோஷமாக்க கொடுக்கக்கூடும்?

இயேசு ஜீவன், பெலன்,
என் மேய்ப்பன், சிநேகிதன்,
குற்றம் போக்கிக் காப்பவன்,
அவர்தான், என் நம்பிக்கை;
அவர் என் பங்கெல்லாம்,
நான் அறிந்ததேயாம்.

‘பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்கள்’

எபிரெயர் 3:1

நேசரே, தேவன் நம்மைக் கிறிஸ்துவை அறிகிற அறிவுக்குத் தமது கிருபையினாலும் சுவிசேஷத்தினாலும் அழைத்திருக்கிறார். அவர் குமாரனுடைய ஆவியில் பங்குபெற்று, கிறிஸ்துவோடு ஐக்கியப்பட, இயேசுவின் தயவைப்பெற, நம்மை அழைத்திருக்கிறார். கிறிஸ்துவின் சாயலை அணிந்துகொள்ள, அவருடைய நீதி, பெலன், ஞானம், ஆராய்ந்து முடியாத ஐசுவரியம், நித்திய மகிமை, இவைகளை அடைந்து அனுபவிக்க நம்மை அழைத்திருக்கிறார். இந்த அழைப்பு பரத்திலிருந்துண்டானது; அதினுடைய தன்மை நோக்கம் முடிவு சகலமும் பரத்திற்குரியது. பரத்திலிருந்து தோன்றிப் பரத்திற்கே செல்லுகிறது. விசுவாசிகள் யாவரும் அந்த அழைப்புக்குப் பங்காளிகள். ஒரே சத்தத்தால், ஒரே சிலுவைக்கும் சிம்மாசனத்திற்கும் ஒரே பட்டத்தைப் பெற்று, ஒரே ஆசீர்வாதத்தை அனுபவிக்க அழைக்கப்படுகிறார்கள் இந்த அழைப்பு பாவிக்குக் கிடைக்கக் கூடிய கண்ணியங்களில் பெரியது; இது முற்றிலும் ஒரு தயவு. இலவசமான நித்திய அன்பின் கனி; இதை அனுபவிக்கிறவர்கள் நன்றியறிதலோடு துதி செலுத்தவேண்டும். நாம் பரம அழைப்பால் அழைக்கப்பட்டவர்களா? அப்படியானால் நாம் உலகத்தை விட்டுப் புறப்பட்டு, தேவனோடு நடந்து, ரட்சகரைப் போலிருந்து, மேலான காரியங்கள்மேல் ஆசைவைத்து, மகிமையுள்ள சுதந்தரமாகிய நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்திப் பின்வருமாறு பாடுவோமாக.

உமதிஷ்டப்படியே
என்னை நடத்தும் சுவாமி;
முற்றும் சுத்தனாகவே
என்னை மாற்றும் தேவாவி.

'கர்த்தரின் ஆவி குறுகியிருக்கிறதோ?'

மீகா 2:7

பின்னை ஏன் நாம் நம்பிக்கையற்றுப்போகிறோம்? நமக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியங்களுக்குச் சரியாக நம்முடைய நடக்கை ஏன் இருக்கிறதில்லை? நமக்குச் சகலத்தையும் போதிக்கவும், இயேசுவைக்குறித்து நம்முடைய ஆத்துமங்களுக்குச் சாட்சியிடவும், அருமையான ரட்சகரை நம்முடைய ஆத்துமங்களில் மகிமைப்படுத்தவும், கிறிஸ்துவின் காரியங்களை எடுத்து நமக்குக் காட்டுவதினால் நம்முடைய பலவீனங்களில் உதவிசெய்து நம்மை ஆறுதல்படுத்தவும், நித்திய வழியில் நம்மை நடத்தவும், பரிசுத்த ஆவி நமக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருக்கிறது. இந்த விஷயங்களில் தேவ அன்பைக் கண்டு உணருகிறோமா? இல்லாவிட்டால் அதற்கு முகாந்தரம் என்ன? 'கர்த்தரின் ஆவி குறுகியிருக்கிறதோ?' இல்லையே. நாம் ஆவிக்கென்று விதைக்கிறோமா? ஆவிக்காக ஜெபிக்கிறோமா? இயேசு தம்முடைய வாக்கின்படி ஆவியை அனுப்பவேண்டுமென்று நாம் பண்ணும் ஜெபத்திற்கு உத்தரவாக பிதா அவரை அனுப்புவார் என்று எதிர்பார்க்கிறோமா? சிநேகிதரே! உங்கள் சந்தேகங்கள், உங்கள் பயங்கள், உங்கள் மாமிசசிந்தை, உங்கள் ஆசையின்மை, ஜீவன், சிநேகம், பெலனில்லாமை இவைகளைக் கவனித்துப் பார்த்து, இது ஆவியின் செய்கையாவென்று கேளுங்கள். அவருடைய கை குறுகிப்போயிற்றோ? அவருடைய அன்பு மாறிப்போயிற்றோ? அவர் வாக்கு பொய்யோ? அல்லது உங்களைப் பார்த்து நீங்கள் அவரைத் துக்கப்படுத்தவில்லையா? அவருடைய கிரியையை அணைத்துப்போட்டு, தம்முடைய கையை மடக்கிக்கொள்ளச் செய்யவில்லையா என்று விசாரியுங்கள். ஆவிக்காக ஜெபம் பண்ணுங்கள், அவர் உங்களுக்கு அவசியம் வேண்டும். அவர் இல்லாவிட்டால் உங்களால் ஒன்றுமாகாது.

பரிசுத்த ஆவியே,
என்னை உயிர்ப்பியுமே;
நான் தேவனோடு ஒன்றாக
என்னை மாற்றுவீராக.

'உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்'

எபிரெயர் 13:5

நாம் விரும்புகிறது நமக்குக் கிடையாமலிருக்கலாம், நமக்கு நலமென்று தேவன் நினைக்கிறது நமக்கு நிச்சயமாய் கிடைத்திருக்கிறது. அளவற்ற ஞானமும், நித்திய அன்பும் ஒவ்வொரு இரக்கத்தையும் நடத்துகிறது. அது செல்லவேண்டிய வழியைவிட்டு விலகாது. யாரிடத்திற்குச் செல்லவேண்டுமோ, அங்கேதான் போகும், நமக்குரிய சுதந்தரத்தை தேவன் நமக்காகத் தெரிந்தெடுத்தார் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, மனத்திருப்தியுள்ளவர்களாயும், மிகவும் நன்றியுள்ளவர்களாயும் இருப்போமாக. நம்முடைய பாத்திரத்துக்கு மிஞ்சி எவ்வளவோ நமக்குக் கிடைத்திருக்கிறது. நம்மைப்போலொத்த விசுவாசிகளுக்குக் கிடையாததை நாம் பெற்றிருக்கிறோம். விசுவாசிகள் சிறைச்சாலையில் அடைபட்டிருந்தார்கள், நாம் சுயாதீனராயிருக்கிறோம், பூர்வீக கிறிஸ்தவர்களில் அநேகர் பூமியின் குகைகளிலும் கெபிகளிலும் வாசம் செய்து அலைந்து திரிந்தார்கள், நமக்கு வீடுகளுண்டு. ரத்தச்சாக்ஷிகள் சுட்டெரிக்கப்பட்டார்கள், நம்முடைய உயிர் காக்கப்பட்டு வருகிறது. அநேகர் வேதனையில் அகப்பட்டு நரகத்தில் தங்கள் கண்களை ஏறெடுக்கிறார்கள், நாம் மோட்ச நம்பிக்கையைப் பெற்றிருக்கிறோம். உள்ளது போதுமென்று மனத்திருப்தியுள்ளவர்களாயிருந்து, இன்னும் அதிக நலமானவைகள் கிடைக்குமென்று நம்பியிருப்போமாக. பவுல் கற்றுக்கொண்ட பாடத்தை நாமும் கற்றுக்கொள்ளவேண்டும். 'எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்; தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்.' பாக்கியமான நிலைமை! நல்ல அனுபவம்! ஆ! கர்த்தாவே.

என் ஆத்துமாவும் தேகமும்
மனம் சித்தம் புத்தியும்,
எனக்குள்ளது யாவும்
உமக்கொப்புவிக்கிறேன்;
உமக்குள்ளே நான் பிழைத்து
உம்மில் மரிக்கட்டுமேன்.

செப்டெம்பர்-மீ 29-உ

'கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்'

ஏசாயா 26:4

நாம் அடிக்கடி வழியிலே நேரிடும் வருத்தங்களாலும், நம்முடைய விசுவாச பெலவீனத்தினாலும் அதைரியப்பட்டுப் போகிறோம், கர்த்தரை நோக்குகிறதற்குப் பதிலாகச் சிருஷ்டிகளை நோக்குகிறோம். அவருடைய வாக்குத்தத்தங்களை நம்பி, அவருடைய உண்மையைப் பிடிக்கிறதற்குப் பதிலாக நம்முடைய பெலவீனத்தையே யோசித்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய தேவனாகிய கர்த்தரையே நாம் எப்போதும் நம்பவேண்டும். நமக்குவேண்டிய ஆத்தும சரீர நன்மைகள் யாவுக்கும் அவருடைய வசனம் அவரையே நோக்கச் சொல்லுகிறது. நம்முடைய எதிர்பார்க்குதல் வீணாகாதென்று அவருடைய தன்மை நமக்கு நிச்சயப்படுத்துகிறது. அவர் நமக்காக வெளிப்படுவார்; அவருடைய தயவெல்லாம் நமக்கு முன்பாகப் போகப்பண்ணுவார். தேவனை நோக்கிப் பண்ணும் ஜெபத்தோடு, தேவ நம்பிக்கையைச் சேர்த்து தேவனுக்காகக் காத்திருப்போமானால், துன்பத்தில் நம்மை விடவுமாட்டார், அவஸ்தையில் நம்மைப் புறக்கணிக்கவுமாட்டார். நாம் அவரை முற்றும் நம்பலாம்; அவர் வாக்களித்ததெல்லாம் தருவாரென்று எதிர்பார்க்கலாம். இப்பொழுது நீ சோதிக்கப்பட்டு, துன்பப்பட்டு அவஸ்தைப்படுகிறாயா? உன் பாரத்தைக் கர்த்தர்மேல் போட்டுவிடு; உன் வழியை அவருக்கு ஒப்புவி; அவர் வாக்கை நிறைவேற்றுவார்; உன் விருப்பத்தைத் திருப்தி செய்வார். அவர் வாக்குத்தத்தங்களை ஆராய்ந்து தேடி, அவைகளில் நம்பிக்கை வைத்து, தேவனிடத்தில் அவைகளைச் சொல்லிக் கெஞ்சி, அவைகளை நிறைவேற்றுவாரென்று எதிர்பார்த்திரு. என்றும் கர்த்தரை நம்புங்கள்.'

தேவ வாக்கு மாறாது,
அவருன்னைக் கைவிடார்;
ஏதும் உன்னை வெல்லாது,
இதை நம்புன்னைக் காப்பார்.

'நீங்கள் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறீர்கள்'

ரோமர் 6:14

விசுவாசிகள் நியாயப்பிரமாணத்தினின்று விடுதலையாக்கப்பட்டு அதற்கு மரித்திருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவோடு விவாகத்தில் இணைக்கப்பட்டு, அன்பின் தேவனாகிய தங்கள் தேவனுக்குப் பிழைத்திருக்கிறார்கள். சாபம் நீங்கிப்போனது; பாவம் பரிகரிக்கப்பட்டது; தேவனிடத்தில் பெறக்கூடிய தயவைப் பெற்றிருக்கிறோம். நம்மைத் தேவனுக்குச் சிநேகிதர்களாக, அவருக்குப் பிரியமுள்ள பிள்ளைகளாக, நாம் எண்ணவேண்டும். அவர் தமது குமாரனுடைய மரணத்தால் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். கிருபை நமதுமேலே நமக்குள்ளே ஆளுகை செய்கிறது; நமக்கு வேண்டியதைத் தந்து நம்மை மகிமைப்படுத்தும். பின்னை ஏன் நாம் பயப்படவேண்டும்? நாம் யாருக்குப் பயப்படவேண்டும்? பாவம் மன்னிக்கப்பட்டுபோனது, நியாயப்பிரமாணம் மகிமையடைந்தது; நீதி திருப்தியாக்கப்பட்டது; தேவன் நம்மோடு சமாதானமாயிருக்கிறார்; அவர் நம்மில் மகிழுகிறார். உலகம் நமக்காக மேற்கொள்ளப்பட்டது; சாத்தானும் சீக்கிரம் நம்முடைய கால்களின்கீழ் மிதிக்கப்படுவான். இவைகளுக்கு நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நமக்காகவும், நம்மோடும் இருக்கும்போது, நம்மைச் சேதப்படுத்தி, நம்மை மேற்கொள்ளுபவன் யார்? சகலமும் நமக்காகக் கிரியை செய்யவேண்டும். தேவனுடைய அன்பைவிட்டு நம்மை ஒன்றும் பிரிக்கக்கூடாது; நம்மைச் சிநேகித்தவராலே நாம் ஜெயவீரரைவிட மேன்மையானவர்கள். ஏனென்றால் நாம் நியாயப்பிரமாணத்தின் கீழல்ல, கிருபையின் கீழிருக்கிறோம். 'இயேசு பிழைத்திருக்கிறபடியால் நாமும் பிழைப்போம். நம்முடைய காரியங்களும் ஒன்றுதான்.'

என் நம்பிக்கை இயேசுதான்,
என் பிதா தேவன், நேசன்,
என் ஆசான், தீர்க்கன், ராஜன்,
அவரால் நான் வாழ்பவன்:
அவர் பாதை என் கதி,
அவர் நாமம் என் துதி.

அக்டோபர்-மீ 1-உ

'உங்கள் பரம பிதா'

மத்தேயு 6:32

நீங்கள் ஜெபம்பண்ணும்போது எங்கள் பிதாவே என்று சொல்லுங்கள். நீங்கள் மனவடிவாகும்போது பரலோகத்திலே உங்களுக்கு ஒரு பிதா இருக்கிறுர் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அவர் உங்களை நேசிக்கிறுர், உங்களுக்காகக் கவலைப்படுகிறுர், உங்களுக்கு வாக்குக்கொடுத்து, உங்களுக்கு நன்மை செய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறுர். இந்த மாதத்தையாவது, வேறெந்த மாதத்தையாவது தொடங்கும் போது, பரலோகத்தில் நமக்கு ஒரு பிதா இருக்கிறுர் என்ற விசுவாசத்தோடு தொடங்குகிறது எவ்வளவு பாக்கியம்! தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதைப்போல் கர்த்தர் தமக்குப் பயப்படுகிறவர்களுக்கு இரங்குகிறுர் என்று நம்புகிறது எவ்வளவு நலம்! அவர் நாம் என்ன உருவென்று அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறுர்; நம்முடைய பரமபிதாவுக்கு நாம் ஒன்றையும் மறைக்காமல், சகலத்தையும் அவருக்குச் சொல்லுவோமாக. நம்முடைய பிதாவைப்பற்றி நாம் தப்பான எண்ணங்களுக்கு இடங்கொடாமல், அவருடைய வார்த்தையைப் பற்றிப்பிடிப்போமாக. அது மாருத அவருடைய மனசை நமக்கு வெளிப்படுத்துகிறபடியால், நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும். நமக்குத் தேவையானது இன்னதென்று நம்முடைய பிரமபிதா அறிவார். நமக்கு வேண்டியதையெல்லாம் சம்பாதித்திருக்கிறுர்; சம்பாதித்த சகலத்தையும் நமக்குத் தருவார். நாம் அவரைப் பிதாவாக எண்ணி அவரிடத்தில் கேட்கவேண்டும். அவர் செய்கைக்கு மிஞ்சினதொன்றுமில்லை. அவர் கொடுக்கக்கூடாத அவ்வளவு பெரிதொன்றுமில்லை; எந்த நற்காரியத்தையும் அவர் தம்முடைய ஜனங்களுக்குத் தாராளமாய்க் கொடுப்பாரே. இந்த அன்பற்ற உலகத்தில் நமக்கு ஒரு பிதா இருக்கிறது. இப்படிப்பட்ட பிதா இருக்கிறது எவ்வளவு பெரிய இரக்கம். நம்முடைய கவலைகளையும், துக்கங்களையும், துன்பங்களையும், அவரிடத்தில் கொண்டுபோய், அவர் கையில் ஒப்புக்கொடுப்போமாக.

பிதாவே! நீர் என் சொந்தம்;
என்று சொல்லச் செய்யுமேன்
உம்மை நேசிக்கும் பந்தம்,
என் ஆத்துமாவுக்கு ஈயுமேன்;
நான் உமது நேசனே
என்று காணட்டுமேன்.

'கர்த்தருடைய பட்சத்திலிருக்கிறவர்கள் யார்?'
யாத்திராகமம் 32:26

ஒவ்வொரு விசுவாசியும் நான் என்று இதற்கு மறுமொழி சொல்லுவான். நல்லது, பூமியில் கர்த்தருடைய காரியம் ஒன்றுண்டு. அது பெலவீனப்பட்டிருப்பதால் நீ அதை ஆதரிக்கவேண்டும். அதற்கு விரோதிகள் அநேகர்; நீ அதற்குத் துணை நிற்கவேண்டும். நீ கர்த்தருடைய பட்சமானால் சத்தியம், பரிசுத்தம், தர்மசிந்தை இவைகள் பட்சத்திலிருக்கிறாய்; அவருடைய ஆராதனை நியமங்கள் பட்சத்திலிருக்கிறாய்; அவருடைய ஜனங்கள், அவருடைய வழிகள் பட்சத்திலிருக்கிறாய்; அவருடைய கவனத்தைப்பற்றி உனக்கு வைராக்கியமுண்டு. அவருடைய ஜனங்களோடு சேர்ந்து பாளையத்திற்குப் புறம்பே நிந்தையைச் சுமந்துகொண்டு இயேசுவண்டைக்குப் போகிறாய். நீ கர்த்தருடைய பட்சமானால் கீழ்ப்படிகிற பிள்ளையைப்போல உன்னை அவர் தப்புவித்து, உத்தம ஊழியக்காரனுக்கு உனக்கு வேண்டியதைக் கொடுத்து, உன்னை ஆதரித்து, தைரியமுள்ள சேவகனுக்கு உன்னைக் கனப்படுத்துவார். அவரை விட்டு வேறொருவர் அண்டைக்குப் போகிறதற்கு முகாந்தரமிராது. அத்தனை நல்ல எஜமானுக்கு ஊழியம் செய்யத் தீர்மானித்ததைப்பற்றி துக்கமடையமாட்டாய், கர்த்தர் உன் பட்சத்திலிருந்து, துன்பத்தில் உன்னை ஆதரித்து, வருத்தத்தில் உன்னை ஆறுதல்படுத்தி, மரணத்தில் உனக்கு ஜெயமளித்து, நியாயத்தீர்ப்பில் உன்னை நீதிமானென்று தீர்ப்பார். நீ கர்த்தருடைய பட்சமானால் அதை வெளியரங்கமாய்க் காட்டு, நித்தம் ரூபகாரப்படுத்து. நான் கர்த்தருடையவனென்று உன் நடக்கை முழுவதும் சொல்லட்டும்; உன்னுடைய மேன்மை யாவையும் அவ காரியத்திற்கென்று உன் சத்துவங்களை உபயோகப்படுத்து, அவருடைய நாமத்திற்கென்று சந்தோஷமாய்த் துன்பங்களை அனுபவி.

அங்கே உனக்காய் மரித்த
உன் நேசரை நீ காண்பாயே;
அங்கே உனக்காய் உயிர்த்த
இயேசுவால் நீ பிழைப்பாயே.

'நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்'

ஆதியாகமம் 12:2

சுபாவப்படி நாம் தேவ சாபத்துக்குட்பட்டவர்கள்; மற்றவர்களுக்கும் சாபமாயிருக்கிறோம். அன்புள்ள தேவன் நமக்காக வந்து, தம்முடைய ஆசீர்வாதத்தை நம்மேல் ஊற்றி, நம்மை ஆசீர்வாதமாக்குகிறார்; நல்நடவடிக்கையுண்டாகக் கிருபை அளிக்கிறார்; பிரயோசனமுள்ளவர்களாக வரம் கொடுக்கிறார்; சரியான வழியைத் தெரிந்துகொள்ள ஞானம் அளித்துத் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றப் பெலன் கொடுக்கிறார். அவருடைய நோக்கத்தை முடிக்கத் தேவையானதைக் கொடுக்கிறதுமல்லாமல், அவருடைய வசனத்தை நம்ப விசுவாசத்தையும், விடாமுயற்சியோடு அவருடைய நோக்கத்திற்குக் காத்திருக்கிற பொறுமையையும், நம்முடைய பிரயத்தனங்களுக்குக் காரியசித்தியையும் அளிக்கிறார். இப்படி அவர் நம்மை ஆசீர்வதிக்கும்போது, நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாகிறோம்; கெட்டவர்களுக்கும் நல்லவர்களுக்கும் ஆசீர்வாதமாகிறோம். நம்முடைய சிந்தை சாந்தமும் அமைதலும் அன்புமுள்ளதானால், அது மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும். நம்முடைய மாதிரி கிறிஸ்து காட்டின மாதிரியைப்போலிருந்தால் ஆசீர்வாதமாயிருக்கும். ஆத்துமாக்களுடைய நன்மைக்காகவும், தேவ மகிமைக்காகவும், நாம் பண்ணுகிற ஜெபங்கள் ஆசீர்வாதமாயிருக்கும். எவ்விடத்திலும் சத்தியம் பரவும்படி நாம் செய்கிற பிரயத்தனங்கள் ஆசீர்வாதமாயிருக்கும். ஒரு ஆத்துமாவையாவது குணப்படுத்துகிறதற்குக் கருவியாயிருப்பது எத்தனை பெரிய ஆசீர்வாதம். அறிவீனருக்குப் போதிக்க, பெலவீனரைப் பெலப்படுத்த, வருத்தப்படுகிறவர்களுக்கு ஆறுதல் செய்யப் பிரயோசனமாயிருப்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம். இயேசுவே, எங்களை ஆசீர்வாதமாக்கும்; உமது கிருபை போதுமானது, ஆபிரகாமுக்கு நீர் செய்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும். சிநேகிதரே, அவரை நோக்கிப் பார்த்து, அவர்பேரில் சார்ந்து, அவருக்காக ஜாக்கிரதையாய் ஊழியஞ்செய்து, அவரை நித்தம் துதித்து வருவோமாக. அப்பொழுது நாம் ஆசீர்வாதமா யிருப்போம்.

மரிக்கும் தருணமட்டும்
மீட்பின் துதி நான் சொல்லட்டும்,
அவருக்கே நான் ஊழியன்
அவரில் சார்ந்திருப்பவன்

'நான் உங்களுக்கு தீமைசெய்யாதபடிக்கு இருங்கள்'

எரேமியா 25:6

அன்புள்ள தேவன் உருக்கம் நிறைந்தவர், இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர், மன்னிக்க ஆயத்தமுள்ளவர், கிருபையாயிருக்கக் காத்திருக்கிறவர். இப்படிப்பட்ட தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குச் சேதம் செய்வாரா? செய்யமாட்டார். அவர் நடத்துதல் நமக்கு மனவருத்தத்தைத் தரலாம்; நம்மை ஒருபோதும் சேதப்படுத்தமாட்டாது. பவுல் அப்போஸ்தலனைப்போல நாம் யோசிக்கவேண்டும். 'தம்முடைய சொந்தக் குமாரனென்றும். பாராமல், அவரையே நமக்காக ஒப்புக் கொடுத்திருக்க, அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?' தம்முடைய சொந்த ஜனங்களைப் பாபிலோனுக்குச் சிறைகளாக அனுப்பினார். அவர்களுடைய நன்மைக்காகத்தான் அப்படிச் செய்தார். தம்முடைய பிள்ளைகளை அக்கினிச் சுவாலையிலும், சிங்கக் குகையிலும் போடும்படி செய்ததுமல்லாமல், செம்மறியாட்டுத் தோல்களிலும், வெள்ளாட்டுத் தோல்களிலும் திரிந்தலையப்பண்ணினார். ஆகிலும் அவர்களைச் சேதப்படுத்தவே இல்லை. சகலத்தையும் அவர்களுக்கு நன்மையாக மாற்றினார்: சாபமும் ஆசீர்வாதமாக மாறிற்று. அவர் நம்மை ஒரு கையால் அடித்தால், ஒரு கையால் அணைப்பார். கடைசியில் பெரிய துன்பங்களிலிருந்து வந்து, நம்முடைய வஸ்திரங்களை, ஆட்டுக்குட்டியின் ரத்தத்தில் வெளுத்து, வெண்மையாக்கி, அவருடைய ஆசனத்திற்கு முன்பாக நிற்போம். மோட்சத்தில் சுகமாய் வந்து சேருகிறவர்களில் ஒருவனும், தேவன் தன்னைச் சேதப்படுத்தினார் என்று சொல்லமாட்டான். வழிகளில் எவ்வளவு துன்பங்கள் நேரிட்டாலும், உங்களை ஒன்றும் சேதப்படுத்தமாட்டாது.

என்னை உமக் கொப்புவிப்பேன்
லோக கவலையை நாடேன்;
உம்மை அறிவது என் செல்வம்.
அது உனக் காசீர்வாதம்.

'உன் அக்கிரமத்தை ஒத்துக்கொள்'

எரேமியா 3:13

நாம் கர்த்தரைவிட்டு மருள விழுந்து மறுபடியும் அவரிடத்திற்குத் திரும்ப விரும்பினால், கர்த்தர் நம்மை ஏற்றுக் கொள்வாரா? ஆம் ஏற்றுக்கொள்வார். திரும்புங்கள் என்று உங்களை அழைக்கிறார், உங்களை வேண்டிக்கொள்ளுகிறார். வருத்தமான காரியத்தைச் செய் என்று அவர் சொல்லுகிற தில்லை. உன் அக்கிரமத்தை மாத்திரம் ஒத்துக்கொள் என்கிறார். அவர் மன்னிக்க ஆயத்தமாயிருப்பதினால், கிருபை நிறைந்த தன்மையுள்ளவராக யிருப்பதினால், நாம் நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால், நம்முடைய பாவங்களை மன்னிக்கவும், எல்லா அக்கிரமங்களினின்றும் நம்மைச் சுத்திகரிக்கவும், அவர் உண்மையும் நீதியுமுள்ளவரா யிருக்கிறார். நாம் அவரைவிட்டு அலைந்து திரிந்தோமா? ஆதி நேசத்தைவிட்டோமா? முந்தின புருஷனண்டைக்குத் திரும்புவோமாக. இப்போதிருக்கிறதைவிட அப்போது நாம் நன்றாயிருந்தோம். அவருடைய கைகள் நம்மை ஏற்றுக்கொள்ளத் திறந்திருக்கிறது; அவர் நம்முடைய கழுத்தைக் கட்டிக்கொள்ளத் நம்மை முத்திசெய்யக் காத்திருக்கிறார். நாம் அவருடைய சிம்மாசனத்தண்டைபோய், நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்புக்காகக் கெஞ்சி, அவருடைய அன்பை அனுபவிக்க பெருமூச்சுவிடுவோமாக. அவர் தம்முடைய இரட்சிப்பின் சந்தோஷத்தைத் திரும்ப அளித்து, தம்முடைய உற்சாகமான ஆவியைக்கொண்டு ஸ்திரப்படுத்துவார். நாம் நித்தம் நம்முடைய பாவங்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவோமானால், அவர் நம்முடைய எண்ணிறந்த பாவங்களை மன்னிப்பார். அவருடைய தயவு ஜீவன்; அவருடைய கோபமோ ஆக்கினையும் அழிவுமாம். அவர் இரக்கம் காட்டப் பிரியப்படுகிறார். நம்மை ஏற்றுக்கொண்டு மன்னிப்பளித்து, நம்மை ஆசீர்வதிப்பார்; அவர் இரக்கம் என்றுமுள்ளது.

இந்த நல்ல செய்திதான்
சந்தோஷம் தரும் தான்;
இயேசுவின் அன்பைக் காட்டவே
என் கடமை இதுவே.

'விசுவாசத்தின் மூலமாய் தேவனாலுண்டா யிருக்கிற நீதி'

பிலிப்பியர் 3:9

இங்கே சொல்லியிருக்கிற நீதி தேவனுடைய நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிற நீதி. அவருடைய குமாரன் தம்முடைய ஜீவனாலும் மரணத்தினாலும் சம்பாதித்த நீதி. விசுவாசிக்கிற ஒவ்வொருவனுக்கும் தமது கிருபையால் சாட்டுகிற நீதி. கிருபாசனத்தண்டையில் கெஞ்சும்போது தேவன் அங்கீகரிக்கிற நீதி. நித்திய ஜீவனைத் தந்து கனப் படுத்துகிற நீதி. இந்த நீதி விசுவாசத்தால் வருகிறது. இதை ஏற்றுக்கொள்ளுகிறது விசுவாசத்தின் தொழில். விசுவாசம் இதைக்கொண்டு கெஞ்சும், இதை நம்பும், இதில் சந்தோஷப் படும், இதின்மூலமாய் ஆத்துமாவைத் தைரியப்படுத்தும், இதைக் கொண்டு ஆத்துமாவை உடுத்தும் விசுவாசம் ஒன் றுக்குத்தான் இது கொடுக்கப்படுகிறது. விசுவாசத்தைத்தவிர வேறொன்றும் இதை ஏற்றுக்கொள்ளவுமாட்டாது, அனுபவிக்க வுமாட்டாது, அவிசுவாசியும் சுயநீதியுள்ளவனெவனும் இதைத் தள்ளிப்போடுகிறான். தேவனால் போதிக்கப்பட்டவனெவ னும் தனக்கு இது தேவையென்றுணர்ந்து, அதின் அழகை யும், மகிமையையும், மேன்மையையுங் கண்டு, வாஞ்சையோ டும், விருப்பத்தோடும் அதைத் தேடி, தேவன் கொடுக்கும் நன்மைகளில் விசேஷித்ததாக அதைத் தழுவி, நிலையுள்ள பொக்கிஷமாக அதை அனுபவித்து, அதனால் அங்கீகரிக்கப் பட்டு, அதின்மூலமாய் மகிமையில் பிரவேசிப்பேன் என்கிற நம்பிக்கையோடு மரிக்கிறான். நியாயப்பிரமாணத்தால் வரும் நீதியையல்ல, விசுவாசத்தின் மூலமாய் தேவனால் வரும் நீதி யையுடையவர்களாய் இயேசுவில் காணப்படுவோமாக. ஒவ் வொரு மூச்சைக்கொண்டும் பரிசுத்தத்திற்காக, வாஞ்சித்து, நம்முடைய எந்த செய்கையிலும் அதையே நாடி,

கிருபை என்னில் பெலத்தும்
பாவத்தை நான் ஜெயித்தும்,
தேவநீதி விடேன்,
நின் ரத்தத்தால் மூழ்குவேன்

என்று நாம் ஒவ்வொருவரும் பயபக்தியோடு சொல்லுவோ மாக.

நான் கிருபையைப் பெற்று
பாவத்தை மேற்கொண்டாலும்,
நின் நீதியைத் தரித்து
நின்ரத்தம் என்னை மூடும்.

அக்டோபர்-மீ 7-உ

'என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவி னிடத்தில் அன்பாயிருப்பான்'

யோவான் 14:21

நாம் இயேசுவைச் சிநேகிக்கிறோமா? நமக்கு அவரோடு அறிமுகமுண்டா? நாம் அவரை நேசித்தால், அவரை நன்றாய் அறிந்துகொள்ளப் பார்ப்போம்; சந்தோஷமாய் அவருக்கு ஊழியம் செய்வோம், அவரை எப்போதும் சொந்தமாக்கிக் கொள்வோம். நாம் இயேசுவைச் சிநேகித்தால், அவருக்காகச் சகலத்தையும் புறக்கணிக்க மனமுள்ளவர்களாய், அவர் வேண்டாமென்கிறதைத் தள்ளி, அவர் கற்பிக்கிறதை நாடுவோம். நாம் அவரை நேசிக்கிறதுண்டானால், பின்னும் அதிகமாய் நேசிக்க வாஞ்சிப்போம்; அவரோடு எப்போதும் இருக்கப் பிரியப்படுவோம். நாம் அவரை நேசிக்கிறதுண்டானால், அவருடைய பரமபிதா நம்மை நேசிப்பாரென்று அவர் நமக்கு உறுதி சொல்லுகிறார். ஏனென்றால், அவர் தம்முடைய பிரியமான குமாரனில் சந்தோஷப்படுகிறவரானதால், இயேசுவை சிநேகிக்கிற எந்த ஆத்துமாவண்டையும் வந்து, அதை உயிர்ப்பித்து அதை நேசிக்கிறார். தேவன் நம்மைச் சிநேகிக்கிறதுண்டானால், நமக்கு எந்த நன்மையைத்தான் கொடுக்கமாட்டார். யாராவது நம்மைச் சேதப்படுத்தவிடுவாரா? ஒருபோதும் விடார். தம்மை நமக்கு வெளிப்படுத்துவார், நமக்காக அவர் புறப்பட்டு வருவார், தம்மைத்தாமே நம்மால் மகிமைப்படுத்திக்கொள்ளுவார், தேவனே அவர் நமக்குச் சகலமுமாயிருப்பார், நாம் எதிர்பார்த்திருக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குச் செய்வார். தேவன் நம்மை நேசிக்கிறது நமக்கு எவ்வளவோ பெரிய கனம். மனிதர்கள் அனுபவிக்கக்கூடிய மிகவும் மேலான பாக்கியத்திற்கு அது நம்மைப் பாத்தியஸ்தராக்கும். நாம் இயேசுவை உண்மையாய் வாஞ்சித்து நேசிக்கிறோமென்பதைச் சந்தேகமின்றி நிச்சயித்துக்கொள்ளுவோமாக.

அவர் பாடுகளால்தான்
மன்னிப்பு ரட்சிப்புண்டு;
எங்கும் மோட்ச செல்வம்தான்
அவரால் பாயும் ஊற்று.

‘உனது நேசத்தை நினைப்போம்’

உன்னதப்பாட்டு 1:4

இயேசுவின் அன்பைப்போல மதுரமானது எது அவர் தம்முடைய இருதயத்தின் நற்சித்தத்தைத் தமது இஷ்டப்படி மாறாமல், நித்தியமாய் நமதுமேல் வைத்திருக்கிறார். இயேசுவின் இந்த நேசத்தை நாம் நினைக்கவேண்டும்; அது நம்மைச் சமாதானத்தாலும், சந்தோஷத்தாலும், அன்பாலும் நிரப்பப் போதுமானது. அந்த அன்புதான் நம்மைப் பார்க்கும்படி எவ்வளவோ தாழ்ந்து வந்தது, நமக்காக மரித்தது, நம்மோடு வாசம்பண்ண ஆயத்தமாயிருக்கிறது. அது எவ்வளவு பரோபகார சிந்தையுள்ளது; ஜீவனுக்கும் பக்திக்கும் அவசியமான தெதையும் தருகிறது. அது யாருக்குக் கிடைக்கிறதோ அவர்களை மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும், நித்திய ஜீவனுக்கும் உயர்த்துகிறது; அவருடைய அன்பை நாம் நினைப்போமாக. சிநேகிதர் மாறும்போது அது நம்முடைய இருதயங்களை ஆற்றும்; அந்தகாரம் மூடும் சமயங்களில் அது நம்முடைய ஆத்துமாவைத் தைரியப்படுத்தும்; சோதனை காலங்களில் திடநம்பிக்கையை உண்டாக்கும்; மோசம் நேரிடும்போது திடாரிக்கத்தைத் தரும்; ஒடுக்கப்பட்டு வருத்தப்படும் சமயத்தில் பொறுமையைத் தரும்; துக்கங்கள் நேரிடும்போது மனதைத் தேற்றி ஆதரிக்கும்; கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதில் வைராக்கியத்தைப் பிறப்பிக்கும். ஆ, இயேசுவின் அன்பே, நீ நித்தம் என் நினைப்பும், என்றும் என் சிந்தனையுமாயிரு. அன்பர்களே, வேறெதை மறந்தாலும் இதை நினைத்துக் கொண்டே இருப்போமாக. இதைப்போல இனிமையானதும், மேன்மையானதும், அருமையானதும் ஒன்றுமில்லை. இது நமக்கு லாபத்தைத் தரும், நம்மைச் சந்தோஷப்படுத்தும், நம்மைப் பரிசுத்தமாக்கும்.

உமது நேசப் பெருக்கை
என் கல் இதயத்தில் ஊற்றும்,
இந்த நல் மேலான பங்கை
எனக்கு எப்போதும் தாரும்.

'ஏழையானவன் தன்னை உமக்கு ஒப்புவிக்கிறான்'

சங்கீதம் 10:14

ஆதரவற்றவர்களுக்கு நல்ல உத்தம சிநேகிதர் ஒருவர் உண்டு. கர்த்தருடைய ஜனங்கள் ஏழைகள்; அவர்கள் திக்கற்றவர்களுமல்ல, கைவிடப்பட்டவர்களுமல்ல. ஏகோவா அவர்கள் தேவன்;இயேசு அவர்கள் ரட்சகர்; பரிசுத்த ஆவி அவர்கள் தேற்றரவாளன், அவர்கள் வழிகாட்டி; அவர்கள் தேவனை அறிந்து, தங்களையும் தங்களுக்குரிய எல்லாவற்றையும் அவருக்கு ஒப்புவிக்கிறார்கள். கடன்காரன் தன் ஜாமீன் தாரிடத்திலும், வியாதியஸ்தன் தன் வைத்தியனிடத்திலும், வழக்காளி தன் வக்கீலிடத்திலும், ஏழை ஆஸ்திபந்தனும், உதாரகுணமுள்ளவனுமான சிநேகிதனிடத்திலும், பாவி தன் ரட்சகரிடத்திலும், அன்புள்ள மனையாட்டி அன்புள்ள தன் மணவாளனிடத்திலும் தன்னை ஒப்புக்கொடுக்கிறதுபோல ஒப்புக்கொடுக்கிறார்கள். தங்களை ஏன் அவருக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள்? ரட்சிக்கப்படுகிறதற்கு அவருடைய கிருபைக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்; காக்கப்படுவதற்கு அவருடைய வல்லமைக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்; போஷிக்கப்படுவதற்கு அவருடைய திவ்விய செயலுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்; தங்களை ஆளுவதற்கு அவருடைய வசனத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்; தங்களைப் பாதுகாக்க அவருடைய கவலைக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்; மரணத்தில் சுகபத்திரமாய் மகிமையோடு கரைசேர, அவருடைய கரங்களுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். இது கிருபையினின்று உற்பத்தியாகி, சமாதானத்தையும், க்ஷேமத்தையும், திருப்தியையும், காரியசித்தியையும் உண்டாக்குகிறது. சிநேகிதரே, நாம் நம்மை நித்தம் முழுமனதோடு நன்றாய் யோசித்து, கொஞ்சமும் பின்வைக்காமல் முழுவதும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

கர்த்தரே, நீர் என்னுடைய
கோட்டை, கேடகம், நேசன்
என்னைக் காத்து ரட்சிப்போன்,
என் விண்ணப்பத்தைக் கேட்போன்;
மரணம்தான் வந்தாலும்,
நான் விடேன் ஒருக்காலும்.

'தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ் சாட்டுகிறவன் யார்?'

ரோமர் 8:33

தேவன் தெரிந்துகொண்டவர்கள் பாவிகள்தான்; அதை அவர்கள் அறிவார்கள்; அதை உணர்ந்து அதற்காகத் துக்கப் படுகிறார்கள். உலகம் அவர்களுக்கு விரோதி; சாத்தான் எவ் விதமும் தன் வல்லமையால் அவர்களைக் கெடுக்க வகை பார்க் கிறான்; அவன் நோக்கம் அனுகூலம் அடையாது; தேவனுக்கு ஸ்தோத்திரம். பரிசுத்த ஆவி அவர்களுக்குள் செய்யும் கிரியை பரிசுத்தத்தின்மேல் வாஞ்சையை எழுப்பிவிட்டு, அந்த வாஞ்சையை அதிகப்படச் செய்துகொண்டே யிருக்கி றது. பாவத்திற்கு விரோதமாய்ப் போராடவும், தேவ மகி மையை நாடி தங்களைச் சூழ்ந்திருக்கிற யாவருக்கும் ஆசீர் வாதமாயிருக்கவும் விரும்பும்படி செய்கிறது. கிறிஸ்தவர் களுக்காகச் செய்யும் கிரியைப் பார்த்து நித்தியபிதா அவர் களைக் குற்றமற்றவர்களென்று தீர்க்கிறார். அவருடைய வார்த் தையை விசுவாசித்து, தங்களுக்குரிய சிலாக்கியத்தை நன் றாய் அறிந்து, கர்த்தர் தெரிந்துகொண்டவர்கள்மேல் யார் குற்றம் சாட்டக்கூடுமென்று தைரியமாய்க் கேட்கலாம். தேவன் குற்றம் சாட்டுவாரா? சாட்டமாட்டார். அவர் தம் முடைய குமாரனுடைய மரணத்தினால் முற்றிலும் திருப்தி யடைந்திருக்கிறார். மனச்சாட்சி குற்றம் சாட்டுமா? சாட்ட மாட்டாது. இது இயேசுவின் ரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டு, தேவவசனத்தால் வாயடைக்கப்பட்டு, கர்த்தருடைய தீர்ப்பை உறுதிப்படுத்துகிறது. சாத்தான் குற்றம் சாட்டு வானா? சாட்டமாட்டான். அவன் தள்ளப்பட்டுப்போனபடி யால், அவன் சாட்சியைத் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார். வெகுகாலத்திற்கு முன்னேயே சத்திய பராபரன் அவன் பொய்யனென்று தீர்த்தார். யாவருக்கும் நியாயாதிபதியாகிய இயேசு குற்றம் சாட்டுவாரா? சாட்டமாட்டார். நம்மை ஆக் கினைக்குள்ளாக்குகிறதைப் பார்க்கிலும், நமக்காக மரிக்கிறதே அவருக்குப் பிரியம். சிநேகிதரே, ரட்சகருடைய கிரியை எவ் வளவு பூரணமுள்ளதென்று பாருங்கள்.

அவர் என் கடன் தீர்த்தார்;
கடைசிக் காலம் ஈந்தார்;
அவர் நீதி காக்குது,
கோபாக்கினை தொடாது.

'தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்'

யூதா 21

தேவன் தம்முடைய ஜனங்கள்பேரில் வைத்திருக்கிற அன்பு இலவசமானது, சொல்லிமுடியாதது, நித்தியமானது, நாம் தேவன்பேரில் வைத்திருக்கும் அன்போ அவரைப்பற்றி னது. தேவன் நமதுபேரில் வைத்திருக்கிற அன்பு அதற்கு ஊற்று. அவரை நாம் விசுவாசிக்கிறதினால், அவரோடு நமக் கிருக்கும் ஐக்கியந்தான் அதற்கு ஜீவன். அதினால்தான் தேவ அன்பில் நம்மைக் காத்துக்கொள்ளும்படி அப்போஸ்தலன் நம்மை எழுப்பிவிடுகிறார். இதினால் தேவன் நம்மை நேசிக்கிற தும், அதை அறிந்து நாம் அவரை நேசிக்கிறதும் தெளிவாய் விளங்குகிறது. நாம் உறுதியாய் நின்று தேவ அன்பில் உண்மையாகவே நம்மைக் காத்துக்கொள்ளவேண்டுமானால், எப்பொழுதும் அதை நம்முடைய மனதுக்குமுன் வைத்துக் கொள்ளவேண்டும்; அதை நாம் விசுவாசிக்கவேண்டும், ஜெபத் தோடு கர்த்தர் காட்டும் வழியிலே அதைத் தேடி அனுபவிக்க வேண்டும். தேவ அன்பில் நம்மைக் காத்துக்கொள்ளவேண்டு மானால், சோதனைகளை வெறுத்துத் தள்ளி, விசுவாசத்தோடு நடந்து, அவர் கண்ணுக்கு முன்னிருக்கிறவர்கள்போல வாசம் பண்ணவேண்டும். ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கிறதில் நாம் நம்மைக் காத்துக்கொள்ளவேண்டுமானால், ஒருவரை ஒருவர் எழுப்பிவிட்டு, ஒருவரை ஒருவர் தாங்கி, ஒருவருக்கொருவர் நன்மாதிரி வைக்கவேண்டும். தேவ அன்பினால் நம்மைக் காத் துக்கொள்ளவேண்டுமானால், சாத்தானுடைய சோதனைகளி லிருந்தும், உலகக் கண்ணிகளிலிருந்தும், மாமிசத்தின் இச் சைகளிலிருந்தும் விலகிக் காக்கப்படுவோம். சிநேகிதரே, தேவனுடைய அன்பு நம்முடைய பாவங்களை எவ்வளவு பெரி தாக்குகிறது. அசுத்தமும் விலக்கப்பட்டதுமான எதையும் நாம் எதிர்த்து நிற்க, நமக்குள் தைரியத்தை எரிந்து பிரகா சிக்கச் செய்யவேண்டும்.

குற்றம் என்னைப் பிடித்து
துக்கத்தால் நிரப்பிற்று;
உமது பாதத்தில் வீழ்ந்து
இரங்கும்படி கேட்டு,
ரட்சியுமென்றேங்கினேன்,
உம்மை விடேன் என்கிறேன்.

'உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்'

எண்ணாகமம் 32:23

பாவம் மறைக்கப்பட்டிராது. தேவன் அதைப் பார்க்கிறார். அவர் மனம் அதை அருவருக்கிறது. நாம் அதைக் கண்டுபிடித்து துக்கத்தோடு அறிக்கையிட்டு அருவருத்துத் தள்ளாவிட்டால், அது நம்மைக் கண்டுபிடிக்கும், தேவதண்டனைக்கும் பக்திமான்களுடைய இகழ்ச்சிக்கும் நம்மை உள்ளாக்கும். அது ஆகானைக் கண்டுபிடித்து அவனுக்கு நாசமுண்டாக்கிற்று; அது நோவாவைக் கண்டுபிடித்து அவனை அபகீர்த்தியால் மூடிற்று; அது தாவீதையும் கண்டுபிடித்தது; பட்டயம் அவன் வீட்டைவிட்டு நீங்கினதேயில்லை. தேவன் பாவத்தோடு ஒப்புரவாகமாட்டார்; நாமும் ஒப்புரவாகக்கூடாது. பாவம் எவ்வளவு ரகசியமானதாயினும் தேவன் அதற்குச் சாட்சி; அதை அவர் வெளிக்குக் கொண்டுவருவார். தன் பாவத்தை மூடுகிறவன் சுகமடையான்; தன் பாவங்களை அறிக்கையிட்டுத் தள்ளுகிறவனே இரக்கம் பெறுவான். பாவத்திற்கு இடம் கொடாதபடி எச்சரிக்கையாயிருப்போமாக. அவர் நம்மை நேசிக்கிறபடியால், நம்மை வெட்கப்படுத்தமாட்டார் என்று வீணாய் எண்ணாதிருப்போமாக. நம்முடைய பாவம் நம்மைக் கண்டுபிடிக்குமென்று நமக்கு உறுதியாய்ச் சொல்லுகிறார். தேவன் பாவத்தைப் பகைக்கிறதுபோல, நாம் அதைப் பகைத்து, இயேசு அதை அருவருக்கிறதுபோல, நாம் அதை அருவருத்தால் எவ்வளவு பாக்கியம். அதற்கு நாம் மரித்து அதினின்று முற்றிலும் விடுதலையாவது எத்தனை பெரிய சிலாக்கியம். நம்முடைய எல்லா நிர்ப்பாக்கியத்திற்கும் அதுவே ஊற்று; எல்லா வருத்தத்திற்கும் அதுவே மூகாந்தரம்; நம்முடைய எல்லாத் துன்பத்துக்கும் அதுவே காரணம். அது மறைந்திராது; அது நம்மைக் கண்டுபிடிக்கும்; நன்றாய்க் காயப்படுத்தும்.

தேவ அன்பின் இனிமை
யாரால்தான் சொல்லக்கூடும்?
ரட்சிப்பின் மா பெருமை
நாவுகள் யாவும் பாடும்.

'சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்'

எரேமியா 3:22

நாம் அலைந்து திரிய மனமுள்ளவர்கள்; தினந்தோறும் வழிதப்பிப்போகிறோம். நம்முடைய தேவன் நியாயப்படி நம்மைத் தள்ளிவிடலாம்; அவரோ திரும்பி வாருங்களென்று அன்பாய் அழைக்கிறார். வார்த்தைகளைக்கொண்டு தன்னிடத்தில் வரச்சொல்லுகிறார் அவர் பாதத்தண்டையில் தீவிரித்து வர, நமக்கு வேண்டிய தைரியம் கொடுக்கிறார். நாம் பிள்ளைகள், சீர்கெட்ட பிள்ளைகள், நம்மைத் திரும்பச் சொல்லுகிறது நம்முடைய பரமபிதா. சிநேகிதரே, இன்று காலமே நாம் கர்த்தரிடம் திரும்பி, நம்முடைய பாவத்தை அறிக்கையிட்டு, நம்முடைய புத்தியீனத்தினிமித்தம் புலம்பி, மன்னிப்புக்காகக் கெஞ்சி, அவருடைய வாக்குத்தத்தத்தை எடுத்துக் காட்டி, அவருடைய இரக்கத்தை நம்பி, ஒப்புரவாகுதலின் அன்புக்குரிய அடையாளத்தை எதிர்பார்ப்போமாக. இப்படிப்பட்ட பிதா, மன்னிக்கிறதற்கு இவ்வளவு ஆயத்தமாயிருக்கிறவர், ஏற்றுக்கொள்ள இவ்வளவு மனசுள்ளவர், நாம் ஆசீர்வாதம் பெற்று பாக்கியராகவேண்டுமென்று இவ்வளவாய் விரும்புகிற பிதா நமக்கிருக்கிறது சொல்லமுடியாத இரக்கம். அவருடைய அன்பு ஆச்சரியமானது, அவருடைய அன்பு சொல்லித் தீராது. நீட்டப்பட்ட அவருடைய கரங்களைப் பார்; அழைக்கிற அவருடைய சத்தத்தைக் கேள்; ஆசீர்வாதம் பெற அவரிடத்தில் ஓடு. உன்னுடைய நிர்ப்பந்தம், நிர்ப்பாக்கியம், இதுகளை நினைத்துக்கொண்டிராதே. அவைகள் உன்னுடைய சீர்கேட்டால் உண்டானது. அவரோ 'நான் உன் சீர்கேடுகளைக் குணமாக்குவேன்' என்கிறார். கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். அவருடைய மனம் நமக்காகத் துக்கப்படுகிறது, அவருடைய வார்த்தை நம்மை அழைக்கிறது, அவருடைய அன்பு நம்மைப் பாக்கியசாலிகளாக்கும்.

இரக்கம் நிறைந்த தேவா!
என் விண்ணப்பம் கேள் வா;
என் சஞ்சலத்தை நீக்கிப்போ
சந்தோஷம் தருவாய்.

'நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணுவேன்'
எரேமியா 10:17

இயேசுவானவர் சாமர்த்தியமுள்ள வைத்தியர், அவர் தம்முடைய ஜனங்களுடைய விழுதல், நொறுங்குதல், முறிவுகள் முதலியவைகளைச் சுகப்படுத்துகிறார்; இருதயத்திற்குச் சுகம் அளிக்கிறார். விசுவாசியே, உன் இருதயம் கடினப்பட்டு அலைக்கழிந்து அவிசுவாசங்கொண்டு காயப்பட்டிருக்கிறதா? இயேசு அதைச் சுகப்படுத்துவார். உங்களைப் பார்த்து, 'வந்து சுகமாகுங்கள்' என்கிறார். ஆயாசப்பட்டதையும், சாகக்கிடக்கிறதையும், செத்துப்போனதையும் அவர் உயிர்ப்பிக்கிறார். அவர் எந்த வியாதியையும் சுகப்படுத்துகிறார்; பணமுமின்றிக் காசுமின்றிச் சுகமாக்குவார்; ஆனால் நம்மை முற்றிலும் அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். மற்றெல்லா மருந்துகளையும் தள்ளவேண்டும். அவர் கொடுப்பதையெல்லாம், கசப்பானாலும், தித்திப்பானாலும், சாப்பிடவேண்டும். அவரைத் தொடு, அவரை நம்பு, பாக்கியவானாயிரு. இயேசுவுக்கு ஏகோவா, ரபி என்று பேர். அவரிடத்தில் சுகத்திற்காகத்தான் எதிர்பார்க்கலாம். அவர் சமீபத்தில் வாசம்பண்ணு; நித்தம் அவரிடத்தில் யோசனை கேள்; உன் காரியம் முழுவதையும் அவருக்குச் சொல்லு. அவருடைய சுபாவம் மாறி, அவருடைய திறமை கெட்டு, அவர் சுகப்படுத்துவேனென்று சொல்லியது வேதவசனத்திலிருந்து எடுபடும் வரையில் அவநம்பிக்கைக்கு இடங்கொடாதே. சுகமடைந்ததற்காக நன்றியறிந்தவனாயிருந்து, மற்றவர்களை அவரிடத்தில் கொண்டுவருகிறதினால் உன் நன்றியறிதலைக் காட்டு. இந்த நல்ல வைத்தியனைக் குறித்து மற்றவர்களிடத்தில் புகழ்ந்து பேசு. அவரை நம்பு, அவர் கேட்ட அந்தக் கேள்வியை மறவாதே. "சுத்தமானவர்கள் பத்துப் பேரல்லவா? மற்ற ஒன்பது பேர் எங்கே? தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பி வரக்காணேமே.' அன்பர்களே! இயேசுவினிடம் வந்து குணமாகுங்கள். உங்களுக்குக் காட்டப்பட்ட இரக்கத்திற்குத் தக்கதாக அகத்தியம் பதில் செய்யப்பாருங்கள்.

குணமாக்கும் ஏசு சுவாமி!
நீர் சொல்ல நோய் பறக்குமே,
நீர் என்னைத் தொடுமேன், அப்போ;
சுகம் பெலனும் வாராதோ?

'அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்'

மாற்கு 6:6

அவிசுவாசம் இயேசுவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்ததாகக் கண்டிருக்கிறது. நம்முடைய அவிசுவாசத்தைக் கண்டு அவர் ஆச்சரியப்படுகிறது அதிசயமா? சந்தேகத்தை நீக்க, தேவன் செய்ததைக் கவனித்துப்பார். தம்முடைய தன்மையை நமக்குத் தெரியப்படுத்தினர். 'தேவன் அன்புமயம்.' ஒரு விளம்பரம் செய்திருக்கிறார்: 'இப்பொழுதே தகுதியான காலம். இதுவே ரசணிய நாள்.' நம்மை அழைக்கிறார். 'என்னை நோக்கி, ரட்சிப்படையுங்கள்' என்கிறார். நம்மைப் பார்த்துக் கெஞ்சுகிறார்: 'தேவனுனவர் எங்களைக்கொண்டு புத்தி சொல்லுகிறதுபோல, தேவனோடே ஒப்புரவாகுங்களென்று கிறிஸ்துவினிமித்தமாய் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.' ஒரு கட்டளை கொடுத்திருக்கிறார்: 'அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை விசுவாசிக்கிறதுதான் அவர் கொடுத்த கட்டளையாயிருக்கிறது.' ஒரு ஆணையையும் கொடுத்திருக்கிறார்: 'இரண்டு மாறாத விசேஷங்களினால் நமக்கு நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.' அவருடைய குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனைப் பெறுவானென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அவரையே ஈடாகத் தந்தார். இதற்குத் தம்முடைய பரிசுத்தவான்கள் யாவருடைய சாட்சியையும் கூட்டியிருக்கிறார். நம்முடைய அவிசுவாசத்தைக் கண்டு, அவர் ஆச்சரியப்படலாம். நாம் அதற்குப் போக்குச் சொல்லாமல், அதை ஜெயிக்குமட்டும், அதற்கு விரோதமாய் ஜெபத்தில் போராடுவோமாக.

மன்னிப்பெனக்கீயும்,
அவிசுவாசம் போக்கும்
அப்போதான் நேசம் பாயும்;
என் ஆவி மோட்சம் சேரும்.

'கர்த்தர் உன் நம்பிக்கையாயிருப்பார்'
நீதிமொழிகள் 3:26

தேவனை அறிந்து விசுவாசிப்பதே நமது பாக்கியம். அவருடைய சரியான தன்மையை நாம் அறிந்தால், அவருடைய அருமையான வார்த்தையை நாம் விசுவாசிப்போம். அவருடைய பரிசுத்த வசனத்தை விசுவாசித்தால், சமாதானத்தை அனுபவித்துப் பரிசுத்தமான திருப்தியடைவோம். நம்மைப் பரிசுத்தமும், பாக்கியமும், கனமுமுடையவர்களாக்க அவருக்குத் திறமையுண்டு. மனமுமுண்டென்று அவருடைய வசனத்தில் தெரியப்பண்ணுகிறார். நமக்கு வருத்தத்தை உண்டாக்குகிற சகலத்தையும் அவருக்கு நாம் சொல்லலாம். நமக்கு வேண்டிய சகலத்தையும் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம், அவரோடு நடந்து சமாதானம் அடையலாம். தேவனை நாம் நம்புகிறதற்குத் தகுந்த முகாந்தரமுண்டு. அவர் வல்லமையுள்ளவர், அன்புள்ளவர், உத்தமர், நம்மோடு பேசியிருக்கிறார். நமக்காகத் தம்மை வெளிப்படுத்துவார், நம்மைவிட்டு ஒருபோதும் விலகார், நமக்கு நன்மை செய்கிறது அவருக்குப் பிரியம். முழுமனதோடும் முழு இருதயத்தோடும், நமக்கு நன்மை செய்வார். அவரை நம்முடைய நம்பிக்கையாக வைத்துக்கொள்ளவேண்டுமானால், அவருடைய வார்த்தையை விசுவாசித்து, அவருடைய கிருபாசனத்தண்டைபோய், சகலத்திலும் அவருடைய மகிமையைத் தேடுவோமாக. நீ துன்பப்பட்டவனா? பயந்தவனா? சோர்ந்துபோனவனா? 'அவரோடு பழக்கமாகிச் சமாதானமாயிரு. அப்பொழுது உனக்கு நன்மை வரும்.' 'கர்த்தரை நம்புகிறவர்கள் அசையாமல் என்றும் நிலைத்திருக்கிற சீயோன் பர்வதத்தைப்போலிருப்பார்கள்.' ஆதியில் நமக்கிருந்த நம்பிக்கையை விடாமற் பிடிப்போமாக.

கடைமட்டும் என்னைக் காரும்,
உம்மைப் பிடித்திருக்கிறேன்;
சாவில் என்னை மேலே சேரும்;
அப்போ கிரீடமும் தரிப்பேன்.

அக்டோபர்-மீ 17-உ

'பலவீனத்தில் என் பெலன் பூரணமாய் விளங்கும்'
2 கொரிந்தியர் 12:9

விசுவாசி தன் பலவீனத்தை எவ்வளவுக்கு அதிகமாய் உணருகிருனே, அவ்வளவுக்கு அதிகமாய் ரட்சகர் தனக்காக வெளிப்பட்டுத் தன்னைப் பெலப்படுத்துவாரென்று அவன் எதிர்பார்க்கலாம். நமக்குச் சோதனைகளும் துன்பங்களும் அதிகமாய் நேரிடும் சமயங்களில், இயேசுவின் பெலன் அதிகமாய்க் கிடைக்கும். அதை அதிகமாய் அனுபவிக்கவும், அது அதிகமாய் விளங்குகிறதைப் பார்க்கவும் கூடும். ஆபிரகாம் தன் அருமையான மகன் ஈசாக்கை பலிசெலுத்தினபோது மிகவும் பெலசாலியாகக் காணப்பட்டான். இரத்தசாட்சிகள் சிறைச்சாலையில் தங்கள் பலவீனத்தை நன்ருய் உணர்ந்து, பெலனுக்காக இயேசுவை நோக்கிக் கெஞ்சினபோதுதான் அதிக தைரியஸ்தராய் விளங்கினுர்கள். அவருடைய உண்மையையும் அன்பையும் சார்ந்து, சகலத்தையும் விட்டு மரிக்கும் ஸ்தலத்திற்குப் போனுர்கள். அப்போதுதான் 'கிறிஸ்துவைத்தவிர ஒன்றுமில்லை,' என்றும், 'ஜீவனே போ, கிறிஸ்துவின் சிலுவையே வா' என்றும் கூப்பிட்டார்கள். சிநேகிதரே, நாம் உணர்ந்தல்ல, விசுவாசித்து நடக்கக்கடவோம். நம்முடைய பலவீனத்தை உணரும்போது, இயேசுவின் பெலன் மிகவும் சமீபமாயிருக்கிறது. அவர் இளைத்தவர்களுக்குப் பெலனைத் தந்து, பலவீனருடைய பெலனை அதிகரிக்கப்பண்ணி, தம்முடைய இரக்கத்தைப் பெரிதாக்குகிருர். நாம் அவர்பேரில் சார்ந்திருக்கவேண்டும். நம்மைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினுல் சகலத்தையும் செய்ய நமக்குப் பெலனுண்டு. அவர் நம்முடைய பெலன்; துன்பத்தில் 'நமக்கு ஏற்ற சகாயர்.' அவர் நம்முடைய பலனுயிருக்கிருர், நம்முடைய ரட்சிப்புமானுர். கர்த்தாவே, நீர் என்னில் செய்திருக்கிற கிரியையைப் பலப்படுத்தும்.

பூமியிலே துன்பமற்று
இருக்க நான் விரும்பேன்;
பாடென்னைச் சூழ்ந்து முற்றும்
உம்மையே நான் நம்புவேன்;
சமாதானம் தாருமே,
கிருபை பெலன் ஈயுமே.

'நானோவென்றால் கர்த்தரை நோக்கிக் கொண்டிருப்பேன்'
மீகா 7:7

சிருஷ்டிகளை நோக்குவோமானால், நம்முடைய நம்பிக்கை எப்பொழுதும் வியர்த்தமாகும். ஆதலால், நம்மை நன்றாய் நேசித்து, எப்பொழுதும் நம்முடைய நன்மையை யோசிக்கிறவர் அப்படிச் செய்யவேண்டாமென்கிறார். தீர்க்கதரிசிக்கு ஆண்டவர் அநேகம் பெரிய சோதனைகளைக்கொண்டு சிருஷ்டிகளை நம்பவேண்டாமென்று போதித்தார். அதனால் தான் இப்பொழுது கர்த்தரை நோக்கத் தீர்மானம் செய்கிறான்; நாம் அவனைப்போல செய்வோமாக. சேனாதிபதியாகக் கட்டளை கொடுக்கவும், எஜமானாக நம்மை நடத்தவும், பிதாலாக நம்மை சவரட்சணை செய்யவும், தேவனாக நம்மைக் காக்கவும், நாம் கர்த்தரை நோக்குவோமானால் நல்லது. அவருடைய நாமம் பலத்த அரண்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருக்கிறான். நாம் இயேசுவை நோக்குவோமானால் லட்சாதிலட்சம் கண்ணிகளுக்குத் தப்புவோம்; கிறிஸ்தவர்களைப் போல சகிக்க ஆயத்தப்படுவோம்; ஜெயவீரரைப்போல மேற்கொள்ளுவோம். கர்த்தருடைய கண்கள் எப்போதும் நமது பேரிலிருக்கிறது; நம்முடைய கண்கள் எப்போதும் அவர் பேரிலிருக்கட்டும். தேவையான யாவையும் பெற்றுக்கொள்ள, நாம் பயப்படுகிற யாவுக்கும் தப்பிக்கொள்ள, நம்முடைய விருத்திக்குத் தடையாயிருக்கிற யாவையும் வெல்ல, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர, அவரையே நோக்குவோமாக. அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை யென்று சொல்லியிருக்கிறது. இயேசு நேற்றும், இன்றும் என்றும் ஒரு சீராயிருக்கிறார்.

எனக்கிரங்கும் தேவனே!
உமதாவியைத் தாருமே,
சந்தோஷம் தாரும் நாயனே!
உம்மையே நான் நம்பினேனே.

அக்டோபர்-மீ 19-உ

'நான் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்; நீர் என்னைக் கேட்டருளுவீர்'

சங்கீதம் 86:7

தாவீதுக்கிருந்த நோக்கமும், அவனுக்கிருந்த நிச்சயமும் இங்கே கண்டிருக்கிறது. இந்த நிச்சயத்திற்கு அவனுக்கிருந்த ஆதாரம் நமக்குண்டு. நம்முடைய தேவன் ஜெபத்திற்கு உத்தரவு கொடுப்பார், தேவன் உத்தரவு அருளுவார் என்று நாம் நிச்சயிக்கும்பொருட்டு, அவசியமானது என்னவென்று விசாரிப்போமாக. நாம் ஜெபிக்கும்போது உட்கருத்தோடு ஜெபிக்கவேண்டும். ஒரு திட்டமான காரியத்திற்காக ஜெபிக்கவேண்டும். தேவசித்தத்திற்கு ஒத்து, அவருடைய வாக்குகளிலும், கட்டளைகளிலும் வெளிப்பட்டிருக்கிறபடி ஜெபிக்கவேண்டும். தேவ சித்தத்திற்கமைந்து ஜெபிக்கவேண்டும். அவர் எப்பொழுது உத்தரவு கொடுப்பாரோ, எந்த வகையாய் உத்தரவு கொடுப்பாரோ அதற்குக் கீழடங்கவேண்டும். நாம் எதற்காக ஜெபிக்கிறேமோ, அதின்மேல் அதிக வாஞ்சையாயிருக்கவேண்டும். தேவன் மகிமைப்படவேண்டும், பாவத்தை ஜெயிக்கவேண்டும், இயேசு மகிமையடையவேண்டும் என்னும் இப்படிப்பட்ட சுத்தாங்கமான நோக்கத்தோடு ஜெபிக்கவேண்டும். ஓயாமல் விடாமுயற்சியோடு ஜெபிக்கவேண்டும். இயேசுவின் நாமத்தின் மூலமாய் நம்முடைய விண்ணப்பங்களைச் செலுத்தி, அவர் நிமித்தம் அவைகள் ஏற்றுக்கொள்ளப்படும், கனமடையும் என்று நாம் எதிர்பார்க்கவேண்டும்.எந்தப் பாவத்தையும் நாம் பேணிவைக்கக்கூடாது. இருதயத்தில் அக்கிரமத்தைப் பேணிவைப்போமானுல், கர்த்தர் நம்முடைய விண்ணப்பத்தைக் கேளார். விசுவாசத்தோடு ஜெபம்பண்ணவேண்டும். தேவன் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். இவ்விதமாய் அவரை நோக்கிக் கூப்பிடு; தேவன் உனக்கு உத்தரவு கொடுப்பார்.

தேவா, உமதாவி தாரும்,
நல் இதயத்தை மாற்றும்,
என் ஆவியை உயிர்ப்பியும்,
உம்மிடத்தில் சேர்ப்பியும்.

அக்டோபர்-மீ 20-உ

'இதோ உன் ரட்சிப்பு வருகிறது'
ஏசாயா 62: 11

கர்த்தருடைய ஜனங்கள் அதிகமாய்ச் சோதிக்கப்பட்டுச் சோர்ந்துபோகிறதுண்டு. இப்பொழுதிருக்கிற நிலைமையைவிட அதிக கெட்ட நிலைமை அவர்களுக்கு வரப்போகிறதில்லை. தேவன் குறித்த மீட்பின் நாளுக்கு அவர்கள் தீவிரித்துப் போகிறார்கள். அவர்களுடைய ரட்சிப்பு புறப்பட்டு வருகிறது. இப்பொழுது அவர்கள் படுகிற எல்லா வியாதிகளினின்றும், அவர்கள் பெருமூச்சு விடுகிற எல்லா பாவங்களினின்றும், இப்பொழுது பயப்படுகிற எல்லா சத்துருக்களினின்றும், இப்பொழுது அவர்களை இருத்துகிற எல்லாக் கவலைகள் துன்பங்களினின்றும் அவர்கள் சீக்கிரம் விடுதலையாவார்கள். அன்பர்களே, ஏன் இவ்வளவாய்ப் பயப்படுகிறீர்கள்? ஏன் வீண் நினைவுகள் உங்கள் உள்ளத்தில் எழும்புகிறது? இதோ உங்கள் ரட்சிப்பு வருகிறது, அவருடைய பலன் அவரோடிருக்கிறது, அவருடைய கிரியை அவருக்குமுன் நிற்கிறது. உங்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கிற சகலத்தினின்றும் உங்களை விடுதலையாக்கி, எல்லாப் பயத்திற்கும் மேலாக உங்களைத் தப்புவிப்பார். விடுதலை காலம் சமீபிக்கிறது, தப்புகிற வருஷம் கிட்டுகிறது; யூபிலியின் எக்காள சத்தம் சீக்கிரம் கேட்கப்படும். நம்முடைய பிதாவின் வீட்டிற்கு நம்மை நடத்த நம்முடைய ரட்சகர் சீக்கிரம் வருவார். நமக்காக ஆயத்தம் பண்ணின மாளிகைகளுக்கு நம்மைக் கொண்டுபோவார். நாம் கர்த்தரோடே என்றும் இருப்போம். இதோ மணவாளன் வருகிறார்; அவரைச் சந்திக்கப் புறப்படுங்கள் என்கிற இந்த வார்த்தைகளைச் சொல்லி, ஒருவரை ஒருவர் ஆறுதல் படுத்துங்கள். அவர் வருகைக்கு ஆயத்தமாயிருந்தால், மகிமை நிறைந்த அவர் ஜெயங்களில் பங்கு பெற்றால், எவ்வளவோ நல்லது.

மேலிருந்து இயேசு சைகை
காட்டுகிறார், அதை நீ பார்,
அவ்விடம் ஓடி அவரை
அவரே சரணஞ் சேர்;
அவரால் ஜெயமடைவாய்
அவருக்குள் மகிழுவாய்.

அக்டோபர்-மீ 21-உ

'உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்துவீர்'

சங்கீதம் 73:24

இந்த வார்த்தைகள் கர்த்தர் எவ்வளவோ கிருபை நிறைந்தவரென்றும், குறைவற்ற நீதியுள்ளவரென்றும், சொல்ல முடியாத ஞானமுள்ளவரென்றும், மாருத உண்மையுள்ளவரென்றும் அறிந்தவன் சொல்லுகிறது. அவரை அறியாவிட்டால், அவரை நம்பமாட்டோம். அவர் இஷ்டமானபடி நம்மை நடத்த, அவருக்குப் பிரியமான வகையாய் அவருக்கு இஷ்டமானவர்களைக்கொண்டு நம்மை நடத்த, அவருக்கு நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுக்கிறதுதான் இந்த வார்த்தையில் கண்டிருக்கிறது. இப்படி ஒப்புக்கொடுக்கிறது மிகவும் ஏற்றது, விவேகமானது, பிரயோஜனமானது. இப்படிப்பட்ட மனத்திருப்தியோடு கூடிய பக்தி பெரிய ஆதாயம். இப்படி ஒப்புக்கொடுக்கிறது கர்த்தருடைய வாக்கிலும், அவர் கிருபை நிறைந்த சமூகத்திலும், அவர் உடன்படிக்கையின் தன்மையிலும் வைக்கும் விசுவாசத்தின் பலன். கர்த்தரிடத்திலிருந்து எதிர்பார்த்திருப்பதை இது காட்டுகிறது. கர்த்தர் யாரை நடத்துகிருரோ,அவர்களை ஆதரிக்கிருர், காப்பாற்றுகிருர், அவர்கள் குறைவைத் தீர்க்கிருர், அவர்களை ஏற்றுக்கொள்ளுகிருர். தம்முடையவர்களாகப் பத்திரப்படுத்த, கிருபாசனத் தண்டையில் இப்பொழுது அவர்களை ஏற்றுக்கொள்ளுகிருர். பிறகு அவர்களைத் தம்முடைய மகிமையின் ஆசனத்தண்டையில் ஏற்றுக்கொண்டு, பரிசுத்தம், பாக்கியம், கனம் இவைகளண்டைக்கு நடத்துவார். சிநேகிதரே, நீங்கள் இப்படி உங்களை ஒப்புக்கொடுத்தீர்களா? தினந்தோறும் ஒப்புக்கொடுத்து வருகிறீர்களா? உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, பிறகு என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர் என்று கிருபை நிறைந்த உங்கள் தேவனைப் பார்த்து சொல்லுவீர்களா? அப்படியாளுல், நீங்கள் பாக்கியவான்கள், மகிமையுள்ள தேவ ஆவி உங்கள்பேரில் நிலைத்திருக்கும். கர்த்தர் ஞானமுள்ள, பொறுமை நிறைந்த, தப்பிதம் செய்யாத வழிகாட்டியாயிருக்கிருர்.

கர்த்தாவே, உமது வார்த்தை
வெளிச்சம் சத்தியம், அதை
நம்பினேர்க்கு நல் உணவு,
நன்மை யாவுக்கும் பேரூற்று;
அதால் நான் வழிவிலகேன்,
பாவம் வெறுத்துத் தள்ளுவேன்.

'அவன் பொறுமையாய்க் காத்திருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்'
எபிரேயர் 6:15

ஆபிரகாம் நெடுநாள் சோதிக்கப்பட்டு, மிகுதியான பலனைப் பெற்றான். பாவச் சோதனைகளால் சாத்தான் அவனைச் சோதித்தான். சந்தேகத்தாலும், அவநம்பிக்கையாலும், விரோதத்தாலும் மனுஷர் அவனைச் சோதித்தார்கள். வெடுவெடுப்பான குணத்தால் சாராள் அவனைச் சோதித்தாள், அவனோ பொறுமையாய்ச் சகித்தான். தேவனுடைய உண்மையை அவன் சந்தேகிக்கவில்லை, அவருடைய வல்லமையை மட்டுப்படுத்தவில்லை, அவர் உண்மையைக் குறித்து ஐயங்கொள்ளவில்லை, அவருடைய அன்பைத் துக்கப்படுத்தவில்லை; திவ்விய சித்தத்திற்குக் குனிந்து பணிந்தான், அளவற்ற ஞானத்திற்குக் கீழமைந்தான், தேவன் தாமதித்தும் அவருடைய நேரத்திற்கு மவுனமாய்க் காத்திருந்தான். இவ்விதமாய்ப் பொறுமையாய்ச் சகித்து, வாக்குத்தத்தத்தை அடைந்தான். தேவவாக்குகள் நிறைவேறாமற்போகாது. பொறுமையாய்க் காத்திருக்கிறவர்கள் வீணாய்ப் போவார்கள். விசுவாசத்தோடு எதிர்பார்க்குதல் எவ்விதமும் நிறைவேறும் ஆபிரகாமுடைய நடத்தை ஆத்திர குணத்தைக் கண்டிக்கிறது, முறுமுறுக்கிற குணத்தைக் கடிந்துகொள்ளுகிறது. பொறுமையைப் போற்றி தேவசித்தத்திற்கும், அவர் காட்டும் வழிக்கும் அமைந்திருத்தலை தெரியப்படுத்துகிறது. ஆபிரகாம் சோதிக்கப்பட்டானென்பதை நினை; அவன் பொறுமையோடு காத்திருந்தான், வாக்குத்தத்தத்தைப் பெற்று திருப்தியடைந்தான், அவனுடைய மாதிரியைப் பின்பற்று; அவனுக்கு வந்த ஆசீர்வாதத்தை நீயும் பெறுவாய்.

என் கவலைகளை எல்லாம்
அவர்க்கொப்புவிப்பேன்;
அவரனுப்புவதெல்லாம்
நலமென்றிருப்பேன்.

அக்டோபர்-மீ 23-உ

'நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளுவோமாக'

ரோமர் 6:4

கிறிஸ்தவர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள் புது சுபாவம் அடைந்திருக்கவேண்டும். புதுக் கடமைகள் அவர்களுக்கு உண்டு. புது வஸ்துக்களை அவர்கள் பார்க்கவேண்டியவர்கள். கிறிஸ்துவின் மரணத்தில் அவர்கள் ஞானஸ்நானம் பெற்று, அவர் உயிர்த்தெழுதலில் பங்கடைந்தபடியால், புது சட்டங்களால் நடத்தப்படவேண்டியவர்கள். இலவசமான கிருபை, பரிசுத்த சத்தியம், திவ்விய வல்லமை, அவர்களைப் புதிதான ஜீவனுக்கு நடத்தவேண்டும். புது சட்டங்களால் தங்களை ஒழுங்குப்படுத்திக்கொண்டு, வழக்கத்தைப் பின்செல்லாமல், உலகத்தோடொத்து வாழாமல் இருக்கவேண்டும். தேவ வசனத்திற்கும், ரட்சகர் கொடுத்த அந்த சொர்ண சட்டத்திற்கும், அவர் வைத்த நல்ல மாதிரிக்கும் அவர்கள் ஒத்து நடக்கவேண்டும். அவர்கள் எதைச் செய்தாலும், அது தேவ அன்பினாலும்; தேவனுக்குரிய நன்றியறிதலாலும், அவருடைய மகிமைக்குரிய வைராக்கியத்தாலும் ஏவப்படவேண்டும். தேவனை மகிமைப்படுத்தவேண்டும், அவருடைய சமூகத்தை அனுபவிக்கவேண்டும்; இயேசுவை உயர்த்தவேண்டும். மற்றவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். தங்களிடத்திலிருக்கும் வல்லமையையும், சுத்தாங்கத்தையும் காட்டவேண்டும். தங்கள் மார்க்கத்திற்கு நடக்கை ஒத்திருக்கிறதென்று காட்டவேண்டும். தங்கள் விசுவாசத்தையும் அன்பையும் ரூபிக்கவேண்டும். இதுதான் எப்பொழுதும் அவர்களுடைய நோக்கமாயிருக்கவேண்டும். புது சிருஷ்டிகளில் புது ஜீவன் இருக்கவேண்டும். இதுவில்லாவிட்டால், நம்முடைய மார்க்கம் வீண், நாம் சொல்லுகிறது பொய். சிநேகிதரே, புது ஜீவனுள்ளவர்களாய் நடக்கிறோமா? இல்லையென்றால், நாம் இன்னும் நம்முடைய பாவத்திலிருக்கிறோம்; தேவனுடைய பார்வையில் செத்தவர்களாயிருக்கிறோம்.

சுவாமி, உமதாவி தாரும்,
பாவம் சொல்ல வகை காட்டும்;
மோட்ச பாதையில் என்னைம்
நடத்தி என்னை ரட்சியும்.

‘இயேசு நானே’

அப்போஸ்தலர் 9:5

இம்மானுவேல் இன்று காலமே நம்மிடம் வந்து, தாம் நமக்கு மிகவும் ஏற்றவரென்றும், நம்முடைய நிலைமையும் எண்ணமும் எப்படிப்பட்டதாயிருந்தாலும், தாம் இயேசு என்றும் சொல்லுகிறார். நீ கர்த்தரைத் தேடிக்கொண்டிருக்கிறாயா? அவர் இயேசு. கிருபை நிறைந்தவர், வல்லமையுள்ளவர், உருக்கமான மனசுடையவர், ரட்சிக்க ஆயத்தமுள்ளவர், உற்சாகமுள்ளவர். நீ சோதிக்கப்பட்டுத் துன்பத்தில் அகப்பட்டுச் சோர்ந்துபோனவனா? இதோ இயேசு என்றும் உனக்குச் சகதாபம் காட்டி; உன்னோடிருக்கிற ஞானமுள்ள மாறாத சிநேகிதன். நீ உன் வழிகளின்படி நடந்து சீர்கெட்டு அலைகிறாயா? இதோ உன் இயேசு நான். உன்னை ஏற்றுக்கொள்வேன்; உன்னைக் குணமாக்குவேன், உன்னை முந்தின சீருக்குக் கொண்டுவந்து, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடித்த மேய்ப்பனைப்போல, உன்னைப்பற்றிச் சந்தோஷப்படுவேன் என்கிறார். அன்பர்களே, இயேசு நமது தேவனாகிய கர்த்தர், நமக்கு எல்லாத்திலும் எல்லாமுமாயிருக்கிறார். நமது தேவன் இயேசு ரட்சகர்தான்; இரக்கமுள்ளவர்; பட்சம் நிறைந்தவர், உருக்கமுள்ளவர். அவருடைய இந்த நாமத்தைப் பிரஸ்தாபமாக்குதல் பாவிக்குச் சந்தோஷம்; பரிசுத்தவானுக்கு ஆனந்தம். எவன் மாறிப்போனாலும், எது மாறிப்போனாலும் அவர் இன்னும் இயேசுதான். நம்முடைய பலவீனங்களை உணரத்தக்கவர், நமக்கு உதவிசெய்ய பெலனுள்ளவர், மனதுள்ளவர், அவரை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் உருக்கமும் பூரண இரக்கமுமுள்ளவர், மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறார், கிருபைக்காட்ட காத்திருக்கிறார், தயை நிறைந்தவர், நம்மை ஏற்றுக்கொள்ள வாக்குக்கொடுத்திருக்கிறவர், இதை எப்போதும் நினைப்போமாக.

அவர் முகம் மறைந்தாலும்,
புசல் காற்றடித்தாலும்,
ஏசுநாதர் என் கன்மலே,
அவர் எனக்கு நன்னிலே.

'எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்'

1 தெசலோனிக்கேயர் 5:18

நாம் அனுபவிக்கிற ஒவ்வொரு வஸ்துவும், தேவனுடைய உதாரமான கரத்திலிருந்து வருகிறது. பாவத்தால் சகலத்தையும் இழந்தோம்; இப்பொழுது நாம் பெற்றுக்கொள்ளுகிறது கிருபையினால்தான்; நமக்கு வேண்டியதைத் தருகிற திவ்விய செயல், நமக்காக கிரியை செய்கிற தேவ ஞானம், தயவு, வல்லமை இவைகள் அவருடைய மட்டற்ற அன்பையும் இலவசமான கிருபையையும் காட்டுகிறது. வேண்டியதைச் சம்பாதிக்கிற திறமையும், அது நமக்குக் கிடைக்கிற சமயங்களும், அதை அனுபவிக்கிறதற்கான சத்துவமும் சகலமும் கர்த்தரிடத்திலிருந்துதான் வருகிறது. ஒவ்வொரு இரக்கமும் நம்முடைய கடமையைப் பெருக்கி, நம்முடைய கடனை அதிகரிக்கிறது. நம்முடைய நன்றியறிதலைச் சொல்லவும், நம்முடைய கடமையைப் பெருக்கி, நம்முடைய கடனை அதிகரிக்கிறது. நம்முடைய நன்றியறிதலைச் சொல்லவும், நம்முடைய கடமையை நிறைவேற்றவும், தேவன் தோத்திர காணிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். இந்தத் தோத்திரக் காணிக்கையை அவர் ஏற்றுக்கொள்ளுகிறார். அது அவருடைய பார்வைக்கு இன்பமானது. நாம் எப்பொழுதும் தோத்திரம் செய்யலாம். ஏனென்றால், துதிக்கானதை நாம் எப்பொழுதும் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகிறோம். எந்தக் காரியத்திற்கும் நாம் தோத்திரம் செய்யவேண்டுமானால், சகலமும் அவருடைய ஞானத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டு, அவருடைய சித்தத்தினால் ஏற்படுத்தப்பட்டு, அவருடைய ஆசீர்வாதத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டு, அவருடைய வாக்குத்தத்தங்களுக்கொத்து, அவருடைய அன்பிலிருந்து பாய்கிறதாக நாம் கவனிக்க வேண்டும். நமக்கிருக்கிற ஆசீர்வாதம் எல்லாம் இயேசுவின் மூலமாய் வருகிறது. நாம் செலுத்தவேண்டிய துதிகளெல்லாம் அவர் மூலமாய் ஏறவேண்டும். நம்முடைய பரமபிதா, தம்முடைய அன்பான குமாரனுடைய நாமத்தின் மூலமாய் வருகிறதைத்தான் அங்கீகரித்துக்கொள்ளுகிறார். தேவனுக்கு நன்றிசெலுத்து, தைரியமடைந்து முன்னுக்குப் போ.

தேவ வாக்கு ஈந்தவர்,
ஜீவ அப்பம் யேசுவை
எனக்கென்று தந்தவர்
நன்மைக்கூற்றும் அவரை
போற்றித் துதி ஆவியே.
போற்றித் துதி உள்ளமே.

‘நான் தேவனா?’

ஆதியாகமம் 30:2

நமக்குக் கிடைக்கிற நன்மைகளெல்லாம் தேவனிடத்திலிருந்து வருகிறது. நமக்கு வருகிற தீமைகளெல்லாம் நம்மிடத்திலிருந்து உண்டாகிறது. தேவனை விட்டு நாம் விலகி, சிருஷ்டிகளை அவரிடத்தில் வைப்பதினால், நம்மை நிர்ப்பாக்கியராக்கிக் கொள்ளுகிறோம். மனுஷரையாவது, பொருளையாவது மட்டுமிஞ்சி நேசிக்கும்போது, அதைத் தேவனுக்குப் பதிலாக வைக்கிறோம். அவரை நம்புகிறதற்குப் பதிலாக அவைகளை நம்பும்போது, அவைகளைத் தேவனாகப் பாவிக்கிறோம், அவரை வணங்குகிறதற்குப் பதிலாக, அவைகளை விக்கிரகமாகப் பாவித்து வணங்கும்போது பாவம் செய்கிறோம். அவர் நமக்கு ஒத்தாசை செய்து, நம்மை ஆற்றி மீட்டுவிடுவாரென்று எதிர்பார்க்கிறதற்குப் பதிலாக, அவைகளை எதிர்நோக்கும்போது, அவைகளைத் தேவனுடைய இடத்தில் வைக்கிறோம். சிருஷ்டிக்கப்பட்ட எந்த வஸ்துவின்மேலும் ‘போதுமானதல்ல’ என்று எழுதியிருக்கிறது. அதிக ஐசுவரியமும், ஞானமும், பட்சமுமுள்ள கிட்டின எந்த பந்துவும், நெருங்கின எந்தச் சிநேகிதனும், யேகோவாவுக்குப் பதிலாக இருக்கமாட்டான். அப்படிப்பட்டவர்களைப் பார்க்கும்போது, மாயை, மாயை, எல்லாம் மாயை என்று சொல்லவேண்டும். யேகோவா எவர்களுக்கும் பதிலாக இருக்கக்கூடியவர். பிதா, புருஷன், பிள்ளை, ஐசுவரியம், சுகம், சகலத்திற்கும் பதிலாக அவரை வைத்துக்கொள்ளலாம். ‘நான் தேவனா? என்னை ஏன் பார்க்கிறாய்? என்மேல் ஏன் சாருகிறாய்? என்னிடத்திலிருந்து என் ஒன்றைஎதிர்பார்க்கிறாய்? என்னைவிட்டுப்பிரிகிறது ஏன் உனக்குத் துக்கமாயிருக்கிறது? என்னைத் தேவனுக்குப் பதிலாக வைக்கலாமா? அப்படிச் செய்தால் ஒன்று அவர் என்னை எடுத்துப்போடுவார், அல்லது நான் உன்னை மோசம் போக்குவேன், தேவனுக்குப் பதிலாக ஒன்றையும் ஒருபோதும் வையாதே,’ என்று சிருஷ்டி சொல்லுகிறது.

பரம ஆதாம் ஜீவனே,
என் சுபாவம் மாற்றுமே;
என் உள்ளத்தை நிரப்புமே
என்னிலே வாசம் செய்யுமே.

‘கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்’
சங்கீதம் 81:11

இது நல்ல செய்தி. கர்த்தர் கிருபை தராவிட்டால், நாம் பரிசுத்தராகமாட்டோம். அவர் மகிமை தராவிட்டால், நாம் ஒருபோதும் மகிமையடையவுமாட்டோம். சகலமும் இலவசமான கிருபையிலிருந்து வருகிறது. இலவசமான ஈவு. நமக்கு அதைப் பாத்தியப்படுத்த ஏதாவது ஒரு நன்மை நம்மிடத்தில் இருக்கவேண்டுமானல், நாம் நம்பிக்கையற்றவர்களாய் உட்காரவேண்டும். தெய்வீக உதாரத்துவத்தினின்று சகலமும் உண்டாகிறபடியால், நமக்கு நம்பிக்கையுண்டு. நாம் பயப்படத் தேவையில்லை. கர்த்தர் லட்சாதிலட்சம் பேருக்குக் கிருபை அளித்திருக்கிறார்; அவர் நமக்கும் கிருபை அளிக்கிறார்; இன்னும் அதிக கிருபையுந் தருவார். கடமைக்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகிற கிருபை, சோதனையைத் தாங்குகிற கிருபை; இதயத்தைச் சுத்திகரிக்கிற கிருபை, இவைகளைத் தருவார். அவர் மகிமையுந் தருவார். கிருபையின் சம்பூரணந்தான் மகிமை. சகோதரரே, வேதவசனத்தில் கண்டிருக்கிறபடியே தேவன் பட்சமுள்ளவர், உதாரத்துவமுள்ளவர், தயை நிறைந்தவர் என்று நாம் நம்புவோமாக. நம்முடைய பாவங்களை அவர் முன்பாக அறிக்கையிட்டு, அவரிடத்திலிருந்து கிருபை தேடி, அவரோடு மகிமையடையப் பார்ப்போமாக. நமக்கு வேண்டிய சகலமும் தேவனிடத்திலுண்டு; நமக்கு வேண்டிய சகலமும் தேவனிடத்திலிருந்துதான் வரவேண்டும். சகல மகிமையும் தினந்தோறும் தேவனுக்கே கொடுக்கப்படவேண்டும்; நமக்குத் தேவையான வேளையில் கிருபைக்காகத் தேவனைக் கேட்போமாக. ‘அவர் கடிந்துகொள்ளாமல், தாராளமாய்க் கொடுப்பார்.’ இன்று காலமே அவருடைய சிம்மாசனத்தண்டை சேர்ந்து, பின் வருமாறு ஜெபிப்போமாக: ‘கர்த்தாவே எங்களுக்கு அதிக கிருபை தாரும், தினந்தோறும் வேண்டிய கிருபை தாரும். உம்முடைய ஊழியத்திற்கு எங்களை ஒப்புக்கொடுக்கிற கிருபை தந்து, எங்களைப் பரிசுத்த அன்பால் நிரப்பும். தேவனுக்கு நாங்கள் அதிக மகிமையுண்டாக்கும்பொருட்டு எங்களுக்கு அதிக கிருபை தாருமேன்.’

நீர் என் கன்மலை, யாவும்
உம்மால் எனக்காகிற்றே
எத்தனை தீங்கு வந்ததும்
அஞ்சேன்; நீர் என் பெலன்.

'மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலைசெய்'
மத்தேயு 21:28

சிலர் சிருஷ்டிப்பினால் தேவனுடைய புத்திரர்; யூதர்கள் ஒரு ஜாதியாய் தேவனுக்குத் தத்தபுத்திரரானார்கள், விசுவாசிகளோ மறுபிறப்பினால் தேவனுடைய புத்திரர்; அவர்கள் தேவனால் புத்திரசுவிகாரத்துக்குள்ளானவர்கள். தம்முடைய பிள்ளைகள் சோம்பற்காரராயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறவரேயல்ல. அவர் ஒவ்வொரு பிள்ளையையும் பார்த்து: மகனே, போய் வேலைசெய் என்கிறார். இது பிதா கொடுக்கிற கட்டளை; இது அதிகாரத்தினின்று பிறந்தாலும் அன்பு நிறைந்தது. அவருடைய மகிமைக்கென்றும், மற்றவர்களுடைய நன்மைக்கென்றும், நாம் கிரியை செய்தோமானால்; மோட்சத்தில் நமக்காகப் பொக்கிஷம் சேர்த்துவைப்போம். தேவனுக்காகக் கிரியை செய்கிறது மேன்மையுள்ளது, பிரயோஜனமுள்ளது, இன்பம் நிறைந்தது. திராட்சத்தோட்டத்தில்தான் அவருடைய வேலை. சபையில் எல்லாருக்கும் வேலையுண்டு. சிலருக்கு நடுகிற வேலை, சிலருக்குக் களை எடுக்கிற வேலை, சிலருக்குத் தண்ணீர் பாய்ச்சுகிற வேலை, சிலருக்குக் காக்கிற வேலை. 'இன்றைக்கு வேலை செய்' என்று கற்பிக்கிறார். தற்காலம் வேலை செய்கிற காலம். உங்களுக்கு வெளிச்சமும், பெலனும், சாவகாசமும் இருக்கிற இன்றைக்கு வேலை செய்ய வேண்டும். மேலும் நீங்கள் வேலை செய்கிற காலம் ஒருநாள்தான். அது எவ்வளவு நீண்டதாயிருந்தாலும் குறுகினது. அநேகருக்கு வெகு சுருக்கமான நாள். நாளெல்லாம் வேலை செய்யாமல், சும்மா நிற்கிறீர்களா? திராட்சத்தோட்டத்திற்குப் போங்கள்; அதைரியப்பட்டுப் போனீர்களா? தன்னாலானதைச் செய்கிறவனைப்போலச் செய்யுங்கள். 'கர்த்தரை நோக்கிப் பாருங்கள்.' அவர் உங்களுக்குத் திறமையையும், சமயத்தையும் தந்து, உங்கள் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

உத்தம இதயம் தாரும்,
தேவ பயம் என்னில் வையும்;
எத்தீங்கு வரினும் அப்போ,
நல்ல பாதை விடேனல்லோ?
கிருபையால் பெலனடைவேன்;
கடைசிமட்டும் நிற்பேன்.

'தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பு'

1 யோவான் 4:16

இதை யார் சொல்லக்கூடும்? யார் இதை வெளிப்படுத்தக்கூடும்? இது மட்டற்றது. சாவுக்குரிய மனுஷர் என்ன சொல்லக்கூடும்? இது நித்தியமானது. நேற்றுண்டான நாம் இதை எப்படி விவரிக்கக்கூடும்? தேவன் தங்கள் பேரில் வைத்திருக்கிற அன்பை அறிந்து விசுவாசிக்கிறது, பரிசுத்தவான்களுக்கு இம்மையிலும் மோட்சம் பரிசுத்த ஆவியானவர் தவிர ஒருவரும் நமக்கு இதை விவரிக்கமாட்டார்கள். ஒருவரும் இதை நம்முடைய இருதயத்தில் ஊற்றமாட்டார்கள். அவர் நம்முடைய இருதயங்களைத் தேவ அன்பண்டைக்கும், இயேசுவின் பொறுமையண்டைக்கும் நடத்தக்கூடியவர். தேவகாரியங்களைப் பரிசுத்தவான்களுக்குக் காண்பித்து, அவைகளை விசுவாசிக்கவும், அனுபவிக்கவும் செய்கிறது அவருடைய தொழில். தேவன் நம்மேல் வைக்கிற அன்பை நாம் தினந்தோறும் அறிந்தனுபவிக்க ஜெபம்பண்ணக்கடவோம். நம்முடைய துன்பங்களுக்குப் பதிலாக அது இன்பத்தைத் தரும். துக்கங்களுக்குப் பதிலாக சந்தோஷத்தைக் கொடுக்கும். நம்முடைய சிநேகிதர்கள் மாறுவார்கள், நம்முடைய நிலைமையும் மாறிப்போம், தேவ அன்போ மாறாதது. இவ்வுலக நன்மைகள் அழிந்துபோம்; தேவ அன்பை அறிந்து அனுபவிப்போமானால், நாம் நிர்ப்பாக்கியராய் இருக்கமாட்டோம். எவன், எது, தேவ அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கக்கூடும்? நாம் ஒருக்காலும் கெட்டுப்போகமாட்டோம். அவருடைய கரத்திலிருந்து ஒருவனும் நம்மைப் பிடுங்கமாட்டான் என்று இயேசு சொல்லியிருக்கிறார். தேவ அன்புதான் நம்முடைய பாக்கியத்தின் ஊற்று; நம்முடைய க்ஷேமத்திற்குக் காரணம். தேவன் நம்மேல் வைத்திருக்கும் அன்பை அறிந்து விசுவாசிப்பது எவ்வளவு நலம். தேவன் அன்புதான்.

தேவ அன்பை நான் அறிய,
என் தேவனை நான் துதிக்க,
எனக்கு வரம் தாருமேன்,
உம்மை விளக்கிக் காட்டுமேன்.

அக்டோபர்-மீ 30-உ

‘பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையா யிருங்கள்

லூக்கா 12:15

இது நம்முடைய அருமையான ரட்சகர் வாயிலிருந்து பிறந்த எச்சரிப்பு. நம்முடைய பலவீனத்தையும், சத்துருக்களையும் அவர் அறிவார்; அவைகளைப்பற்றி நம்மை எச்சரிக்கிறார். இங்கே நமக்குத் தேவையானது கொஞ்சந்தான்; இங்கே வெகுகாலம் இருக்கமாட்டோம். பரிபூரணமும், ஓய்வும், சந்தோஷமுமுள்ள நாட்டிற்குப் போகிறோம். தேவ ஆசீர்வாதத்தோடு கொஞ்சங் கிடைத்தால் போதும். உலக காரியங்களைக்குறித்து நாம் வீண் கவலைகொள்ளக்கூடாது. நம்மால் உலகத்திற்கு நஷ்டமுண்டாகாதபடிக்கு மாத்திரம் பார்க்கவேண்டும்; அதற்கப்பால் நாம் கவலைப்படவேண்டியதில்லை. கர்த்தர்பேரில் விசுவாசம் வைத்து, அவரோடு ஐக்கியமாய் நடப்போமானால், நமக்குப் போதுமானதை அவர் தருவார். நாம் எல்லாரும் பொருளாசைக்கு இடங்கொடுக்க ஏதுவானவர்கள். அது பயங்கரமான பாவம், பொருளாசை விக்கிரக ஆராதனைதான். அது இருதயத்தை தேவனைவிட்டு இழுத்து, அற்பமான பொருளின்மேல் வைக்கிறது; இவ்வுலக நன்மைகளையும் பரம நன்மைகளையும் அனுபவியாதபடி தடுக்கிறது. பொருளாசைக்காரன் நிர்ப்பாக்கியன், அவன் அசுத்தன், என்றும் கெட்டுப்போகிறவன். நம்முடைய அருமையான ரட்சகர் பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று நன்றாய்ச் சொன்னார். பொருளாசை தந்திரமுள்ளது, மோசமுள்ளது, வெகு வலிமையுள்ளது, முற்றிலும் கெடுக்கிறது. அது இருதயத்தில் வேர்கொள்ளுமானால், சர்வ வல்லமையுள்ள தேவ கிருபைதான் அதை வேரோடே பிடுங்கக்கூடும். ஆவிக்குரிய நன்மைகளாகிய மேலான வரங்களையே வாஞ்சியுங்கள்.

உண்ணவும் உடுக்கவும்
இருந்தாலது போதுமே;
கொண்டுவந்த தொன்றுமில்லை,
கூடப்போவது மில்லையே;
எஜமானைப்போலிருந்தால்,
நான் போதுமென்றிருப்பேனே.

'ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு'
சங்கீதம் 50:15

கூடமை என்னும் நேரான பாதையில் நட. துன்பங்கள் வந்தால், வருத்தங்கள் நேரிட்டால், தேவன் தம்மை நோக்கிக் கூப்பிடச் சொல்லுகிறார். அவர் உனக்கு ஒத்தாசையாக வருவார்; தன்னிடமிருக்கும் மட்டற்ற உதவிகளைத் தன்னோடு கொண்டுவருவார்; அவர் சமீபத்திலிருக்கிறார். கேட்கக்கூடாதபடி அவர் காது மந்தமுள்ளதல்ல; ரட்சிக்கக்கூடாதபடி அவர் கரம் குறுகிப்போனதல்ல. உனக்கு நேரிடும் பெரிய துன்பங்களை விசேஷித்த ஆசீர்வாதங்களாக மாற்றுவார். உனக்கு நேரிட்ட பலத்த சோதனைகளுக்காக நித்தியகாலமாய் அவரைத் துதிக்கச் செய்வார். அவரை நம்பு, பயப்படாதே, சிருஷ்டிகளண்டையில் ஓடாதே. எழுந்திருந்து, உன் தேவனை நோக்கிக் கூப்பிடு, அவர் இருதயம் பட்சம் நிறைந்தது; அவர் வார்த்தை உண்மையுள்ளது. இன்று காலமே உனக்குத் துன்பமுண்டா? உன் தேவன் உன்னைத் தம்மண்டைக்கு வரச் சொல்லி அழைக்கிறார். அவருக்கு முன்பாக உன் காரியங்களைச் சொல்; அவர் உன்னை ஆசீர்வதிப்பார். 'துன்ப காலத்திலே என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன்; நீ என்னை மகிமைப்படுத்துவாய்' என்று அவர் சொல்லுகிறார். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர். அவரை நம்பும்போது அவரைக் கனப்படுத்துகிறாய். அவருக்காக எதிர்பாத்திரு; உன் நம்பிக்கை விருதாவாகமாட்டாது. அவருக்குக் காத்திரு, நீ வெட்கமடையமாட்டாய்.

நீர் என் கதியேசுவே,
அடைக்கலக் கோட்டையே,
துன்பம் துயர் வருமே
உம்மைச் சேர்வேன் அப்போதே.

'மன்னுயிரைக் காப்பவர்'

யோபு 7:20

நம்மைக் காத்துக்கொள்ள நமக்கு ஞானமுமில்லை, பெல னுமில்லை. தினந்தோறும் நாம் விழ ஏதுவானவர்கள். தேவன் நம்மைக் காக்காவிட்டால், நாம் நிச்சயமாகவே விழுவோம். நம்முடைய இருதயங்கள் மோசமுள்ளது. உள்ளான கேடு பெலனுள்ளது. சாத்தான் மிகவும் விழிப்புள்ளவன். இந்தக் காரணங்களால் நாம் தேவனை எந்த நேரத்திலும் நோக்கிப் பார்த்து, ஒவ்வொரு நிமிஷமும் நம்மைக் காக்கும்படி அவரை நோக்கிக் கெஞ்சவேண்டும். அவர் காக்கக்கூடியவர். நாம் கீழ்ப்படிவோமானால், அவர் நம்மைக் காப்பார். நாம் விழித் திருந்து ஜெபம்பண்ணி, அவருக்கு முன்பாகத் தாழ்மையாய் நடந்தால்தான் நாம் சுகபத்திரமாயிருப்போம். இல்லாவிட் டால், கொடிதான பாவங்களில் விழுந்து, பெரிய குற்றங்களில் சிக்கிக்கொள்ளுவோம். விசுவாசியே, நீ இயேசுவின்பேரில் சார்ந்து, பரமபிதாவை நோக்கிக் கெஞ்சி, பரிசுத்த ஆவி யோடு ஐக்கியப்படுதலைத் தேடும்போது சுகமாய் இருப்பா யென்று நினை. நீ உள்ளபடி மோசத்திலிருக்கிறாய். சாத்தா னும், உலகமும், உன் உள்ளான கேடும் உன்னை கெடுக்கப்பார்க் கிறது. சர்வவல்லமையுள்ள கிருபைதான் உன்னைக் காக்கக் கூடும். மனுஷனை நம்புவதை விட்டுவிடு, உன் சொந்த இருத யத்தையும் நம்பாதே, அந்த நல்ல மேய்ப்பனைக் கிட்டியிரு. அவர் உன்னை வழுவாதபடி காத்து, தமது மகிமையுள்ள சந்நி தானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உன்னை மாசற்றவனாக நிறுத்த வல்லமையுள்ளவர். உன்னைக் காக்கிறவர்தான் உன் னைக் கவனிக்கிறவர். ஒவ்வொரு நினைவையும், வார்த்தையை யும், செய்கையையும் அவர் நன்றாய் கூர்ந்து பார்க்கிறார்.

எச்சத்துருக்களையும்
ஜெயித்து வாழும் தேவே,
வான், புவி, அனைத்தையும்
ஆண்டுவாரும் நாயனே.

'பரீட்சை பார்க்கப்பட்டார்கள்'

எபிரெயர் 11:37

அதாவது, சோதிக்கப்பட்டார்கள். அவர்கள் சத்துருக்கள் அவர்களைத் தங்கள் சோதனைகளால் கர்த்தரை விட்டுத் துரத்தப்பார்த்தார்கள். அந்தச் சோதனைகள் மிகவும் கொடியதாயிருந்தபோதிலும், அவர்கள் நாளுக்குத்தக்கதாக அவர்கள் பெலனும் இருந்ததென்று கண்டார்கள். சகோதரரே, நாமும் சோதிக்கப்படுவோம். சாத்தான் மரித்துப்போகவில்லை. அவன் தூங்கவுமில்லை. உலகம் தெய்வபக்தியோடு ஒப்புரவாகவுமில்லை, நாம் உள்ளான பாவக்கேட்டிலிருந்து விடுதலையாகவுமில்லை. நாம் சோதிக்கப்படுகிறது பாவமல்ல; அது நம்முடைய துன்பம், அதற்கு இடங்கொடுக்கிறதுதான் பாவம். பெலன், ஞானம், கிருபை இவைகளைத் தேவன் தருவேனென்று வாக்குக்கொடுத்திருக்கிறார். இவைகளைத் தேடினால்தான் சத்துருக்களுக்கு எதிர்த்து நிற்போம், எந்தச் சோதனையையும் வெல்லுவோம். ஒவ்வொரு நாளும் நாம் சோதிக்கப்படலாம்; சாத்தான் சுற்றித்திரிகிறான். எப்போதாவது நாம் அசட்டையாயிருப்போமானால், அப்போதுதான் நம்மை அவன் சூழ்ந்துகொள்ளுவான். ஆடுகளின் பெரிய மேய்ப்பனாகிய இயேசுவோடு நெருங்கி இருப்போமாக; சகலத்திலும் தேவ மகிமையை நாடுவோமாக; அப்போது சோதனை நம்மை மேற்கொள்ளமாட்டாது. சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கிய பின்பு, கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான். சத்துரு வெள்ளம்போல வரும்போது, நாம் பின்வரும் வார்த்தைகளைச் சொல்லிப் பாடலாம்:—

வெள்ளத்தில் மூழ்கும்போது
இயேசுதான் என் கன்மலை;
யாவும் பின்வாங்கும்போது
கிறிஸ்துதான் என் நன்னிலை;
மற்ற யாவும் நீங்குமே,
காணும்போது மாளுமே.

நவம்பர்-மீ 3-உ

'நான் உங்களுக்கு என்னசெய்யவேண்டும் என்று விரும்புகிறீர்கள்?'
மாற்கு 10:36

இயேசு இந்தக் கேள்வியை செபதேயுவின் புத்திரரைப் பார்த்துக் கேட்டார்; நம்மையும் பார்த்து இப்படித்தான் கேட்கிறார். சிநேகிதரே, இன்று காலமே உங்கள் மனு ஆயத்தமாயிருக்கிறதா? இயேசு மன்னிக்கிற ஸ்தலத்திற்கு வந்திருக்கிறார்; கிருபாசனத்தின்மேல் வீற்றிருக்கிறார். அவர் அன்பு நிறைந்த குணமுள்ளவர், ஆசீர்வதிக்க ஆயத்தமானவர். நான் உனக்கு என்ன கொடுக்கவேண்டுமோ, அதைக் கேள் என்கிறார். இயேசுவே, என்னைச் சுத்திகரிக்கிற கிருபையைத் தாரும், என் உள்ளான கேட்டை நீக்கும், என் இருதயத்தைச் சுத்தம்பண்ணும், உம்முடைய உபயோகத்திற்கேற்ற, கனத்திற்குரிய பாத்திரமாக என்னைச் செய்யும். பாவம் இவ்வளவு வலிமையாய் எனக்குள் கிரியை செய்வானேன்? சாத்தான் என்மேல் இவ்வளவு அதிகாரம் செலுத்துவானேன்? உலகம் என்னைத் தப்பான வழியில் இவ்வளவு தூரம் இழுப்பானேன்? கர்த்தாவே, நீர் என்னைப் பரிசுத்தமும் பிரயோஜனமும் உள்ளவனாக்க வேண்டுமென்பதே என் விருப்பம். என்னை உம்முடைய பரிசுத்த ஆவியானவரால் நிரப்பும். உமது வசனத்தை என் இருதயத்தின்மேல் எழுதி, என்னுடைய நடக்கையில் உம்முடைய கற்பனைகளை வரைந்துவர என்னைப் பெலப்படுத்தும். ரட்சகரே, நீர் என்னை உம்மைப்போலாக்க வேண்டுமென்பதே என் விருப்பம். உம்மைப்போலச் சாந்தமும், தாழ்மையும், சுறுசுறுப்பும், தேவனுக்கும் மனுஷனுக்கும் பிரயோஜனமுள்ளவனும், பரோபகார சிந்தையுள்ளவனுமாய் இருக்கவேண்டுமென்பதே என் ஆசை. உம்மைப்போலப் பரிசுத்தனும், குற்றமற்றவனும், மாசில்லாதவனும், பாவிகளுக்கு விலகினவனுமாய் இருக்கவேண்டுமென்பதே என் ஆவல். உம்முடைய இலவசமான சுயசித்த கிருபைக்குக் கனமும் புகழ்ச்சியுமுண்டாக நான் பிரகாசிக்கும்படி செய்யும். இப்பொழுதே அப்படிச் செய்யும்.

தேவ ஆவி வாருமே,
என் இருதயம் ஆளுமே;
உள்ளே சாட்சி தந்திடும்,
ஜீவன் பெலன் ஈந்திடும்.

'இஸ்ரவேலரின் பரிசுத்தரை மட்டுப்படுத்தினார்கள்'

சங்கீதம் 78:41

இஸ்ரவேலின் பாவம். நம்முடைய பாவமும் இதுதானல்லவா? நம்முடைய தேவன் பரிசுத்தர்; தம்முடைய மகிமைக்கேற்றதையே செய்வார். அவர் இஸ்ரவேலரின் பரிசுத்தர்; தம்முடைய ஜனத்தின் க்ஷேமத்தையே நாடுவார். அவருடைய ஞானத்தை நாம் மட்டுப்படுத்தக்கூடாது. அது மட்டற்றது. அவருடைய வல்லமையை நாம் மட்டுப்படுத்தக்கூடாது; அது சர்வவல்லமை, அவருடைய இரக்கத்தை நாம் மட்டுப்படுத்தக்கூடாது; அது வானம் அவ்வளவு உயர்ந்தது, பாதாளத்தைப்போல் ஆழமுள்ளது. ஒரு காலத்தைக் குறித்து அவரை மட்டுப்படுத்தக்கூடாது; அவர் சுயசித்தமுள்ளவர். நம்முடைய சட்டங்களுக்கு உட்படமாட்டார், நம்முடைய நேரத்திற்கு உள்ளடங்கார், தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுவார், நம்முடைய விசுவாசத்தைக் கனப்படுத்தி, தம்மைச் சுறுசுறுப்பாய்த் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிப்பார். நீ எவ்வளவாய்ச் சோதிக்கப்பட்டாலும், இஸ்ரவேலரின் பரிசுத்தரை மட்டுப்படுத்தாதபடி பார். 'அது அதிக வருத்தமானது; அது மிதமிஞ்சிப்போனது' என்று சொல்லாதே. இதுதான் மார்த்தாள் மரியாளுடைய தப்பிதம்; இயேசு அவர்களுடைய தப்பிதத்தை அவர்களுக்கு எடுத்துக் காட்டினார். ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியஞ் செய்வார். அநேகம்பேரைக் கொண்டாகிலும் கொஞ்சம்பேரைக்கொண்டாகிலும் ரக்ஷிக்கக் கர்த்தருக்குத் தடையில்லையென்று யோனத்தானைப்போல் சொல்லுவோமாக. யோனத்தான் கர்த்தரை நம்பிக் கனப்படுத்தினான். கர்த்தர் இஸ்ரவேலுக்குச் சத்துருக்கள்மேல் ஜெயந் தந்து, யோனத்தானைக் கனப்படுத்தினார். மட்டில்லாத விதமாய் கர்த்தரை நம்பு; அவர் சொன்ன ஒவ்வொரு வாக்கையும் நிறைவேற்றுவார்.

அவர் கற்பனை விஸ்தாரம்
நித்தியமாய் அவர் சத்தியம்;
வருஷங்கள் உருண்டாலும்
மாறுமோ அவர் உத்தமம்.

'நீங்களும் பூரிப்பாகுங்கள்'

2 கொரிந்தியர் 6:13

அல்லது விசாலமாகுங்கள் என்று திருப்பலாம். நெருக்கப்படுகிறது பெரிய தீமை; விசாலமாகிறது பெரிய ஆசீர்வாதம். நம்முடைய அறிவிலே, அன்பிலே, நம்பிக்கையிலே, உதாரத்துவத்திலே, விசுவாசத்திலே, எந்தக் கிருபையிலேயும் நாம் விசாலமாகவேண்டும். சுருங்கிப்போகிறது கர்த்தருக்குப் பிரியமல்ல. நம்முடைய விசாலமான ஆசைகளைத் திருப்தி செய்ய, உடன்படிக்கையில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. பெரிய காரியங்களை எதிர்பார்க்க, வாக்குத்தத்தங்கள் நமக்குப் போதுமான ஆதாரம். தாராளமாய்க் கேள் என்று இயேசு கற்பிக்கிறார். ஜெபத்திலும், பரோபகாரத்திலும், உருக்க இரக்கத்திலும் தேவனை மகிமைப்படுத்தச் செய்யும் எந்த பிரயத்தனத்திலும் விசாலமாகவேண்டுமென்று சுவிசேஷம் சொல்லுகிறது. நெருக்கமான, இடுக்கமான, எண்ணங்களைப்பற்றி எச்சரிக்கையாயிருப்போமாக. தேவனுடைய இருதயம் விரிவானது, கிறிஸ்துவின் அன்பு விஸ்தாரமானது. இரக்கத்தின் செய்கை மகா பெரியது. சுவிசேஷத்தின் நன்மை யாவருக்கும் உரியது. மகிமையின் வாசஸ்தலம் மகா விசாலமானது. தேவனிடத்திலும், அவருடைய சுவிசேஷத்தினிடத்திலும் இடுக்கமென்பது கிடையாது. நம்முடைய மனந்தான் இடுக்கமுள்ளது. இயேசுவே, இடுக்கமான எங்கள் இருதயங்களை விரிவாக்கும்; சுருங்கிப்போன எங்கள் ஆத்துமங்களை விசாலமாக்கும். விசுவாசிக்கிறதினால் எங்களைச் சந்தோஷத்தைக்கொண்டும், சமாதானத்தைக்கொண்டும் நிரப்பும்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நாங்கள் நம்பிக்கையில் பெருகுவோம். நாங்கள் நற்சிந்தனையால் நிறைந்து, ஒருவருக்கொருவர் புத்தி சொல்லத்தக்கவர்களாயிருப்போமாக. பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் நிறைந்திருப்பது எவ்வளவு நல்லது. விசாலமான இருதயம் வேண்டும், விஸ்தாரமான ஆசையும் வேண்டும். தேவனோடு நெருங்கி ஐக்கியப்பட்டிருக்கவும் வேண்டும்.

கிருபாசனத்தின் கீழ்
கிடக்கிறேன், பாருமேன்;
என்னைப்பார்த்து 'பாவி வாழ்'
என்றன்போடு சொல்லுமேன்.

'இனி நீ அடிமையாயிராமல் புத்திரனுயிருக்கிருய்'

கலாத்தியர் 4:7

தேவனுக்கு நாம் சத்துருக்களாய் மாறினபோது, அவர் நம்மை அடிமைகளாகப் பாவிக்கிறதும் பெரிய இரக்கம். அவரோ நம்மைத் தமக்குப் புத்திரராக்கி, அன்பினுல் தமது மடியில் சேர்த்துக்கொள்ளுகிருர். இப்பொழுது அவர் நம்முடைய பிதா; அப்படி நாம் அவரை அழைக்கவேண்டுமென்று விரும்புகிருர். நாம் அவருடைய பிள்ளைகள்; பிள்ளைகளைப்போல் நடக்கவேண்டும், இருக்கவேண்டுமென்று விரும்புகிருர். ஆதலால் நீசத்தனமாய் நடக்கக்கூடாது. நாம் புத்திரர்; தேவனைப் பிதாவைப்போல் எண்ணி, அவரை நேசித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரில் பிரியப்படவேண்டும். பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிருேம். அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டோம், தேவதயவக்கு உள்ளானேம், நித்திய ஜீவனுக்குரிய வாக்குத்தத்தத்தைப் பெற்றேம், சொல்லமுடியாத மகிமை நிறைந்த சந்தோஷத்தால் நாம் மகிழவேண்டும். இலவசமான கிருபை நம்மைத் தத்த புத்திரராக்கிற்று. பரிசுத்த ஆவியானவர் தமது வசனத்தைக்கொண்டு உயிருள்ள நம்பிக்கைக்கு நம்மை ஜனிப்பித்தார். சுவிசேஷம் நம்முடைய சிலாக்கியங்களைத் தெரியப்படுத்தி, அவைகளை அனுபவிக்க நம்மை அழைக்கிறது. நாம் இன்றைக்கு எப்படி நினைக்கவேண்டுமென்றுல், நான் தேவனுக்குப் புத்திரன், என் பிதா பரிசுத்தர், அவருடைய பிள்ளைகளும் பரிசுத்தர், அவருடைய வசனமும் பரிசுத்தம். அவர் பரிசுத்தத்தை நேசிக்கிருர். அவர் பரிசுத்தராய் இருக்க நம்மைக் கற்பிக்கிருர். ஆதலால், நான் என் இருதயத்தை அவரிடம் உயர்த்தி அவரிடத்திலிருந்து வரும் கிருபையைத் தேடி, சகலத்திலும் அவரை மகிமைப்படுத்த பார்ப்பேன் என்று இப்படிச் சிந்திக்கவேண்டும். பிள்ளையடைவான சிந்தை, பிள்ளை பத்திக்குரிய கீழ்ப்படிதலுக்கு நடத்தும்.

பிள்ளையாக என்னைப் பாரும்,
உம்மை நான் என் சொந்தமாக்கி
கொள்ளத்தக்க கிருபைத் தாரும்,
அப்போ லோக செல்வம் தானும்
அதின் பகட்டும் மினுக்கும்
எனக்கற்பமாகக் காணும்.

'புறப்பட்டுப் போங்கள்'

யாத்திராகமம் 14:15

மார்க்க விஷயத்தில் ஒரே நிலைமையில் இருக்கிறது கூடாத காரியம். ஒன்றில் நாம் முன்னுக்குப் போகிறோம், அல்லது பின்வாங்குகிறோம். முன்னுக்குப் போங்களென்பது தான் சேனைபதியின் கட்டளை; நாம் போகவேண்டிய திசையும் அதுவே. கர்த்தருடைய வழியில், கர்த்தருடைய கிரியையில், கர்த்தருடைய ராஜ்யத்திற்கு முன்னுக்கே போகவேண்டும். இந்தக் கற்பனையில் அதிக தைரியம் அடங்கியிருக்கிறது. கர்த்தருடைய ஞானத்தை நினைத்து, அவருடைய வல்லமையை நம்பி அவருடைய அன்பை விசுவாசித்து முன்னுக்குப் போ. கர்த்தருடைய ஜனங்களோடே ஐக்கியப்பட்டு, அவருடைய மகிமைக்காக வைராக்கியங்கொண்டு, உன் எஜமானுடைய சந்நிதியில் வந்து சேர அழைக்கப்படுமட்டும் முன்னுக்குப் போ. எவ்வளவு வருத்தம், பயம், அதைரியம் இருந்தாலும், முன்னுக்குப்போ. கர்த்தர் கற்பிக்கிறபடியால், முன்னுக்குப் போ. அவர் உன்னோடு இருப்போமென்று வாக்கு உரைத்திருக்கிறார். உன் பயணத்தை அவர் க்ஷேமமாய் முடிப்பார். பரிசுத்த பவுலைப்போல் நாம் சொல்லவேண்டும்: 'நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ, அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்.' கிறிஸ்துவின் நாளுக்கு எதிர்பார்த்து, அதின் வருகைக்குத் தீவிரிப்போமாக. சுவிசேஷத்தினால் நமக்கு முன்வைத்திருக்கிறதோடு நமக்குப் பின்னாக இருக்கிறதை ஒப்பிட அது பாத்திரமுள்ளதல்ல. முன்னுக்கு என்கிறதே நித்தம் நம்முடைய குறிப்புச் சொல்லாய் இருக்க வேண்டும்.

துன்பமாம் பாதையினில்
கிறிஸ்தோர்களே செல்லுங்கள்;
யுத்த களம் விடாமல்,
போராடியே வெல்லுங்கள்;
முன்னுக்கேகுங்கள் அப்போ
மகிமை கிடையாதோ?

'ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாஞேம்'
2 கொரிந்தியர் 6:10

கர்த்தருடைய குடும்பம் சாதாரணமாய் ஏழைதான். அவர்களிடத்தில் விலையேறப்பெற்றது, விசேஷித்தது, பாக்கியசாலிகளாக்கத்தக்கது ஒன்றுமில்லாததுபோல மனிதர் எண்ணுகிறுர்கள். உள்ளபடி பார்த்தால், அவர்கள் சகலமுமுடையவர்கள். ஏனென்றுல், தேவன் அவர்களுக்குச் சொந்தம். நான் அவர்கள் சுதந்திரமென்று நம்முடைய தேவன் சொல்லியிருக்கிறுர். கர்த்தாவே, நீர் என் பங்கென்று நாமும் சொல்லுகிறேம். அவர் நித்தியரானபடியால் நமது பாக்கியம் நித்திய காலமாய் நீடித்திருக்கும். அவர் மாருமை நாம் இளைப்பாறும் கன்மலை. அவர் சர்வவல்லமை, நமது என்றுமுள்ள காப்பு. அவர் உண்மை நமது நித்திய க்ஷேமம். அவர் இரக்கங்கள் நமக்கு நிறைந்த களஞ்சியம். அவர் சர்வஞானம் கவலையாய் நம்மை மேற்பார்ப்போன். அவர் ஞானம் நமக்குப் புத்தியுள்ள யோசனைக்காரன். அவர் நீதி நமக்காக கண்டிப்பாய் பழிவாங்குவோன். அவர் சர்வவியாபகம் நமக்கு இன்பமான கூட்டாளி. அவர் பரிசுத்தம் நம்மைச் சுத்திகரிக்கும் கிருபையான ஊற்று. அவர் சம்பூரணம் நம்முடைய சுதந்தரத்தின் பங்கு. அவர் அளவில்லாமை மகிமையான நம்முடைய பங்கின் விஸ்தாரம். கர்த்தரின் ஜனங்களின் பாக்கியம் இதுவே தேவன் அவர்களுடைய தேவன், அவருடைய லட்சணங்கள் அவர்களைப் பாக்கியசாலிகளாக்கவேண்டியவைகள். கர்த்தரை நேசியுங்கள், அவரைப்பற்றி ஜீவியம் பண்ணுங்கள், சந்திப்பின் நாளில் தேவனை மகிமைப்படுத்துங்கள். அவரையே உங்கள் பங்கும், நித்தியமுமாய் உங்கள் சகலமுமாக்கிக் கொள்ளுங்கள். மற்றதெல்லாம் இல்லாவிட்டாலும், அவர் இருந்தால் போதும்.

தேவ புத்திரர் சிலாக்கியம்
நமக்குக் கிடையாதோ?
மோட்ச சொந்த பாக்கியம்
என்றும் நமதல்லவோ?
புத்திர பக்தி அன்பினுல்
தேவ பக்தி காட்டுங்கால்

'தேவனே, என் சிறு வயது முதல் எனக்குப் போதித்துவந்தீர்'

சங்கீதம் 71:17

சங்கீதக்காரன் இளமையிலே அழைக்கப்பட்டான். இது தேவ போதனையினாலே உண்டானதென்கிறான். தேவன்தான் உணரத்தக்க விதமாய்ப் போதிக்கிறவர். அவர் படித்துக் கொடுக்கும் பாடங்கள் பிரயோஜனமுள்ளது, விசேஷித்தது. அவர் தம்முடைய மாணாக்கர் எல்லாருக்கும் தங்களை அறிந்து கொள்ள, அதாவது, தங்கள் கேட்டை, தங்கள் வறுமையை, தங்கள் அடிமைத்தனத்தை அறிந்துகொள்ளும்படி கற்றுக் கொடுக்கிறார். தம்முடைய நியாயப்பிரமாணத்தின் சுத்தாங்கத்தை, அதின் அதிகாரத்தை, அது செலுத்தும் தண்டனையை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார். சுவிசேஷத்தின் நிறைவை, அதின் சுயாதீனத்தை அது நமக்கு ஏற்றிருக்கும் தன்மையைக் கற்றுக்கொடுக்கிறார். தம்மை ஒப்புரவாக்கப்பட்ட தேவனாக, நமது பிதாவாக, உண்மையுள்ள சிநேகிதனாக அறிந்துகொள்ளக் கற்றுக்கொடுக்கிறார். அவர் போதனை வல்லமையுள்ளது, அதிகாரமுள்ளது. நாம் தேவ போதனை அடைந்தவர்களோ? அதின் பலனைக்கொண்டு அதை அறிந்து கொள்ளலாம். அது தாழ்மையைப் பிறப்பிக்கும். அவருடைய பாதத்தண்டை உட்காருகிறார்கள். அது நாம் அவர்மேல் சார்ந்திருக்கிறதையும், தேவனைப் போதகரென்று நேசிக்கிறதையும், அவர் கற்பிக்கும் பாடங்களுக்குக் கீழ்ப்படிகிறதையும், இன்னும் அதிகமான அறிவின்மேல் தாகத்தையும் பிறப்பிக்கிறதுமல்லாமல், நம்மைத் தினந்தோறும் இயேசுவண்டைக்கு நடத்தும். நாம் திவ்விய போதனையைக் கருத்தாய் தேடுவோமாக. அது மோசங்கள், துக்கங்கள், கண்ணிகளிலிருந்து நம்மைக் காக்கும். தகுதியானபடி அதைப் பிரயோகிப்போமானால், அது தேவனுக்கும் அவருடைய மார்க்கத்திற்கும், மகிமையையும் கனத்தையும் கொண்டுவரும். நான் உனக்குப் போதிப்பேனென்று நம்முடைய தேவன் சொல்லுகிறார். கர்த்தாவே, எனக்குப் போதித்து, என்னை முழுவதும் உம்முடையவனாக்கும். தேவன் யாருக்குப் போதிக்கிறாரோ, அவன் ஞானமும், பரிசுத்தமும் பிரயோஜனமும் உள்ளவன்.

என் இதயம் உமக்கே
ஒப்புவிக்கப்பட்டதே;
எனதென்றதைச் சொல்லேன்
உமக்கதை அளிப்பேன்.

'இதோ, தேவாட்டுக்குட்டி'

யோவான் 1:36

பாவம் போக்கப் பலிவேண்டும். பலி குற்றத்திற்குத் தக்கதாயும், யாருக்கு விரோதமாய்க் குற்றம் செய்தோமோ, அவருடைய கண்ணியத்திற்கு ஏற்றதாயும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட பலி கிடைக்கிறது அரிது. தேவனே அப்படிப் பட்டதைச் சம்பாதிக்கச் சித்தமானார். அது அவருடைய ஒரேபேறான குமாரன்தான். பாவத்தை நீக்க, அதற்குப் பரி காரமாக இந்த ஆட்டுக்குட்டியை ஏற்படுத்தினார். திவ்விய ஆளுகையைக் கனப்படுத்த, நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்க, இவரைத் தெரிந்துகொண்டார். நாம் தினந்தோறும் தேவ ஆட்டுக்குட்டியைப் பார்ப்போமாக. அவர் உலகத்திற்கு அஸ்திபாரம் போடுமுன்னே ஏற்படுத்தப்பட்டவர். இந்தக் கடைசிக் காலங்களில் நமக்காக வெளிப்படுத்தப்பட்டார். அவருடைய ரத்தத்தின்மேல் வைக்கும் விசுவாசத்தின் மூல மாய் பிராயச்சித்தமாகவும், நாம் தினந்தோறும் விசுவாசித்து விரும்பி வாஞ்சிக்கிற பொருளாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கி றார். தேவனாலே ஏற்படுத்தப்பட்டு, தேவனுக்குக் குறைபயற்ற பிராயச்சித்தத்தைச் சம்பாதித்து வைக்கிறார். அவருடைய ரத்தத்தின் மூலமாய்ப் பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்குக் கிடைக்கிறது. தினந்தோறும் நம்முடைய ஜெபங்களிலும், துதிகளிலும் நாம் இந்த ஆட்டுக்குட்டியைத் தேவனுக்கு முன் பாக நிறுத்தப்படவேண்டும். நமக்குக் கிடைக்கிறதாக நாம் எதிர்பார்க்கிறதெல்லாம் அவர் பேரிலும், அவர் செய்ததும், அவர் இப்பொழுது தேவனுடைய சிம்மாசனத்திற்கு முன்னே செய்துகொண்டிருக்கிறதுமான கிரியையின்பேரிலுந்தான் நிற் கிறது. மற்றெல்லாவற்றையும் விட்டு, முழு கவனத்தோடும் தேவ ஆட்டுக்குட்டியை நோக்குங்கள், அவரையே நித்தம் நோக்குங்கள், குற்றமும் பயமும் ஒழிந்துபோகும்வரையில் அவரை நோக்குங்கள்.

குற்றத்தை அவர்மேல் வை,
உன்னை மீட்க சமர்த்தர்;
பயம் திகில் யாவையும்
நீக்க அவர் ஏற்றவர்;
அவரை நன்றாய்ப் பிடி,
அவர் வாக்கையே படி.

'எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்'
மாற்கு 13:37

மரணம் இன்ன நேரமென்றில்லை. இயேசுவின் இரண்டாம் வருகையும் அப்படியே. இதினுல்தான் எப்பொழுதும் ஆயத்த மாயிருக்கவும், விழித்திருக்கவும் கற்பிக்கிறது. நம்முடைய நம்பிக்கைக்கு ஆதாரம் அவர் வருகைதான். இதுவே நம்மு டைய விருப்பம். இதுதான் நம்முடைய தினசரி விண்ணப் பம். அவர் வருகை எவ்வளவு மகத்தான பயங்கரமாயிருக்கும். இது நமக்கு மிகவும் அவசியமானது. அவர் வருவது நிச்சயம். அவர் அவசியம் வரவேண்டும், சடுதியாய் வருவார். அவர் வரு கிற தேதியாவது, மாசமாவது, வருஷமாவது, நமக்குத் தெரியாது. தேவன் வேணுமென்கிற ஞானமாய், இரக்கமாய், நம்முடைய நன்மைக்கென்றே அதை மறைத்தார். விழிக்கச் சொல்லுகிறுர், விழித்திருக்கச் சொல்லுகிறுர். நமது இடத்தி லிருந்துகொண்டு நம்முடைய வேலையைச் செய்யச் சொல்லு கிறுர். நாம் விழித்திருக்கவேண்டுமானுல், இயேசு வருவா ரென்று நித்தம் விசுவாசித்துக்கொண்டிருக்கவேண்டும். ஆயத் தப்பட்டவர்களாய்க் காணப்பட விரும்பி, ஜெபித்துக்கொண் டிருக்கவேண்டும். காலத்தின் குறிப்புகளைக் கவனித்து, நம் முடைய இருதயத்தின் நடபடிகளை யோசித்து, நம்முடைய நடக்கையைக் குறித்து நித்தம் விழிப்பாய் இருக்கவேண்டும். மரணத்தறுவாயில், அல்லது இயேசு வரும்போது, எப்படிப் பட்டவர்களாகக் காணப்பட விரும்புகிறுேமோ, அப்படிப் பட்டவர்களாக நடந்து, இயேசு கதவண்டை நிற்கிறதுபோல எண்ணி, சகலத்தையும் செய்யவேண்டும். சிநேகிதரே, நீங்கள் சோம்பல்காரராய், சண்டைக்காரராய், விரோதிகளாய் முறு முறுக்கிறவர்களாய், எந்தப் பாவத்திலாவது நிலைநிற்கிறவர் களாய்க் காணப்பட விரும்புகிறீர்களா? அப்படி விரும்பாவிட் டால், இந்தக் கெட்ட குணங்களுக்கு விரோதமாய் விழித் திருங்கள். பழைய மனுஷனைப் புறம்பே தள்ளி, புதிய மனுஷ னைப் போர்த்துக்கொள்ளுங்கள். இதோ, நியாயாதிபதி கத வண்டையில் நிற்கிறுரே.

மேகங்கள் புடைசூழ,
இயேசுவாரார், அழைப்பார்;
ஒரு நொடிப்பொழுதிலே
நம்மைத் தம்மிடம் சேர்ப்பார்;
ஆதலால் விழித்திரு.
தீவட்டி பிடித்திரு.

'கர்த்தர் எனக்குச் சகாயர்'

எபிரெயர் 13:6

தேவனைக்குறித்து இப்படி எண்ணுகிறது எவ்வளவோ தைரியத்திற்கு இடம். அவர் தமது ஜனங்களுக்குச் சகாயர்; ஆதலால், அவர்கள் ஜெயவீரர்களிலும் அதிகம். சிநேகிதரே, நாம் நம்மை வெறுக்கவேண்டி வரும்போது, பெரிய துன்பங்களைக் கடக்கவேண்டி வரும்போது, இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்வோமாக. தேவ ஒத்தாசையின்றி நாம் சரியானபடி ஒன்றும் செய்யமாட்டோம். நம்மைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலோ, சகலத்தையுஞ் செய்ய நம்மால் கூடும். எந்த வருத்தத்திலும் நமக்கு உதவிசெய்வார், எந்தத் துன்பத்தினின்றும் நம்மை விடுவிப்பார். இந்த உலகத்தில் நம்மைக் கனத்தோடு நடத்தி, பரம கானானில் சுகத்தோடு கொண்டுபோய்ச் சேர்ப்பார். அவரை நம்பி, அவருக்காகக் காத்திருந்து, அவரோடு நடந்து, அவரை மகிமைப்படுத்துவதை வழக்கமாய் நாடுகிற ஒவ்வொருவருக்கும் இதெல்லாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறதா இது எவ்வளவு இனிமையான தைரியம். சர்வ வல்லவருடைய உதவி நமக்கு இருக்கிறது. தேவன் தாமே தம்முடைய குமாரனை, நம்மை விடுவிக்கிறவராக இருக்கிறார். நாம் வனாந்தரத்தை விட்டு அருமையான ரட்சகர்பேரில் சார்ந்து புறப்பட்டு வருவோமாக. அவருடைய அன்புக்குப் பதிலாக அவரைத் துக்கப்படுத்தாமல், அவருடைய கிருபைக்கு அபகீர்த்தி யுண்டாக்காமல் இருப்போமாக. சுத்த மனச்சாக்ஷியையும், பரிசுத்த நடத்தையையுங் காத்துக்கொண்டு, நமது உடன்படிக்கையின் தேவன்பேரில் விசுவாசம் வைத்திருப்போமானால், 'கர்த்தர் எனக்குச் சகாயர், மனிதன் செய்வதெதையுங் குறித்து நான் பயப்படேன்' என்று சொல்லலாம். கர்த்தர் நமக்குச் சகாயஞ் செய்யும்போது எந்த வலிமையும் நம்மை மேற்கொள்ளாது.

உயிர்த்த என் இயேசுவை
பார்த்து என் பயங்களை
அகற்றுவேன், அவரால்
அகற்றுவேன், அவரால்
நம்பிக்கை நிலைப்பதால்,
கவலை ஓடிப்போமே.
இயேசென்னைக் காப்பவராமே.

நவம்பர்-மீ 13-உ

'ஒருவனையும் தூஷியாதிருங்கள்'

தீத்து 3:2

எந்த மனுஷனைப்பற்றியும் தகாத நோக்கத்தைக்கொண்டாவது, அவனைச் சேதப்படுத்தவேண்டுமென்றாவது பேசவே கூடாது. சத்துருக்களை நேசிக்க, நம்மைப் பகைத்து நம்மை விரோதிக்கிறவர்களுக்கு நன்மைசெய்ய, அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள் ரட்சிப்பைத் தேட ரட்சகர் நமக்குக் கற்பிக்கிறார். அவர்களைக்குறித்து தீது பேசுவோமானால், நாம் தேவனைக் கனவீனப்படுத்துகிறோம், நம்முடைய மனச்சாட்சியைக் குற்றப்படுத்துகிறோம், ஆவியைத் துக்கப்படுத்துகிறோம். மனதில் சமாதானத்தைக் கெடுத்துக்கொள்ளுகிறோம். மற்றவர்களைப்பற்றித் தீது பேசி அதைக் குற்றமென்று உணராமல், மனவருத்தமடையாமல் இருந்தோமானால், நம்முடைய மனச்சாட்சி குருடாயிருக்கவேண்டும். பாவத்தின் வஞ்சகத்தினால் நம்முடைய இருதயம் கடினப்பட்டிருக்கவேண்டும். நம்முடைய நாவு நம்முடையதல்ல, அது கிரயத்தால் கொள்ளப்பட்டது; கொண்டவருடைய ஊழியத்திற்கென்றே அதை நாம் பிரயோகிக்கவேண்டும். மற்றவனைப்பற்றித் தீதாய் எண்ணி, வைராக்கியம், பொறாமை, பழிவாங்குஞ் சிந்தை கசப்பு, கோபம், பகை, இப்படிப்பட்ட குணங்களுக்கு நாம் இடங்கொடுக்கலாகாது. இது பூமிக்குரியது, மாம்ச சிந்தையானது பிசாசின் தன்மையுள்ளது. ஒரு கிறிஸ்தவன் இன்னொருவனைப்பற்றித் தீது சொல்வதும், சபையிலுள்ளவன் போதகரைப்பற்றி விரோதம் பேசுவதும், ஐசுவரிவான்கள் ஏழைகளைப்பற்றி தீட்டாய்ப் பேசுவதும், எஜமாட்டிகள் வேலைக்காரரைப்பற்றி இகழ்ந்து பேசுவதும், முக்கியமாகப் போதகமாரைப்பற்றிக் குறைவாய்ப் பேசுவதும், எவ்வளவு அன்பற்ற காரியம். சகோதரரே, ஒருவரைப்பற்றி ஒருவர் தீங்கு சொல்லாதேயுங்கள்; இது கிறிஸ்துவின் சீஷருக்கு அடுத்ததல்ல.

தீது பேசு நாவெழுந்தால்,
இயேசுவையே நோக்குவேன்;
நல்ல மாதிரியானதால்
அவரைப் பின்பற்றுவேன்;
சாந்தம், அன்பு, தாழ்மையுண்டே
அவர் போலானால் நன்றே.

நவம்பர்-மீ 14-உ

'கர்த்தர் உங்களிடத்தில் எவ்வளவு மகிமையான காரியங்களைச் செய்தாரென்று பாருங்கள்'

1 சாமுவேல் 12:24

நமது துன்பங்களைக்குறித்துப் பேசி, நாம் பெற்ற இரக்கங்களை மறந்துபோவது நமது இயல்பு. ஒரு மனுஷன் நமக்குத் தீங்கு செய்தால், நாம் அதை லேசில் மறக்கமாட்டோம். தேவன் நமக்குச் செய்கிற நன்மையையோ நாம் கவனிக்கிறதேயில்லை. இன்று காலமே கர்த்தர் நமக்குச் செய்த பெரிய காரியங்களைக் கவனிப்போமாக. தம்முடைய குமாரனை நம்மை மீட்கும் பொருளாகத் தந்தார். நம்மை நடத்த, தமது ஆவியைக்கொடுத்தார். நமக்கு வழி காட்ட, தமது வசனத்தையுங் கொடுத்தார். நாம் அழிவுக்கு நேராகப் போனபோது கிருபையால் நம்மை அழைத்தார்; அவருக்கு விரோதிகளான போது நம்முடைய இருதயங்களை மாற்றினார்; அவருடைய கோபம் நமதுமேல் வருமென்று எதிர்பார்த்திருந்தபோது நமது பாவங்களை மன்னித்தார். அவரில் நம்ப விசுவாசத்தையும், அவரிடத்தில் சொல்லிக் கெஞ்ச வாக்குத்தத்தங்களையும், கொடுத்ததுமல்லாமல் நமதுபேரில் அவர் வைத்திருக்கும் உண்மையான தயவுக்கு எண்ணிறந்த திருஷ்டாந்தங்களையும் காட்டியிருக்கிறார். நம்முடைய பயணத்தில் நமக்கு வேண்டியதைத் தந்து, நம்முடைய தப்பிதங்களைத் திருத்தி, நம்முடைய சத்துருக்களை ஜெயித்து, நமக்கு எந்த காரியத்தையும் பின்வைக்காமல் கொடுத்துவந்தார். இவைகளை நினைத்து, கடந்துபோனவைகளுக்காக அவரைத் துதித்து, இனி வரப்போகிறவைகளுக்காக அவரை நம்புவோமாக. நமது தேவனுனவர் ரட்சிப்பின் தேவன். அவர் நமக்காகப் பெரிய காரியங்களைச் செய்தார். நாம் அவரை என்றும் மகிமைப்படுத்தும்படிக்கு இன்னும் பெரிய காரியங்களைச் செய்வார். ஆத்துமாவே, உன் கடமைகளைக் கவனித்து, உன் தேவனுக்கு மகிமையைச் செலுத்து. உள்ளபடியே செலுத்து; தினந்தோறும் செலுத்து.

தேவன் செய்த நன்மைகள்
சொல்லி முடியாததே;
அதை நான் மறவாமல்,
துதித்துப் போற்றுவேனே.

'அவர் உருக்கமாய் இரங்குவார்'

ஏசாயா 30:19

நாம் அடிக்கடி நிர்ப்பாக்கியராய் இருக்கிறோம், எப்பொழுது அபாத்திரராயிருக்கிறோம், கர்த்தரோ இரக்கம் நிறைந்தவர்; அவர் கிருபையாய் இருப்பார். தேவதூதர், மனிதர், பசாசுகள் இவைகளுக்கு முன்பாக நமக்கு எவ்வளவோ பட்சம் காட்டி, நமது கிருபையை மகிமைப்படுத்துவார். நம்முடைய உள்ளான கேடும், முழு அபாத்திரத்தன்மையும் நம்மை அதைரியப்படுத்தும்போது, தேவ கிருபையைப் பார்த்துக் கெஞ்சி, அதின்மேல் சார்ந்திருப்போமாக. நம்முடைய கூப்பிடுதலின் சத்தத்திற்கு அவர் உருக்கமாய் இரங்கி, அதைக் கேட்டவுடனே நமக்கு மறு உத்தரவை அருளுவார். நாம் நம்முடைய பொல்லாத வழிகளைவிட்டு, அவரண்டைக்குத் திரும்பும்போது, அவர் நமக்குக் கிருபையுள்ளவராவார். அப்போது நீ கூப்பிடுவாய், கர்த்தர் உனக்கு உத்தரவு கொடுப்பார்; நீ கெஞ்சுவாய், இதோ நான் இருக்கிறேன் என்பார். அவர் உனக்கு அதிக கிருபையாயிருப்பார். அவர்கள் கூப்பிடுமுன் மறு உத்தரவு கொடுப்பேன். அவர்கள் பேசும்போதே செவி கொடுப்பேன் என்கிறார். கிருபை நிறைந்த தேவனுடைய அளவற்ற அன்பை என்ன சொல்ல. கர்த்தாவே, இதை நாங்கள் எப்பொழுதும் எங்கள் மனத்திலும், எங்கள் கண்ணிக்கு முன்னேயும் வைத்துக்கொள்ளச் செய்யும். எங்கள் உள்ளான கேட்டை நாங்கள் பார்க்கும்போது, இது எங்களுக்கு தைரியத்தையும் நாங்கள் சகிக்கும் எல்லாத் துன்பங்களிலும் எங்களுக்கு ஆறுதலையும் தரக்கடவது. தேவனுடைய இரக்க உருக்கத்தை நாம் நம்புவோமாக. நாம் நம்பினாலும் நம்பாவிட்டாலும், அவர் அப்படிப்பட்டவர்தான்.

இயேசுவை விட்டெத்தீங்கு
என்னைப் பிரிக்கக்கூடும்?
அவரிடம் சேர்ந்தாலோ
என்றும் அவரை விடேன்;
அவர் கரத்தைவிட்டொன்றும்
என்னைப் பிரிக்காதென்றும்.

'எழுந்திருந்து போங்கள், இது நீங்கள் இளைப்பாறும் இடமல்ல'

மீகா 2:10

நிலையுள்ள இளைப்பாறுதல் விசுவாசிகளுக்கு இங்கே இல்லை. இங்கே முள்ளும், குறுக்கும் அவர்களுக்கு இருக்கும் அவர்கள் காதுகளில் எழுந்திருந்து போங்கள் என்கிற சத்தம் நித்தம் தொனித்துக்கொண்டிருக்கிறது. உல்லாசமாயிருக்கிறதற்கும், சோம்பலாய் நடக்கிறதற்கும் இது இடமல்ல. இங்கே சந்தோஷம் கிடைக்குமென்று எதிர்பார்க்கக் கூடாது. இது சத்துரு இருக்கிற தேசம். உன் பரம வீடு சேருகிறதற்கு இதின் வழியாய்த்தான் போகவேண்டும். உன் நடை துரிதமாகி, உன் செய்கை வேதவசனத்திற்கு ஒத்திருக்குமானல், நாய்கள் குரைக்கிறதைக் கேட்டுத் திகைக்காதே. அவைகள் உன்னையும் அறியாது, உன் எஜமானையும் அறியாது. உன் எஜமானைத் துரத்தி, அலைக்கழித்துக் கொல்லவில்லையா? தம்முடைய ஆத்தும வருத்தத்தில், 'நாய்கள் சூழ்ந்துகொண்டது, பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது, என் கைகளையும் கால்களையும் உருவக்குத்தினார்கள்' என்று அவர் சத்தமிடவில்லையா? பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைக் கூட்டி வையாதேயுங்கள். அங்கே பூச்சியும், துருவும் கெடுக்கும்; அங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுகிறார்கள். கிறிஸ்து வீற்றிருக்கிற தேவனுடைய வலதுபாரிசத்தில் உங்கள் ஆசைகளை மேலானவைகளின்மேல் வையுங்கள். உலகத்தை அனுபவித்தாலும், அதைத் தகாத விதமாய்ப் பிரயோகியாதேயுங்கள். அதின் வழியாயப் பிரயாணம் பண்ணினாலும், அதில் வாசம்பண்ணப் பாராதேயுங்கள். அதில் வாசம் பண்ணுகிறவர்கள் உங்கள் சத்துருக்கள், உங்கள் தேவனுடைய சத்துருக்கள்.

மோசம் கண்ணி என்னைச் சூழ்ந்தும்,
ஏசுதான் என் பெலனென்பேன்;
எவனெனக்கென்ன செய்தும்,
மகிழ்ந்துகொண்டே நடப்பேன்;
ஏசுதான் என்னை ஆற்றுவார்,
சமாதானம் தருவார்.

‘தேவனோடு ஒப்புரவாகுங்கள்’

2 கொரிந்தியர் 5:20

தேவனுக்கும் உங்கள் ஆத்துமாக்களுக்கும் நடுவே அன்பு தவிர வேறே ஏதாவது உண்டோ? ஒன்றும் இருக்கக்கூடாது. தேவன் பாவத்தைத்தான் பகைக்கிறார்; பாவம் ஒன்றுதான் அவருக்கு விசனத்தை மூட்டுகிறது. நாம் பாவத்தைப் பகைத் துத் தள்ளுகிறோமென்று சொல்லுகிறோம். நாம் முன்னே சத் துருக்களாயிருந்தோம், தேவனோடு நம்மை ஒப்புரவாக்க இயேசு மரித்தார். இப்போது நாம் அவரோடு சிநேகமா னோம். சிநேகிதரைப்போல நடந்து சிநேகிதரைப்போலத் தேவனைப்பற்றிப் பேசுகிறோமா? தேவனிடத்தில் இருக்கிறது ஏதாவது,(அவர் செய்கிறது ஏதாவது நமக்கு விசனத்தை உண்டாக்குகிறதா? ஏன் அது நமக்கு விசனத்தை உண்டாக்க வேண்டும்? அவர் தன்மை அன்பு; அவர் வழியெல்லாம் அள வற்ற ஞானம். அவருடைய இரக்கம் உருக்கங்கள் அவருடைய கிரியைகள் மேலும் உள்ளது. நாம் அவரோடு நேசமாயிருக்க வேணுமென்று விரும்புகிறார். என்ன ஆச்சரியம்! நம்முடைய பாவங்கள் யாவையும் மன்னிக்கிறார்; நம்மைச் சுத்திகரிக்க கிருபையையும், நம்முடைய ஆத்துமங்கள் போய்ச்சேர மோட்சத்தையும் தருகிறார். ஒப்புரவாகுங்கள் என்று நம்மை வேண்டிக்கொள்ளுகிறார். நாம் அவருக்குச் சிநேகிதராகும் பரி யந்தம் அவருடைய அன்பு ஓயமாட்டாது, அவருக்குச் சந் தோஷமும், திருப்தியுமிராது என்கிறதுபோல, சிநேகிதரே! தேவனுக்குத் தூரமாய் இருந்து நடந்து வருகிறீர்களோ? அவரிடத்தில் சேர உங்கள் ஆத்துமா கூச்சப்படுகிறதோ? என்னைக்கொண்டு தேவன் உங்களை வேண்டிக்கொள்ளுகிறார். தேவனோடு ஒப்புரவாகுங்களென்று கிறிஸ்துவுக்குப் பதிலாக நான் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இயேசுனக்காய் மரித்தார்,
உன் சாபத்தைத் தொலைத்தார்;
நீதி போதும் என்றது,
இரக்கம் வா என்குது;
வா பாவி, தாமதமேன்,
இரங்கும் என்று கெஞ்சேன்.

'நான் இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன்
ஓசியா 14:5

சுபாவப்படி நம்முடைய இருதயங்கள் காய்ந்த, செத்த, கனிகொடாத பூமியைப்போல, தேவ கிருபை இல்லாவிட்டால் உயிரற்றுப்போம். அழுகுமிராது, பெலனுமிராது. மறுபடியும் பிறந்த பிறகும் பூமிக்குப் பனிவேண்டியிருப்பதுபோல, நமக்குத் தேவ கிருபை இராவிட்டால், பலன் இராது; தேவ கிருபை இராவிட்டால் மெய்மார்க்கமிராது. நான் இஸ்ரவேலுக்குப் பனிபோலிருப்பேன் என்று நம்முடைய தேவன் சொல்லுகிறுர். பூமிக்குப் பனி எப்படியோ, தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அப்படி யிருக்கிறுர். பனி பூமியை நனைத்துக் குளிரப்பண்ணுகிறதல்லவா? அப்படியே தேவனும் நம்முடைய ஆத்துமங்களைத் தம்முடைய பரிசுத்த அன்பினுலும், தம்முடைய தயவினுலும் குளிரப்பண்ணுகிறுர். பனி மண்ணுங்கட்டிகளை உடைத்து மிருதுவாக்குகிறதல்லவா? அப்படியே நம்முடைய தேவனும், மனந்திரும்பாத கல் போன்ற நம்முடைய இருதயங்களைக் கரைத்துச் சாந்தமுள்ளதாக்குகிறுர். பனி விதைப்புக்குப் பூமியை ஆயத்தப்படுத்தி, விதை முளைத்து வளரச் செய்கிறதல்லவா? அப்படியே நம்முடைய தேவனும் நம்முடைய இருதயமானது வேத வசனத்தை ஏற்றுக்கொள்ளவும், அந்த வசனம் வளர்ந்து பலன் கொடுக்கவும் செய்கிறுர். பனி அதிகமாய் வேண்டிய சாயங்கால சமயத்தில் நமக்கும் தெரியாதபடி பெய்கிறது. அப்படியே நம்முடைய தேவனும் உயிர்ப்பிக்கிற, செழிப்பாக்குகிற தம்முடைய கிருபைக்கு நமக்கு அதிகமாய் தேவையான சமயங்களில் தருகிறுர்.

தேவாவியே, வாருமேன்,
என் ஆவியைத் தேற்றுமேன்;
என் உள்ளம் செழிப்பாக்கும்
நற்கனி தரச் செய்யும்.

'நாம் இங்கே இருக்கிறது நல்லது'

மத்தேயு 17:4

இயேசுவோடு மலையில் இருந்தபோது பேதுரு இப்படிச் சொன்னான். இயேசுவின் சமுகத்தையும் அன்பையும் ருசிக்கும் சமயத்தில் நாமும் இப்படியே சொல்லுகிறோம். தேவனோடு ஐக்கியமாய் நடந்துகொண்டிருக்கிறது நல்லது. தேவனுடைய பிள்ளைகளோடு சேர்ந்து, அவருடைய சபையில் பிரயோசனமாயிருப்பது நல்லது. இயேசுவுக்காகச் சாக்ஷி சொல்லும்படி இந்த உலகத்தில் வாசம்பண்ணுவது நல்லது. தேவனை மகிமைப்படுத்த, நம்முடைய தாலந்துகளை உபயோகப்படுத்தி, பிரயோசனமானவிதமாய் நம்முடைய நேரத்தைப் பின்னிடுவது நல்லது. நாம் பொறுமையாய்ச் சகிக்கிறதினால் இயேசுவை மகிமைப்படுத்தக்கூடுமா? அப்படியானால் துன்பப்படுகையிலேயும் இங்கே யிருக்கிறது நல்லதென்று சொல்லவேண்டும். நம்முடைய சுறுசுறுப்பினாலும், பொறுக்கிற குணத்தினாலும், இயேசுவின் கிருபையின் வல்லமைக்காகச் சாட்சியிடுவதினாலும், நாம் தேவனை மகிமைப்படுத்தக் கூடுமா? அப்படியானால், அலுவல் பார்த்துக்கொண்டிருக்கும் போது, மற்றவர்களுக்குப் பிரயோசனமாய் அவர் நடுவிலிருக்கும்போது இங்கே இருக்கிறது நல்லதென்று சொல்லுவோமாக. ஆம், கிறிஸ்தவனே, இயேசுவானவர் மகிமைப்பட்டால், நீ சிருஷ்டிக்கப்பட்டு மீட்கப்பட்டுப் பரிசுத்தமாக்கப்பட்ட நோக்கம் நிறைவேறுமானால், எங்கேயிருந்தாலும் நலந்தான். தேவனை மாத்திரம் மகிமைப்படுத்துவது நமது நோக்கமாய் இருக்குமானால், எங்கேயிருந்தாலும் இங்கே இருக்கிறது நல்லதென்று சொல்லலாம். இங்கே இருக்கிறது நலமானால், தனிமையாயிருக்கிறது எவ்வளவு அதிக நலம்.

இரங்கும் தேற்றரவாளி,
கடைமட்டும் என்னைக் காவா;
நாம் உம்மை விடாமல் செய்யும்,
என்னைக் காத்து கிட்ட இரும்.

‘சகோதரரே, இனிவரும் காலம் குறுகினது’
1 கொரிந்தியர் 7:29

அப்படியானால் நம்முடைய துன்பங்களும் குறுகினது தான். ஏனென்றால், அவைகள் கொஞ்சகாலத்திற்கு மாத்திரம் இருக்கும், இவ்வுலகத்தில் மாத்திரம் இருக்கும். இது எவ்வளவு ஆறுதல். ஆதலால் இங்கே தேவனை மகிமைப்படுத்துகிற சமயங்கள் சுருக்கமென்று நம்மால் ஆனமட்டும் அவைகளைப் பிரயோஜனப்படுத்தப் பார்க்கவேண்டும். அப்படியானால், பொல்லாங்கன் ஜெயமடைவது அபூர்வம். பாவிகளுடைய விரோதமும் சீக்கிரம் முடியும். ஆதலால் நாம் பொறுமையாயும், ஜெப குணமுடையவர்களாயும், சுறுசுறுப்புடையவர்களாயும் இருக்கவேண்டும். ஏனென்றால் நம்முடைய மீட்பு சமீபிக்கிறது; காலம் சுருக்கம். அப்படியானால் நாம் சீக்கிரம் இயேசுவைப் பார்ப்போம்; பரிசுத்த சகோதரருடைய கூட்டத்தில் சேருவோம்; கர்த்தரோடு என்றும் இருப்போம். காலம் சுருக்கம், நித்தியம் நீண்டது. ஆதலால் நம்முடைய பொக்கிஷத்தைப் பரலோகத்தில் வைப்போமாக. அங்கே பூச்சியும் துருவும் கெடுக்காது. நம்முடைய கடைசி மாறுதலுக்கு நித்தம் ஆயத்தப்படுவோமாக. காலம் சுருக்கம், அது பறந்து போம். நம்முடைய மரணநாள் சீக்கிரம் வரும். ஆதலால் மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள் போலவும், அழுகிறவர்கள் அழாதவர்கள்போலவும், சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள்போலவும், கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்களைப்போலவும் இருக்கவேண்டும். நமக்கு இருக்கும் கொஞ்ச காலத்தை நன்றாய்ப் பிரயோஜனப்படுத்தப் பார்ப்போமாக.

காலம் சுருக்கமானதால்,
நித்தியம் நீண்டிருப்பதால்
கடைசிமட்டும் நிலைக்கவே
கிருபை தாரும் தேவனே.

'என் சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்'

யோவான் 14:27

சமாதானம் பெரிய ஆசீர்வாதம்; அது இயேசு கொடுக்கிற பெரிய ஈவு. அவர் கொடுக்கிற சமாதானத்தின் இனிமையை விசுவாசிகள்தான் அறிவார்கள். தமது ரத்தத்தைச் சிந்தி, அதை முடித்தார். நித்திய சுவிசேஷத்தில் அதை விளம்பரஞ் செய்தார்; விசுவாசிக்கும்போது அதை நமக்குத் தருகிறார். பரிசுத்த ஆவியின் சகாயத்தால் இருதயம் அதை அனுபவிக்கிறது. இதுதான் தேவனோடு உண்டாகிற சமாதானம். சமாதானமுள்ள மனச்சாட்சி ஆத்துமாவில் ஆரம்பிக்கும் மோட்சம் துன்பத்தின் நடுவே இது சிலவேளையில் கிடைக்கிறதுண்டு, அப்பொழுது எந்தச் சுமையும் லேசாகும், எந்தத் துன்பமும் குறையும், எந்த நிலையிலும் பாவி சந்தோஷமாயிருப்பான். இயேசுவே, இன்று காலமே உம்முடைய சமாதானத்தைத் தாரும். இன்றைக்கு அது எங்கள் இருதயங்களில் ஆளுகை செய்யட்டும். சமாதானத்திற்காக இயேசுவையே நோக்கிப்பார்; அவர்தான் நமக்குச் சமாதானம். அவர் வார்த்தையை நம்பு, பிராயச்சித்தத்தை ஏற்றுக்கொள். அவர் நிறைவேற்றின கிரியையைப் பிடி, அவர் துதியையே பிரஸ்தாபம் பண்ணு. எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானம் உன் மனசை நிரப்பும். மரணவேளையில் இந்தச் சமாதானம் கிடைக்கவேண்டுமென்று நித்தம் ஜெபம்பண்ணு. அப்பொழுது பாக்கியவானாய், கண்ணியவானாய், க்ஷேமமாய் மரிப்பாய். கிருபையின் ஈவாக இதைத்தேடு; தேவனுக்கு மகிமையாக இதை அனுபவிப்பாய். தேவனோடு சமாதானப்பட உன்னால் பெறுவாய்.

கிறிஸ்துவின் சிலுவையண்டை
என் ஆத்மா என்றும் தங்குமே;
அவர் மரித்துயிர்த்தால்,
அவர்க்கென்றே நான் பிழைப்பேன்
மரித்தாலும் பிழைத்தாலும்,
நான் அவருடையவனே.

நவம்பர்-மீ 22-உ

'உன்னேயோ நான் மட்டாய் தண்டிப்பேன்'

எரேமியா 30:11

பாவம் சிட்சையைக் கொண்டுவருகிறது; அதை அனுப்புகிறது அன்பு. எந்தப் பிள்ளையும் தண்டிக்கப்படும். எந்தப் பிள்ளையும் பாவஞ்செய்கிறது. பாவத்திற்காக நாம் தண்டிக்கப்பட்டாலும், பாவத்திற்குத் தக்கதாக தண்டிக்கப் படுகிறதில்லை. நம்முடைய பிதா மட்டாய்த் தண்டிக்கிறார். கோபமாய் அல்ல, அன்பாய்த் தண்டிக்கிறார். நம்மை அழிக்க வல்ல, நம்மைக் காப்பாற்றத் தண்டிக்கிறார். அவருடைய மனசில் கோபமில்லை, நமதுமேல் கோபம் வைக்கமாட்டோமென்று ஆணையிட்டார். ஆகிலும் மிலாறைக்கொண்டு நம்முடைய பாவங்களையும், அடிகளைக்கொண்டு நம்முடைய அக்கிரமங் களையும் தண்டிப்பார். நம்மோடு அவர் ஒப்புரவானாலும், நம் முடைய பாவங்களோடு அவர் ஒப்புரவாகிறதில்லை. ஆதலால் நான் யாரைச் சிநேகிக்கிறேனே, அவர்களைக் கடிந்து தண் டிக்கிறேன். வைராக்கியமுள்ளவனுயிருந்து குணப்படு என்கி ருர். அவருடைய சிட்சையை நாம் அசட்டை செய்யாமலும், அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாமலும் இருப் போமாக. அவருடைய எல்லாப் பிள்ளைகளுக்கும் இது கிடைக் கிற பங்குதான். நம்மை அவர் அண்டையில் தூரத்தி, அவ ருடைய பாதத்தண்டை தாழ்த்துமானல், இது அன்பால் அனுப்பப்பட்டதென்று நன்ருய்ச் சொல்லலாம். இது வருத் தத்தோடு கூடிய ஆசீர்வாதம். நம்மைக் கழுவிச் சுத்திகரிக்கும் படி அனுப்பப்பட்ட இரக்கம். நாம் பாவஞ்செய்து தண்டிக் கப்படாமற்போனல், நாம் தேவ புத்திரர் என்கிறதைக் குறித் துச் சந்தேகமிருக்கும். தகப்பன் தண்டியாத பிள்ளை ஒன் றுண்டோ? நாம் தண்டிக்கப்படும்போது தேவன் நம்மைப் பிள்ளைகளைப்போல நடத்துகிருர். நாம் துன்பப்படுகிறபோது அவருடைய வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது. நம்முடைய பிரயோஜனத்துக்கென்று நம்மைத் தண்டிக்கிருர். தம்மு டைய பரிசுத்தத்தில் நாம் பங்குள்ளவர்களாகும்படி நம்மைத் தண்டிக்கிருர்.

உள்ளும் புறம்பும் தீங்கு
உன்னைச் சூழ்ந்துகொண்டாலும்,
உன்னை மறவேனென்ற
அவர் சொல்லை நான் பிடிப்பேன்;
வாக்கை அவர் மறவார்,
சொன்னபடியே செய்வார்.

'உன் வாயை விரிவாய்த்திற, நான் அதை நிரப்புவேன்'

சங்கீதம் 81:10

தேவ வசனம் கருத்தான உருத்தான ஜெபத்திற்கு நம்மை ஏவிவிடுகிறது. மனிதர் சோர்ந்துபோகாமல் எப்போதும் ஜெபம் பண்ணவேண்டும். விசுவாசிகள் தேவனைத் தங்கள் பிதாவாக எண்ணி, தங்களுக்குத் தேவையானதெல்லாம் அவரிடத்தில் கேட்கவேண்டும். அவர் கேட்கச் சொல்லியிருக்கிறபடியால், அவரிடத்தில் கேட்கவேண்டும். அவர் உண்மையுள்ளவரானபடியால், கிடைக்குமென்று எதிர்பார்க்கவேண்டும். இன்று காலையில் நமக்கு வேண்டியது அநேகம் உண்டா? வாயை விரிவாய்த் திற என்று கற்பிக்கிறார்; அதை நிரப்புவேனென்று வாக்களிக்கிறார்; நாம் அதிகமாய்க் கேட்கவேண்டும். அதிகமாய்க் கேட்டு அதிகம் கிடைக்குமென்று எதிர்பார்க்கும்போது, தேவன் மகிமைப்படுகிறார். நமக்கு நன்மை செய்வது அவருக்குச் சந்தோஷம். தம்முடைய பிரியமுள்ள பிள்ளைகளாக நம்மைப் பாவித்து, நமக்குத் தேவையானதெல்லாம் அவருடைய மகிமைக்கென்று நாம் கையாடக்கூடியதெல்லாம் தருவேனென்று வாக்குக்கொடுத்திருக்கிறார். ஆதலால் தேவையானதெல்லாம் அவரிடத்தில் கேட்போமாக, அவருடைய வாக்குத்தத்தங்களைச் சொல்லிக் கெஞ்சுவோமாக. பெற்றுக்கொள்ளும் வரையில் இயேசுவின் நாமத்தைச் சொல்லி, விண்ணப்பம் பண்ணிக்கொண்டே இருப்போமாக. நம்முடைய தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர். பொல்லாதவர்களாகிய நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருப்போமானால், நம்முடைய பரமபிதா தம்மை நோக்கிக் கேட்கிறவர்களுக்கு எத்தனை அதிகமாய் நல்ல காரியங்களைத் தருவார். ஆதலால் இரக்கத்தைப் பெறவும், நமக்கு உதவியாக இரக்கத்தைக் கண்டடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேருவோம்.

ராஜனண்டை சேரும்போது
பெரிய நன்மையைத் தேடு;
நீ எதைக் கேட்டும் கொடுப்பார்,
கேளென்று சொல்லி மறுக்கார்.

'நான் மறுபடியும் உங்களைக் காண்பேன்'
யோவான் 16:22

இயேசுவின் சமுகம் அவர் ஜனங்களுக்கு ஆனந்தம். அவர் நமக்கு அன்பு காட்டி, நம்மிடத்தில் இருக்கும்போது நாம் சந்தோஷத்தாலும், சமாதானத்தாலும் நிரப்பப்படுகிறோம். அவர் தமது முகத்தை மறைக்கும்போதோ, நாம் வருத்தப்படுகிறோம்; இது ஆச்சரியமல்ல, அப்போதுதான் சாத்தான் தன் சோதனைகளோடு வருகிறான். உள்ளான கேடு எழும்பி, நம்மை வருத்தப்படுத்துகிறது, சகலமும் நமக்கு விரோதமாக நடக்கிறது. இயேசு நம்மை ஒருதரம் சந்தித்தால், அவர் மறுபடியும் வருவார். உலகத்திற்குத் தம்மை வெளிப்படுத்தாதவண்ணமாய் நமக்குத் தம்மை வெளிப்படுத்துவார். தேவன் தம்மை மறைத்து, நம்மை அந்தகாரத்தில் விடும் சமயங்களில் இந்த அருமையான வாக்கைச் சொல்லி, அவரைப் பார்த்துக் கெஞ்சுவோமாக அவர் நம்மோடு அனுதாபப்பட்டு: இப்போது உங்களுக்குத் துக்கமுண்டு; நான் உங்களை மறுபடியும் காண்பேன்; உங்கள் இருதயம் சந்தோஷிக்கும். உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களை விட்டு எடுக்கமாட்டான்' என்கிறார். அருமையான இயேசு கர்த்தரே, இந்த நாளில் நாங்கள் உம்முடைய சமுகத்தையும் அன்பையும் ருசிக்கட்டுமே. நீர் வந்து எங்களைப் பாரும், எங்களிடம் வாசம்பண்ணும், எங்களை விட்டு ஒருபோதும் போகாதேயும், எங்கள் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது. கடந்துபோன நாட்களில் உம்முடைய அன்பை ருசித்ததுபோல இப்போதும் ருசிக்க வாஞ்சைப்படுகிறோம். இன்றைக்கு உம்மை எங்களுக்கு வெளிப்படுத்துமேன். முன் ஒருபோதும் சேராத விதமாய் எங்களை உம்மோடு சேர்த்துக்கொள்ளுவேன். எங்களை உம்மைப்போலாக்கி, என்றைக்கும் எங்களோடு வாசம்பண்ணுமேன்.

சிலுவையின்கீழ் உட்கார்ந்து
அவரன்பை உற்றுப்பார்;
குப்பையென்று யாவும் தள்ளு,
இதயத்தால் கிட்டிச்சேர்.

'உம்முடைய வசனத்தை நம்பியிருக்கிறேன்'

சங்கீதம் 119:42

நம்முடைய எண்ணங்களையும், தோற்றங்களையும் நம்புவது சரியல்ல, நல்லதல்ல. நமக்குள்ளே உண்டாகும் நினைவுகளுக்குச் செவிகொடுத்து, தோற்றத்தின்படி தீர்ப்புச் செய்வது உத்தமமல்ல. கிறிஸ்தவனை நடத்தவேண்டியது வேதவசனம்; இதையே அவன் நம்பவேண்டும். வேதவசனத்தைப் பிடித்து அதின்மேல் சார்ந்திராதவன் பின்னை எதைத்தான் நம்புவான்? அது உண்மையுள்ளது; அவசியமான காரியங்களில் தெளிவுள்ளது. அதைப் பரீட்சித்துப் பார்த்து, எப்பொழுதும் தெளிவுள்ளதென்று கண்டிருக்கிறோம். அதை விசுவாசித்து, அதின்மேல் சார்ந்து, அதையே சொல்லிக் கெஞ்சி, அதின் நிறைவேறுதலை எதிர்பார்த்து, அதைக்கொண்டு நம்மை ஆற்றிக்கொள்ளவேண்டும். முக்கியமாய் மோசங்கள் நம்மைச் சூழ்ந்திருக்கும்போது, தேவன் தாமதித்து நம்முடைய விண்ணப்பங்களுக்குச் செவிகொடாததினாலே அந்தகாரமும் பயமும் நம்மைச் சூழந்துகொள்ளும்போது, நாம் அப்படிச் செய்யவேண்டும். தேவனுடைய உண்மையுள்ள வார்த்தையை நம்பியிருப்போமானால், அது மனதிற்குச் சமாதானத்தைக் கொடுக்கும்; ஆத்துமத்திற்குப் பயிற்சியைத் தந்து, துன்பகாலத்தில் நம்மை விடுவிக்கும். தேவ வசனத்தை நம்புவோமானால், நமக்குத் தேவையானது கிடைக்குமென்பது நிச்சயம். வீண்வாக்கை நம்புவது வருத்தந்தான். நாமோ கிடைக்கக்கூடியதை, உள்ளபடி ஆசிக்கக்கூடியதை நம்புகிறோம். வாக்குத்தத்தமானது தேவன் கொடுக்கிற பத்திரம். அதினால் நம்முடைய மனதிற்கு இளைப்பாறுதல் உண்டாகவேண்டும். அமர்ந்த மனதோடு அதை முற்றிலும் நம்புவோமானால், சமாதானத்தையும், அமைதலையும், உறுதியையும் கண்டடைவோம். தேவ வாக்கை நம்புவோமானால், எந்தச் சத்துருவுக்கும் நாம் பயப்படவேண்டியதில்லை; எந்தத் துன்பத்திற்கும் அஞ்சவேண்டியதில்லை; எல்லாம் க்ஷேமமாயிருக்கும், என்றைக்கும் க்ஷேமமாயிருக்கும். கர்த்தாவே, இன்றைக்கு என் இருதயத்தில் விசுவாசத்தை உண்டுபண்ணும்.

உம்மை நம்பினேன் சுவாமி
இரங்கும் கிருபை நேமி;
உமது வாக்கு சத்தியம்
தேவ கிருபை நித்தியம்.

'கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனுமா யிருக்கிறாய்?'

கலாத்தியர் 4:7

சுபாவப்படி நாம் கோபாக்கினையின் புத்திரர். இயேசுவோடு இணைக்கப்பட்டதினால், எவ்வளவோ கனத்திற்கும் மகிமைக்கும் உயர்த்தப்பட்டிருக்கிறோம். நமக்குக் கிடைக்கிற நன்மைகளெல்லாம் இயேசுவின் மூலமாய்த்தான் பாய்கிறது. தேவனிடத்தில் செல்லுகிறதற்கும், தேவனோடு ஐக்கியப்படுகிறதற்கும் அவரையே வழியாக எண்ணவேண்டும். இயேசுவோடு நாம் ஒன்றுபட்டோமானால், நாம் தேவனுக்குச் சுதந்தரவாளிகள், கிருபையின் ஐசுவரியவான்களையும், மகிமையின் ஐசுவரியங்களையும், சகலத்தையும் அவர் நமக்கே சாதகமாக எழுதிவைத்திருக்கிறார். மரண சாதகம் எழுதி முத்திரிக்கப்பட்டிருக்கின்றது. தேவனுடைய ஆணையினாலும், நம்முடைய அருமை ரட்சகர் சிந்தின ரத்தத்தினாலும், சகலமும் நமக்கு உறுதிபண்ணப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு பெரிய கனம். தேவனுக்கு உகந்தவர்களாகிறது, தேவன் கொடுக்கக் கூடியதை எல்லாம் நித்தியா நித்தியகாலமாய் வைத்து அனுபவிக்கிறது, சொல்லமுடியாத தயவு. பூமியில் இருக்கும்போது போதுமானது நமக்குப் பத்திரம்பண்ணப்பட்டிருக்கிறது. உயிர்த்தெழுந்த பிறகு அவைகளை நாம் சுதந்தரித்துக் கொள்ளுவோம். நாம் தேவனுடைய பிள்ளைகள், புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றவர்கள். இயேசுவோடு இணைக்கப்பட்டு, நித்தமும் அவருக்குப் பிரியமாய் நடக்கிறவர்கள் என்பதைப்பற்றிக் கொஞ்சமாவது சந்தேகமில்லாதபடி பார்ப்போமாக. நாம் சுதந்தரிக்கும் நாளை எதிர்நோக்கி, அந்த மகிமையான சம்பவத்திற்கு ஆயத்தப்பட்டவர்களாய் நடப்போமாக. நாம் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரராய் நடந்து, எல்லா மனத்தாழ்மையோடும், சாந்தத்தோடும் ஜெபம்பண்ணி விழித்திருப்போமாக.

என்னை முழுவதும் உமக்கே,
நான் ஒப்புவிப்பேன்,
லோக இன்பம் செல்வம்யாவும்
அகற்றுவேன் முற்றும்.

'நானே நல்ல மேய்ப்பன்'
யோவான் 10:11

சிநேகிதரே! நீங்கள் இயேசுவின் மந்தையில் இருக்கிறவர்களா? ஆடுகளோடு மேய்ந்து தங்குகிறவர்களா? இயேசு எவ்வளவோ அன்பான விதமாய் இன்றுகாலமே தம்மை நமக்குக் காண்பிக்கிறார். நான் நல்ல மேய்ப்பனென்கிறார்; அவரைப் போல நல்ல மேய்ப்பனுமில்லை, பெரிய மேய்ப்பனுமில்லை. தம்முடைய மந்தையின்மேல் எவ்வளவு அன்பு பாராட்டுகிறார், எவ்வளவோ வல்லமையோடு அதை ஆதரிக்கிறார், போதுமானபடி நல்ல மேய்ச்சலைக் கண்டுபிடிக்கிறார். அவைகளை மீட்கத் தம்முடைய உயிரைத் தந்தார், அவைகளைப் பரிசுத்தமாக்கத் தம்முடைய ஆவியை அனுப்புகிறார், அவர்கள் வசிக்க மோட்சத்தில் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுகிறார். என்றைக்கும் அவர்கள் நடுவில் வாசம்பண்ணி அவர்களை ஆசீர்வதிப்பார். அவருடைய தயவு எவ்வளவு பெரியது; அவர் தயவும் உண்மையும் நிறைந்தவர். அவர் சொல்லுகிறதைக் கேள். 'என் ஆடு என் சத்தத்தைக் கேட்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன். அவைகள் என்னைப் பின் செல்லுகின்றன; நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருபோதும் கெட்டுப்போகாது; ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்ளுவதில்லை. அவைகளை எனக்குத் தந்த பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார். அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது. நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்.' எவ்வளவு மகிமை பொருந்திய க்ஷேமம் இயேசுவின் மந்தைக்குக் கிடைத்திருக்கிறது! எவ்வளவு பெரிய கனம்! நல்ல மேய்ப்பனே, எங்களை உமது சமீபத்தில் வைத்துக்கொள்ளும். ஒரு நிமிஷமாவது நாங்கள் உம்மைவிட்டு அலையாதபடி வைத்துக் கொள்ளும். உம்முடைய அன்பில் நாங்கள் எப்பொழுதும் ஆனந்தமடைந்துகொண்டிருப்போமாக.

இயேசு நல்ல மேய்ப்பராமே,
மந்தையைக் காப்போர் அவரே;
எந்த சின்ன ஆடும் கூட
பின்செல்லும் அவரைத்தேட.

'நாளானது அதை விளங்கப்பண்ணும்'

1 கொரிந்தியர் 3:13

நாள் என்பது கர்த்தராகிய இயேசு வானத்திலிருந்து அக்கினிச் சுவாலையில் வெளிப்படும் நாள், அல்லது மரித்தோர் உயிர்த்தெழுந்து நியாயத்தீர்ப்பு தொடங்கும் நாள். அது எப்படிப்பட்ட நாளாயிருக்கும்? எந்த ரகசியமும் வெளிப்படும். அது வெளியாக்குகிற நாள், குற்றத்தை உணர்த்துகிற நாள், உறுதிப்படுத்துகிற நாள், குற்றவாளியென்று தீர்க்கிற நாள், அல்லது நீதிமான் என்று விடுவிக்கிற நாள். நம்முடைய நோக்கங்களெல்லாம் அப்பொழுது வெளியாகும் நமது எண்ணங்களெல்லாம் அப்பொழுது பிரத்தியட்சமாகும். மாய்மாலம் கண்டிக்கப்பட்டு, மோசம் தண்டிக்கப்படும். சிநேகிதரே, அந்த நாளை நமக்கு முன் வைத்துக்கொண்டவர்கள்போல ஜீவியம் பண்ணுவோமாக. சகலமும் வெளிப்படுமென்று நம்பினவர்கள்போல் நடப்போமாக. நாம் உண்மையுள்ளவர்களா? அந்த நாளே வெளிப்படுத்தும், சுய மேன்மையை நாடாமல், தேவ மகிமையைத் தேடுகிறவர்களா? அந்த நாள் அதை வெளிப்படுத்தும், நம்முடைய வேலைகளை உலக நோக்கங்களோடு அல்ல, கிறிஸ்துவின் ஆவியோடு நடத்திவருகிறோமா? அந்த நாள் அதை வெளிப்படுத்தும். நாம் யோக்கியராயும், தாழ்மையுள்ளவர்களாயும் நடந்து வருகிறோமா? அந்த நாள் அதை வெளிப்படுத்தும். நம்முடைய நடத்தை விசுவாசத்தினின்று பிறந்து, இயேசுவின் அன்பினால் ஏவப்பட்டதா? அந்த நாள் அதை வெளிப்படுத்தும். அந்த நாளில் நாம் தாழ்மையுள்ளவர்கள், பரிசுத்தர், விழிப்புள்ளவர்கள் கர்த்தராகிய இயேசுவுக்கு ஜாக்கிரதையுள்ள சீஷர் என்று விளங்குவோமானால், எவ்வளவு பாக்கியம். அந்த நாளை நித்தம் எதிர்பார்த்து நடந்துவருவோமாக. அநேகருக்கு அது சடுதியாய் வரும்.

நியாயத்தீர்ப்பு நாளிலே
இயேசு கர்த்தர் வருவார்;
புஸ்தகச் சுருளிலே
கண்டபடியே தீர்ப்பார்;
நான் அப்போ எங்கிருப்பேன்?
உம்மை எப்படிக் காண்பேன்?

'கர்த்தருடைய கிரியைகளையும், கர்த்தருடைய துதிகளையும் பிரஸ்தாபம்பண்ணுவேன்'

ஏசாயா 63:7

இவைகளைப்பற்றித்தான் கர்த்தருடைய ஜனங்கள் பேச வேண்டும், இவைகளையே நினைத்து ஞாபகத்தில் வைக்க வேண்டும். கர்த்தர் தம்முடைய ஏழை ஜனங்களுக்கு அவர்கள் குறைவை நீக்கும்படிக்கு ஆயத்தம் பண்ணினவைகளையும், தம்முடைய சகல ஜனங்களும் கொண்ட எல்லா விருப்பங்களுக்கும் தக்கதாக அவர் கொடுத்திருக்கிற எல்லா வாக்குத்தத்தங்களையும், துன்ப காலங்களில் ஜெபங்களுக்கு உத்தரவு அளித்து, அவர்களுக்கு உதவி செய்து விடுவித்ததையும் பிரஸ்தாபம் பண்ணவேண்டும். தம்மை தேடுகிறவர்களுக்குக் கர்த்தர் செய்கிற நன்மைகளைப் பிரஸ்தாபம் பண்ணுவோமானால், அவை அவர்களைத் தைரியப்படுத்தும்; முறையிடுகிறவர்களை அமர்த்தும்; சோதிக்கப்படுகிறவர்களுக்கு ஆதரவாகும்; பின்வாங்குகிறவர்களுடைய பாவத்தை எடுத்துக்காட்டி, அவர்களை முந்தின நிலைமைக்குக் கொண்டுவரும். நமக்கு அவர் காட்டின பட்சத்தைக் குறித்து அடிக்கடி பேசுவோமானால், முறுமுறுப்பு நீங்கிப்போம், நன்றியறிதலுண்டாகும், நம்பிக்கை அதிகப்படும். விண்ணப்பஞ்செய்து மற்றவர்களுக்காகக் கெஞ்சும்போதும், ஜெபித்து வேண்டியதைக் கேட்கும் போதும், துதி தோத்திரஞ் செலுத்தும்போதும், கர்த்தருடைய சிம்மாசனத்தண்டையில் அவர் செய்த நன்மைகளைப் பிரஸ்தாபப்படுத்துவோமாக. கர்த்தருடைய துதிகளைப் பிரஸ்தாபப்படுத்துவதே நம்முடைய தினசரி வேலையாயிருக்கட்டும். இதைப்பற்றியே ஒருவரோடு ஒருவர் அடிக்கடி பேசுவோமாக. இது நம்மை ஆற்றித்தேற்றும்; நம்முடைய மனதைப் பலப்படுத்திச் சுத்திகரிக்கும்; கடைசியில் சமாதானத்தையும் கொண்டுவரும்.

இயேசுவைப்பற்றிப் பேசுவோம்,
அவர் செய்ததெல்லாம் சொல்வோம்;
அவர் காட்டின பாதையில்
நடந்துகொண்டுபோகையில்,
வீண் வார்த்தை அகற்றுவோம்,
அவர் நாமமே போற்றுவோம்.

'என் ஆத்துமாவே, நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு'

சங்கீதம் 116:7

கிறிஸ்துவின் திருப்பாதத்தண்டையில்தான் கிறிஸ்தவனுக்கு இளைப்பாறுதலுண்டு. அவருக்குச் சமீபமாய் வாசம்பண்ணி, அவரை விசுவாசித்து வரும்போதுதான் இளைப்பாறுதல் அடைகிறோம். ஒன்று மனச்சாக்ஷி மவுனமாயிருக்கும், அல்லது புகழ்ந்து பேசும். நியாயப்பிரமாணம் நமக்கு விரோதமாய் ஒன்றும் சொல்லாது. உலகம் நமதுமேல் ஆளுகைசெய்யாது. சாத்தான் பலவீனன், ஆனபடியால் நம்மை மேற்கொள்ளமாட்டான். நாம் அலைந்து திரிந்தால், பெலவீனராகிறோம், தைரியமற்றுப்போகிறோம். இருட்டும், கலக்கமும், துன்பமும் நம்முடைய மனதை நிரப்புகிறது. நாம் இன்னும் திரும்பலாம்; இயேசு நம்மை இன்னும் அழைத்துக்கொண்டிருக்கிறார்; நாம் திரும்பவேண்டும். இல்லாவிட்டால், நமக்குச் சமாதானம் இல்லை. ஆதலால் இன்று காலமே நம்முடைய இளைப்பாறுதலுக்குத் திரும்புவோமாக. இயேசுவே! உம்மண்டையில் வருகிறோம். அலைந்து திரிகிற உமது ஆடுகளை ஏற்றுக்கொள்ளும்; உமது ரட்சிப்பின் சந்தோஷத்தைத் திரும்பத் தாரும். உமது சிலுவை அண்டையில் நான் இளைப்பாறுதலைக் காணவேண்டும். உமது உத்தம ஜனங்களோடு உண்மையுள்ள உமது வசனத்தின்மேல் இளைப்பாறுகிறது எத்தனை நலம். அடிமைக்குரிய பயத்தினின்றும், உலகக் கவலையினின்றும், மனவருத்தமுண்டாக்குகிற தொந்தரவுகளினின்றும் இளைப்பாறுகிறது. உம்முடைய திவ்விய செயல்களால் திருப்தியடைந்து, அளவற்ற உமது அன்பில் இளைப்பாறுகிறது எத்தனை நலம். ஆத்துமாவே, உன் அலைச்சல் யாவையும் விட்டுத் திரும்பு, திரும்பு. உன் இயேசுவின் இளைப்பாறுதலைத் தேடு; அவர் உனக்கு உண்மையுள்ள சிநேகிதர், உன் ரக்ஷகர். அவர் உறுதிவாக்கைக் கேள்; அவர் உன்னைக் கிருபையாய் ஏற்றுக்கொள்ளுவார். இயேசுவே! இன்றைக்கு என் இளைப்பாறுதலாய் இரும்; என் ஆத்துமாவைத் தேற்றும்.

காற்றடித்தும் கொந்தளித்தும்,
உம்மிடத்தில் நான் சொல்வேன்;
என் ஆத்துமா வந்து தங்கும்
அடைக்கலம் நீரென்பேன்.

'சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார்'

வெளிப்படுத்தின விசேஷம் 19:6

நம்முடைய தேவன் சகல நன்மைக்கும் காரணம். நாம் வணங்கிப் பயந்து போற்றக்கூடியவர், ஒருவரே. அளவற்றவர், சகலத்தையும் ஆண்டு நடத்துகிறவர். அவரால் சகலமும் ஆகும். அவர் சகலத்தையும் எளிதாய், துரிதமாய் நிச்சயமாய், நிறைவாய்ச் செய்யக்கூடியவர். அவர் சிம்மாசனத்தின் மேலிருக்கிறவர், அவருடைய ஆளுகை இரக்கமும் நீதியும் மகிமையுமுள்ளது. அவர் எல்லா ராஜ்யங்கள்மேலும், எந்த நாட்டின்மேலும், எந்தத் தேசத்தின்மேலும், எந்த வஸ்துவின்மேலும் அதிகாரம் செலுத்துகிறார். நடக்கிற ஒவ்வொன்றும் அவரால் ஏற்படுத்தப்படுகிறது, அல்லது அவர் அதற்கு இடங்கொடுக்கிறார். சகலத்தையும் அவரே நடத்துகிறார். அவர் அறியாதது ஒன்றுமில்லை. அவர் நோக்கத்தை வியர்த்தமாக்கி, அவர் ஒழுங்கைக் கெடுக்கக்கூடியது ஒன்றுமில்லை. சகலமும் அவர் நோக்கத்திற்கு இசைவாயும், அவர் நாமத்திற்குக் கனமாயும் முடியும். சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ஆளுகை செய்கிறாரா? அவரைத் துக்கப்படுத்தப் பயப்படுவோமாக. சகலத்திலும் அவரைப் பிரியப்படுத்தப் பார்ப்போமாக. அவரை நம்பி, அவர்மேல் சார்ந்து, அவரை நோக்கிக் கூப்பிட்டு, அவர் சொன்னபடி செய்கிறாரோவென்று பார்ப்போமாக. அவர் ஆளுகை செய்கிறார் என்று நினைத்து, நித்தம் ஜீவியம்பண்ணுவோமாக. இது பயத்தை ஜெயிக்கும், பாவத்தைத் தடுக்கும், விசுவாசத்தைப் பலப்படுத்தும், ஆவியின் கிருபைகளை வளர்க்கும், கீழ்ப்படிதலுக்கு நம்மை ஏவிவிடும். சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ஆளுவாரானால் அவர் தமது பிள்ளைகளைப் பாதுகாப்பார். அவர்கள் காரியங்களை எல்லாம் நடத்துவார், அவர்களுக்கு நன்மையாகவே முடிப்பார்.

சீயோன் ராஜனே வாரும்,
ஆசீர்வாதங்கள் தாரும்,
ஜீவன் பெலன் யாவுமே,
உம்மால்தான் எனக்குண்டே.

'நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன்'

ஆகாய் 2:19

என்று முதல்? நாம் கர்த்தரைக் தேடத் தொடங்கும் நாள் முதல், கர்த்தர் பட்சமாக இருக்கத் தீர்மானம் பண்ணும் நாள் முதல், வெளியரங்கமாயும் உண்மையாயும் நாம் அவரை அறிக்கையிடும் நாள்முதல், நம்முடைய பாவத்தை விட்டுத் திரும்பி, அவருக்கு முன்பாகக் குணப்படும் நாள் முதல், இருதயத்தோடும், ஆத்துமத்தோடும், அவருடைய ஜனங்களோடு நாம் சேர்ந்துகொள்ளும் நாள்முதல், கர்த்தர் நமக்குக் கொடுக்கிற வாக்கென்ன? உங்களை ஆசீர்வதிப்பேன் என்கிறார். இம்மைக்குரிய நன்மைகளை ஆசீர்வதிப்பார், நம்முடைய பிரயாசங்களை ஆசீர்வதிப்பார், நம்முடைய குடும்பங்களையும், நம்முடைய ஆத்துமங்களையும் ஆசீர்வதிப்பார். அறிவு, சுயாதீனம், பலம், சமாதானம், மனத்திருப்தி, காரிய சித்தி இவைகளைத் தந்து ஆசீர்வதிப்பார், சிநேகிதரே, நாம் கர்த்தர் பட்சமாக இருக்கத் தீர்மானம் செய்து, எப்போதும் அவர் வழிகளில் நடப்போமாக. அவருடைய ஆசீர்வாதம் கிடைக்குமென்று எதிர்நோக்கி இருப்போமாக. இப்படி அவர் வாக்குக்கொடுத்ததும் அல்லாமல், ஆணையிட்டு அதை உறுதிப்படுத்தியுமிருக்கிறார். எத்தனங்களைக் கையாடுவதில் ஜாக்கிரதையாயிரு. இயேசுவென்னும் வாய்க்கால் மூலமாய்த்தான் எந்த ஆசீர்வாதமும் பாயுமென்று எப்பொழுதும் நோக்கிக்கொண்டிரு. இன்று காலையிலும், இந்த நாளில் பல தரமும், அப்படியே ஒவ்வொரு நாளிலும் இந்த அருமையான வாக்குத்தத்தத்தை உன் தேவனுக்கு முன்பாகச் சொல்லிக் கெஞ்சு. அப்பொழுது உன் சமாதானம் ஆற்றைப்போலவும் உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலவும் இருக்கும். அவர் உன்னை ஆசீர்வதிப்பார், நீ ஆசீர்வாதமாக இருப்பாய்.

நீர்தான் எனக்கு யாவும்,
நீர் இருந்தால் எப்போதும்
கவலையெல்லாம் நீங்கும்,
துக்கம் களிப்பாய் மாறும்.

'உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள்'

2 நாளாகமம் 20:20

நாம் தேவனை உலக சிருஷ்டிகராகவல்ல, கிறிஸ்துவில் விளங்குகிறவராக விசுவாசிக்கவேண்டும். கிறிஸ்துவின் மூலமாய் அவர் நமக்குக் கிருபை அளிக்கிறவர், எப்போதும் நம்மோடிருக்கிறவர், நமக்கு உதவிசெய்ய ஆயத்தமானவர், நம்மில் பிரியப்படுகிறவர், நமக்கு உடன்படிக்கையின் தேவன், சர்வ சம்பூரணர், எப்போதும் நல்ல மனமுடையவர், உண்மையும் சத்தியமுமான அவருடைய வசனத்தை நாம் விசுவாசிக்கவேண்டும். அவர் நம்மை விட்டு ஒருபோதும் விலகாதவரானபடியால், அவருடைய சமுகத்தை நாம் நம்பலாம். அவரால் முடியாதது ஒன்றுமில்லாதபடியால், அவருடைய வல்லமையை நம்பலாம். அவர் தம்முடைய லக்ஷணத்துக்குக் கனக்குறைவு வரச் சம்மதியாதவரானபடியால், அதை நாம் நம்பலாம். அவருடைய உண்மை உயர்ந்த பர்வதங்கள்போல் என்றுமுள்ளதானபடியால், அதையும் நாம் நம்பலாம். மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பினாலும், சாத்தான் நம்மை வருத்தப்படுத்தினாலும், நமக்குள் பயங்களும் சந்தேகங்களும் எழும்பினாலும், நாம் தேவனைத்தான் நம்பவேண்டும். கடமையை நிறைவேற்றவேண்டிய பெலனுக்காக, எந்த மோசத்தினின்றும் தப்ப விடுதலைக்காக, எந்தப் போராட்டத்திலும் நமக்கு வேண்டிய தைரியத்திற்காக நாம் தேவனைத்தான் நம்பவேண்டும். தேவனை விசுவாசிக்கிறதினால் மனத்திருப்தி, வைராக்கியம், தாழ்மை இவைகளுண்டாகும். விசுவாசத்தை நாம் தேவனிடத்தில் இருந்துதான் பெற்றுக்கொள்ளவேண்டும். அது அவர் மனதாரக் கொடுக்கிற ஒரு ஈவு. நாம் தேவனிடத்தில் விசுவாசம் வைக்கவேண்டும், அதை அவர் விரும்புகிறார், அதில் பிரியப்படுகிறார். மனிதகுமாரன் வரும்போது நம்முடைய இருதயங்களில் விசுவாசத்தைக் கண்டுபிடிப்பாரோ?

உம்மையே நான் நம்புவேன்,
உம்மை நோக்கி ஜெபிப்பேன்;
புது பெலன் ஜீவன்தானும்
உம்மாலே வரவேணும்;
சிலுவையைப் பாடுவேன்,
ரட்சகரைப் போற்றுவேன்.

'கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்'

சங்கீதம் 71:16

நம்முடைய பலவீனம் நம்மைப் பலப்படுத்தும்; தேவனே நமது பெலனை நமக்குத் தருகிறார். அவருடைய வெளிச்சத்தில் நாம் காண்கிறோம். அவருடைய பெலனில் நாம் கிரியை செய்கிறோம். நாம் நிறைவேற்றவேண்டிய கடமைகளுண்டு,, எதிர்க்கவேண்டிய வருத்தங்களுண்டு, வெல்லவேண்டிய சத்துருக்களுண்டு. ஆதலால், கர்த்தருடைய பலத்திலே போவோமாக. அந்தப் பெலன் நமக்கு வாக்களிக்கப்படிருக்கிறது. நாம் அதை பெற்றுக்கொள்ளலாம். நாம் தேவனிடத்தில் அதைக் கேட்கவேண்டும்; விசுவாசத்தோடு எதிர்பார்க்க வேண்டும். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்று நம்பிக்கையாயிருக்கவேண்டும். நம்முடைய சொந்தப் பெலனைக்கொண்டு நாம் எதையும் செய்யப்பார்க்கக்கூடாது. அப்படிச் செய்யப்பார்ப்போமானால், நம்முடைய காரியம் முடியாது. முந்தி தேவ வாக்கைப் பிடித்து, அதன் உண்மையின் மேல் சார்ந்து, கடமையை நிறைவேற்றவும், போரில் எதிர்த்து நிற்கவும், மோசத்தை உத்தரிக்கவும் புறப்பட்டுப் போவோமாக. அப்போதுதான் போர் நம்முடையதாகாமல், கர்த்தருடையதாகும். அப்போது நிச்சயமாகவே நமக்கு ஜெயம் கிடைக்கும், காரியசித்தியுண்டாகும், ஒத்தாசையும் வரும். அப்போது கர்த்தர் நம்முடைய பெலனும் நம்முடைய அடைக்கலமும் நித்திய ரட்சிப்புமாவார். அவருடைய பெலன் நமது பெலவீனத்தில் பூரணப்படும். அவருடைய கிருபை அபாத்திரரிடத்தில் மகிமையடையும். நாம் பயப்படாமல், தாமதியாமல், அவநம்பிக்கைகொள்ளாமல் கர்த்தருடைய பெலத்தில் போவோமாக. அப்போது நாம் ஜெயவீரரைவிட மேலானவர்களாவோம். 'அவர் ஆயாசப்பட்டவர்களுக்குப் பெலனளித்து, பெலனில்லாதவர்களுக்கு அதிக பெலனைக் கொடுக்கிறார்.

என்னை ரட்சித்த இயேசு
கடைசிமட்டும் ரட்சிப்பார்;
பிசாசை நான் வெல்லுவேன்,
அவராலே ஜெயிப்பேன்.

'தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்'

சங்கீதம் 51:10

இப்படி ஜெபிக்கிறவன் பாவ உணர்ச்சியடைந்து, அது தீட்புள்ளதென்று கண்டு, பரிசுத்தத்தின்மேல் ஆவல்கொண்டு, தன் பலவீனத்தை அறிந்து, தன் நிலையில்லாமைக்காகத் துக்கப்பட்டு மெய்ஞ்ஞானம் அடைந்தவனுயிருக்கவேண்டும். இது ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஜெபிக்கத்தக்க ஜெபம். இன்றைக்கு இது நம்முடைய ஜெபமாயிருக்கட்டும். நம்முடைய இருதயத்தையும் சத்தத்தையும் தேவனண்டைக்கு உயர்த்தி, குற்றத்தையும் தீட்டையும் நீக்கிப்போடும். சுத்தத்தையும் சமாதானத்தையும், எங்கள் இருதயங்களில் உண்டாக்கும், உம்முடைய வசனத்தைக்கொண்டும் இயேசுவின் ரத்தத்தைக் கொண்டும், பரிசுத்த ஆவியின் வல்லமையைக்கொண்டும்; எங்களைச் சுத்திகரியுமென்று கெஞ்சுவோமாக. இருதய சுத்தாங்கம் தேவனுல்தான் உண்டாகும். மார்க்கத்தின் சாரம் அதுவே. நாம் பரிசுத்தராயிராவிட்டால், பக்திமான்களாயிரோம். நாம் பாவத்தை நேசித்து, பாவத்திற்கு இடங்கொடுப்போமாளுல், பாவம் செய்தோமே என்று மனவருத்தப்பட்டு இப்படி ஜெபியாமல் போளுேமாளுல், நம்முடைய மார்க்கம் ஒன்றுக்கும் உதவாது. நாம் பக்தியில் பெலனற்றவர்கள். எந்த மெய்க் கிறிஸ்தவனும் பாவத்தில் நிலைத்திரான், அவன் பரிசுத்தத்திற்கு அழைக்கப்பட்டவன், அவன் பரிசுத்த ஆவியின் ஆலயம், பரிசுத்தம் அவனுக்கு ஜீவன், அவனுக்குச் சுகம். நான் பரிசுத்தன், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று தேவன் சொல்லும்போது, சுத்த இருதயத்தை எனக்குள் சிருஷ்டியுமென்று அவன் கெஞ்சுகிருன். நாம் சகலவிதமான நடக்கையிலும், பரிசுத்தராய்க் கர்த்தராகிய இயேசுவின் வருகைக்கு எதிர்நோக்கி அதைத் துரிதப்படுத்துகிறவர்களாயிருப்போமாக.

எனது இதயத்தில்
நின் சாயலைப் பதியும்;
என்னுடைய நெற்றியில்
நின் முத்திரையை வையும்.

‘நீதிமானாகிய லோத்தை அவர் ரட்சித்தார்’
2 பேதுரு 2:8

லோத்து பக்தியுள்ளவன், விசுவாசத்தால் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்பட்டவன்; ஆகிலும் அவன் பலவீனன். சோதோம் செழிப்பான இடமானபடியால், அங்கே வாசம்பண்ணப் பிரியப்பட்டான். ஆஸ்தியை விரும்பினான். தன் அயலாருடைய துர்நடத்தையைக் கண்டு, கேட்டுத் தினந்தோறும் துக்கப்பட்டான், மனவருத்தமடைந்தான். அவன் பிள்ளைகளை உலகத்தாரோடு சம்பந்தம் கலக்கச்செய்து அவர்களுக்குக் கேடு உண்டாக்கினான். இவன் கிருபை நிறைந்த உண்மையுள்ள தேவனால் விடுவிக்கப்பட்டாலும், மிக்க துன்பத்திற்குள்ளானான். இவன் குமாரரும், அவர்களுடைய மனைவிகளும், சோதோமில் அழிந்துபோனார்கள். இவன் மனைவியும் அந்தச் சமனான வெளியிலே ஸ்தம்பமாக நிறுத்தப்பட்டாள். ஒரு வேலைக்காரனும் இல்லாமல், நல்ல பொருள் ஒன்றும் எடாமல் ஆத்திரமாய் ஓடி, ஒரு குகையில் தனிமையாய் இவன் வாசம்பண்ணவேண்டி நேரிட்டது. தோற்றத்தினால் நடக்கிறதின் பிரயோசனம் இதுதான். இருதயம் கண்ணைப் பின்செலுத்தக்கூடாது. பாவத்துக்குத் தண்டனை நிச்சயமாய் வருமென்பது இதினால் விளங்குகிறது. நீதிமானாகிய லோத்து தப்பவில்லை. வழிதப்பித் திரிகிற பிள்ளைகள்மேல் தேவன் வைக்கும் நேசத்தின் உண்மையும், உலகத்தைவிட்டு நாம் பிரிந்திருக்கவேண்டிய அவசியமும் இதிலே விளங்குகிறது. இந்த உலகத்தில் கிறிஸ்தவன் சோதோமிலிருந்து லோத்தைப் போலிருக்கிறான். அவன் கொண்ட நோக்கப்படியே இவனும் உலகத்தைத் தெரிந்துகொள்வானாகில், அவனை நடத்தினது போலவே இவனையும் தேவன் ஒருவேளை நடத்துவார். கிருபை நிறைந்த கர்த்தாவே, எங்களுக்கு வேண்டிய சுதந்தரத்தை நீரே எங்களுக்குத் தெரிந்தேற்படுத்தும்.

துன்பம் என்னும் வழியால்
இயேசுவின் பாதம் சேர்ந்தால்,
மகிமை அதல்லவோ!
இயேசு சமீபமானால்,
பெருமூச்சும் கண்ணீரும்
மா ஆனந்தமல்லவோ?

'ஆதலால் உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்'

எபிரெயர் 10:35

இயேசுகிறிஸ்து மேசியாவென்றும், தேவனால் அனுப்பப்பட்டவர் என்றும், அவர் ஒருவர்தாம் ரட்சகர் என்றும், அவரே நித்திய தேவனென்றும், விசுவாசி திடனாய் நம்பியிருக்கிறான். எல்லா மெய் விசுவாசிகளுக்கும் மோட்சம் வாக்குதத்தம் பண்ணப்பட்டிருக்கிறதென்றும், பரிசுத்த சீஷர் யாருக்கும் அது நிச்சயமென்றும் அவன் நம்புகிறான். இதை வெளிப்படுத்துகிற வேதவாக்கியத்தை அவன் விசுவாசித்து அது உண்மையென்று முழுவதும் ஒப்புக்கொண்டு, அதை வெளியரங்கமாய்ச் சொல்லத் தைரியமுடையவனா யிருக்கிறான். அவனுக்கு இருக்கும் நம்பிக்கை பரிசுத்த ஆவியினாலுண்டாகிற திவ்விய வசனத்தின்மேல் இருக்கிறபடியால், தனக்குள்ள யாவையும் தேவ ஆசீர்வாதத்திற்கு ஒப்புவிக்கவும், கிறிஸ்துவுக்காகப் போர்செய்வதில் சகலத்தையும் விட்டுப் பிரியவும், கர்த்தராகிய இயேசுவின் வார்த்தையையும் அவர் உண்மையையும் போதுமென்று பிடிக்கவும் அவை அவனை நடத்தும். அவனுடைய நம்பிக்கையைக் கெடுக்க பலத்த சோதனை நேரிடும். ஆகிலும் அவன் அவைகளை விடக்கூடாது, நம்முடைய நம்பிக்கையின் ஆரம்பத்தைக் கடைசி பரியந்தம் உறுதியாய்ப் பிடிப்போமானால், நாம் கிறிஸ்துவில் பங்கு பெறுவோம். நமக்குப் பெரிய பலனுண்டு. இச்சீவனில் கிறிஸ்துவுக்காகவும், நாம் விட்டு விடும் ஒவ்வொன்றிற்காகவும் நூறத்தனை கிடைக்கும். மறுமையில் நித்திய ஜீவனும் கிடைக்கும். சிநேகிதரே, நம்முடைய உறுதியையும், நம்பிக்கையின் சந்தோஷத்தையும், கடைசிபரியந்தம் கெட்டியாய்ப் பிடிப்போமாக. எந்த மனுஷனாவது பின்வாங்கினால் தேவன் அவனில் பிரியப்படார்.

சாத்தான் சோதிக்கும்போது
என்னை நீர் தப்புவியும்;
மோசங்கள் சூழும்போது
கடாட்சித்தென்னை ரட்சியும்.

டிசம்பர்-மீ 8-உ

'உம்முடைய ரட்சிப்பினாலே சந்தோஷப்படுகிறேன்'
1 சாமுவேல் 2:1

தேவனுடைய ரட்சிப்பு பெரிய தீமைகளிலிருந்து சுத்த கிருபையினாலே நல்ல நோக்கங்களுக்காக உண்டாகும் விடுதலை. அவர் ஏழையையும், தரித்திரனையும், தம்மை நோக்கிக் கூப்பிட்டுத் தம்மில் விசுவாசம் வைக்கிற குற்றவாளியையும், நிர்ப்பந்தனையும் ரட்சிக்கிறார். இரக்கம்பெற்ற நாமும் விசேஷித்த தயவைப் பெற்றவர்களைப்போல, அதற்காக நன்றியறிந்தவர்களாய் அதை உணர்ந்தவர்களாக, தேவ ரட்சிப்பில் அன்னாளைப் போலச் சந்தோஷப்படவேண்டும். நம்முடைய சந்தோஷத்திற்கும், மகிழ்ச்சிக்கும் ரட்சிப்புதான் ஊற்று. சிலர் தங்கள் சொத்துக்களிலும், சிலர் தங்கள் அதிகாரத்திலும், சிலர் உலக மேன்மையிலும் சந்தோஷப்படும்போது நாம் நமது தேவனுடைய ரட்சிப்பில் சந்தோஷப்படக்கடவோம். அது வியாதியிலும், சுகத்திலும், வறுமையிலும், நிறைவிலும், ஜீவனிலும், மரணத்திலும் சந்தோஷப்படத் தகுந்த முகாந்தரமாயிருக்கும். 'அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடியில் கனியுண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டு மந்தை முதல் அற்றுப்போனாலும், தொழுவத்தில் மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் ரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்.' கர்த்தர் சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவறாது; அருமையான சத்தியம், ரட்சிப்பு கர்த்தருடையது, கர்த்தருடைய ரட்சிப்பு கெட்டழிந்துபோன பாவிகளுக்குத்தான்.

வானம் பூமி யாவும் சேர்ந்து
தேவரட்சிப்பைப் போற்றட்டும்,
அவர் மரித்துயிர்த்தாரே.
மோட்சத்தைச் சம்பாதித்தாரே.

'அன்பிலே நடந்துகொள்ளுங்கள்'
எபேசியர் 5:2

மார்க்கத்தின் சாரம் அன்பு. இருதயத்தில் ஊற்றப்பட்ட தேவ அன்பு நம்முடைய சுபாவததை அன்பாக மாற்றிவிடுகிறது. மற்றவர்களுக்குக் காண்பிக்கும்படிக்குத்தான் இந்த ஆசீர்வாதம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ஒளியை நாம் பிரகாசிக்கச்செய்து, அன்பினுல் நடக்கிறவர்களாயிருக்கவேண்டும். தேவனை நேசிக்கிற அன்பினுல் நாம் நடத்தப்படவேண்டும். அவருடைய இரக்கம் நம்மேலிருக்கிறது. தேவனுக்காக நாம் மனிதரையும் சிநேகிக்கவேண்டும். அன்பின் பிரமாணத்தினுலே மற்றவர்கள் நமக்கு எதைச் செய்யவேண்டுமென்றிருக்கிருேமோ, அதை நாம் அவர்களுக்குச் செய்யவேண்டும். அவர்களுடைய ஆத்துமாவின் நித்திய க்ஷேமத்தைத் தேடவேண்டும். எவர்களுக்கு விரோதமாகவாவது பொருமை, வைராக்கியம், பகை, விரோதம் இவைகளை மனதில் பேணிவையாமல், யாவருடைய நன்மையையும் விரும்பி, நம்மாலானமட்டும் அவர்களுடைய க்ஷேமத்தையே விருத்திசெய்ய விரும்புகிருேமென்று தெளிவாய்க் காண்பிக்க வேண்டும். நம்முடைய செய்கைகளிளெல்லாம் அன்பு பாய்ந்து, நம்முடைய ஆத்துமங்களில் அதுவே ஆளுகை செய்யவேண்டும். தேவன் நம்மை அன்பினுல் நடத்துகிருர். பரிசுத்த ஆவி அன்பு நிறைந்த ஆவி. அன்புதான் மறு பிறப்பிற்குத் தெளிவான, நிச்சயமான அத்தாட்சி. நாம் சிநேகிக்கிருேமென்று உணருகிறது போதாது. அதை வெளிப்படுத்தி அன்போடு நடக்கவேண்டும். அப்போதுதான் பாக்கியராய், பிரயோஜனமுள்ளவர்களாய், கண்ணியமுடையவர்களாயிருப்போம். கசப்பும், கோபமும், குற்றம் கண்டுபிடித்தலும், தன்னயம் தேடுதலும் நாம் பாவத்தின் கீழ் இருக்கிருேமென்று காட்டுகிறது. அன்போ தேவனுக்குரியது, அன்புள்ளவன் தேவனுல் பிறந்தவன், தேவனை அறிந்தவன்.

மற்றவர்க்குத் துக்கம் வர
தான் செய்வது நலமோ?
அவர் சந்தோஷத்தை நீக்க,
நான் பேசுவது அன்போ?
இயேசு சிந்தை
எனக்கு வேணும் அல்லோ!

'நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்'

யோவான் 17:20

பிரிய சிநேகிதரே, இயேசு தம்முடைய சீஷர்களுக்காக ஜெபித்தபோது நமக்காகவும் ஜெபித்தார். விசுவாசிக்கிற யாவருக்கும், அவர்கள் எவ்வளவாய்ப் பயந்தவர்களும், பெலவீனரும், அச்சமுள்ளவர்களாயிருந்தாலும் அவர்களுக்காக ஜெபம் பண்ணினார். நாம் தம்மோடு ஒன்றாயிருக்க, ஒரே சரீரத்தின் அவயவங்கள்போல, ஒரே குடும்பத்தின் பிள்ளைகள்போல, ஒரே ஆஸ்தியைச் சுதந்தரிக்கிறவர்கள்போல, ஆவிக்குரிய ஒரே ஆலயத்தின் பங்குகள்போல, தம்முடைய சபையில் ஒன்றாயிருக்க அவர் ஜெபித்தார். பிதா அவரோடு ஒன்றாயிருக்கிறதுபோலவும், அவர் பிதாவோடு ஒன்றாயிருக்கிறதுபோலவும், ஒரே அன்பு நம்மை நடத்த, ஒரே காரியத்தை நம்முடைய கண்ணுக்கு முன் வைக்க, ஒரே சற்குணங்களை நாம் காட்டவேண்டுமென்று விரும்புகிறார். எத்தனையோ விசேஷித்த சிலாக்கியங்களை நாம் அனுபவிக்கவேண்டுமென்று நம்முடைய ரட்சகர் விரும்புகிறார். நமக்காக எவ்வளவு மேன்மைகளைத் தேடுகிறார். சொல்லி முடியாத ஆசீர்வாதத்தை நாடுகிறார். தேவனோடு ஒன்றாயிருப்பது, இயேசுவைப்போலத் தேவனோடு ஒன்றாயிருப்பது, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியோடு ஒன்றாயிருப்பது, இதைச் சற்றே நினைத்துப்பார். ஒரே மனம் ஒரே சித்தம், ஒரே ஆத்துமாவாகிறது. மிகவும் கிருபை நிறைந்த கர்த்தாவே, ரட்சகர் செய்த இந்த விரிவான விண்ணப்பம் நிறைவாய் நடந்தேறுவதை நாங்கள் காணும் சமயத்தைத் துரிதப்படுத்தும். இந்த ஆசீர்வாதத்திற்காக நித்தம் ஜெபிப்போமாக. இதைவிடப் பெரிதும், இனிமையானதும், விசேஷித்ததுமான வேறு ஆசீர்வாதமில்லை.

இயேசு உமதாவி தாரும்,
எனக்குள் வாசம்பண்ணும்,
என்னை விட்டுப் போகாதேயும்,
உம்மில் நிலைக்கச் செய்யும்.

'நீர் அவரோடே ஏன் வழக்காடுகிறீர்?'

யோபு 33:13

விசுவாசி தேவனோடு வழக்காடுகிறான்; இது சிலவேளைகளில் நடக்கிறது. அவர் வசனத்திலுள்ள சில உபதேசங்களுக்கு விரோதமாய், திவ்விய செயலின் நடத்துதலுக்கு விரோதமாய், அவரிட்ட சில சட்டங்களுக்கு விரோதமாய் அவன் போராடுகிறதுண்டு. ஆனால் நீ அவருக்கு விரோதமாய்ப் போராடுவானேன்? அவருடைய ஞானம் அளவற்றது, அவருடைய அன்பு மாறாதது, அவருடைய வழிகள் நீதியுள்ளது. அவர் நடத்தும் வகை ரகசியமும், அவர் செயல் வருத்தமாயுமிருக்கலாம். அவருடைய நோக்கங்களோ கிருபை நிறைந்தது. உத்தமமானது. விசுவாசித்து நம்புகிறது உன் சிலாக்கியம். அவரோடு போராடுகிறதோ கலகம், சதி. ஏனென்றால் தாம் செய்கிறதற்கு முகாந்தரம் இன்னதென்று அவர் ஒருவருக்கும் சொல்லுகிறதில்லை. காரியத்தை மறைக்கிறது தெய்வ மகத்துவம். அவர் ஒருவருக்கும் காரணம் சொல்ல வேண்டியவரல்ல. வீணைசைகொண்டவர்கள் அவரை விசாரிக்கவும் கூடாது, பெருமை கொண்டவர்கள் அவரிடத்தில் நியாயம் கேட்கவும் தகாது. அவருடைய லட்சணங்கள், வாக்குத்தத்தங்கள், வசனம் இவைகளைப் பார்த்துக் கீழ்ப்படியச் சொல்லுகிறார். சீக்கிரம் நமக்குச் சகலத்தையும் தெளிவாக்குவார், வெளியாக்குவார். அப்பொழுது நாம் அறியப்பட்டப்படி அறிந்துகொள்ளுவோம், பூரண திருப்தியடைவோம். அமர்ந்திருந்து நான் தேவனென்று அறிந்துகொள்ளுங்கள். மாம்சமெல்லாம் கர்த்தருக்கு முன்பாக மவுனமாயிருக்கக் கடவதென்கிறார். என் ஆத்துமாவே! உன் தேவனுக்கு உன்னைக் குறையற ஒப்புக்கொடுப்பாயாக.

நித்தம் சிலுவையை நான்
எடுத்து சுமந்தால்தான்,
இயேசுவைப்போலிருப்பேன்,
அவரோடு ஆளுவேன்.

'அவரே சரீரத்திற்கு ரட்சகராயிருக்கிறார்'

எபேசியர் 5:23

சபை கிறிஸ்துவின் சரீரம். இயேசுவும் அவருடைய ஜனங்களும் ஒன்று. அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப் பட்டவர்கள், அவர் பெற்றுக்கொண்ட பங்கு, அவர் எப்போதும் சந்தோஷிக்கிற ஆனந்தம், மகிமை, அவர்களுக்குப் பதிலாக இருந்து அவர்களை ரட்சித்தார். அவர்கள் நிற்கவேண்டிய இடத்தில் நின்று அவர்கள் கடமைகளையும், பாவங்களையும் சுமந்தார். அவர்களுக்குத் தம்முடையதைக் கொடுத்து ரட்சிக்கிறார். தமது கிருபையையும், பரிசுத்த ஆவியையும், மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் கொடுக்கிறார். அவர்களைப் போதித்து ரட்சிக்கிறார். அவர்களெல்லாரும் தேவனால் போதிக்கப்படுகிறார்கள். அவர்களைப் பிரித்து ரட்சிக்கிறார். இந்தப் பொல்லாத உலகத்தைவிட்டுக் கொண்டுவந்து அதினின்று அவர்களைத் தப்புவிக்கிறார். அவர்களைச் சந்தித்து ரட்சிக்கிறார். அவர்களுக்கு ஜீவனையும் தயையையும் கொடுத்து, அவர்களுடைய ஆத்துமங்களைக் காப்பாற்றுகிறார். அவர்களை மேலிடங்களுக்கு உயர்த்தி ரட்சிக்கிறார். முதலாவது சாத்தானுடைய ராஜ்யத்தினின்று தம்முடைய கிருபையின் ராஜ்யத்திற்கும், பிறகு இந்த உலகத்தினின்று தம்முடைய மகிமையின் ராஜ்யத்திற்கும் உயர்த்துகிறார். தம்முடைய லட்சணங்களைப் பிரஸ்தாபப்படுத்த, தம்முடைய சத்துருக்களைக் கலங்கடிக்க, தம்முடைய நாமத்தை உயர்த்த, தம்முடைய அன்புக்குத் திருப்தியுண்டாக்க, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களை ரட்சிக்கிறார். ரட்சிக்கப்படுகிற யாவரும் அவருடைய சரீரத்தைச் சேர்ந்தவர்கள்; ரட்சிப்பு முற்றிலும் தேவனுடையது. இப்படி ரட்சிக்கப்படுகிறது எவ்வளவு பாக்கியம். இது கனமுள்ளது, பரிசுத்தமுள்ளது, சுயாதீனமுள்ளது.

இயேசு ரத்தம் சிந்தினார்,
சிலுவையில் தொங்கினார்;
மன்னிப்பைச் சம்பாதித்தார்;
மோட்ச வாசலைத் திறந்தார்.

‘நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்’
1 இராஜாக்கள் 3:5

நம்முடைய தேவனிடத்திலே இடுக்கமில்லை, திரண்ட பொக்கிஷங்கள் அவரிடத்தில் உண்டு. நீங்கள் வந்து அவைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று எப்பொழுதும் அழைக்கிறார். இன்று காலமே நமக்குத் தேவையானதென்ன? அதிக பரிசுத்தம் அல்லவா? நம்முடைய புத்தி தெளிவாகவேண்டும். நம்முடைய சித்தம் தேவசித்தத்திற்கு முற்றிலும் இசைந்திருக்கவேண்டும், பரிசுத்த பரம காரியங்களை நாம் வஞ்சிக்கவேண்டும். இவைகளை நம்முடைய தேவனிடத்தில் கேட்போமாக. அவர் தாராளமாய், சந்தோஷமாய், பரிபூரணமாய்க் கொடுப்பார். சாலொமோனைப்போல ஞானம் வேண்டுமென்று கேட்போமாக. ‘பரத்திலிருந்து வருகிற ஞானம் சுத்தமுள்ளது, சமாதானமும், சாந்தமும் இணக்கமுமுள்ளது, இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்தது.’ இந்த ஞானம் நம்முடைய இருதயத்தை நடத்தும், நம்முடைய வழிகளை நேர்ப்படுத்தும், வாசம் பண்ணத்தக்க ஊருக்கு நம்மை க்ஷேமமாய்க் கொண்டுபோகும். தேவசித்தத்தை இன்பமாய்த் தாமதமின்றிச் சந்தோஷத்தோடு நிறைவேறச் செய்யும். சாத்தானுடைய கண்ணிகளுக்குத் தப்ப, சோதனையை வெறுக்க, எல்லா மனிதருக்கும் நன்மை செய்ய இது நம்மை ஞானிகளாக்கும். இந்த ஞானம் எவ்வளவு விசேஷித்தது? நம்மெல்லாருக்கும் எவ்வளவு அவசியமானது. இயேசு இன்று காலமே நமக்கு முன் நின்று, இன்றைக்கு நீ என்னிடத்தில் கேட்கிறதென்ன என்கிறார். ஞானம் அறிவு என்பவைகளின் பொக்கிஷமெல்லாம் அவரிடத்தில் வாசம் பண்ணுகிறது. கேட்கிற எவனும் வாங்கிக்கொள்ளுகிறான். இயேசுவே, உம்மைத்தானே எனக்குத் தாரும்.

உம்மையே எனக்குத் தாரும்,
சாவின்றி என்னை ரட்சியும்;
நீரென் மோட்சம், ஜீவகிரீடம்,
நீரின்றி நான் அவாந்தரம்.

டிசம்பர்-மீ 14-உ

'விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிற வருமானவர்'
எபிரெயர் 12:2

எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் விசுவாசமுண்டு. நம்மில் சிலருக்கு இருக்கிறதோ அற்ப விசுவாசம். நமக்கிருக்கிறதைத் தந்தவர் அதை அதிகமாக்கக்கூடியவர். அவரிடத்தில் கேட்டுக் கெஞ்சிக் காத்திருப்போமானுல், அப்படியே செய்வார். நம்முடைய வழியில் நேரிடும் அநேக மோசங்களுக்குத் தப்ப, தேவசித்தத்தைப் பொறுமையோடு நிறைவேற்றிச் சகிக்க, நாம் கற்றுக்கொண்ட உண்மையுள்ள வசனத்தைக் கெட்டியாய்ப் பிடிக்க, கிருபையிலும் பரிசுத்தத்திலும் வளர, நம்மைத் துக்கப்படுத்தி, நமக்கு விசனத்தை மூட்டி, நம்மை நஷ்டப்படுத்தினவர்களுக்கு மன்னித்து அவர்களிடத்தில் அன்புகூர, நமக்கு அதிக விசுவாசம் வேண்டும். தேவ வாக்குத்தத்தங்களை நம்பி, அவருடைய செயலைத் தஞ்சமாகக் கொண்டு, அவர் உதவியை எதிர்பார்த்து, சுறுசுறுப்பாய் அவருக்கு ஊழியஞ்செய்து, நம்முடைய காத்தில் அவைகளை ஒப்புவித்து, அவரைக் கனப்படுத்த அதிக விசுவாசம் வேண்டும். நாம் கேட்கிற காரியத்தின் தன்மையினுலும், அதைக் கேட்கிற நோக்கத்தினுலும், தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களினுலும், அவருடைய பரிசுத்த சுவிசேஷத்திலுள்ள கட்டளைகளினுலும், வேதவசனத்தில் விசுவாசத்தைப்பற்றிச் சொல்லியிருக்கும் திருஷ்டாந்தங்களினுலும், நம்முடைய தேவனைப்பற்றி நமக்குத் தெரிந்திருக்கிற லட்சணங்களினுலும், நாம் அதிக விசுவாசத்திற்காக ஜெபம்பண்ண ஏவப்படுகிறோம். இப்படி அதிக விசுவாசத்திற்காகப் பண்ணுகிற ஜெபம் நற்பலன்களைக் கொண்டுவரும். கேளாதிருக்கும்போது முந்திக்கொடுத்தவர், அதிகம் வேண்டுமென்று கேட்கும்போது கொடாமல் போகமாட்டார்.

விசுவாசம் ஊற்றும் தேவா,
என்னில் அதை பூர்த்தி செய்யும்;
நின் கிருபை நிறைவாய்த் தா,
என் மனம் உம்மைத் துதிக்கும்.

'உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்குங்கள்'

2 பேதுரு 1:10

உங்கள் பக்தி சந்தேகமற்றதாயிருக்கட்டும். நீங்கள் உண்மையுள்ளவர்களோ அல்லவோ என்பதைப்பற்றிச் சமுசயம் இருக்கவே கூடாது. தேவ அழைப்பு நம்மைப் பாவத்தினின்றும், சாத்தானினின்றும், உலகத்தினின்றும் பிரித்து, பரிசுத்தத்தண்டைக்கும், கிறிஸ்துவண்டைக்கும், சபையண்டைக்கும் நம்மை நடத்துகிறது நம்முடைய அழைப்புக்குக் காரணம் தெரிந்துகொள்ளுதல் தேவன் நம்மை மற்றவர்களிடத்திலிருந்து பிரித்து, கிறிஸ்துவில், கிருபையால், பரிசுத்தத்திற்கென்று, தம்முடைய மகிமைக்காகத் தெரிந்துகொள்ளுகிறார். கிறிஸ்துவையும், பரிசுத்தத்தையும் மோட்சத்தையும் தாராளமாய், மனதார எப்போதும் பற்றிக்கொள்வோமானால், நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இவைகளைத் தெரிந்துகொள்வோமானால், எவ்விதமும் இவைகளைச் சொந்தமாக்கிக்கொள்ளப் பார்ப்போம். ரகசியத்தில், முழு மனதோடு, எப்பொழுதும், பரிசுத்தத்திற்காக, ரட்சிப்புக்காக, தேவனோடு ஐக்கியப்படுதலுக்காக, அவரை நோக்கிக் கெஞ்சிக் கொண்டிருப்போமானால், நாம் தேவனால் அழைக்கப்பட்டவர்கள்தான். இப்படித் தேவனை நோக்கிக் கெஞ்சும்போது எந்தப் பொல்லாப்பையும் வெறுப்போம், நன்மையானதெதையும் பின்செல்வோம். நாம் தெரிந்துகொள்ளப்பட்டதை அறிந்துகொள்ள நாம் எவ்வளவோ ஜாக்கிரதையாயிருக்கவேண்டும், இதற்காக எவ்வளவு பிரயாசப்பட்டாலும், இதில் எவ்வளவு நேரத்தை பின்னிட்டாலும் நல்லதுதான். கர்த்தரை அதிகமாய் அறிந்துகொள்ளவும், அவருக்கு நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுக்கவும் தெய்வ பயத்திற்காக முயற்சி செய்துகொள்ளவும், ஆவியின் சாட்சியையும், அச்சாரத்தையும், முத்திரையையும் தேடி, முழு இருதயத்தோடு தேவனோடு ஒட்டிக் கொள்ள மேன்மேலும் பிரயாசப்படுவோமாக.

என்றுமுள்ள மரணத்தை
எப்படி நான் மேற்கொள்வேன்?
ரட்சிப்பென்னும் சிலாக்கியத்தை
உறுதியாக்கிக் கொள்வேன்?
நான் பூமி விட்டு உம்மிலேயே
ஆறுதல் அடையட்டுமே.

'நீதிமான் தன் வழியை உறுதியாய்ப் பிடிப்பான்'
யோபு 17:9

பரம ராஜ்யத்திற்குச் செல்லும் பாதை கரடுமுரடானது. நமக்கிருக்கிற பெலனோ கொஞ்சம், நம்முடைய பயமோ மிகுதி. நாம் கிருபையால் நீதிமான்களாக்கப்பட்டு, சத்திய ஆவியால் சுத்திகரிக்கப்பட்டு, நேர்பாதையில் நடப்போமானால், பிதாவின் வீட்டில் க்ஷேமமாய் வந்து சேருவோமென்பதைப்பற்றி யாதொரு சந்தேகமில்லை. ஏனென்றால், 'நீதிமான் தன் வழியை உறுதியாய்ப் பிடிப்பான்; சுத்த கைகளுள்ளவன் மேன்மேலும் பலத்துப்போவான்.' மெய்விசுவாசி உறுதியாய் நிற்பான்; தேவ வாக்கு அவனைக் காக்கும்; கிறிஸ்துவின் பரிபூரணம் அவனுக்கு வேண்டியதைத் தரும்; கிருபையின் ஆவி அவனை நடத்தும்; சிலசில வேளைகளில் தோன்றும் அன்பின் அடையாளங்கள் அவனைத் தைரியப்படுத்தும், கர்த்தரோடும் அவருடைய ஜனங்களோடும் அவனுக்கிருக்கும் ஐக்கியம் சரியான பாதையை விட்டு அவனை விலகவொட்டாது. நேசரே! குற்றமற்ற நடக்கையைப்பற்றிக் கவலையாயிருப்போமாக. இயேசுவைக் கிட்டி ஜீவியம்பண்ணி அவரோடு நடப்போமாக. அப்போது நம்முடைய சற்குணங்கள் விருத்தியடையும், கிறிஸ்துவில் நாம் வேரூன்றியிருப்போம், நாம் தினந்தோறும் அடையும் ஜெபங்கள் நமக்குத் தைரியம் கொடுக்கும். நம்முடைய தேவனும் வாக்களித்தபடியே நமக்குக் கிருபையும் மகிமையும் தருவார். பயப்படுவது நமக்கடுத்ததல்ல; அவநம்பிக்கைகொள்வது நீதிமான்களுக்கு அடாது. நீதிமான் தன் வழியை உறுதியாய்ப் பிடிப்பான். நீதிமான் மேன்மேலும் பெலனடைந்து, சீயோனில் தேவனுக்கு முன்பாகக் காணப்படுவான்.

சோதனைகளால் சோர்ந்தாலும்,
கடல்போல் துன்பம் வந்தாலும்
அச்சமற்றோர் மீட்கப்பட்டோர்;
நீதிமான்கள்தான் நிலைப்போர்.

'கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே பரிபூரணமாய் வாசம்பண்ணுவதாக'

கொலோசெயர் 3:16

இயேசுவானவர் பிரசங்கித்த வசனம், அவருடைய ஊழியக்காரர் எழுதின வசனம், தேவவசனம் முழுவதும், இயேசுவின் வசனம்தான். விசுவாசியே! வேதபுத்தகத்தில் உன் அருமையான சிநேகிதனுடைய வசனம், உன்னை நேசிக்கிற ரட்சகருடைய வசனம், உன்னைக் கடைசியில் நியாயந் தீர்க்கிற நியாயாதிபதியின் வசனம் அடங்கியிருக்கிறதென்று எண்ணிக்கொள். அது உன் ஞாபகத்திலும், விருப்பத்திலும், மனதிலும் வாசம்பண்ணட்டும். வீட்டுக்கு அதிகாரியைப் போல உங்கள் ஆத்துமங்களை அது ஆண்டு போஷித்து நடத்தட்டும். அது பரிபூரணமாய் வாசம்பண்ணினால், இன்னின்ன பங்கு இன்னாரை அடுத்ததென்றும், இன்னின்ன காரியத்திற்கு ஏற்றதென்றும் அறிவாய். அது பரிபூரணமாய் வாசம்பண்ணினால், தேவன் கவனித்து ஒப்புக்கொண்டு அங்கீகரிக்கிறதை ஜெபத்திலே சொல்லிக் கெஞ்சலாம். நம்முடைய யோசனைகளைச் செம்மையாய் ஏற்பாடு செய்து நடத்திப் பாதுகாக்கலாம். நம்முடைய ஆசைகளைத் தடுத்து மட்டுப்படுத்தி ஒழுங்குப்படுத்தலாம். வாஞ்சையை உயர்த்தி உறுதிப்படுத்தி நடத்தலாம். மனச்சாட்சியை சமாதானப்படுத்தி, பிரகாசிப்பித்துச் சுத்தமாக்கலாம். சாத்தானை எதிர்த்து மேற்கொள்ளலாம். பாவத்தைக் கண்டித்துச் சோர்ந்துபோனவனுக்குச் சமயத்துக்கேற்ற புத்தியைச் சொல்லலாம். கிறிஸ்துவின் வசனம் உங்கள் ஆத்துமாவின் உள்ளத்தில் தங்கட்டும். அது தினந்தோறும் உங்கள் தியானிப்பும், போசனமும், வழிகாட்டியுமாயிருக்கட்டும். கிறிஸ்துவின் வசனம் சகல ஞானத்தோடும் உங்களுக்குள்ளே பரிபூரணமாய் வாசம்பண்ணக்கடவது.

வேதமென்னும் வாக்கினால்
என்னை என்றும் நடத்தும்;
கிருபை என்னும் கரத்தால்
வழி தப்பாமல் காரும்;
என்னில் அது வசித்தால்
என் மனம் உம்மை நாடும்.

'அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்'

பிலிப்பியர் 3:18

கிறிஸ்துவில் சிலுவை கிறிஸ்தவனுக்கு மகிமை; கிருபையால் உண்டாகும் ரட்சிப்பின் உபதேசம் முழுவதும் அதற்குள் அடக்கம். கிறிஸ்தவன் அதைத் தன் நம்பிக்கையின் அஸ்திபாரமும், தன் விசுவாசத்தின் பொருளுமாகப் பாவிக்கிறான். நியாயப்பிரமாணத்தின் முடிவும், தன் நிர்ப்பாக்கியத்தை நீக்கும் சஞ்சீவியுமாக எண்ணுகிறான். சத்தியத்தின் சாரமும், சபையின் பாட்டுமாகப் பாவிக்கிறான். இரக்கத்தின் செங்கோலும், ரட்சகருடைய சிம்மாசனமும், ஏகோவாவின் லட்சணங்கள் எல்லாவற்றையும் வெளிப்படுத்தும் கண்ணாடியுமாக அதைப் பார்க்கிறான். பரதீசின் கதவுகளைத் திறக்கும் திறவுகோலாகவும், நித்திய ஞானத்தின் மகிமையாகவும், அன்பு அவதாரம் எடுத்த ரகசியமாகவும், மரணத்திற்கு நாசமாகவும், நித்திய ஜீவனுக்கு வாசலாகவும், தேவதூதர் பார்த்து அதிசயிக்கும் பொருளாகவும் அவன் அதை எண்ணுகிறான். சிநேகிதரே! நம்முடைய கண்ணையும் மனதையும் இந்த மகிமை நிறைந்த ஆச்சரியமான சிலுவையின்மேல் வைப்போமாக. நம்முடைய பேச்சினாலும், செய்கையினாலும் அதற்கு ஒருகாலும் அபகீர்த்தி வராதபடி பார்ப்போமாக. அதன் ஜெயங்களை விருத்திசெய்து, அதன் மகிமையை விரிவாக்கி, பாவிகள் அதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு, அதை நேசித்து, அதை நம்பும்படி அவர்களை அதனண்டையில் கொண்டுவரப் பார்ப்போமாக. 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தே யல்லாமல், வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக. அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது; நானும் உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன்.'

மரித்த இயேசுவுக்காய்
வசிப்பதே என் நோக்கம்;
சிலுவையின்றி ஏதும்
எனக்கடாதெப்போதும்.

'நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்'

யோவான் 14:15

கிறிஸ்தவனுடைய நடத்தைக்கு இதுதான் பெரிய சட்டம்; இது ரட்சகர் கொடுத்த கட்டளை. இயேசு நம்மை நேசிக்கிறபடியால், நம்முடைய தற்கால க்ஷேமத்தை விரும்புகிறபடியால், நாம் சொல்லுகிறது உண்மையோவென்று சோதிக்க மனமுள்ளவரானபடியால், விசுவாசத்தினால் ஏவப்பட்டுக் கீழ்ப்படிகிறது அவருக்குப் பிரியமானபடியால் அவர் நமக்குக் கட்டளையிடுகிறார். தம்மைப்போல் நாம் இருக்க வேண்டுமென்று கற்பிக்கிறார். அவர்தாம் நமக்கு நல்ல மாதிரி குணத்திலும், சிந்தையிலும், செய்கையிலும் நாம் அவரைப் போலிருக்கவேண்டும். அவரை விசுவாசித்து, அறிக்கையிட்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய அன்பில் நிலைத்திருக்க வேண்டுமென்று கற்பிக்கிறார். கிறிஸ்துவினுடைய செய்கைக்கெல்லாம் முகாந்தரம் இதுதான். அன்பு, ஆவிக்குரிய அன்பு, சீயோனின் ராஜாவுக்கு எப்போதும் பணிந்திருக்கும், சேனைகளின் கர்த்தாவின் மகிமைக்காக வைராக்கியங்கொண்டிருக்கும், சமாதானப் பிரபுவினுடைய காரியத்தில் உறுதியாயிருக்கும். அன்பினாலுண்டாகும் கீழ்ப்படிதல் மனதார நிறைவுள்ளதாயிருக்கும். கீழ்ப்படியச் செய்கிற பலத்த முகாந்தரம் அன்பே. அது பயத்தை ஜெயிக்கும், வைராக்கியத்தைப் பிறப்பிக்கும், திடனுண்டாக்கும், வேண்டியதற்கு யோசனையைத் தரும், வருத்தங்களை மேற்கொள்ளும், விரோதத்தை ஜெயிக்கும். நம்முடைய கீழ்ப்படிதல் எதினின்று உண்டாகிறது? எதனால் நடத்தப்படுகிறது? என்று விசாரிப்போமாக. நம்மை ஏவுகிற முகாந்தரம், நம்மை நடத்துகிற சட்டம் பரிசுத்த அன்புதானா?

கீழ்ப்படிதலுக்கு
அன்புதான் ஊற்றுமே;
அன்புதான் ஊழியங்கள் செய்யும்,
எதையும் முடிக்கும்.

'தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்குக் கட்டளையிடுவேன்'

அப்போஸ்தலர் 13:14

தாவீதுக்கு அருளின கிருபைகள் பாவியின் குறைவுகளுக்கு ஏற்றது. இம்மையில் ஆத்துமாவுக்கும் சரீரத்திற்கும் வேண்டிய சகலமும், மறுமையில் நித்திய காலமாக அவனுக்கு வேண்டியிருக்கும் யாவும் அதில் அடங்கியிருக்கிறது. தாவீதுக்கு அளித்த இரக்கங்கள் உடன்படிக்கையைச் சேர்ந்தவைகள். குமாரன் நமக்காகப் பாடுபட்டு மரித்ததினால் அவைகள் நமக்குக் கிடைக்கும்படி திட்டம் பண்ணினார். பரிசுத்த ஆவி அவைகளை அவர்களுக்குச் சொந்தமாக்குவார். அவைகளெல்லாம் இலவசமான கிருபையிலிருந்து பிறந்து, வாக்குத்தத்தங்களில் வெளிப்படுத்தப்பட்டு, கிறிஸ்துவின் பரிபூரணத்தில் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது. தாவீதுக்கு அருளின கிருபைகள் நிச்சயமானவைகள். வருகிற யாவருக்கும் இலவசமாய் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. விசுவாசத்தால் அதைப் பெறலாம். கிருபையின் உடன்படிக்கைக்குத் தலைவரும், மத்தியஸ்தருமாய் ஏற்படுத்தப்பட்ட இயேசுவே அதைத் தருகிறவர். அவைகள் நிச்சயமானவைகள்; தேவன் ஆணையிட்டிருக்கிறார், தம்முடைய மனதை மாற்றவுமாட்டார், ஒப்புரவாக்குதலின் உடன்படிக்கையை நீக்கிப்போடவுமாட்டார். அவை தாவீதுக்கு அருளப்பட்ட கிருபைகள்; அதற்கு பாத்தியம் இருக்கிறதென்று சொல்லத் தகுதியானவையொன்றும் வேண்டியதில்லை; அதைச் சொந்தமாக்கிக்கொள்ள வருத்தமான தொன்றும் செய்யவேண்டியதுமில்லை. கிரயம் கேட்பாருமில்லை. பணம் கேட்பாருமில்லை. வந்து இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளுங்களென்று மாத்திரம் சொல்லியிருக்கிறது.

தேவா இரக்கத்தின் தொகை
எவ்வளவு மாட்சிமை,
ரட்சிப்பென்னும் ஜீவ ஊற்று,
பாயுது, அதைக் கிட்டு;
கிருபாநிதி தேவவாக்கு
அதால் பிசாசைத் தாக்கு.

'என் ஆத்துமாவைக் காப்பாற்றி என்னை விடுவியும்'
சங்கீதம் 25:20

நாம் வேண்டியபோது ஓடுகிறதற்கு தேவனும், நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற கிருபாசனமும், நாம் கெஞ்சிக் கேட்க இயேசுவென்னும் அருமையான நாமமும், நமக்குக் கிடைத்திருக்கிறது எவ்வளவு பெரிய இரக்கம். தேவனுடைய பரிசுத்த வசனத்தில் நமக்குமுன் வைத்திருக்கிற திருஷ்டாந்தங்கள் எவ்வளவோ தைரியத்தைக் கொடுக்கத்தக்கது. பரிசுத்த ஆவியானவர் ஏவினபடி பேசினவர்களைப்போல் நாமும் செய்வோமாக. உலக தொல்லைக்குள் பிரவேசிக்கப்போகிறோம். ஒருநாள் வேலை நமக்குமுன் இருக்கிறது. நம்முடைய இருதயம் மோசமுள்ளது, நிலையற்றது, என் ஆத்துமாவைக் காப்பாற்றுமென்று ஜெபிப்போமாக. பாவத்தினின்று என்னைக் காப்பாற்றும்; என் இருதயத்தில் நான் அதைப் பேணிவையாமலும் நான் அதை ஒருபோதிலும் செய்யாமலிருப்பேனாக சாத்தானிடத்திலிருந்து என்னைக் காப்பாற்றும் அவன் என்னை உம்மை விட்டு வழிதப்பச் செய்யாதிருக்கட்டும். மனுஷரிடத்திலிருந்து என்னைக் காப்பாற்றும்; அவர்கள் என்னை மேற்கொள்ளாதிருப்பார்களாக. உம்முடைய வழியில் உம்முடைய சத்தியத்தில் உம்முடைய சபையில் என்னைக் காப்பாற்றும். உம்முடைய வசனத்தால் , உம்முடைய ஆவியால், உம்முடைய சமுகத்தால் என்னைக் காப்பாற்றும் குற்றத்தினின்றும், ஆக்கினைத்தீர்ப்பினின்றும் , பயத்தினின்றும், குற்றத்தினின்றும் என்னை விடுவியும்; உம்முடைய பாதபடியண்டை என்னைக் காப்பாற்றி, அலைந்து திரியும் என் இருதயத்தினின்றும், வெட்கத்தினின்றும் என்னை விடுவியும்; நீதியின் வஸ்திரத்தால் உடுத்தப்பட்டு, என் இரட்சகருடைய ரத்தமென்னும் ஊற்றில் கழுவப்பட்டு, மகிமை நிறைந்த அவர் மூலமாயும், அவர் கிரியைமூலமாயும் அங்கீகரிக்கப்பட்டு, பட்சமுள்ள அன்பினாலும், உருக்க இரக்கத்தினாலும் நான் முடிசூட்டப்பட்டிருக்கட்டும். கண்மணியைப்போல் என்னைக் காப்பாற்றும்.

சர்வ வல்லமை ரட்சிக்கும்,
தேவ அன்பு தற்காக்கும்;
நீர் ரட்சித்தும் என் தேவனே,
உம்மில் நிலைநிற்பேனே.

‘எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை’

எசாயா 49:23

கர்த்தருக்குக் காத்திருக்கும்போது, அவர் நமக்கு ஏதோ ஒன்று செய்யவேண்டும், நமக்கு ஏதோ ஒன்று கொடுக்கவேண்டும், ஏதோ ஒருவகையாய் நமக்குச் சம்பந்தப்பட்டிருக்கவேண்டுமென்று விரும்புகிறதாகக் காணப்படும். நாம் அவரிடத்தில் போனேமென்றும், அவர் ஏதோ ஒரு வாக்குக் கொடுத்தாரென்றும், நம்முடைய விண்ணப்பத்திற்கு உத்தரவு கொடுக்கத் தாமதிக்கிருரென்றும் கருத்துக்கொள்ளும். அவருக்குப் பதிலாக வேறு ஒருவரிடத்தில் நாம் போகக் கூடாதென்றும் இது ரூபிக்கும். இந்த வாக்குத்தத்தம் அவர் எங்கே வராமற் போகிருரோ என்கிற பயத்தைத் தோற்றுவிக்கும். எங்கே கடைசியில் நம்முடைய நம்பிக்கை விருதாவாய்போகிறதா என்று பயப்படுகிறதாக காட்டும். தேவனுடைய அன்பை, உத்தமத்தை. தயவைக்குறித்து அவநம்பிக்கைக்கொள்ள, கர்த்தரைத் தேடி, அவரை விசுவாசித்து, அவர் வருவாரென்று எதிர்பார்க்கிறதைக்குறித்து வெட்கமடையத்தக்க சோதனைகள் இருக்குமென்று இது காட்டும். இந்த அருமையான வாக்குத்தத்தம் காத்திருக்கிற ஆத்துமாவை வெட்கமடையாமல், எதிர்நோக்குதல் கெட்டுப்போகுமென்று பயப்படாமல் கலங்காமலிருக்கச் செய்யும். கர்த்தர் தோன்றுவார், உத்தரவு அருளிச்செய்வார். தாம் குறித்த காலத்தில் தமக்குப் பிரியமான வகையாய் ஆசீர்வதிப்பார் என்கிற நிச்சயத்தை நமக்கு உண்டாக்குகிறது. நீ சோதிக்கப்பட்டவனு? கர்த்தருக்குக் காத்திரு; நீ துன்பப்பட்டவனு? கர்த்தருக்குக் காத்திரு; நீ அதிகமாய்த் துன்பப்படுகிருயா? பொறுமையோடு கர்த்தருக்குக் காத்திரு; நீ வெட்கப்பட உன்னை விடார். ஆபிரகாம் காத்திருந்து வாக்குத்தத்தத்தைப் பெற்ருன்; யோசேப்பு காத்திருந்து கனமடைந்தான்; தாவீது காத்திருந்து தான் விரும்பினதையெல்லாம் பெற்ருன்.

துன்பமென்னும் கடலிலே
அலைகள் மோதுகையிலே,
தேவனையே நான் நம்புவேன்,
அவருக்குள் அடங்குவேன்.

'அவன் ஆத்துமா நன்மையில் தங்கும்'

சங்கீதம் 25:13

தேவனுக்குப் பயப்படுகிறவன் அவருடைய வார்த்தையை விசுவாசித்து, அவருடைய தன்மையை நேசித்து, சகலத்திலும் அவரைப் பிரியப்படுத்த விரும்பி, எதிலும் அவருக்கு மனஸ்தாபமுண்டாக்கப் பயந்து, அவர் எங்குமிருக்கிறார் என்பதை மனதில்கொண்டு, அவர் வருகைக்கு எதிர்நோக்கி இருக்கவேண்டும். பிரியமானவர்களே! இப்படி நீங்கள் செய்கிறீர்களா? அப்படிப்பட்டவர்களைப்பற்றித்தான் அவன் ஆத்துமா நன்மையில் தங்குமென்று சொல்லியிருக்கிறது. அடிமைக்குரிய பயத்திலிருந்தும், ஆத்துமாவை வருத்தப்படுத்தும் கவலை துன்பங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, மனந்திருப்தி மெய்ச் சமாதானம் என்னும் நிலைமையில் அது சுகித்து வாழும். அவன் ஆத்துமா நன்மையில் தங்குவது நியாயமே. அவன் தேவனைத் தன் பங்காகவும் நித்திய உடன்படிக்கையைத் தன் ஆதாரமாகவும், அருமையான வாக்குத்தத்தங்களைத் தனக்குக் காப்பாகவும், மகிமை நிறைந்த பிராயச்சித்தத்தைத் தனக்கான நியாயமாகவும், நிறைவான ரட்சிப்பைத் தன் கேடகமாகவும், தெய்வசெயலைத் தன் சிநேகிதனாகவும், கிறிஸ்துவைத் தன் வக்கீல், சேனாதிபதி, போர்வீரனாகவும், தேவனோடு நித்தம் ஐக்கியப்படுதலைத் தனக்குப் பிரியமான காலமாகவும், மோட்சத்தைத் தன் கடைசி வீடாகவும் செய்துகொண்டான். அவன் ஆத்துமா நன்மையில் வாசம்பண்ணுமென்று இங்கே கண்டிருக்கிறது. தேவ தயவு எந்த ஆசீர்வாதமும் நிறைந்திருக்கும் களஞ்சியம். அது எந்தக் குறைவையும் நீக்கும், எல்லாப் பயத்தையும் அமர்த்தும், அவிசுவாசத்திற்குரிய சந்தேகங்களை எதிர்க்கும், அவனைச் சமாதானத்திற்கும் கனத்திற்கும் உயர்த்தும். அன்பர்களே! நாம் ஒன்றையும் குறித்துக் கவலைப்படாமல், நம்முடைய கவலைகளையெல்லாம் தேவன்மேல் வைத்து அமைதலாய் ஜீவிப்போமாக.

உலகத்தை முன் நம்பினேன்
இப்போது கசப்பென்கிறேன்;
இயேசு என்னுடைய பொக்கிஷம்
அவர் நாமம் அடைக்கலம்.

'விசுவாசத்தில் உறுதியாயிருந்து, சாத்தானுக்கு எதிர்த்து நில்லுங்கள்'

1 பேதுரு 5:9

சாத்தான் கிறிஸ்தவனுக்கு ஓயாத சத்துரு; அவன் எல்லா நீதிக்கும் விரோதி. நம்முடைய அழிவே அவன் கொண்டிருக்கும் நோக்கம். முக்கியமாய் அவன் நம்முடைய விசுவாசத்திற்கும், ஆறுதலுக்கும், வாழ்வுக்கும், பிரயோசனத்திற்கும் சத்துரு. அவன் தேவனுடைய சமுகத்தில் நமக்குச் சத்துரு. நம்முடைய இருதயத்திற்குள் நுழைந்து, பாவம் செய்யத் தூண்டிவிட்டு, பாவத்தைப்பற்றிக் குற்றஞ் சாட்டி, அதைப்பற்றி பயமுண்டாக்குகிறான். தேவனுடைய வசனத்தை, உண்மையை, அவருடைய அன்பை உறுதியாய் விசுவாசித்து, அவனுக்கு எதிர்த்து நிற்க நாம் கற்பிக்கப்படுகிறோம். கிறிஸ்து நமது பட்சத்தில் சாத்தானுக்குப் பெரிய விரோதியென்று நாம் உறுதியாய் நம்பவேண்டும். சாத்தான் விஷமுள்ள சர்ப்பமா? இயேசு நம்மைக் குணமாக்குகிற வெண்கல சர்ப்பம். சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கமா? இயேசு ஜெயம்கொள்ளுகிற யூதகோத்திரச் சிங்கம். சாத்தான் அழிக்கிறவனா? இயேசு ரட்சிக்கிறவர். சாத்தான் சத்துருவா? இயேசு சிநேகிதன். சாத்தான் ஓநாயா? இயேசு நல்ல மேய்ப்பன். சாத்தான் சோதிக்கிறவனா? இயேசு விடுவிக்கிறவர். சாத்தான் மோசக்காரனா? பொய்யனா? இயேசு சத்தியம். சாத்தான் குற்றம் சாட்டுகிறவனா? இயேசு நமக்கு வக்கீல். சாத்தான் அந்தகாரத்தின் பிரபுவா? இயேசு ஜீவனின் வெளிச்சம். சாத்தான் கொலைபாதகனா? இயேசு உயிர்த்தெழுதல். சாத்தான் இவ்வுலகப் பிரபுவா? இயேசு எல்லாவற்றிற்கும் மேலான தேவன். இதை விசுவாசித்து பிசாசுக்கு எதிர்த்து நில்; உனக்கு வேண்டியதெல்லாம் இயேசுவினிடம் இருக்கிறது.

எல்லாம் ஆளும் கர்த்தர்.
மண், விண்ணை நடத்துகிறார்,
சாவினின்று மீட்ட நண்பன்
என்றும் பிழைத்திருக்கிறார்;
ஸ்திரீயின் வித்தாம் தேவ நரன்
சர்ப்பத்தை நசுக்கும் பரன்.

'நான் மகிமைப்படுவேன்'

லேவியாகமம் 10:3

ஏகோவா தான் செய்கிறதெல்லாவற்றிலும் வாவிடுகிற சகலத்திலும் கொண்டிருக்கிற விசேஷித்த நோக்கம் இதுவே. தான் மகிமைப்படும்படிக்கே உலகத்தை சிருஷ்டித்து அதைக் காப்பாற்றிவருகிறார். இந்த நோக்கமாகவே தம்முடைய ஜனங்களைத் தம்முடைய குமாரனுடைய ரத்தத்தால் மீட்டுத் தம்மோடு தம்முடைய பரிசுத்தவான்களை மகிமைப்படுத்து வார். தமது சித்தப்படி செய்வதினால் தமது அதிகாரத்திலும் தமது பிரியப்படி கட்டளையிடுவதினால் தமது மேமையிலும், தமது நோக்கத்தை நிறைவேற்றத்தக்கதாக தமது சிருஷ்டி களை நடத்துவதினால் தம்முடைய ஞானத்திலும், தம்முடைய துதிகளை என்றும் பாடக் கெட்டுப்போன நிர்ப்பந்தரான பெரிய கூட்டத்தாரை ரட்சிப்பதினால் தம்முடைய கிருபையி லும், தமக்கு விரோதமாக கலகம்பண்ணின தமது சிருஷ்டி களுக்கு வேண்டியதைத் தருவதினால் தம்முடைய தயவிலும், முரட்டாட்டரான குணப்படாத பாவிகளைத் தண்டிக்கிறதி னால் தம்முடைய நீதியிலும் மகிமைப்படுத்துவார். சிநேகி தரே!சகலத்திலும் நம்முடைய தேவனுடைய மகிமையை நாடுவதே நமது கடமை. ஏகோவா கற்பிக்கிறாரா? நாம் அவ ருடைய கற்பனைகளைக் கவனித்துக் கீழ்ப்படியவேண்டும். அவர் கிருபையாய் வாக்குத்தத்தம் செய்து, ஞானமாயும் இரக்கமாயும் நமக்கு வேண்டியதைத் தருகிறாரா? அப்படியா னால் நாம் அவரை நம்பி அவர் பேரில் சார்ந்திருக்கவேண்டும். திவ்விய செயலிலும், கிருபையிலும் தம்முடைய கிரியையை நடப்பிக்கிறாரா? அப்படியானால் அவர் கரத்தை ஒப்புக் கொண்டு அவருடைய ஞானத்திற்குக் கீழ் அடங்கி, அவ ருடைய சிம்மாசனத்திற்கு முன் பணிந்து, அவருக்கு விரோ தமாகப் பாவஞ்செய்ய அவருடைய அன்புக்கு துக்கத்தை மூட்ட பயப்படவேண்டும். தேவனை மகிமைப்படுத்துவதே நமது வேலை.

நாங்கள் செய்யும் யாவையும்
தேவன்பு ஏவட்டுமே;
தேவமகிமை என்றும்
அதால்தான் ஆகட்டுமே;
பேசி நினைத்து செய்யும்
யாவும் தேவனைப் போற்றும்.

'இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்'
சங்கீதம் 149:9

எந்தக் கனம்? எந்த ஜாதியாரிடத்திலும், தேசத்திலும், ஜனத்திலும், பாஷைக்காரரிலும் ஆட்டுக்குட்டியின் ரத்தத்தால் மீட்கப்படுகிற கனம், அழிந்துபோகிற விதத்தினால் அல்ல, என்றும் ஜீவனோடிருக்கும் வேதவசனமாகிய அழியாத வித்தினால் மறுபடியும் பிறக்கிற கனம்; தேவனுடைய பிள்ளைகளாக ஒப்புக்கொள்ளப்படுகிற கனம். 'பிரியமானவர்களே! இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்; இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.' கிறிஸ்துவோடு நெருங்கிய சம்பந்தத்தால் இணைக்கப்பட்டிருக்கிற கனம்; அவர்களைச் சகோதரர் என்று அழைக்க அவர் வெட்கப்படவில்லை. தேவனுடைய சுதந்தரமாயிருக்கிற கனம்; பிள்ளைகளானால் சுதந்தரர், தேவனுடைய சுதந்தரர், இயேசுகிறிஸ்துவோடுகூட உடன் சுதந்தரர். அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டுச் சுயாதீனமாய்த் தேவனுக்குப் பணிவிடை செய்கிற கனம்; நம்முடைய சத்துருக்களின் கைகளினின்று விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல், அவருக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் அவருக்கு ஊழியம் செய்யும்படிக்கு, கிறிஸ்துவோடு நியாயம் தீர்க்கும்படி உட்கார ஏற்படுத்தப்படுகிற கனம் நாம் தேவதூதர்களை நியாயம் விசாரிப்போமென்று அறியீர்களா? இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்குமுண்டு. நாம் பரிசுத்தவான்களா? பரிசுத்தவான்களுக்கேற்க நடக்கிறோமா? இந்தப் பெரிய சிலாக்கியங்களுக்கு இசைவாய் ஜீவியம்பண்ணுகிறோமா? ஆச்சரியத்தோடு அவரைத் துதித்து அவருக்குக் கீழ்ப்படிவோமாக.

ஆத்துமாவே! தோத்திரி,
தேவ அன்பு காத்திரம்
என் சொல்வேனென்று திரி,
நான் அதற்கெம்மாத்திரம்
என்று உன்னைத் தாழ்த்துவாய்,
அப்போ மோட்சம் சேருவாய்.

'நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன்'
1 கொரிந்தியர் 7:32

கவலையும் விசாரமும் சேதமுண்டாக்கத்தக்கது. அது இருதயத்தைப் பிரிந்து, மனதைச் சிதறடித்து, வசனத்தை அடக்கி, அவநம்பிக்கைக்கு இடங்கொடுத்து, சமாதானத்தைக் கெடுத்துப்போடுகிறது. நம்முடைய மார்க்கத்திற்கு இது இசையாது. நாம் சகலத்தையும் தேவ கரத்திற்கு ஒப்புவித்து, சகலத்தையும் அவருடைய ஆதீனத்திற்கு விட்டுவிட வேண்டியவர்கள். நாம் கர்த்தருக்கென்றும் எதையும் செய்து, நம்முடைய குடும்பம், நம்முடைய ஆஸ்தி, நம்முடைய அலுவல் சகலத்தையும் கர்த்தருடையதாக எண்ணவேண்டும், அப்போதுதான் நாம் பரிசுத்தராயிருப்போம். சமாதானத்தை அனுபவிப்போம். வீண் விசாரமும், மிஞ்சின கவலையும் தேவனைக் கனவீனப்படுத்துகிறது; சகலத்தையும் கொடுக்க அவர் போதுமானவரோ என்று சந்தேகிக்கச் செய்கிறது; சகலத்தையும் அறிய அவர் சர்வ ஞானமுள்ளவரோ, சகலத்தையும் நடத்தத் திறமையுள்ளவரோ, நம்மைக் குறைவுள்ளவர்களாய்விட அவர் இரக்கம் உதாரகுணம் அற்றவரோ, அவருடைய வார்த்தை தவறிப்போக, அவருடைய வாக்கு அவமாக, அவர் உண்மை சத்தியம் மாறுமையற்றவரோ என்றெண்ணச் செய்யும். கவலை நம்முடைய ஆத்துமங்களுக்குக் கெடுதியுண்டாக்கும்; மனத்திருப்திக்கும், தேவனுக்கு நம்மை ஒப்புவித்தலுக்கும் அது எதிரிடையானது. பொறுதியில்லாமையை. அவிசுவாசத்தை அது வளர்க்கும், நம்முடைய பிரயோஜனத்தைத் தடுக்கும்; தேவகோபமாகிய சவுக்கையும் கடும் சினத்தையும் கொண்டுவரும். கர்த்தரே நம்மை விசாரித்துக்கொள்ளுகிறபடியால் கவலையற்றிருக்கப் பார்க்கிறது நமது கடமை.

துக்கம் கவலையற்ற
ஸ்தலத்தில் பங்குபெற்ற
சிலாக்கியம் மா பெரிது,
லோகம் மாண்டுபோவது
எனக்குத் துக்கமல்ல,
என் பொக்கிஷம் அதல்ல.

'நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக'

கலாத்தியர் 6:9

நன்மை செய்கிறதுமாத்திரம் போதாது, நன்மை செய்துகொண்டிருக்கவேண்டும். இதற்காக மீட்கப்பட்டோம், நவமாகச் சிருஷ்டிக்கப்பட்டோம். மனிதருடைய நன்மைக் கென்று கர்த்தருடைய சன்னிதியில் இருக்கிறவர்கள்போல் சகலத்தையும் செய்வோமாக. தெய்வ பயத்தோடு அவரு டைய மகிமைக்கென்று மற்றவர்களுக்குப் புத்தி சொல்லி அவர்களைத் தைரியப்படுத்தித் தேற்றுவோமாக, நல்ல மன தோடு, அதாவது அன்பும், தாழ்மையும், ஜெப சிந்தையுமுள்ள மனதோடு செய்யப்படுகிறதுதான் நன்மை; அது கிறிஸ்துவை நேசிக்கிற நேசத்தோடு செய்யப்படுகிறது, அளவில்லாத தேவ னுடைய கற்பனையாகிய நல்ல சட்டத்தின்படி செய்யப்படுகி றது, நம்மை அழைத்தவரும், நமக்குக் கற்பிக்கிறவரு மாகிய தேவனுடைய மகிமை நிறைவேறவேண்டுமென்று செய்யப்படுகிறது. நாமோ இப்படிச் செய்வதில் சீக்கி ரம் சோர்ந்துபோகிறோம், படப்படப்பாய்ச்செய்து சித்தி யடையாமற் சீக்கிரம் சோர்ந்துபோகிறோம். அப்படிச் செய்யாமல், சோர்ந்துபோகாமல் செய்துகொண்டேயிருப் போமாக. நாம் சோர்ந்துபோகாமல் இருப்போமானால், தகுந்த காலத்தில் அறுப்போம். இது விதைக்கிற காலம், அறுப்புக்காலம் சீக்கிரம் வரும். ஆதலால் தேவபலனை நம்பி, பரிசுத்த தைரியத்தோடு, உறுதியான தீர்மானத்தோடு நம்மை நித்தம் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து நடப்போமாக. நாம் சோர்ந்துபோகாவிட்டால் தகுந்த காலத்தில் அறுப் போம். தேவன் உண்மையுள்ளவர், உதாரமுள்ளவர், கிருபை நிறைந்தவர். அவர் நம்முடைய கிரியையையும் அன்பின் பிர யாசத்தையும் மறக்கமாட்டார். அவருடைய நாமத்தை முன் னிட்டு ஒரு சீஷனுக்குக் கொடுக்கிற ஒரு கலயம் தண்ணீருக் காகவும் பலன் அளிப்பார்.

தேவன்மேல் நம்பிக்கை வைத்து
உன் வேலையைச் செய்துவா;
அவர் வசனமே பார்த்து
நட, அப்போ மகிழுவாய்.

'சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கிறது'
ரோமர் 8:28

கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் அவரை நேசிக்கிறார்கள். தாங்கள் விரும்புகிறபடி அவரை நேசியாவிட்டாலும் இன்னும் அவரோடு ஒட்டிக்கொண்டு அவரைப் பின்னும் அறிந்துகொள்ளப் பிரயாசப்படுகிறார்கள். அவர் அவர்கள் தேவன், தம்முடைய சுயநோக்கப்படி கிருபையால் அவர்களை அழைத்தார். அந்தக் கிருபை உலகமுண்டாகுமுன் கிறிஸ்து இயேசுவில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. எந்தக் காரியமும் தேவ நடத்துதலுக்கு உள்ளானதென்று கிறிஸ்தவன் நிதானிக்கவேண்டும். தேவ நோக்கத்தை நிறைவேற்றுவதே ஒவ்வொன்றினுடைய கிரியை. சகலமும் உன்னதமானவருடைய மட்டற்ற ஞானத்தினலும், நற்சித்தத்தினலும் இணைக்கப்பட்டிருக்கிறது; ஒவ்வொரு செய்கையையும் அவரே நடத்தி அதைக்கொண்டு தன் நோக்கத்தை நிறைவேற்றுகிறார். எதையும் நம்முடைய நன்மைக்காக நடத்துகிறார். அவருடைய நடத்துதலால் நமக்கு நஷ்டமே வருவதில்லை, நமக்கு லாபமே உண்டாகும். ஞானத்தையும் பரிசுத்தத்தையும் நாம் சம்பாதிக்கலாம். ஜெபிக்கவும் துதிக்கவும் ஏற்றதைச் சம்பாதிக்கலாம். விசுவாசம், பொறுமை, நம்பிக்கை இதற்கான வேலையைச் சம்பாதிக்கலாம். நம்முடைய நன்மைக்கு யாதொரு குறைவில்லை; சகலமும் சபையின் நன்மைக்காகவே கிரியை செய்கிறது. நம்முடைய பரமபிதாவின் வீட்டிற்குப் போகிற பாதை கரடுமுரடான பாதையானலும் சரியான பாதை.

வான்புவியிலுள்ள யாவும்,
தேவசித்தமே கையாளும்;
நன்மையானது நடத்தும்
தேவ மகிமை காண்பிக்கும்;
எங்கும் உமது சித்தம்
நடப்பதே என் பாக்கியம்.

டிசம்பர்-மீ 30-உ

'நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'

எபிரெயர் 13:5

கர்த்தர் நம்மோடிருந்தால் எல்லாம் க்ஷேமந்தான். அவர் நம்மோடு எப்போதும் முடிவுபரியந்தம் இருக்கிறதாக வாக்குக்கொடுத்திருக்கிறார்; வேறே யாராவது நம்மோடிருந்தால் முன்னேயே நம்மைவிட்டுப் போய்விடுவார்கள். அவரோ நீடிய சாந்தமுள்ளவர், உருக்கமும் இரக்கமும் நிறைந்தவர், நம்முடைய பயண முழுதிலும் நம்மோடிருப்பார். நித்திய காலமெல்லாம் நம்முடைய தேவனாயிருப்பார். ஜீவகாலமெல்லாம் நம்மைப் பத்திரமாய் நடத்துவார், எந்தத் துன்பத்திலும் நம்மோடிருந்து நம்மை ஆதரிப்பார், எந்தச் சோதனையிலும் நம்மைத் தேற்றுவார், எந்த வருத்தத்திலும் நம்மைச் சம்ரட்சணை செய்வார், எந்த மோசத்திலுமிருந்து நம்மை விடுவிப்பார், எல்லாக் காலங்களிலும் நம்மை ஆசீர்வதிப்பார். நம்முடைய பரமபிதாவாக உறுதியும் உண்மையுமான சிநேகிதனாக, நம்முடைய தேவனாக அவர் நம்மோடிருப்பார். நாமும் அவருடைய பிள்ளைகளாக, அவருடைய ஊழியக்காரராக, அவருடைய ஆபரணங்களாக, சீக்கிரம் அவரிடம் போய்ச் சேருவோம், என்றும் அவரோடு மகிமைப்படுவோம். சிநேகிதரே! தேவன் நம்மை ஒருபோதும் விட்டுப்போகார் என்பதைப்பற்றிச் சந்தோஷப்படுவோமாக. மரணம் நம்மிடத்திலுள்ளதைப் பறித்துக்கொள்ளும்; சிநேகிதர் நம்மை விட்டுப்போவார்கள்; துன்பங்கள் நமதுமேல் வரலாம்; நம்முடைய தேவன் தம்முடைய மேலான நாமத்திற்காகத் தம்முடைய ஜனங்களைக் கைவிடமாட்டார். அவர்களைத் தம்முடைய ஜனங்களாக்க அவர் பிரியப்பட்டார்; தம்முடையவர்களை நேசித்தவர் கடைசிபரியந்தம் அவர்களை நேசிப்பார்.

நான் உன்னை மறவேனென்றார்,
அவர் வாக்கை நான் விடேன்;
ஜீவித்தாலும் மரித்தாலும்,
அதையே நான் பிடிப்பேன்;
பரம்போய் சேர்ந்தபின்பும்
அவரையே நான் துதிப்பேன்.

'சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்'
நீதிமொழிகள் 17:17

இப்படிப்பட்ட சிநேகிதனை எங்கே கண்டுபிடிக்கலாம்? அடிமைத்தனத்தினின்று மீட்டு, கொடுமையினின்று நம்மை விடுவிக்கிற சிநேகிதன்; இயேசு இப்படிச் செய்தார். நம்மை ஆக்கினைக்குள்ளாக்கின நியாயாதிபதியின் தயவை, அல்லது நம்மை அடிமைத்தனத்திற்கு உட்படுத்தின எஜமானுடைய தயவை நமக்கு மறுபடியும் சம்பாதித்துக் கொடுக்கிற சிநேகிதன்; இயேசு இப்படிச் செய்தார். நமது நிலைமையில் நாம் எவ்வளவாய் வித்தியாசப்பட்டாலும், சுத்த அன்பினால் நம்மோடு உறவாடுகிற சிநேகிதன்; இயேசு இப்படிச் செய்கிறார். துன்பத்தில் நமக்கு ஆலோசனை சொல்லி, கலக்கத்தில் நம்மைத் தேற்றுகிற சிநேகிதன்; இயேசு இப்படிச் செய்கிறார். சத்துருக்களினின்று நம்மை விடுவித்து, நமக்கு விரோதமாக அவர்கள் செய்யும் பிரயத்தனங்களை அழிக்கிற சிநேகிதன்; இயேசு இப்படிச் செய்கிறார். புறக்கணிக்கப்பட்டவர்களையும், ஆதரவற்றவர்களையும் ஏற்றுக்கொண்டு, நிருவாணிகளுக்கு வஸ்திரமும், பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரமும் கொடுக்கிற சிநேகிதன்; இயேசு இப்படிச் செய்கிறார். நமக்கு நன்மை செய்யும்பொருட்டு துன்பம் சேதம், நிந்தை, மரணம் இவைகளைச் சகிக்கிற சிநேகிதன்; இயேசு இப்படிச் செய்தார். நம்முடைய க்ஷேமத்திற்காகத் தன் ஆஸ்தியெல்லாம் செலவழிக்கிற சிநேகிதன்; இயேசு இப்படிச் செய்தார். வாழ்வில் நம்முடைய தப்பிதங்களைப் பட்சத்தோடு கண்டித்து, தாழ்வில் நம்மைச் சந்தித்து ஆறுதல்படுத்தி நமக்கு உதவிசெய்கிற சிநேகிதன்; ஜீவகாலமெல்லாம் நம்மை நேசித்து, மரணத்திலும் என்றைக்கும் நம்மிடத்தில் அன்புகூருகிற சிநேகிதன்; இயேசு இப்படிச் செய்கிறார். எல்லாக் காலங்களிலும் நம்மைச் சிநேகிக்கிற சிநேகிதன் அவரே. இடங்கள் மாறினாலும் அவர் அன்பு மாறுகிறதில்லை. சுத்த அன்பினால் அவர் சிநேகிக்கிறவரானபடியால் நம்மையும், நம்முடைய குறைவுகளையும், நம்முடைய குணங்களையும், நம்முடைய விருப்பங்களையும், நன்றாய் அறிந்து நேசிக்கிறவர். அவருடைய நேசம் அளவற்ற பொறுமையினாலும், மட்டற்ற உருக்கத்தினாலும் அவரோடு என்றும் மகிமைப்படுவோமென்கிற நோக்கத்தினாலும் காக்கப்பட்டு வருகிறது. நாம் இன்ன உருவென்று அறிவார், நம்முடைய க்ஷேமத்தையே தேடுவார், நமக்கு நன்மை செய்வதே அவர் தீர்மானம், நமக்குச் சம்பவிக்கிறதெதுவும் நம்மை நஷ்டப்படுத்தவொட்டார், எவ்வகை

யிலும் நம்முடைய ஆத்துமலாபத்தை விருத்திசெய்வார். இயேசுவின் சிநேகம் சகல நன்மையையும் சம்பாதிக்கும், எல்லாத் தீமையையும் விலக்கும். நம்மை ஒருபோதும் கைவிடார், மறக்கவே மாட்டார். நித்திய காலமாக நேசிக்க வேண்டுமென்றே நம்மைச் சிநேகிக்கத் தொடங்கினர். வருஷத் துவக்கத்தில் அவருடைய சிநேகம் எப்படியிருந்ததோ அப்படியே வருஷமுடிவிலும் இருக்கும். இயேசுவே! உம்மைச் சுத்த அன்பால் நேசித்து, இனிமையான சிநேகத்தால் உம்மோடு நடந்து, எந்த இடத்திலும் உம்முடைய சிநேகிதர்களாயிருப்போமாக. ஜீவனிலும், மரணத்திலும் என்றைக்கும் நீர் எங்கள் சிநேகிதனும், ஆலோசனைக்காரனும், சகோதரனும், ரட்சகரும், கர்த்தாவும் தேவனுமாயிரும். ஆமென்.

நேசரெல்லாரைப் பார்க்கிலும்
மிக விசேஷித்தோருண்டு;
சகோதரனைப்பார்க்கிலும்
அவர் மகா சிறந்தவர்;
ரத்தம் சிந்தினவருண்டோ?
இயேசு மரிக்கவில்லையோ?
இது மட்டற்ற நேசம்தான்
முக்கிய நேசர் அவர்தான்.

SMITH'S DAILY REMEMBRANCER

MORNING PORTION